மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக பாதீட்டுப் பற்றாக்குறை 2020[2] இல் 11.1 சதவீதமாகவும், 2021 இல் 12.2 சதவீதமாகவும் இரு தானங்களுக்கு விரிவடைந்ததுடன், இது குறித்துக் கூறத்தக்க பேரண்டப் பொருளாதாரச் சமநிலைக் குலைப்பையும் உருவாக்கியது. பாதீட்டுப் பற்றாக்குறையின் நிலையான உயர்வு காரணமாக, அரசாங்கம் உள்ளூரிலிருந்தும், வெளிநாட்டுக் கடன் சந்தையிடமிருந்தும் பாதீட்டுப் பற்றாக்குறையை நிரப்புவதற்காக நிறையவே கடன் வாங்கியதுடன், இதனால் பாரிய மத்திய அரசாங்கக் கடன்கள் ஒன்றுதிரண்டன. வெளிநாட்டுக் கடன் மட்டங்களின் திடீர் அதிகரிப்பும், அதன் காரணமான பாரிய வெளியக கடன் சேவைக் கட்டணங்களும் நாட்டின் வெளியக சேவைப் பாதிப்புகளை அதிகரித்துள்ளன. மொத்தமான கடன் சேவைக் கட்டணங்கள் 2021 இல் 22.4 சதவீதத்தால் அதிகரித்து, பெயரளவில் ரூபா 2,375.6 பில்லியன்களாக, அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14.1 சதவீதமாக உள்ளது. பலவீனமான அரசிறை நிலைமையின் இன்னொரு சுட்டி, மொத்தமான கடன் சேவைக் கட்டணங்கள் அரச வருமானச் சேகரிப்பை பாரிய அளவில் விஞ்சியிருந்தமையாகும். வெளிநாட்டு நிதியளிப்பினூடாக பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கான இடம் பெருந்தொற்றுக் காலத்தினுள் ஒடுங்கியதுடன், இதற்கான காரணம் இலங்கையின் இறையாண்மை கடன் மதிப்பீடு இறங்கியதும், பிரதிகூலமான உலக நிதியளிப்பு நிலைமைகள் காணப்பட்டமையுமாகும். ஆகவே, அரசாங்கம் பெருந்தொற்றுக் காலத்தில் விரிவான பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதி பெறுவதில் அதிகமாக உள்ளூர் மூலங்களில் தங்கியிருப்பதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டது.

வரைபு 1.4 | முக்கிய அரசிறை மிகுதிகள் 2010 - 2021




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செவலவுத்திட்டத் திணைக்களம்

அவ்வாறான உள்ளூர் நிதியளித்தலின் பெரும் பகுதி, மத்திய வங்கியால் நாணய ரீதியான நிதியளிப்பினூடாக நிரப்பப்பட்டது. கட்டுப்பாடற்ற நாணய ரீதியான நிதியளிப்பு பணவீக்கம் மற்றும் சென்மதி நிலுவை அழுத்தங்கள் உள்ளிட்ட உள்ளார்ந்த அபாயங்களைக் கொண்டிருந்தது. குறித்துக் கூறக்கூடிய வருமானக் குறைபாடுகள் மற்றும் வருமானத்தை ஈட்டும் புதிய வரி முன்மொழிவுகளுடன் சேர்ந்த காலத் தாமதங்கள் ஆகியவற்றைக் கருதும்போது, சமீப காலத்தில் தொடர்ச்சியான நாணய ரீதியான இடமளிப்புக்கான வாய்ப்பு உள்ளது. அதனால், விரைவுபடுத்தப்பட்ட அரசிறைப் பலப்படுத்தலானது, எதிர்கால நாணய ரீதியான நிதியளிப்பைத் தவிர்ப்பதற்கான முன்நிபந்தனையாக உள்ளதுடன், அதனால் அவ்வாறான நிதியளிப்பின் மோசமான விளைவுகளைத் தவிர்க்கலாம்.

உயர் கட்டமைப்பிலான பாதீட்டுப் பற்றாக்குறை நாணய மதிப்பிறக்கத்துடன் இணைந்துள்ளதால், 2021 இல் நிலுவையாகவுள்ள மத்திய அரசாங்கக் கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 104.6 சதவீதமான உயர்ந்தளவுக்கு அதிகரித்துள்ளன. 36.9 சதவீதமாகவுள்ள நிலுவையாகவுள்ள மத்திய அரசாங்கக் கடன்கள் வெளிநாட்டுக் கடன்களை வெளிக்காட்டுவதுடன், அவற்றின் 52.3 சதவீதம் சலுகை ஏதுமற்ற கடன்களை வெளிக்காட்டுகின்றன என்பதால், இலங்கையின் கடன்களது நிலைத்த தன்மை மோசமாகச் சமரசம் செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட கடனல்லாதவற்றால் உருவாக்கப்படும் வெளிநாட்டு உள்வருகைகள் மற்றும் வெளியக நடைமுறைக் கணக்கிற்கான உள்வருகைகள் வெளிநாட்டுக் கடன்களின் சேவை வழங்குதலைப் பேணுவதற்கான முயற்சிகளைக் குறைவாக மதிப்பிடுகின்றன.

இதன் விளைவாக, கடன் வழங்கியவர்களுடன் பேரம் பேசும் தீர்வொன்றை அடையும் வரை, அரசாங்கம், தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகளை 2022 ஏப்ரலிலிருந்து பிடித்து வைப்பதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அரசாங்கம் நாட்டின் கடன் மீள்செலுத்தலை உயர்த்துவதற்காக, வெளியக கடன் மறுசீரமைப்புச் செயன்முறையை ஆரம்பித்துள்ளதுடன், அதேவேளை வெளியக மற்றும் அரசிறைத் துறைகளில் சமீபத்திய பற்றாக்குறையை நீக்குவதற்கான நிதியளிப்பிற்கும், நடுத்தர மற்றும் நீண்ட காலங்களில் கடன் சேவைக் கொடுப்பனவுகளை இலகுபடுத்துவதற்கும் சர்வதேச நாணய நிதியம் (IMF) உதவிகளையும் நாடியுள்ளது.

வரைபு 1.5 | **மத்திய அரசுக் கடன் (மொ.உ.உ. %)**



மூலம் : நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி

அதனால், ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட வெளிநாட்டு முதலீடுகளால் ஆதரவளிக்கப்படும், அரசிறை மற்றும் நாணய ஒழுங்கை அடிப்படையாகக் கொண்ட, வளர்ச்சியை அதிகரிப்பதற்குப் பொருத்தமான உற்பத்தித்திறனையும் போட்டித் தன்மையையும் உயர்த்துவதை நோக்கிய பொருளாதாரப் பாதையொன்றை உருவாக்குவது அவசியமானது. அதேவேளை, சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படத்தக்க பிரிவுகளைப் பாதுகாப்பதன் மூலம் ஒப்புரவான விளைவுகளை உறுதிப்படுத்துதலும் அவசியமானது. இதற்கு மேலதிகமாக, நிலைத்த கடன்களுடன் நியாயமானதொரு வருமானக் கட்டமைப்பினுள் செலவுகளை முகாமைத்துவம் செய்தல், எதிர்காலச் சந்ததியின் கடன் சுமைகளைக் குறைக்கும் செலவுகளின் நியாயப்படுத்தலுடன் சேர்ந்த அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான வரி மறுசீரமைப்பு அமுலாக்கத்திற்கு முன்னுரிமையளித்தல் அவசியமானது. அதேவேளை, கல்வி, சுகாதார சேவை, சுத்தமான வலு, சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியமான விடயங்களில் பொது முதலீடுகளை உறுதிப்படுத்துதலும் அவசியமானது. இதற்கு மேலதிகமாக, போட்டிச் சந்தைக்காக அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்நிறுவனகளை மறுசீரமைக்கும் அதேவேளை, அவற்றின் நிதி நிலைமைகளைப் பலப்படுத்துவதானது பொதுத் திறைசேரியின் பாரங்களை மேலும் குறைக்கும்.

1.2 நடுத்தரக் கால அரசிறை மூலோபாயம்

அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைகள் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்தாலும் மற்றும் பிந்தைய சட்டத் திருத்தங்களாலும் கட்டமைக்கப்படுகிறது. இது பரந்த அடிப்படையிலான வளர்ச்சி நோக்கங்களை ஆதரிக்க, நிதிப்பற்றாக்குறை மற்றும் அதனுடன் தொடர்புடைய கடனை படிப்படியாகக் குறைக்க, ஒரு சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது. அரசாங்கத்தின் அரசிறை நடவடிக்கைகள் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டத்தாலும் மற்றும் பின்னிட்ட சட்ட திருத்தங்களாலும் கட்டமைக்கபப்படுகிறது. இது பரந்த அடிப்படையிலான வளர்ச்சி நோக்கங்களை ஆதரிக்க, நிதிப்பற்றாக்குறை மற்றும் அதனுடன் தொடர்புடைய கடனை படிப்படியாகக் குறைக்க, ஒரு சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது. அரசாங்கத்தின் முக்கிய நடுத்தர கால நிதி நோக்கங்கள், மற்றவற்றுகிடையில், நிதிப்பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தி, 2021 இல் 6.0 சதவீத முதன்மைப் பற்றாக்குறையிலிருந்து 2025 இற்குள் குறைந்த பட்சம் சமமான முதன்மை இருப்பை கொண்டிருக்க வேண்டுமென்பதாகும்.

தற்போதைய சவாலான சூழலில் இருந்து மீள்வதற்கான பாதையில் நடுத்தர காலத்தில் செலவினங்களை பொறுப்புடன் நிர்வகிக்கும் அதேவேளை நிதி மிகுதிகள் இனிமேலும் தாங்கத்தகு நிலையில் இல்லாததால் நிதி நிலையை மேலும் வலுப்படுத்த வேண்டியிருக்கின்றது. பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு குறிக்கோளை, வெளிப்படையான அளவுகோலை ஏற்றுக்கொள்வதன் மூலம், சமூக பாதுகாப்பு வலை திட்டம் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது, இது நெறிப்படுத்தப்பட வேண்டியுள்ளது, இதன்மூலம்

தகுதியானவர்களுக்கு மேலும் கணிசமான ஆதரவை வழங்க முடியும். சமமான மற்றும் பேண்தகு முறையில் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க, அதிக பொது முதலீட்டை செயல்படுத்தும் வகையில், நிதி தளமானது நடுத்தர காலத்தில் விரிவாக்கப்பட வேண்டியிருக்கிறது. நாடு பல ஆண்டுகளாக நிதி இலக்குகளை அடைவதை பிற்போட்டு வருகிறது. இது நிதிப் பொறுப்பிற்கான சட்டமியற்றும் கட்டமைப்பை பயனற்றதாக்குகின்றது. இந்த சட்டகக்கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டங்கள் மற்றும் நிதியியற் கொள்கை உருவாக்கம் என்பன இந்த ஆவணத்தில் பின்னர் விவாதிக்கப்படும்.

அரசிறை மூலோபாயம்

தேவையான செலவுகளை மேற்கொள்ளுவதற்கான கிடைக்கப்பெறும் நிதிதளம் குறைந்த வருமானம் அடிப்படை காரணமாக வரையறுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக, வரி மற்றும் வரி அல்லாத வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையிலும் மற்றும் முழுமையான வகையிலும் மேலும் வலுக்குன்றியுள்ளது. பலவீனமான உலகப் பொருளாதார நிலை பொது நிதி ஏற்பாட்டுக்கு குறிப்பிடத்தக்க அழுத்தத்தை உருவாக்கியுள்ளதுடன், 2019 இன் பிற்பகுதியில் தொற்றுநோய் மற்றும் வரிக் குறைப்புகளின் தாக்கத்துடன் 2020 மற்றும் 2021 இல் இந்த சரிவுப் போக்கு அதிகரித்துள்ளது.

முன்னோக்கிச் செல்லும்போது, நடுத்தர காலத்தில் முதன்மைக் கணக்கில் உபரியை அடைவதற்கும் நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்குமாக, நிதிப் செயற்பாடுகள் நிதி கட்டுப்பாடுகள், மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும். அரசாங்கமானது ஆக்கவளமற்ற அரசாங்க செலவினங்களை சீரமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் அதேவேளை வருமானத்தை விரிவாக்குவதன் மூலம் ஒரு தீவிரமான நிதி ஒருங்கிணைப்பு செயல்முறை ஊடக ஒரு விவேகமான நிதி நடவடிக்கைகளை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

2022-2025 இற்கான நிதிக் கொள்கைப் வழிகாட்டுதல் மற்றும் பரந்த பொருளாதாரத் திசை ஆகியவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

அரசிறை பாதை

- வலுவான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மூலம் நடுத்தர காலத்தில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் பொருள் முதன்மை உபரியை உருவாக்குதல்.
- பொருத்தமான வரிக் கொள்கை மற்றும் வரி நிர்வாக நடவடிக்கைகளுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் வருமானத்தை நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது 14 சதவிகிதமாக மேம்படுத்துதல்.
- அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி தளத்தை அதிகரிக்க செலவினங்களின் தரத்தை மேம்படுத்தும் அதேவேலை செலவினங்களின் சீரமைப்பு மற்றும் முகாமைத்துவம் மூலம் வட்டி அல்லாத மீண்டெழும் செலவினங்களைக் கொண்டிருத்தல்.
- சமூகப் பாதுகாப்பு வலைத் திட்டத்தின் கீழ் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நிதி ஒதுக்கீடுகளை அதிகரித்தல் மற்றும் அத்தகைய நிதிகளின் இலக்கை மேம்படுத்துதல்.
- கல்வி, சுகாதாரம், பொது போக்குவரத்து மற்றும் நிலையான எரிசக்தி போன்ற துறைகளில் முதலீட்டை மையமாகக் கொண்ட, நிலையான மற்றும் சமமான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்காக பொது முதலீட்டில் வலுவான தேர்வு மற்றும் முன்னுரிமையை உறுதி செய்தல்.
- எரிசக்தி, நீர், போக்குவரத்து மற்றும் விமானத் துறைகள் உட்பட, அரசுடமை நிறுவனங்களின் நிதி நம்பகத்தன்மை, போட்டித்திறன் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துதல்.
- ஒரு விவேகமான முறையில், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் கடனைக் குறைக்கவும் பராமரிக்கவும் பேண்தகமை முறையில் கடன் முகாமைத்துவ உத்தியை உருவாக்குதல்.

பரந்த பொருளாதாரப பாதை:

- 2023 இல் 5 சதவித பொருளாதார வளச்சியினாள் பொருளாதார மீட்ச்சியை அடையப்பெறுவது
- உயர்ந்த, நீடிப்புத்திறன் வாய்ந்த மற்றும் நியாயமான முன்னேற்றத்திற்கான தடைகளை நீக்குவதற்கு, வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.
- தொழிலாளர் சந்தை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு பொருத்தமான சீர்திருத்தங்கள் மூலம் வேலையின்மையை 5.0 சதவீதத்திற்கும் குறைவாக பராமரித்தல்.
- ஒற்றை இலக்க பணவீக்கம் மற்றும் மிதமான உண்மையான வட்டி விகிதத்திற்கு திரும்புதல்.
- சந்தை அடிப்படையிலான கட்டமைப்பிற்குள் ரூபாயின் நிலையான பரிமாற்றுப் பெறுமதியை பராமரித்தல்.

சுகாதாரம் மற்றும் கல்வி, பொதுப் போக்குவரத்து, நீடித்த எரிசக்தி, இலத்திரனியல் மயமாக்கல் மற்றும் முக்கிய பொருளாதார உள்கட்டமைப்பு போன்ற முன்னுரிமைப் பகுதிகளுக்கு பொது முதலீடுகளை

அனுப்பும் அதேவேளை வலுவான மற்றும் நீடிப்புத்திறன் வாய்ந்த தனியார் துறையின் தலைமையிலான ஏற்றுமதி சார்ந்த பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்க நிதி மூலோபாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

செலவினங்களின் செயல்திறன் மற்றும் தரத்தை உறுதிசெய்து சேவை வழங்கலை மேம்படுத்துகின்ற அதேவேளை, அத்தகைய செலவினங்களுக்கான அரசாங்கத்தின் நிதி மூலோபாயம் மீண்டெழும் செலவினங்களை சீரமைத்தல் மற்றும் முகாமை செய்வதில் கவனம் செலுத்துகிறது. இத்தகைய மூலோபாயத்தில், தொடர்ச்சியான சொத்து முகாமைத்துவம், மின் கொள்முதல் செயல்முறைகள் மற்றும் மின்-மானியம் செலுத்தும் அட்டை போன்ற செயல்முறைகள் இலத்திரனியல் மயமாக்கலில் உள்ளடக்கப்படும்.

அரசுக்கு நிலையான வருமானம் வருதல்,உள்நாட்டு வருமானத் திணைக்களத்தில் (IRD) பெரிய வரி செலுத்துவோர் பிரிவை (LTU) வலுப்படுத்துதல், ஆபத்து அடிப்படையிலான தணிக்கைகளின் அறிமுகம், நிறுவனம் அல்லாத துறைகளுக்கான கட்டாய மின் அணுக்கோப்பிடல் முறையின் விரிவாக்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் வருமானம், நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பை (RAMIS) மதிப்பாய்வு செய்தல் போன்றவற்றிற்காக தற்போதைய வரி கட்டமைப்பை மறுசீரமைப்பதில் வருமான மேம்பாட்டு நடவடிக்கைகள் கவனம் செலுத்துகின்றது. இலங்கை சுங்கம் (SLC) ஏற்கனவே ஒற்றை சாளர அமைப்பு முறையை (Single Window System) ஆரம்பித்துள்ளது. திறைசேரியில் உள்ள ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் அமைப்பு (ITMIS) 2022 ஏப்ரல் இன் இறுதியில் 179 நிறுவனங்களில் வெளியிடப்பட்டது. உரிய வரிகளை சேகரிக்கும் வருமான கசிவை தவிர்க்கும் வகையில்,மது வரி திணைக்களம் மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த பொருட்களில் Foolproof ஸ்டிக்கர் மற்றும் மின்னிலக்க உருவ முறைமையை அமுல்படுத்தியது.

முக்கிய அரசுடமை நிறுவனங்கள் (SOEs) மோசமான செயல்திறன் பலவீனமான நிதி நடைமுறைகள் மற்றும் துணை-உகந்த விலை நிர்ணயம் ஆகியவற்றால் இயக்கப்படுகிறது.வரையறுக்கப்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை ஒரு கவலைகிடமானதாக இருக்கின்றன, இதன் விளைவாக, சில பெரிய அரசுடமை நிறுவனங்கள் பொது நிதி ஏற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க சுமையை உருவாக்குகின்றன. அரசுடமை நிறுவனங்களை நிதி ரீதியாக மிகவும் சாத்தியமான, போட்டித்திறன் மற்றும் புதுமையான நிறுவனங்களாக மாற்றுவதற்கு கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் இருப்புநிலை மறுசீரமைப்புக்கள் தேவைப்படுகின்றன.அரசாங்கத்தின் வரி அல்லாத வருமானத்தை ஆதரிக்கும் அதே வேளையில் செலவினங்களைக் குறைப்பதில் நிதிதளத்தை ஆதரிக்கவும், மூலோபாயமற்ற அரசுடமை வர்த்தக நிறுவனங்களின் பரந்த அடித்தள உரிமை மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் என்பனவும் எதிர்பார்க்கப்படுகிறது

அரசாங்கம் ஒரு லட்சிய நிதி ஒருங்கிணைப்பு திட்டத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை, பொருட்களின் விலைகள் மற்றும் உக்ரைன் போன்ற உலகளாவிய மோதல்கள் காரணமாக, பலவீனமான உள்நாட்டுப் பொருளாதார நிலைமை மற்றும் உலகப் பொருளாதாரத்தில் இருந்து எழும் எதிராற்றல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இதற்கு குறிப்பிடத்தக்க அபாயங்கள் காணப்படுகின்றது. அதன் விளைவாக, நிதி மூலோபாயத்தை செயல்படுத்துவதில் பல முக்கிய சவால்கள் ஏற்படுவதுடன், எதிர்பார்ப்புகளுக்கும் இலக்குகளுக்கும் மற்றும் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்திற்கும் அபாயங்களை ஏற்படுத்துகிறது.

1.3 சீர்திருத்தங்கள்

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான அரசாங்கத்தின் முடிவு ஒரு தொடக்கப் புள்ளியாக இருக்கும், மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டம் இலங்கைப் பொருளாதாரத்திற்குத் தேவையான முக்கியமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் ஒரு ஊக்கியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலைத்தகு வளர்ச்சியை எளிதாக்குவதற்கும் அனைத்து மக்களின் வாழ்க்கை நிலைமைகளை செம்மைப்படுத்துவதற்கும் நிதித்துறைக்கு வலுவான அடித்தளம் அமைக்கப்பட வேண்டும். நிதி மீள் சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில், பாதிப்புக்கு இலக்காகக் கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான திடமான சமூக பாதுகாப்பு வலைத் திட்டத்துடன் தனியார் துறை, பொதுத்துறை, சிவில் சமூகம் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களின் ஆதரவும் இன்றியமையாதது. பொறுப்புடைய மற்றும் ஒழுக்கமான நிதி முகாமைத்துவம், வெளிப்படையான மற்றும் ஆரோக்கியமான நிறுவனங்கள், மற்றும் ஏனையவற்றுடன் பொது சேவைகளை உறுதி செய்தல் என்பன இச் சூழ்நிலையில் எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஈடுபாடானது, உலகளாவிய சந்தைகள் மற்றும் நிறுவனங்களுக்குள் இலங்கையின் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடன் பேண்தகைமையை மீட்டெடுப்பதே அரசாங்கத்தின் உடனடியான முன்னுரிமையாக காணப்படுகிறது. இது இருமுனை அணுகுமுறை மூலம் செய்யப்பட வேண்டும், இதில் அ) சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களிடமிருந்து தொழில்நுட்ப நிபுணத்துவத்துடன் கடன் பங்குகளை மறுசீரமைத்தல், மற்றும் ஆ) சர்வதேச நாணய

நிதியத்தின் திட்டத்தின் கீழ் நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் என்பன உள்ளடங்கும். இலங்கையின் தற்போதைய கடன் விவரம் மற்றும் அதன் தீவிர பாதிப்பு, இலங்கையின் கடனாளிகளுடன் (வர்த்தக, இருதரப்பு) பேச்சுவார்த்தைகள் என்பன சர்வதேச நாணய நிதியத்தால் ஆதரிக்கப்படும் ஒரு பரந்த பொருளாதார திட்டத்தை நோக்கி பணிபுரியும் போது முக்கியமாகின்றது. கடனை பேண்தகு நிலைக்கு மறுசீரமைத்தவுடன் இலங்கையின் பொருளாதார மீட்சி நிலையான அடித்தளத்தை அடைய முடியும். ஒரு நிலையான நிதி தளத்தின் ஆதரவுடன் இலங்கை மீண்டும் உலக மூலதனச் சந்தைகளை அணுக முடியும்.

வரி சீர்திருத்தங்கள்

வரி விகிதங்களில் குறிப்பிடத்தக்க குறைப்பு, குறைக்கப்பட்ட வரி அடிப்படை மற்றும் பலவிதமான விலக்குகள் மற்றும் பிற சலுகைகளுடன் 2019 இல் இறுதியில் அரசாங்கம் குறைந்த வரி முறையை அறிமுகப்படுத்தியது இது வர்த்தகத்திற்கும் பொதுமக்களுக்கும் உடனடி நிவாரணம் அளித்தாலும், இதனால் ஏற்பட்ட பாதகமான நிதி விளைவுகள் மற்றும் பரந்த பொருளாதார விளைவுகளுடன் அரசாங்கத்தின் வருமானத்தில் கூர்மையான குறைப்பை ஏற்படுத்தியுள்ளமையை பின்பு அவதானிக்கப்பட்டது. நிலையான நிதிக் கட்டமைப்பை மீட்டெடுக்க, அரசின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும், இந்த நோக்கத்திற்காக, நிறுவன மற்றும் தனிநபர் வருமான வரிகள், பெறுமதி சேர் வரி மற்றும் முக்கிய மதுபான வரிகளின் வரி அடிப்படையை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகிறது. மிதமான வரி விகிதங்களை பராமரிக்க, வரி அடிப்படையை கணிசமாக விரிவுபடுத்தப்படல் வேண்டும். குறைந்த வரி - வரி அல்லாத வரம்புகள் மற்றும் வரி விலக்குகலில் சீர்திருத்தங்கள் மற்றும் வரி சலுகைகளை இது குறிக்கிறது நிற்கின்றது சில துறைகளில் முதலீடு அல்லது உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, பொருளாதாரக் கொள்கை ஊக்குவிப்புக்கான ஒரு கருவியாக வரிகள் நீண்ட காலமாகக் காணப்படுகின்றன. இதன் விளைவாக ஏராளமான வரி விடுமுறைகள், விலக்குகள் மற்றும் சலுகைகள் காணப்படுகின்றன, இது பல ஆண்டுகளாக அரசின் வருமானத் தளத்தை பலவீனப்படுத்தியுள்ளது. இலங்கை போன்ற நலன்புரி பொருளாதாரத்தில், வரி விதிப்பின் முக்கிய நோக்கம், பொது சேவை வழங்கல் மற்றும் பொது உள்கட்டமைப்புக்கான அரசாங்க செலவினங்களுக்கான தளத்தை வழங்குவதாகும், மற்றும் நிரந்தர கொள்கை தூண்டுதலுக்கான ஒரு கருவியாக வரிக் கொள்கையைப் பயன்படுத்துதல் நீடித்திருக்க முடியாததொன்று, மற்றும் இது தவிர்க்கப்பட வேண்டும்.

வரி நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள்

வரி இணக்கம் மற்றும் இடர் அடிப்படையிலான வரி தணிக்கைகளில் முன்னேற்றங்களை உறுதி செய்யும் அதேவேளை, டிஜிட்டல் மயமாக்கல் மூலம் வருமானச் சேகரிப்பை வலுப்படுத்த பல்வேறு வரி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இலத்திரனியல் வரி கோர்ப்பு முறையின் மூலம் கட்டாயமாக வரி செலுத்துவது, நிறுவனம் அல்லாத துறைக்கும் விரிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது செயல்திறனை மேம்படுத்தும் மற்றும் ஊழலுக்கான வாய்ப்புகளை குறைக்கும். தொழில்நுட்பத்தை மேம்படுத்துதலில், இலத்திரனியல் பதிவு செய்தல் மற்றும் பணம் செலுத்துதலுக்கான வசதிகள் போன்றவை வருமானச் சேகரிக்கும் நிறுவனங்களுக்கு, அரசாங்க வருமானத்தை உன்னிப்பாகக் கண்காணிக்க ஒரு பணித்தளத்தை வழங்கும், மற்றும் வரி நிர்வாகத்தினை வினைத்திறன் மற்றும் செயல்விளைவுடையதாக மேம்படுத்துவதன் மூலம் வரி நிர்வாகச் செலவுகளைக் குறைக்கும் அதேவேளை வரி சேகரிப்பை மேம்படுத்தவும் முடிகிறது. அரசாங்கம், சட்டம் மற்றும் பிற நிறுவனங்களின் செயல்பாடு முறைகளை மேலும் எளிதாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

வருமானச் சேகரிப்பு நிறுவனங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தானியங்கு அமைப்புகளில் அதாவது இறைவரித்திணைக்களம் (IRD) இன் வருமான நிர்வாக முகாமைத்துவத் தகவல் அமைப்பு (RAMIS) மற்றும் இலங்கை சுங்கம் (SLC) இன் சுங்கத் தரவுகளுக்கான தானியங்கு அமைப்பு (ASYCUDA) என்பனவற்றில் மேலும் மேம்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அதன் விளைவாக, அனைத்து வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்களும் தங்கள் வரிக் கணக்கை, 2021 ஏப்ரல் 1 முதல் இலத்திறனவியல் முறையில் கோர்ப்பு வைப்பதற்கு இறைவரித்திணைக்களம் இல் வசதி செய்யப்பட்டுள்ளன. வரி சேகரிக்கும் நிறுவனங்கள், வரி செலுத்துவோர் மற்றும் வங்கிகளுக்கு இடையே தகவல் பரிமாற்றங்கள் என்பவை, வரி நிர்வாக முகமையகங்களை மேலும் டிஜிட்டலாக்கம் செய்வதன் மூலம் எளிதாக்கப்படும்.

வரி தொடர்பான அனைத்து ஆதார ஆவணங்களிலும் வரி அடையாள எண்ணின் (TIN) பயன்பாடு அல்லது வரி செலுத்துபவரின் அடிப்படை ஆவணங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. இறைவரித்திணைக்களம் இல் வரி செலுத்துவோரின் வருமான அளவின் அடிப்படியில் வெவ்வேறு வரி செலுத்துவோர் பிரிவுகளை நிறுவுதல் அதாவது, பெரிய வரி செலுத்துவோர் பிரிவு (LTU), மிகப்பெரிய வரி செலுத்துவோர் பிரிவு, மேல்மட்ட நிறுவன அலகு (UCU), நடுத்தர மட்ட

நிறுவன அலகு (MCU) மற்றும் பிரதேச நிறுவன அலகு (RCU) போன்ற அமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான செம்மையாக்கல்கள் வரி நிர்வாகத்தை மிகவும் வினைத்திறனுடையதாகவும் செயல்விளைவுடையதாகவும் மற்றும் பயனாளர் நட்புடையதாகவும் மேம்படுத்தியது.

இலங்கை மதுவரித் திணைக்களம் (EDSL) தகவல் தொழில்நுடபத்தால் நிர்வகிக்கப்படும் வருமான அமைப்பை இணைத்து, மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த பொருட்களுக்கான Foolproof Sticker மற்றும் இலக்கமுறை படிமச் செயலாக்கம் (DigitalImageSystem) என்பவற்றை செயல்படுத்தப்படுவதன் வாயிலாக அதன் எண்முறைப்படுத்தல் (Digitization) செயல்முறையை தொடரும். உள்நாட்டு இறைவரித்திணைக்களம் ஆனது ஒன்லைன் கட்டண தளங்கள் வழியாக ஒரு மாற்று வரி செலுத்தும் முறையை (ATPS) அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் இலங்கை சுங்கம் அதன் செயல்முறைகளை வேகமாக கண்காணிக்க டிஜிட்டல் கையொப்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. சுங்க நடைமுறைகளை நெறிப்படுத்த இலங்கை சுங்கத் திணைக்களம், ஒற்றை சாளர' முறையை நடைமுறைப்படுத்தவும் தொடங்கியுள்ளது.

பொதுச் செலவு நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள்

முன்னுரிமை அல்லாத செலவினங்களைக் குறைக்கும் அதே வேளையில் பொருளாதார மற்றும் சமூக முன்னுரிமைகளை மூலோபாய ரீதியாக அடையாளம் காண்பதன் மூலம் வருமானம் மற்றும் செலவு முகாமைத்துவத்திற்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவது அவசியம். அரசாங்கம் செலவினங்களை சீரமைப்பு செய்து மற்றும் வரையறுக்கப்பட்ட நிதி வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கு உற்பத்திப் பயன்பாடுகளில் வளங்களை மையப்படுத்தும் சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்காக, பொதுச் செலவினங்கள் வினைத்திறன், செயல்விளைவு மற்றும் நடுநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் செலவினம் சீரமைப்பு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொது முதலீட்டில் சீர்திருத்தங்கள்

பசுமைப் பொருளாதாரம், அரசாங்கத்தின் எண்முறை (டிஜிட்டல்) மயமாக்கல் மற்றும் கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட சமூகப் பொருளாதார உள்கட்டமைப்பு ஆகியவற்றில் போதுமான பொது முதலீட்டை பராமரிக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரச-தனியார் பங்களிப்பு அடிப்படையில் திட்டங்களை கவர்வதன் மூலம் அரசாங்கத்தின் மீதான கடன் சுமையை குறைக்க, பொது முதலீட்டில் கணிசமான பங்கை வைத்திருக்கும் வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பேண்தகு பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கும், உலகளாவிய தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கும் சமூகப் பொருளாதார உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதானது, பொது முதலீட்டுத் திட்டத்தின் இன்றியமையாத அங்கமாகும். வரையறுக்கப்பட்ட நிதிதளத்தில் செலவினங்களை மேம்படுத்துவதற்கு பொது முதலீட்டிற்கு நெருக்கமான கண்காணிப்பு தேவைப்படும். பொருளாதார மீட்சி மற்றும் பணத்துக்கான மதிப்பிற்கு மத்தியில் உடனடி முன்னுரிமைகளில் கூர்மையான கவனம் செலுத்தி விவேகமான மற்றும் கடுமையான அடிப்படையில் திட்டத் தேர்வு செய்யப்படும்.

பொது நிதி நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள்

பொது நிதியில் நிர்வாகத்திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கையின் பொதுச் செலவுகள் மற்றும் வரிவிதிப்பு வெளிப்படையானதாக, சட்ட அடிப்படையிலானதாக, வினைத்திறன் மிக்கதாக, மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்தும் வகையில் நடத்தப்படுகிறதா என்பவற்றை உறுதி செய்வதற்கு ஒரு வலுவான பொது நிதி முகாமைத்துவ அமைப்பு (PFM) முக்கியமகின்றது. இந்த முடிவை நோக்கி, நாட்டின் பொது நிதியை உறுதி செய்வதற்கான காசோலைகள் மற்றும் நிலுவை/ இருப்புக்களை, ஒருமைப்பாடுடனும் மற்றும் செயல்திறன் உடனும் நிர்வகிப்பதற்கு, பொது நிதி முகாமைத்துவம் சட்டங்கள், நிறுவனங்கள், பயிற்சிகள் மற்றும் போதுமான மேற்பார்வை என்பவற்றை முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

இலங்கை பல ஆண்டுகளாக பொது நிதி முகாமைத்துவத்தில், அரசின் வருமானக் கொள்கை தொடர்பானசட்டங்களை இயற்றியுள்ளது. எவ்வாறாயினும், நல்ல நிதி பயன்களை உறுதி செய்வதற்கான சட்டங்களை இயற்றுவது மட்டும் போதுமானதாகாது, எனவே வலுவான நிறுவனங்களுடன் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளும் மாற்றப்படல் வேண்டும். முகாமைத்துவச் (பொறுப்பு) சட்டம் 2003 இல் இருந்து நடைமுறையில் உள்ளது. இந்த நோக்கத்திற்காக, பாதீட்டை தயாரித்தல், செயல்படுத்துதல் என்பதில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் மேற்பார்வையை உத்தரவாதப் படுத்துவதன் மூலம் அரசாங்கம் அதன் ஒட்டுமொத்த வரவு செலவுத் திட்ட செயல்முறையை மேம்படுத்த விரும்புகிறது. இந்த நடவடிக்கைகள் பாதிட்டில் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் மற்றும் நிதி விளைவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரச நிதி முகாமைத்துவத்தில் பொது கொள்முதல் செயல்முறையில், பணத்திற்கான மதிப்பையும் பொது செலவினங்களில் நேர்மையையும் உறுதி

செய்வதற்காக, தேவையான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயல்திறன் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, அரசாங்கம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி வளங்களில் செயல்விளைவுடைய முகாமைதத்துவத்தை உறுதி செய்வதற்காக, நிதி அமைச்சின் கீழ் இலத்திரனியல் அரச கொள்முதல் செயல்முறை (e-GP) செயலகத்தை நிறுவுவதன் மூலம், பொது கொள்முதல் அமைப்பில் இலத்திரனியல் கொள்முதல் செயல்பாடடை இணைத்துள்ளது. இது திறமையான, வெளிப்படையான மற்றும் செலவு குறைந்த இணைய அடிப்படையிலான கொள்முதல் முறையை வழங்குகிறது. விலைகோருபவர் தங்கள் விலை கோரலை நேரடி வருகை இல்லாமல் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்க அனுமதிக்கிறது.

பொறுப்புடனான கணக்கு வைப்பு, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் சொத்து முகாமைத்துவம் என்பனவற்றை இணைப்பதன் மூலம், அரச நிதி நிர்வாகத்தை எண்முறைப்படுத்தல் (digitalization) செயல்முறையின் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் அமைப்பு (ITMIS) அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு, தகவல் அமைப்பின் கூறுகள் பண அடிப்படையிலான கணக்கியலில் இருந்து திரட்டல் அடிப்படையிலான கணக்கியலுக்கு மாற்றத்தை சிறப்பாகச் செய்யும் மேலும், இது எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் செலவுகளில் கவனத்தை செலுத்துகிறது.

அரச நிதி முகாமைத்துவச் செயல்முறைகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம், மேம்படுத்தப்பட்ட நிதி விதி சட்டங்களை உள்ளடக்கிய புதிய பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் குறியிடப்படும். அத்தகைய சட்டங்களின் கட்டமைப்பிற்குள் அவை செயல்படுவதை உறுதிப்படுத்துவது நிர்வாகத்தின் பொறுப்பு, மேலும் இதற்கான உரிய மேற்பார்வையை வழங்குவது சட்ட சபையின் கடமையாகும்.

அரசுடமை நிறுவனங்களில் சீர்திருத்தங்கள்

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் (SOEs) நீண்ட காலமாக இலங்கையின் நிதி நிலுவைகளில் நிகர சுமையாக இருந்து வருகின்றன. எரிபொருள் மற்றும் போக்குவரத்து துறைகளில், அரசுடமை நிறுவனங்களின் இழப்புகள் சில பெரிய நிறுவனங்களிடையே குவிந்துள்ளன. எவ்வாறாயினும், எல்லா அரசுடைமை நிறுவனங்களும், போட்டித்திறன், செயல்திறன் மற்றும் இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் சீர்திருத்தத்திற்கான குறிப்பிடத்தக்க தேவையைக் கொண்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக அரசுடமை நிறுவனங்களுக்குப் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. முக்கியமான நட்டத்தை ஏற்படுத்தும் அரசுடமை நிறுவனங்களுக்கு செலவுமீட்பு விலை நிர்ணய நடவடிக்கைகள் (குறிப்பாக இலங்கை பெற்றோளிய கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் இலங்கை மின்சார சபை (CEB)) தேவைப்படுகிறது, மேலும் திரட்டப்பட்ட கடனின் சுமையை நிவர்த்தி செய்ய இருப்புநிலைக் குறிப்புகளை மறுசீரமைக்க வேண்டும்.
2022 மே மாதம் 24 ஆம் திகதி, அன்று நடைமுறைப்படுத்தப்பட்ட எரிபொருளுக்கான செலவுபிரதிபலிப்பு விலை பொறிமுறைகளை மீண்டும் அறிமுகப்படுத்துதல், மின்சாரம், எல்பி எரிவாயு மற்றும் தண்ணீருக்கான செலவு - மீட்பு விலை பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவது போன்றவை திறைசேரி அரசுடமை நிறுவனங்களின் கடனைக்குறைக்க உதவும். நிதி முகாமைத்துவம், நிர்வாகம், போட்டி மற்றும் இருப்பு நிலைகளை மறுசீரமைத்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல், குறிப்பாக நடுத்தர காலத்திற்குள், பெரிய நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய அடையாளம் காணப்பட்ட அரசுடமை நிறுவனங்களாக, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோளிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை விமானசேவை போன்றன சீர்திருத்தங்கலின் அறிமுகத்தை வேண்டியநிற்கும் முக்கிய நிறுவனங்களாக கானபடுகின்றன. ஒத்த பகுதிகளில் செயல்படும் அரசுடமை நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைத்தல் என்பவற்றை ஊக்குவிக்க மதிப்பு கூட்டலை மேம்படுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும் மேலதிக தொழிலாளர்களுக்கு ஏற்படும் தேவையற்ற செலவுகளை குறைக்கவும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அதிகரித்துவரும் கடனில் இருந்தான பாதிப்புகளைக் குறைப்பதற்கும் வினைத்திறனுடைய வள ஒதுக்கீட்டை வளர்ப்பதற்கும் அரசுடமை நிறுவனங்களின் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது. அரசுடமை நிறுவனங்கள், தொழில்முறை குழுமம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன், தனியார் துறையுடன் ஒரு சம நிலையான போட்டித்தளத்தில் போட்டியிட வேண்டும் மற்றும் நவீன பெரும்நிறுவன நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், சாத்தியமற்ற அரசுடமை நிறுவனங்களின் செயற்பாடுகளை தனியார் துறையால் பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் எளிதாக நிறைவேற்றிக்கொடுக்க முடியுமென்றால், இவை மறுகட்டமைக்கப்படும் அல்லது வெளியேற அனுமதிக்கப்படும். நாட்டின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, பயன்படுத்தப்படாத மற்றும் மூலோபாயமற்ற அரச சொத்துக்கள், உற்பத்தி செய்யாத மற்றும் குறைவான மதிப்பு சேர்க்கும் அரசுடமை நிறுவனங்களை விலக்குவது தேவைப்படுகிறது.

உடனடி முன்னுரிமைகள் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் சீர்திருத்தங்கள்

அரசாங்கத்தின் உடனடி முன்னுரிமையானது குடிமக்களின் தேவைகள் மற்றும் பொருளாதார

நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை சீராக வழங்குவதற்கு பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாகும். இந்த நோக்கத்திற்காக, தேவையான நாணயக்கொள்கை, மாற்று விகிதக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கை நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு பரந்த பொருளாதார உறுதிப்படுத்தல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த பரந்த பொருளாதார திட்டத்தை ஆதரிப்பதற்கும், அதன் மூலம் மேற்கொள்ளப்படும் கொள்கை நடவடிக்கைகளுக்கு நம்பகத்தன்மையை வழங்குவதற்கும் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதற்கு இணையாக, ஒட்டுமொத்தக் கடன் சுமையை நிலையான மட்டத்திற்கு குறைக்கும் நோக்கில், வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க, வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்த ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளையில், உலகளாவிய மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை இலங்கை மீளப்பெறும் வரை, சுதந்திரமாக நிதியுதவியைப் பாதுகாப்பதற்காக அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான வளங்களை வழங்குவதற்கான நிதியளிப்பையும் நன்கொடையாளர்களின் ஆதரவையும் திரட்டுவதற்கு அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கம் இந்த உடனடி முன்னுரிமைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தும் அதே வேளையில், இலங்கைப் பொருளாதாரத்தின் நடுத்தர மற்றும் நீண்ட கால வளர்ச்சித் திறனை இழக்காது. இந்த நோக்கத்திற்காக, பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் விரிவாக்கத்திற்கான தடைகளை நீக்குவதன் மூலம் பொருளாதாரத்திற்கு அந்நிய செலாவணி உள்வரவை உருவாக்கும் கடன் அல்லாதவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கை எதிர்கொள்ளும் வெளிநாட்டுக் கடன் சவால்களுக்கு நிலையான தீர்வை வழங்கும் கடன் அல்லாத வரவுகள் உருவாக்கப்படுகிறது. தொழிலாளர் சந்தையில் உள்ள இடையூறுகள், குறிப்பாக குறைந்த அளவிலான பெண் தொழிலாளர் பங்கேற்பின் அடிப்படையில், மிகவும் நெகிழ்வான வேலை முறைகளை எளிதாக்குதல் மற்றும் முறைப்படுத்துதல், பகல்நேர பராமரிப்பு மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்களில் முதலீட்டை எளிதாக்குதல் மற்றும் பொது போக்குவரத்தின் பாதுகாப்பு என்பவை கிடைப்பனவு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் தீர்க்கப்படும். பொருளாதாரம் முழுவதும் அடுக்குச் செலவுகளை உருவாக்கும் இடைநிலை மற்றும் மூலதன இறக்குமதிகள் மீது கணிசமான செலவுகளை விதிக்கும் பாரா-கட்டணங்கள் வடிவில் உள்ள உயர் வர்த்தகத் தடைகளையும் அரசாங்கம் படிப்படியாகக் குறைக்கும். இத்தகைய கட்டண தாராளமயமாக்கல், கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ள தொழில்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வர்த்தக சீர்படுத்துகை திட்டத்துடன் இணைந்து செய்யப்படும். இலங்கையில் எரிபொருள் உற்பத்தி செலவைக் குறைப்பதற்கும், கிடைப்பதை மேம்படுத்துவதற்கும் புதுப்பிக்கத்தக்க எரிபொருள் வளங்களை விரிவுபடுத்துவதற்கும் அரசாங்கம் இடர்பாடுகளை எளிதாக்கும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு நிலத்தை எளிதாகப் பெறுவதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகவும் சவாலான ஒரு காலகட்டத்தை கடந்து கொண்டிருக்கிறது, எவ்வாறாயினும், உடனடி குறுகிய கால சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் பொருத்தமான கொள்கை சீர்திருத்தங்கள் இப்போது முன்வைக்கப்பட்டுள்ளன, அதேவேளை நாட்டின் நீண்ட கால வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளிலும் முதலீடு செய்யப்படுகின்றன. சீர்படுத்துகை நடைபெறும் காலம் சந்தேகத்திற்கு இடமின்றி சவாலானதாக இருக்கும், மேலும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கு அவற்றிற்கான இலக்கு மற்றும் போதுமான உதவிகளை வழங்குவதற்காக அதற்கான சமூக பாதுகாப்பு திட்டத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கை இந்த முன்னோடியில்லாத நெருக்கடியிலிருந்து ஒரு வலுவான, உற்பத்தி மற்றும் சமமான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக வெளிவறுவதற்காக, இந்த முழுமையான கொள்கை நடவடிக்கைகளை தடையின்றி, பரந்தளவிலும், சீர்த்திருத்தங்களுடனும், மக்கள் ஆதரவுடனும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அடித்தளத்தை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


02

2021 ஆம் ஆண்டின் பொருளாதார அபிவிருத்தி

2.1 மேன்நோக்கு

உல்லாசப் பிரயாணத்துறையிலும் வெளிநாட்டு வருமானத்திலும் தங்கியுள்ள இலங்கைப் பொருளாதாரமானது, கொவிட் - 19 பெருந்தொற்றின் தாக்கத்தால் சிதைவடைந்தமை, தற்போது முன்னெப்போதுமில்லாத எதிர்பாரா சமூக-பொருளாதார எதிர்விளைவுகளைத் தூண்டியுள்ளது. 2020 இல் சுருக்கமடைந்த பொருளாதாரம், கடும் தொற்றும் தன்மை கொண்ட புதிய "டெல்டா" மாறுபாட்டிற்கு மத்தியிலும் மருந்து ரீதியானதும் மற்றைய வழிகளிலுமான பெருந்தொற்றுக் கட்டுப்பாட்டால் 2021 இல் 3.7 சதவீதத்தால் மீண்டெழுந்தது. அதனால், விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகியவை உள்ளிட்ட பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும் ஒடுக்கப்பட்ட கேள்வி, நடமாடும் கட்டுப்பாடுகளில் தளர்வு, அடிப்படை ஆண்டின் விளைவு போன்றவற்றைத் தொடர்ந்து விரிவடைந்தன.

வரைபு 2.1 : மொ.உ.உ. இன் காலாண்டு வளர்ச்சி வீதம்



மூலம் : தொகை மதீப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

நேரானதொரு வளர்ச்சி வேகமானது, 2020 இன் கடைசி இரு காலாண்டுகளிலிருந்து தெரிய ஆரம்பித்து, பொருளாதாரச் செயற்பாடுகளின் எழுச்சியுடன், 2022 இன் இரண்டாவது காலாண்டு வரை 12.4 சதவீத கவர்ச்சியானதொரு வளர்ச்சியுடன் தொடர்ந்தது. ஆயினும், 2021 இன் மூன்றாவது காலாண்டில், கொவிட் - 19 இன் மூன்றாவது அலையினாலும் கடும்தொற்று கொண்ட "டெல்டா" மாறுபாட்டினாலும் பொருளாதார வளர்ச்சியானது 1.5 சதவீதத்தால் சுருங்கியிருந்தது. இது நாடு முழுவதும் பிரயாணக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது. ஆயினும், நாடு பரந்த தடுப்பு மருந்து விநியோகம் காரணமாக பொருளாதார வளர்ச்சியானது 2021 இன் கடைசிக் காலாண்டில் 1.8 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தது.

அட்டவணை 2.1|2021 இல் மொ.உ.உ. துறைரீதியான வளர்ச்சி வீதங்கள் (%)

துறை	கா1	கா2	கா3	கா4	வருடாந்தம்
மொ.உ.உ. (சாதாரணம்)	**9.2**	**25.6**	**3.1**	**12.9**	**11.9**
விவசாயம்	15.4	29.5	11.0	15.3	17.3
கைத்தொழில்	15.0	34.5	12.9	18.4	18.9
சேவைகள்	6.	13.8	2.5	10.5	8í
மொ.உ.உ. (மெய்)	**4.2**	**12.4**	**-1.5**	**1.8**	**3.7**
விவசாயம்	4.1	9.8	0.8	-4.9	2.0
கைத்தொழில்	5.9	22.7	-1.6	-0.2	5.3
சேவைகள்	2.9	7.3	-1.5	3.8	3.0


மூலம்: தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

பொருளாதாரச் செயற்பாடுகளின் படிப்படியான இயல்புநிலையுடன், 2021 இல், நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவுகள் மீண்டெழுந்தன. ஆயினும், தேசிய சேமிப்பு-முதலீட்டு இடைவெளியானது, முதலீட்டுச் செலவில் அதிகரித்த வளர்ச்சி காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020 இல் 6.4 சதவீதத்திலிருந்து 2021 இல் 7.6 சதவீதமாகக் காணப்பட்டது.

கடன் சேவைக் கொடுப்பனவுகள் மற்றும் ரூபாவின் கடும் மதிப்பிறக்கம் உள்ளிட்ட வெளியேற்றங்களால் ஏற்பட்ட தூண்டலால் ஏற்பட்ட மீதி மற்றும் கொடுப்பனவுகளாலான வெளியக அழுத்தம் காரணமாக வெளியகத்துறை 2020 இலும் 2021 இலும் எளிதில் பாதிக்கப்படத்தக்கதாயிருந்தது. வணிகப் பற்றாக்குறையானது 2021 இல் 8,139 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விரிவடைந்தது. இதற்குக் காரணமாக 2021 ஜூன் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக 1.0 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாகப் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை விஞ்சிய இறக்குமதிச் செலவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்தது. ஆயினும், உல்லாசப் பிரயாணத் துறையிலிருந்தான சம்பாத்தியங்கள், உல்லாசப் பயணிகளின் வருகைகளில் வீழ்ச்சி காரணமாக 25.7 சதவீதத்தால் 507 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் குறிப்பிட்ட அளவில் குறைவடைந்த அதேவேளை, தொழிலாளர்களின் கொடுப்பனவுகள் 5,491 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு 22.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக, முறைசாரா வழிகளில் அனுப்பப்பட்ட பணத்திற்கு முறையற்ற சந்தையில் அதிக வீதங்கள் வழங்கப்பட்டமையாகும். - இதைத் தொடர்ந்து வெளியகத் துறையிலான நடைமுறை கணக்குப் பற்றாக்குறை 2021 இல், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.0 சதவீதத்திற்கு அல்லது, 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு விரிவடைந்தது

மொத்த உத்தியோகபூர்வச் சேமிப்புகளின் குறைவடையும் வேகமானது வருடம் முழுவதிலும் தொடர்ந்ததுடன், அது 2021 டிசெம்பர் முடிவில் 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகள், அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களுக்கு ஆதரவளிப்பதற்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கல், மத்திய வங்கியின் முதிர்ச்சிப் பொறுப்புகளின் நன்மதிப்பு ஆகியன, 2021 இல் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களால் ஒதுக்கங்கள் குறைவடைவதற்குக் காரணமாக அமைந்தன. ஆயினும், மொத்த உத்தியோகபூர்வச் சேமிப்புகள் ஏப்ரல் 2022 இன் இறுதியில் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு 2022 ஏப்ரல் இறுதியில் கடுமையான நிலைமைக்கு மேலும் குறைவடைந்தன. இலங்கை ரூபாய் 2001 இல் 7.0 சதவீதத்தால் மதிப்பிறங்கியதுடன், 2022 மார்ச்இன் இறுதியில் மேலும் 33.0 சதவீதத்தால் உள்நாட்டுச் செலாவணிச் சந்தையின் அழுத்தம் காரணமாக மதிப்பிறங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) 2020 இல் 81.0 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன் ஒப்பிடும்போது, 2021 இல் தற்போதைய விலைகளில் 84.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பீடு செய்யப்பட்டது.

வரைபு 2.2 | தலா வீத மொ.உ.உ. (ஐ.அ.டொலர்)



மூலம் : தொகை மதீப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

2021 இல் உரிமைப்பங்குகளின் சந்தையானது ஒரு கலவையான செயற்றிறனைக் காண்பித்தது, எல்லாப் பங்குகளுக்குமான விலைச் சுட்டெண் 12,226 என்ற ஆகக்கூடிய புள்ளியைப் பதிவுசெய்ததுடன், சந்தை மூலதனமிடல் 5,489 பில்லியன் ரூபாய்களாக ஆகக்கூடிய அளவைப் பதிவுசெய்தது. ஆயினும், 20 பாரிய கம்பனிகக்கான முதலீட்டுச் சுட்டெண் (S&P SL20) 2022 ஏப்ரல் 8 இல் 2,624 புள்ளிகளுக்குச் சரிந்தபோது, எல்லாப் பங்குகளுக்குமான விலைச் சுட்டெண் 8,144 புள்ளிகளுக்குச் சரிந்தது. மேலும், சந்தை மூலதனமிடலானது 2021 இன் இறுதியில் 5,489 பில்லியன் ரூபாய்களிலிருந்து, 2022 இன் முதலாவது காலாண்டின் இறுதியில் 30.4 சதவீதத்தால் 3,827 பில்லியன் ரூபாய்களுக்குக் குறைவடைந்தது.

தொழிலாளர்களின் மொத்தப் பங்குபற்றல் வீதமானது 2020 இல் 50.6 சதவீதத்திலிருந்து 2021 இல் 49.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததுடன் இது தொழிற் சந்தைக்கு ஏற்பட்டுள்ள நிரம்பி வழிதலிலிருந்து உருவாகும் சனத்தொகை அதிகரிப்புடன் சேர்ந்த தொழிற்பலத்திலான சரிவைப் பிரதிபலிக்கிறது. இதனால், "புதிய வழமை" நிலைமையில் பொருளாதாரச் செற்பாடுகளின் மீண்டெழுதலுடன் சேர்த்து வேலையற்றோர் வீதம் 2020 இல் 5.5 சதவீதத்திலிருந்து 20201 இல் 5.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்து.

பணவீக்கம் முன்னெப்போதுமில்லாத வகையில் 2021 டிசெம்பரிலிருந்து இரட்டைத்தான மட்டத்திற்கு மீளெழுந்தது. ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலிருந்து (2013=100) என்ற அடிப்படை ஆண்டைக் கொண்டு 2022 ஏப்ரலில் 29.8 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 39.1 சதவீதத்திற்கு - எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்ந்தது. இதற்குக் காரணமாக அமைந்தவை உணவுப் பொருட்களின் பணவீக்கமான 57.4 சதவீதம் மற்றும் உணவற்ற பொருட்களின் பணவீக்கமான 30.6 சதவீதம் ஆகியவையாகும். பொருளாதாரத்தின் அடித்தளமான பணவீக்கமாகக் கருதப்படும் உள்ளார்ந்த பணவீக்கம், 2021 டிசெம்பரில் காணப்பட்ட 8.3 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 28.4 சதவீதத்திற்கு உயர்ந்தது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைப் பயன்படுத்திக் கணிக்கப்படும் முதன்மைப் பணவீக்கமும் அதேமாதிரியான போக்கையே காட்டியதுடன், 2022 ஏப்ரலில் 33.8 ஆக ஏறியிருந்தது.

மத்திய வங்கி 2020 இன் இறுதிப் பகுதியிலிருந்து 2021 இன் பெரும்பாலான காலப்பகுதிகளில் உள்ளூர் மற்றும் உலக ரீதியான பேரண்டப் பொருளாதார நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, தனது இணக்கமான பணக் கொள்கையைத் தொடர்ந்தது. அதன்படி, நிலைத்த வைப்பு வசதி வீதமும் (SDFR), நிலைத்த கடன் வசதி வீதமும் (SLFR) முறையே 4.5 மற்றும் 5.5 ஆக 2021 ஜூலை வரை பேணப்பட்டன.

பணவீக்கத் தாக்கங்களைக் கவனத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது தனது வரலாற்றிலேயே கொள்கை விகிதத்தை 700 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்து, தனது நாணயக் கொள்கையை இறுக்கியது. நிலைத்த வைப்பு வசதி வீதமும் (SDFR), நிலைத்த கடன் வசதி வீதமும் (SLFR) 2022 ஏப்ரல் 08 தொடக்கம் பணவீக்கத் தாக்கங்களை நிலைப்படுத்தும் நோக்கில் முறையே 13.50 மற்றும் 14.50 சதவீதங்களால் அதிகரிக்கப்பட்டன. அதற்கிடையில், 2020 இன் இறுதியில் ரூபா 6,171 பில்லியன்களாக இருந்த தனியார்துறைக்கான கடன்கள் 2021 டிசெம்பர் இறுதியில் ரூபா 6,981 பில்லியன்களாக அதிகரித்தன. அரசாங்கத்துக்கான தேறிய கடன்கள் 2020 இன்

இறுதியில் ரூபா 4,548 பில்லியன்களிலிருந்து, 2021 டிசெம்பர் இறுதியில் ரூபா 5,832 பில்லியன்களாக அதிகரித்தன.

2.2 இலங்கையின் பொருளாதாரம்

2020 இல் 3.6 சதவீத சுருக்கத்துடன் இருந்த இலங்கையின் பொருளாதாரம் 2021 இல், 3.7 சதவீத வளர்ச்சியுடன் மேம்பட்டிருந்தது. பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும், அதாவது விவசாயம், கைத்தொழில், சேவைத்துறைகள் 2020 இலான அடிப்படைத் தாக்கத்திலிருந்து 2021 இல் விரிவடைந்தன. விவசாயத் துறையானது 2020 இல் 2.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 2.0 சதவீதத்தால், அதன் உப துறைகளான தெங்கு, விலங்கு உற்பத்தி, தேயிலை, வாசனைப்பொருட்கள், கடல் மற்றும் உள்ளூர் மீன்பிடி ஆகியவற்றிலிருந்தான வளர்ச்சிகளினால் மீண்டெழுந்தது. கைத்தொழிற் துறையானது, 2020 இல் 6.9 சதவீத சுருக்கத்திலிருந்து, 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. துணி மற்றும் ஆபரணங்கள், இறப்பர், உலோகமற்ற உற்பத்திகள், சுரங்கமும் கல்லுடைப்பும், உணவும் பானங்களும், மின்சார உற்பத்தி, கட்டுமானம் ஆகிய உப துறைகள் இதற்கு உதவியளித்தன. பொருளாதாரத்தின் பாரிய துறையான சேவைத் துறையானது, 2020 இல் 1.6 சதவீத தாமத நிலைமையிலிருந்து மீண்டு, ரூபா 5.8 ட்ரில்லியன் பெறுமதி சேர்ப்புடன் 2021 இல் 3.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்குக் காரணமாக அமைந்தவை, அதன் உப துறைகளான மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து, நிதிச் சேவைகள், காணி கட்டிட வர்த்தகம் ஆகியனவாகும். தொலைத்தொடர்பும் தகவல் தொழில்நுட்பமும் 2021 இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தன. பெருந்தொற்றால் தேவைப்படுத்தப்பட்ட நிலைமைகள் இந்தச் சேவைகளின் தேவையை அதிகரித்திருந்தன.

2021 இல் மொத்த நிலையான முதலீடு 14.5 சதவீத்தால் வளர்ச்சியடைந்ததால், முதலீட்டுச் செலவுகள் 23.2 சதவீதத்தால் அதிகரித்தன. தனியார் மற்றும் அரச நுகர்வுச் செலவுகள் 2020 இல் 2.0 சதவீதத்திலிருந்து 2021 இல் 9.9 சதவீதத்தால் அதிகரித்ததுடன், அவ்வாண்டினுள் தனியார் நுகர்வுகளே இதற்குரிய கணிசமான பங்களிப்பை வழங்கியது. தேறிய வெளியகக் கேள்வி 2021 இல் 0.4 சதவீதத்தால் சாதாரண அளவில் ஏற்றுமதியின் அதிகரித்த அளவுகளில் இருந்த இலாபம் காரணமாகச் சுருங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் தேசிய சேமிப்புக்கும் இடையிலான விகிதம் 2021 இல் 23.8 சதவீதமாக முன்னேற்றமடைந்தது. மேலும், தேசிய சேமிப்புகளுக்கும் முதலீடுகளுக்கும் இடையிலான இடைவெளி, 2020 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதமாக இருந்து, 2021 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.9 சதவீதமாக, முதலீட்டுச் செலவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இதற்குக் காரணம் ஆகும்.

தற்போதைய சந்தைப் பெறுமதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020 இல் ரூபா 15,027 பில்லியன்களாக இருந்து, 2021 இல் ரூபா 16,809 பில்லியன்களாகக் காணப்பட்டது. அதன்படி, தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020 இல் ரூபா 685,587 ஆக இருந்து, 2021 இல் ரூபா 758,680 .ஆக அதிகரித்தது.

அட்டவணை 2.2 | நிலையான சந்தை விலைகளில் (2010) மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016 - 2021

ரூபா மில்லியன்

	"பொருளாதார செயற்பாடுகள்"	2016	2017	2018	2019 (அ)	2020 (அ)	2021 (ஆ)	2020/2019 மாற்றம் (%)	2021/2020 மாற்றம் (%)
	விவசாயம், காடாக்கம், மீன்பிடி	**644,655**	**642,159**	**679,702**	**688,076**	**672,930**	**686,478**	**(2.2)**	**2.0**
1	தானியங்கள் (நெல் நீங்கலாக)	13,158	11,503	11,829	10,474	15,170	16,638	44.8	9.7
2	நெல்	52,388	48,648	70,380	74,169	79,388	74,047	7.0	-6.7
3	மரக்கறிகள்	58,349	55,240	55,230	54,539	58,669	57,201	7.6	-2.5
4	கரும்பு, புகையிலை, நீண்ட காலப் பயிர்கள் அல்லாதவை	2,347	2,044	1,820	2,000	2,386	2,209	19.3	-7.4
5	பழங்கள்	46,512	49,961	55,654	60,399	64,156	59,165	6.2	-7.8
6	எண்ணெய் பிரித்தெடுக்கும் காய்கள் (தேங்காய், செவ்விளநீர், பனங்காய்)	66,971	53,773	57,577	67,742	60,705	67,481	(10.4)	11.2
7	தேயிலை (பச்சை இலைகள்)	63,972	66,879	67,170	66,329	61,621	66,178	(7.1)	7.4
8	ஏனைய பிற பானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ) முதலியன	1,354	1,268	1,592	1,181	1,437	1,213	21.7	-15.6
9	நறுமணப் பொருட்கள், வாசனைப் பயிர்கள், மருந்தாக்கல் பயிர்கள்	62,931	63,200	66,914	66,223	68,437	71,514	3.3	4.5
10	இறப்பர்	23,028	24,165	25,158	22,779	23,831	23,428	4.6	(1.7)
11	ஏனைய நீண்டகாலப் பயிர்கள்	16,484	16,717	16,303	16,380	16,647	15,851	1.6	(4.8)
12	கால்நடை உற்பத்தி	55,631	58,729	63,418	64,744	62,941	69,035	(2.8)	9.7
13	நாற்றுக்கள் விநியோகம் மற்றும் விவசாய ஒத்துழைப்பு செயற்பாடுகள்	10,210	9,238	9,258	8,404	8,366	9,252	(0.5)	10.6
14	விரகு, காடாக்கம்	52,485	62,545	58,920	59,328	54,652	57,420	(7.9)	5.1
15	ஆழ்கடல் மீன்பிடி, ஆழ்கடல் மீன் வளர்ப்பு	105,100	103,043	102,175	96,589	75,593	76,465	(21.7)	1.2
16	நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு	13,735	15,208	16,304	16,797	18,930	19,381	12.7	2.4
கைத்தொழில்								(6.9)	5.3
17	அகழ்வு, சுரங்கக மறுத்தல்	217,577	237,827	225,505	231,893	202,873	208,505	(12.5)	2.8
18	உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்	529,786	534,924	559,356	578,117	599,909	618,361	3.8	3.1
19	பிடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள்	289,001	304,090	324,565	333,530	287,856	327,616	(13.7)	13.8
20	மரம், மரப்பொருள், தக்கை உற்பத்திகள் தளபாடம் நீங்கலாக	32,855	32,909	34,233	31,408	28,725	31,129	(8.5)	8.4
21	காகித உற்பத்திகள், அச்சு மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி	30,283	31,885	32,884	31,445	30,094	32,942	(4.3)	9.5
22	சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள்	31,245	29,743	27,312	33,694	30,026	20,869	(10.9)	-30.5
23	இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தி	90,095	93,552	97,851	101,949	101,312	105,348	(0.6)	4.0
24	இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள்	77,055	86,202	85,933	81,070	68,334	82,013	(15.7)	20.0
25	ஏனைய உலோக கனிப்பொருட்கள் அல்லாத உற்பத்திகள்	69,660	77,821	81,764	81,399	81,844	95,617	0.5	16.8
26	அடிப்படை உலோகங்கள், பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள்	38,577	43,862	48,491	47,120	45,017	46,767	(4.5)	3.9

அட்டவணை 2.2 | நிலையான சந்தை விலைகளில் (2010) மொத்த உள்நாட்டு உற்பத்தி 2016 - 2021

ரூபா மில்லியன்

	"பொருளாதார செயற்பாடுகள்"	2016	2017	2018	2019 (அ)	2020 (அ)	2021 (ஆ)	2020/2019 மாற்றம் (%)	2021/2020 மாற்றம் (%)
27	இயந்திரங்கள், சாதனங்கள்	46,610	50,967	51,697	53,038	51,285	57,801	(3.3)	12.7
28	தளபாடம்	96,303	97,920	92,997	96,829	87,299	88,415	(9.8)	1.3
29	ஏனைய இயந்திர சாதன தயாரிப்பு, பொருத்துதல், பழுதுபார்த்தல்	70,923	76,943	76,589	71,348	69,623	80,610	(2.4)	15.8
30	மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் சேவை	92,356	94,803	100,382	104,437	102,758	109,049	(1.6)	6.1
31	நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்	12,972	13,562	14,351	15,139	15,866	16,540	4.8	4.2
32	கழிவுப் பொருட்கள், கழிவு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் செயற்பாடுகள்	25,539	28,316	30,207	32,403	32,078	31,006	(1.0)	-3.3
33	நிர்மாணம்	645,994	674,097	657,070	683,371	592,972	604,410	(13.2)	1.9
சேவைகள்		**5,127,616**	**5,313,435**	**5,555,325**	**5,683,960**	**5,595,176**	**5,760,308**	**(1.6)**	**3.0**
34	மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	957,088	993,667	1,040,360	1,071,847	1,086,962	1,108,274	1.4	2.0
35	பண்டசாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து	982,703	1,013,857	1,034,755	1,048,825	977,105	982,745	(6.8)	0.6
36	தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள்	4,260	4,425	4,485	4,752	4,975	5,251	4.7	5.5
37	தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள்	139,443	146,432	154,794	147,671	89,452	91,156	(39.4)	1.9
38	ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலி, ஒளி தயாரிப்புகள்	2,831	2,804	2,519	2,639	2,702	2,803	2.4	3.7
39	தொலைத்தொடர்பு	36,984	41,503	45,830	53,695	61,990	72,006	15.4	16.2
40	தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட மதியுரையும் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளும்	13,015	13,564	15,072	17,044	18,752	22,827	10.0	21.7
41	நிதிச்சேவை செயற்பாடுகள், துணை நிதிச்சேவை	554,564	606,512	687,918	701,891	778,544	837,181	10.9	7.5
42	காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு	92,172	95,925	112,515	122,921	118,854	124,911	(3.3)	5.1
43	வதிவிட உரித்து உள்ளடங்கலாக ஆதன விற்பனை	520,085	544,733	566,078	579,601	572,799	590,534	(1.2)	3.1
44	**உயர் தொழில் சேவைகள்**	**152,229**	**158,755**	**165,550**	**169,523**	**164,947**	**167,333**	**(2.7)**	**1.4**
45	**பொது நிருவாகம் பாதுகாப்பு கட்டாய சமூகப் பாதுகாப்பு**	**452,586**	**430,672**	**428,022**	**437,065**	**443,960**	**452,340**	**1.6**	**1.9**
46	**கல்வி**	**171,830**	**172,701**	**179,524**	**185,116**	**186,712**	**194,745**	**0.9**	**4.3**
47	**மனித தேகாரோக்கிய செயற்பாடுகள்,வதிவிட பராமரிப்பு, சமூகபணி செயற்பாடுகள்**	**162,405**	**174,155**	**179,356**	**182,777**	**190,706**	**201,621**	**4.3**	**5.7**
48	**ஏனைய தனிப்பட்ட சேவை**	**885,421**	**913,729**	**938,547**	**958,592**	**896,716**	**906,581**	**(6.5)**	**1.1**
	செயற்பாடுகள்	**8,169,103**	**8,465,015**	**8,776,212**	**,980,225**	**8,695,978**	**9,003,784**	**(3.2)**	**3.5**
	அடிப்படை விலைகளில்	**866,727**	**894,132**	**889,166**	**910,243**	**879,609**	**917,346**	**(3.4)**	**4.3**
	மொத்த பெறுமதி சேர்கைகள்								
	(+) குறைந்த மானியங்கள்								
	பொருட்கள் மீதான வரிகள்	**9,035,830**	**9,359,147**	**9,665,379**	**9,890,468**	**9,532,909**	**9,881,397**	**(3.6)**	**3.7**
	நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி								

மூலம்: தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிகமானது

அட்டவணை 2.3 | மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (%) இன் துறைரீதியான பகிர்வு - நிலையான விலைகள் (2010)

	பொருளாதார செயற்பாடுகள்	2016	2017	2018	2019 (அ)	2020 (அ)	2021 (ஆ
விவசாயம், காடாக்கம், மீன்பிடி		**-3.7**	**-0.4**	**5.8**	**1.2**	**-2.2**	**2.0**
1	தானியங்கள் (நெல் நீங்கலாக)	-12.2	-12.6	2.8	-11.5	44.8	9.7
2	நெல்	-31.3	-7.1	44.7	5.4	7.0	-6.7
3	மரக்கறிகள்	2.9	-5.3	0.0	-1.3	7.6	-2.5
4	கரும்பு, புகையிலை, நீண்ட காலப் பயிர்கள் அல்லாதவை	24.7	-12.9	-10.9	9.9	19.3	-7.4
5	பழங்கள்	-3.2	7.4	11.4	8.5	6.2	-7.8
6	எண்ணெய் பிரித்தெடுக்கும் காய்கள் (தேங்காய், செவ்விளநீர், பனங்காய்)	-0.8	-19.7	7.1	17.7	-10.4	11.2
7	தேயிலை (கொழுந்து)	-11.2	4.5	0.4	-1.3	-7.1	7.4
8	ஏனைய பிற பானப் பயிர்கள் (கோப்பி, கொக்கோ) முதலியன	7.5	-6.4	25.6	-25.8	21.7	-15.6
9	வாசனைப் பொருட்கள், வாசனைப் பயிர்கள், மருந்தாக்கல் பயிர்கள்	3.5	0.4	5.9	-1.0	3.3	4.5
10	இறப்பர்	-10.7	4.9	4.1	-9.5	4.6	-1.7
11	ஏனைய நீண்டகாலப் பயிர்கள்	-2.1	1.4	-2.5	0.5	1.6	-4.8
12	கால்நடை உற்பத்தி	7.3	5.6	8.0	2.1	-2.8	9.7
13	நாற்றுக்கள் விநியோகம் மற்றும் விவசாய ஒத்துழைப்பு செயற்பாடுகள்	-2.0	-9.5	0.2	-9.2	-0.4	10.6
14	விறகு, காடாக்கம்	8.5	19.2	-5.8	0.7	-7.9	5.1
15	ஆழ்கடல் மீன்பிடி, ஆழ்கடல் மீன் வளர்ப்பு	0.7	-2.0	-0.8	-5.5	-21.7	1.2
16	நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு	9.9	10.7	7.2	3.0	12.7	2.4
கைத்தொழில்		**5.7**	**4.7**	**1.3**	**2.6**	**-6.9**	**5.3**
17	அகழ்வு, சுரங்க மறுத்தல்	13.8	9.3	-5.2	2.8	-12.5	2.8
18	உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்	0.2	1.0	4.6	3.4	3.8	3.1
19	பிடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள்	2.2	5.2	6.7	2.8	-13.7	13.8
20	மரம், மரப்பொருள், தக்கை உற்பத்திகள் தளபாடம் நீங்கலாக	20.3	0.2	4.0	-8.3	-8.5	8.4
21	காகித உற்பத்திகள், அச்சு மற்றும் ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி	9.2	5.3	3.1	-4.4	-4.3	9.5
22	சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள்	7.5	-4.8	-8.2	23.4	-10.9	-30.5
23	இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தி	8.3	3.8	4.6	4.2	-0.6	4.0
24	இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திகள்	1.2	11.9	-0.3	-5.7	-15.7	20.0
25	ஏனைய உலோக கனிப்பொருட்கள் அல்லாத உற்பத்திகள்	-7.4	11.7	5.1	-0.4	0.5	16.8
26	அடிப்படை உலோகங்கள், பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள்	33.2	13.7	10.6	-2.8	-4.5	3.9
27	இயந்திரங்கள், சாதனங்கள்	20.0	9.3	1.4	2.6	-3.3	12.7
28	தளபாடம்	1.9	1.7	-5.0	4.1	-9.8	1.3
29	ஏனைய இயந்திர சாதன தயாரிப்பு, பொருத்துதல், பழுதுபார்த்தல்	3.5	8.5	-0.5	-6.8	-2.4	15.8
30	மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் சேவை	8.4	2.6	5.9	4.0	-1.6	6.1
31	நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்	7.9	4.6	5.8	5.5	4.8	4.3
32	கழிவுப் பொருட்கள், கழிவு, சுத்திகரித்தல் மற்றும் அகற்றல் செயற்பாடுகள்	17.8	10.9	6.7	7.3	-1.0	-3.3
33	நிர்மாணம்	8.3	4.4	-2.5	4.0	-13.2	1.9
சேவைகள்		**6.0**	**4.8**	**3.6**	**4.6**	**2.2**	**-1.5**
34	மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	**2.6**	**3.8**	**4.7**	**3.0**	**1.4**	**2.0**
35	பண்டசாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து	5.5	3.2	2.1	1.4	-6.8	0.6
36	தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள்	5.1	3.9	1.4	5.9	4.7	5.6
37	தங்குமிடம், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள்	4.0	5.0	5.7	-4.6	-39.4	1.9
38	ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒலி, ஒளி தயாரிப்புகள்	7.9	-0.9	-10.2	4.8	2.4	3.7
39	தொலைத்தொடர்பு	8.3	12.2	10.4	17.2	15.4	16.2
40	தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட மதியுரையும் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளும்	7.1	4.2	11.1	13.1	10.0	21.7
41	நிதிச்சேவை செயற்பாடுகள், துணை நிதிச்சேவை	12.3	9.4	13.4	2.0	10.9	7.5
42	காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு	12.4	4.1	17.3	9.2	-3.3	5.1
43	வதிவிட உரித்து உள்ளடங்கலாக ஆதன விற்பனை	6.3	4.7	3.9	2.4	-1.2	3.1
44	உயர் தொழில் சேவைகள்	-1.3	4.3	4.3	2.4	-2.7	1.4
45	பொது நிருவாகம் பாதுகாப்பு கட்டாய சமூகப் பாதுகாப்பு	5.2	-4.8	-0.6	2.1	1.6	1.9
46	கல்வி	7.5	0.5	4.0	3.1	0.9	4.3
47	மனித தேகாரோக்கிய செயற்பாடுகள்	1.5	7.2	3.0	1.9	4.3	5.7
48	ஏயை தனிப்பட்ட சேவை செயற்பாடுகள்	1.4	3.2	2.7	2.1	-6.5	1.1
	அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்க்கை	**4.3**	**3.6**	**3.7**	**2.3**	**-3.2**	**3.5**
	(+) **குறைந்த மானியங்கள் பொருட்கள் மீதான வரிகள்**	**4.3**	**3.0**	**0.6**	**2.4**	**-8.1**	**4.9**
	நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	**4.5**	**3.6**	**3.3**	**2.3**	**-3.6**	**3.7**

மூலம்: தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்


(அ) திருத்தப்பட்ட

(ஆ) தற்காலிகமானது

விவசாயத் துறை

விவசாயத் துறையானது, 2020 இல் 2.2 சதவீத சுருக்கத்திலிருந்து, 2021 இல் 2.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதற்கான பிரதான காரணம் தெங்கு, தேயிலை, வாசனைத்திரவியங்கள், விலங்கு உற்பத்தி, நன்னீர் மற்றும் கடல் மீன்பிடி போன்ற உப துறைகளில் ஏற்பட்ட விரிவு ஆகும். மேலும், தாவர இனப்பெருக்கமும் விவசாயம் தொடர்பான செயற்பாடுகளும், வனமும் மர வகைகளும், தானியப் பயிரிடல் ஆகியன இந்த விரிவாக்கத்திற்குச் சாதகமான பங்களிப்புகளை வழங்கின. ஆயினும் நெல், மரக்கறிகள், கரும்பு, பழங்கள், பானங்களை உருவாக்கும் ஏனைய பயிர்கள், இறப்பர், ஏனைய நீண்டகாலப் பயிர்கள் போன்றன 2021 இல் எதிர்மறையான நிலைமைகளையே தந்தன.

வரைபு 2.3| விவசாயத்துறையின் பகுதிகள் - 2021



மூலம் : தொகை மதீப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

நெல்

நெல் தொடர்பான பெறுமதிசேர் உற்பத்திகள், 2020 இல் 7.0 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடும்போது 2021 இல் 6.7 சதவீதத்தால் சுருங்கின. ஆயினும், 2021 இன் மொத்த நெல்லுற்பத்தி 5.1 மில்லியன் மெட்ரிக் தொன்களாக 0.6 சதவீத ஓரளவான அதிகரிப்பை 2021 இல் காட்டியது. இதற்குரிய பிரதான காரணங்களாக, சாதகமான காலநிலையும், தேறிய அறுவடையிலான அதிகரிப்பும் இருந்தன. 2020/21 பெரும் போகத்திற்கான நெல்லுற்பத்தி 3.1 மில்லியன் மெட்ரிக் தொன்களுக்கு, 4.2 சதவீதத்தால் குறைவடைந்தது. இக் குறைவானது 2021 சிறுபோக நெல்லுற்பத்தியால் ஈடுசெய்யப்பட்டது. இது 2020 சிறுபோக 1.9 மில்லியன் மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடும்போது, 2021 சிறுபோக உற்பத்தி 8.5 சதவீதத்தால் 2.1 மில்லியன் மெட்ரிக் தொன்களாக அதிகரித்தது. இரு போகங்களிலுமான தேறிய அறுவடைப் பரப்பு, 2020/21 பெரும் போகத்தில் 681,521 ஹெக்ரயர்களாகவும், 2021 சிறுபோகத்தில் 445,084 ஹெக்ரயர்களாகவும் அதிகரித்தன.

அரசாங்கமானது இரசாயன உரங்கள் மற்றும் மற்றைய விவசாய இரசாயனங்கள் மீதான இறக்குமதிக்குத் தடையொன்றை 2021 மே மாதத்தில் விதித்தது. அதேவேளை நிலைத்த விவசாயச் செயற்பாடுகளை நோக்கி பொருளாதாரத்தைச் செலுத்தும் நோக்கில், உள்ளூர் சேதன உர உற்பத்தியை ஊக்குவித்தது. அதன்படி, நெல்லுற்பத்திக்காக சேதன உரத்தை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரயருக்கு ரூபா 12,500 என்ற ஊக்குவிப்புத்தொகை வழங்கப்பட்டதுடன், இது 2021/22 பெரும் போகத்திலிருந்து ஒரு ஹெக்ரயருக்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஆயினும், சேதன மற்றும் அசேதன உரங்களின் கிடைப்பனவிலிருந்த மட்டுப்பாடுகள் காரணமாக, விவசாயிகளிடையே குறைவடைந்த விளைச்சல் குறித்த கரிசனைகளை ஏற்படுத்தி, அது நெல் விலையின் அதிகரிப்புக்கு வித்திட்டது. இந்தச் சிக்கலை நிவர்த்திப்பதற்கு, அரசாங்கம் நெற் செய்கைக்குரிய இயற்கையான சேதனப் பசளையை, கனிமங்களை, நுண் ஊட்டங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்தது.

இதற்கிடையில், 2020/21 பெரும் போகத்திலிருந்து கிட்டத்தட்ட 44,948 மெட்ரிக் தொன்கள் நெல்லும், 2021 சிறு போகத்திலிருந்து 7,728 மெட்ரிக் தொன்கள் நெல்லும், அரசாங்க நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டன. எல்லா வகையான நெல்லுக்குமுரிய ஒரு கிலோவுக்கான உத்தரவாத விலையான ரூபா 56.50, மார்ச் 2021 இல் வழங்கப்பட்டது. பின்னர் இது ஜூலை 2021 இல் நாடு நெல்லுக்கு ரூபா 50 எனவும், சம்பா நெல்லுக்கு ரூபா 52 எனவும், கீரி சம்பா நெல்லுக்கு ரூபா 55 எனவும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்காக மீளமைக்கப்பட்டது. சம்பா அரிசிக்கு ரூபா 103, நாடு அரிசிக்கு ரூபா 98 என ஆகக்கூடிய சில்லறை விலைகளை அரசாங்கம் நிர்ணயித்திருந்தாலும், 2021 செப்தெம்பர் இறுதியில், ஒருசில ஆலையாளர்களது சந்தைப்பலத்தால் அரிசி விநியோகத்தில் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக அவை நீக்கப்பட்டன.

அரசாங்கமானது, இறக்குமதியான சம்பா, நாடு, பச்சை அரிசிகளுக்கு, பொருட்களுக்கான விசேட வரியை கிலோகிராமொன்றுக்கு ரூபா 65 இலிருந்து ரூபா 0.25 வரை கணிசமான அளவில் குறைத்ததுடன், இது 2021 ஒக்தோபரிலிருந்து 2022 ஜூன் வரை, உள்ளூர்ச் சந்தைகளில் அரிசி விநியோகத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செயற்பாட்டின் விளைவாக, அரிசி இறக்குமதியானது 2020 இல் 15,770 மெட்ரிக் தொன்களிலிருந்து 2021 இல் 147,091 மெட்ரிக் தொன்கள் வரை அதிகரித்ததுடன், அதில் 134,716 மெட்ரிக் தொன்கள் 2021 நொவெம்பரிலிருந்து டிசெம்பர் வரையான காலப்பகுதியில் இறக்குமதியாயின.

தேயிலை

பெறுமதி சேர்ப்பு நியதிகளில், தேயிலைப் பயிர்ச்செய்கை 2020 இல் காணப்பட்ட 7.1 சதவீதத்திலிருந்து 2021 இல் 7.4 சதவீதத்தால் அதிகரித்தது. 2020 இல் காணப்பட்ட 278.9 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி 2021 இல் 7.0 சதவீதத்தால் அதிகரித்து 299.5 மில்லியன் கிலோவை எட்டியதுடன், இதற்குக் காரணமாக, தேயிலை உற்பத்திப் பிரதேசங்களிலிருந்த சாதகமான காலநிலையும் முன்னைய ஆண்டின் குறைந்த அடிப்படை விளைவையும் கூற முடியும். இதன் விளைவாக, கொழும்பு தேயிலை ஏலவிற்பனை விலைகள் குறைவடைந்ததுடன், 2020 இல் காணப்பட்ட ஒரு கிலோவுக்கான விலை ரூபா 633.85, 2021 இல் சராசரியாக 2.3 சதவீதத்தால் குறைந்து ரூபா 619.15 ஐ அடைந்தது. ஒரு கிலோ தேயிலையின் சராசரி கப்பல் சரக்கு ஏற்றுமதி விலை (average FOB export price) 2020 இலிருந்த ரூபா 633.85, 2021 இல் 6.2 சதவீதத்தால் ரூபா 920.76 இற்கு அதிகரித்தாலும், அமெரிக்க டொலர்களிலான அதே விலை 2021 இல் 0.9 சதவீதத்தால் குறைந்தது. தேயிலை உற்பத்தி அதிகரிப்பு காரணமாகவும், உலகச் சந்தையில் அதன் அதிகரித்த கேள்வி காரணமாகவும், 2020 இல் 265.6 மில்லியன் கிலோவாக இருந்த தேயிலை ஏற்றுமதி, 2021 இல் 7.7 சதவீதத்தால் அதிகரித்து 286.0 மில்லியன் கிலோவாக அமைந்தது.

இறப்பர்

பெறுமதி சேர்ப்பு நியதிகளில், இறப்பர் உப துறையானது, 2020 இல் 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 1.7 சதவீதத்தால் சற்றுச் சுருங்கியது. இதற்குக் காரணமாக அதன் பெருந்தோட்டங்களில் பால் வெட்டும் காலங்களில் காணப்பட்ட மழைவீழ்ச்சியும் ஒருவித பூஞ்சண நோயுமாகும். அதன்படி, 2020 இல் 78.2 மில்லியன் கிலோவாக இருந்த இறப்பர் உற்பத்தி, 2021 இல் 1.7 சதவீதத்தால் குறைவடைந்து, 76.9 மில்லியன் கிலோவாக இருந்தது. பதனிடப்படாத இறப்பரின் உள்ளூர் கைத்தொழில் துறையின் நுகர்வு, "ரயர்" உற்பத்தி உள்ளிட்ட இறப்பர் சம்பந்தப்பட்ட தயாரிப்புகள் விரிவடைந்தமை காரணமாக, 2020 இல் காணப்பட்ட 112.1 மில்லியன் கிலோவிலிருந்து 2021 இல் 133.9 மில்லியன் கிலோவாக 19.4 சதவீதத்தால் அதிகரித்தது. இறப்பர் ஏற்றுமதியிலிருந்தான சம்பாத்தியங்கள், அதன் ஏற்றுமதி 2021 இல் குறிப்பிடத்தக்க அளவுக்கு 40.1 சதவீதமாக 42.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தன. இதற்குக் நகாரணம், ஏற்றுமதியின் அளவு 15.5 மில்லியன் கிலோவிலிருந்து 1.7 சதவீதத்தால் குறைவடைந்தாலும் கூட, இறப்பரின் சராசரி கப்பல் சரக்கு விலை ஒரு கிலோவுக்கு 1.91 அமெரிக்க டொலரிலிருந்து 2.72 அமெரிக்க டொலருக்கு அதிகரித்ததாகும்.

தெங்கு

தெங்கு உற்பத்தியானது, அதன் உற்பத்திப் பிரதேசங்களில் சாதகமான காலநிலை நிலவியதால், 2020 இல் 2,792 மில்லியன் தேங்காய்களிலிருந்து 2021 இல் 3,120 மில்லியன் தேங்காய்களாக அதிகரித்தது. அதனால், தேங்காயெண்ணெய், உலர் தேங்காய், தேங்காய் கிறீம், தேங்காய்ப்பால், தேங்காய்ப்பால் பவுடர் போன்ற தொடர்புள்ள கைத்தொழில்கள் நன்மையடைந்தன. அதன்படி, உலர் தேங்காய் உற்பத்தி 33,289 மெட்றிக் தொன்களுக்கு 31.8 சதவிதத்தால் அதிகரித்த அதேவேளை, தேங்காயெண்ணெய் உற்பத்தி 2020 உடன் ஒப்பிடும்போது 117.8 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாறான குறிப்பிடத்தக்க அளவான தேங்காயெண்ணெயின் உற்பத்தி அதிகரிப்பு, பாம் எண்ணெயையும் ஏனைய உணவு எண்ணெய்களையும் இறக்குமதியை ஊக்குவிக்காது உள்ளூர் தேங்காயெண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும் அரசாங்கத்தின் கொள்கை காரணமாக ஏற்பட்டது. கொப்பரா உற்பத்தி 2020 இல் காணப்பட்ட 6 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 இல் 5 மில்லியன் தேங்காய்களாகக் குறைவடைந்தது. தெங்கை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் எழுச்சி காரணமாக, தேங்காயொன்றின் சராசரிச் சில்லறை விலை 2020 இல் ரூபா 73.82 ஆகவிருந்து, 2021 இல் ரூபா 83.90 ஆக அதிகரித்தது. தேங்காயொன்றின் ஏலவிற்பனை விலை, சராசரியாக 2020 இல் காணப்பட்ட ரூபா 48.89 இலிருந்து, 2021 இல் ரூ 56.51 ஆக அதிகரித்தது. 2021 இல், ஒரு போத்தல் (750 மில்லி லீற்றர்) தேங்காயெண்ணெயின் விலை மற்றும் உலர்ந்த தேங்காயின் (1 கிலோ) விலை ஆகியன முறையே 29.2 சதவீதத்தால் ரூபா 443.42 இற்கும், 20.0 சதவீதத்தால் ரூபா 537.25 இற்கும் அதிகரித்தன. தெங்கு ஏற்றுமதி அளவில் அதிகரித்ததால், அதன் வருமானம், 2020 இல் 345.2 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து, 2021 இல் 23.2 சதவீதத்தால் 425.2 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

வாசனைத் திரவியங்களின் துறையானது, அப்பொருட்களுக்கு சர்வதேச அளவில் அதிகரித்த கேள்வியால், 2020 இல் காணப்பட்ட 3.3 சதவீதத்திலிருந்து 2021 இல் 4.5 சதவீதமாக வளர்ந்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்திகள், ஏலம், கறுவா, கராம்பு, மிளகு உள்ளிட்ட வாசனைத் திரவியங்களின் உற்பத்தி அதிகரிப்பு காரணமாக, 2021 இல் 28.6 சதவீதத்தால் அதிகரித்தது, அரசாங்கமானது, சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையாக உயர் தரத்திலான விதைகளை, நடுகைப் பொருட்களை, அறிவுறுத்தல்களை, தொழில்நுட்ப அறிவை வழங்கியது. 2021 இல் மஞ்சல் பயிரில் தன்னிறைவை அடைய வேண்டும் என்ற அரசாங்கத்தின் இலக்கை அடையும் வகையில், மஞ்சல்

பயிர்ச் செய்கையானது குறித்துக்கூறத்தக்க அளவில் விரிவடைந்தது. ஏலம் உற்பத்தி 2020 இல் இருந்த 86 மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 20.9 சதவீதத்தால் அதிகரித்து 104 மெட்ரிக் தொன்களாகக் காணப்பட்டது. கறுவா உற்பத்தியும் 2020 இல் இருந்த 20,866 மெட்ரிக் தொன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 9.6 சதவீதத்தால் அதிகரித்து 22,872 மெட்ரிக் தொன்களாகக் காணப்பட்டது.

அட்டவணை 2.4 | சிறு ஏற்றுமதி விவசாய பயிர்களின் உற்பத்தியும் ஏற்றுமதியும் (மெ.தொன்)

பயிர்	உற்பத்தி					ஏற்றுமதி *				
	2017	2018	2019	2020	2021(அ)	2017	2018	2019	2020	2021(அ)
கறுவா	22,341	20,398	20,352	20,866	22,872	16,617	17,537	17,480	19,090	19,195
மிளகு	29,546	22,551	22,156	23,970	25,047	13,309	13,535	8,335	9,542	18,575
கொக்கோ	471	413	548	612	658	2,584	296	520	255	159
ஏலம்	113	86	69	86	104	839	108	13	1	3
கராம்பு	6,413	3,360	4,786	3,512	3,837	7,806	3,279	5,126	2,597	6,487
சாதிக்காய்	3,545	4,180	5,119	2,751	2,818	2,043	1,938	3,417	2,451	2,651

மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை சுங்கம்

(அ) தற்காலிகமானது

* மீள் ஏற்றுமதியுடன்

ஏனைய பயிர்கள்

தானியங்கள் உள்ளிட்ட உள்ளூர் விவசாய உற்பத்திகளின் அதிகரிப்பினூடாக உணவுப் பாதுகாப்பை அடைய வேண்டுமென்னும் அரசாங்கக் கொள்கையிலிருந்து நன்மையடைந்த தானியங்களின் (அரிசி தவிர்ந்த) பயிரிடல், 9.7 சதவீத அதிகரிப்புடன், விவசாயத் துறையின் வளர்ச்சிக்குச் சாதகமான வகையில் பங்களிப்புச் செய்தது. பெரிய வெங்காய உற்பத்தி, 2020 இல் இருந்த 43,000 மெட்ரிக் தொன்களிலிருந்து 2021 இல் 53.2 சதவீத அதிகரிப்புடன், 65,907 மெட்ரிக் தொன்களாக அதிகரித்தது. உருளைக்கிழங்கு உற்பத்தியானது, 2020 இல் 65,085 மெட்றிக் தொன்களிலிருந்து, 2021 இல் 16.6 சதவீதத்தால் அதிகரித்து, 75,900 மெட்றிக் தொன்களாக இருந்தது. மரக்கறிகளினதும் பழங்களினதும் பயிரிடலானது, 2021 இல் பெறுமதிசேர்ப்பின்படி, முறையே 2.5 சதவீதத்தாலும், 7.8 சதவீதத்தாலும் சுருங்கின. சேதன உரத் தட்டுப்பாடு காரணமாகவும், ஒவ்வாத காலநிலை காரணமாகவும், அதிகரித்த இயந்திர மற்றும் போக்குவரத்துச் செலவுகள் காரணமாகவும், 2021 இல், மரக்கறி உற்பத்தி 1.4 சதவீதத்தால் 1.7 மில்லியன் மெட்ரிக் தொன்னுக்குக் குறைவடைந்தது. அதேவேளை மரக்கறி ஏற்றுமதி 2021 இல் 21,540 மெட்ரிக் தொன்களுக்கு 35.1 சதவீதத்தால குறைவடைந்து, 28.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றுத் தந்தது. பழவகை உற்பத்தி 2021 இல் 3.3 மெட்ரிக் தொன்களாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. அதேவேளை பழவகை ஏற்றுமதி 2021 இல் 43,426 மெட்ரிக் தொன்களுக்கு 12.1 சதவீதத்தால் முன்னேற்றமடைந்து, 38.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றுத் தந்தது.

கால்நடை

பெறுமதி சேர்ப்பு நியதிகளில் கால்நடை உற்பத்தி உப துறையானது, 2020 இல் 2.8 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 9.7 சதவீதத்தால் விரிவடைந்தது. அதனால் பாலுற்பத்தி, 2020 இல் இருந்த 491.5 மில்லியன் லீற்றர்களிலிருந்து, 2021 இல் 513.0 மில்லியன் லீற்றர்களாக 4.4 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்குக் காரணமாக திரவப் பாலுக்கு நல்ல விலையுடனான அதிக கேள்வி நிலவியமையும், இக்கைத்தொழில் துறையில் புதிய பாற்பண்ணைகள் உருவானதுமாகும். பறவைகள் வளர்ப்புத் துறையில் சாதகமான வளர்ச்சி காணப்பட்டதுடன், கோழி முட்டை உற்பத்தி 2020 இல் இருந்த 1,869.7 மில்லியன்களிலிருந்து 2021 இல் 1,953.7 மில்லியன்களுக்கு 4.5 சதவீதத்தால் அதிகரித்தது. 2021 இல், மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி ஆகியவற்றின் உற்பத்திகள் முறையே 4.4, 4.9, 1.0 சதவீதங்களால் அதிகரித்தன.


கடல் மற்றும் நன்னீர் மீன்பிடி

பெறுமதி சேர்ப்பு நியதிகளில் கடல் மீன்பிடியும் கடல் மீன் வளர்ப்பும் மற்றும் நன்னீர் மீன்பிடியும் நன்னீர் மீன் வளர்ப்பும் ஆகிய உப துறைகள் 2021 இல் முறையே 1.2 சதவீதத்தையும் 2.4 சதவீதத்தையும் வளர்ச்சியாகப் பதிவுசெய்தன. மொத்த மீன் உற்பத்தி 2020 இல் இருந்த 428.7 மெட்றிக் தொன்களிலிருந்து 2021 இல் 1.5 சதவீதத்தால் 435.3 மெட்றிக் தொன்களுக்கு சற்று அதிகரித்தது. 2021 இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துச் சம்பவம் காரணமாக மீன் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இச்சம்பவம் கடல் மற்றும் கரையோர மீன்பிடியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

கைத்தொழில் துறை

2021 இல், கைத்தொழில் துறைானது, பெறுமதி சேர்ப்பு என்ற வகையில், 2020 இல் இருந்த 6.9 சதவீத சுருக்கத்திலிருந்து 5.3 சதவீதத்தால் விரிவடைந்தது. இதற்குக் காரணமாக கட்டிடச் செயற்பாடுகள், சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் செயற்பாடுகளில் ஏற்பட்ட விரிவாக்கமும், கொக்காகோலா மற்றும் சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய தயாரிப்புகளில் ஏற்பட்ட விரிவாக்கமும் இருந்தன. மேலும், மின்சாரம், எரிவாயு, நீராவி, குளிரூட்டுதல், நீர் சேகரிப்பும் சுத்தமாக்குதலும், உப ஒப்பந்தக்காரர்களது விநியோகங்கள் ஆகியன 2021 இல் நேர் வளர்ச்சியை காட்டின. ஆயினும், கழிவகற்றல், சாக்கடை, சுத்தப்படுத்தல் செயற்பாடுகளும், கொக்காகோலா தயாரிப்பு, பெற்றோலியம் உற்பத்திகளும் 2021 இல் சுருங்கின.

வரைபு 2.4 | கைத்தொழிற் துறையின் பகுதிகள் - 2021



மூலம் : தொகை மதீப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம்

சுரங்கமும் கல்லுடைத்தலும்

சுரங்கமும் கல்லுடைத்தலும் செயற்பாடுகள் 2020 இல் 12.5 சதவீத சுருக்கத்துடன் இருந்து, பெறுமதி சேர்ப்பு என்ற வகையில், 2021 இல் 2.8 சதவீதத்தால் விரிவடைந்தது. மணல் அகழ்வதற்கான அதிகரித்த கேள்வியே கட்டிடத்துறையில் விரிவாக்கத்திற்குக் காரணமாக அமைந்ததுடன் மேற்படி செயலாற்றுகைக்கு காரணமாக இருந்தது.

உற்பத்தி

தயாரிப்புத் துறையின் கொக்காகோலா மற்றும் சபுகஸ்கந்த பெற்றோலியம் சுத்தீகரிப்புத் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டதால் சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் தவிர்ந்த, மற்றைய எல்லா உப துறைகளும் 2021 இல் விரிவடைந்தன. நாட்டில் பெருந்தொற்றுக்கான வெற்றிகரமான மருந்தேற்றல் காரணமாக, பிரயாணக் கட்டுப்பாடு தவிர்ந்த மற்றைய தயாரிப்புச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிகள் இதற்குக் காரணமாக அமைந்தன.

துணிகள் மற்றும் அணிகலன்களின் தயாரிப்புகள் உபதுறையானது, 2020 இல் காணப்பட்ட 13.7 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 13.8 சதவீதத்தால் கணிசமாக விரிவடைந்தது. பெருந்தொற்று காரணமான பிரயாணக் கட்டுப்பாடு தவிர்ந்த தயாரிப்புத் துறைக்குத் தேவையான ஏனைய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு அரசாங்கத்தால் வசதியளிக்கப்பட்டவுடன், வெளிநாட்டுக் கேள்விகள் அதிகரித்ததன் விளைவாக இது நடைபெற்றது.

2020 உடன் ஒப்பிடும்போது, 2021 இல் மற்றைய தயாரிப்புத் துறைகளும் விரிவடைந்தன. இவற்றில் உணவும் பானங்களும் (3.1 சதவீதம்), இரசாயனப் பொருட்கள் (4.0 சதவீதம்), மற்றைய உலோகமல்லாத கனிமப் பொருட்கள் (16.8 சதவீதம்), தளபாடங்கள் (1.3 சதவீதம்), இறப்பரும் பிளாஸ்ரிக்கும் (20.0 சதவீதம்), மரமும் மரத்தாலான தயாரிப்புகளும் (8.4 சதவீதம்), அடிப்படை உலோகங்கள் (3.9 சதவீதம்), கடதாசியினாலான பொருட்கள் (9.5 சதவீதம்), இயந்திரங்களும் உபகரணங்களும் (12.7 சதவீதம்), மற்றைய தயாரிப்புகள் (15.8 சதவீதம்) ஆகியனவையும் உள்ளடங்கும். ஆயினும், கொக்காகோலவும் சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களும், மற்றும் கழிவகற்றல், சாக்கடை, சுத்தப்படுத்தல் செயற்பாடுகளும், பெறுமதி சேர்ப்பு என்ற வகையில், முறையே 30.5 சதவீதத்தாலும் 3.3 சதவீதத்தாலும் 2021 இல் சுருக்கமடைந்தன.

மின்சாரம், எரிவாயு, நீராவியும் குளிரூட்டலும் ஆகியவற்றின் விநியோக உப துறையானது, 2020 இல் காணப்பட்ட 1.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 2021 இல் 6.1 சதவீத நேர் வளர்ச்சியைக் காண்பித்தது. கைத்தொழில் நுகர்வோரது அதிகரித்த கேள்வியே இதற்குக் காரணமாக அமைந்தது. மின்சக்தி உற்பத்தி 2020 இல் இருந்த 15,714 கிகா வோட்டிலிருந்து, 2021 இல் 16,588 கிகா வோட்டாக அதிகரித்தது.

அட்டவணை 2.5 | தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றுகை

ஐ.அ.டொ.மிலியன்

விபரம்	2015	2016	2017	2018	2019	2020	2021(அ)
உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை	307	324	393	462	447	464	587
விலங்குணவு	75	68	80	108	129	103	149
புடவைகள் மற்றும் ஆடைகள்	4,820	4,884	5,032	5,318	5,596	4,423	5,435
இறப்பர் உற்பத்தி	761	768	835	875	866	786	1,050
இரத்தினக்கல், வைரம், ஆபரணங்கள்	332	274	258	278	306	181	277
இயந்திரங்கள், இயந்திரவியல் உபகரணங்கள்	294	318	371	435	400	338	501
போக்குவரத்து உபகரணங்கள்	244	131	162	120	146	71	148
பெற்றோலிய உற்பத்திகள்	374	287	434	622	521	374	506
இரசாயன உற்பத்திகள்	126	126	146	167	176	173	223
மரம் மற்றும் அச்சுத்தொழில் உற்பத்திகள்	112	117	139	141	129	99	130
தோற்பொருள், பயண பொருட்கள் , பாதணிகள்	136	166	158	148	103	54	58
பிளாஸ்ரிக் மற்றும் பினாஸ்ரிக் பொருட்கள்	62	66	75	78	73	176	79
அடிப்படை உலோகம் உலோகப் பொருட்கள்	56	90	116	165	177	111	156
மட்பாண்ட உற்பத்திகள்	35	34	34	31	30	24	37
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	283	288	309	311	326	295	361
மொத்தம்	**8,017**	**7,940**	**8,542**	**9,258**	**9,426**	**7,672**	**9,702**

மூலம்: இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

கட்டுமான நிர்மாணம்

கட்டிட நிர்மாணக் கைத்தொழில் 2020 இல் காணப்பட்ட 13.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது. 2021 இல் 1.9 சதவீத விரிவைக் காண்பித்தது. ஆயினும், மொத்த சீமெந்து விநியோகமானது, மற்றைய கட்டிடப் பொருட்களின் கிடைப்பனவு அதிகரித்திருந்த போதிலும், 2021 இல் 0.8 சதவீதத்தால் குறைவடைந்து சந்தைக் கிடைப்பனவும் குறைவடைந்தது. மேலும், பெருந்தொற்றின் மூன்றாம் அலை மற்றும் உள்ளூர் மற்றும் உலக விநியோகச் சங்கிலிகளில் ஏற்பட்ட தடங்கல்கள் கட்டிட நிர்மாணத் துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தின. அதன்படி, விநியோகத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமான, சீமெந்து, உருக்கு, ஓடுகள் போன்ற மூலப்பொருட்களின் தட்டுப்பாட்டுடன் சேர்ந்த விலையுயர்வு கட்டிடத்துறையில் அதன் முழுமையான நிலவரத்தில் தடங்கல்களை ஏற்படுத்தின. அதற்கிடையில், கட்டிடச் செயற்பாடுகளுக்காகத் தனியார்துறைக்கு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் 2020 இறுதிப்பகுதியுடன் ஒப்பிடும்போது, 2021 இன் இறுதிப்பகுதியில் 14.5 சதவீதத்தால் அதிகரித்ததுடன், கட்டிடத்துறைக்கான நிதி வசதிகளின் கிடைப்பனவு அதிகரிப்பையும் காட்டியது.

சேவைத் துறை

சேவைத்துறையில் 2021 இல் 3.0 சதவீத விரிவாக்கம் காணப்பட்டது. இதில் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் (2.0 சதவீதம்), போக்குவரத்து (0.6 சதவீதம்), நிதிச் சேவைச் செயற்பாடுகள் (7.5 சதவீதம்), காணி மற்றும் கட்டிட விற்பனை (3.1 சதவீதம்), பொது நிர்வாகம் (1.9 சதவீதம்) ஆகியவையும் உள்ளடங்கும். மற்றைய தனிப்பட்ட சேவைகள் உள்ளிட்ட உப துறைகள் (1.1 சதவீதம்), மனித சுகாதார சேவைகள் (5.7 சதவீதம்), கல்வி (4.3 சதவீதம்), வாண்மைச் சேவைகள் (1.4 சதவீதம்) ஆகியனவும் சேவைத்துறைக்கு நேரான பங்களிப்பை வழங்கின.

சேவைத்துறையில் 2021 இல் 3.0 சதவீத விரிவாக்கம் காணப்பட்டது. இதில் மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் (2.0 சதவீதம்), போக்குவரத்து (0.6 சதவீதம்), நிதிச் சேவைச் செயற்பாடுகள் (7.5 சதவீதம்), காணி மற்றும் கட்டிட விற்பனை (3.1 சதவீதம்), பொது நிர்வாகம் (1.9 சதவீதம்) ஆகியவையும் உள்ளடங்கும். மற்றைய தனிப்பட்ட சேவைகள் உள்ளிட்ட உப துறைகள் (1.1 சதவீதம்), மனித சுகாதார சேவைகள் (5.7 சதவீதம்), கல்வி (4.3 சதவீதம்), வாண்மைச் சேவைகள் (1.4 சதவீதம்) ஆகியனவும் சேவைத்துறைக்கு நேரான பங்களிப்பை வழங்கின.

மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்

மொத்த மற்றும் சில்லறை வியாபாரச் சேவைகள், 2020 இல் இருந்த 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2021 இல் நடமாடும் தடை நீக்கப்பட்டதாலும், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காலத்துக்கால நிதியுதவிகளாலும், 2.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. மொத்த மற்றும் சில்லறை வியாபாரச் சேவைகள் உப துறையானது வளர்ச்சியைப் பதிவுசெய்தாலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கு, 2020 இல் இருந்த 11.4 சதவீதத்திலிருந்து, 2021 இல் 11.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அவ்வாறே சேவைத்துறையின் பங்களிப்பும் 2020 இல் இருந்த 19.4 சதவீதத்திலிருந்து, 2021 இல் 19.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதற்கிடையில், அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பண வசதிகள் 2020 இறுதிப்பகுதியுடன் ஒப்பிடும்போது, 2021 இன் இறுதிப்பகுதியில் 9.6 சதவீதத்தால் அதிகரித்தன.

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்து

போக்குவரத்து உப துறையானது 2020 இல் காணப்பட்ட 6.8 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 0.6 சதவீதத்தால் ஓரளவுக்கே விரிவடைந்தது. பெருந்தொற்றின் புதிய மாறுபாடு காரணமாக சர்வதேச பிரயாணத்தில் காணப்பட்ட கட்டுப்பாடுகளால், 2021 இல், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானங்கள் பறந்த பிரயாண தூரம் 21.2 சதவீதத்தால் குறைவடைந்து 2,868 மில்லியன் கிலோமீட்டர்களாக இருந்தது. இலங்கைப் போக்குவரத்துச் சபையால் பஸ்கள் செலுத்தப்பட்ட பிரயாண தூரம், 2021 இல், 28.4 சதவீதத்தால் குறைந்து, 6,175 மில்லியன் கிலோ மீட்டர்களாகக் காணப்பட்டது. ஆயினும், கையாளப்பட்ட மொத்தச் சரக்குகள் 6.3 சதவீதத்தால் அதிகரித்து, 109.4 மில்லியன் மெட்ரிக் தொன்களாகவும், மொத்தக் கொள்கலன்களின் போக்குவரத்து 5.8 சதவீதத்தால் அதிகரித்து, 7.2 மில்லியன் "இருபது அடிக்குச் சமமான அலகு" களாகவும் (TEUs) இருந்தன.

தங்குமிட, உணவு மற்றும் குடி பானங்கள் சேவைச் செயற்பாடுகள்

தங்குமிட, உணவு மற்றும் பானங்கள் சேவைச் செயற்பாடுகள், 2020 இல் 39.4 சதவீதத்தால் கணிசமாகச் சுருங்கியதாகப் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பிடும்போது, 2021 இல், 1.9 சதவீதத்தால் விரிவடைந்தது. கொவிட் - 19 இன் மூன்றாவது மற்றும் நான்காவது அலைகளுக்குப் பின்னர் உல்லாசப் பிரயாணத் துறையும் பொழுதுபோக்குத் துறையும் படிப்படியாக மீளமைக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். உல்லாசப் பிரயாணிகளின் வருகைகள், 2020 இல் 507,704 ஆட்களாக இருந்ததுடன், 2021 இல் 61.7 சதவீதத்தால் குறைவடைந்து, 194,495 ஆட்களாக இருந்தது. இதனால் 2020 இல் 682 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வருமானம், 2021 இல் 507 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கணிசமாகக் குறைவடைந்தது.

நிதி, காப்புறுதி, காணி கட்டிட விற்பனைச் செயற்பாடுகள்

நிதி, காப்புறுதி, காணி கட்டிட விற்பனைச் செயற்பாடுகள் 2020 இல் இருந்த 10.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது. 2021 இல் 7.5 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. 2020 இன் இறுதிப்பகுதியுடன் ஒப்பிடும்போது, 2021 இன் இறுதிப்பகுதியில், வங்கிகளினதும் வங்கியற்ற நிதி நிறுவனங்களினதும் கடன்களும் முற்பணங்களும் 14.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த அதேவேளை, வைப்புகளின் தளமானது 13.2 சதவீத வளர்ச்சியடைந்தது. காப்புறுதி, மீள்காப்புறுதி, ஓய்வூதியம் ஆகிய செயற்பாடுகள், 2020 இல் 3.3 சதவீதத்தால் சுருங்கியிருந்து, 2021 இல் 5.1 சதவீதத்தால் விரிவடைந்தன. அதற்கிடையில், காணி கட்டிட விற்பனைச் செயற்பாடுகள், 2020 இல் 1.2 சதவீதத்தால் சுருங்கியிருந்ததுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 3.1 சதவீதத்தால் விரிவடைந்தன.

அட்டவணை 2.6 | சேவைத்துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

குறிகாட்டிகள்	2017	2018	2019	2020(அ)	2021(ஆ)
துறைமுக சேவைகள்					
வருகைதந்த சரக்கு கப்பல்கள் மூ(ஆ)	4,879	4,874	4,697	4,337	4,180
கையாளப்பட்ட மொ.சரக்குகள் (மொ.தொ"000)	93,857	104,934	106,979	102,908	109,369
மொ. கொள்கலன் கையாடல் (மொ.கொ.கை "000) (இ)	6,209	7,047	7,228	6,855	7,249
வழிமாற்றல் செய்யப்பட்ட கொள்கலன்கள்மூமூ (மொ.கொ.கை "000)	4,826	5,704	5,955	5,765	6,050
தொலைத்தெடர்புத் துறை					
நிலையான தொலைபேசி இணைப்புகள் மூமூமூ (எண் "000)	1,198	1,216	1,245	1,246	2,852
செல்லிட தொலைபேசிகள் (எண் "000)	28,199	32,528	32,884	28,739	29,959
கம்பியல்லாத தொலைபேசி (எண் "000)	1,405	1,269	1,055	1,367	1,587
இணையம், மின்னஞ்சல் வாடிக்கையாளர்கள் ("000) (ஈ)	5,904	10,563	13,408	17,524	22,236
சுகாதாரத்துறை					
தனியார் வைத்தியசாலைகள்	181	191	209	217	233
அரசாங்க கைத்தியசாலைகள்	612	612	603	609	618
கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்க)	76,569	76,824	77,964	77,121	78,228
வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்க)	20,349	19,692	18,130	18,218	18,992
தாதியர்களின் எண்ணிக்கை (அரசாங்க)	34,221	34,714	38,276	37,133	38,743
வங்கித்துறை					
வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள்	6,213	6,882	7,390	7,406	7,319
பாவனையிலுள்ள கடன் அட்டைகள்	1,486,545	1,710,671	1,854,103	1,984,525	2,054,985
பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்	45	43	42	40	39
பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள்	6	5	4	3	3

சுற்றுலாத்துறை					
சுற்றுலா பயணிகளின் வருகை	2,116,407	2,333,796	1,913,702	507,704	194,495
சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்)	3,925	4,381	3,607	682	507
வருடாந்த அறை பயன்பாட்டு வீதம்	73.3	72.8	57.1	15.0	18.6
போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவுகள்)					
பேரூந்துகள்	3,331	2,957	1,613	578	281
கார்கள்	39,182	80,776	38,232	21,021	3,495
இரட்டை நோக்க வாகனங்கள்	16,742	16,931	13,459	9,532	771
பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் - லொறிகள்	11,432	9,371	5,223	3,941	4,432
மோட்டார் சைக்கிள்கள்	344,380	339,763	284,301	151,634	8,011
முச்சக்கர வண்டிகள்	23,537	20,063	15,490	7,150	2,093
தரை வாகனங்கள் - ட்ரக்டர்கள்	8,821	7,460	5,696	6,025	10,420
தரை வாகனங்கள் - பெட்டிகள்	4,228	2,822	1,970	2,277	4,344

மூலம்: இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மத்திய வங்கி

(அ). திருத்தப்பட்ட

(ஆ). தற்காலிகமானது

(இ). காங்கேசன்துறை மயிலிட்டி, காரைநகர், பருத்தித்துறை உள்ளடங்களாக

(ஈ). செல்லிட இணையத்தளம் உள்ளடங்கலாக

* படகோட்டம், கடற்படை கப்பல்கள், மீன்பிடி, இழுவைப்படகுகள், படகு மற்றும் அகழிகள் தவிர்ந்த

**மீள் ஏற்றுதல் உள்ளடங்கலாக

***கம்பியற்ற தொலைபேசி தவிர்ந்த

மற்றைய சேவைச் செயற்பாடுகள்

பெறுமதி சேர்க்கப்பட்ட தொலைத்தொடர்புச் செயற்பாடுகள், 2020 இல் காணப்பட்ட 15.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 16.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இந்த உப துறையானது வீட்டிலிருந்தான வேலை ஒழுங்கமைப்பால், கல்விச் செயற்பாடுகளால், பொழுதுபோக்குச் செயற்பாடுகளால் ஏற்பட்ட ஒருங்கிணைந்த தொடர்பாடலின் கேள்வி காரணமாக தனது வளர்ச்சியின் வேகத்தைத் தொடர்ந்தது.

தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிரல்களை உருவாக்குதல், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள், 2020 இல் கொண்டிருந்த 10.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, எண்ணிம மயமான தீர்வுகளின் கேள்வி காரணமாக, 2021 இல் 21.7 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தன. தகவல் தொழில்நுட்ப வர்த்தகச் செயலாக்க வழங்கல்களிலான (IT BPO) வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2020 இல் 26.4 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டதுடன், 2021 இல் 43.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்தன. பொது நிர்வாகமும் பாதுகாப்பும் மற்றும் கட்டாய சமூகப் பாதுகாப்புச் சேவைகள், 2020 இல் காட்டிய 1.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2021 இல் 1.9 சதவீத வளர்ச்சியைக் காட்டின. அதற்கிடையில், கல்வியும் சுகாதாரமும் தொடர்பான சேவைகள் 2021 இல் முறையே 4.3 சதவீதத்தையும், 5.7 சதவீதத்தையும் வளர்ச்சியாகக் காட்டின.

உள்ளூர் கேள்வியும் நுகர்வும்

நாட்டின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய உள்ளூர்க் கேள்வி, நுகர்வினதும் முதலீட்டுச் செலவினதும் அதிகரிப்பு காரணமாக, 2020 இல் காணப்பட்ட ரூபா 15,993 பில்லியன்களிலிருந்து, 2021 இல் 13.1 சதவீதத்தால் அதிகரித்து, ரூபா 18,081 பில்லியன்களுக்கு விரிவடைந்தது.

பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதி, ஏற்றுமதிக் கேள்வியின் அதிகரிப்பு காரணமாக, 2020 இல் ரூபா 2,419 பில்லியன்களாக இருந்ததுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 23.3 சதவீதத்தால் அதிகரித்து, ரூபா 2,982 பில்லியன்களாகக் காணப்பட்டது. பொருட்களினதும் சேவைகளினதும் இறக்குமதி, உலகச் சந்தை விலைகளின் அதிகரிப்பு காரணமாக, 2020 இல் ரூபா 3,385 பில்லியன்களாக இருந்ததுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 25.7 சதவீதத்தால் அதிகரித்து, ரூபா 4,253 பில்லியன்களாகக் காணப்பட்டது. அதனால், தற்போதைய விலைகளிலான தேறிய வெளியகக் கேள்வி, 2020 இல் காணப்பட்ட 5.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 31.6 சதவீதத்தால் மேலும் கணிசமாகச் சுருங்கி, ரூபா 1,272 பில்லியன்களாகக் காணப்பட்டது.

மொத்த நுகர்வு, கொவிட் - 19 இன் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமை காரணமாக, 2020 இல் காணப்பட்ட மிதமான வளர்ச்சியான 2.0 சதவீதம்,

2021 இல் 9.9 சதவீதத்தால் விரிவடைந்து ரூபா 13,425 பில்லியன்களாக இருந்தது. நுகர்வு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 79.9 சதவீதமாக 2021 இல் காணப்பட்டதுடன், அதில் 88.0 சதவீதம் தனியார் நுகர்வாகவும், 12.0 சதவீதம் அரச நுகர்வாகவும் இருந்தன. தனியார் நுகர்வானது புதிய ஒழுங்கு நிலவரத்தில் அதிகரித்த செலவுடன் சேர்த்து பெரும்பாலான நுகர் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக, 10.8 சதவீத விகிதத்தில் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக, தனியார் நுகர்வுகளான போக்குவரத்து, உணவகங்களும் ஹோட்டல்களும், உடைகளும் காலணிகளும் ஆகியன உள்ளிட்ட வகைகளில் வளர்ச்சி காணப்பட்டது. ஆயினும், அரசாங்க நுகர்வு, கொவிட் - 19 ஐக் குறைக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதால், 2020 இல் காணப்பட்ட 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 3.7 சதவீத மிதமான வளர்ச்சியையே கொண்டிருந்தது.

அட்டவணை 2.7 | உள்நாட்டு கேள்வி, வழங்கல் மற்றும் வர்த்தக மீதி

விபரம்	தற்போதைய சந்தை விலை (ரூபா பில்.)			மாற்றல்			மொ.உ.உற்பத்தி சதவீதத்தில்		
	2019	2020(ஆ)	2021(இ)	2019	2020(ஆ)	2021(இ)	2019	2020(ஆ)	2021(இ)
உள்நாட்டுக் கேள்வி	**15,917**	**15,993**	**18,081**	**3.7**	**0.5**	**13.1**	**106.1**	**106.4**	**107.6**
நுகர்வு	11,971	12,214	13,425	8.0	2.0	9.9	79.8	81.3	79.9
தனியார்	10,558	10,662	11,815	8.0	1.0	10.8	70.4	71.0	70.3
அரசாங்கம்	1,413	1,552	1,610	7.8	9.9	3.7	9.4	10.3	9.6
முதலீடு	3,945	3,779	4,656	-7.5	-4.2	23.2	26.3	25.1	27.7
தேறிய வெளிநாட்டு கேள்வி (வர்த்தக மீதி)	**-919**	**-966**	**-1,272**	**13.4**	**-5.1**	**-31.6**	**-6.1**	**-6.4**	**-7.6**
பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி	3,472	2,419	2,982	5.5	-30.3	23.3	23.2	16.1	17.7
பொருட்கள் சேவைகள் இறக்குமதி	4,392	3,385	4,253	0.9	-22.9	25.7	29.3	22.5	25.3
உள்நாட்டு வழங்கல் ஸ்ரீ மொ.உ.உற்பத்தி	**14,997**	**15,027**	**16,809**	**4.9**	**0.2**	**11.9**	**100.0**	**100.0**	**100.0**

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.
(அ) தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2010 ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்ட மொ.உ.உ.
(ஆ) மீளாய்வு
(இ) தற்காலிகம்

அட்டவணை 2.8 | மொத்த வழங்கல் மற்றும் பொருட்கள், சேவைகளின் பயன்பாடு (அ)

விபரம்	ரூபா.பில்			வளர்ச்சி (%)		மொ.உ.உ. % இல்	
	2019(m)	2020(இ)	2021(இ)	2019/ 2020(இ)	2020/ 2021(இ)	2020(இ)	2021(இ)
திரட்டிய கேள்வி	**19,389**	**18,412**	**21,063**	**-5.0**	**14.4**	**122.5**	**125.3**
உள்நாட்டு கேள்வி	15,917	15,993	18,081	0.5	13.1	106.4	107.6
வெளிநாட்டுக் கேள்வி ஸ்ரீ பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதி	3,472	2,419	2,982	-30.3	23.3	16.1	17.7
திரட்டிய வழங்கல்	**19,389**	**18,412**	**21,063**	**-5.0**	**14.4**	**122.5**	**125.3**
மொத்த உள்நாட்டு உற்பத்தி	14,997	15,027	16,809	0.2	11.9	100.0	100.0
பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி	4,392	3,385	4,253	-22.9	25.7	22.5	25.3
பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தக இடைவெளி	-919	-966	-1,272	-5.1	31.6	-6.4	-7.6
திரட்டிய வளங்களின் இறக்குமதிகளின் பங்கு (%)	22.7	18.4	20.2	-17.3	9.9	0.1	0.1

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
(அ) தொகை மதிப்பீடு புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 மொ.உ.உ. மதிப்பீடுகளை அடிப்படை ஆண்டாகக் கொண்ட தரவுகள்
(ஆ) திருத்தியமைக்கப்பட்ட
(இ) தற்காலிகமானது

முதலீடு மற்றும் சேமிப்புக்கள்


பொருளாதாரச் செயற்பாடுகளின் படிப்படியான மீட்சியைக் காட்டும் வகையில், முதலீட்டுச் செலவுகள் தற்போதைய சந்தை விலைகளில், 2020 இல் இருந்த 4.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 23.2 சதவீமாக இருந்தது. இதற்கான பிரதான காரணமாக மொத்த முதலீடுகளின் வளர்ச்சி இருந்ததுடன், அதன் 2020 இல் இருந்த 6.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 14.5 சதவீதமாகக் காணப்பட்டது. அதனால், கட்டிட நிர்மாணம், போக்குவரத்து உபகரணங்கள், இயந்திரங்களும் உபகரணங்களும் போன்ற மொத்த நிலைத்த முதலீட்டு உருவாக்கத்தின் சொத்து வகைகள் 2021 இல் விரிவடைந்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முதலீடானது, 2020 இல் இருந்த 25.1 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் 27.7 சதவீதமாக முன்னேற்றமடைந்தது. மேலும், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDIs) 2020 இல் இருந்த 687.0 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 13.6 சதவீதத்தால் அதிகரித்து, 780.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. உள்ளூர் சேமிப்பின் வளர்ச்சி இந்த ஆண்டினுள் தனியார் சேமிப்பின் அதிகரிப்பு காரணமாக, 20.3 சதவீதமாக இருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்ளூர்ச் சேமிப்பு, 2020 இல் 18.7 சதவீதமாக இருந்து, 2021 இல் 20.1 சதவீதமாக அதிகரித்தது. அதற்கிடையில், 2021 இல் உலகின் மற்றைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றங்கள் சுருங்கிய அதேவேளை, தேறிய அடிப்படை வருமானம் ரூபாயில் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதன்படி, தேசிய சேமிப்பானது 13.2 சதவீத வளர்ச்சியாக இருந்ததுடன், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 23.8 சதவீதமாகவும் இருந்தது.

அட்டவணை 2.9 | முதலீடும் சேமிப்புகளும்

விபரம்	ரூபா.பில்		மொ.உ.உ % இல்	
	2020 (அ)	2021 (ஆ)	2020 (அ)	2021 (ஆ)
உள்நாட்டு முதலீடு	**3,779**	**4,656**	**25.1**	**27.7**
உள்நாட்டு சேமிப்புக்கள்	**2,813**	**3,384**	**18.7**	**20.1**
தனியார்	3,994	4,675	26.6	27.8
அரசாங்கம்	-1180	-1,290	-7.9	-7.7
முதலீடு, உள்நாட்டு சேமிப்பு இடைவெளி	**-966**	**-1,272**	**-6.4**	**-7.6**
வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம்	-423	-407	-2.8	-2.4
தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள்	1,151	1,030	7.7	6.1
தேசிய சேமிப்புக்கள்	**3,541**	**4,008**	**23.6**	**23.8**

மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) திருத்தியமைக்கப்பட்ட
(ஆ) தற்காலிகமானது
(இ) கொடுப்பனவு மீதி மதிப்பீடுகளுடனான வித்தியாசம் தொகுப்பினுடைய கால தாமதம் காரணமாக ஏற்பட்டுள்ளது.

வரைபு 2.5| சேமிப்பு முதலீட்டு இடைவெளி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2.3 வெளியகத்துறை

வெளியகத்துறையானது, கொவிட்- 19 பெருந்தொற்று தொடர்பான காரணங்களால், 2021 இல் மிதமானதொரு செயற்றிறனைப் பதிவுசெய்தது. வர்த்தகப் பற்றாக்குறையானது 2020 இல் இருந்த 6,008 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 8,139 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக விரிவடைந்தது. இதற்குக் காரணமாக ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பை இடமாற்றிய இறக்குமதிச் செலவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு இருந்தது. அதன்படி, இறக்குமதிச் செலவுகள் 2020 இல் இருந்த 16,055 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 28.5 சதவீதத்தால் அதிகரித்து 20,637 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது உலகச் சந்தையில் பொருட்களின் முக்கியமாக எரிபொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, மருத்துவ மற்றும் மருந்துப் பொருட்களின் குறிப்பாக கொவிட் - 19 தடுப்பு மருந்துகளின் இறக்குமதியில், சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின், துணிகளினதும் தொடர்பான பொருட்களினதும் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்பட்டது. அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளால், இறக்குமதிச் செலவுகள் 2021 இன் ஆரம்பத்தில் கணிசமான அளவுக்குக் குறைவாகவே இருந்தது. அதற்கிடையில், ஏற்றுமதிகள் ஜூன் 2021 தொடக்கம் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் தாண்டி வளர்ச்சி கண்டது. அதன்படி, 2020 இல் 10,047 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்த ஏற்றுமதி வருமானம், 2021 இல் 12,499 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை எட்டி 24.4 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5 சதவீதமாக 2020 இல் காணப்பட்டு, 2021 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.0 சதவீதத்திற்குக் கணிசமான அளவில் விரிவடைந்தது. சேவைகளின் கணக்கு மிகையானது, தகவல்

தொழில்நுட்ப வர்த்தகச் செயலாக்க வழங்கல்களிலான (IT/BPO) உள்வருகைகளின் அதிகரிப்பினாலும், போக்குவரத்துச் சேவைகளிலிருந்தான மேம்படுத்தப்பட்ட உள்வருகைகளாலும் அதிகரித்தது. நிதிக் கணக்கு நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் கட்டுப்படுத்தப்பட்ட செயற்றிறனால் குழப்பப்பட்டது. மேலும், தேறிய வெளிச்செல்லுகை 2021 இல் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து பதிவானது. வெளியகக் கடன் சேவைச் செலுத்துகைகள், வட்டிக் கொடுப்பனவுகளின் சரிவு காரணமாக, 2020 இல் இருந்த 4,604 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 4,498 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் குறைவடைந்தது. நிலைத்ததொரு செலாவணி விகிதம் 2021 இல் பேணப்பட்டதுடன், 2022 மார்ச் 07 தொடக்கம் செலாவணி விகிதத் தளம்பல் அனுமதிக்கப்பட்டது.

உல்லாசப் பிரயாணத் துறையானது, 2021 இன் பிற்பகுதியிலிருந்து உல்லாசப் பிரயாணிகளது வருகைகளின் அதிகரிப்பால், மீண்டெழும் அடையாளத்தைக் காட்டியது. ஆயினும், உல்லாசப் பிரயாணத் துறையிலிருந்தான வருமானம் 2020 இல் இருந்த 682 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 507 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக 25.7 சதவீதத்தால் குறைவடைந்தது. இதற்குக் காரணமாக 2020 இல் வருகை தந்த 507,704 உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, 2021 இல் வருகை தந்த 194,495 பேர் குறைவடைந்தமை, அதாவது 61.7 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. அதற்கிடையில், 2022 இன் முதல் மூன்று மாதங்களில் 285,334 உல்லாசப் பிரயாணிகள் வருகை 2021 இன் அதே காலப்பகுதியில் 9,629 பேர் வருகை தந்திருந்தனர் 2021 இன் அதே காலப்பகுதியில் உல்லாசப் பிரயாணத் துறையிலிருந்தான வருமானம் 25 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகப் பதிவுசெய்யப்பட்டதுடன், 2022 இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் அது 513 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகப் பதிவுசெய்யப்பட்டது.


அட்டவணை 2.10 | வெளிநாட்டு வர்த்தகம்

ரூபா.மில்லியன்

	2018	2019	2020(அ)	2021(ஆ)
ஏற்றுமதிகள்	**11,890**	**11,940**	**10,047**	**12,499**
விவசாய ஏற்றுமதிகள்	2,579	2,462	2,336	2,730
கைத்தொழில் ஏற்றுமதிகள்	9,258	9,426	7,672	9,702
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	34	34	25	45
வகைபடுத்தப்படாதவை	18	18	14	23
இறக்குமதிகள்	**22,233**	**19,937**	**16,055**	**20,637**
நுகர்வுப் பொருட்கள்	4,980	3,957	3,402	3,849
இடைநிலைப் பொருட்கள்	12,488	11,370	9,077	12,309
முதலீட்டுப் பொருட்கள்	4,690	4,603	3,563	4,463
வகைப்படுத்தப்படாதவை	**75**	**8**	**14**	**17**
வர்த்தக மீதி	**-10,343**	**-7,997**	**-6,008**	**-8,139**

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) திருத்தியமைக்கப்பட்ட
(ஆ) தற்காலிகமானது

வரைபு 2.6 | ஏற்றுமதி இறக்குமதிகளின் வளர்ச்சி மற்றும் வர்த்தக மீதி (காலாண்டில்)




மூலம் : இலங்கை மத்திய வங்கி

வெளியகத் துறையில் தற்போதைய கணக்குப் பற்றாக்குறை 2020 இல் 1.2 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்து, வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகவும், தொழிலாளர்களது சம்பாத்திய உள்வருகைகளில் வீழ்ச்சி காரணமாகவும், 2021 இல் 3.3 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. சேவைகள் கணக்கு மிகை 2020 இல் 819 ஐக்கிய மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து, தகவல் தொழில்நுட்ப வர்த்தகச் செயலாக்க வழங்கல்களிலான (IT/BPO) உள்வருகைகளின் அதிகரிப்பினாலும், கடல், வான், மற்றும் விமானச் சரக்கு ஆகியவற்றின் போக்குவரத்துச் சேவைகளிலிருந்தான மேம்படுத்தப்பட்ட உள்வருகைகளாலும் 2021 இல் 1,586 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. ஆரம்ப வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2020 இல் 2,205 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்து 2021 இல் 2,018 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகச் சுருங்கியது.

2021 மார்ச்சில், இலங்கை மத்திய வங்கி, சீன மக்கள் வங்கியுடன் (PBoC) 1.5 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கான இருதரப்பு நாணயப் பரிமாற்று ஏற்பாடொன்றைச் செய்துகொண்டது. அதற்கு மேலதிகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் விசேட பெறுகை உரித்து ஒதுக்கத்தையும் 787 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு 2021 இல் பெற்றுக்கொண்டதுடன், இலங்கை மத்திய வங்கிக்கும் பங்களாதேஸ் வங்கிக்கும் இடையிலான 200 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கான இருதரப்பு


நாணயப் பரிமாற்று ஏற்பாடொன்றும், சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 810 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான வெளிநாட்டு நாணய ஐக்கிய நிதியளிப்பு வசதியும் 2021 இல் பெற்றுக்கொள்ளப்பட்டன. 2022 ஜனவரியில் இலங்கை, சார்க் பினான்ஸ் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான நிதி உதவியை இந்திய றிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றது, மேலும் 2022 பெப்ரவரியில் ஐ.அ.டொ 500 மில்லியன் கடன் வசதியும் 2022 மார்ச்சில் உணவு, மருந்து மற்றும் கைத்தொழில் துறைக்காக மூலப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐ.அ.டொ. 1 பில்லியனும் இந்தியக் கடன் வசதியின் கீழ் இறக்குமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

வரைபு 2.7 | வர்த்தக மீதி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

வரைபு 2.8 | கொடுப்பனவுகளின் மீதிகள்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.11 | சேவைகளளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

ஐ.அ.டொ.மில்லின்

விடயம்	இறக்குமதிகள்		ஏற்றுமதிகள்	
	2020	2021	2020	2021
போக்குவரத்துச் சேவைகள்	1,059	256	1,174	608
கணனி மற்றும் தகவற்துறை	257	140	971	1,168
பிரயாணங்கள், சுற்றுலாத்துறை	449	239	682	507
தொலைத் தொடர்பாடல்	32	31	24	32
நிர்மாணம்	10	11	7	10
காப்புறுதி	82	37	39	20
நிதிச் சேவைகள்	220	102	96	95
ஏனைய வர்த்தக சேவைகள்	37	17	16	16
அரசாங்கச் செலவினம்	70	57	26	19
மொத்தம்	**2,216**	**890**	**3,035**	**2,475**

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது


மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் (GOR) 2020 இல் காணப்பட்ட 5.7 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 டிசெம்பரின் இறுதியில் 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்ததுடன், மொத்த வெளிநாட்டுச் சொத்துகள் 2020 இல் 8.5 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இன் இறுதியில் 6.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்தன. GOR குறைந்தமைக்கான காரணம், இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனுக்கான சேவைக் கட்டணங்களும், வெளிநாட்டு நாணய மாற்றுக்கான உள்ளகச் சந்தைக்குரிய தேறிய விற்பனையுமாக இருந்தன. இலங்கை நாணயம் அமெரிக்க டொலருக்கெதிராக 2022 ஏப்ரல் 01 இல், 33.0 சதவீதத்ததால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. நாணயமாற்று விகித நெகிழ்வுத்தன்மை, மிதக்க விடப்பட்ட இலங்கை நாணயத்தால் 2022 மார்ச் 07 இலிருந்து அனுமதிக்கப்பட்டது. முழு மொத்தச் சென்மதி நிலுவை (BOP) 2020 இல் இருந்த 2,328 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 3,967 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பற்றாக்குறையாகப் பதிவானது.

ஏற்றுமதிகள்

வர்த்தக ரீதியான ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள், 2020 இல் 10,047 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து, 2021 இல் 24.4 சதவீதத்தால் ஐ அதிகரித்து, 12,499 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. இது 2019 இல் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை விஞ்சும் வகையில் இருந்தது. ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, 2020 இல் 12.4 ஆக இருந்து 2021 இல் 14.8 ஆக அதிகரித்தது. இதற்குக் காரணமாக, சர்வதேச வர்த்தகத்தில் சாதாரண நிலைமை ஏற்பட்டு, விநியோகச் சங்கிலிகளின் மீள் தாபிப்பு மற்றும் அதிகரித்த கேள்வி ஆகியவற்றுடனான கைத்தொழில், விவசாய, கனிப்பொருள் ஏற்றுமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பு அமைந்தது. அதன்படி, கைத்தொழில் ஏற்றுமதியானது 26.5 சதவீதத்தால் 9,702.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், விவசாய ஏற்றுமதியானது 16.8 சதவீதத்தால் 2,729.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், கனிப்பொருள்


ஏற்றுமதியானது 77.3 சதவீதத்தால் 44.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும் அதிகரித்தன. தைத்த ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை ஏற்றுமதிகள் 2021 இல் ஏற்றுமதிகளில் அதிக பங்களிப்பை வழங்கின.

வரைபு 2.9 | ஏற்றுமதி பிரிவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபு 2.10 | மொத்த ஏற்றுமதிகள் மற்றும் புடவை, தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.12 | கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி

ஐ.அ.டொ.மில்லியன்

வகை	2017	2018	2019	2020	2021(அ)
துணி வகைகள் ஆடைகள்	5,032	5,318	5,597	4,423	5,435
இறப்பர் உற்பத்திகள்	835	875	866	786	1,050
பெற்றோலியம் மற்றும் இரசாயணப் பொருட்கள்	581	622	521	374	506
இரத்தினம், வைரம், ஆபரணங்கள்	257	278	306	181	277
இயந்திர, பொறியியல் மற்றும் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	371	435	400	338	501
உணவு, குடிபானங்கள், புகையிலை	393	462	447	464	587
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	1,073	1,268	1,290	1,106	1,346
மொத்தம்	**8,542**	**9,258**	**9,426**	**7,672**	**9,702**

மூலம் : இலங்கைச் சுங்கம், வியாபார முதலீட்டு கொள்கை திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள், 2020 இல் இருந்த 7,672.0 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 26.5 சதவீதத்தால் அதிகரித்து 9,702.0 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களாக இருந்தது. மொத்த ஏற்றுமதியில் கைத்தொழில் ஏற்றுமதியின் பங்களிப்பு 2021 இல் கிட்டத்தட்ட 78 சதவீதமாகும். தைத்த ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, பானங்கள், புகையிலை, பெற்றோலியம் உற்பத்திகள், பொறிகளும் பொறிகளுக்கான உதிரிப்பாகங்களும் ஆகியவற்றிலிருந்தான வருமானங்கள் இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

மொத்த வருமானத்தில் 43 சதவீதமாக இருந்த, துணிகள் மற்றும் தைத்த ஆடைகள் ஆகியவற்றிலிருந்தான வருமானங்கள், 5,435.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக 22.9 சதவீதத்தால் அதிகரித்தன. இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருமானம், ரயர்கள் மற்றும் இறப்பர் கையுறைகளால், 1050.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக 33.6 சதவீதத்தால் அதிகரித்தது. பெற்றோலியம் உற்பத்திகளிலிருந்தான வருமானம், சேமிப்பக எரிபொருள் மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றின் சராசரி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால், 35.6 சதவீதத்தால் அதிகரித்து, 506.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. உணவு, பானங்கள், புகையிலை ஆகியவற்றிலிருந்தான வருமானங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தெங்குப் பொருட்கள், மிருக மற்றும் தாவர கொழுப்புகளும் எண்ணெய்களும் ஆகியவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானங்கள் காரணமாக, 2021 இல் 26.5 சதவீதத்தால் அதிகரித்து, 586.9 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டன. பொறிகளும் பொறிகளுக்கான உதிரிப்பாகங்களும் ஆகியவற்றிலிருந்தான வருமானங்கள் 48.4 சதவீதத்தால் அதிகரித்து, 500.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டன.

2021 இல், இரத்தினக் கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றிலிருந்தான வருமானங்கள் 52.5 சதவீதத்தால் அதிகரித்து, 276.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகவும், போக்குவரத்து உபகரணங்களிலிருந்தான வருமானங்கள் 107.5 சதவீதத்தால் அதிகரித்து, 148.2 மில்லியன் ஐக்கியஅமெரிக்க டொலர்களாகவும் இருந்தன. கால்நடை உணவுகள், அடிப்படை உலோகங்களும் அவை சார்ந்த பொருட்களும், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானங்கள் முறையே 45.2 சதவீதத்தாலும், 41.1 சதவீதத்தாலும், 30.8 சதவீதத்தாலும், 29.2 சதவீதத்தாலும் அதிகரித்த அதேவேளை, பிளாஸ்ரிக் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 55.4 சதவீதத்தால் குறைவடைந்தது. மேலும், துணிகளின் ஏற்றுமதி வருமானம் 2021 இல், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின், குறிப்பாக முகக்கவசங்களின் கேள்வி குறைவடைந்ததால், 42.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 2.13 | விவசாய ஏற்றுமதிகளின் பெறுமதி

ஐ.அ.டொ. மில்லியன்

வகை	2017	2018	2019	2020	2021 (அ)
தேயிலை	1,530	1,429	1,346	1,241	1,324
இறப்பர்	39	32	24	30	42
தெங்கு	348	311	330	345	425
ஏனைய விவசாய ஏற்றுமதிகள்	610	542	499	530	665
கடலுணவு	241	266	263	190	274
மொத்தம்	**2,767**	**2,579**	**2,462**	**2,336**	**2,730**

மூலம்: இலங்கைச் சுங்கம், வியாபார முதலீட்டு கொள்கை திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம், 2020 இல் காணப்பட்ட 2,336.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 16.8 சதவீதத்தால் அதிகரித்து 2021 இல் 2,729.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை எட்டியது. இதற்குக் காரணமாக தேயிலை, வாசனைத் திரவியங்கள், கடலுணவுகள், தெங்குப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமான அதிகரிப்பு காணப்பட்டது. தேயிலை ஏற்றுமதி வருமானம் 2020 இல் இருந்த 1240.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 1,324.4 மில்லியன் ஐக்கியஅமெரிக்க டொலர்களுக்கு, 6.7 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலை ஏற்றுமதி அளவு அதிகரித்த அதேவேளை, சராசரி ஏற்றுமதி விலையில் குறைவு காணப்பட்டது. வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்த ஏற்றுமதி விலைகளுடன் 36.4 சதவீதத்தால் அதிகரித்து, 454.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது. கடலுணவு வருமானமும் 44.4 சதவீதத்தால் அதிகரித்து 274.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை எட்டியது. தெங்கு ஏற்றுமதியிலிருந்தான வருமானம் உயர்ந்த ஏற்றுமதி விலையால் 23.2 சதவீதத்தால் அதிகரித்து 425.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அடைந்தது. அதேவேளை இறப்பர் ஏற்றுமதியிலிருந்தான வருமானமும் உயர்ந்த ஏற்றுமதி விலையால் 40.1 சதவீதத்தால் அதிகரித்து 42.2 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அடைந்தது. கனிப்பொருட்களின் ஏற்றுமதியானது, ரைட்டானியம், இயற்கையான கிராபைட் மற்றும் படிகம் ஆகியவற்றிலிருந்தான வருமா அதிகரிப்பு காரணமாக, 77.3 சதவீதத்தால் அதிகரித்து 44.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அடைந்தது.

இறக்குமதிகள்

இறக்குமதிகள் மீதான செலவுகள் 2020 இல் காணப்பட்ட 16,055.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 28.5 சதவீதத்தால் 20,637.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக, கணிசமாக அதிகரித்தன. எல்லாப் பிரதான இறக்குமதிகளினதும் இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையும், எரிபொருள் விலைகள் உள்ளிட்ட எல்லாப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்தமையும், பொருளாதாரச் செயற்பாடுகள் இயல்பாக்கப்பட்டதனால் ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பு காரணமாகவும், மருந்துப் பொருட்கள் வைத்தியப் பொருட்கள் விசேடமாக கொவிட் - 19 இற்கான தடுப்பு மருந்து ஆகியவற்றின் இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு காரணமாகவும், சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை காரணமாகவும் இது நிகழ்ந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதிச் செலவுகள் 2020 இல் இருந்த 19.8 இலிருந்து 2021 இல் 24.4 ஆக அதிகரித்தது.

அரசாங்கம், 2021 செப்தெம்பரில் பண வைப்புக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி, அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை மட்டுப்படுத்தியது. ஆயினும், அது 2021 ஒற்றோபரில் நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 மார்ச்சில், அரசாங்கம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தது.

நுகர் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவு, 2020 இல் காணப்பட்ட 3,401.7 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 13.1 சதவீதத்தால் அதிகரித்து, 3,848.7 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களை எட்டியது. உணவு மற்றும் பானங்களினதும், உணவற்ற நுகர் பொருட்களினதும் விலை அதிகரிப்புடன் சேர்ந்த இறக்குமதிச் செலவு அதிகரிப்பால் இது நிகழ்ந்தது. உணவு மற்றும் பானங்களினது இறக்குமதிச் செலவு, 2020 இல் இருந்த 1,554.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 7.2 சதவீதத்தால் அதிகரித்து, 1,666.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது. அரிசி, பருப்பு, சீனி, மரக்கறிகள், புதிய பழங்கள், வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட தானியங்கள் மற்றும் குற்றும் கைத்தொழிலுக்கான பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமை இதற்குக் காரணமாக அமைந்தது. அரிசி இறக்குமதி 2020 இல் இருந்த 15,770 மெட்றிக் தொன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 147,091 மெட்றிக் தொன்களாக அதிகரித்தது. இதில் 137,000 மெட்றிக் தொன்கள் 2021 இன் 4 ஆவது காலாண்டிலேயே இறக்குமதி செய்யப்பட்டன. அதனால், அரிசிக்கான இறக்குமதிச் செலவு 2020 இல் காணப்பட்ட 10.5 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 73.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. சீனிக்கான மற்றும் இனிப்புப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவு 276 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களிலிருந்து 4.3 சதவீதத்தால் அதிகரித்து, 288 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக மாறியது. அதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு

2020 இல் இருந்த 682,533 மெட்ரிக் தொன்களிலிருந்து 582,479 மெட்ரிக் தொன்களாகக் குறைவடைந்தது. அதற்கிடையில், பால் தொடர்பான பொருட்களின் இறக்குமதிச் செலவு 2020 இல் காணப்பட்ட 333.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் பால் மா இறக்குமதி குறைவடைந்ததால், 317.7 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களாக 4.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கடலுணவுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் நெத்தலியின் இறக்குமதி குறைவடைந்ததால், 35.2 சதவீதத்தால் குறைந்து, 122.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

உணவற்ற நுகர் பொருட்கள் மீதான செலவுகள் 2020 இலிருந்த 1,847.3 ஐக்கிய மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து, 18.1 சதவீதத்தால் அதிகரித்து, 2,182.2 மில்லியன் ஐக்கிய் வைத்தியப் பொருட்கள் விசேடமாக கொவிட் - 19 இற்கான தடுப்பு மருந்து ஆகியவற்றின் இறக்குமதி 48.2 சதவீதத்தால் 882.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தமை, மற்றும் வீட்டுப் பாவனைப்பொருட்களின் இறக்குமதி 47.6 சதவீதத்தால் 257.1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தமை, இதற்குக் காரணமாக அமைந்தது. தொலைத்தொடர்புக் கருவிகள் மீதான செலவு கொவிட் - 19 நிலவரத்தால் நிகழ்நிலைச் சேவைகள் போன்ற தகவல் தொழில்நுட்ப செயற்றிறனில் ஏற்பட்ட அதிகரிப்பினால், 2021 இல் 42.6 சதவீதத்தால் 382.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தது. அதன்படி, உணவுற்ற நுகர் பொருளாகக் கருதப்பட்ட கைத்தொலைபேசிகளினதும் தொலைக்காட்சிப் பெட்டிகளினதும் இறக்குமதி 2021 இல் அதிகரித்தன. அதற்கிடையில், தனிப்பட்ட வாகனங்களின் இறக்குமதிச் செலவு, மோட்டார் வாகன இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை காரணமாக, 2020 இல் இருந்த 282.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 95.5 சதவீதத்தால் 12.8 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறைவடைந்தது.

அதற்கிடையில், மொத்த இறக்குமதிச் செலவில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைக் கொண்டுள்ள இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவுகள், 2020 இல் இருந்த 9076.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 35.6 சதவீதத்தால் 12,308.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் கணிசமாக அதிகரித்தன. எரிபொருட்கள், துணியும் அது தொடர்பான பொருட்களும், இரசாயனப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள், பிளாஸ்ரிக்கும் அது தொடர்பான பொருட்களும், இறப்பரும் அது தொடர்பான பொருட்களும் ஆகியன மீதான செலவுகளின் அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவுகளில் அதிக பங்கைப் பெறுகின்றதான எரிபொருட்களின் இறக்குமதிச் செலவுகள், 47.2 சதவீதத்தால் அதிகரித்து 3,742.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. இதில் சுத்தீகரிக்கப்பட்ட பெற்றோலியம், சுத்தீகரிக்கப்படாத எண்ணெய், நிலக்கரி ஆகியவற்றின் சராசரி விலைகளும் உள்ளடங்கும். இரண்டாவது பெரிய இறக்குமதி வகையான துணியும் அது தொடர்பான பொருட்களினதும் இறக்குமதிச் செலவு 31.3 சதவீதத்தால் 3,066.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு, துணிகளினதும் நெய்வதற்கான நூலினதும் இறக்குமதிச் செலவின் அதிகரிப்பு காரணமாக, அதிகரித்தது. இரசாயனப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 29.2 சதவீதத்தால் 1,074.4 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களுக்கும், அடிப்படை உலோகங்களின் இறக்குமதி 88.2 சதவீதத்தால் 866.4 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும், பிளாஸ்ரிக்கும் அது தொடர்பான பொருட்களினதும் இறக்குமதி 41.8 சதவீதத்தால் 765.7 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களுக்கும், இறப்பரும் அது தொடர்பான பொருட்களினதும் இறக்குமதி 83.2 சதவீதத்தால் 400.7 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கும் அதிகரித்தன. அதற்கிடையில், உரத்திற்கான இறக்குமதிச் செலவு, 2020 இல் இருந்த 258.9 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களிலிருந்து, 2021 இல் 38.9 சதவீதத்தால் 158.2 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களுக்குக் கணிசமான அளவில் சுருங்கியது. இதற்குக் காரணம், உள்ளூர் சேதன உரத்தை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் உபாயம் காரணமாக, 2020 இல் இறக்குமதி செய்யப்பட்ட 952,000 மெற்றிக் தொன்கள், 2021 இல் 412,000 மெற்றிக் தொன்களாகக் குறைவடைந்ததாகும்.

அட்டவணை 2.14 | இறக்குமதிகளின் பெறுமதி

ஐ.அ.டொ.மில்

	2018	2019	2020	2021 (அ)
நுகர்வுப் பொருட்கள்	**4,980**	**3,958**	**3,402**	**3,848**
உணவும் குடிபானங்களும்	1,606	1,428	1,554	1,667
சீனி	248	201	277	289
பால் மற்றும் பால் உற்பத்தி	332	312	334	318
ஏனைய உணவும் குடிபானங்களும்	1,026	915	944	1,060
உணவல்லாத வாசனைப் பொருட்கள்	3,374	2,530	1,847	2,182
வாகனங்கள்	1,574	816	283	13
வீட்டுப் பாவனைப் பொருட்கள்	124	207	174	257
இறப்பர் உற்பத்தி	95	83	58	102
மருத்துவ மற்றும் மருந்தக உற்பத்திகள்	532	553	596	883
வீட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்	169	172	147	161
ஏனையவை	880	700	590	766
இடைநிலைப் பொருட்கள்	**12,488**	**11,370**	**9,077**	**12,309**

உரம்	262	221	259	158
பெற்றோலியம்	4,152	3,892	2,543	3,743
இரசாயண உற்பத்திகள்	904	832	832	1,074
காகிதம் மற்றும் காகித அட்டைகள்	529	457	383	469
கோதுமை மற்றும் சோளம்	374	346	384	418
புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள்	2,859	2,909	2,335	3,067
வைரம் மற்றும் பெறுமதியான உலோகங்கள்	573	201	117	144
அடிப்படை உலோகம்	683	563	460	866
பிற இடைநிலைப் பொருட்கள்	2,153	1,948	1,763	2,370
முதலீட்டுப் பொருட்கள்	**4,690**	**4,603**	**3,563**	**4,463**
இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்	2,492	2,490	2,176	2,810
போக்குவரத்து உபகரணம்	668	597	348	399
கட்டிடப் பொருட்கள்	1,525	1,509	1,036	1,249
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	6	8	3	6
வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்	**75**	**8**	**14**	**17**
மொத்த இறக்குமதிகள்	**22,233**	**19,938**	**16,055**	**20,637**

மூலம் : இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா IOC PLC, வியாபார முதலீட்டு கொள்கை திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

மூலதனப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 2020 இல் இருந்த 3,563.2 அமெரிக்க டொலர்களிலிருந்து 2021 இல் 25.2 சதவீதத்தால் 4,462.7 அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தது. இதற்குக் காரணமாக, இயந்திரங்களும் உபகரணங்களும், கட்டிடப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவுகள் காணப்பட்டன. இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் இறக்குமதிச் செலவு 2020 இல் இருந்த 2,176.1 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களிலிருந்து 29.1 சதவீதத்தால் 2,809.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தது. கட்டிடப் பொருட்களின் இறக்குமதிச் செலவு, பெருந்தொற்றிலிருந்தான மீட்சியால் ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்தால், இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதி அதிகரிப்பு காரணமாக, 2020 இல் இருந்த 1,035.6 மில்லியன் ஐக்கியஅமெரிக்க டொலர்களிலிருந்து 20.6 சதவீதத்தால் 1,248.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தது. போக்குவரத்து உபகரணங்களின் இறக்குமதிச் செலவும் 2020 இல் இருந்த 348.3 ஐக்கிய அமெரிக்க டொலர்களிலிருந்து, 2021 இல் 14.4 சதவீதத்தால் 398.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு அதிகரித்தது. விவசாய ட்ராக்ர்களின், லொறிகளின், ரெயில்வேயின் உபகரணங்கள் இறக்குமதி இதற்குப் பங்களித்தது.

சுற்றுலாத் துறையிலிருந்தான வருமானங்கள்


உல்லாசப் பிரயாணத்துறை கொவிட் - 19 பெருந்தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், அதனால் 2020 இல் 682 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்த உல்லாசப் பிரயாணத்துறையிலிருந்தான வருமானங்கள், 2021 இல், குறிப்பிடத்தக்க வகையில் 25.7 சதவீதத்தால் 507 மில்லியன் ஐ அமெரிக்க டொலர்களாகக் குறைவடைந்தது. இவ்வாறான தொடர்ச்சியான சரிவு, உள்ளக உல்லாசப் பிரயாணத்துறைச் சேவை வழங்குனர்களையும் தீவிரமாகப் பாதித்தது. உல்லாசப் பிரயாணிகளின் வருகைகள் 2019 இல் காணப்பட்ட 1,913,702 என்ற எண்ணிக்கையான ஆட்களிலிருந்தும், 2020 இல் காணப்பட்ட 507,704 என்ற எண்ணிக்கையான ஆட்களிலிருந்தும், 2021 இல் 61.7 சதவீதத்தால் 194,495 பேராகக் குறைவடைந்தது. ஆயினும், 2021 இன் பிற்பகுதியில் உல்லாசப் பிரயாணிகளின் வருகைகள் ஒக்தோபரில் 22,771 பேராகவும், நவெம்பரில் 44,294 பேராகவும், டிசெம்பரில் 89,506 பேராகவும் படிப்படியாக அதிகரித்தன. கொவிட்- 19 இற்கான தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம், உல்லாசப் பிரயாணத்துறை வர்த்தகத்திற்கான தற்காலிக கடன் அறவிடல் தடை, உல்லாசப் பிரயாணத்துறையில் ஈடுபடுவோருக்கான கடன்களுக்கான சலுகை வட்டி வீதங்கள் ஆகியவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக இது அடையப்பெற்றது. உல்லாசப் பிரயாணிகளின் வருகைகள் ஐரோப்பா, இந்தியா, ரஷ்யா ஆகியவற்றிலிருந்து பதிவாகின.

தொழிலாளர்களது பண அனுப்புகைகள்

தொழிலாளர்களது பணம் அனுப்புகை, 2020 இல் இருந்த 7,104 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 22.7 சதவீதத்தால் 5,491 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகக் குறைவடைந்தது. இதற்குக் காரணமாக, நாட்டுக்கான அனுப்புகைகள் முறைசாரா வழிகளிலும், சட்டபூர்வமற்ற வழிகளிலும் கிடைக்கப் பெற்றமையாகும். அதனால், அரசாங்கமானது பல ஊக்கக் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தி வெளிநாட்டிலுள்ள தொழிலாளர் தமது அனுப்புகைகளை வங்கிகளூடாக மேற்கொள்வதை ஊக்கப்படுத்தியதுடன், எண்ணிம தளங்களையும் இதற்காக அறிமுகப்படுத்தியது. அதன்படி, ஒவ்வொரு டொலருக்கும் ரூபா 10 என்ற ஊக்கத்தொகையை அரசாங்கம் அறிமுகப்படுத்தி 2021 டிசெம்பரில் சாதாரண செலாவணித் தொகையிலும் கூடுதலாக

உள்நாட்டு நாணயத் தொகையை இலங்கையின் வங்கி முறைமையூடாகவும் மற்றைய முறைசார் வழிகளூ டாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. மேலும், இலங்கை மத்திய வங்கி தேசிய அனுப்புகை கைத்தொலைபேசி மென்பொருளை "லங்கா றெமிட்" என்ற பெயரில் அறிமுகப்படுத்தியதுடன், அது 2022 பெப்ருவரியில் வெளியிடப்பட்டது. வெளிநாட்டுத் தொழிலாளர் அதனூடாக வங்கிகளையும் மற்றைய முறைசார் வழிகளையும் நேரடியாக அணுகக்கூடியதாக இருந்தது.

வரைபு 2.11 தொழிலாளர் பணவனுப்பல்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.15 | கொடுப்பனவு மீதி : 2017- 2021

ஐ.அ.டொ.மில்லியன்

வகை	2017	2018	2019	2020 (அ)	2021
வர்த்தக மீதி	**-9,619**	**-10,343**	**-7,997**	**-6,008**	**-8,139**
ஏற்றுமதி	11,360	11,890	11,940	10,047	12,499
இறக்குமதி	20,980	22,233	19,937	16,055	20,637
சேவை (தேறிய)	**3,303**	**3,766**	**2,849**	**819**	**1,586**
பெறுகைகள்	7,724	8,374	7,474	3,035	2,475
கொடுப்பனவுகள்	4,421	4,608	4,625	2,216	889
வருமானம் (தேறிய)	**-2,319**	**-2,384**	**-2,466**	**-2,205**	**-2,018**
பெறுகைகள்	173	249	252	198	116
கொடுப்பனவுகள்	2,492	2,633	2,718	2,404	2,134
பொருட்கள்,சேவைகள்,வருமானம் (தேறிய)	**-8,636**	**-8,962**	**-7,614**	**-7,394**	**-8,571**
நடைமுறை மாற்றல்கள் (தேறிய)	**6,327**	**6,163**	**5,766**	**6,207**	**5,228**
தனியார் மாற்றல்கள் (தேறிய)	6,316	6,155	5,757	6,194	5,222
பெறுகைகள் வெளிநாட்டு (Copa) சம்பாத்தியம்	7,164	7,015	6,717	7,104	5,491
கொடுப்பனவுகள்	848	860	960	910	270
உத்தியோகபூர்வ மாற்றல்கள் (தேறிய)	11	8	9	13	6
நடைமுறைக் கணக்கு	**-2,309**	**-2,799**	**-1,848**	**-1,187**	**-3,343**
மூலதன மற்றும் நிதிக் கணக்கு	**-2,112**	**-3,364**	**-2,437**	**-232**	**-4,004**
மூலதனக் கணக்கு	**11**	**14**	**23**	**28**	**25**
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு	**-2,298**	**-2,785**	**-1,825**	**-1,159**	**-3,318**
நிதிக் கணக்கு (இ)	**-2,123**	**-3,378**	**-2,460**	**-260**	**-4029**
தவறுகள், தவிர்ப்புக்கள்	175	-593	-635	795	-711
முழு மொத்த மிதி (கொடுப்பனவு மீதி)	2,068	-1,103	377	-2,328	-3,967
மொ.உ.உ.சதவீதம்					
வர்த்தக பற்றாக்குறை	-10.9	-11.7	-9.5	-7.4	-9.6
நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை	-2.6	-3.2	-2.2	-1.5	-4.0

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்ட

(ஆ) தற்காலிகமானது

(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து அடிப்படையாகக் கொண்ட BPM6 புதிய வகைப்படுத்தலில் மேலதிகக்கூறுகளும் நிதிக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

2.4 நாணயத்துறையின் முன்னேற்றங்கள்


2020 இன் ஆரம்பத்தில் பெருந்தொற்று வெளிப்பட்டதிலிருந்து இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்படும் ஏற்றுக்கொள்ளத்தக்க நாணயக் கொள்கையானது 2021 இலும் தொடர்ந்ததுடன், 2021 இல் மாற்றப்படாதிருந்த நிலைத்த வைப்பு வசதி வீதத்திலும் (SDFR), நிலைத்த கடன் வசதி வீதத்திலும் (SLFR), மற்றைய கொள்கை ரீதியான விகிதங்களிலும் பிரதிபலித்தது.நிலைத்த வைப்பு வசதி வீதத்திலும் மற்றும் SLFR ஆகியன முறையே 4.5 சதவீதமாகவும், 5.5 சதவீதமாகவும் ஜூலை 2021 வரை பொருளாதார மீட்புக்காக வங்கித்துறையின் கடன் வழங்கும் தன்மைக்கு வசதியளிக்கும் நோக்கில் பேணப்பட்டன. இந்த மோசமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான நாணயக் கொள்கையானது, தனியார் மற்றும் பொதுத் துறைகளில் குறைந்த செலவுக்கான நிதிகளை அடைவதற்கு வசதியளித்த மற்றும் வரலாற்றிலேயே ஆகக்குறைந்த வட்டி வீதங்களுக்கு இட்டுச் சென்ற சந்தைக்கு மேலதிக திரவத்தன்மையை விடுவிப்பதல் உதவியது. ஆயினும், SDFR மற்றும் SLFR ஆகியன 2021 ஆகஸ்ட்டில், பொருளாதாரத்தின் வெளியகத் துறையில் சமநிலையின்மையையும், அதிகரித்த பணவீக்க அழுத்தத்தையும் இலகுவாக்குவதற்காக, 50 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் ரூபாயிலான வைப்புப் பொறுப்புகளுக்குப் பிரயோகிக்கத்தக்க நிலைத்த ஒதுக்க விகிதமானது, 2021 செப்தெம்பர் மாத ஆரம்பத்திலிருந்து 2.0 சதவீத புள்ளிகளால் 4.0 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டது. ஆயினும், அடுத்தடுத்த காலங்களில் மேலும் தீவிரமடையத்தக்க, அதிகரித்த பணவீக்க அழுத்தத்தை ஒழிப்பதற்காக நிலைத்த வைப்பு வசதி வீதத்திலும் மற்றும் SLFR ஆகியன வரலாற்றில் இல்லாதவாறு 700 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 13.5 சதவீதத்திற்கும், 14.5 சதவீதத்திற்கும் 2022 ஏப்ரல் 08 இலிருந்து அதிகரிக்கப்பட்டன.

வரைபு 2.12 | ஒதுக்கப்பட்ட கடன் மற்றும் தனியார் துறை கடன் வளர்ச்சி



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபு 2.13 | தனியார்துறையின் கடன் வளர்ச்சி மற்றும் வர்த்தக பற்றாக்குறை



2021 இன் ஆரம்பத்தில், சராசரி நிறையளிக்கப்பட்ட அவசர நிதியளிப்பு விகிதம் (The Average Weighted Call Money Rate), நிலைத்த விகிதப் பாதையின் (Standing Rate Corridor) அதிகுறைந்த அளவுக்குக் கிட்டத்தட்ட சமமான அளவில் பேணப்பட்டதுடன், அது நிலைத்த விகிதப் பாதையின் அதிகூடிய அளவுக்கு 2021 ஆகஸ்ட் ஆரம்பத்தில் நகர்த்தப்பட்டது. 2022 மார்ச் மாத முடிவில் சராசரி நிறையளிக்கப்பட்ட அவசர நிதியளிப்பு விகிதம் 7.49 சதவீதமாகப் பதிவானது. சராசரி நிறையளிக்கப்பட்ட முன்னணிக் கடன் விகிதம் (Average Weighted Prime Lending Rate), 2020 டிசெம்பர் இறுதியில் 5.9 சதவீதமாக இருந்து, வாரந்தோறும் அதிகரிக்கப்பட்டு, 2021 இன் இறுதியில் 8.61 சதவீதமாக இருந்தது. சராசரி நிறையளிக்கப்பட்ட வைப்பு விகிதம் (Average Weighted Deposit Rate) 2021 இன் இறுதியில் 4.94 சதவீதமாகக் குறைந்தது.

அட்டவணை 2.16 | வர்த்தக வங்கிகள் முற்பணங்களும் நிலுவைக் கடன்களும் (அ)(ஆ)

ரூ. மில்லி

விடயம்	2020	2021 (இ)	2021/2020 % மாற்றம்
விவசாயம் மற்றும் மீன்பிடி	**489.7**	**543.6**	**11.0**
அவற்றில்			
தேயிலை	102.0	101.2	-0.8
இறப்பர்	30.8	41.4	34.4
தென்னை	27.8	33.7	21.2
நெல்	38.6	44.4	15.3
மரக்கறி, பழங்கள், சிறு உணவுப் பொருட்கள்	29.2	30.9	5.8
மீன்பிடிகள்	20.5	24.0	17.0
கைத்தொழில்	**2,540.1**	**2880.5**	**13.4**
அவற்றில்			
நிர்மாணம்	1,348.6	1544.7	14.5
உணவு, குடிபாணங்கள்	148.3	174.7	17.8
துணிவகைகள், ஆடைகள்	235.1	273.1	16.1
இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள்	132.9	152.8	14.9
சேவைகள்	**1,716.7**	**1,976.0**	**15.1**
அவற்றில்			
மொத்த மற்றும் சில்லறை உபகரணங்கள்	501.8	549.8	9.6
சுற்றுலா	261.7	288.2	10.1
நிதியியல் மற்றும் வியாபாரச் சேவைகள்	350.1	437.2	24.9
கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து மற்றும் சரக்கு அனுப்புதல்	21.6	30.3	40.1
தனிப்பட்ட கடன்களும் முற்பணங்களும் (ஈ)	**1,632.1**	**1,762.2**	**8.0**
அவற்றில்			
பாவணையாளர் உறுதி	330.8	375.0	13.3
பொற்கடன் அடகு	248.7	294.9	18.6
கடனட்டைகள்	127.8	143.1	12.0
மொத்தம்	**6,378.6**	**7162.3**	**12.3**

மூலம் : இலங்கை மத்திய வங்கி
(அ) வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கடன் மற்றும் முற்பணங்களின் னுடீரு மற்றும் முடீரு உள்ளடங்கலாக காலாண்டு ஆய்வுகளை அடிப்படையாக கொண்டுள்ளது.
(ஆ) கடன், மிகைப் பற்றுக்கள், ரசீதுகள், தள்ளுபடிகள் மற்றும் கொள்வனவுகள் உள்ளடங்கியும், பணச்சேகரிப்பு சம்பந்தமானவை தவித்தும் காணப்படுகின்றது
(இ) தற்காலிமானது
(உ) காலாண்டு ஆய்வின்படி தனியார்துறை மொத்த கடன் சிக்கலான ஆய்வு முனையங்களினால் நாணய ஆய்வுகளில் இருந்தும் வேறுபடுகின்றது

வர்த்தக வங்கிகளின் கூட்டிணைப்புடன், மத்திய வங்கியானது பரந்த அடிப்படையிலான பொருளாதார மீட்புக்கு உதவியளிப்பதற்காக நுண், சிறிய, நடுத்தர வர்த்தகங்களுக்கு முன்னுரிமைக் கடன் இலக்குகளை அறிமுகப்படுத்தத் தீர்மானித்தது. 2020 இன் இறுதியில் ரூபா 6,171 பில்லியன்களாக இருந்த தனியார்துறைக்கான கடன்கள் 2021 டிசெம்பர் இறுதியில் ரூபா 6,981 பில்லியன்களாக அதிகரிக்கப்பட்டன. இதற்கு முன்னுரிமைக் கடன் இலக்குகளும், குறைந்த செலவில் நிதிகளை அணுகுதலும் உதவின. 2022 பெப்ருவரி இறுதியில் தனியார்துறைக்கான கடன்கள் ரூபா 7,051 பில்லியன்களாக இருந்தன. ஆயினும், இந்தக் கடன் வளர்ச்சி கொள்கை விகித அதிகரிப்புடன் 2022 ஏப்ரல் 08 இலிருந்து தணியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்துக்கான தேறிய கடன் 2020 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,548 பில்லியன்களிலிருந்து, 2021 டிசெம்பர் இறுதியில் ரூபா 5,832 பில்லியன்களாக அதிகரித்தது.

வேலைவாய்ப்பும் வேலைவாய்ப்பின்மையும்

நாட்டில் வேலையிலுள்ள மொத்தச் சனத்தொகை 2020 இல் 7.9 மில்லியனாக இருந்து, 2021 இன் பொருளாதார மீட்பைத் தொடர்ந்து, 2021 இல் 2.5 சதவீதத்தால் அதிகரித்து 8.1 மில்லியனை அடைந்தது. 2021 இன் இறுதியில் உல்லாசப் பிரயாணத்துறை மீண்டதால் இது ஏற்பட்டது. ஆயினும், 2021 இன் இரண்டாவது, மூன்றாவது காலாண்டுகளில் பெருந்தொற்றின் மூன்றாவது அலை காரணமாகவும், வெளியகத் துறையில் ஏற்பட்ட பொருளாதாரக் கஷ்டங்களாலும் வேலைவாய்ப்பு குறைவடைந்தது. 2021 இன் இரண்டாவது, மூன்றாவது காலாண்டுகளில் வேலைவாய்ப்பு 8.0 பில்லியனாக இருந்தது. 2020 இல் பெருந்தொற்றால் ஏற்பட்ட சரிவுடன் ஒப்பிடும்போது, 2021 இல் விவசாய மற்றும் சேவைத் துறைகளில் வேலைவாய்ப்பு கணிசமாக அதிகரித்தது. விவசாயத் துறையில் வேலைவாய்ப்பின் பங்களிப்பு 2020 இல் காணப்பட்ட 27.1 சதவீதத்திலிருந்து 2021

இல் 27.3 சதவீதமாக உயர்ந்தது. அதேவேளை சேவைத் துறையில் 2020 இல் காணப்பட்ட 46.0 சதவீதத்திலிருந்து 2021 இல் 46.7 சதவீதமாக உயர்ந்தது. உல்லாசப் பிரயாணத்துறையில் 2021 இன் இறுதியில் ஏற்பட்ட வளர்ச்சி, சேவைத்துறையில் வேலைவாய்ப்பு அதிகரிப்புக்குக் கணிசமான அளவில் பங்களித்தது. கைத்தொழில் துறையிலான வேலைவாய்ப்பு பெருந்தொற்றாலும், 2021 இன் மூன்றாம் நான்காம் காலாண்டுகளின் பொருளாதார மந்த நிலையாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. கைத்தொழில் துறையிலான வேலைவாய்ப்பு 2020 இல் இருந்த 2.1 மில்லியனிலிருந்து, 2021 இன் மூன்றாம் காலாண்டில் 1.9 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. ஆயினும், 2021 இன் மூன்றாம் காலாண்டுக்குரிய வேலைவாய்ப்பு, நான்காம் காலாண்டின் இறுதியில் 2.2 மில்லியனாக மீண்டது. கைத்தொழில் துறை வேலைவாய்ப்பின் பங்கானது, 2020 இல் 26.9 சதவீதமாக இருந்து, 2021 இல் 3.3 சதவீதத்தால் 26.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொதுத்துறையில் வேலைவாய்ப்புப் பெற்ற சனத்தொகையானது, புதிய பட்டதாரிகளையும் ஏனையவர்களையும் ஆட்சேர்ப்புச் செய்வதென்ற அரசாங்கத்தின் தீர்மானம் காரணமாக, 2021 இல் அதிகரித்தது. பொதுத்துறையில் மொத்த வேலைவாய்ப்பு 2020 1,401 மில்லியனாக இருந்தது.

பெருந்தொற்றிலிருந்து பொருளாதாரத்தின் கணிசமான மீட்சி காரணமாக, வேலைவாய்ப்பின்மையானது 2020 இல் காணப்பட்ட 468,000 மில்லியன் வேலையற்றோரிலிருந்து, 2021 இல் 440,000 மில்லியன் வேலையற்றோரைக் கொண்டதாக வீழ்ச்சியடைந்தது. வேலைவாய்ப்பின்மை விகிதமானது 2020 இல் 5.5 சதவீதமாக இருந்து, 2021 இல் 5.1 சதவீதமாகக் குறைந்தது. 2021 இல் ஆண், பெண் இருபாலாரது வேலைவாய்ப்பின்மையும் குறைவடைந்தாலும், ஆண்களது வேலைவாய்ப்பின்மையுடன் ஒப்பிடும்போது, பெண்களது வேலைவாய்ப்பின்மை உயர்வாகவே இருந்தது. ஆண்களது வேலைவாய்ப்பின்மை 2020 இல் 4.0 சதவீதமாக இருந்து, 2021 இல் 3.7 சதவீதமாகக் குறைந்ததுடன், பெண்களது வேலைவாய்ப்பின்மை 2020 இல் 8.5 சதவீதமாக இருந்து, 2021 இல் 7.9 சதவீதமாகக் குறைந்தது. க.பொ.த. (உயர்தர) மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித்தகைமைகளை உடையோரிடையே வேலைவாய்ப்பின்மையானது 2020 இல் 9.8 சதவீதமாக இருந்து, 2021 இல் 9.1 சதவீதமாகக் கணிசமான அளவில் குறைவடைந்தது. 20-29 மற்றும் 20-24 வயதுக் குழுமங்களிடையே வேலைவாய்ப்பின்மையானது, 2020 உடன் ஒப்பிடும்போது 2021 இல் முறையே 18.3 சதவீதமாகவும், 26.8 சதவீதமாகவும் காணப்பட்டது. ஆயினும், 25-29 வயதுக் குழுமத்திடையேயான வேலைவாய்ப்பின்மை 2020 இல் இருந்த 12.0 சதவீதத்திலிருந்து, 2021 இல் 11.4 சதவீதமாகக் குறைவடைந்தது. உலகப் பொருளாதாரங்களின் மீட்சி மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகளில் தளர்வு ஆகியன வேலைவாய்ப்பின்மைக்குத் தீர்வை வழங்கியதனால், 2021 இல் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் செல்வது கணிசமாக அதிகரித்தது. அது 2020 இல் 53,711 செல்கைகளாக இருந்து, 2021 இல் 121,795 செல்கைகளாக இருமடங்கிற்கும் மேலாக அதிகரித்தது.

ஒட்டுமொத்த வேலைவாய்ப்பின்மையில் சரிவு காணப்பட்டாலும் கூட, தொழிற்படைப் பங்குபற்றல் விகிதம் (LFPR), 2020 இல் 50.6 சதவீதமாக இருந்து, 2021 இல் 49.9 சதவீதமாகக் குறைவடைந்தது. ஆண்களுக்கான LFPR 2020 இல் 71.9 சதவீதமாகக் காணப்பட்டு, 2021 இல் 71.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை பெண்களுக்கான LFPR 2020 இல் 32.0 சதவீதமாகக் காணப்பட்டு, 2021 இல் 31.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. நகர மற்றும் கிராமப் பகுதிகளில் LFPR ஆனது, 2021 இல் வீழ்ச்சியடைந்தது. அதாவது, நகரப் பிரதேசத்தில் அது 46.9 சதவீதத்தாலும், கிராமப் பிரதேசத்தில் 50.5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது.

பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும (CCPI, 2013=100), தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் (NCPI, 2013=100) ஏற்படும் மாற்றங்களால் அளக்கப்படும் பணவீக்கமானது. ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், 2021 டிசெம்பரில் இரட்டை இலக்க மட்டத்தை அடைந்தது. இவ்விரு சுட்டெண்களிலும் ஆண்டுக்கு அண்டு அளவீடு செய்யப்படும் முதன்மைப் பணவீக்கமானது 2021 இன் ஆரம்பத்தில் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்து, அதன் பிற்பகுதியில் உணவு மற்றும் உணவற்ற பொருட்களது பணவீக்கம் காரணமாக, அதிகரித்தது. உணவுப் பொருட்களுக்குரிய பணவீக்கமானது பயிர்ச் செய்கைகளில் வீழ்ச்சி காரணமாகவும் விநியோகச் சங்கிலிகளில் தடங்கல்கள் காரணமாகவும், சக்தி வள விலையுயர்வு காரணமாகவும், ஆகக்கூடிய சில்லறை விலைகள் நீக்கப்பட்டமை காரணமாகவும் தீர்மானிக்கப்பட்டது. CCPI ஆல் ஆண்டுக்கு ஆண்டு அளக்கப்படும் முதன்மைப் பணவீக்கமானது 2022 ஏப்ரலில் 29.8 சதவீதத்திலிருந்து 2022 மேயில் 39.1 சதவீதத்திற்கு தீவிரமாக அதிகரித்தது. அதேவேளை அது, 2021 டிசெம்பரில் 12.1 சதவீதமாகவே காணப்பட்டது. NCPI ஆல் ஆண்டுக்கு ஆண்டு அளக்கப்படும் முதன்மைப் பணவீக்கமானது 2021 செப்தெம்பர் வரை ஒப்பீட்டளவில் குறைந்திருந்தது. ஆயினும், 2021 டிசெம்பர் இறுதியில் அது 14.0 சதவீதத்தை அடைந்ததுடன், 2022 பெப்ருவரி இறுதியில் 17.5 சதவீதமாகி, பின்னர் 2022 ஏப்ரலில் 33.8 சதவீதமாக உயர்ந்தது. பண விநியோகத்தில் ஏற்பட்ட எதிர்பாராத உயர்வு, எரிபொருள் மற்றும்

எரிவாயு போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, உலக எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, பயிர் விளைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியன பணவீக்க அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த காரணிகளாக இருந்தன.

பொருளாதாரத்தில் அடிநாதமான பணவீக்கத்தை உணர்த்தும் உள்ளார்ந்த பணவீக்கமானது, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (CCPI) இன் அசைவுகளால் அளக்கப்படுகிறது. இது 2021 இன் இரண்டாவது காலாண்டில் பண விநியோக அதிகரிப்புடன், பால்மா மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிப்புடன், அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட அத்தியாவசிய இறக்குமதிகளிலான வீழ்ச்சியுடன், மற்றைய விநியோகத் தாக்கங்களுடன் உயர்வடைய ஆரம்பித்தது. CCPI மூலம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அளக்கப்படும் உள்ளார்ந்த பணவீக்கமானது, 2021 ஒக்தோபரில் 6.3 சதவீதத்திற்கு உயர்ந்ததுடன், 2021 டிசெம்பரில் 8.3 சதவீதமாகவும், பின்னர் 2022 ஏப்பிறல் இல் முன்னெப்போதுமில்லாத வகையில் 22.0 சதவீதமாகவும் அதிகரித்தது. NCPI மூலம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அளக்கப்படும் உள்ளார்ந்த பணவீக்கமானது, அதே மாதிரியான போக்கையே காண்பித்ததுடன், 2021 ஒக்தோபரில் 7.2 சதவீதமாக இருந்து, 2021 டிசெம்பரில் 10.8 சதவீதமாக அதிகரித்தது. பின்னர் 2022 மே இறுதியில் 28.4 சதவீதமாகியது.

பங்குச் சந்தை முன்னேற்றங்கள்


பங்குச் சந்தையானது 2020 உடன் ஒப்பிடும்போது 2021 இல் உயர் வளர்ச்சியைக் காட்டியது. எல்லாப் பங்குகளினதும் விலைச் சுட்டெண் (ASPI) கடந்த பத்து வருடங்களுள் ஆகக்கூடியதாக இருந்த, 2020 இல் காணப்பட்ட 6,774 புள்ளிகளுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 80.5 சதவீதத்தால் 12,226 புள்ளிகளுக்கு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது. அதற்கிடையில், அதியுயர் திரவப் பங்குகளைக் காட்டும் 20 பாரிய கம்பனிகளுக்கான முதலீட்டுச் (S&P SL20) சுட்டெண், 2020 இல் காணப்பட்ட 2,638 புள்ளிகளுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 60.5 சதவீதத்தால் அதிகரித்து, 4,233 புள்ளிகளை எட்டியது. ஆயினும், 2022 ஏப்ரல் 8 இல் ASPI ஆனது 8,144 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்ததுடன், அதே தினத்தில் S&P SL20 சுட்டெண் 2,624 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது.

சந்தை மூலதனமாக்கல் 2021 இன் இறுதியில் ரூபா 5,489 பில்லியன்களுக்கு கடந்த 10 வருடங்களிலான ஆகக்கூடிய அளவைப் பதிவுசெய்தது. 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 5,489 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2022 இன் முதலாவது காலாண்டின் இறுதியில் 30.4 சதவீதத்தால் ரூபா 3,827 பில்லியன்களுக்கு இது குறைவடைந்தது. நாளாந்த சராசரிப் புரள்வு, 2020 இல் நாளொன்றுக்கு 1.9 பில்லியனாக இருந்ததுடன் ஒப்பிடும்போது, 2021 இல் நாளொன்றுக்கு 4.9 பில்லியனாக 157.9 சதவீதத்தால் அதிகரித்தது. அதனால், மொத்தச் சராசரிப் புரள்வு 2020 இல் காணப்பட்ட ரூபா 397 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 195.5 சதவீதத்தால் ரூபா 1,173 பில்லியன்களுக்கு அதிகரித்தது. இது பத்து வருட அதிகூடிய தொகையாகும்.

கொழும்பு பங்குச் சந்தையின் கீழ் பட்டியலிடயப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 2020 இல் காணப்பட்ட 283 உடன் ஒப்பிடும்போது, 2021 இல் 296 ஆக அதிகரித்தது. இது 2022 இன் முதலாவது காலாண்டின் இறுதி வரை மாற்றமடையாமல் இருந்தது.

வெளிநாட்டு விற்பனைகள் 2020 இல் இருந்த ரூபா 104,165 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் ரூபா 86,665 மில்லியன்களாக 16.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, வெளிநாட்டுக் கொள்வனவுகளும் 2020 இல் இருந்த ரூபா 52,889 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2021 இல் 35.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூபா 34,016 மில்லியன்களாகக் காணப்பட்டது.

வரைபு 2.14 | தலைக்கான பணவீக்கம், உணவிற்கான பணவீக்கம் மற்றும் உணவற்றவைக்கான பணவீக்கம்



மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.17 | மூலதனச் சந்தைகளின் அசைவுகள்

ரூபா.பில்.

சுட்டிகள்	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
அனைத்து பங்குகள் விலைச்சுடடெண் (1985=100)	**5,913**	**7,299**	**6,895**	**6,228**	**6,369**	**6,052**	**6,129**	**6,774**	**12,226**
எஸ் அன்ட் பீ எஸ்எல் 20 சுட்டெண்	3,264	4,089	3,626	3,496	3,672	3,135	2,937	2,638	4,233
சந்தை முதலாக்கம் (ரூபா பில்.)	2,460	3,105	2,938	2,745	2,899	2,840	2,851	2,961	5,489
வர்த்தக பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் எண்	289	294	294	295	296	297	289	283	296
வருடாந்த சராசரி பங்கு மாற்றல்கள் (ரூபா பில்.)	200	341	253	176	221	200	171	397	1,173
வெளிநாட்டு விற்பனைகள் (ரூபா மில்.)	60,873	83,554	89,793	74,275	94,627	100,316	68,272	104,165	86,665
வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூபா மில்.)	83,657	104,771	84,421	74,625	112,285	77,067	56,537	52,889	34,016

மூலம் : கொழும்பு பங்கு பரிவர்த்தனைச் சந்தை, இலங்கை மத்திய வங்கி

03

உலக பொருளாதார அபிவிருத்திகள்

3.1 மேன்நோக்கு[1]

கொவிட் - 19 கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் காரணமாக 2021 இல், உலகப் பொருளாதாரம் எழுச்சி பெறத் தயாராக இருந்தது, மற்றும் எல்லைகளுக்கப்பால் பொருளாதார மீட்சியின் வேறுபாடு குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டாலும், பல பொருளாதாரங்கள் ஸ்தம்பித்த நிலையில் காணப்பட்ட போதிலும் உலகப் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. எனவே மோதலின் விளைவுகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுக்கான இடையூறுகள் ஒமிக்ரான் (Omicron) மாறுபாட்டின் தாக்கம் என்பவற்றால் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி வாய்ப்புக்கள் 2021 இல் தடம் புரண்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) மதிப்பீட்டின்படி உலக பொருளாதாரம், 2021 இல் 6.1 சதவீதமாக வளர்ந்தது. இது உலக வங்கியின் மதிப்பீட்டின் 5.5 சதவீதத்தை விடவும் 0.6 சதவீத புள்ளிகள் குறைவாகக் காணப்படும் அதேவேளை ஒக்டோபர் 2021 இல் எதிர்ப்பார்க்கப்பட்ட வளர்ச்சியை விடவும் 0.2 சதவீத புள்ளிகள் அதிகமாகவும் காணப்படுகிறது.

உலக பொருளாதாரத்தில் தற்போது நடைபெற்று வரும் புவசார் அரசியள் மோதல்கள் பல பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. குறிப்பாக வளரும் பொருளாதாரங்களுக்கான உலக சந்தையின் எரிசக்தி, உலோகம் மற்றும் உணவு ஏற்றுமதி என்பவற்றை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்வதனால் இத்தாக்கம் ஏற்பட்டுள்ளது. மோதலின் விளைவுகளுடன், சர்வதேச நாணய நிதியத்தின் ஏப்ரல் அறிக்கை 2022 இல் மற்றும் 2023 இல் உலகப் பொருளாதாரம் 3.6 சதவீதம் மீண்டுவருமென எதிர்பார்த்தது. இது சர்வதேச நாணய நிதியத்தின் ஜனவரி மாத முன்னறிவிப்பை விடவும் 0.8 மற்றும் 0.2 சதவீத புள்ளிகள் குறைவானதாகும். முறையே இது எதிர்வுகூறல்களின் உயர்ந்த நிச்சயமற்ற தன்மைகளை நிரூபிப்பதாகவும் காணப்படுகின்றது.

ரஷ்யா-உக்ரைன் மோதலின் விளைவுகள் பலதரப்பட்டவை: உலக அமைதிக்கு, வர்த்தகம் மற்றும் முதலீட்டு உள்வருகைக்கு, நிதித்துறை போன்றவற்றிற்கு இடையூறாகவும் மற்றும் மனித கடத்தல் மற்றும் அண்டை நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாகவும் காணப்படுகிறது.

ரஷ்யா, எண்ணெய், எரிவாயு மற்றும் உலோகங்களின் முக்கிய வழங்குநர்களில் ஒன்றாக இருப்பதால், பொருட்கள் சந்தைகள் மற்றும் வர்த்தக உள்ளார்ந்தசெயல்முறைகள் தகர்க்கப்பட்டுள்ளன. உக்ரைனில் கோதுமை மற்றும் சோளத்தின் விநியோகத்தில் காணப்படும் பற்றாக்குறை அத்தகைய பொருட்களின் விலைகள் உயரவும் வழிவகுத்தது. இருப்பினும், இத்தாக்கமானது இப்பொருட்களைத் தாண்டியும் உணரப்படுகிறது. நிக்கல் போன்ற உள்ளீடுகளின் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து துருப்பிடிக்காத உருக்கு இரும்பு மற்றும் வாகன பற்றிகள், வெண்ணிற உலோக வகை (மீள் நிரப்பு பற்றிகள் பயன்படுத்தப்படுகிறது), வெண்ணாகம் (பெரிய அளவிலான ஆற்றல் சேமிப்பு மற்றும் உருக்கு இரும்பு தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது) மற்றும் அரை முடிக்கப்பட்ட இரும்பு (இரும்பு பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது) தனித்துவமான விநியோகங்களின் பற்றாக்குறை காரணமாக ஐரோப்பாவில் உள்ள சிறப்பு உற்பத்தித் துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், ரஷ்யாவிற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் மேலும் நீடிக்கப்பட்டால், உயர் பணவீக்க அழுத்தங்கள் தொடர்ந்தால், உலகப் பொருளாதாரம் கணிசமாக மேலும் மந்தமடையும்.

இந்த அறிக்கை தொகுக்கப்படும் போது இத்தகைய தாக்கங்களினால் உலகப் பொருளாதாரம் மிகவும் பலவீனமாகவும், நிச்சயமற்ற தன்மையுடனும் இருக்கும். இன்னும் தொற்றுநோய் பல நாடுகளில் கடுமையாக இருக்கும் மற்றும் புதிய மாறுபாடுகள் தோன்றக்கூடும். பரவலான கடன் அபாயத்தில் இருக்கும் போது பணவீக்க அழுத்தங்கள் மேலும் இறுக்கமடையலாம் மற்றும் நிதி நிலைமைகள் கடுமையானதாக இருக்கலாம், இதன் விளைவாக இறையாண்மைக்கும் மற்றும் பெரு நிறுவனக் கடன் வாங்குபவர்களிடையேயும் கடன் பாதிப்புகள் தோன்றக்கூடும். இத்தகைய பாதிப்புகளைத் தணிக்க செயலூக்கமுடைய தேசிய மட்டத்திலான கொள்கைகள் மற்றும் பல்துறை சார்ந்த அதீத முயற்சிகள் தேவைப்படுகிறது.

நிச்சயமற்ற மற்றும் கொந்தளிப்பான உலகப் பொருளாதாரத்தால் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு அழுத்தம் சேர்க்கப்படும்போது, கடுமையான பணப்பெறுமதி இறக்கம், வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான கிடைப்பனவில் கடுமையான பற்றாக்குறை, முன்னெப்போதும் இல்லாத உயர் பணவீக்கம், உயர் நிதி மற்றும் பணம் செலுத்தும் இருப்பு நிதி தேவைகள், பெரியளவிலான கடன் அதிகரிப்புகள் காரணமாக லெபனான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் உள்ளதைப் போலவே, உலகின், சிறிய தீவான இலங்கையின் பொருளாதாரமும் மிகவும் கொந்தளிப்பான காலகட்டத்தை கடந்து செல்ல வேண்டியுள்ளது.

1 - உலக பொருளதாரக் கண்ணோட்டம் (ஏப்ரல் 2022, IMF) நிதி கண்காணிப்பு (ஏப்ரல் 2022, IMF) உலகளாவிய நிதி நிலைத்தன்மை அறிக்கை (ஏப்ரல் 2022, IMF), கமாடிட்டி மார்க்கெட் அவுட்லுக் (ஏப்ரல் 2022, IMF) ஆகியவற்றின் அடிப்படையில் சமமான மீட்சிக்கான நிதி (2022, உலக வங்கி), உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் (ஜனவரி 2022, உலக வங்கி) மற்றும் IMF, உலக வங்கி மற்றும் உலகளாவிய இணையத்திலிருந்து பிற தரவு மற்றும் தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில்.

அட்டவணை 3.1| **உலகம் பற்றிய ஓர் பார்வை - 2021**

நாடு	2021 மொ.உ.உ. வளர்ச்சி வருடாந்த சதவீத மாற்றம்	பணவீக்கம் (சதவீதம்)	வேலையின்மை சதவீதம்	அரசிறைப் பற்றாக்குறை (மொ.உ.உ. சதவீதம்)	மொத்த படுகடன் (மொ.உ.உ. சதவீதம்)
ஆர்ஜன்டீனா	10.2	48.4	9.3	-4.6	80.6
அவுஸ்திரேலியா	4.7	2.8	5.1	-7.7	59.8
பிரேசில்	4.6	8.3	14.2	-4.4	93.0
கனடா	4.6	3.4	7.4	-4.7	112.1
சிலி	11.7	4.5	8.9	-7.5	36.3
சீனா	8.1	0.9	4.0	-6	73.3
பிரான்ஸ்	7.0	2.1	7.9	-7.0	112.3
ஜேர்மனி	2.8	3.2	3.5	-3.7	70.2
கிறீஸ்	8.3	0.6	15.0	-8.7	198.9
இந்தியா	8.9	5.5	...	-10.4	86.8
இந்தோனேசியா	3.7	1.6	6.5	-4.6	42.8
இத்தாலி	6.6	1.9	9.5	-7.2	150.9
ஜப்பான்	1.6	-0.3	2.8	-7.6	263.1
கொரியா	4.0	2.5	3.7	-0.6	49.8
மலேசியா	3.1	2.5	4.7	-5.5	69.0
மெக்சிகோ	4.8	5.7	4.1	-3.8	57.6
ரஷ்யா	4.7	6.7	4.8	0.7	17.0
சிங்கப்பூர்	7.6	2.3	2.6	-0.2	132.8
தென்னாபிரிக்கா	4.9	4.5	34.2	-6.4	69.1
ஸ்பெயின்	5.1	3.1	14.8	-7	118.7
இலங்கை	3.7	6.0	5.5	-12.2	104.6
தாய்லாந்து	1.6	1.2	1.5	-7.8	58.0
ஐக்கிய இராச்சியம்	7.4	2.6	4.5	-8	95.3
ஐக்கிய அமெரிக்கா	5.7	4.7	5.4	-10.2	132.6
வியட்நாம்	2.6	1.9	2.7	-4.2	40.2
வெனிசூலா	-1.5	1,589	...	-4.5	307.0

மூலம் : உலக பொருளாதார நோக்கு, சர்வதேச நாணய நிதியம், ஏப்ரல் 2022 அரசிறை அவதானிப்பு சர்வதேச நாணய நிதியம், ஏப்ரல் 2022 இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2021
--- புறக்கணிக்கத்தக்கது

3.2 உலக உற்பத்திகள்

2020 ஆம் ஆண்டில் தொற்றுநோயின் தாக்கத்தால் ஏற்பட்ட உலகப் பொருளாதாரத்தின் செயற்பாடுகளின் வீழ்ச்சிக்குப் பின்பு, முழு பொருளாதாரமும் வளர்ச்சி வேறுபாட்டின் மத்தியில், தொற்று நோயின் தீவிரத்தன்மை, தடுப்பு மற்றும் தடுப்பூசிக்கான கிடைப்பனவுகள், நிதி மற்றும் நாணய தூண்டுதல் செயல்முறைகளுக்கிடையில் 2021 இல் மீட்சிக்கான சிறந்த அறிகுறிகளைக் காட்டியது,

2020 இல் உலக உற்பத்தி 3.1 சதவீதம் குறிப்பிடத்தக்க சுருக்கத்திலிருந்து 2021 இல் 6.1 சதவீதத்தால் மீண்டெழுந்தது. பிரான்ஸ் (7.0 சதவீதம்), இத்தாலி (6.6 சதவீதம்) மற்றும் ஐரோப்பிய பிரதேசம் (5.3 சதவீதம்) என்பவற்றின் வலுவான வளர்ச்சியுடன் முன்னேறிய பொருளாதாரங்கள் 5.2 சதவீதமாக வளர்ந்தன. மேலும் அமெரிக்கா (5.7 சதவீதம்), ஐக்கிய இராச்சியம் (7.4 சதவீதம்) மற்றும் சிங்கப்பூர் (7.6 சதவீதம்) என்பவை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் பொருளதாரங்கள், சீனா (8.1 சதவீதம்), இந்தியா (8.9 சதவீதம்) தலைமையிலான வளந்துவரும் மற்றும் வளரும் ஆசியாவின் (7.3 சதவீதம்) வலுவான வளர்ச்சியை பதிவு செய்தது. ரஷ்யாவின் 4.7 வளர்ச்சியுடன் வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஜரோப்பா 6.7 சதவீத வளர்ச்சியை பதிவு செய்தது. பிரேசில் மற்றும் மெக்சிகோவின் முக்கிய பொருளாதாரங்கள் முறையே 4.6 சதவீதம் மற்றும் 4.8 சதவீதம் வளர்ச்சியுடன் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பிராந்தியம் 6.8 சதவீதம் வளர்ந்தன. மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா 5.7 சதவீதமும், துணை-சஹாரா ஆபிரிக்கா 4.5 சதவீதமும் வளர்ச்சியடைந்துள்ளன.

தெற்காசிய பொருளாதரன்கள் பல்வேறு அளவுகளின் மிட்சி பெற்றன, மாலைதீவுகள் (2020 இன் 33.4 சதவீத சுருக்கத்திற்குபின் 33.5 சதவீதம்) இந்தியா (8.9 சதவீதம்) பங்களாதேஷ் (5.0 சதவீதம்) பாகிஸ்தானட (5.6 சதவீதம்) இலங்கை (3.7 சதவீதம்) நேபாள் (2.7 சதவீதம்) ஆகக் காணப்பட்டபோது, பூட்டான் 3.7 சதவீதமாக சுருகியது.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2021 இல் 6.1 சதவீதத்திலிருந்து 2022 மற்றும் 2023 இல் 3.6 சதவீதமாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் முரண்பாடுகளுக்கான யூகங்கள் உக்ரைனில் மட்டுப்படுத்தப்பட்டது. 2023 இற்கு அப்பால், உலகப் பொருளாதார வளர்ச்சி நடுத்தர காலத்தில் சுமார் 3.3 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. பொதுவாக வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி நடுத்தர காலத்தில் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளுக்கும் கீழாக காணப்படும்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் உட்பட வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஐரோப்பா 2022 இல் 2.9 சதவிகிதம் சுருங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் 2023 இல் 1.3 சதவிகிதம் விரிவடையக்கூடும். ரஷ்யா, உக்ரைன் மற்றும் அண்டை நாடுகளின் பொருளாதாரங்களில் மதிப்பிடப்பட்ட சுருக்கம், உயர்ந்த எரிசக்தி விலைகள், வர்த்தகத்தின் சீர்குலைவு மற்றும் வெளிப்புற கேள்வியின் சரிவு ஆகியவற்றால் ஏற்பட்டது. மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியம் போன்றவை உலக உணவு விலையின் அதீத வெளிப்பாடுகள், இறுக்கமான நிதி நிலைமைகள், சுற்றுலாத்துறையின் இழக்கப்படும் வருமானம் மற்றும் ஐரோப்பாவிலிருந்து வரும் இரண்டாம் நிலை கேள்விகளின் அதிகரிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் 2022 இல் 4.6 சதவீதமாகவும், 2023 இல் 3.7 சதவீதமாகவும் வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், 2022 இல் எரிபொருளின் உயர் விலைகள் காரணமாக சில ஈடுசெய்யும் இலாபங்களைப் பெற முடியும் என்பதால் எண்ணெய் ஏற்றுமதியாளர்கள் 4.6 சதவீதம் வளர்ச்சியடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஆசியா 2022 இல் மற்றும் 2023 இல் முறையே 5.4 சதவீதம் மற்றும் 5.6 சதவீதம் வளரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சீனாவில் கடுமையான பூஜ்ஜிய-கொவிட் மூலோபாயத்தால் பிராந்தியத்தின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அங்கு உள்ள முக்கிய உற்பத்தி நகரங்களில் சமீபத்திய முடக்கல் நிலமைகள் கடுமையான விநியோக செயற்பாட்டில் இடையூறு ஏற்பட வழிவகுக்கிறது. எனவே, சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2022 இல் 4.4 சதவீதமாக வரையறுக்கப்பட்டுள்ளதுடன் ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற முக்கிய பொருளாதாரங்கள் முன்பு எதிர்பார்த்ததை விட மெதுவாக வளர்ந்து 2.4 சதவீதமாகவும், மேலும் 2022 இல் 8.2 சதவீதமாகவும் காணப்படும். ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சி வாய்ப்புகள் குறைவான நிதி மற்றும் நாணயக் கொள்கைகளுக்கான ஆதரவு மற்றும் தொடர்ச்சியான விநியோகச் சங்கிலி சீர்குலைவுகள் காரணமாக தடம் புரண்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் அமெரிக்கப் பொருளாதாரம் 2022 இல் 3.7 சதவிகிதம் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் பணவீக்கம் மற்றும் நாணயக் கொள்கைகளின் இறுக்கம் என்பவற்றால் பாதிக்கப்படுமென்றும் மேலும் 2022 இல் 2.5 சதவிகித மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 3.2 | **உலக மற்றும் பிராந்திய உற்பத்திகள்**

	வருடாந்த சதவீத மாற்றம்			
	உண்மை		எதிர்வு கூறல்	
	2020	2021	202	2022
உலக வெளியீடு	-3.1	6.1	3.6	3.6
முன்னேற்றமடைந்த நாடு	-4.5	5.2	3.3	2.4
ஐக்கிய அமெரிக்கா	-3.4	5.7	3.7	2.3
ஐரோப்பிய பிராந்தியம்	-6.4	5.3	2.8	2.3
ஜேர்மனி	-4.6	2.8	2.1	2.7
பிரான்ஸ்	-8.0	7.0	2.9	1.4
இத்தாலி	-9.0	6.6	2.3	1.7
ஸ்பெயின்	-10.8	5.1	4.8	3.3
ஜப்பான்	-4.5	1.6	2.4	2.3
ஐக்கிய இராச்சியம்	-9.3	7.4	3.7	1.2
கனடா	-5.2	4.6	3.9	2.8
வளர்ந்து வரும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள்	-2.0	6.8	3.8	4.4
அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	-0.8	7.3	5.4	5.6
சீனா	2.2	8.1	4.4	5.1
இந்தியா	-6.6	8.9	8.2	6.9
இந்தோனேசியா	-2.1	3.7	5.4	6.0
மலேசியா	-5.6	3.1	5.6	5.6
தாய்லாந்து	-6.2	1.6	3.3	4.3
வியட்நாம்	2.9	2.6	6.0	7.2
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியம்	-7.0	6.8	2.5	2.5
பிரேசில்	-3.9	4.6	0.8	1.4
அபிவிருத்தி அடைந்து வரும் ஐரோப்பியா	-1.8	6.7	-2.9	1.3

ர்யா	-2.7	4.7	-8.5	-2.3
மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா	-2.9	5.7	4.6	3.7
உப சகாரா ஆபிரிக்கா	-1.7	4.5	3.8	4.0
தென்னாபிரிக்கா	-6.4	4.9	1.9	1.4
இலங்கை	-3.6	3.7	த.இ.	த.இ.

மூலம் : உலக பொருளாதார நோக்கு, சர்வதேச நாணய நிதியம், ஏப்ரல் 2022
இலங்கை மத்தியா வங்கியின் ஆண்டறிக்கை 2021

3.3 பணவீக்கம்

2021 இல் பல பொருளாதாரங்களில் தொற்றுநோயால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்களை பொருட்களின் உயர் விலைகள் மற்றும் வழங்கள் கேள்விகளில் காணப்பட்ட முரண்பாடுகள் மூலமாக காணமுடிகின்றது. வளர்ந்த பொருளாதாரங்களில் நுகர்வோர் விலைகள் 2020 இல் 0.7 சதவீதத்திலிருந்து 2021 இல் 3.1 சதவீதமாக அதிகரித்தது. அமெரிக்கா மற்றும் யூரோ பிரதேசங்கள் 2021 இல் முறையே 4.7 சதவீதம் மற்றும் 2.6 சதவீத பணவீக்கத்தைப் பதிவு செய்தது. வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் களின் பணவீக்கம் 2020 இல் 5.2 சதவீதத்திலிருந்து 2021 இல் 5.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. வளர்ந்துவரும் மற்றும் வளரும் ஆசியாவில் குறைந்த பணவீக்கம் 2.2 சதவீதமாக பதிவாகியுள்ளது. இருப்பினும், வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஐரோப்பா (9.5 சதவீதம்), லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் (9.8 சதவீதம்), மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா (13.2) மற்றும் துணைசஹாரா ஆபிரிக்கா (11.0) போன்றவற்றின் பணவீக்கம் உயர்வாக இருந்தது. நிலுவைத் தொகை மற்றும்/அல்லது மறுசீரமைப்புடன் உயர் பணவீக்கம் 22.1 சதவீதமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் எரிபொருள் ஏற்றுமதி நாடுகள் மற்றும் நிகர கடன வைத்துள்ள பொருளாதாரங்களில் பணவீக்கம் 12.1 சதவீதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2022 இல் எரிபொருள், உலோகங்கள் மற்றும் உணவுப் பொருட்களின் விலைகளில், மோதலால் ஏற்பட்ட தூண்டுதல் காரணமாக உலகளாவிய பணவீக்கம் ஏற்கனவே துரிதப்படத் தொடங்கியுள்ளது. முரண்பாடான சூழ்நிலை காரணமாக எண்ணெய் மற்றும் எரிவாயு வழங்கல் பற்றாக்குறையினால் எரிசக்தி விலைகள் பாதிக்கப்படுகின்றன. அதேசமயம் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, பாதகமான வானிலை, எண்ணெய் மற்றும் எரிவாயு விலை உயர்வுகள் போன்றவற்றால் உரங்களின் விலை உயர்வானது அறுவடைகளுக்கு ஏற்பட்ட சேதத்தால் பிரதிபலிக்கிறது. தேங்கிக்கிடக்கும் கேள்வி, தொழிற்சாலை மூடல்கள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்துச் சேவைகளுக்கு இடையூறுகள் மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகள் போன்ற எண்ணற்ற காரணிகளால் ஒட்டுமொத்த கேள்வி வழங்களில் காணப்படும் சமநிலையற்ற தன்மையினால் உயர் பணவீக்கம் வெளிப்படுகிறது.

பணவீக்கம் 40 ஆண்டுகளில் மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளதுடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் உட்பட பெரும்பாலான நாடுகளில் பணவீக்கம் கவலைக்குரியதாகவே உள்ளது. 2022 இல் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் பணவீக்கம் 5.7 சதவீதமாக அமெரிக்காவில் 7.7 சதவீதம், யூரோ பகுதியில் 5.3 சதவீதம், ஐக்கிய இராச்சியத்தில் 7.4 சதவீதமாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. ரஷ்யா, உக்ரைன் மற்றும் அண்டை நாடுகளின் உயர்ந்த பணவீக்கத்துடனும் வளரும் மற்றும் வளர்ந்து வரும் ஐரோப்பாவில் 27.1 சதவிகிதமாக பணவீக்கம் உயருமென்றும் 2022 இல் வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் களின் பணவீக்கம் 8.7 சதவீதமாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வளரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் ஆசியாவின் பணவீக்கம் 3.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா மற்றும் சஹாரா கீழமை ஆப்பிரிக்காவில் இருந்து பணவீக்க எதிர்பார்ப்புகள் முறையே 11.2 சதவீதம், 12.8 சதவீதம் மற்றும் 12.2 சதவீதமாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. பணவீக்க அழுத்தங்கள் பெரும்பாலும் சமமற்று காணப்பட்டாலும் 2023 இல் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 3.3 | **சராசரி நுகர்வோர் விலையில் பண வீக்கம்**

வருடாந்த சதவீத மாற்றம்

	உண்மை		**எதிர்வு கூறல்**	
	2020	**2021**	**2022**	**2023**
முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்	0.7	3.1	5.7	2.5
ஐக்கிய அமெரிக்கா	1.2	4.7	7.7	2.9
ஐரோப்பிய பிராந்தியம்	0.3	2.6	5.3	2.3
ஜேர்மனி	0.4	3.2	5.5	2.9
பிரான்ஸ்	0.5	2.1	4.1	1.8
இத்தாலி	-0.1	1.9	5.3	2.5
ஸ்பெயின்	-0.3	3.1	5.3	1.3

ஜப்பான்	0.0	0.3	1.0	0.8
ஐக்கிய இராச்சியம்	0.9	2.6	7.4	5.3
கனடா	0.7	3.4	5.6	2.4
வளர்ந்து வரும் சந்தை மற்றும் மத்திய அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள்				
அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	3.1	2.2	3.5	2.9
சீனா	2.4	0.9	2.1	1.8
இந்தியா	6.2	5.5	6.1	4.8
இந்தோனேசியா	2.0	1.6	3.3	3.3
மலேசியா	-1.1	2.5	3.0	2.4
தாய்லாந்து	-0.8	1.2	3.5	2.8
வியட்நாம்	3.2	1.9	3.8	3.2
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியம்	6.4	9.8	11.2	8.0
பிரேசில்	3.2	8.3	8.2	5.1
அபிவருத்தி அடைந்து வரும் ஐரோப்பியா	5.3	9.5	27.1	18.1
ர்யா	3.4	6.7	21.3	14.3
மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியா	10.6	13.2	12.8	10.5
உப சகாரா ஆபிரிக்கா	10.2	11.0	12.2	9.6
தென்னாபிரிக்கா	3.3	4.5	5.7	4.6
இலங்கை	4.6	6.0	17.6	12.9


மூலம் : உலக பொருளாதார நோக்கு, சர்வதேச நாணய நிதியம், ஏப்பிரல் 2022
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2021

3.4 வட்டி வீதங்கள்

2020 மற்றும் 2021 இன் முற்பகுதியில் பல நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட கணிசமான பணமதிப்பிறக்க நடவடிக்கைகளிலிருந்து நகர்ந்து, அதிக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கடுமையான நாணயக் கொள்கைக்கு மாறுகிறதான செயல்முறையானது பொருளாதாரங்கள் முழுவதும் வட்டி விகிதங்களை அதிகரிக்க வழிவகுத்தது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கப் பணவீக்கம் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்ததால், 2022 மார்ச்சில் அமெரிக்காவின் மத்திய இருப்பு அதன் மத்திய நிதி இலக்கு வரம்பை 25 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்தது. நெருங்கிய காலத்தில் கொள்கை விகித உயர்வுகளுடன் மேலும் நாணயக் கொள்கை இறுக்கமடைவதை மத்திய ஒதுக்கீடு சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னேறிய பொருளாதாரங்களில் வட்டி வீதங்கள் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவைத் தவிர்த்து பல வளரும் சந்தைகள மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களும் பணவீக்க அழுத்தங்களுக்கு எதிராக நாணயக் கொள்கை நிலைப்பாட்டை இறுக்கியுள்ளன. 2022 ஜனவரியில் குறைந்த பணவீக்கம் காரணமாக கொள்கை வீதங்கள் குறைத்துள்ளது.

வரைபு 3.1 | **ஆறுமாத காலத்தில் LIBOR இன் மாத அசைவு**



மூலம்: 28 மே 2021 அன்று www.moneycafe.com இலிருந்து பெறப்பட்டது

3.5 அரசிறை நிலைமை

தொற்றுநோய்க்கான பிரதிபலிப்பாக இணக்கமான நாணயக் கொள்கைகளுடன் செயல்படுத்தப்பட்ட நிதிக் கொள்கைகள், உலகின் பல பகுதிகளில் நீடித்த மந்தநிலைகளைத் தடுத்தன, அதே நேரத்தில் அதிக பற்றாக்குறைகள் மற்றும் திரட்டப்பட்ட கடன் அளவுகளுக்கு வழிவகுத்தன. 2021 ஆம் ஆண்டில், நிதி தளத்தை அதிகம் கட்டுப்படுத்தக் கூடிய உலகின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து வெளிப்படும் உயர் பணவீக்க அழுத்தங்களுடன் நிதிக் கொள்கைகள் விரிவாக்கம் எளிதாக்கப்பட்டன. வட்டி விகிதங்களின் அதிகரிப்புடன், அதிக கடன் அளவுகள் அதிகரித்து, பல வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களுக்கு பெரும் அழுத்தத்தைச் சேர்த்தன. மேலும் நிதிப்பற்றாக்குறை மற்றும் கடன் அளவுகள் என்பன நாடு குழுக்களிடையே ஒரு பெரிய ஏற்றத்தாழ்வை பிரதிநிதித்துவப் படுத்துவதுடன், இது வேறுபட்ட பொருளாதார மீட்சிகளையும் பிரதிபலிக்கிறது.

ரஷ்யா-உக்ரைன் மோதல்கள், கூடிய பணவீக்கம், உயர்த்தப்பட்ட வட்டி வீதங்கள், மெதுவான பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர்ந்த கடன் மற்றும் கடன் வாங்கும் செலவுகள் ஆகியவற்றால் 2022 முதல் நிதிக் நிலைமை மங்கலாக காணப்படுகிறது. மோதலின் வெளிப்பாடு மற்றும் அதன் பொருளாதார இடையூறுகள், தொற்றுநோயின் நிலைமை மற்றும் மீட்சியின் உறுதித் தன்மை போன்றவற்றிற்கேற்ப நாடுகள் நிதிக் கொள்கைகளை வடிவமைக்க வேண்டியிருந்தது.

3.5.1 நிதிப் பற்றாக்குறைகள்

2021 இல் பொருளாதார மீட்சியுடன், உலகளாவிய சராசரி நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் 2020 இல் 9.9 சதவீதத்திலிருந்து 2021 இல் 6.4 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும் இது 2022 இல் 4.9 சதவீதமாகவும், 2023 இல் 4.0 சதவீதமாகவும் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே முறையில், அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் ஒட்டுமொத்த பற்றாக்குறை 2020 இல் 10.5 சதவீதமாக இருந்த சாதனை அளவிலிருந்து 2021 இல் 7.3 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும் இது 2022 இல் 4.3 சதவீதமாகவும், 2023 இல் 2.9 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் கொள்கைகள், கொவிட் 19 இற்கான ஆதரவு நடவடிக்கைகளிலிருந்து பொது முதலீட்டை அதிகரிப்பது போன்ற கட்டமைப்பு செயற்பாடுகளை உயர்த்துவதற்காக மாறியுள்ளன. ஜப்பானின் நிதி தொகுப்பு தொற்றுநோய் நிவாரணம் வழங்கல், பரந்த சமூக செலவு மற்றும் உள்கட்டமைப்பு முதலீடாக அதிகரிக்கபட்ட அதே சமயம் அமெரிக்காவின் உள்கட்டமைப்பு செலவுகள் போக்குவரத்து, பயன்பாடுகள், அகன்ற அலைவரிசை (broadband), சுற்றுச்சூழல் தீர்வு மற்றும் அதன் உத்வேகம் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

எவ்வாறாயினும், சமயோசிதமான கொள்கைகள் காரணமாக நுஆனுநு களின் நிதிப் பற்றாக்குறை 2020 இல் 9.3 சதவீதத்திலிருந்து 2021 இல் 5.3 சதவீதமாக குறிப்பிடத்தக்கவாறு குறைவடைந்தது. பிரேசில் மற்றும் சவுதி அரேபியா 2021 இல் பற்றாக்குறையில் மிகப்பெரிய குறைப்புகளை பதிவு செய்துள்ளன. பிரேசில் (13.3 சதவிகிதத்திலிருந்து 4.4 சதவிகிதம்) மற்றும் சவுதி அரேபியா (2.4 சதவிகிதம் முதல் 11.3 சதவிகிதம்) 2020 உடன் ஒப்பிடும்போது 2021 இல் பற்றாக்குறையில் மிகப்பெரிய குறைப்பை பதிவுசெய்தது. சீனாவின் பற்றாக்குறை ஒட்டுமொத்த நிதி இறுக்கத்துடன் 10.7 சதவீதத்திலிருந்து 6.0 சதவீதமாகக் குறைந்துள்ள போது பிலிப்பைன்ஸ் (5.7 சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதமாக) மற்றும் தாய்லாந்து (4.7 சதவீதத்தில் இருந்து 7.8 சதவீதமாக) நாடுகளின் பற்றாக்குறை விரிவடைந்ததை பதிவுசெய்தது. தெற்காசிய நாடுகளுக்குள், நிதிப் பற்றாக்குறையின் குறைப்பானது இந்தியாவில் இருந்து (12.8 சதவீதத்தில் இருந்து 10.4 சதவீதம்), பாகிஸ்தான் (7.0 சதவீதத்தில் இருந்து 6.1 சதவீதம்), வங்கதேசம் (5.6 சதவீதத்தில் இருந்து 4.2 சதவீதம்), நேபாளம் (5.2 சதவீதத்தில் இருந்து 5.3 சதவீதம் காணப்படுமென பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் இலங்கையில் (11.1 சதவீதத்திலிருந்து 12.2 சதவீதமாக) விரிவடைந்துள்ளது. வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் நிதிப் பற்றாக்குறை 2022இல் 5.7 சதவீதமாக சற்று அதிகரித்து 2023 இல் 5.5 சதவீதமாக சிறிதளவு குறையுமெனவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 3.4 | **அரசின் அரசிறை மிகுதி : மொத்த மிகுதிகள்**

(மொ. உ. உற்பத்தி %)

	உண்மை		எதிர்வு கூறல்	
	2020	2021	2022	2023
உலகம்	-9.9	-6.4	-4.9	-4.0
முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்	-10.5	-7.3	-4.3	-2.9
ஐக்கிய அமெரிக்கா	-14.5	-10.2	-4.8	-4.0
ஐரொப்பிய பிராந்தியம்	-7.2	-5.5	-4.3	-2.5
ஜேர்மனி	-4.3	-3.7	-3.3	-0.7
பிரான்ஸ்	-9.1	-7.0	-5.6	-3.8
இத்தாலி	-9.6	-7.2	-6.0	-3.9
ஸ்பெயன்	-11.0	-7.0	-5.3	-4.3
ஜப்பான்	-9.0	-7.6	-7.8	-3.5
ஐக்கிய இராச்சியம்	-12.8	-8.0	-4.3	-2.3
கனடா	-11.4	-4.7	-2.2	-0.8
வளர்ந்து வரும் சந்தைப் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள்	-9.3	-5.3	-5.7	-5.5
வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	-10.4	-6.6	-7.7	-6.9
சீனா	-10.7	-6.0	-7.7	-7.1
இந்தியா	-12.8	-10.4	-9.9	-9.1
இந்தோனேசியா	-6.1	-4.6	-4.0	-2.9

மலேசியா	-4.6	-5.5	-4.9	-3.3
தாய்லாந்து	-4.7	-7.8	-6.1	-3.0
வியட்நாம்	-3.9	-4.2	-5.0	-5.1
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியா	-8.8	-4.5	-4.7	-4.2
பிரேசில்	-13.3	-4.4	-7.6	-7.4
அபிவருத்தி அடைந்து வரும் ஐரோப்பியா	-5.6	-1.9	-4.6	-4.8
ர்'யா	-4.0	0.7	-4.0	-5.3
மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்	-8.0	-3.1	1.5	0.1
உப சகாரா ஆபிரிக்கா	-5.6	-5.5	-5.2	-4.4
தென்னாபிரிக்கா	-9.7	-6.4	-5.8	-6.1
இலங்கை	-12.8	-12.6	-9.4	-10.5

மூலம் : அரசிறை அவதானிப்பு , சர்வதேச நாணய நிதியம், ஏப்பிரல் 2022
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2020

3.5.2 அரச படுகடன்

உலக கடன் இருப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020 இல் 99.2 சதவீதமாக காணப்பட்டு 2021 இல் 97 சதவீதமாகவும், 2022 இல் 94.1 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அதிகரிப்பு 2022 இல் 94.4 சதவீதமாகவும், மேலும் 2023இல் 94.1 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் பொதுக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2020 இல் 123.2 சதவீதத்திலிருந்து 2021 இல் 119.8 சதவீதமாகக் குறைந்துள்ளது, இது நடுத்தர காலத்தில் 2022 இல் 115.5 சதவீதமாகவும் 2023 இல் 113.7 சதவீதமாகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் அரசாங்கக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 2020இல் 64.9 சதவீதமாக இருந்து 2021இல் 66.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. நிதிப் பற்றாக்குறையின் திட்டமிடப்பட்ட அதிகரிப்புக்கு ஏற்ப இந்த விகிதம் 2022இல் 67.4 சதவீதமாகவும் 2023இல் 69.8 சதவீதமாகவும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், நடுத்தர கால நிதித் திட்டங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் மோதல்களின் விளைவுகள் மற்றும் உயர் பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள் காரணமாக அதிக அளவில் நிச்சயமற்ற தன்மைக்கு உட்படும்.

அட்டவணை 3.5 | அரசாங்க மொத்த படுகடன்

மொ.உ.உ. %

	உண்மை		எதிர்வு கூறல்	
	2020	**2021**	**2022**	**2023**
உலகம்	99.2	97.0	94.4	94.1
முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள்	123.2	119.8	115.5	113.7
ஐக்கிய அமெரிக்கா	134.2	132.6	125.6	123.7
ஐரோப்பிய பிராந்தியம்	97.3	96.0	95.2	93.4
ஜேர்மனி	68.7	70.2	70.9	67.7
பிரான்ஸ்	115.2	112.3	112.6	112.9
இத்தாலி	155.3	150.9	150.6	148.7
ஸ்பெயின்	120.0	118.7	116.4	115.9
ஜப்பான்	259.0	263.1	262.5	258.3
ஐக்கிய இராச்சியம்	102.6	95.3	87.8	82.7
கனடா	117.8	112.1	101.8	98.5
வளர்ந்து வரும் சந்தைப் அபிவிருத்தியடையும் பொருளாதாரங்கள்	64.9	66.1	67.4	69.8
வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா	68.9	72.9	76.5	79.5
சீனா	68.1	73.3	77.8	81.8
இந்தியா	90.1	86.8	86.9	86.6
இந்தோனேஷியா	39.8	42.8	42.7	42.7
மலேசியா	67.8	69.0	69.2	68.9
தாய்லாந்து	49.8	58.0	62.7	61.4
வியட்நாம்	41.7	40.2	41.3	42.0
இலத்தீன் அமெரிக்கா மற்றும் கராபீயா	77.8	72.4	71.7	71.9


பிரேசில்	98.7	93.0	91.9	92.8
வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் ஐரோப்பா	37.9	36.3	37.1	38.6
ர்'யா	19.2	17.0	16.8	18.9
மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்	53.8	52.6	43.1	42.9
உப சகாரா ஆபிரிக்கா	49.9	51.1	50.3	48.8
தென்னாபிரிக்கா	69.4	69.1	70.2	73.4
இலங்கை	100.6	104.6	109.0	107.5

மூலம் : அரசிறை அவதானிப்பு , சர்வதேச நாணய நிதியம், ஏப்பிரல் 2022, அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

3.6 நாணய அசைவுகள்

அமெரிக்காவில் பணவீக்கத்தை நிர்வகிக்க மேற்கொண்ட நாணய இறுக்கத்துடன், பெரும்பாலான நாடுகளில் அமெரிக்க டொலருக்கு எதிராக மாற்று விகிதங்கள் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றன. இந்த அறிக்கை தொகுக்கப்படும் நேரத்தில் நிதி குறிக்காட்டிகள் மிகவும் தீவிரமாக விலை மாற்றங்கள் செய்யத் தொடங்கினால் இந்த ஆபத்து அதிகரிக்கும். தற்போதைய மிகவும் நிச்சயமற்ற உலகளாவிய சூழலில் மாற்று விகிதத்தில் நெகிழ்வுத்தன்மை தேவைப்படுகிறது.

வரைபு 3.2 | ஐ.அ.டொலருக்கான மாற்று விகிதம்: 2007 - 2022 ஏப்ரல்



மூலம் : *x-rates.com*

அட்டவணை 3.6 | உலக வர்த்தக அளவுகள்

வருட சதவித மாற்றம்

	சராசரி 2004 / 2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	2023
பொருட்கள் சேவைகள் வர்த்தகம்											
உலக வர்த்தக அளவு, ஏற்றுமதிகளின் அளவு	**5.4**	**3.8**	**3.0**	**2.3**	**5.6**	**4.0**	**0.9**	**-7.9**	**10.1**	**5.0**	**4.4**
மேம்பட்ட பொருளாதாரம்	4.5	3.8	3.8	2.1	4.9	3.6	1.3	-9.1	8.6	5.0	4.7
வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள்	7.4	3.4	2.0	2.8	6.5	4.1	0.4	-4.8	12.3	4.1	3.6
இறக்குமதிகளின் பெறுமதி											
மேம்பட்ட பொருளாதாரம்	3.7	3.9	4.8	2.5	4.8	3.8	2.1	-8.7	9.5	6.1	4.5
வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள்	9.1	4.3	-0.6	1.7	7.5	5.1	-1.1	-7.9	11.8	3.9	4.8

மூலம் : உலக பொருளாதார நோக்கு, ஏப்ரல் 2022

3.7 உலக வர்த்தகம்

2020 இல் உலக வர்த்தகம் 7.9 சதவீதத்தால் சுருங்குவதற்கு மாறாக, 2021 இல் 10.1 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்துள்ளது. இது வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் ஏற்றுமதி 12.3 சதவீதத்தாலும் மற்றும் வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் இறக்குமதி 11.8 சதவீதத்தாலும் அதிகரித்ததன் பிரதிபலிப்பாகும். அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் வளரும் சந்தைகள் மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரங்களை விட குறைந்த விகிதத்தில் இருந்தாலும், முறையே 8.6 சதவீதம் மற்றும் 9.5 சதவீதமாக அதிகரித்துள்ளன.

உலகின் வர்த்தகத்தின் போக்குகள், குறிப்பாக எரிபொருள் மற்றும் உணவுகள், மோதல் தொடர்பான குறுக்கீடுகளால், உற்பத்திகள், தடைகள் மற்றும் எல்லை தாண்டிய கட்டண முறைகளிளான பலவீனமான அணுகு முறைகளில் சீர்குலைவை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, உலக வர்த்தக ஓட்டங்கள் 2022 இல் 5.0 சதவீதமாகவும், 2023 இல் 4.4 சதவிதமாகவும் குறைவடைவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

3.8 உலக பொருட் சந்தை

மோதலின் தூண்டுதலால் ஏற்பட்ட வழங்களின் மீதான தடைகளால், பொருட்களின் விலைகள் ஏற்கனவே அதிகரித்துள்ளன, மற்றும் நடுத்தர காலத்தில் விலைகள் 2021 இணைவிடவும் 2022 இல் கணிசமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

எரிசக்தி மற்றும் எரிசக்தி அல்லாதவைகளின் விலைகள் 2022 இல் 50 சதவீதம் மற்றும் 20 சதவிதமாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது மற்றும் 2023 இல் ஓரளவு இயல்பு நிலைக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பொருட்களின் விலைகளின் போக்கு மோதலின் காலம், பொருளாதாரத் தடைகளின் தீவிரம் மற்றும் சீனாவின் கொவிட்-19 இன் பரவல் ஆகியவற்றின் அடிப்படையில் காணப்படும்.

அட்டவணை 3.7 | **விலைக்குறியீடுகள்** (2010=100)


	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
எரிபொருள்	100.00	128.69	127.57	127.41	118.30	64.79	55.05	68.09	87.01	75.96	52.68	95.38
எரிபொருள் அல்லாத	100.00	119.56	109.51	101.29	96.47	81.62	79.37	83.75	85.22	81.68	84.36	111.99
விவசாயம்	100.00	121.52	114.29	105.68	101.88	87.86	87.46	86.98	86.69	83.31	87.52	108.70
குடிபானங்கள்	100.00	115.97	92.63	83.30	101.77	93.95	91.29	83.11	79.09	76.13	80.38	93.49
உணவு	100.00	122.47	124.15	114.59	106.02	88.46	89.63	90.20	90.45	86.98	93.12	121.85
எண்ணெய் மற்றும் உணவுகள்	100.00	120.54	125.35	114.34	106.35	84.36	88.27	87.57	85.01	77.46	89.79	127.10
தானியங்கள்	100.00	138.19	141.34	128.25	104.08	87.06	80.69	80.55	88.76	88.96	95.35	123.82
ஏனைய உணவுகள்	100.00	110.77	107.02	102.56	107.33	95.13	99.50	102.41	99.13	97.71	95.49	113.14
மூலப் பொருட்கள்	100.00	122.04	101.34	95.41	91.91	83.29	80.25	81.11	81.43	78.05	77.56	84.51
உரங்கள்	100.00	137.62	141.06	114.36	101.47	98.40	77.71	74.26	82.50	81.38	73.20	132.15
உலோகம் மற்றும் கனிமயங்கள்	100.00	113.49	96.13	90.81	84.79	66.94	62.97	78.20	82.51	78.36	79.15	116.44
பெறுமதியான உலோகங்கள்	100.00	136.27	138.46	115.09	101.12	90.64	97.45	97.84	97.17	105.44	133.54	140.17

மூலம் : உலக பொருள் நோக்கு, ஏப்ரல் 2022

3.8.1 எரி பொருள் விலைகள்

அனைத்து எரிபொருட்களிலும் பரந்த அடிப்படையில் ஏற்பட்ட விலை அதிகரிப்புடன் எண்ணெய் விலையும் ஏற்கனவே தீவிரமாக உயர்ந்துள்ளது. மார்ச் 2022 இல் Brent கச்சா எண்ணெய் சராசரியாக ஐ.அ.டொ. 116/bbl ஆகும். இது டிசம்பர் 2021 உடன் ஒப்பிடும்போது 55 சதவீதம் அதிகரித்து ஐ.அ.டொ. 74/bbl ஆக 10-ஆண்டுகளின் அதிகபட்ச சதவீதமாகவும் காணப்படுகின்றது. அமெரிக்கா ஐ.அ.டொ. மற்றும் பிற சர்வதேச எரிபொருள் நிறுவன (IEA) உறுப்பினர்களின் கணிசமான எண்ணெய் உற்பத்திகள் பற்றிய அறிவிப்புகளைத் தொடர்ந்தும் மற்றும் சீனாவின் பல நகரங்களில கொவிட் - 19 தொடர்பான முடக்கல்கலினாலும் பலவீனமான கேள்வி காரணமாகவும் ஏப்ரல் மாதத்தில் விலைகள் ஐ.அ.டொ. 106/bbl ஆக குறைக்கப்பட்டனது. Brent கச்சா எண்ணெயின் விலை 2022 ஆம் ஆண்டில் சராசரியாக ஸ்டேலிங் பவுன் 106.83/bbl ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது 2021 ஆம் ஆண்டிலிருந்து 42 சதவீதமாக அதிகரித்து, 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு எப்போதும் இல்லாதவாறு அதிகரித்து காணப்படுகின்றது.

வரைபு 3.3 | **மசகு எண்ணெய் விலைகள் 2015 - ஏப்ரல் 2022**



இயற்கை எரிவாயுவின் விலையும் கடந்த சில மாதங்களில் அதிகரித்தமை பதிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இயற்கை எரிவாயுவின் விலை மார்ச் 2022 இல் ஐ.அ.டொலர் 4.88/mmbtu ஆகவும், 2021 இல் டிசம்பரில் ஐ.அ.டொலர் 3.73/mmbtu இல் இருந்து ஏப்ரல் 2022 இல் ஐ.அ.டொலர் 6.53/mmbtu ஆகவும் அதிகரித்துள்ளது, இது அமெரிகாவின் திரவ இயற்கை

எரிவாயு ஏற்றுமதிக்கான அதிகரித்த தேவையை ஓரளவு பிரதிபலிக்கிறது. ரஷ்யாவில் இருந்தான இறக்குமதிகள் தடைபடும் என்ற அச்சத்துடன் மார்ச் மாதத்தில் ஐரோப்பாவில் விலைகள் எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்ந்தன. டிசம்பர் 2021 இல் ஐ.அ.டொலர் 38.03/ mmbtu இருந்து மார்ச் 2022 இல் ஐ.அ.டொலர் 42.39/ mmbtu ஆக விலைகள் அதிகரித்தன. இருப்பினும், ஏப்ரல் 2022 இல் விலைகள் 32.20 ஆகக் வீழ்ச்சியடைந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்த எரிவாயு இறக்குமதியில் ரஷ்யா 45 சதவீதத்தையும், உலகளாவிய எண்ணெய் இறக்குமதியில் 10 சதவீதத்தையும் கொண்டுள்ளது.

மின்சார உற்பத்தியில் இயற்கை எரிவாயுவுக்கு மாற்றாக தேவை அதிகரித்துள்ள நிலையில் நிலக்கரி விலையும் மார்ச் மாதத்தில் எப்போதுமில்லாதவாறு உச்சத்தை எட்டியுள்ளது. தென்னாப்பிரிக்க நிலக்கரி விலை மார்ச் 2022 இல் ஐ.அ.டொ. 294.32 மெ.டொ. ஆகவும், 2021 டிசம்பரில் 142.50 ஆகவும், ஏப்ரல் 2022 இல் 302.00 மெற்றிக் டொன்னாகவும் ஆகவும் அதிகரித்துள்ளது.

3.8.2 விவசாய உற்பத்தி விலைகள்

ரஷ்யா மற்றும் உக்ரைன் உலக கோதுமையில் கால் பங்கையும், சோளத்தில் ஏழில் ஒரு பகுதியையும், சூரியகாந்தி எண்ணெய் ஏற்றுமதியில் முக்கால் பங்கையும் கொண்டுள்ளது. விலை 30 சதவீதம் உயர்ந்து டிசம்பர் 2021 இல் ஐ.அ.டொலர் 376.81 மெற்றிக் டொன்னுடன் ஒப்பிடும்போது, மார்ச் 2022 இல் ஐ.அ.டொலர் 486.3 ஆவ ஆக காணப்பட்டதால் கோதுமை விலை கடும் உயர்வை பதிவு செய்துள்ளது. 2022 இல் ஏப்ரல் மாதத்தில் விலைகள் மேலும் ஐ.அ.டொ. 495.28 மெற்றிக் டொன்னாக அதிகரித்துள்ளன. தென் அமெரிக்காவில் பெரும்பாலான சமையல் எண்ணெய் விலைகள் உற்பத்திப் பற்றாக்குறை மற்றும் உக்ரைனின் சூரியகாந்தி விதை எண்ணெய் ஏற்றுமதியில் ஏற்பட்ட இடையூறுகளால் கூர்மையான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளன. பாம் எண்ணெய் விலை 2021 டிசம்பரில் ஐ.அ.டொலர் 1270.29 மெற்றிக் டொன்லிருந்து 2022 ஏப்ரலில் ஐ.அ.டொலர் 1682.74 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது, மேலும் சோயாபீன்ஸ் எண்ணெய் விலை 2021 டிசம்பரில் ஐ.அ.டொலர் 1411.21 மெற்றிக் தொன்னிலிருந்து 2022 ஏப்ரலில் ஐ.அ.டொலர் 1947.51 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. அரிசி விலையும் டிசம்பர் 2021 இல் ஐ.அ.டொலர் 400 மெற்றிக் தொன்னாகவிருந்து 2022 ஏப்ரலில் ஐ.அ.டொலர் 431 மெற்றிக் டொன்னாக அதிகரித்தது.

விவசாயப் பொருட்களின் விலைகள் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது - குறிப்பாக கோதுமை மற்றும் சோளம் குறைந்த அளவிற்கு அதிகரிக்கும். உரத் தட்டுப்பாட்டால் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம். ரஷ்யாவும் பெலாரஸும் உலகளாவிய உர ஏற்றுமதியில் குறிப்பாக பொட்டாசிக் உரங்கள் (உலகளாவிய வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்கு) மற்றும் நைட்ரஜன் உரங்கள் என்பவற்றை ஐந்தில் ஒரு பங்காகக் கொண்டுள்ளன, உரத்தின் விலை கடந்த 12 மாதங்களில் சுமார் 80 சதவீதம் அதிகரித்துள்ளது. 2021 இன் முதல் காலாண்டில் உரங்களின் விலைகள் கடுமையாக அதிகரித்தன. இது இயற்கை எரிவாயு மற்றும் நிலக்கரி விலைகளின் உயர்வை ஓரளவு பிரதிபலிக்கிறது, ஏனெனில் இவை இரண்டும் உர உற்பத்தியில் முக்கிய உள்ளீடுகளாகும். இது பிரேசில், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற பெரிய பொருளாதாரங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உரங்களைச் சார்ந்துள்ள குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் எதிர்கால அறுவடைகளை பாதிக்கலாம்.

3.8.3 உலோக விலைகள்

2022 இன் முதல் காலாண்டில் உலோகங்கள் மற்றும் கனிமங்களின் குறியீடு 13 சதவீததால் உயர்ந்தது, இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 24 சதவீதம் அதிகமாகும். காலாண்டில் நிக்கல் விலை 35 சதவீத்தால் உயர்ந்துள்ளது. அலுமினியம் மற்றும் இரும்புத் தாது விலைகளும் பெரிய அதிகரிப்பைக் கண்டன, இது விநியோகத்தில் ரஷ்யாவின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது.

3.9 இலங்கைக்குள் முன்நோக்கிய பார்வை

இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் பொருளாதார ரீதியாக மிகவும் சவாலான காலகட்டமென்றை ஒன்றைக் கடப்பதினால், உலக அரங்கின் நிச்சயமற்ற தன்மை மற்றும் கணிக்கப்பட்ட முடியாத நிலைமையானது நிலையான மற்றும் பலவீனமான பொருளாதார விடயங்களை மேலும் பாதிக்கும்.

புவிசார்-அரசியல் பதட்டங்களின் தாக்கம் காரணமாக, பொருட்களின் விலை ஏற்றத்துடன் உலகின் பெரும்பாலான நாடுகளில் தொடர்ந்தும் பதட்டமான நிலைமை எதிர்பார்க்கப்படுகிறது. உலக சந்தையில் வழங்கல் பற்றாக்குறையுடன் இலங்கையின் உள்நாட்டு விலைகள் தொடர்ந்தும் பாதிக்கப்படும். எரிபொருள், எல்.பி எரிவாயு மற்றும் உரம் உள்ளிட்ட முக்கிய பொருட்களின் உலகளாவிய விலை அதிகரிப்பால் இலங்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், உக்ரைன், ரஷ்யாவுடனான நேரடி வர்த்தக தொடர்புகள் காரணமாக உணவு மற்றும் உலோகங்களின் விலைகள் பாதிக்கப்படுகின்றன. இத்துடன், கல்நார், இரும்பு மற்றும் உருக்கு இரும்பு, செம்பு மற்றும் பொட்டாசியம் குளோரைட் போன்றனவும் அரைவாசி முடிக்கப்பட்ட பொருட்களும் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அதற்கேற்ப, உள்நாட்டு சந்தையில் அத்தகைய பொருட்களின் விலைகள் அதிகரிப்பது விநியோக பற்றாக்குறை மற்றும் இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சிக்கு காரணமாகின்றது.

ஐரோப்பா மற்றும் ரஷ்யப் பிராந்தியத்தில் நிலவும் புவிசார்-அரசியல் பதட்டங்கள் மற்றும் அதன் உலகளாவிய பரவல்கள் என்பவற்றால் இலங்கையின் ஏற்றுமதிகள் பாதிக்கப்படலாம். மேலும், இலங்கையில் இருந்து ஆடைகள், தேயிலை மசாலா மற்றும் கடல் உணவுகளின் ஏற்றுமதியில் ஐரோப்பா குறிப்பிடத்தக்க ஏற்றுமதியாளராக உள்ளது. ஐரோப்பியர்களின் வாங்கும் சக்தி குறைவதால், இலங்கை ஏற்றுமதிக்கான தேவையும் குறையலாம்.

வெளித் துறையின் பாதகமான தாக்கங்களைத் தவிர, தரமதிப்பீட்டு, குறைவு வெளிநாட்டு நிதிச் சந்தைகளுக்கான இலங்கையின் மட்டுப்படுத்தப்பட்ட அணுகல், முக்கிய பொருளாதாரங்களில் நாணயக் கொள்கை ஆதரவை இறுக்குவது போன்ற உலகின் பாதகமான விடயங்களாள் மேலும் கட்டுப்படுத்தப்படும்.

இலங்கை எதிர்கொள்ளும் பாரிய பொருளாதார சவால்களைப் போலவே, பலவீனமான உலகப் பொருளாதார நிலைமைகளும் நாட்டை தொடர்ந்து பாதிக்கும். எவ்வாறாயினும், தெளிவான கட்டமைப்பு சீர்திருத்தங்களுடன், வெளியில் இருந்து எழும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இலங்கை பொருளாதாரத்தைக் காலப்போக்கில் ஸ்திரப்படுத்த முடியும்.

04

அரசாங்க வருமானம்

4.1. மேன்நோக்கு

2021 இல், அரசாங்க வருமானச் சேகரிப்பானது, முன்னெப்போதுமில்லாத வகையில் பொருளாதாரத்தில் கொவிட் - 19 இன் தாக்கத்தாலும், 2019 இன் பிற்பகுதியிலான அசாதாரண வரி நீக்கங்களுடன் சேர்த்து சவாலுக்குட்படுத்தப்பட்டது. அரசாங்க வருமானமானது 2020 இலும் 2021 இலும் பெயரளவிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கணக்கிடப்பட்ட வகையிலும் தீவிரமாகக் குறைவடைந்தது. 2021 இல் திரட்டப்பட்ட வருமானம் 2015 இல் சேகரிக்கப்பட்ட வருமானத்தைப் போல் ஒரே விதமானதாகக் காணப்பட்டது. இதற்குக் காரணமாக அமைந்தவை வரிகளுக்கான தளத்தில் ஏற்பட்ட குறைப்புகளும், 2019 இன் பிற்பகுதியிலான கணிசமான வரி வெட்டுகளும், பெருந்தொற்றால் ஏற்படுத்தப்பட்ட காரணிகளுமாகும். பெயரளவு நியதிகளில் கூறுவதாயின், மானியங்கள் உள்ளிட்ட மொத்த வருமானம், 2020 இல் காணப்பட்ட ரூபா 1,373.3 பில்லியனிலிருந்து, 2021 இல் 6.6 சதவீதத்தால் ரூபா 1,463.8 பில்லியனுக்கு மிதமான அளவில் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்திலான மொத்த வருமானம் 2021 இல் 8.7 சதவீதமாக ஆகக்குறைந்த அளவுக்குத் தீவிரமாக வீழ்ச்சியடைந்தது. இத வளர்ந்து வரும் ஆசிய நாடுகளிலுள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24.5 சதவீதத்தை விடக்குறைவாகும். கருத்திற் கொள்ளப்பட்ட வருமான மதிப்பீடுகள் 2021 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.8 சதவீதமாக இருந்ததுடன், அது 8.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்குக் காரணமாக, வெளிநாட்டு வர்த்தக வரிகளிலிருந்தான வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 1.1 சதவீத புள்ளிகள் வீழ்ச்சியடைந்ததும், உற்பத்தி வரிகள் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.8 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததும், வருமான வரிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.8 சதவீதத்திலிருந்து 0.4 சதவீத புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் வரியல்லாத வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.9 சதவீதத்தாலும் 0.4 சதவீதப் புள்ளிகளாலும் வீழ்ச்சியடைந்தமைக்கு அரசுடமை நிறுவனங்களின் கட்டணங்கள், அறவீடுகள் இலாப மாற்றங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகும். 2021 இற்காக மதிப்பீடு செய்யப்பட்டதிலிருந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.1 சதவீதம் அல்லது ரூபா 497 பில்லியன் விலகலாக அமைந்தது. அதனால், வருமானத்தைச் சேகரிக்கும் முகவர்களது வரி நிர்வாகத்தைப் பலப்படுத்தும் அதேவேளை, வரிகளுக்கான தளத்தை அகலப்படுத்துதல், வரி விலக்குகளை ஒழுங்குமைத்தக் வரி வீதங்களை உயர்த்துதல் உள்ளிட்ட வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட நிதிச் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 இல் அரசாங்கத்தின் உண்மையான வரி வருமானமான ரூபா 1,457.1 பில்லியன், வருடாந்த வருமான மதிப்பீடான ரூபா 1,951 பில்லியனிலிருந்து ரூபா 494 பில்லியனை பிறழ்வாகக் கொண்டிருந்தது. இப் பிறழ்வுக்கான பிரதான காரணம் சுங்க இறக்குமதி தீர்வைகள், விசேட பண்டங்கள் வரி, பெருநிறுவனங்களின் வருமான வரி, மதுபானம் சிகரட் போன்றவறறிலிருந்தான மதுவரி, பெற்றோலியம் மற்றும் வாகனங்கள் போன்றவற்றிலிருந்தான வரிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சவால்கள் காரணமான கட்டணங்களின் குறைப்பிலிருந்தான இலாபங்கள் பங்கிலாபங்கள் கட்டணங்கள் போன்ற வரியற்ற வருமானங்கள் போன்ற பல வரிகளிலிருந்தான குறைந்த வருமானத் திரட்டல்களேயாகும். உண்மையான வரி வருமானமான ரூபா 1,298 பில்லியன், மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 1,724 பில்லியனிலிருந்து ரூபா 426 பில்லியன்களால் அல்லது 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதேவேளை வரி அல்லாத வருமானமான ரூபா 159 பில்லியன், மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 227.0 பில்லியனிலிருந்து ரூபா 68 பில்லியன்களால் அல்லது 30 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

அட்டவணை 4.1 | அரசாங்க வருமானத்தின் சுருக்கம்

ரூபா.மில்.

விடயம்	2018	2019 (அ)	2020	2021 (அ)
மொத்த வருமானம், மானியங்கள்	**1,932,459**	**1,898,808**	**1,373,308**	**1,463,810**
மொத்த வருமானம்	**1,919,974**	**1,890,899**	**1,367,960**	**1,457,071**
வரி வருமானம்	1,712,318	1,734,925	1,216,542	1,298,019
வருமான வரி	310,449	427,700	268,249	302,115
பொருட்கள், சேவைகள் மீதான வரி	1,061,751	975,557	586,650	646,068
வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள்	340,117	331,668	361,643	349,836
வரியல்லாத வருமானம்	207,656	155,974	151,417	159,052
மானியங்கள்	**12,485**	**7,909**	**5,348**	**6,740**
மொ.உ.உற்பத்தி சதவீதத்தில்				
வருமனம் மற்றும் மானியங்கள்	**13.5**	**12.7**	**9.1**	**8.7**

மொத்த அரசிறை வருமானம்	13.4	12.6	9.1	8.7
வரி வருமானம்	12.0	11.6	8.1	7.7
வரியல்லாத வருமானம்	**1.5**	**1.0**	**1.0**	**0.9**
மானியங்கள்	**0.1**	**0.1**	**0.0**	**0.0**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

202021 இல் வரி மற்றும் வரியற்ற வருமானங்கள் இரண்டினதும் உள்ளடக்கப்பட்ட செயற்றிறன், 2019 இல் மேற்கொள்ளப்பட்ட வரிகளின் பின்னடைவான முயற்சிகள் காரணமாகவும், கொவிட்-19 ஆல் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்பட்ட தடங்கல்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் காரணமாகவும் ஏற்பட்டது. 2020 இல் பதிவுசெய்யப்பட்ட வருமான இழப்பு காணப்பட்ட போதிலும், அரசாங்கமானது ஏராளமான வரி விடுமுறைகளையும், வரிச் சலுகைகளையும் கழிவுகளையும், வரி விலக்குகளையும் 2021 இல் மேலும் அறிமுகப்படுத்தியதுடன், இது நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகளை மேலும் தடம்புரள வைத்தது. இதற்கு மேலதிகமாக, 2021 இன் 18 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 2020 டிசெம்பர் 31 வேண்டுனெவும் தேவைப்படுத்தப்பட்டு இதன் மூலம் ரூபா 4 பில்லியன் வருமானமாகத் திரட்டப்பட்டது.

இற்கு முன்னைய ஏதேனும் காலத்தில் காணப்பட்டு நீக்கப்பட்ட வரிகளுக்கான நிலுவைகளைத் தள்ளுபடி செய்வதற்கும், நிலுவையிலுள்ள ஏதேனும் வரிக் கொடுப்பனவுகளைப் பொறுத்து, 2020 டிசெம்பர் 31 இற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருந்த வருமான வரி மற்றும் பெறுமதிசேர் வரி ஆகியவற்றுக்காகச் செலுத்தப்படத்தக்க தண்டப் பணங்களையும் வட்டியையும் தள்ளுபடி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வெளிப்படுத்தப்படாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு நிதிகள் மற்றும் சொத்துகள் ஆகியன வெளிப்படுத்தப்படுவதற்கான சுயாதீனப் பிரகடனத்தை வெளியிடுவது தேவைப்படுத்தப்பட்டதுடன், இதற்குரிய கால அளவு 2021 செப்தெம்பர் 15 இலிருந்து 2022 மார்ச் 31 வரை எனவும் 1.0 விகிதத்தில் இருக்க

அட்டவணை 4.2 | **மதிப்பிடப்பட்ட மெய் வருமானம் - 2021**

ரூபா மில்லியன்

விடயம்	**மதிப்பிடப்பட்ட**	**உண்மையான(அ)**	**விலகல்**
மொத்த வருமானம்	**1,951,000**	**1,457,071**	**-493,929**
வரி வருமானம்	**1,724,000**	**1,298,019**	**-425,981**
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்			
வருமானம், இலாபம் மீதான வரி	371,000	302,073	-68,927
பெ.சே.வரி - உள்நாட்டு தேறிய	200,000	185,462	-14,538
தேசக் கட்டுமான வரி (உள்நாட்டு)	–	355	355
ஏனையவை	4,503	8,953	4,450
உப மொத்தம்	**575,503**	**496,843**	**-78,660**
சுங்கத் திணைக்களம்			
இறக்குமதித் தீர்வை	180,000	64,339	-115,661
பெ.சே.வரி - இறக்குமதிகள் (தேறிய)	110,000	122,751	12,751
தேசக் கட்டுமான வரி (இறக்குமதி)	–	79	79
துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு	170,000	154,125	-15,875
செஸ் வரி	70,000	75,543	5,543
பொ.சே.க.	111,950	55,994	-55,956
விசேட நுகர்வு அறவீடு மற்றும் ஏனைய			0
உற்பத்தி விசேட ஏற்பாடுகள்	130,000	88,539	-41,461
சிகரெட்டுகள்	85,000	55,339	-29,661
பெற்றோலியம்	100,000	24,346	-75,654
மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற	956,950	641,056	-169,119
உப மொத்தம்			

மதுவரித் திணைக்களம்	**160,035**	**138,674**	**-21,361**
மதுபானம் / புகையிலை	160,035	138,674	-21,361
உப மொத்தம்			
ஏனையவை	**20,000**	**12,840**	**-7,160**
தொலைத்தொடர்பு அறவீடு	11,512	8,606	-2,906
உரிம வரி மற்றும் பிற	31,512	21,446	-10,066
உப மொத்தம்	227,000	159,052	-67,948
வரியல்லாத வருமானம்			

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்கலம்

(அ) தற்காலிகமானது

4.2. வருமானக் கொள்கை நடவடிக்கைகள் - 2021

அரசாங்கமானது, தனது நிதிச் சமநிலையில் காணப்பட்ட முன்னெப்போதுமில்லாத அழுத்தத்திற்கு மத்தியிலும், மேலதிக வரி விலக்குகளையும் விடுமுறைகளையும் வழங்குவதற்கு விரைவான கொள்கை நடவடிக்கைகளை எடுத்தது.

I. பொருளாதாரத்தின் பின்வரும் செழித்துவரும் துறைகளை மேலும் ஊக்குவிப்பதற்காக, 2021 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து தொடரான வரி விலக்குகள் வழங்கப்பட்டன

- கொழும்புப் பங்குகள் பரிவர்த்தனையின் கீழுள்ளதும், இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமம் வழங்கப்பட்டதுமான இலங்கை மனைச்சொத்து நம்பிக்கை நிதியத்திற்கு (SLREIT) விற்கப்பட்ட, கையளிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட காணிகளினதும் கட்டிடங்களினதும் தன்மைகளை நிலைப்படுத்துதல்.
- ஏதேனும் இலங்கை மனைச்சொத்து நம்பிக்கை நிதியத்திலிருந்து அலகுகளைப் பெற்று வைத்திருப்பவரால் முதலிடப்பட்ட அல்லது வர்த்தகம் செய்யப்பட்ட முதலீட்டுச் சொத்திலிருந்தான இலாபங்களிலிருந்து பெறப்பட்ட அலகுகளை அல்லது தொகைகளை நிலைப்படுத்துதல்.
- ஏதேனும் நலன்புரிச சங்கத்திலிருந்து பெறப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட (அதன் அங்கத்தவர்களது சேமிப்பை ஊக்குவிக்கும் கருணை நிதி உள்ளிட்ட) வட்டி.
- இலங்கை அரசாங்கத் திறைசேரி முறிகளிலிருந்து பெறப்பட்டு, வைப்பிலிடப்பட்ட தொகைகளிலிருந்து "சமுர்த்தி" அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சமூக அடிப்படையிலான "சமுர்த்தி" வங்கிகளிலிருந்து பெறப்பட்ட நிதிகள் அல்லது வட்டிகள்.
- இலங்கை அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்தின் பேரில் வழங்கப்பட்ட சர்வதேச நாணய முறிகளை அல்லது 2021 ஏப்ரல் 01 இல் அல்லது அதற்குப் பின்னர் வர்த்தக வங்கியொன்றால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரால் 100 அமெரிக்க டொலர்களுக்குக் குறையாத வகையில் கூட்டுமொத்தமாக சர்வதேச நாணய முறிகளில் முதலீடு செய்யப்பட்டுப் பெறப்பட்ட தொகைகளை நிலைப்படுத்துதல்.
- தங்கம், இரத்தினம் அல்லது ஆபரணங்கள் தொடர்பான ஏதேனும் வர்த்தகம் அல்லது பெறுமதி சேர்ப்பின் பின்னரான மீள்-ஏற்றுமதி ஆகியவற்றிலிருந்து வெளிநாட்டு நாணயங்களில் சம்பாதிக்கப்பட்டு அல்லது பெறப்பட்டு, இலங்கையின் உள்நாட்டு வங்கியொன்றுக்கு அனுப்பப்பட்ட இலாபங்களை நிலைப்படுத்துதல்.
- தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சிக் கல்விக் கருதுகோளின் (TVET concept) கீழ், மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனும் தொழிற்பயிற்சிக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ஏதேனும் தொழிற்பயிற்சிக் கல்வி நிறுவனத்தால் பெறப்பட்ட அல்லது உழைக்கப்பட்ட இலாபங்களை நிலைப்படுத்துதல். இங்கு அந்நிறுவனம் கடந்த வருடத்திலிருந்த தனது பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை குறித்த வருடத்தில் இரு மடங்காக்கியிருத்தல் வேண்டும். இவ்விலக்களிப்பு ஐந்து வருடங்களுக்கு இருக்கும் என்பதுடன், 2021 ஏப்ரல் 01 இலிருந்து வருமான வரி விலக்களிப்பும் இருக்கும்.

II. வரி விலக்களிப்பை பெறுதல்:

பெறப்பட்ட இலாபத்திலிருந்தான 14 சதவீத்திலான வருமான வரியைச் செலுத்துதலானது, இலங்கையில் நிரந்தரமாகத் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றினூடாக இலங்கையில் வர்த்தகத்தை மேற்கொண்டு இலாபத்தைச் சம்பாதித்து, ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்காவது இலங்கையினுள் அதனை முதலீடு செய்வதன் மூலம் தனது வர்த்தகத்தை மேம்படுத்திய அல்லது கொழும்புப் பங்குகள் பரிவர்த்தனையிலிருந்து பங்குகளையோ பிணையங்களையோ கொள்வனவு செய்த, அல்லது திறைசேரி முறிகளை, திறைசேரி உண்டியல்களை அல்லது சர்வதேச நாணய முறிகளைக் கொள்வனவு செய்த, வதியாத கம்பனியொன்றுக்கு, 2021 ஏப்ரல் 01 இலிருந்து மூன்று வருடங்களுக்கு விலக்களிக்கப்பட்டது.

III. வரி விடுமுறைகள்:

பின்வரும் புதிய வர்த்தகங்களிலிருந்து பெறப்பட்ட இலாபங்களுக்கு (முதலீட்டு இலாபங்கள் நீங்கலாக) 2021 ஏப்ரல் 01 இலிருந்து "வரி விடுமுறைகள்" வழங்கப்பட்டன

- கட்டிட நிர்மாணத்துறையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை மறுசுழற்சி செய்வதற்காக இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட வேறானதொரு வேலைத்தளத்தைக் கொண்டு அவற்றை விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு பத்து வருட வரி விலக்குக் காலம்.
- தனிநபரொருவரால், தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சிக் கல்விக் கருதுகோளின் (TVET concept) கீழ், மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனும் தொழிற்பயிற்சிக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெறப்பட்ட தனது வெற்றிகரமான தொழிற்பயிற்சியின் பின்னர் 2021 ஏப்ரல் 01 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தகத்திற்கு ஐந்து வருட வரி விலக்குக் காலம்.
- வதியும் ஆளொருவரால் ஆரம்பிக்கப்பட்ட, இலங்கையில் படகுகளையும் சிறு கப்பல்களையும் கட்டும் தொழில்முயற்சியொன்றுக்கும், அதிலிருந்து படகுகளையும் சிறு கப்பல்களையும் விநியோகிப்பதால் பெறப்படும் ஈட்டுகைகளுக்கும் இலாபங்களுக்கும் ஏழு வருட வரி விலக்குக் காலம்.
- நூறு மெகாவாட்டுக்குக் குறையாது சூரிய சக்தி அல்லது காற்றாலை மூலம் தேசிய மின்னிணைப்பிற்கு மின்னை வழங்கத்தக்க ஏதேனும் "மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளச் செயற்றிட்டத்திற்கு" ஏழு வருட வரி விலக்குக் காலம்.
- 2021 ஜனவரி 01 இல் அல்லது அதற்குப் பின்னர் தொலைத்தொடர்புக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கும் தொடர்பான வசதிகளை வழங்குவதற்கும், உள்ளூர்த் தொழிலாளர்களைக் கொண்டும் உளளூர் வளங்களைக் கொண்டும் வதியும் ஆளொருவரால் தொடங்கப்பட்ட ஏதேனும் தொழில்முயற்சியொன்றுக்கு அல்லது அவ்வாறான தொழில்முயற்சிக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குபவருக்கு ஐந்து வருட வரி விலக்குக் காலம்.
- கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டைத் துறைமுகங்களில், கடலுக்கு வெளியேயான வர்த்தகங்களுடன் தொடர்புடைய சேமிப்பகங்கள் அல்லது சுங்கச் சேமிப்பகங்களுக்கு வாடகைக்கு விடுதல் போன்ற வர்த்தகமுயற்சிகளில் முதலீடு செய்வோருக்கு வரி விலக்குகள்.

IV. வரிச் சலுகைகள்:

இரத்தின, ஆபரண மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் துறைகளுக்கு சலுகையுடன் கூடிய வரி வீதங்கள் வழங்கப்பட்டன.

- இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்களின் விற்பனை, மீள்புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்தி மின்சக்தியை உருவாக்கி தேசிய மின்னிணைப்பிற்கு வழங்குதல் ஆகிய வர்த்தகங்களில் ஈடுபடும் மற்றும் 2021 ஜனவரி 01 - டிசெம்பர் 31 காலப்பகுதியினுள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டு 2022 ஏப்ரல் 01 தொடக்கம் மூன்று வருடங்களுக்கு அவ்வாறு உள்ள கம்பனியாக இருக்கும், தனியாட்களுக்காக ஆகக்கூடியது 14 சதவீத சலுகையுடன் கூடிய வரி வீதங்கள் மற்றும் கம்பனிகளுக்காக ஒரே அளவிலான 14 சதவீத சலுகையுடன் கூடிய வரி வீதங்கள் ஆகியன 2021 ஏப்ரல் 01 தொடக்கம் வழங்கப்பட்டன.
- ஏதேனும் கம்பனியால் (முதலீட்டுச் சொத்துக்களிலிருந்து இலாபங்கள் பெறுபவை தவிர்ந்த முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் உட்பட) செலுத்தப்படத்தக்க கூட்டு வருமான வரியில் வரி செலுத்தும் பொறுப்பானது 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. ஆனால், அவை 2021 டிசெம்பர் 31 இற்கு முன்னர் மற்றும் 2021 ஜனவரி 01 இல் அல்லது அதற்குப் பின்னர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டு, 2021-2022 வருட மதிப்பீட்டில் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் அனுமதியளிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.
- ஒரு பல்தேசியக் கம்பனியின் ஏற்றுமதி 2020-2021 வருட காலத்துடன் ஒப்பிடும்போது 2021-2022 வருட காலத்தில் ஆகக்குறைந்தது 30 சதவீதத்தால் அதிகரித்திருக்குமாயின், மற்றும் அதன் ஏற்றுமதிகள் 2021-2022 காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2022-2023 காலப்பகுதியில் ஆகக்குறைந்தது 50 சதவீதத்தால் அதிகரித்து, அல்லது 2021-2022 காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2023-2024 காலப்பகுதியில் ஏற்றுமதிகள் ஆகக்குறைந்தது 50 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டு, பங்கிலாப வருமானம் 50 சதவீதத்தால் குறைவடைந்திருக்குமாயின் அக்கம்பனியால் பெறப்படும் பங்கிலாப வருமானத்திற்குரிய வரிப் பொறுப்பு 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டது. மேலும், தயாரிப்புச் செயற்பாடுகளுக்காக பண்ணைச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட ஏதாவது விவசாய உற்பத்தி பயன்படுத்தப்பட்டிருப்பின், பங்கிலாப வருமானத்திற்கான உரிய வரிப் பொறுப்புகள் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டன.

V. வரிக் குறைப்புகள் :

ஆகக்குறைந்தது 65 சதவீத பெறுமதிசேர்ப்பு மற்றும் அதற்கான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் கொண்டதும், உள்நாட்டுக்கைத்தொழிலை ஊக்குவித்து "சமூர்த்தி" பெறும் குடும்பங்களிலிருந்தான பெண்

தொழில்முயற்சியாளர்களுக்கு ஊக்கம் வழங்கியதுமான, சந்தைப்படுத்தல் தொடர்பாடல் ஆகிய துறைகள், சேவைத் துறைகள் ஆகியவற்றுக்கு 2021 ஏப்ரல் 01 இலிருந்து வரிக்குறைப்புகள் வழங்கப்பட்டன.

- சில நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளூர் மட்டத்தில் சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவுகளுக்காக வழங்கப்பட்ட 100 சதவீத மேலதிக குறைப்புகள்.
- திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் இதற்குத் தகுதியான கொடுப்பனவுகளாக இருந்தன.
- "சமூர்த்தி" பயனாளராகவுள்ள குடும்பமொன்றிலிருந்தான பெண்ணொருவருக்கு, கடையொன்றைத் தாபிப்பதற்காக, தனியாளொருவரால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் இதற்குத் தகுதியான கொடுப்பனவுகளாக இருந்தன.
- 2021-2022 இலிருந்து 2023-2024 வரையான மூன்று வருட காலப்பகுதிக்குள் உள்ளூர் பெறுமதி சேர்ப்புகளாக ஆகக்குறைந்தது 65 சதவீதத்தை சேவையொன்றுக்கு அல்லது பொருளொன்றுக்கு உரித்தாக்கும் செலவொன்று இருக்குமாயின், அதற்கு 2021 ஏப்ரல் 01 இல் தொடங்கும் மூன்று வருட காலத்திற்கு ரூபா 500 மில்லியனை உயர் தொகையாகக் கொண்டு, 100 சதவீத மேலதிக குறைப்புகள் வழங்கப்படும்.
- 2021-2022 தொடக்கம் 2022-2023 வரையான மதிப்பீட்டு வருடத்திற்கு, ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான செலவுகளுக்கு 100 சதவீத மேலதிக குறைப்புகள் வழங்கப்படும்.

VI.தானாக வெளிப்படுத்தும்போதான புதிய வரியை விதித்தல்

வெளிப்படுத்தப்படாதிருந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதி முதலீட்டின் மற்றும் சொத்தின் பெறுமதியில் 1.0 சதவீதத்திற்கு, 2021 செம்தெம்பர் 15 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில், தானாக வெளிப்படுத்தும்போதான புதிய வரி விதிக்கப்பட்டதுடன், அது 2022 மார்ச் 31 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தப் புதிய வரி, ஏற்கனவே மக்களால் வெளிப்படுத்தப்படாதிருந்ததும் வரி விதிப்பிற்குரியதுமான வழங்கல்கள், வருமானங்கள், சொத்துக்கள் போன்றவற்றை தாமாகவே வெளிப்படுத்துவதற்கு ஊக்கமளித்ததுடன், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட நிதிகளிலிருந்து 2021 செப்தெம்பர் 15 தொடக்கம் 2022 மார்ச் 31 வரை ரூபா 4 பில்லியன்கள் சேகரிக்கப்பட்டன.

VII.தண்டப்பண விடுபாடுகள் :

2021 இன் 18 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ், 2020 டிசெம்பர் 31 இற்கு முன்னர் அல்லது அன்று முடிவடைந்த ஏதேனும் காலப்பகுதிக்குரிய நீக்கப்பட்ட வரிகள் தொடர்பாக, நிலுவையாக இருந்த வரிகளை விடுவிப்பதற்கும் அத்துடன், வருமான வரி மற்றும் பெறுமதிசேர் வரி தொடர்பாகச் செலுத்தத்தக்க தண்டப்பணங்களை அல்லது வட்டிகளை விடுவிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நிலுவையாகவிருந்த வரிகளின் கொடுப்பனவுகளுக்குரிய காலம் 2020 டிசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் முடிவடைவதாக இருந்திருத்தல் வேண்டும்.

4.3 வரிக் கொள்கைச் சீர்திருத்தங்கள் - 2021

4.3.1 வரி நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள்

அரசாங்கம் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையின் (RAMIS) இரண்டாவது கட்டம், அரச வங்கிகள் உள்ளிட்ட 11 வங்கிகளுக்கும் எல்லா வரையறைக்குட்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனிகளுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இலத்திரனியல் முறையில் தமது வரிக் கோவைகளைச் சமர்ப்பிப்பதுடன், தனிநபர்களும் பங்காண்மையாளர்களும் தமது இலத்திரனியல் கோவைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட "லங்கா பே" உடனான இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை போன்ற தானியங்கி முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சேர்த்து வரி நிர்வாக நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தியது.

இலங்கைச் சுங்கத்தில் சரக்குகளை ஆட்கள் பரிசோதனை செய்வதைக் குறைத்து, விரைவாக அவற்றை விடுவிக்கும் நோக்கில், பரிசோதனைக்காக சரக்குகளைத் தெரிவுசெய்தல், கடதாசியற்ற வகையில் ஆவணங்களைத் தயாரித்தல், வெளிப்படுத்துகைகளின் இலத்திரனயில் சமர்ப்பிப்பு, சரக்குகளை விடுவித்தல், இலத்திரனியல் கையொப்பப் பயன்பாடு, இலங்கைத் தேயிலைச் சபை, இலங்கைத் தரங்கள் பணியகம், மதுவரித் திணைக்களம், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் போன்ற மற்றைய அரச நிறுவனங்களைத் தொடர்புபடுத்துதல் ஆகியன தானியங்கி முறையில் இலங்கைச் சுங்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், இலங்கைச் சுங்கத்தின் சேவை வழங்குவதை வினைத்திறனாக்குவதற்காக, ஒன்றிணைக்கப்பட்ட தனியான ஒரேயிடத்தில் சேவை வழங்கும் முறைமை ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை, இலங்கைச் சுங்கத்தால் பணம்கட்டும் முகாமைத்துவ முறைமையொன்றும், பணம் அனுப்புதலைக் கண்காணிப்பதற்காகவும், சரி பார்ப்பதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், குறுஞ்செய்திச் சேவையொன்றும் நிர்வாகத்தில் தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கை மதுவரித் திணைக்களமும், தற்போது மனிதர்களின் முயற்சியால் மாத்திரம் செயற்படுத்தப்படும் வருமான முறைமையைத் தகவல் தொழில்நுட்பத்தால் முகாமைத்துவம் செய்யப்படும் ஒன்றாகவும் தனது தானியங்கி முறைமையில் சேர்த்துக்கொண்டதுடன், வருமானங்களைச் சேர்க்கவும் நிர்வகிக்கவும் இது வசதியளித்தது. அவ்வாறே, வருமான அபாய முகாமைத்துவ முறைமையொன்றையும்

(RRMS), உள்நாட்டின் மது தயாரிப்போருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதற்கான மதுவரி வருமான முகாமைத்துவ முறைமையொன்றையும் (ERMS) அறிமுகப்படுத்துவதிலும் இலங்கை மதுவரித் திணைக்களம் தயாராகி வருகிறது. இது வருமான நிர்வாகத்தை மேலும் பலப்படுத்தும். இலங்கை மதுவரித் திணைக்களம் உள்நாட்டின் மது தயாரிப்பாளருக்கும் மது இறக்குமதியாளருக்கும் மேற்படி முறைமைகளை நடைமுறைப்படுத்தும்போது, கடதாசியை அடிப்படையாகக் கொண்ட "ஸ்ரிக்கர்" முறையை இலத்திரனியல் அடிப்படையாகக் கொண்டதாக மாற்றுவதிலும் விரிவுபடுத்தியுள்ளது. இதன் மூலம், வருமானம் பெறுவதிலிருந்த ஓட்டைகள் அடைக்கப்பட்டு, மதுவரியிலிருந்தான வருமானம் 2022 ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரை கணிசமாக அதிகரித்தது.


4.3.2 2022 பாதீட்டின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான அதிகரிப்பு நடவடிக்கைகள்

2022 இன் பாதீடு ஒரே தடவையிலான மிகை வரியை, சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பிற்கான வரி, நிதிச் சேவைகளுக்கான பெறுமதிசேர் வரியில் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிப்பு ஆகியவற்றை அறிமுகப்படுத்தியதுடன், அவை 2022 ஜனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மிகை வரியானது 25 சதவீத வரியுடன் சேர்த்து அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இது 2020-2021 நிதி வருடத்திற்கு ரூபா 2,000 மில்லியனுக்கு மேல் வரி செலுத்தத்தக்க வருமானம் பெறும் தனியாள் அல்லது நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இரு தவணைகளில் முறையே 2022 ஏப்ரல் 20 அளவிலும், 2022 ஜூலை 20 அளவிலும் செலுத்தப்படுவதற்கு விதிக்கப்பட்டது. அந்த முதலாது தவணையிலிருந்து ரூபா 59.6 பில்லியன் சேகரிக்கப்பட்டது. சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பிற்கான வரி, வருடமொன்றுக்கு ரூபா 120 மில்லியன்கள் புரள்வுக்கு உரியது என்பதுடன், 2.5 சதவீதமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. மதுவரிக்கும் சிகரட் மீதான வரிக்கும் உயர்த்தப்பட்ட விகித திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாததும் வீதிகளில் ஓடத்தக்க தகைமையுள்ளதுமான வாகனங்களுக்கு மன்னிப்பு வழங்குவது உட்பட, இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மீறியமை உட்பட்ட பல்வேறு காரணங்களுக்காக சுங்கத்தில் தடுத்து வைக்கப்பட்ட வாகனங்களை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

4.4 அரச வருமான செயற்றிறன்

மானியங்கள் உள்ளிட்ட மொத்த அரச வருமானம் 2020 இல் காணப்பட்ட ரூபா 1,373.3 பில்லியன்களிலிருந்து, 6.6 சதவீதத்தால், ரூபா 1,463.8 பில்லியன்களுக்கு மிதமாக அதிகரித்தது. மானியங்கள் உள்ளடக்கப்படாத மொத்த அரச வருமானம், 2020 இல் காணப்பட்ட ரூபா 1,368 பில்லியன்களிலிருந்து, 6.5 சதவீதத்தால், ரூபா 1,457.1 பில்லியன்களுக்கு ஓரளவுக்கு அதிகரித்தது. அரசாங்கத்தின் உண்மையான வருமானம் 2021 இல், மதிப்பிடப்பட்ட ரூ 1,951 பில்லியன்களிலிருந்து 25.3 சதவீதத்தால் விலகி, ரூபா 494.0 பில்லியன்களாக இருந்தது. அத்துடன், வரி வருமானம் 2020 இல் இருந்த 1,216.5 பில்லியன்களிலிருந்து, 2021 இல் 6.7 சதவீதத்தால் ரூபா 1,298 பில்லியன்களாக ஓரளவுக்கு அதிகரித்தது. வருமான வரி, பெறுமதிசேர் வரி, மதுவரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமான அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். வரியற்ற வருமானம் 2020 இல் இருந்த ரூபா 151.4 பில்லியன்களிலிருந்து 2021 இல் 5 சதவீதத்தால் ரூபா 159.1 பில்லியன்களாக அதிகரித்தது அரசுக்குச் சொந்தமான வியாபார முயற்சிகளிலிருந்து மாற்றப்பட்ட இலாபங்களிலிருந்தும் பங்கிலாபங்களிலிருந்தும் பெறப்பட்ட வருமானங்களின் அதிகரிப்பாலேயே இது நிகழ்ந்தது.

வரைபு 4.1 அரசாங்க வருமானம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

உள்ளூர் நுகர்வை அடிப்படையாகக் கொண்ட வரிகளிலிருந்தான வருமானம், 2020 இல் இருந்த ரூபா 370.2 பில்லியன்களிலிருந்து, 2021 இல் 13.3 சதவீதத்தால் ரூபா 419.3 பில்லியன்களாக அதிகரித்தது. இதற்குக் காரணமாக, 2020 இலிருந்தான உள்;ர் பெறுமதிசேர் வரியிலிருந்தான 25.3 சதவீத அதிகரிப்பும், மதுவரியிலிருந்தான 14.6 சதவீத அதிகரிப்பும் அமைந்தன. ஆயினும், வெளியக வர்த்தகத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வரிகளிலிருந்தான வருமானம், 2020 இல் இருந்த 361.6 பில்லியன்களிலிருந்து, வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, 2021 இல் 3.3 சதவீதத்தால் ரூபா 349.8 பில்லின்களாகச் சுருங்கியது. மேலும், இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட வரிகள் 2020 இல் காணப்பட்ட ரூபா 549.6 பில்லியன்களிலிருந்து, 2021 இல் 0.6 சதவீதத்தால் ரூபா 546.1 பில்லியன்களுக்கு ஓரளவுக்குச் சுருங்கின. இறக்குமதி வரிகளிலிருந்தான வருமானம், இறக்குமதிகளிலிருந்தான பெறுமதிசேர் வரி, மோட்டார் வாகன மற்றும் பொருட்களுக்கான விசேட வரி ஆகியன, இறக்குமதிகளிலான கட்டுப்பாடுகளும் வரிக்குறைப்புகளும் காரணமாக மெதுவாகச் சேகரிக்கப்பட்டதால் இந்தச் சுருக்கம் ஏற்பட்டது.

அட்டவணை 4.3 | அரசாங்க வருமானம்

ரூபா.மில்.

விடயம்	2015	2016	2017	2018	2019	2020	2021 (அ)
வரி வருமானம்	**1,355,779**	**1,463,689**	**1,670,178**	**1,712,318**	**1,734,925**	**1,216,542**	**1,298,019**
வருமான வரி	**262,583**	**258,857**	**274,562**	**310,449**	**427,700**	**268,249**	**302,115**
பெ.சே.வரி	219,700	283,470	443,739	461,651	443,877	233,786	308,213
தே.க.வரி	45,004	57,424	69,035	71,357	70,672	2,351	434
உற்பத்தி வரி	497,623	454,952	469,454	484,242	399,478	321,932	306,821
இறக்குமதித் தீர்வைகள்	132,189	156,487	136,501	96,991	98,427	114,183	64,339
துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு	58,644	88,823	102,360	113,950	112,174	115,442	154,125
விசேட நுகர்வு அறவீடு	**52,276**	**55,825**	**71,402**	**75,807**	**70,364**	**82,709**	**55,828**
ஏனையவை	**87,760**	**107,851**	**103,125**	**97,872**	**112,233**	**77,890**	**106,144**
வரியல்லாத வருமானம்	**99,099**	**222,372**	**161,353**	**207,656**	**155,974**	**151,417**	**159,052**
வட்டி/ வாடகை	7,321	15,806	11,845	13,731	18,547	19,351	11,556
இலாபம் மற்றும் பங்கிலாப்கள்	29,798	108,160	53,998	41,828	27,857	17,624	30,591
விற்பனை மற்றும் அறவீடுகள்	**44,632**	**72,606**	**66,575**	**105,202**	**73,884**	**47,370**	**42,645**
சமூகப் பாதுகப்பு பங்களிப்பு	**15,213**	**18,046**	**22,940**	**25,215**	**28,985**	**32,417**	**34,619**
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	**-**	**5,000**	**-**	**15,000**	**–**	**24,008.98**	**15,012**
ஏனையவை	**2,135**	**2,754**	**5,995**	**6,681**	**6,701**	**10,646**	**24,630**
மொத்த வருமானம்	**1,454,878**	**1,686,061**	**1,831,531**	**1,919,973**	**1,890,899**	**1,367,960**	**1,457,071**
மொ.உ.உ. %							
வரி வருமானம்	**12.4**	**12.2**	**12.5**	**12.0**	**11.6**	**8.1**	**7.7**
வருமான வரி	2.4	2.2	2.1	2.2	2.8	1.8	1.8
பெ.சே.வரி	2.0	2.4	3.3	3.2	3.0	1.6	1.8
தே.க.வரி	0.4	0.5	0.5	0.5	0.5	0.0	0.0
உற்பத்தி வரி	4.5	3.8	3.5	3.4	2.7	2.2	1.8
இறக்குமதித் தீர்வைகள்	1.2	1.3	1.0	0.7	0.7	0.8	0.4
துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு	0.5	0.7	0.8	0.8	0.7	0.8	0.9
விசேட வியாபாரப் பண்ட அறவீடு	0.5	0.5	0.5	0.5	0.5	0.6	0.3
ஏனையவை	0.8	0.9	0.8	0.7	0.7	0.5	0.6
வரியல்லா வருமானம்	0.9	1.9	1.2	1.5	1.0	1.0	0.9
வட்டி/ வாடகை	0.1	0.1	0.1	0.1	0.1	0.1	0.1
இலாபம் மற்றும் பங்கிலாப்கள்	0.3	0.9	0.4	0.3	0.2	0.1	0.2
விற்பனை மற்றும் அறவீடுகள்	0.4	0.6	0.5	0.7	0.5	0.3	0.3
சமூகப் பாதுகப்பு பங்களிப்பு	0.1	0.2	0.2	0.2	0.2	0.2	0.2
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	-		-	-	-	-	-
மொத்த வருமானம்	**13.3**	**14.1**	**13.7**	**13.4**	**12.6**	**9.1**	**8.7**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது
- புறக்கணிக்கத்தக்கது
- தகவல் இல்லை

4.4.1 வரி வருமானம்

பெயரளவில், வரி வருமானமானது 2020 இல் இருந்த ரூபா 1,216.5 பில்லியன்களிலிருந்து, 2021 இல் 1,298.0 பில்லியன்களாக அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் வரி வருமானத்திற்கும் இடையிலான விகிதம், 2020 இல் இருந்த 8.1 சதவீதத்திலிருந்து, 2021 இல் 0.4 சதவீதத்தால் குறைவடைந்து 7.7 புள்ளிகளாகக் காணப்பட்டது. ஆயினும், மொத்த வருமானத்தில் வரி வருமானத்தின் பங்கு 88.9 சதவீதத்திலிருந்து 2021 இல் 89.1 சதவீதமாக ஓரளவுக்கு அதிகரித்தது. வருமான வரியிலிருந்தான வருமானம் 2020 இல் இருந்த ரூபா 268.2 பில்லியன்களிலிருந்து 2021 இல் 12.6 சதவீதத்தால் ரூபா 302.1 பில்லியன்களுக்கு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. பொருட்கள் சேவைகள் மீதான வரிகளிலிருந்தான வருமானம் 2020 இல் இருந்த சுருக்கத்திலிருந்து 2021 இல் பொருளாதாரச் செயற்பாடுகள் விரிவடைந்ததால், ரூபா 586.7 பில்லியன்களிலிருந்து 10.1 சதவீதத்தால் ரூபா 646.1 பில்லியன்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது.

அட்டவணை 4.4 | **அரசாங்க வரி வருமானம் - மூலங்களின் அடிப்படையில்**


ரூபா.மில்.

மூலம்	2020	2021 (அ)	2020/2021 (தற்காலி)
வருமான வரி	**268,249**	**302,115**	**12.6**
உள்நாட்டு நுகர்வு அடிப்படை வரிகள்	**370,198**	**419,264**	**13.3**
பெ.சே.வரி - உள்நாட்டு	148,061	185,462	25.3
தேச கட்டுமான வரி - உள்நாட்டு	2,036	355	-82.6
மதுபானம் மீதான வரி	120,990	138,637	14.6
சிகரெட்டு அல்லது புகையிலை மீதான வரி	94,384	88,576	-6.2
ஏனையவை (உற்பத்தி)	4,727	6,234	31.9
இறக்குமதி அடிப்படை வரிகள்	**549,554**	**546,117**	**-0.6**
இறக்குமதி வரிகள்	114,183	64,339	-43.7
பெ.சே.வரி - இறக்குமதி	85,725	122,751	43.2
தே.க.வரி - இறக்குமதி	315	79	-74.9
து.வி.நி.அ அறவீடு	115,442	154,125	33.5
வி.வி.பண்ட அறவீடு	82,709	55,828	-32.5
செஸ் வரி	49,309	75,543	53.2
பெற்றோலியம் உற்பத்தி	53,111	55,339	4.2
மோட்டார் வாகனங்கள் - உற்பத்தி	48,760	18,113	-62.9
உரிமம் மற்றும் ஏனையவை	28,542	30,523	6.9
தொலைத்தொடர்பாடல் அறவீடு	13,130	12,840	-2.2
ஏனையவை	15,412	17,683	14.7
மொத்த வரி வருமானம்	**1,216,542**	**1,298,019**	**6.7**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

மதுவரிகளிலிருந்தான வருமானச் சேகரிப்பு 2020 இல் இருந்த ரூபா 321.9 பில்லியன்களிலிருந்து 2021 இல் 4.7 சதவீதத்தால் ரூபா 306.9 பில்லியன்களுக்குக் குறைவடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020 இல் 2.1 ஆக இருந்து 2021 இல் 1.8 ஆக மதுவரி வருமானம் குறைவடைந்ததுடன், 2021 இல் மோட்டார் வாகனம் மற்றும் சிகரட் ஆகியவற்றிலிருந்தான வரிகள் முறையே 62.9 சதவீதத்தாலும் 6.2 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. வெளியக வர்த்தக வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2020 இல் இருந்த ரூபா 361.6 பில்லியன்களிலிருந்து 2021 இல் 3.3 சதவீதத்தால் ரூபா 349.8 பில்லியன்களுக்குக் குறைவடைந்தது. இதற்குக் சுங்க இறக்குமதித் தீர்வை 43.7 சதவீதத்தால் ரூபா 64.3 பில்லியன்களுக்கு 2021 இல் குறைவடைந்தமையும், பொருட்களுக்கான விசேட தீர்வை 32.5 சதவீதத்தால் ரூபா 55.8 பில்லியன்களுக்கு 2021 இல் குறைவடைந்தமையும் காரணங்களாகும்.

வரைபு 4.2 | வரி வருமானத்தின் வகுதி - 2021



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வருமான வரிகள்

வருமான வரிக் கட்டமைப்பு 2019 இன் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பல வரித் திருத்தங்களால் குறிப்பிடத்தக்க வகையில் புதுப்பிக்கப்பட்டது. இதில் ரூபா 500,000 இலிருந்து ரூபா 3 மில்லியன் வரையான தனிப்பட்ட வருமான வரி நிவாரணம், ரூபா 1.2 மில்லியன் வரையான செலவு நிவாரணத்திற்கான அறிமுகம், ரூபா 600,000 தொடக்கம் ரூபா 3 மில்லியன் வரையான வரி செலுத்தத்தக்க வருமானத் தொகுதிகளின் அதிகரிப்பு, ஆகக்கூடிய தனிப்பட்ட வருமான வரி விகிதம் 24 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைப்பு ஆகியவையும் உள்ளடங்கியிருந்தன. அதே வகையில், விவசாயத்திற்கும், தகவல் தொழில்நுட்பத்திற்கும், செயற்பாட்டுச் சேவைகளுக்கும் அளவற்ற வரிச் சலுகைகள், வரிக்குறைப்புகள், வரி விடுமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளை, நிறுவனங்களுக்கான நிலையான வருமான வரி விகிதம் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. வருமானத் திரட்டுகை மீதான பெருந்தொற்றால் ஏற்பட்ட தாக்கத்துடன் சேர்ந்த குறைவான வரிப் பரிபாலனம் 2020 இல் இருந்த ரூபா 268.2 பில்லியன்கள் வருமான வரி வருமானத்தில் 2021 இல் 37.3 சதவீதமாக கனிசமான வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றதுடன் அது ரூபா 159.5 பில்லியனால் குறைவடைந்தது. 2019 இல் பெயரளவிலான பெறுமானமாக ரூபா 427.7 பில்லியனகளாகக் காணப்பட்டது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020 இல் 1.8 சதவீதமாகவும் 2019 இல் 2.9 சதவீதமாகவும் காணப்பட்டது.

2021 இன் பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியுடன் நிறுவனம் சார்ந்த மற்றும் நிறுவனம் அல்லாத வரிகள், முற்பண தனிநபர் வருமான வரி (APIT), வட்டி மீதான வரி மற்றும் மூலதன ஈட்டுகை வரி ஆகியவற்றின் வருவாய் அதிகரிப்புடன் வருமான வரி வருமானம் 2020 இல் ரூபா 268.2 பில்லியனிலிருந்து 12.6 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 302.1 பில்லியனாக காணப்பட்டது. நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரிகள் 2020 இல் ரூபா 228.0 பில்லியனாக இருந்து 19.7 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 272.8 பில்லியனாக உயர்ந்தது. மேலும், வட்டி மீதான வரி வருமான 2020 இன் ரூபா 10.0 பில்லியனில் இருந்து 24.2 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 12.4 பில்லியனாக உயர்ந்தது. ஏபிஐடி (APIT) 2020 இல் ரூபா 15.0 பில்லியனாக இருந்து 2.5 சதவீத மெதுவான அதிகரிப்புடன் 2021 இல் ரூபா 15.3 பில்லியனாக காணப்பட்டது. மூலதன ஆதாய வரி வருமானம் 2020 இல் ரூபா 358 மில்லியனில் இருந்து 2021 இல் ரூபா 668 மில்லியனாக 86.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் 18 ஆம் எண் நிதிச் சட்டத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்ட தன்னார்வ வெளிப்படுத்தல் மீதான வரியிலிருந்து (வுஏனு), செப்டம்பர் 15, 2021 முதல் டிசம்பர் 31, 2021 வரையான காலப்பகுதியில் வருமானம் ரூபா 175 மில்லியனும் 2022 இன் மார்ச் இறுதியில் மொத்தம் ரூபா 4 பில்லியனும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது வருமானம் அல்லது சொத்துக்களை வெளிப்படுத்தி முதலீடு செய்பவர்களுக்கு, மேற்கண்ட வரியைச் செலுத்துவதன் மூலம் முதலீட்டில் 1.0 சதவிகிதம் என்ற விகிதத்தில் பொது மன்னிப்பு வழங்குகிறது.

பெறுமதி சேர் வரி (VAT)

நிதிச் சேவைகள் 15 சதவீதமாக உள்ள வேளையில் 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக குறைக்கப்படுதல், வருமான திரட்டலில் ஏற்பட்ட தொற்றுநோய் தாக்கத்துடன் இணைந்து,வருடத்திற்கான பெறுமதி சேர் வரி பதிவு எல்லையை ஆண்டுக்கு 12 மில்லியனில் இருந்து 300 மில்லியனாக அதிகரித்தமை என்பவற்றால் பெறுமதிசேர் வரியின் மூலமான வருமானம் 2019 இல் ரூபா 443.9 பில்லியனாகவிருந்து 2020 இல் ரூபா 209 பில்லியனால் குறைந்து ரூபா 233.8 பில்லியனாக காணப்படுகிறது. இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் இயல்பான பொருளாதார நடவடிக்கையுடன் பெறுமதி சேர் வரி வருமானம் 31.8 சதவீதம் அதிகரித்து ரூபா 308.2 பில்லியனாக காணப்பட்டது. இது மதிப்பீட்டில் இருந்து ரூபா 310 பில்லியன் குறைவாக உள்ளது. இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரி வருமானம் 2020 இல் ரூபா 85.7 பில்லியனிலிருந்து ரூபா 122.8 பில்லியனாக உயர்ந்த அதேசமயம் உள்நாட்டு நடவடிக்கைகளின் மீதான பெறுமதிசேர் வரி வருமானம் 2020 இல் ரூபா 148.1 பில்லியனாக இருந்து 2021 இல் ரூபா 185.5 பில்லியன் அதிகரித்தது. இதற்கு 2021 இல் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு விலைகளின் எழுச்சி காரணமாக இருந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெறுமதிசேர் வரியின் சதவீதம் 2020 இல் 1.6 சதவீதத்திலிருந்து 2021இல் 1.8 சதவீதமாக அதிகரித்துள்ள போது மொத்த வரி வருமானத்தில் பெறுமதி சேர் வருமானத்தின் சதவீதம் 2020 இல் 19.2 சதவீதத்திலிருந்து 2021 இல் 23.7 சதவீதமாக அதிகரித்தது, இது 2020 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.0 சதவீத புள்ளிகளால் கீழே உள்ளது. இதேவேளை, ஜனவரி 01, 2022 முதல் நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக 3 சதவீதபுற்றிகளுல் அதிகரித்துள்ளது.

அட்டவணை 4.5 | பெறுமதிசேர் வரி வருமானம்

ரூபா.மில்லியன்

விடயம்	2016	2017	2018	2019	2020	2021 (அ)
உள்நாட்டு	168,817	276,065	283,327	275,089	150,823	185,918
இறக்குமதிகள்	115,339	168,394	179,163	169,914	85,727	122,766
மொத்த வருமானம்	**284,156**	**444,459**	**462,490**	**445,003**	**236,550**	**308,684**
மீளளிப்புக்கள்	686	720	840	1,126	2,764	471
தேறிய வருமானம்	**283,470**	**443,739**	**461,651**	**443,877**	**233,786**	**308,213**
மொ.உ.உ % இல் தேறிய வருமானம்	**2.4**	**3.3**	**3.2**	**3.0**	**1.6**	**1.8**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

உற்பத்தி வரி

முக்கியமாக மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு மற்றும் சிகரெட்டுகளின் மீதான வருமானச் சேகரிபின் பலவீன செயல்முறை, மதுபானம், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் பிற விலக்குப் பொருட்களிலிருந்தான வருமான சேகரிப்பின் அதிகரிப்புக்கு மத்தியில் மது வரிகளின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவும், பெயரளவு அடிப்படையிலும் கணிசமாகக் குறைந்துள்ளது. உற்பத்தி வரிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் 2020 இல் 2.1 சதவீதத்திலிருந்து 2021 இல் 1.8 சதவீதமாகக் குறைந்துள்ளது,

அட்டவணை 4.6 | மதுவரி வருமானம்

ரூபா.மில்லியன்

விடயம்	2016	2017	2018	2019	2020	2021(அ)
மதுபானம்	120,238	113,684	113,944	115,443	120,990	138,637
சிகரெட்	88,752	85,956	92,198	87,367	94,345	88,539
மோட்டார் வாகனம்	186,499	189,740	204,081	130,378	48,760	18,113
பெற்றோலிய உற்பத்திகள்	55,719	73,983	66,318	61,740	53,111	55,339
ஏனைய	3,704	6,091	7,701	4,549	4,727	6,234
மொத்தம்	**454,912**	**469,454**	**484,242**	**399,478**	**321,932**	**306,861**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

மதுபானங்கள் மீதான உற்பத்தி வரியிலிருந்து (Excise Duty) பெறப்பட்ட வருமானம் 2020 இல் ரூபா 121.0 பில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது 2021 இல் 14.6 சதவீதம் அதிகரித்து ரூபா 138.6 பில்லியனாக காணப்பட்டது. 2021 நவம்பர் 12 இல் மதுபானம் மற்றும் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியின் மேல்நோக்கிய திருத்தத்துடன் 2020 உடன் ஒப்பிடும் போது 2021 இல் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணங்களாகும். 2020 இல் 36.9 மில்லியன்செறிம லீற்றர்களாக இருந்த மதுபான உற்பத்தியும் 10.9 சதவீதம் அதிகரித்து 2021 இல் 40.9 மில்லியன் அதிகரித்துள்ளது. இது இலங்கை மதுவரித் திணைக்களத்தில் (EDSL) இல் Foolproof Sticker Management System தொடங்கப்பட்டதன் மூலம் மேலும் ஆதரிக்கப்பட்டது.

அட்டவணை 4.7 | மதுபானத்தின் மீதான உற்பத்தி வரிகளின் திருத்தங்களின் அமைப்பு முறை


ரூபா.மில்லியன்

மதுபான வகைகள்	முந்திய தீர்வை ஒரு லீற்றருக்கு (ரூபா) (2021 நவ 12ற்கு முந்திய)	புதிய தீர்வை ஒரு லீற்றருக்கு (ரூபா) (2021 நவ 12ற்கு பிந்திய)	அதிகரிப்பு வீதம்
விசெட சாராயம்	3,800	4,180	10
கரும்புச் சக்கைகள் / பனை / தென்னை சாராயம்	4,050	4,460	10
உள்நாட்டில் தயாரிக்கும் வெளிநாட்டு சாராயம்	4,150	4,570	10
பியர் (செறிவு - 5% குறைந்தது)	3,200	3,300	3
செறிவு கூடிய பியர் (செறிவு - சமனானது/5% ற்கு கூடியது)	3,200	3,450	8
வைன்	3,200	3,300	3

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரி திணைக்களம்


மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி (excise) வரி வருமானம் 2020 இன் 48.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்களவு 62.9 சதவீதம் குறைந்து 2021 இல் ரூபா 18.1 பில்லியனனாக காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் 105,987 மோட்டார் வாகனங்களின் இறக்குமதியுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி 79.4 சதவிகிதம் குறைந்து 21,832 வாகனங்களாகக் காணப்பட்டமை, 2020 மார்ச் தொடக்கம் கொடுப்பனவு மீதிகளின் அழுத்தத்தை குறைக்கவென மோட்டார் வாகனங்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் தொடர்ச்சியான தாக்கத்தை இது பிரதிபலிக்கிறது

வரைபு 4.3 | சிகரெட் உற்பத்தி மற்றும் உற்பத்தித் தீர்வை வருமானம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்

வரைபு 4.4 | மதுபான உற்பத்தி மற்றும் மதுவரி வருமானம்



குறிப்பு: 2017 இன் பின்னர் மதுபான உற்பத்தியானது நிகர தொகையில்
மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்

அதேசமயம், சிகரெட் வருமானம் 2020 இல் 94.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 இல் 6.2 சதவீதம் குறைந்து ரூபா 88.5 பில்லியனாக காணப்படுகிறது. 2020 இல் 2,287 மில்லியன் குச்சிகளில் இருந்து 2021 இல் 2,384 மில்லியன் குச்சிகள் வரை உற்பத்தியானது 4.3 சதவீதம் அதிகரித்த போதிலும் 67 மிமீ நீளம் கொண்ட சிகரெட்டுகளின் உற்பத்தியில் சரிவு காணப்பட்டது.

இருப்பினும், பெட்ரோலியப் பொருட்களின் மூலம் கிடைத்த வருமானம் 2020 இன் ரூபா 53.1 பில்லியனில் இருந்து 4.2 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 55.3 பில்லியனாக அதிகரித்தது. முக்கியமாக 2021 ஆம் ஆண்டில் எரிபொருளுக்கான தேவை மீண்டும் அதிகரித்தது. நடமாடல் கட்டுப்பாடுகளின் தளர்வு மற்றும் அரசாங்கத்தின் தடுப்பூசி திட்டத்தின் வெற்றியுடன் மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் இதற்கு காரணமாகும்.

அட்டவணை 4.8 | மதுபானம், சிகரெட்டுகளிலிருந்து உற்பத்தி, மதுவரி சேகரிப்பு

ரூபா.மில்

	உற்பத்தி செய்யப்பட்ட அளவு						உற்பத்தி வரி வருமானம்			
ஆண்டு	வன் மதுபானம் (லீற்றர் மில்.)	மாற்றம் %	மாவூறல் மதுபானம் (லீற்றர் மில்.)	மாற்றம் %	சிகரெட் கூறுகளின் எண். மில்)	மாற்றம் %	மதுபானம் (ரூபா.பில்)	மாற்றம் %	சிகரெட் (ரூபா.பில்)	மாற்றம் %
2013	44.2	-11.1	120.2	21.0	4,035	-6.6	66.0	10.2	58.6	8.7
2014	43.9	-0.6	124.5	3.6	3,777	-6.4	69.1	4.6	57.2	-2.3
2015	51.8	17.9	125.8	1.0	4,116	9.0	105.9	53.3	80.0	39.9
2016	55.6	7.3	52.2	-58.5	3,789	-7.9	120.8	14.1	88.8	11.0
2017	46.9	-15.5	71.1	36.3	3,149	-16.9	113.7	-5.9	86.0	-3.2
2018	25.3 **(அ)**	-46.1	11.4 **(அ)**	-84.0	3,150	0.0	113.9	0.2	92.2	7.2
2019	24.7	-2.4	19.1	67.9	2,622	-16.8	115.4	1.3	87.4	-5.2
2020	**22.0**	**-10.9**	11.4	**-40.4**	**2,287**	**-12.8**	**121.0**	**4.9**	**94.3**	**8.0**
2021	**25.0**	**13.6**	12.5	**9.6**	**2,384**	**4.3**	**138.6**	**14.6**	**88.5**	**-6.2**

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்
(அ) 2017 இன் பிறகு வன்மதுபான மற்றும் மாவூறல் மதுபானம் நிகர எடையில்

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதி பொருட்களின் அளவு அதிகரிப்பு மற்றும் 2021 இல் உள்நாட்டு நடவடிக்கைகளின் விரிவாக்கத்துடன் மேம்படுத்தப்பட்ட வரி இணக்கம் என்பனவற்றின் பிரதிபலிப்பின் காரணமாக 2021 இல் இனிப்பு பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பாம் எண்ணெய் கொழுப்பு அமிலம் போன்ற பிற பொருட்களிலிருந்து உருவாக்கப்பட்ட உற்பத்தி வரி வருமானம் 31.9 சதவீதம் அதிகரித்து ரூபா 6.2 பில்லியனாக காணப்பட்டது.

சுங்க இறக்குமதி வரி (CID)

அத்தியாவசியப் பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாக சுங்க இறக்குமதி வரியின் (CID) வருமானம் 2020 இன் ரூபா 114.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் 43.7 சதவீதம் குறைந்து ரூபா 64.3 பில்லியனாக காணப்படுகிறது. மேலதிகமாக, சுங்க இறக்குமதி வரி வரம்புகள் 30 சதவிகிதம், 15 சதவிகிதம் மற்றும் பூஜ்யம் சதவிகிதம் ஆகியவற்றிலிருந்து முறையே 15 சதவிகிதம், 10 சதவிகிதம் மற்றும் பூஜ்யம் சதவிகிதம் என மாற்றியமைக்கப்பட்டதன் மூலம் சுங்க இறக்குமதி வரி வருமானம் குறைவடைந்தது. பெட்ரோல் 92 மற்றும் 95, மசகு எண்ணெய்கள், சூப்பர் டீசல், ஏனைய டீசல் கந்தகம் 10mg/kg (ppm) அதிகமாக உள்ள ஆனால் 500mg/kg(ppm) இற்கு மிகையாகாதவை மேலும் வார்க்காத தங்கக்கட்டிகள் என்பவை 2021 ஆம் ஆண்டின் சுங்க இறக்குமதி வரி வருமானத்தை அதிகரிக்கச் செய்தன. மேலும், கோதுமை தானியம் மற்றும் பால் பவுடர் இறக்குமதிக்கு பொது வரி விலக்கு அளிக்கப்பட்டது மற்றும் கோதுமை மாவுக்கு சலுகை விலைகள் வழங்கப்பட்டன. எனவே, 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் சுங்க இறக்குமதி வரி வருமானம் 35.7 சதவீதமாக இருந்தது.

விசேட வியாபாரப் பண்ட அறவீடு (SCL)

2021 ஆம் ஆண்டில் விசேட வியாபார பண்ட அறவீடு **(SCL)** மூலம் பெறப்பட்ட வருமானம் 2020 இன் 82.7 பில்லியனுடன் ஒப்பிடுகின்றபோது குறிப்பிடத்தக்களவு 32.5 சதவீதம் வீழ்ச்சியடைந்து ரூபா 55.8 பில்லியனாக காணப்பட்டது. இது முக்கியமாக சீனி பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, தேங்காய் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகள் மீதான விசேட வர்த்தக தீர்வை விகிதங்கள் குறைக்கப்பட்டமை காரணமாகும்.

துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL)

துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL) மூலம் கிடைத்த வருமானம் 2020 இல் ரூபா 115.4 பில்லியனுடன் ஒப்பிடும் போது 33.5 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 154.1 பில்லியனாக காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி தீர்வை மூலமான வருமானத்தின் சதவீதம் 2020 இல் 0.8 சதவீதத்திலிருந்து 2021 இல் 0.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் சர்வதேச பெற்ரோலிய விலைகள் 70 சதவிகிதம் அதிகரித்தமையே இதற்கு முக்கிய காரணமாகும். இதன் விளைவாக பெற்றோல் 92 மற்றும் லங்கா ஆட்டோ டீசலில் இருந்து பெறப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி தீர்வை வருமானம் முறையே 41 சதவீதம் மற்றும் 51 சதவீதமாக அதிகரித்துள்ளது. மொபைல் போன்கள் மற்றும் கால்நடை தீவனம் போன்ற பிற இறக்குமதிகளின் சர்வதேச விலைகள் அதிகரிப்பும் 2021 இல் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி தீர்வை வருமானத்தை அதிகரித்தது.

பொருட்கள் ஏற்றுமதி மானியத் திட்ட வரி (Cess)

2021 இன் வரவு செலவுத்திட்டத்தின் பொருட்கள் ஏற்றுமதி மானியத் திட்ட வரி விகிதங்களின் மேல்நோக்கிய திருத்தம் காரணமாக பொருட்கள் ஏற்றுமதி மானியத் திட்ட வரி மூலம் பெறப்படும் வருமானம் 2020 இன் ரூபா 49.3 பில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது 2021 இல் 53.2 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 75.5 பில்லியனாக காணப்பட்டது இறக்குமதி மீதான செஸ் தீர்வை மூலம் பெறப்படும் வருமானம் 2020 இல் 47.5 பில்லியனாகவிருந்து குறிப்பிடத்தக்களவு 54.2% சதவீதம் அதிகரித்து 2021 இல் 73.3 பில்லியனாக காணப்படுகிறது இறக்குமதி செஸ் வருமானத்தில் பீடி இலைகள் மிகப்பெரிய பங்களிப்பை அளித்தன மற்றும் போர்ட்லேண்ட் சிமெண்ட், மசகு எண்ணெய், பீங்கான் பொருட்கள், டயர்கள், கட்டிட கட்டமைப்புகள் மற்றும் கட்டமைப்புகளின் பகுதி மற்றும் நெய்த துணிகள் ஆகியவை மிகப்பெரிய பங்களிப்பாளர்களாக மாறியுள்ளன ஏற்றுமதி மீதான செஸ் வருமானம் 2020 இன் ரூபா 1.8 பில்லியனிலிருந்து 25.2 சதவீதமாக அதிகரித்து 2021 இல் ரூபா 2.2 பில்லியனாக காணப்படுகிறது. தேயிலை, இல்மனைட், தேங்காய், கிராணைட் மற்றும் வெளிர் க்ரீப் ரப்பர் ஆகியவை ஏற்றுமதி மீதான செஸ் வருமானத்தில் முக்கிய பங்களிப்பை அளித்தன. 2021 இற்கான செஸ் வருமான சேகரிப்பானது மதிப்பீட்டில் 107.9 சதவீதமாக காணப்படுகிறது.

அட்டவணை 4.9 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் மற்றும் விவசாயத்துறை அபிவிருத்திக்கான அரசாங்க மானியம் : 2019-2021

ரூபா.மில்

விபரம்	2019	2020	2021 (அ)	விபரம்	2019	2020	2021
ஏற்றுமதிகள் மீதான செஸ்வரி	**2,300**	**1,775**	**2,223**	**வர்த்தகப் பயிர் அபிவிருத்தி**	**37,085**	**39,595**	**24,056**
தேயிலை- தேயிலை (வரியும் ஏற்றுமதிக் கட்டுப்பாடும்) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் என்பவற்றின் கீழ்	721	408	482	தேயிலை	588	737	1,177
இறப்பர்- இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழ்	6	7	8	இறப்பர்	564	823	897
தெங்கு- தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	144	196	180	தெங்கு	641	734	322
ஏ.அ.ச. செஸ்- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	1,428	1,164	1,553	மரமுந்திரிகை	70	85	64
இறக்குமதிகள் மீதான செஸ் வரி	**48,403**	**47,534**	**73,320**	**சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (கறுவா,கொக்கோ, கோப்பி.மிளகு)**	**256**	**529**	**361**
இறக்குமதிகள் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	48,403	47,534	73,320	மொத்த விவசாயத்துறை அபிவிருத்திக்கான உர மானியம்	34,966	36,687	21,235
மொத்தம்	**50,703**	**49,309**	**75,543**	**மொத்தம்**	**37,085**	**39,595**	**24,056**

மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

ஏனைய வரிகள்

தொலைத் தொடர்பு அறவீடு (TL):

தொலைத் தொடர்பு வரி மூலம் கிடைத்த வருமானம் 2020 இன் 13.1 பில்லியனிலிருந்து மெதுவாக 2.2 சதவீதம் குறைவடைந்து ரூபா 12.8 பில்லியனாக காணப்படுகிறது. 2021 இல் தொற்றுநோய் காரணமாக e- தளங்களுக்கு மாறியவுடன் தொலைத் தொடர்பு சேவைகளின் பயன்பாடு குறிப்பாக இணைய பயன்பாடு அதிகரித்த போதிலும், இணைய சேவைகள் மீதான பூஜ்ஜிய வரியின் தொடர்ச்சி மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்யும் கருத்து காரணமாக குரல் அழைப்புகள் குறைக்கப் பட்டதனால் தொலைத் தொடர்பு வரியில் இருந்து பெறப்படும் வருமானம் குறைந்துள்ளது. இருப்பினும், 2021 இல் தொலைத் தொடர்பு வரியின் திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானத்தில் 64.2 சதவீதத்தை எட்டியது.

புறப்படுகை அறவீடு :

சர்வதேச பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் விமான நிலையங்கள் மூடப்பட்டதனால் புறப்படுனாசுற்றிகள் வரியிலிருந்து பெறப்படும் வருமானம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் 56 சதவீதம் குறைந்து 2020 இன் ரூபா 7.5 பில்லியனிலிருந்து 2021 இல் 3.3 பில்லியனாக குறைவடைந்தது.

பந்தயம் மற்றும் சூதாட்ட வரி :

முக்கியமாக கேசினோக்கள் மற்றும் பந்தய மையங்கள் படிப்படியாக மீண்டும் திறக்கப்பட்டதன் ஒருங்கிணைந்த விளைவுகள் மற்றும் சுற்றுலா மற்றும் ஓய்வு துறைகளின் மீட்சி ஆகியவற்றின் காரணமாக பந்தயம் மற்றும் கேமிங் வரி மூலம் பெறப்படும் வருமானம் 2020 இன் ரூபா 1.4 பில்லியனிலிருந்து 2021 இல் 1.9 பில்லியனாக அதிகரித்தது.

4.4.2 வரி அல்லாத வருமானம்

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்களின் பரிமாற்றல்கள் மூலம் பெறப்பட்ட வருமான அதிகரிப்பின் பிரதிபலிப்பாக பெயரளவில், வரி அல்லாத வருமானம் 2020 இன் ரூபா 151.4 பில்லியனிலிருந்து மிதமான 5.0 சதவீதம் அதிகரிப்புடன் 2021 இல் ரூபா 159.1 பில்லியனாக காணப்பட்டது. வரி அல்லாத வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020 இல் 1.0 சதவீதமாகவும் 2021 இல் 0.9 சதவீதமாகவும் இருந்தது. 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் மொத்த வருமானத்தில் வரி அல்லாத வருமானத்தின் பங்கு 11.0 சதவீதமாக மாறாமல் இருந்தது.

2021 இல் பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியுடன், அதிக இலாபத்தைப் பதிவு செய்ததின் காரணமாக அரசுடமை நிறுவனங்களின் இலாபம் மற்றும் பங்கு இலாப பரிமாற்றங்கள் 2020 இல் ரூபா 17.6 பில்லியனாகவிருந்து குறிப்பிடத்தக்க வகையில் கோவிட்-19 தொற்று நோயின் எதிர்மறையான தாக்கங்களைப் பிரதிபலிக்கும் வகையில், வாடகை வருமானம், வட்டி வருமானம் மற்றும் கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் மூலமான வரி அல்லாத வருமானம் 2021 இல் 57.8 சதவீதம், 11.4 சதவீதம் மற்றும் 10.0 சதவீதமாக குறைந்து முறையே ரூபா 5.1 பில்லியன், ரூபா 6.5 பில்லியன் மற்றும் ரூபா 42.6 பில்லியன்களாக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் சமூகப் பொறுப்பு வரியின் வருமானம் 6.8 சதவீதம் அதிகரித்து ரூபா 34.6 பில்லியனாக காணப்பட்டது. முக்கியமாக பெறப்பட்ட திறைசேரி பத்திரத்தின் கொடுப்பனவுகளில் ஓர் அதிகரிப்பு காரணமாக வரி அல்லாத வருமானத்தின் ஏனைய மூலங்கள் 2020 இல் ரூபா 10.6 பில்லியனாக இருந்து கணிசமாக 131.4 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 24.6 பில்லியனாக காணப்பட்டது.

அட்டவணை 4.10 | வரியல்லாத வருமானம்

ரூபா.மில்லியன்

விபரம்	2016	2017	2018	2019	2020	2021	2020/2021 (% மாற்றம்)	2021 (மொத்த வரியல்லாத வருமானம் %)
வட்டி / வாடகை	15,806	11,845	13,731	18,547	19,351	11,556	-40.3	7.3
இலாபங்கள், பங்கிலாபங்கள்	53,998	53,998	41,828	27,857	17,624	30,591	73.6	19.2
விற்பனைகள் / அறவீடுகள்	66,575	66,575	105,202	73,884	47,370	42,645	-10.0	26.8
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	22,940	22,940	25,214	28,985	32,417	34,619	6.8	21.8
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	-	–	15,000	–	24,009	15,012	-37.5	9.4
ஏனையவை	5,995	5,995	6,681	6,701	10,646	24,630	131.4	15.5
மொத்தம்	165,314	161,353	207,656	155,974	151,417	159,052	5.0	100.0

மூலம் : திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அட்டவணை 4.11 | அரசாங்க வருமானத்தின் விலகல் பகுப்பாய்வு

விடயம்	2020	2021 மதிப்பீடு	திருத்தப்பட்ட மதிப்பீடு 2021	2021 (அ)	காரணங்கள்
வருமான வரி	268.2	371.0	295	302.1	துரித தடுப்பூசி திட்டத்தால் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியின் பயனால் வருமான வரி வருமானம் 2020 இல் ரூபா 268.2 பில்லியனிலிருந்து 12.6 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 302.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது, இது 2021 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 81.4 சதவிகிதமாகும். 2021 இல் நிறுவனம் சார்ந்த மற்றும் நிறுவனம் சாராத வரி வருமானம் 19.7 சதவீதம் அதிகரித்து முன்னைய வருடத்தைக்காட்டிலும் ரூபா 272.8 பில்லியனாக உடர்வடைந்தது.2021 இல் PAYE மூலதன ஆதாய வரி மற்றும் பிடித்தம் செய்யும் வரியும் (withholding tax) போன்றவற்றிலிருந்தனான வருமானம் முறையே 2.5 சதவீதம் அதிகரித்து ரூபா 15.4 பில்லியன், 86. 8 சதவீதம் அதிகரித்து ரூபா 668 மில்லியன் மற்றும் 24.2 சதவீதம் அதிகரித்து ரூபா 12.4 பில்லியன்களாகவும் 2020 உடன் ஒப்பிடும் போது காணப்பட்டது. மேலும், தன்னார்வ வெளிப்படுத்தல் மீதான வரி செப்டம்பர் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்டது, இதன் மூலம் 2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் ரூபா 174.6 மில்லியன் பெறப்பட்டது.
பெறுமதிசேர் வரி (VAT)	233.8	310.0	310	308.2	பெறுமதிசேர் வருமானம் 31.8 சதவீதம் அதிகரித்து 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 308.2 பில்லியன் ஆகும், இது 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர மதிப்பீட்டில் 99.4 சதவிகிதமாகும். பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி, உலகளாவிய மற்றும் உள்நாட்டு சந்தைகளில் பொருட்கள் மற்றும் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு மற்றும் இறக்குமதியின் விரிவாக்கம் ஆகியவை இதற்கு முக்கிய காரணங்களாகும். 2021 இல் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகள் மூலமான பெறுமதிசேர் வருமானம் (VAT) முறையே 25.3 சதவீதம் அதிகரித்து ரூபா 185.5 பில்லியனாகவும் மற்றும் 43.2 சதவீதம் அதிகரித்து ரூபா 122.8 பில்லியன்களாக் காணப்பட்டது.

விடயம்	2020	2021 மதிப்பீடு	திருத்தப்பட்ட மதிப்பீடு 2021	2021 (அ)	காரணங்கள்
உற்பத்தி வரி	321.9	475.0	311	306.9	2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் உற்பத்தி வரிகளின் வருமானம் 4.7 சதவிகிதம் குறைந்துள்ளது, இது 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர மதிப்பீட்டில் 64.6 சதவிகிதம் ஆகும். வெளிநாட்டு நாணய வெளியேற்றத்தின் அழுத்தத்தைக் குறைப்பதற்காக மார்ச், 2020 முதல் நடைமுறைக்கு வந்த மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு, மோட்டார் வாகனங்களின் வருமானம் குறைவதற்கு பங்களித்தது. 2020 இல் 2,287 மில்லியன் குச்சிகளில் இருந்து 2021 இல் 2,384 மில்லியனாக உற்பத்தி 4.3 சதவிகிதம் அதிகரித்த போதிலும். 2021 ஆம் ஆண்டில் சிகரெட் மீதான உற்பத்தி வரி வருமானம் 6.2 சதவீதம் குறைந்து ரூபா 88.5 பில்லியனாகியதற்கு, 67 மிமீ நீளம் கொண்ட சிகரெட்டுகளின் உற்பத்தி குறைவு காரணமாகும். இருப்பினும், மதுபானங்கள் மூலம் பெறப்பட்ட வருமானம், 2020 இன் ரூபா 121.0 பில்லியன் 14.6 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 138.6 பில்லியனாக காணப்பட்டது. 2021 இன் இறுதியில் இறுக்க கட்டுப்பாடுகள் தகர்த்தப் படடமையானது இந்த செயல்திறனுக்காக முக்கிய காரணமாகும். பெட்ரோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 4.2 சதவீதம் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்த எரிபொருள் இறக்குமதிகள் ஆகியவற்றுடன் தொற்றுநோய் காரணமாக விதிக்கப்பட்ட இறுகக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் மூலம் எரிபொருள் தேவைக்கு ஏற்பட்ட அதிகரிப்பும் காரணமாகும். 2021 இல் சீனி மற்றும் கொழுப்பு அமிலங்கள் போன்ற பிற பொருட்களின் மூலம் பெறப்படும் வருமானம், உற்பத்தி வரி வருமானத்திற்கு 31.9 சதவீதம் அதிகரிப்பை ரூபா 6.2 பில்லியனாகக் காணப்பட்டது.

விடயம்	2020	2021 மதிப்பீடு	திருத்தப்பட்ட மதிப்பீடு 2021	2021 (அ)	காரணங்கள்
இறக்குமதி வரிகள்	114.2	180.0	100	64.3	இறக்குமதி வரி வருமானமானது 2020 உடன் ஒப்பிடும் போது 43.7 சதவீதம் குறைந்து 2021 இல் 64.3 பில்லியனாக காணப்பட்டது, இது 2021 இன் வருடத்திற்கான மதிப்பீட்டில் 35.7 சதவிகிதமாகும். நவம்பர், 2020 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வரும் வகையில் 2021 இல் சுங்க இறக்குமதித் தீர்வை எல்லைகளை 30%, 15%, 0 இலிருந்து 15%, 10%, 0 ஆகத் திருத்தியதன் மூலம் வருமானத்தில் நேர்மறை தாக்கத்தை விட இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளின் காரணமாக இந்த சரிவு ஏற்பட்டது.
துறைமுகம் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி (PAL)	115.4	170.0	140	154.1	துறைமுகம் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி இல் இருந்து பெறப்படும் வருமானம் கணிசமாக 33.5 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 154.1 பில்லியனானது, இது 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 90.7 சதவிகிதமாகும், ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவுடன் இறக்குமதி 28.5 சதவீதம் அதிகரித்ததே இதற்கு முக்கியக் காரணமாகும்.
விசேட பொருட்கள் வரி (SCL)	82.7	110.0	60	55.8	2021 ஆம் ஆண்டில் விசேட பொருட்கள் தீர்வை இன் வருமானம் 32.5 சதவீதம் குறைந்து ரூபா 55.8 பில்லியன்களாகியது, இது 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர மதிப்பீட்டில் 50.8 சதவிகிதத்தை எட்டுகிறது. இந்த செயல்திறன், உலகளாவிய பொருட்களின் விலை உயர்வுக்கு பதிலளிக்கும் வகையில் உள்ளூர் சந்தை விலைகளை குறைக்க முக்கியமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களான சீனி, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, தேங்காய் எண்ணெய் மற்றும் பருப்பு என்பவற்றின் விலை மாற்றங்களாலும், பழங்கள், கானாங்கெளுத்தி மீன், கருவாடு, மாலைதீவு மீன், பட்டாணி, கொண்டைக்கடலை மற்றும் குரக்கன் போன்றவற்றின் மீதான வரி நீட்டிப்பினாலும் சாத்தியமானது.

விடயம்	2020	2021 மதிப்பீடு	திருத்தப்பட்ட மதிப்பீடு 2021	2021 (அ)	காரணங்கள்
ஏனைய வரிகள்	80.2	108.0	109	106.5	ஏனைய வரிகளின் மூலமான வருமானம் 2020 இல் ரூபா 80.2 பில்லியனாகவிருந்து 32.8 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 106.5 பில்லியனாகவும், 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர மதிப்பீட்டில் 98.6 சதவீதத்தையும் கொண்டிருந்தது. 2021 இல் வரவு செலவுத்திட்டம் நடத்தப்பட்ட செஸ் வரி விகிதங்கலின் மேல் நோக்கிய திருத்தத்தின் தாக்கத்தினால் முக்கியமாக, செஸ் வரி 53.2 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 75.5 பில்லியனாக உயர்ந்தமை இதற்கு காரணமாகும். இருப்பினும், சர்வதேச உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அழைப்புக்கான கால அளவு முறையே 23.7 சதவீதம் மற்றும் 36.4 சதவீதம் குறைந்ததால் தொலைத்தொடர்பு வரி 2.2 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும், ஏனைய வரிகள் அதன் வருமானத்தை 14.7 சதவீதம் அதிகரித்து ரூபா 17.7 பில்லியனாக அதிகரித்ததன் மூலம் விலகலைக் குறைக்க உதவியது
வரி அல்லாத வருமானம்	151.4	227.0	170	159.1	முக்கியமாக வாடகை, வட்டி வருமானம், மத்திய வங்கியின் இலாபப் பரிமாற்றங்கள் மற்றும் கட்டணங்கள் குறைவதால்,வரி அல்லாத வருமானம் 5.0 சதவீதம் அதிகரித்து முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 159.1 பில்லியனானது, இது 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர மதிப்பீட்டில் 70.1 சதவீதத்தை கொண்டுள்ளது. எவ்வாறாயினும், அரசுடைமை நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்களிலிருந்து ரூபா 30.6 பில்லியனும் சமூக பாதுகாப்பு பங்களிப்புகளிலிருந்து ரூபா 34.6 பில்லியனும் மற்றும் ஏனைய வரி அல்லாத வருமானம் ரூபா 24.6 பில்லியனும் 2021 இல் வரி அல்லாத வருமானத்தை அதிகரிக்க உதவியது.
மொத்தம்	**1,368.0**	**1,951.0**	**1,495.0**	**1,457.1**	

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.

(அ) தற்காலிகமானது.

கட்டம் 4.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் : சட்டத் திருத்தங்கள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்	
01.01.2021	- 2020 முதல் 2030 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீத அரசாங்கப் படுகடன் இலக்கை நீடிப்பதற்கு மற்றும் - உத்தரவாத எல்லையை 10 சதவீத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு.
வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்	
2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்	
வருமான வரி விலக்களிப்புக்கள்	
01.04.2021	- கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட இலங்கை ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியத்திற்கு (SLREIT) விற்கப்பட்ட, பரிமாற்றம் செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட காணிகள் அல்லது கட்டடங்கள் தேறல் மூலம் ஆளொருவரினால் பெறப்பட்ட ஈட்டுகைகள். - இலங்கை ஆதன விற்பனை முதலீட்டு நம்பிக்கை நிதியத்தின் ஏதேனுமொரு அலகு உரிமையாளரினால் முதலீடு அல்லது வியாபாரமொன்றின் மூலதனச் சொத்தொன்றின் தேறல் மூலம் ஈட்டப்பட்ட தொகைகள் அல்லது அலகுகளின் தேறல் மீதான பங்கிலாபங்களும் ஈட்டுகைகளும். - ஏதேனுமொரு நலன்புரி அமைப்பினால் பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி (அங்கத்தவர்களின் சேமிப்பினை ஊக்குவிக்கின்ற நல நிதியம் உள்ளடங்கலாக). - பல்தேசிய கம்பனியொன்றினால் ஏதேனும் உள்நாட்டு வங்கியொன்றில் மதிப்பீட்டாண்டிற்காக, அதன் இறக்குமதிச் செலவினத்தினை மேற்கொள்ளும் வகையில் வெளிநாட்டு நாணயத்தில் வைப்புச்செய்யப்பட்டு திறக்கப்பட்டு, பேணப்படுகையில், அத்தகைய வைப்பு மூலமாக பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி. - இலங்கை அரசாங்க திறைசேரி உத்தரவாதங்களை அடிப்படையாகக் கொண்டு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் சமுர்த்தி சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளினால் ஈட்டப்பட்ட அல்லது திரட்டப்பட்ட வட்டி அல்லது தள்ளுபடிகள். - 2021, ஏப்ரல் 01 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் விநியோகிக்கப்பட்ட இலங்கை சர்வதேச அரசிறையாண்மை முறிகளின் தேறல் மூலமும் அத்தகைய முறிகளில் ஐ.அ.டொ.100 மில்லியனினை விஞ்சாத திரட்டிய முதலீடு ஒன்றினை மேற்கொண்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் ஈட்டப்பெற்ற அல்லது உழைக்கப்பெற்ற ஈட்டுகைகள். - தங்கம், இரத்தினக் கற்கள் அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதியிலிருந்து அல்லது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு பட்டைத்தீட்டி மெருகூட்டி அவற்றினை ஏற்றுமதிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ள வியாபாரமொன்று, அவ்வாறு, தங்கம், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களை பட்டை தீட்டி, மெருகூட்டி மீள ஏற்றுமதிசெய்வதன் மூலம் ஈட்டிய அல்லது உழைத்த இலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள், வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்டு, அவை உள்நாட்டு வங்கிக் கணக்கொன்றுக்கு அனுப்பப்படுகையில். - தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கருத்தாக்கத்தின் கீழ் தரப்படுத்தப்பட்டு மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனுமொரு தொழிற்கல்வித் திட்டத்திலிருந்து ஏதேனுமொரு தொழிற்கல்வி நிறுவனத்தினால் பெறப்பட்ட அல்லது ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் ஈட்டுகைகள், அத்தகைய நிறுவனம் தமது மாணவர் ஆட்சேர்ப்பினை முந்தைய ஆண்டின் மாணவர் ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் ஒப்பிடும்போது குறித்த மதிப்பீட்டு ஆண்டிற்காக இரட்டிப்பாக்கி, பேணுமெனில். மேற்குறித்த நோக்கத்திற்காக ஐந்து வருட கால விலக்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
01.04.2021	- இலங்கையில் வணிகத்தை மேற்கொள்ளும் வதிவல்லா கம்பனியொன்று இலங்கை நிரந்தர ஸ்தாபனத்தின் மூலம் இலாபங்களையும் வருமானத்தையும் ஈட்டி, அத்தகைய மொத்த இலாபத்தை தக்க வைத்து, இலங்கையில் அதன் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக குறைந்தபட்சம் மூன்று ஆண்டு காலம் முதலீடு செய்யுமெனில் அல்லது கொழும்பு பங்குச் சந்தையில் இருந்து ஏதேனும் பங்குகளை அல்லது ஏதேனும் திறைசேரி உண்டியல்களை பெறுவதற்காக அல்லது ஏதேனும் திறைசேரி முறிகளை, அல்லது இலங்கை சர்வதேச இறையாண்மை முறிகளைப் பெறுவதற்காக பயன்படுத்துமெனில், அத்தகைய வதிவல்லாக் கம்பனிக்கு பணவனுப்பல் வரி (பணவனுப்பல் இலாபத்தின் பேரில் 14 சதவிகிதத்தில்)விலக்களிக்கப்படுகிறது. அத்தகைய விலக்களிப்பானது மூன்று ஆண்டுகளுக்கு ஏற்புடையதாகும்.
வரி விடுமுறைகள்	
01.04.2021	பின்வரும் புதிய வியாபாரங்கள் மூலம் பெறப்படுகின்ற அல்லது ஈட்டப்படுகின்ற ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களுக்காக (மூலதன ஈட்டுகைகள் நீங்கலாக) வரி விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக இரண்டு வருட நடைமுறைப்படுத்தற் காலம் கருத்திற்கொள்ளப்படும். - கட்டுமானத் துறையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக இலங்கையில் நிறுவப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தனித் தளத்தில் மீள்சுழற்சிசெய்யப்பட்ட கட்டுமானப் பொருட்களை விற்பனை செய்யும் நி-றுவனமொன்றிற்கு பத்து ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும். - மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஒழுங்குறுத்தப்பட்டு, தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சிக் கருத்தாக்கத்தின் கீழ், நியமமான ஏதேனும் நிறுவனமொன்றிலிருந்து தொழிற்கல்வியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் தனிநபர் ஒருவரினால் 2021 ஏப்பிறல் 01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் வணிகமொன்றிற்காக ஐந்து ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும். - வதிவோர் ஒருவரினால் இலங்கையில் படகுகள் அல்லது கப்பல்களை தயாரிப்பதில் தொடங்கப்பட்டு, அத்தகைய படகுகள் அல்லது கப்பல்களை விநியோகிப்பதில் இருந்து ஏதேனும் ஈட்டுகைகள் அல்லது இலாபங்கள் பெறப்படுகையில் அல்லது ஈட்டப்படுகையில் அத் தொழில்முயற்சிக்காக ஏழு ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும். - நூற்றுக்கும் குறையாத மெகா வோட் (100 ஆறு) சூரிய அல்லது காற்றலை மின் சக்தியினை உற்பத்திசெய்யும் ஆற்றல் கொண்ட ஏதேனுமொரு "புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருத்திட்டம்" தாபிக்கப்பட்டு, அத்தகைய சக்தி மூலம் தேசிய வலைப்பின்னலுக்கு மின்சக்தி வழங்கப்படுகையில் ஏழு ஆண்டுகள் வரி விலக்களிக்கப்படும். - உள்நாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, வதிவோரொருவர் தகவல்தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணித்து அதனோடு தொடர்புபட்ட உபகரணங்களை நிறுவி அல்லது அத்தகைய கட்டுமானத்திற்கு அல்லது நிறுவலுக்குத் தேவையான தொழில்நுட்ப சேவைகளை இலங்கையில் வழங்குவது தொடர்பில், 2021 ஜனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட அத்தகைய தொழில்முயற்சிக்காக ஐந்தாண்டுகள் வரி விலக்களிக்கப்படும்.

<table>
<tr><th>பயன்வலுத் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td colspan="2">சலுகை ரீதியான வரி விகிதங்கள்</td></tr>
<tr><td>01.04.2021</td><td>- இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண விற்பனையின் போது தனிநபர்கள் மீது அதிகபட்ச விகிதமாக 14 சதவீதத்திலும் கம்பனிகளுக்கு தள விகிதமாக 14 சதவீதத்திலும் வரி விதித்தல்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட எரிசக்தியினை தேசிய வலைப்பின்னலுக்கு வழங்குவதன் பேரில் பெற்றுக் கொள்ளும் தொகைகளுக்கு தனிநபர்கள் மீது அதிகபட்ச விகிதமாக 14 சதவீதத்திலும் கம்பனிகளுக்கு தள விகிதமாக 14 சதவீதத்திலும் வரியினை ஏற்புடையதாக்கல்.
- 2022, ஏப்பிறல் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும் மூன்று மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக (2022/2023 முதல் 2024/2025வரை) 2021, சனவரி 01 ஆம் திகதி முதல் 2021, திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியின் போது கொழும்புப் பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் அதன் பங்குகளை பட்டியற்படுத்துகின்ற ஏதேனுமொரு கம்பனி மீது 14 சதவீத வரி விகிதம் ஏற்புடமையாக்கப்படுகிறது.</td></tr>
<tr><td colspan="2">வரிப் பொறுப்புடமையைக் குறைத்தல்</td></tr>
<tr><td>01.04.2021</td><td>
<table>
<tr><th>வருமானம்</th><th>வரி குறைப்பு</th></tr>
<tr><td>2021/2022 மதிப்பீட்டு ஆண்டிற்காக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் உரிமம் வழங்கப்பட்டு கொழும்புப் பங்குச் சந்தையில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னரும் ஆனால் 2021 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் அதன் பங்குகளைப் பட்டியற்படுத்துகின்ற ஏதேனும் கம்பனியொன்றினால் (முதலீட்டுச் சபைக் கம்பனிகள் உள்ளடங்கலாக ஆனால் முதலீட்டுச் சொத்துக்களின் தேறலில் இருந்தான ஈட்டுகைகள் நீங்கலாக) செலுத்தத்தக்க திரட்டிய வருமான வரி மீது.</td><td>50%</td></tr>
<tr><td colspan="2">பன்னாட்டுக் கம்பனியொன்றினால் பெறப்பட்ட பங்கிலாப வருமானத்துடன் தொடர்புற்ற வரிப் பொறுப்புடைமை மீது.</td></tr>
<tr><td>(i) 2020/2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021/2022 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதிகள் குறைந்தபட்சம் 30 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில்,</td><td>25 %</td></tr>
<tr><td>(ii) 2021/2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022/2023 நிதியாண்டில் ஏற்றுமதிகள் குறைந்தபட்சம் 50 சதவீதத்தினால் அதிகரிக்குமெனில்.</td><td>50 %</td></tr>
<tr><td>(iii) 2020/2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023/2024 இல் குறைந்தபட்சம் 50 சதவிகிதம் ஏற்றுமதி அதிகரித்தால் அல்லது மேலே (ii) இல் உள்ள அதே நிலை 2023/2024 இல் பராமரிக்கப்படுமாயின்</td><td>50 %</td></tr>
<tr><td>பண்ணைச் செயற்பாடொன்றின் மூலம் உற்பத்திசெய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் அதே உற்பத்தியாளரினால் தயாரிப்பு அல்லது பதப்படுத்தல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப் படுமாயின், அவற்றுடன் தொடர்புற்ற வரிப் பொறுப்பின் பண்புக்கூறு அளவின் மீது.</td><td>25%</td></tr>
</table>
</td></tr>
</table>

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
மதிப்பிடத்தக்க வருமானக் கணிப்பீட்டில் கழிப்பனவுகள்	
01.04.2021	- சந்தை ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் அல்லது விளம்பரப் பிரச்சாரங்களின் தயாரிப்பு, பிரதான ஊடகங்களில் அல்லது சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தல், உற்பத்தியினை அறிமுகப்படுத்தல் அல்லது பிரச்சாரம் மற்றும் செயலாக்கம், விற்பனைப் புள்ளியில் பொருட்களின் மேம்பாடு அல்லது அச்சிடல் ஆகியவை மீது ஏற்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் செலவினங்கள் மூலதன அல்லது வருவாய் இயல்பினைக் கொண்டிருந்தாலும் வியாபாரத்திலிருந்தான வருமானத்தினைக் கணிக்கும் போது கழிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறது. - தொழிற்பயிற்சிப் பாடநெறியொன்றின் பின்னர் இளைஞர் மற்றும் யுவதிகளினால் ஆரம்பிக்கப்படுகின்ற வியாபார நடவடிக்கையொன்றுக்காக ஆரம்ப கட்ட மூலதனமாக வழங்கப்பட்ட ஏதேனும் கடன்கள் மீது அத்தகைய நிதி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நிதிச் செலவுகள், அத்தகைய நிதி நிறுவனங்களுக்காக கழிக்கக்கூடிய செலவாக கருதப்படும். (இது 5 வருட வரி விடுமுறைக்காக தகுதிபெறுகின்றது).
புதிய தகைமைக் கொடுப்பனவுகள்	
01.04.2021	- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் உறுதிசெய்யப்பட்டு அறிவுறுத்தப்பட்டவாறு சமுர்த்திப் பயனாளிக் குடும்பமொன்றினைச் சேரந்த பெண் தனி நபரொருவருக்கு கடையொன்றினைத் தாபிப்பதற்காக வதிவோர் ஆளொருவரினால் பணம் மூலம் அல்லது வேறுவிதமாக மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு. - நிதி நிறுவனமொன்றினால் வேறேதும் நிதி நிறுவனமொன்றினைப் பற்றுகையில் அல்லது கூட்டிணைக்கையில், அனைத்து விடயங்களும் விடயத்திற்கு விடய அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கண்டறியப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பற்றுகை அல்லது கூட்டிணைப்பில் ஏற்பட்ட செலவினம். மொத்தமாக கழிக்கப்படக் கூடிய செலவினமானது, மூன்று வருட காலப்பகுதிக்காக சமதொகைகளாகப் பிரிக்கப்பட்டு, மதிப்பிடத்தக்க வரு-மானத்திலிருந்து மொத்தத் தகைமைக் கட்டணம் வரையில் கழிக்கப்படுதல் வேண்டும். - ஏதேனும் திரைப்படமொன்றின் உற்பத்திச் செலவினம் (அத்தகைய திரைப்படத்தின் விளம்பரச் செலவு உள்ளடங்கலாக) ரூபா ஐந்து மில்லியனை விஞ்சாது தய-ாரிக்கப்படுமெனில் அல்லது சினிமாக் கொட்டகையொன்றினை புதிதாக நிரு-மாணித்தல், அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கல் என்பன ரூபா இருபத்து ஐந்து மில்லியனினை விஞ்சாதிருப்பின் அல்லது சினிமாக் கொட்டகையென்றின் புனரமைப்புச் செலவினம் ரூபா பத்து மில்லியனுக்கு மேற்படாதிருப்பின். கழிப்பனவானது ஆண்டின் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டு அடுத்து வரும் ஆண்டுக்காக முன்கொண்டு செல்லப்படமுடியும்.

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
"குறிப்பீடு செய்யப்பட்ட முயற்சிகள்" எனக் கருதப்படுதல்	
01.04.2021	பின்வரும் வியாபாரங்கள் 14 சதவீத விகிதத்திற்கு ஏற்புடையதான குறிப்பீடு செய்யப்பட்ட முயற்சிகள் என கருதப்படுகின்றன: - குறிப்பீடுசெய்யப்பட்ட துறைமுக வளாகமொன்றினுள் உள்நாட்டு சேமிப்புத் தொட்டி (பங்கர்) வழங்குநர்களுக்கு கப்பல் எரிபொருள் வழங்குவது உட்பட கப்பல் எரிபெ-ாருள் வழங்குவதற்காக வழங்கப்பட்ட சேமிப்புத் தொட்டி சேவைகள் - 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ள, ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டுள்ள கம்பனியொன்றினால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களை பின்வருவனவற்றிற்கு விற்பனை செய்கையில் - (அ) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் வரி விடுமுறையினை பெற்றுள்ள ஏதேனும் கம்பனியொன்று உட்பட, 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ், இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளதும் மற்றும் அதன் கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில் அத்தகைய ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரித் தீர்வையற்ற முறையில் மூலப் பொருட்களை அல்லது கருத்திட்டம் சார்ந்த பொருட்களை இறக்குமதிசெய்ய அனுமதி பெற்றுள்ள ஏதேனுமொரு கம்பனி அல்லது (ஆ) ஏதேனும் அரசாங்க அதிகாரத்தின் கீழ் குறிப்பிட்ட சில பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு தகுதிபெறுகின்ற, எனினும் 2021 ஏப்ரல் 1 இல் தொடங்கி 3 ஆண்டுகளுக்குள் இறக்குமதி மாற்றீடாக முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அளவு வரை, எவரேனும் ஆளொருவருக்கு
வரி ஊக்குவிப்புக்கள் மற்றும் தற்காலிக சலுகைகளிலான மாற்றங்கள்	
01.04.2021	- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கின்ற மூன்றாண்டு காலப்பகுதிக்காக ரூபா 500 மில்லியன் வரையறையொன்றுடன் செலவினத்தின் 100 சதவீத மேலதிக கழிப்பனவு வழங்கப்படும். ஆயினும், குறித்த செலவினமானது 2021/2022 முதல் 2023/2024 வரையிலான மூன்று வருடங்களின் போது குை-றந்தபட்சம் 65 சதவீத உள்நாட்டுப் பெறுமதிச் சேர்க்கையுடனான பொருள் அல்லது சேவைக்குக் காரணமாக அமைதல் வேண்டும். - குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் கட்டிடம் கட்டுவது அல்லது அதற்கு சமமான பணி மேம்படுத்தப்பட்ட மூலதன கொடுப்பனவு நோக்கத்திற்காக பரிசீலிக்கப்படும். - உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஆறாவது அட்டவணையின் கீழ் ஐ.அ.டொ.3 மில்லியன் வரையிலான புதிய முதலீடுகள் தொடர்பில் அதிகரித்த மூலதன கொடுப்பனவுகளை கோருவதற்கான செல்லுபடியான காலம் அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. - 2021/2022 முதல் 2022/2023 வரையிலான மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினத்தின் மீது மேலதிக 100 சதவீத கழிப்பனவு வழங்கப்படுகிறது.
வதிவோர் தனிநபர்களுக்கான வரி நிவாரணங்கள்	
01.04.2021	- சூரிய கலத்தில் முதலீடு செய்யும் தனிநபர்களுக்கு அதிகபட்ச கழிப்பனவாக ஆண்டொன்றுக்கு ரூபா 600,000 நிவாரணம் வழங்கப்படும். முதலீடானது வங்கிக் கடன் மூலம் நிதியளிப்புச் செய்யப்படமுடியும் என்பதோடு, இது போன்ற சந்தர்ப்பங்களில் நிவாரண நோக்கங்களுக்காக கடன் மீள்கொடுப்பனவு பரிசீலிக்கப்படும்.

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
வரி நிருவாக ஏற்பாடுகளுக்கான மாற்றங்கள்	
01.04.2021	- ஒற்றை மூலதன ஈட்டு வரி வருமானத்தினை தாக்கல் செய்ய அனுமதித்தல் (மாதத்தின் அனைத்து மூலதன ஈட்டுகை கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியது) தேறல் நிகழ்ந்த இயைபான பஞ்சாங்க மாதத்தின் முடிவின் பின்னர் முப்பது நாட்களுள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல். - எவரேனும் ஆளொருவர் வரி வருமானத்தை தாக்கல் செய்வாராயின், அது இயைபான மதிப்பீட்டாண்டிற்கான அவரது சுய மதிப்பீடாக கருதப்படுவதோடு, அதே நபர் அதே ஆண்டில் தாக்கல் செய்த மூலதன ஈட்டு வரி வருமானம் சுய மதிப்பீடுகளுக்கு வழிவகுத்தலாகாது. - வரி தொடர்பான அனைத்து மூல ஆவணங்களிலும் அல்லது வரி செலுத்துவோரின் அடிப்படை ஆவணங்களிலும் வரி அடையாள எண்ணைப் (வுஐடி) பயன்படுத்துவதை கட்டாயமாக்கல். - அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உட்பட வதிவுள்ள அல்லது வதியாத அனைத்து வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளும் தமது வரிகளை (வருடாந்தக் கூற்றுக்கள் உட்பட) கணனி முறைமையை அல்லது செல்லிட கருவிகளைப் பயன்படுத்தி இலத்திரனியல் கோவை முறையில் (ந-கடைபை) சமர்ப்பிப்பதனை கட்டாயமாக்கல்.
பெறுமதி சேர் வரி - 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் மீதான திருத்தங்கள்	
2021 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம்	
01.01.2021	- முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் தைக்கப்பட்ட ஒரு சில ஆடைகளை உள்நாட்டில் விற்பனை செய்வதன் பேரில் துண்டு அடிப்படையிலான பெறுமதிசேர் வரி விகித்தினை ரூபா 100 இலிருந்து ரூபா 25 இற்குக் குறைப்பதற்காக.
2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம்	
01.01.2022	- நிதி நிறுவனங்களில் நிதி சேவைகளை வழங்குவதில் பெறுமதிசேர் வரி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்துதல் மற்றும் சில பொருட்கள், சேவைகளுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிப்பதற்கு.
2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்	
15.09.2021	வரி விதிக்கக்கூடிய வழங்கல், வருமானம் அல்லது சொத்தை வெளிப்படுத்தத் தேவைப்படுத்தப்பட்டு 2020, மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முன் குறிப்பிட்ட வருவாய்ச் சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் அவற்றினை வெளியிடத் தவறிய, தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, அத்தகைய வரி விதிக்கக்கூடிய வழங்கல், வருமானம் அல்லது சொத்தை குறித்துரைக்கப்பட்ட விதத்தில் முதலீடு/வைப்புச் செய்த பிறகு அத்தகைய முதலீடு/வைப்புத் தொகையில் 1 சதவீதத்தில் தன்னார்வ வெளிப்படுத்துகை மீதான வரியை செலுத்தும் பட்சத்தில் வரி மன்னிப்பு ஒன்றினை வழங்குவதற்கு. - சில சட்டங்களின் கீழ் வரி நிலுவைகளைப் பதிவழிப்பதற்கு ஏற்பாடுகளை வழங்குதல்.
2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, மேலதிக கட்டணச் சட்டம்	
07.04.2022	- 2020/2021 மதிப்பீட்டு ஆண்டிற்கு வரி விதிக்கக்கூடிய வருமானம் ரூபா 2,000 மில்லியனினை விஞ்சும் தனிநபர்கள், கூட்டாண்மை அல்லது நிறுவனங்களிடமிருந்து 25 சதவிகிதம் என்ற விகிதத்தில் ஒரு முறை வரியாக மேலதிகக்கட்டணத்தை விதிப்பதற்கு.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்	
01.04.2021	2021.03.02 ஆந் திகதிய 2217/7 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - பரிமாற்று விலையிடல் மீதான ஒழுங்குவிதியை விதிப்பதற்கு.
01.04.2021	2021.06.29 ஆந் திகதிய 2234/6 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளை குறித்துரைப்பதற்கு.
பெறுமதி சேர் வரி - 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டம்	
01.04.2021	2021.05.20 ஆந் திகதிய 2228/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ஏற்றுமதிக்கான பதிவேடு வைத்திருக்கவேண்டியதை உள்ளடக்குவதற்காக பெறுமதிசேர் வரி பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கான பதிவேடு பராமரிப்பு ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்வதற்கு.
01.04.2021	2021.06.29 ஆந் திகதிய 2234/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பெறுமதிசேர் வரி விலக்களிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் இயன்றனவாக்கப்பட்ட சேவைகளைக் குறித்துரைப்பதற்கு.
உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
05.04.2021	2021.04.05 ஆம் திகதிய 2222/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்குட்பட்டு, இலங்கை பொலீசு எனும் விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இலங்கை பொலீசுக்கு 2.000 முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்தலுக்கு ஏற்புடையதான தீர்வைக்கு விலக்களிப்பதற்கு.
06.04.2021	2021.04.05 ஆம் திகதிய 2222/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மோட்டார் வாகன (ஒட்டோ மொபைல்) உற்பத்தி.்பொருத்துதல் கைத்தொழில் மற்றும் மோட்டார் வாகனக் கூறு உற்பத்தித் தொழிலுக்கான நியமமான இயக்க நடைமுை-றகளை செயற்படுத்துவதனோடு இணைந்த வகையில் உள்நாட்டில் பொருத்தப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது புதிய தீர்வைக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு.
23.04.2021	2021.04.22 ஆம் திகதிய 2224/24 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - நடமாடும் பட்டறை வாகனங்கள் மீதான தீர்வை விகிதங்களைத் திருத்துவதற்காக.
03.08.2021	2021.08.03 ஆம் திகதிய 2239/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அத்தியாவசிய கள நடவடிக்கைகளின் பயன்பாட்டிற்காக 52 நீர் பவுசர்களையும் 62 இரட்டை கப் வண்டிகளையும் இறக்குமதி செய்தல் மீதான உற்பத்தித் தீர்வை செலுத்தலுக்கு விலக்களிப்பதற்கு.
13.11.2021	2021.11.12 ஆம் திகதிய 2253/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2022 வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க முன்மொழியப்பட்ட, சிகரெட்டுகளுக்கான உற்பத்தித் தீர்வையைத் திருத்துதல்.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
மது வரி (கட்டளைச்சட்ட) தீர்வை - மதுவரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)	
01.01.2021	01/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்காக பூல்புறூப் ஒட்டுத் துண்டு மற்றும் ஒட்டுத் துண்டு முகாமை முறைமையைச் செயற்படுத்துவதற்கான திகதியினை 2021, யூன் 30 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு.
01.01.2021	02/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01 ஆம் திகதிய 2208/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - FL/7, FL/8, FL/11, FL/12 – FL/22M என்பனவற்றின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உரிமக் கட்டணத்திற்கு விலக்களிப்பதற்கு.
08.01.2021	03/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.07 ஆம் திகதிய 2209/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இலங்கையில் நிறுவப்பட்ட உரிமம்பெற்ற எந்தவொரு தொழிற்சாலையிலிருந்தும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.50 இலிருந்து ரூ. 25 இற்கு தீர்வையினைக் குறைப்பதற்கு. [993 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2016.12.20 ஆந் திகதிய 1998/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்துசெய்யப்பட்டதுஸ.
07.01.2021	04/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021. 01.07 ஆம் திகதிய 2209.∴44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - கள்ளுத் தவறணைகள் செயல்படும் நேரத்தினை நீடிப்பதற்கு 03/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலினைத் திருத்துவதற்கு. - ஜமதுவரி அறிவித்தல் இல. 11/2018 (2020.06.13 ஆந் திகதிய 2075/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) இரத்துசெய்யப்பட்டது.
07.01.2021	05/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.07 ஆம் திகதிய 2209/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - கள்ளின் சில்லறை விற்பனை மற்றும் கொண்டுசெல்லப்படும் அளவினை 1.5 லீற்றரிலிருந்து 3 லீற்றர்களுக்கு அதிகரிப்பதற்காக [1985.08.14 ஆந் திகதிய 745 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இரத்துசெய்யப்பட்டதுஸ.
11.01.2021	06/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.11 ஆம் திகதிய 2210/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்). - 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் அங்கீகாரக் கட்டணத்தை (i) 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகை ஹோட்டல்கள் மற்றும் (ii) 5 நட்சத்திர ஹோட்டல் மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர.∴பல்பொருள் ஹோட்டல்கள்: பல்பொருள் வில்லாக்கள்.∴பாரம்பரிய ஹோட்டல்களுக்கு விலக்களிப்பதற்காக.
25.02.2021	07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.02.25 ஆம் திகதிய 2216/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - பாதுகாப்புப் பண்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் குறித்துரைப்பதற்காக.

கட்டம் 4.2 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
30.06.2021	08/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.06.30 ஆம் திகதிய 2234/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உரிமம்பெற்ற உற்பத்தியாளர்களுக்காக பாதுகாப்புப் பண்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமையின் நடைமுறைத் திகதியை 2021, ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை நீடிக்கும்பொருட்டு 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலைத் திருத்துவதற்காக.
29.07.2021	2021.07.29 ஆந் திகதிய 2238/28 ஆம் இலக்க மற்றும் 2021.07.29 ஆந் திகதிய 2238.∴29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள் - மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக 01/2021 மற்றும் 02/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் 2021 ஏப்பிறல் 20 ஆந் திகதி அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனை அறிவிப்பதற்கு.
29.07.2021	2021.07.29 ஆந் திகதிய 2238/30 ஆம் இலக்க மற்றும் 2021.07.29 ஆந் திகதிய 2238.∴31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள் - மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக 04/2021 மற்றும் 06/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் 2021, மே 04 ஆந் திகதி அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனை அறிவிப்பதற்கு.
16.08.2021	09/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.08.16 ஆந் திகதிய 2241/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உரிமம்பெற்ற உற்பத்தியாளர்களுக்காக பாதுகாப்புப் பண்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமையின் நடைமுறைத் திகதியை 2021, ஒற்றோபர் 15 ஆந் திகதி வரை நீடிக்கும் பொருட்டு 07.∴2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலைத் திருத்துவதற்காக.
16.10.2021	10/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.10.16 ஆந் திகதிய 2249/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - உரிமம்பெற்ற உற்பத்தியாளர்களுக்காக பாதுகாப்புப் பண்புக்கூறுகள் மற்றும் பாதுகாப்பு பண்புக்கூறுகள் முகாமைத்துவ முறைமையின் நடைமுறைத் திகதியை 2022, ஜனவரி 03 ஆந் திகதி வரை நீடிக்கும் பொருட்டு 07/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலைத் திருத்துவதற்காக.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

<table>
<tr><th>பயன்வலுத் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td>12.11.2021</td><td>11/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.11.12 ஆந் திகதிய 2253/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானம் மீதான மதுவரி தீர்வையை பின்வருமாறு அதிகரிப்பதற்காக்

<table>
<tr><th colspan="2">மதுபான வகை</th><th>செறிம லீற்றர் ஒன்றிற்கான முன்னைய தீர்வை (ரூபா)</th><th>செறிம லீற்றர் ஒன்றிற்கான புதிய தீர்வை (ரூபா)</th></tr>
<tr><td>1</td><td>விசேட சாராயம்</td><td>3,800</td><td>4,180</td></tr>
<tr><td>2</td><td>வெல்லப்பாகு/பனை.ஃதென்னஞ் சாராயம்</td><td>4,050</td><td>4,460</td></tr>
<tr><td>3</td><td>இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம்</td><td>4,150</td><td>4,570</td></tr>
<tr><td>4</td><td>பியர் (செறிவு- 5% இற்குக் குறைவான)</td><td>3,200</td><td>3,300</td></tr>
<tr><td>5</td><td>வலுவான பியர் (செறிவு- 5% இற்குச் சமமான அல்லது மேற்பட்ட)</td><td>3,200</td><td>3,450</td></tr>
<tr><td>6</td><td>உவைன்</td><td>3,200</td><td>3,300</td></tr>
</table>
</td></tr>
<tr><td>01.01.2022</td><td>01/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.01.01 ஆந் திகதிய 2260/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)

- 3 நட்சத்திர மற்றும் 4 நட்சத்திர வகை ஹோட்டல்கள் மற்றும் 5 நட்சத்திர ஹோட்டல் மற்றும் அதற்கு மேற்பட்ட நட்சத்திர/பல்பொருள் ஹோட்டல்கள்: பல்பொருள் வில்லாக்கள்/பாரம்பரிய ஹோட்டல்களுக்கு அங்கீகாரக் கட்டணத்தை 2022, மாச்சு 31 வரை விலக்களிப்பதற்காக.</td></tr>
<tr><td>01.01.2022</td><td>02/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.01.01 ஆந் திகதிய 2260/79 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)

- ஹோட்டல்களுக்கான வருடாந்த உரிமக் கட்டணத்திற்கு 2022, மாச்சு 31 வரை விலக்களிப்பதற்கு (மதுவரி திணைக்களத்தினால் உரிமமளிக்கப்பட்ட FL/7, FL/8, FL/11, FL/12, FL/22M வகை உரிமங்களுக்கு)
- [02/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2021.01.01) ஆந் திகதிய 2208/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்துசெய்யப்பட்டதுஸ.</td></tr>
<tr><td>27.01.2022</td><td>2022.01.27 ஆந் திகதிய 2264/28 ஆம் இலக்க மற்றும் 2022.01.27 ஆந் திகதிய 2264/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள்

- சட்டத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) கீழ் 08.ஃ2021 மற்றும் 09/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள் 2021, திசெம்பர் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதை அறிவிப்பதற்காக.</td></tr>
</table>

கட்டம் 4.2 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
29.04.2022	03/2022 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2022.04.29 ஆந் திகதிய 2277/62 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - இலங்கையில் நிறுவப்பட்ட உரிமம்பெற்ற எந்தவொரு தொழிற்சாலையிலிருந்தும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீது லீற்றர் ஒன்றிற்கு ரூ.25 இலிருந்து ரூ.50 இற்கு தீர்வையினை அதிகரிப்பதற்கு.
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு - 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்	
05.01.2021	05.01.2021 ஆம் திகதிய 2209/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மருந்தாக்கல் உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள் மற்றும் முகக் கவச உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள் என்பனவற்றிற்கான துறைமுக, விமான நிலைய விலக்களிப்பினை வழங்குவதற்கான விதப்புரை வழங்கும் அதிகாரத்தினை சுகாதார அமைச்சின் செயலாளரிடமிருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் மருந்தாக்கல் ஒழுங்குவிதிக்கான இராஜாங்க அமைச்சுக்கு மாற்றுவதற்காக.
23.02.2021	2021.02.22 ஆம் திகதிய 2216/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பால் மா இறக்குமதியின் பேரில் 2.5 சதவீத சலுகை விகிதமொன்றினை வழங்குவதற்காக.
09.03.2021	2021.03.09 ஆம் திகதிய 2218/51 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - கருத்திட்ட அமுலாக்கலின் போது அல்லது கட்டுமானக் காலத்தின் போதும் மற்றும் வர்த்தக தொழிற்பாடுகளை ஆரம்பிக்க முன்பும் ஐ.அ.டொ.50 மில்லியனுக்கு குறையாத மூலதனத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் தொழில்முயற்சியொன்றுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வையினை விலக்களிப்பதற்காக.
20.03.2021	2021.03.19 ஆம் திகதிய 2219/68 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கருங்காரை உற்பத்திக்காக உலை எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பில் துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டுக்கு விலக்களிப்பு ஏற்பாடு ஒன்றினை ஏற்படுத்துவதற்காக.
20.04.2021	2021.04.19 ஆம் திகதிய 2224/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - திரவ பெற்றோலிய எரி வாயு இறக்குமதியின் பேரில் சர்வதேச ரீதியாக திரவ வாயுவின் விலைகள் மெ.தொ ஒன்றிற்கு ஐ.அ.டொ.325 இனை அடையும் வரையில் மெ.தொ ஒன்றுக்கு 7.5 சதவீதம் அல்லது மெ.தொ.ஒன்றுக்கு ரூபா 2,000 என்பதில் எது குறைவாக இருக்கிறதோ அதற்கு சலுகை வீதமொன்றினை வழங்குவதற்காக.
12.06.2021	2021.06.11 ஆம் திகதிய 2231/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - முழுமையான அல்லது உடைக்கப்பட்ட, பச்சையான கொக்கோ விதைகள் இறக்குமதி மீது 5.0 சதவீத வரிச் சலுகை விகிதத்தினை வழங்குவதற்காக.
12.08.2021	2021.08.11 ஆம் திகதிய 2240/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இறக்குமதி செய்யப்படும் பால் மா விற்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்கு.

கட்டம் 4.2 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
06.01.2022	2022.01.06 ஆம் திகதிய 2261/58 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரச மருத்துவமனைகள் அல்லது சுகாதார அமைச்சிற்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து விலக்களித்து 2020 ஒற்றோபர் அக்டோபர் 26 ஆந் திகதிய 2199.்.2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்வதற்கு.
12.01.2022	2022.01.11 ஆம் திகதிய 2262/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய இ.மு.துணைப் பிரிவுகளுக்கு துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சலுகை விகிதங்களையும் விலக்குகளையும் ஒதுக்குவதற்கு.
செஸ் அறவீடு - 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்	
13.01.2021	2021.01.12 ஆம் திகதிய 2210/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - சுங்க உற்பத்தி இன் பொண்ட் திட்டத்தின் கீழ் அல்லது ஏற்றுமதி பதனிடல் திட்டத்திற்கான தற்காலிக இறக்குமதித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்து, இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றினைச் செய்துகொண்டுள்ள ஏதேனுமொரு தொழில்முயற்சியொன்றினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் அல்லது பராமரிப்புச் செயற்பாட்டின் உருவாக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களை பயன்படுத்தி, ஏற்றுமதி நோக்கத்திற்காக பொருட்களின் உற்பத்திச் செயற்பாட்டின் மூலமாக உருவாக்கப்பட்ட துகள்கள்.்.கழிவுகளை அத்தகைய தொழில்முயற்சியால் ஏற்றுமதி செய்கையில் அதற்கு செஸ் அறவீட்டிலிருந்து விலக்களிப்பதற்காக.
16.03.2021	2021.03.15 ஆம் திகதிய 2219/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ஓடுகள் மற்றும் சுகாதாரப் பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் அறவீட்டினைத் திருத்துவதற்காக.
18.03.2021	2021.03.17 ஆம் திகதிய 2219/36 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - கருத்திட்ட செயற்படுத்தல் காலத்தில் அல்லது அந்த கருத்திட்டத்தின் கட்டுமான காலத்தில் ஆனால் வர்த்தக தொழிற்பாடுகளை தொடங்குவதற்கு முன்னர் 2019 மார்சு 06 அன்று அல்லது அதற்குப்பிறகுள்ள ஒவ்வொரு நிலையிலும் ஐ.அ.டொ. 50 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட முதலீட்டுடன் ஏதேனும் நிறுவனத்தினாலோ அல்லது செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தினாலோ இறக்குமதி செய்யப்படும் எந்தவொரு பொருட்களுக்கும் செஸ் அறவீட்டிலிருந்து விலக்களிக்களிப்பதற்காக.
12.01.2022	2022.01.11 ஆம் திகதிய 2262/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரிசி, மீன்வளப் பொருட்கள் மற்றும் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயு தொடர்பான துணைப் பொருட்களுக்கான புதிய இ.மு. குறியீடுகளின்படி தற்போதுள்ள செஸ் அறவீட்டு விகிதங்களை நீடிப்பதற்கு.
11.03.2022	2022.03.10 ஆம் திகதிய 2270/59 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புடைவை மற்றும் ஆடைகளுக்கு தற்போதுள்ள செஸ் அறவீட்டு விகிதங்களை அதிகரிப்பதற்கு.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
சுங்க இறக்குமதித் தீர்வை - 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்	
23.04.2021	01/2021 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2020.11.17 ஆம் திகதிய 2224/25 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - அரச கணக்குகள் குழுவின் வழிகாட்டுதலுக்கு அமைய நடமாடும் பட்டறையாக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கான தேசிய இ.மு.துணைப் பிரிவுகளை உருவாக்கல்.
18.05.2021	02/2021 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2021.05.17 ஆம் திகதிய 2228/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல். - பெயரளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிப்பதற்காகவும் வருமானக் கசிவினை பாதுகாப்பதற்காகவும் முகக் கவசத்திற்கு தேசிய இ.மு.துணைப் பிரிவுகளை உருவாக்கல்.
12.01.2022	01/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.01.11 ஆம் திகதிய 2262/14 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல். பின்வருவனவற்றிற்காக துணைப் பிரிவுகளை உருவாக்க - திரவ பெற்றோலிய வாயு தொடர்பான துணைப் பொருட்களின் தரத்தை மதிப்பிடவும் கண்காணித்தல் - மீன்பிடி பொருட்களின் இறக்குமதி மற்றும் சந்தை தகவல்களை கண்காணித்தல் - இழைய வளர்ப்பு தாவரங்களின் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் சந்தைத் தகவலை கண்காணித்தல் - ICUMSA பெறுமதி அடிப்படையில் பழுப்புநிற சீனி மற்றும் வெள்ளைச் சீனியைத் தெளிவாக அடையாளம் காணல் மற்றும் உள்ளூர் பழுப்புநிற சீனி உற்பத்தியை ஊக்குவித்தல் - வகைப்பாடு சிக்கல்களை நீக்குதல் மற்றும் பாஸ்மதி மற்றும் பிற அரிசி வகைகளை எளிதாக அடையாளம் காணுதல்
10.03.2022	02/2022 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை (2022.03.09 ஆம் திகதிய 2270/20 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல். - அந்நியச் செலாவணி வெளிப்பாய்ச்சலைக் குறைக்கும் பொருட்டு, இறக்குமதியைக் குறைப்பதற்காக அத்தியாவசியமற்ற பண்டங்களின் மீதான சுங்க இறக்குமதித் திர்வையை அதிகரிப்பதற்கு.
சுங்கத் தீர்வை மீதான மேலதிகக் கட்டண அறவீடு சுங்கக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 232)	
02.02.2021	2021.02.01 ஆந் திகதிய 2213/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பெற்றோல் ஒக்ரேன் 95 மற்றும் ஏனைய, லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 மற்றும் சுப்பர் டீசல்∴ டீசல்/ஏனைய டீசல் ஆகியவை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 30 மற்றும் மற்றும் ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 12, மேலதிக கட்டண அறவீட்டினை நீக்குவதற்கு.
சுங்க இறக்குமதித் தீர்வை தளர்த்தீடு - சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)	
01.01.2021	- பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 7 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 18 வரையும் மற்றும் பெற்றோல் (ஒக்ரேன் 95) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 6 இலிருந்து ரூபா 16 வரை சுங்கத் தீர்வை தளர்வினை அதிகரிப்பதற்காகவும். - சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 சுங்கத் தீர்வையினைத் தளர்த்துவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்கத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 இற்கு அதிகரிப்பதற்கும்.

கட்டம் 4.2 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
02.02.2021	- சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 என்ற சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை நீக்குவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 14 இற்கு குறைப்பதற்காகவும். - சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 15 என்ற சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை நீக்குவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 14 இற்கு குறைப்பதற்காகவும்.
25.03.2021	- சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10, சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை வழங்குவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 14 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 25 வரை அதிகரிப்பதற்காகவும். - சுப்பர் டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 10, சுங்க இறக்குமதித் தீர்வை தளர்வினை வழங்குவதற்கும் ஒற்றோ டீசல் மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 14 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 25 வரை அதிகரிப்பதற்காகவும்.
12.08.2021	- பால் மா இறக்குதி மீதான சுங்க இறக்குமதித் தீர்வைத் தளர்வினை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 210 இலிருந்து ரூபா 225 இற்கு அல்லது 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு.
விசேட வியாபாரப் பண்ட அறவீடு - 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்	
14.01.2021	2021.01.13ஆம் திகதிய 2210/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல். - சீனி, பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக.
19.01.2021	2021.01.18ஆம் திகதிய 2211/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - பாலாடைக்கட்டி, கொத்தமல்லி, மஞ்சல் மற்றும் உழுந்து மா இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக.
12.02.2021	2021.02.11 ஆம் திகதிய 2214/58 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - அனைத்து வகையான கருவாடுகளுக்கும் ஒரே தீர்வை விகிதத்தைப் பேணுவதற்கும் சந்தையில் காய்கறிகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக உருளைக் கிழங்குக்கான தீர்வையினை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 15 இற்கு ஆறு மாத காலத்திற்காகக் குறைப்பதற்கும்.
04.03.2021	2021.03.03ஆம் திகதிய 2217/23 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - மக்கரல் மீன், உழுந்து, கௌபி, குரக்கன் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக.
14.04.2021	2021.04.13ஆம் திகதிய 2223/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - சீனி, பெரிய வெங்காயம் மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக.
27.04.2021	2021.04.26 ஆம் திகதிய 2225/1 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல். - மீன், மாசிக் கருவாடு, பாசிப் பயறு, மங்குஸ்தான், கிவிப் பழம் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக.
28.04.2021	2021.04.27ஆம் திகதிய 2225/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - தேங்காய் துருவல் (ஏனையவை) மீதான விசேட வியாபார பண்ட அறவீடாக கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 300 இனை மூன்று மாதங்களுக்கு விதிப்பதற்காகவும் பி.பி.சி லங்கா லிமிடெட்டுக்கு தீர்வைத் தளர்வினை வழங்குவதற்காகவும்.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
27.04.2021	2021.04.27ஆம் திகதிய 2225/13 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 50 வரை அதிகரிப்பதற்காக.
18.05.2021	2021.05.17ஆம் திகதிய 2228/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் - 22 பண்டங்களின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக.
15.06.2021	2021.06.14 ஆந் திகதிய 2232/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - கிளமன்ரைன் பிரெஷ் மற்றும் எனையவை உள்ளடங்கலாக 17 பொருட்களின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக.
19.07.2021	2021.07.18 ஆந் திகதிய 2236/66 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பாலாடைக்கட்டி, கொத்தமல்லி, மஞ்சல் மற்றும் உழுந்து மா இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக
12.08.2021	2021.08.11 ஆந் திகதிய 2240/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - நத்தலி, கருவாடு, வெண்ணெய், மாதே விதை, குரக்கன் மா, கடுகு விதை மற்றும் உப்பு ஆகியவற்றின் மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக.
08.09.2021	2021.09.07 ஆந் திகதிய 2244/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீது கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 40 வரை விசேட வியாபார பண்ட அறவீட்டினை அதிகரித்தல்.
14.10.2021	2021.10.13 ஆந் திகதிய 2249/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - சீனி, உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு இறக்குமதி மீதான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியான காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்காக.
03.11.2021	2021.11.02 ஆந் திகதிய 2252/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரசாங்கத்திற்கு சொந்தமான ஸ்ரீலங்கா திரிபோச லிமிட்டெட் மூலம் "திரிபோஷ" உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்வதில் ரூபா 1/- விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை விதிப்பதற்கு.
02.11.2021	2021.11.02 ஆந் திகதிய 2252/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரிசி இறக்குமதியில் (சம்பா/கெகுலு மற்றும் நாடு) ரூபா 0.25/- (25 சதம்) விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை விதிப்பதற்கு.
24.11.2021	2021.11.02 ஆந் திகதிய 2255/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - டெசிகேட் தேங்காய் (மற்றவை) இறக்குமதியில் கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 300 விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை மீண்டும் அறிமுகப்படுத்தவும் பீசீசீ லங்கா லிமிட்டடுக்கு ரூபா 1/ வரி விலக்கு அளிப்பதற்கும்.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
22.12.2021	2021.12.21 ஆந் திகதிய 2259/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - எஸ்சிஎல் வரி விதிக்க ரூ. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்களால் "கால்நடை தீவனங்கள்" தயாரிப்பதற்காக மக்காச்சோளத்தை இறக்குமதி செய்வதன் மீது மொத்தம் 40,000 மெட்ரிக் தொன்கள் வரை ரூபா 10/. விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை ஆறு மாத காலத்திற்கு விதிப்பதற்கு.
01.01.2022	2021.12.31 ஆந் திகதிய 2260/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் இறக்குமதியின் மீது விசேட வியாபாரப்பண்ட அறவீட்டினை ஒரு கிலோவிற்கு ரூபா 30/, ஆறு மாத காலத்திற்கு குறைப்பதற்கு.
12.01.2022	2022.01.11 ஆந் திகதிய 2262/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரிசி மற்றும் சர்க்கரைக்கான புதிய இ.மு. குறியீடுகளின்படி தற்போதுள்ள வரி விகிதங்களை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு.
04.03.2022	2022.03.03 ஆந் திகதிய 2269/48 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - சிறிய அளவிலான கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களின் மூலப்பொருள் தேவைகள் மற்றும் கோழிப்பண்ணை பொருட்களின் விலையைக் கருத்தில் கொண்டு, மக்காச்சோளம் மற்றும் உளுந்துக்கு ஒரு கிலோவுக்கு ரூபா 10 என்ற சலுகை வரி விகிதத்தை அறிமுகப்படுத்துதல்.
04.03.2022	2022.03.03 ஆந் திகதிய 2269/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - உள்ளூர் டின் மீன் தொழிலைப் பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலையை உறுதி செய்யவும், நுகர்வோருக்காக விலை ஸ்திரத்தன்மையைப் பேணவும் கானாங்கெளுத்தி, உளுந்து, கௌபி, குரக்கன் மற்றும் தினை ஆகியவற்றின் இறக்குமதிக்கான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஓராண்டுக்கு நீடிப்பதற்கு.
10.03.2022	2022.03.09 ஆந் திகதிய 2270/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இறக்குமதிகளைக் குறைக்க, யோகட் மற்றும் வெண்ணெய் இறக்குமதி மீது கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 1000, பாலாடைக்கட்டி கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 400, பேரிச்சம்பழம் மற்றும் தோடம்பழம் (புதியது) கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 200, திராட்சை (புதியது), ஆப்பிள் மற்றும் பிற பழங்கள் கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூபா 300 எனும் அடிப்படையில் விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் ஆறு மாத காலத்திற்கு அதிகரிப்பதற்கு.
28.03.2022	2022.03.28 ஆந் திகதிய 2273/01 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ரமலான் பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு பேரிச்சம்பழம் இறக்குமதிக்கு ரூபா 199/ தீர்வை விலக்கு அளிப்பதற்காக.
14.04.2022	2022.04.13 ஆந் திகதிய 2275/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - பருப்பு, மீன், மாசி, பச்சைப்பயறு, மங்குஸ்தான் மற்றும் கிவி பழங்களின் இறக்குமதி மீதான விசேட வியாபாரப்பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு.
இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்	
05.01. 2021	2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.01.05 ஆந் திகதிய 2209/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் டயர் இறக்குமதிகளோடு சம்பந்தப்பட்ட பொருட் பட்டியலினைத் திருத்துவதற்காக.

கட்டம் 4.2 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
11.02.2021	2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.02.11 ஆந் திகதிய 2214/56 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் இறக்குமதித் மட்பாண்டப் பொருட்கள் மற்றும் சாரிப் புடவைகள் சம்பந்தப்பட்ட பொருட் பட்டியலினைத் திருத்துவதற்காக.
05.04.2021	2021 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.06 ஆம் திகதிய 2222/31 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல். - பாம் எண்ணெய் இறக்குமதியினை ஒழுங்குறுத்துவதற்காக.
23.04.2021	2021 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.23 ஆம் திகதிய 2224/43 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - நடமாடும் பட்டறைகளுக்காக இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதிப்பதற்காக.
23.04.2021	2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.04.23ஆம் திகதிய 2224/44 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - புதிய நடமாடும் பட்டறைகளை இறக்குமதி செய்வதனை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு.
06.05.2021	2021 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.05.06 ஆந் திகதிய 2226/48 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்காக.
11.06.2021	2021 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.06.11 ஆந் திகதிய 2231/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - முகக் கவசங்கள், தங்கம் மற்றும் உலோக இறக்குமதிக்கு, இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதிப்பதற்காக.
11.06.2021	2021 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் 2021 (2021.06.11 ஆந் திகதிய 2231/17 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - ஓட்சிசன் உட்பட அட்டவணை ஐ இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏற்றுமதி செய்ய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பரிந்துரைக்கும் அதிகாரத்தை வழங்குதல்.
11.06.2021	2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.06.11 ஆந் திகதிய 2231/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இறக்குமதி கட்டுப்பாடுகளின் கீழ் உள்ள அட்டவணை 1 இல் உள்ள பொருட்களின் பட்டியல்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு.
31.07.2021	2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.07.31 ஆந் திகதிய 2238/45 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - கனிம அல்லது இரசாயன உரங்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதிப்பதற்காக.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
30.09.2021	2021 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.09.30 ஆந் திகதிய 2247/12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - வெள்ளைப் பளிங்குறு சீனி மீதான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை நீக்குவதற்கு.
03.11.2021	2021 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.11.03 ஆந் திகதிய 2252/30 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - அரிசி இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குதல்.
30.11.2021	2021 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2021.11.30 ஆந் திகதிய 2256/23 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல். - ரேடியோ வழிசெலுத்தல் உதவி கருவியில் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதித்தல். - கிளைபோசேட் இறக்குமதியை தடை செய்வதற்கு.
12.01.2022	2022 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.01.12 ஆந் திகதிய 2262/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - நீண்ட தானிய அரிசி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குவதற்கு. - புதிய இ.மு. குறியீடுகளின்படி மீன் /பில்லட் மீதான கட்டுப்பாடுகளைத் தொடர.
09.03.2022	2022 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.03.09 ஆந் திகதிய 2270/18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - அட்டவணை ஐ இல் உள்ள பொருட்களின் பட்டியலை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதித்தல்.
09.04.2022	2022 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் (2022.04.09 ஆந் திகதிய 2274/42 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) - அட்டவணை ஐ இல் உள்ள பொருட்களின் பட்டியலை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ஐசிஎல்) தேவைப்பாட்டினை விதித்தல்.
2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
புறப்படுகை அறவீடு	
27.03.2022	2022.03.27 ஆம் திகதிய 2272/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இரத்மலான கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை பிராந்திய இடங்களுக்கு சேவை செய்யும் சர்வதேச விமான நிலையமாக மேம்படுத்தும் நோக்கத்துடன், கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலிருந்து இலங்கையிலிருந்து விமானம் மூலம் புறப்படும் பயணிகளுக்கான புறப்படுகை அறவீட்டினை 50 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 30 இற்கு குறைத்தல்.
29.04.2022	2022.04.29 ஆம் திகதிய 2277/63 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மத்தல மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திலிருந்து புதிய சர்வதேச விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்கு புறப்படுகை அறவீட்டின் தள்ளுபடியை நீடிக்க.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் அறவீடு	
09.02.2021	2021.02.09 ஆந் திகதிய 2214/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - வெளிநாட்டு நாடகங்கள் மற்றும் திரைப்படங்களின் ஒளிபரப்பு மீது தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் அறவீட்டினை மீண்டும் விதிப்பதற்கு. கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளால் உள்ளூர் டெலி-நாடகங்கள் மற்றும் திரைப்படங்களின் தயாரிப்பில் ஏற்பட்ட இடையூறுகளைக் கருத்தில் கொண்டு தற்காலிக நடவடிக்கையாக வெளிநாட்டு டெலி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களுக்கு 27.03.2020 அன்று வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.
11.05.2021	2021.05.10 ஆந் திகதிய 2227/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - ஒரு மாதத்திற்கு வெளிநாட்டு வர்த்தக விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்வதற்காக அனுமதிச் சான்றிதழினை பெறுவதற்கான ஏற்பாடொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு.
2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்	
சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு	
01.01.2021	2021.01.01 ஆந் திகதிய 2208/59 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2021.01.01 ஆந் திகதி முதல்பயன்வலுப்பெறும் வகையில் சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டினை அதே விகிதங்களில் தொடருவதற்காக.
2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி	
05.01.2021	2021.01.05 ஆந் திகதிய 2209/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - 8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றம் என்ற விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தின் கீழ் சொகுசு வரியினைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்.
2008 ஆம் அண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டம்	
05.01.2021	2021.01.05 ஆந் திகதிய 2209/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அம்பாந்தோட்டை, ஆரபொக்க பகுதியில் தனிப்பயனுடைய மருந்தாக்கல் உற்பத்தி வலயம் ஒன்றினைத் தாபிப்பதற்காக.
05.03.2021	2021.03.05 ஆந் திகதிய 2217/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டமாகிய "சிலோன் ரயர் மனுபெக்சரிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட்" இன் விலக்களிப்புக்கள் மற்றும் கடைப்பிடிக்கவேண்டிய நிபந்தனைகள் உட்பட கருத்திட்டம் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்காக.
23.03.2021	2021.03.23 ஆந் திகதிய 2220.̓.30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - "கொழும்பு சர்வதேச நிதி மைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்" தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட 3(4) வர்த்தமானி அறிவித்தலின் திருத்தம் செய்யப்பட்ட காப்புவாசகம் ஒன்றினை வெளியிடுவதற்காக.

கட்டம் 4.2 I பிரதான அரசிறை நடவடிக்கைகள் : கட்டளைகள், அறிவித்தல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் (2021 சனவரி முதல் 2022 ஏப்பிறல் வரை)

பயன்வலுத் திகதி	நடவடிக்கைகள்
19.04.2021	2021.04.19 ஆந் திகதிய 2224/2 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - தனிப்பயனுடைய மருந்தாக்கல் உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைப்பாட்டினை வெளிப்படுத்தற்காக.
20.04.2021	2021.04.20 ஆந் திகதிய 2224/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - தனிப்பயனுடைய புடைவை உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைப்பாட்டினை வெளிப்படுத்தற்காக.
24.05.2021	2021.05.24 ஆந் திகதிய 2229/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - "வெல்கம் ஹொட்டெல்ஸ் லங்கா (பிரைவெட்) லிமிட்டட்" இன் கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை 2022.01.01 முதல் பதினெட்டு (18) மாதங்களுக்கு மேலும் நீடிப்பதற்காக.
24.05.2021	2021.05.24 ஆம் திகதிய 2229/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். "எவிக் இன்ரனஷனல் ஹொட்டெல்ஸ் லங்கா லிமிட்டட்" இன் கருத்திட்ட அமுலாக்கல் காலத்தினை 2020.03.25 முதல் மேலும் பத்தொன்பது (19) மாதங்களுக்கு நீடிப்பதற்காக.
30.07.2021	2021.07.30 ஆந் திகதிய 2238/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல - கொழும்பு துறைமுக விரிவாக்கல் கருத்திட்டத்தின் கீழான மேற்குக் கொள்கலன் முனையம் - 1 (WCT-1) இன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்கான செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பில் தகவல்களை வெளியிடுவதற்காக.
30.07.2021	2021.07.30 ஆந் திகதிய 2238/40 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - தனிப்பயனுடைய புடவை உற்பத்தி வலயத்தின் ஒவ்வொரு நிறுவனத்திற்குமாக வழங்கப்படுகின்ற வரி விலக்குகள் / சலுகைகளை வெளிப்படுத்தற்காக.
06.09.2021	2021.09.06 ஆந் திகதிய 2244/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வோட்டர்/பிரண்ட் ப்ராப்பர்டீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டின் வர்த்தகச் செயல்பாடுகள் தொடங்கும் தேதியில் திருத்தம் செய்வதற்கு.
15.11.2021	2021.11.15 ஆந் திகதிய 2254/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிய களனி பாலத்திலிருந்து ராஜகிரிய ஊடாக அதுருகிரிய வரையிலான நான்கு வழிச்சாலை உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையை நிர்மாணித்து இயக்கும் திட்டத்திற்கு வழங்கப்பட்ட தொடர்புடைய தகவல்கள் மற்றும் வரிவிலக்குகளை வெளியிடுதல்.
15.11.2021	2021.11.15 ஆந் திகதிய 2254/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - கொழும்பு துறைமுக விரிவாக்கத் திட்டத்தின் கீழ் மேற்கு கொள்கலன் முனையம் 1 இனை அபிவிருத்தி செய்வதற்கும் இயக்குவதற்குமான கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட தொடர்புடைய தகவல்கள் மற்றும் வரிவிலக்குகளை வெளியிடுதல்.
18.01.2022	2022.01.18 ஆந் திகதிய 2263/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - எச்சீஎல் டெக்னாலஜிஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் மூலம் ஏற்றுமதி செய்வதற்காக மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட தொடர்புடைய தகவல் மற்றும் வரிவிலக்குகளை வெளியிடுவதற்கு.

05

அரசாங்க செலவினம்

5.1 மேன்நோக்கு

அரசாங்க செலவினமானது தடுப்பு மருந்தேற்றல் தொடர்பான செலவினங்கள் உள்ளடங்களாக கொவிட் - 19 தொற்று நோய் தொடர்பான செலவினங்களின் அதிகரிப்புடன் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்களின் அதிகரிப்பு காரணமாக, 2020 இல் ரூபா 3,041.0 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 3,521.7 பில்லியனாக 15.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மீண்டெழும் செலவினமானது 2020 இல் ரூபா 2,548.3 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 2,747.5 பில்லியனாக 7.8 இனால் அதிகரித்தது. எவ்வாறாயினும், மூலதன மற்றும் தேறிய கடன்பெறல் செலவினம் 2020 இல் ரூபா 492.6 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 774.2 பில்லியனாக அதிகரித்தது.

அரசாங்க செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2020 இல் 20.2 சதவீதத்திலிருந்து 2021 இல் 21.0 சதவீதமாக அதிகரித்தது. இதற்கு பிரதான காரணம் 2020 இல் 3.3 சதவீதமாகக் காணப்பட்ட மூலதன மற்றும் தேறிய கடன் பெறுகை விகிதமானது 2021 இல் 4.6 சதவீதமாக அதிகரித்த அதேவேளை, மொ.உ. உற்பத்தி விகிதத்திற்கான மீண்டெழும் செலவினம் 2020 இல் 17.0 சதவீதத்திலிருந்து 2021 இலிருந்து 16.3 சதவீதமாக 0.7 சதவீத புள்ளியினால் வீழ்ச்சியடைந்தது.

2021 இல் மொ.உ. உற்பத்திக்கான மீண்டெழும் செலவினம் வீழ்ச்சியடைந்த போதிலும், 2021 இல் சாதாரண நிலைமையில் அத்தகைய செலவினமானது வீழ்ச்சியடைந்தது. மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பானது பிரதானமாக வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் சம்பளங்கள், வேதனங்கள் மீதான செலவின அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், உதவு தொகைகள், மாற்றல்கள், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினம் 2021 இல் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. உதவு தொகைகள் மற்றும் மாற்றல்கள் மீதான செலவினம் 2020 இல் மொ.உ. உற்பத்தியின் 4.8 சதவீதத்திலிருந்து 2021 இல் மொ.உ. உற்பத்தியில் 4.1 சதவீதமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இதற்கான பிரதான காரணம் ஓய்வூதியம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவுகள் அதிகரித்த போதிலும் உர மானியம், இலவச மருத்துவம் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மாற்றல்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்ததாகும். 2020 இன் பிற்பகுதியின் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் பன்நோக்கு செயலணி ஆட்சேர்ப்புக் காரணமாக ஏற்பட்ட தாக்கத்துடன் அரசாங்க ஊழியர்களின் வருடாந்த சம்பள அதிகரிப்பின் பிரதிபலிப்பும் காரணமாக சம்பளம் மீதான செலவினம் 2020 இல் ரூபா 794.2 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 845.7 பில்லியனாக அதிகரித்தது. எவ்வாறாயினும், 2020 இல் மொ.உ. உற்பத்தியில் 5.3 சதவீதத்திலிருந்து 2021 இல் மொ.உ.உற்பத்தியில் 5 சதவீதமாக சம்பள செலவினம் வீழ்ச்சியடைந்தது. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பினால் தூண்டப்பட்ட உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு காரணமாக 2020 இல் ரூபா 980.3 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 1,048.4 பில்லியனாக சாதாரண நிலைமையில் வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்த போதும் மொ.உ. உற்பத்தி விகிதத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகள் 2020 இல் 6.5 சதவீதத்திலிருந்து 2021 இல் 6.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

5.2. 2021 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2021 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2020 ஒக்ரோபர் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2020 டிசெம்பர் 10 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது. தொடர்ந்து இது 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாக சட்டமாக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக அரசாங்க மொத்த செலவினம் ரூபா 5,052 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,834 பில்லியன் மீண்டெழும் செலவினமாகக் காணப்பட்டதுடன் ரூபா 1,095 பில்லியன் மூலதனச் செலவினமாகவும், ரூபா 2,117 பில்லியன் பொதுப்படுகடன் சேகரிப்பாகக் காணப்பட்ட அதேவேளை, மீதி ரூபா 6 பில்லியன் முற்பணக்கணக்கு நடவடிக்கைகளுக்கானதாகும். இந்நிதி ஏற்பாடுகளானது 223 செலவினத் தலைப்புகளுக்கு மத்தியில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று அட்டவணைகளின் சுருக்கம் அட்டவணை 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 2(1) ஆம் பிரிவுக்கமைவாக 2021 இற்கான அரசாங்க கடன்பெறுகை வரையறையினை 2020 இல் காணப்பட்ட ரூபா 2,830 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 2,997 பில்லியனாகக் காணப்பட்டது.

பின்னர் சுகாதார மற்றும் சமூக நலன்புரி மீதான செலவினத்தில் அதிகரிப்புடனான அரசாங்க செலவின அதிகரிப்பினை ஈடு செய்யும் அதேவேளை, அரசாங்க வருமான பற்றாக்குறைக்கு பிரதியீடு செய்வதற்கு 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட கடன்பெறுகை வரையறையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கமைவாக, 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் குறிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,997 பில்லியன் கடன்பெறல் வரையறையினை ரூபா 3,397 பில்லியனாக அதிகரிப்பதற்கு 2021 ஒக்ரோபர் 21 ஆந் திகதி ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2021 நவம்பர் 12 ஆந் திகதி 2021 இன் 26 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமாக ஆக்கப்பட்டது.

அட்டவணை 5.1| 2021 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை

ரூபா பில்லியன்

அட்டவணை	விபரம்	மொத்தம்
முதலாவது அட்டவணை	நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் அரசாங்கத்தின் பொதுச் சேவைகளுக்கான செலவினம்	2,818
இரண்டாவது அட்டவணை	சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் திரட்டிய நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய அரசாங்க செலவினம்	2,228
மூன்றாவது அட்டவணை	முற்பணக்கணக்கு செயற்பாடுகள் மீதான செலவினம்	6
மொத்த அரசாங்க செலவினம்		5,052

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம்

5.3 குறைநிரப்பு மதிப்பீடுகள்

2021 இல் பாராளுமன்றத்தினால் இரண்டு குறைநிரப்பு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டன.

5.3.1. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகள்

அரசியலமைப்பின் மூலம் நிதி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மூலம் 2020 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்க செலவினங்களை மேற்கொள்வதற்கு திரட்டு நிதியத்திலிருந்து பணத்தினை மீளப் பெறுவதற்கான அதிகாரத்தினை வழங்குவதற்கு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் இரண்டு (02) விநியோகிக்கப்பட்டது.

5.3.2. ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சுக்காக சமர்ப்பிக்கப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள்

2021 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் குறித்த அமைச்சு தாபிக்கப்பட்டிராததினால் ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சுக்காக 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி ரூபா 11.8 பில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீடொன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த குறைநிரப்பு மதிப்பீட்டின் தேறிய தாக்கம் ரூபா 184.7 மில்லியனாக மாத்திரம் காணப்பட்டதுடன் சுகாதார அமைச்சின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் ரூபா 11.6 பில்லியன் சமகாலத்தில் உறையச் செய்யப்பட்டது.

5.3.3 குறைநிரப்பு ஒதுக்கீடுகளாக விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

அரசியலமைப்பின் மூலம் நிதி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை 2 இல் விசேட சட்ட சேவைகளாக சான்றுப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் மேலதிக நிதித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு திரட்டிய நிதியத்திலிருந்து பணத்தினை மீளப் பெறுவதற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் நான்கு (04) விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அட்டவணை 5.2| விநியோகிக்கப்பட்ட விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் - 2021

அதிகார இல.	செலவினம் தலைப்பு இல.	நிறுவனம்	நோக்கம்/குறிக்கோள்	தொகை (ரூபா)
1	4	உயர் நீதிமன்ற நீதிபதிகள்	அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின்படி, உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்கு சம்பளம் வழங்குதல்.	28,000,000
2	20	தேர்தல் ஆணைக்குழு	அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் கீழ் புதிதாக நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குதல்	2,160,000
3	253	ஓய்வூதியத் திணைக்களம்	அரசாங்க அலுவலர்களின் விதவைகள், கணவனை இழந்தவர்கள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் பற்றாக்குறையை ஈடுசெய்ய	19,000,000,000
4	249	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்	கடன் சேவையில் ஒதுக்கப்பட்ட நிதிகளின் பற்றாக்குறையை சமாளிக்க	143,500,000,000

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.4 2021 இற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்

பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் அல்லது நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்பட்ட விசேட சட்ட ஆணைப்பத்திரங்களின் மூலம் திருத்தப்பட்டது. அட்டவணை 5.3 இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு மேலே குறிப்பிட்ட இரண்டு விசேட சட்ட ஆணைப்பத்திரங்களை விநியோகிப்பதன் மூலம் பின்வரும் திருத்தங்களை 2021 இல் மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு காணப்படுகின்றது.

அட்டவணை 5.3 | 2021 இற்கு ஏற்புடையதான மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள்

அதிகார மூலம்	மீண்டெழும்	மூலதனம் / கடன் தள்ளுபடி	மொத்தம்
ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 1 ஆவது அட்டவணை	1,718,301,178,000	1,100,088,822,000	2,818,390,000,000
ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணை	975,851,000,000	1,252,297,000,000	2,228,148,000,000
ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 3 ஆவது அட்டவணை			6,000,000,000
பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகள்	142,570,700,000	69,273,000,000	211,843,700,000
நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்	79,530,160,000	83,000,000,000	162,530,160,000
மொத்தம்	**2,916,253,038,000**	**2,504,658,822,000**	**5,426,911,860,000**

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.5 முற்பணக் கணக்கு செயற்பாடுகள்

முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தெரிவு செய்யப்பட்ட வங்கிகளின் ஊடாக செயற்படுத்தப்பட்ட ஆதனக் கடன்கள் நீங்களாக அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணங்கள் மற்றும் வர்த்தக தன்மையுள்ள செயற்பாடுகளாகும். 2021 இல் முற்பணக் கணக்குச் செயற்பாடுகளின் உண்மையான செலவினம் ரூபா 19.95 பில்லியனாகும். இது மதிப்பிடப்பட்ட ஆகக்கூடிய செலவினமான ரூபா 29.65 பில்லியனுக்கு எதிரானதாகும். மதிப்பிடப்பட்ட ஆகக்கூடிய பெறுகைகளான ரூபா 23.65 பில்லியனுடன் ஒப்பிடுகையில் உண்மையான மொத்தப் பெறுகைகள் ரூபா 20.19 பில்லியனாகும். இதற்கமைவாக 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் மிகவும் சிறந்ததாகக் காணப்பட்டன.

2020 டிசெம்பர் 16 ஆந் திகதிய 22/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் குறைநிரப்பு பண்டிகைக் கடன் திட்ட இடைநிறுத்தலினை செயற்படுத்தியன் மூலம் சில வரையறைகள் காணப்பட்ட 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் முற்பணக் கணக்குச் செயற்பாடுகளின் செயலாற்றுகையில் மேம்பாடு காணப்பட்டது. அத்துடன் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக அலுவலர்களை பணிக்கு அழைப்பதில் ஊழியர்களினது எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருந்தமையும் காரணமாகும்.

இதற்கமைவாக, முற்பணக் கணக்குச் செயற்பாடுகளின் உண்மையான செலவினம் 2020 இல் ரூபா 16.0 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 19.95 பில்லியனாக 25 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, இச் செயற்பாடுகளுக்கான பெறுகைகள் 2020 இல் ரூபா 16.5 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 20.19 பில்லியனாக 22 சதவீதத்தினால் அதிகரித்தது.

5.6. அரசாங்க செலவின முகாமைத்துவம்

5.6.1 நிதி மாற்றல்

2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைவாக, நிதி ஒழுங்கு விதி இல 66 மற்றும் 69 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நடைமுறைகளின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவின வரையறைக்குள் பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டு மாற்றல் நிறுவனங்களுக்கான அனுமதியினை வழங்குகிறது. 2021 இல் ரூபா 256 பில்லியனுக்கான அத்தகைய நிதி ஒழுங்குவிதி 66 மற்றும் 69 மாற்றல் விண்ணப்பங்களுக்கான அங்கீகாரத்தினை தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் வழங்கியுள்ளது.

5.6.2 "குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்" கருத்திட்டத்தின் கீழ் மீள் ஒதுக்கீடுகள்

செலவிடல் நிறுவனங்களின் எதிர்பாரா, அவசர மற்றும் மேலதிக நிதி தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக செலவினத் தலைப்பு 240- தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள செலவினத்தின் கீழ் "குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்" கருத்திட்டம் 2021 இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைவாக, 2021 இல் அச்சிடப்பட்ட மதிப்பீடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட வழிகாட்டல்களுக்கமைவாக 2020 இற்கான குறைநிரப்பு ஒதுக்கீடுகளாக தொடர்புடைய செலவின நிறுவனங்களுக்கு ரூபா 421.1 பில்லியன் மீள ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்தகைய ஒதுக்கீடுகள் தொடர்பான சுருக்கம் அட்டவணை 5.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக முன்னைய ஒதுக்கீடுகள் தொடர்பான அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக அத்தகைய மாற்றல்கள் அனைத்தினதும் விபரம் 2003 இன் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்திற்கமைவாக இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது)

2021.01.01 முதல் 2021.12.31 வரை அமைச்சுக்கள் வாரியான மேலதிக ஒதுக்கீட்டுச் சுருக்கம்

ரூபா.

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
2	பிரதம அமைச்சர் அலுவலகம்	ஆள்சார் வேதனாதிகள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பிரயாணம், வழங்கல்கள் மற்றும் சேவைகள், பராமரிப்பு, மேலதிக நேரக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு, தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள், பொறித் தொகுதி மற்றும் இயந்திரம், பிரதமரின் வதிவிடத்தினை புதிப்பித்தல்	346,500,000	298,000,000
4	உயர் நீதிமன்ற நீதிபதிகள்	புதிதாக நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான செலவினம், புதிதாக நியமிக்கப்பட்ட உயர் நீதி மன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான தலையங்கி கொள்வனவு	119,200,000	47,750,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
6	அரசாங்க சேவை ஆணைக்குழு	அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கான தளபாடம், அலுவலக உபகரணம், பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு	-	5,000,000
13	மனித உரிமைகள் ஆணைக்குழு	கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீள் குடியேறுபவர்களுக்கு வசதியளித்தல் கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட மானியத்தினைப் பயன்படுத்தல் (ஐ.நா அகதிகளுக்கான ஆணைக்குழு)	-	1,550,000
17	பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்	சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்	400,000	1,060,000
18	பாராளுமன்ற அரசாங்க கட்சியின் முதற்கோலாசானின் அலுவலகம்	வாகனப் பராமரிப்பு, புதிய வாகனங்களுக்கான வாடகை, புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, அதிகரித்த பதவியணிக்கான எரிபொருள் கொடுப்பனவு, ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கல்.	16,550,000	-
19	பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்	எரிபொருள் செலவினம்	1,000,000	-
20	தேர்தல்கள் ஆணைக்குழு	2020 பாராளுமன்றத் தேர்தலில் ஈடுபட்ட அலுவலர்கள் மற்றும் நிறுவனங்களுக்கான நிலுவைச் சிட்டைகள் மற்றும் வவுச்சர்களைத் தீர்த்தல்.	22,000,000	-
101	புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள், கொவிட் நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இலவசமாக வழங்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வை, களனி வித்தியாலங்கார சர்வதேச பௌத்த நிலையத்தின் v ஆம் கட்ட பணிகளுக்கான நிலுவையினைச் செலுத்துதல், கட்டுவாப்பிற்றிய சாந்த செபஸ்ரியன் தேவாலயத்தின் தம்ம பாடசாலை கட்டிட நிர்மாணம்.	5,914,300	114,076,000
201	பௌத்த அலுவல்கள் திணைக்களம்	இராமன்னா மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர்களான வணக்கத்துக்குரிய நாபான பிரேமசிறி மகாநாயக்க தேரர் மற்றும் லங்கா அமரபுர மகாநிக்காயவின் வணக்கத்துக்குரிய கட்டுகொட தம்மா வாச தேரரின் இறுதிக் கிரியைகளை முழு அரசாங்க மரியாதையுடன் அரச செலவில் நடத்துதல், மகா நாயக்க சாரிக்கா இராமயவினை புதுப்பித்தல்.	12,055,000	16,308,626

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
102	நிதி அமைச்சு	கட்டிட மேம்பாடு தொடர்பான பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சின் செலவினம், மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு, வழங்கல் மற்றும் சேவைகள், பொது நிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள், ஆதனக் கடன் வட்டி, நிலுவைச் சிட்டைகளை செலுத்துவதற்கான மத்திய கலாசார நிலையத்தின் செவினம், சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் ஏனைய தொழிற்பாட்டு செலவினம், வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள், நிதித்துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்ட செலவினம்.	925,245,000	385,800,000
240	தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்	கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய உற்பத்தித் தீர்வையினை செலுத்துதல்	-	97,105,600
241	அரச தொழில் முயற்சிகள் திணைக்களம்	இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அரச பொறியியற் கூட்டுத்தாபனம், தேசிய உபகரண மற்றும் இயந்திர நிறுவனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் சம்பளங்கள் மற்றும் நியதிச்சட்டக் கொடுப்பனவுகள், மக்கள் வங்கியிடமிருந்து அரச தொழில் முயற்சிகளினால் பெறப்பட்ட கடன்களின் திரட்டிய வட்டியினைச் செலுத்துதல், ஸ்ரீ லங்கா விமானச் சேவைக்கான மூலதன உள்ளீடு, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பணிக்கொடைக் கொடுப்பனவு, தொழிற்பாட்டுக் குத்தகையின் கீழ் வாகனங்களுக்கான வாடகைக் கொடுப்பனவு இலங்கை மின்சார சபையின் படுகடன் சேவை, ஸ்ரீ லங்கா விமானச் சேவைக்காக திறைசேரி முறிகளை விநியோகித்தல் தேசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து விநியோகித்த புதிய பங்குகளை வாங்குதல்	119,640,000	25,814,711,275
243	அபிவிருத்தி நிதித் திணைக்களம்	சூரிய மின் உற்பத்திக் கருத்திட்டத்தின் ஏற்பாட்டுப் பற்றாக்குறை மற்றும் எஸ்எம்இ கடன் திட்டம், அபிவிருத்தி மானியங்கள், அத்தியவசிய நான்கு உணவுப் பொருட்களை கொவிட் தொற்றுக் காலப்பகுதியில் சலுகை விலை விற்பனை காரணமாக விலைமாற்றத்தினை மீளளிப்புச் செய்தல், தெரிவுசெய்யப்பட்ட சேதனப்பசளை வழங்குநர்களுக்கான முற்பணக் கொடுப்பனவு.	26,210,500,000	9,680,000,000
247	இலங்கை சுங்கம்	கொள்கலன் ஸ்கானிங் முறைமை விற்பனைகள் மற்றும் சேவைகளின் கீழான செலவினம்	-	2,028,000,000
248	மது வரித் திணைக்களம்	அலுவலர்களுக்கான ஊக்குவிப்பு மற்றும் விருது கொடுப்பனவுகள்	143,600,000	-

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
249	திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்	வங்கி மேலதிகப் பற்று மீதான வட்டிக் கொடுப்பனவு, குறுகிய கால கடன் பெறுகை மீதான வட்டி மற்றும் உள்நாட்டுப் படுகடன் மீள் கொடுப்பனவு, கடன் மிதப்பு செலவினக் கணக்கு, உபகடன் மீதி நிலுவையினை பதிவழிப்புச் செய்தல், இலங்கை மீன்பிடிக் கூட்டுத் தாபனத்தினால் பொதுத் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வட்டி நிலுவை	23,911,600,000	5,000,000,000
250	அரச கணக்குகள் திணைக்களம்	திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) கருத்திட்டத்திற்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கான செலவினம், புதிய சுத்திகரிப்பு சேவை வழங்குநருக்கான கொடுப்பனவு	3,175,000	-
414	சமுர்த்தி வதிவிடப் பொருளாதார நுண்நிதிய, சுயதொழில்மற்றும் வியாபார அபிவிருத்தி மற்றும் குறை பயன்பாடுடைய அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	தனியார் நிறுவனங்களுக்கு அங்கவீனமுற்றவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சம்பள மானியம் வழங்குதல்" நிகழ்ச்சித்திட்டத்தின் பயனாளர்களை 85 இலிருந்து 150 வரை அதிகரித்ததனால் சம்பள மானிய கொடுப்பனவு, சமுர்த்திக் குடும்பங்களை வலுவூட்டல் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை (இல.32) செயற்படுத்துதல்.	5,000,000	5,755,000,000
331	சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்	ரூபா 5,000 சமுர்த்தி கொடுப்பனவு வழங்குதல், பயனாளரின் வங்கிக் கடன் திரட்டிய வட்டி மற்றும் பகுதியளவு மூலதனத்தினை மீளளிப்புச் செய்தல்	11,665,870,000	-
103	பாதுகாப்பு அமைச்சு	முப்படை அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், லங்கா லொஜிஸ்ரிக் மற்றும் ரெக்னோலொஜிக் கம்பனியின் வாடகை நிலுவையினை செலுத்துதல், தேசிய பாதுகாப்புத் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை (இல.01) செயற்படுத்தல். தொலைத் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப அலகுக்கான பிற்ரகோட்டையிலுள்ள கட்டிடத்தினை புனரமைத்தல் செலவினம்.	6,420,000	300,135,500
222	இலங்கை தரைப்படை	கொவிட் -19 தொற்றுநொய் தடுப்பு தொடர்பான செலவினம், பல்லேகம இராணுவ வைத்தியசாலைக்கான கொள்வனவு செய்யப்பட்ட உணவு மற்றும் சீருடைகள், சம்பளம் மற்றும் வேதனாதிகள் கட்டிட நிர்மாணம், மருந்து மற்றும் ஏனைய கொள்வனவு, சுங்கத்தீர்வை மற்றும் வாகன உபகரண பராமரிப்புச் செலவினம், தேசிய பாதுகாப்புத் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை (இல.01) செயற்படுத்தல்.	10,120,320,000	3,543,382,000
223	இலங்கை கடற்படை	கொவிட் -19 தொற்றுநொய் தடுப்பு தொடர்பான செலவினம் மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை (இல.01) செயற்படுத்தல்.	100,000,000	1,427,260,000
224	இலங்கை வான்படை	கொவிட் -19 தொற்றுநொய் தடுப்பு தொடர்பான செலவினம், உபகரணங்கள் உதிரிப் பாகங்களுக்கான கொடுப்பனவு, தேசிய பாதுகாப்புத் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை (இல.01) செயற்படுத்தல்.	20,000,000	5,516,256,600

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
325	இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்	மிரிஸ்ஸவில் முன்கூட்டியே பயிற்சி மற்றும் நிர்வாக கட்டிடம் கட்டுதல்	-	75,000,000
409	உள்ளகப் பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு	பாதகமான வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்திற்கான செலவு, பேரிடர்கள் மற்றும் ஊடீசுடீ அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கான தேடல் மற்றும் மீட்பு திறனை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்காக பெறப்பட்ட மானியம் மற்றும் புதிதாக நிறுவப்பட்ட இராஜாங்க அமைச்சிற்கான கட்டிட வாடகை, தனிப்பட்ட ஊதியங்கள் மற்றும் பிற செலவுகள். தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்திற்கு தேவையான மேலதிக ஏற்பாடுகள் மற்றும் தேசிய பாதுகாப்பு கற்கைகள் இலங்கை மற்றும் தேசிய பாதுகாப்பு கல்லூரி, புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், அனர்த்தம் அதிகம் உள்ள வலயத்தில் வசிக்கும் அடையாளம் காணப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றம். , வரவு செலவுத் திட்ட முன்மொழிவு (இல. 02) தொடர்பாக - போர் வீரர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.	308,600"000	942,300,000
255	மாவட்டச் செயலகம், கொழும்பு	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	1,577,585,000	-
256	மாவட்டச் செயலகம், கம்பஹா	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	1,612,415,000	350,000,000
257	மாவட்டச் செயலகம், களுத்துறை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	925,750,000	-
258	மாவட்டச் செயலகம், கண்டி	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்	470,500,000	-
259	மாவட்டச் செயலகம், மாத்தளை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்	955,714,642	2,129,268

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
260	மாவட்டச் செயலகம், நுவரெலியா	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	398,290,000	-
261	மாவட்டச் செயலகம், காலி	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்	706,690,000	-
262	மாவட்டச் செயலகம், மாத்தறை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்	328,100,000	-
263	மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	422,500,000	100,000,000
264	மாவட்டச் செயலகம்/கச்சேரி - யாழ்ப்பாணம்	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	357,619,000	-
265	மாவட்டச் செயலகம்/ கச்சேரி - மன்னார்	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	22,000,000	-
266	மாவட்டச் செயலகம்/ கச்சேரி - வவுனியா	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	179,775,000	1,744,750
267	மாவட்டச் செயலகம்/கச்சேரி - முல்லைத்தீவு	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்	105,985,000	-
268	மாவட்டச் செயலகம்/ கச்சேரி - கிளிநொச்சி	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	62,430"000	-
269	மாவட்டச் செயலகம் /கச்சேரி - மட்டக்களப்பு	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	593,215,000	100,000,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
270	மாவட்டச் செலயலகம் - அம்பாறை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்	389,161,000	100,000,000
271	மாவட்டச் செயலகம் / கச்சேரி - திருகோணமலை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு,பெரும் போகத்தில் நெல் கொள்முதல்	282,855,000	-
272	மாவட்டச் செயலகம் - குருநாகல்	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு,பெரும் போகத்தில் நெல் கொள்முதல்	919,046,000	100,000,000
273	மாவட்டச் செயலகம் - புத்தளம்	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு,பெரும் போகத்தில் நெல் கொள்முதல்	540,600,000	100,000,000
274	மாவட்டச் செயலகம் - அனுராதபுரம்	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு,பெரும் போகத்தில் நெல் கொள்முதல்.	519,580,000	100,000,000
275	மாவட்டச் செயலகம் - பொலநறுவை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு,பெரும் போகத்தில் நெல் கொள்முதல்.	647,000,000	103,280,000
276	மாவட்டச் செலயலகம் - பதுளை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு, பெரும் போகத்தில் நெல் கொள்முதல்	386,000,000	-
277	மாவட்டச் செயலகம் - மொனராகலை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக முடக்கத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவு, பெரும் போகத்தில் நெல் கொள்முதல்	304,872,680	-
278	மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி	கோவிட்-19 தொற்றுநோயால் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணச் செலவு, விவசாயிகளிடமிருந்து வெண்டைக்காய் மற்றும் நெல்லை வாங்குதல், இரத்தினபுரியில் கோவிட் 19 நோயாளிகளுக்கான இடைநிலை சிகிச்சை மையங்களை நிறுவுதல்.	829,957,000	-

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
279	மாவட்டச் செயலகம் - கேகாலை	கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரம் லாக்டவுன் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கான செலவுகள்.	477,348,000	-
442	தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்			
254	பதிவாளர் நாயகம் திணைக்களம்	பதிவாளர் நாயகம் அலுவலகம் - மாளிகாவத்தை இடமாற்றம் மற்றும் அத்தியாவசிய அலுவலகத் தேவைகளை வழங்குவதற்கான செலவு.	18,500,000	15,000,000
304	வளிமண்டலவியல் திணைக்களம்	கூடுதல் நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள், மாற்று விகித ஏற்ற இறக்கத்துடன் தொடர்புடைய செலவுகள், நுஊஆறுகு உடனான ஒப்பந்தத்தை நீட்டிப்பதற்கான செலவுகள்	17,000,000	-
104	பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர்	செயல்பாட்டு குத்தகையின் கீழ் வாங்கப்பட்ட வாகனங்களின் குத்தகை தவணைக் கட்டணம்		
237	தேசிய திட்டமிடல் திணைக்களம்	செயல்பாட்டு குத்தகையின் கீழ் வாங்கப்பட்ட வாகனங்களின் குத்தகை தவணைக் கட்டணம்	2,087,518	1,762,592
251	மதிப்பீட்டுத் திணைக்களம்	செயல்படும் நிறுவனங்களின் மறுமலர்ச்சி அல்லது பயன்படுத்தப்படாத சொத்துச் சட்டம் எண் 43 இன் 2011 இன் கீழ் இழப்பீடுக்கான தீர்வு.	-	566,477,900
252	தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்	HIES (UNICEF) க்கு குழந்தை தொகுதி என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கு வெளிநாட்டு மானியங்களைப் பயன்படுத்துதல், மற்றும் ஆசியா, பசிபிக் (ADB), உலகளாவிய தணிக்கை புகையிலை ஆய்வு, குடிநீரின் தரம் பற்றிய குடும்ப ஆய்வுக்கான சர்வதேச ஒப்பீட்டு திட்டத்தின் திட்டங்களை செயற்படுத்துதல்.	-	24,385,000
105	வெகுசன ஊடக அமைச்சு	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை மன்றம் மற்றும் அஸோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் ஆகியவற்றின் சம்பளம் மற்றும் ஊதியங்கள், “தகவல் அறியும் உரிமை மற்றும் விளிம்புநிலை சமூகங்கள் மத்தியில் மோதலில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரிமையை மேம்படுத்துதல்” திட்டத்தின் மூலதனச் செலவினங்களைத் தீர்த்தல், நிறுவுதல் டெரெஸ்ட்ரியல் தொலைக்காட்சி ஒளிபரப்பின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்திற்கான திட்ட முகாமைத்துவ அலகு, தேசிய அபிவிருத்திக்கான ஊடக மையத்தின் தொடர்ச்சியான மற்றும் மூலதனச் செலவு	870,395,000	15,115,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
308	தபால் திணைக்களம்	சேவையின் தர நிதியிலிருந்து பெறப்பட்ட மானியத்தைக் கணக்கீடுசெய்தல்	-	750,404
110	நீதி அமைச்சு	எக்ஸ்பிரஸ் பேர்ல் சமுத்திர அனர்த்தம், புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அதிகாரிகளின் பிற கொடுப்பனவுகள், கட்டிட வாடகை, ஹுவுஸ் ஆ.்ப் ஜஸ்டிஸ் திட்டம் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 24) செயற்படுத்துதல் மற்றும் (இல. 33) தொடர்பான சட்ட சேவைகளுக்கான தொழில்முறை கட்டணம், சட்டத் துறை உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பாக	221,650,000	1,386,000,000
228	நீதிமன்ற நிருவாகம்	சட்டப் பிரிவு உட்கட்டமைப்பு மேம்பாடு (இல. 24) தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 24) செயற்படுத்துதல்.	-	1,730,000,000
231	கடன் நிவாரண சபை திணைக்களம்	சட்டப் பிரிவு உட்கட்டமைப்பு மேம்பாடு (இல. 24) தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 24) செயற்படுத்துதல்	17,550,000	5,500,000
234	உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகம்	உயர் நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் புதிதாக பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் துணை ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஊதியம் மற்றும் பிற கொடுப்பனவுகள்	36,300,000	-
418	சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சு	-		
232	சிறைச்சாலைகள் திணைக்களம்	சிறைச்சாலைகளில் ஆயத்த கட்டிடங்களை நிர்மாணித்தல், பல்லன்சேனையில் இளைஞர் குற்றவாளிகளுக்கான சீர்திருத்த நிலையத்தை அபிவிருத்தி செய்தல், கைதிகள் மத்தியில் கொவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான செலவுகள்	-	145,000,000
326	சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்	புதிதாக மாற்றப்பட்ட அலுவலகத்தை மெஹுவர பியச கட்டிடத்திற்கு பிரித்தல்	-	1,500,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
111	சுகாதார அமைச்சு	கோவிட் - 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், சிகிச்சை மையங்கள், மேலதிக நேரக் கட்டணம், சிறப்புக் கொடுப்பனவு, மருத்துவப் பொருட்களுக்கான நிலுவைத் தொகை, ஏற்படும் செலவினங்களுக்கான கணக்கு, காசநோய் மற்றும் மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய நிதியத்தின் (GFATM) திட்டத்திற்கான செலவுகள், செயல்படுத்தல் சுகாதார தகவல் மற்றும் தர மேம்பாடு (உலகளாவிய நிதியம்) திட்டம், உயர் இரத்த அழுத்தம் தடுப்பு மற்றும் மேலாண்மை மேம்படுத்த பல தலையீட்டு மூலோபாயம் பற்றிய ஆராய்ச்சி திட்டத்தை செயல்படுத்துதல், றூர்ழு மூலம் நிதியளிக்கப்பட்ட புகையிலை மற்றும் மதுபானம் தடுப்பு திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் புகையிலை மற்றும் போதைப்பொருள் பற்றிய தேசிய கருத்தரங்கின் திட்டங்கள் தடுப்பு, சுகாதார அமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் செலவு, மற்றும் மக்கள் மைய சுகாதார சேவை தொடர்பாக வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு (இல. 07) செயல்படுத்தல்."	6,649,000,000	11,475,911,524
416	சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு	-		
220	ஆயுர்வேத திணைக்களம்	கொடுப்பனவுகளை வழங்குதல், "கோவிட் - 19 நோயைக் கட்டுப்படுத்த மக்களுக்கு சுதேச மருந்துகளை விநியோகித்தல்" திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மக்கள் மைய சுகாதார சேவை தொடர்பாக வரவு செலவுத் திட்ட முன்மொழிவை (இல. 07) நடைமுறைப்படுத்துதல்	259,600,000	277,000,000
423	ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு	அரபொக்க மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள உத்தேச மருந்து வலயங்களுக்கு வெளியே உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், தற்போதுள்ள கொவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலையில் அரசு மருத்துவமனைகளுக்கு தொடர்ச்சியான மருத்துவ பொருட்களை வழங்குதல், கோவிட் - 19 காரணமாக நிலுவையில் உள்ள பில்கள் தீர்வு, தடுப்பூசிகள் கொள்முதல் செலவுகள் தடுப்பூசி திட்டத்திற்கான கோவிட் - 19 தடுப்பூசிகள்.	16,670,000,000	74,150,000,000
441	ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு	கோவிட்-19 தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான செலவினங்கள், மற்றும் அவசர மருத்துவமனைக்கு முந்தைய சிகிச்சை அம்புலன்ஸ் சேவையின் செலவினங்கள் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய்கள் மற்றும் கோவிட் நோய் கட்டுப்பாடு ஆகியவற்றின் கீழ் வருகின்றன.	880,000,000	-

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
114	போக்குவரத்து அமைச்சு	மாத்தறை - பெலியத்த - கதிர்காமம் வரையிலான புதிய ரயில் பாதையின் நிலுவை பில்கள் தீர்வு, "குருநாகல் - தம்புள்ளை புதிய ரயில் பாதை வழியாக ஹபரணை" திட்டத்தின் தொடர்ச்சி.	-	133,770,000
306	இலங்கை புகையிரதத் திணைக்களம்	கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டு கடன் வழங்கல் கணக்கு.	-	8,442,530,000
115	வலுசக்தி அமைச்சு	வெளிநாட்டுப் பயணம், பராமரிப்புச் செலவு, மறுவாழ்வு மற்றும் மூலதனச் சொத்துக்களை மேம்படுத்துதல், அமைச்சரின் இல்லத்தைப் புதுப்பித்தல்	5,700,000	15,484,317
116	வர்த்தக அமைச்சு	எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள், போக்குவரத்து, சம்பளம் மற்றும் ஊதியங்கள், பிற கொடுப்பனவுகள், வாடகைகள் மற்றும் உள்ளூர் வரிகள், பகிர்வு, தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கையகப்படுத்துதல், தேசிய வர்த்தகக் கொள்கையை உருவாக்குவதற்கான செயலகத்தை நிறுவுதல், இலங்கை வங்கி மற்றும் லங்கா சதொச, இலங்கை மொத்த விற்பனை நிலையம் மூலம் மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்ட நிலுவையில் உள்ள கடன்களுக்கான தீர்வு	154,930,000	1,095,000,000
117	நெடுஞ்சாலைகள் அமைச்சு	கட்டுமானத் திட்டத்தின் ஆரம்ப ஆய்வுகள் மற்றும் ஆய்வுகளுக்கான செலவுகள் மற்றும் திட்டங்களின் நிலுவையில் உள்ள பில்களை தீர்த்தல்.	-	8,161,593,656
435	கிராமிய வீதிகள் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு	கட்டுமான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் பிற தளவாடங்கள் மற்றும் அரசு சொந்த நிறுவனங்களின் பயன்பாட்டிற்கான போக்குவரத்து வாகனங்களை வாங்குவதற்கான முன்பணங்கள், பொருட்கள், பராமரிப்பு, தனிப்பட்ட ஊதியங்கள் மற்றும் சேவைகளுக்கான செலவுகள்	11,091,168	5,200,000,000
118	கமத்தொழில் அமைச்சு	அம்பாறை, பதுளை, கண்டி, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை IFAD இன் மானிய உதவியுடன், உலர் வலய வாழ்வாதார ஆதரவு கூட்டாண்மைத் திட்டத்தின் செலவினங்களுடன் விரிவுபடுத்தவும்	-	100,921,469
285	கமத்தொழில் திணைக்களம்	தேவையான விதைகளைப் பெறுதல், வடிகால் அமைப்பு அமைத்தல், விவசாய நடவடிக்கைகளை செயல்படுத்த பாதுகாப்பு வேலிகள் அமைத்தல்.	-	15,000,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
407	பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	இயக்க குத்தகை முறையின் கீழ் அமைச்சரின் ஊழியர்களுக்கு வாகனங்கள் வழங்குதல், ஆடு வளர்ப்புத் திட்டத்தின் தொடர்ச்சி, கூடுதல் பயிர் சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்துதல்	2,073,000	150,000,000
425	நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு	இராஜாங்க அமைச்சின் அலுவலக வளாகத்தை புதுப்பிப்பதற்கான செலவு மற்றும் புதிதாக பணியமர்த்தப்பட்ட அபிவிருத்தி அதிகாரிகளின் தனிப்பட்ட ஊதியத்திற்கான செலவு	60,000,000	3,700,000
426	உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு	தேசிய உர செயலகத்தை செத்சிறிபாய இரண்டாம் கட்ட கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கும் உர தரவுத்தளத்துடன் தொடர்புடைய இணைய சேவையக வசதிகளை ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துடன் தொடர்வதற்குமான செலவு.	13,450,000	5,000,000
427	கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு	தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் நிலுவையில் உள்ள பில்கள் மற்றும் கட்டிடங்களின் மறுசீரமைப்புக்கான செலவுகள்	-	8,239,746
119	மின்சக்தி அமைச்சு	பகிர்வு, தொலைபேசி மற்றும் இணைய வசதிகளை நிறுவுதல், போக்குவரத்து, மறுசீரமைப்பு மற்றும் மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல், மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்படுத்தல் திட்டம், இலங்கை மின்சார சபையின் கணக்கில் காட்டப்படாத வெளிநாட்டு கடன் கணக்கு, கிராமப்புற மின்மயமாக்கல் தொடர்பான வரவு செலவு திட்டத்தை (இல. 20) நடைமுறைப்படுத்துதல்	2,930,000	4,751,362,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
406	சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	புதியவர்களுக்கு அத்தியாவசிய அலுவலகத் தேவைகளை வழங்குதல், இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டது, அமைச்சர் அலுவலகத்தின் வாகன பராமரிப்பு.	2,500,000	7,000,000
122	காணி அமைச்சு	புதிதாக நியமனம் பெற்ற 102 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கரிம உரம் தயாரித்தல், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள்.	51,518,160	350,000,000
286	காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்	வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	500,000	-
287	காணி நிர்ணயத் திணைக்களம்	புதிதாக பணியமர்த்தப்பட்ட 30 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள், இரண்டு உதவி ஆணையாளர்களுக்கான சம்பள பாக்கிகள், கட்டிடங்களின் மறுசீரமைப்புக்கான செலவு	7,800,000	8,000,000
288	நில அளவையாளர் நாயகம் திணைக்களம்	வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	35,000,000	-
327	காணிப் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	பிராந்திய அதிகாரிகளுக்கு 350 ரெப்லெட் கணனிகள் கொள்வனவு	-	17,500,000
123	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு	நிலுவையிலுள்ள பில்களைத் தீர்த்தல்	-	263,578,097
411	நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூ ய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	புதிதாக நிறுவப்பட்ட மாநில கடலோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில மேம்பாட்டு அமைச்சகத்தின் சிட்டைகளைத் தீர்த்தல், எக்ஸ்பிரஸ் பெர்ல் கப்பல் சம்பவத்தில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு தொடர்பான தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நடவடிக்கைகளுக்காக கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தால் செய்யப்பட்ட செலவினங்கள், செலவுகள் லுனாவ நகர்ப்புற வீடமைப்புத் திட்டத்தின் மேலதிக வேலைக் கூறுகள் மீளச் செலுத்துதல், ஒலியமுல்ல மற்றும் கொலன்னாவ திட்டங்களின் ஊடாக களனிப் பிரதேசத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அவசரத் தேவைகளுக்கான செலவுகள், மெட்டோ கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் நிலுவை பில்கள் தீர்வுக்கான செலவு, வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் (இல. 12) நடைபாதைகள் மற்றும் பொதுவான வசதிகள் தொடர்பாக	150,000,000	3,579,489,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
415	கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	மரந்தகஹமுல அரிசி அங்காடி வளாகத்துடன் இணைந்த 115 கடைகளை நிர்மாணித்து முடிக்கவும்.	-	37,150,000
310	அரசாங்கத் தொழிற்சாலை	பணியாளர் கொடுப்பனவுகள், பிற கொடுப்பனவுகளின் நிலுவைத் தொகை, ஒப்பந்த சேவைகளின் நிலுவையில் உள்ள பில்களைத் தீர்த்தல், 100 கரிம உரங்கள் வெட்டும் இயந்திரங்களை தயாரித்து வழங்குதல்.	9,000,000	60,000,000
417	தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு	சம்பளம் மற்றும் ஊதியம்	29,500"000	-
443	கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்			
291	கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்	நீர்கொழும்பில் உள்ள பிராந்திய அலுவலகக் கட்டிடத்திற்கான இறுதிக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல்	-	1,723,000
126	கல்வி அமைச்சு	பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் 13 ஆண்டு கல்வித் திட்டம் தொடர்பான திட்டங்களின் நிலுவையில் உள்ள பில்களை செட்டில் செய்தல், நிலுவையில் உள்ள பில்களுக்கு தீர்வு செய்தல் மற்றும் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாடு மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாடு மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மனிதவள மேம்பாடு, அச்சு இயந்திரம் வாங்குதல் மாநில அச்சகக் கூட்டுத்தாபனம், மாநிலப் பல்கலைக் கழகங்களின் கைகளில் உள்ள பில்களைத் தீர்த்தல்	-	8,742,948,000
214	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	கொழும்பு பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புள்ளிவிபர கட்டிடத்திற்கு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்	-	100,000,000
403	மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு	குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம், சார்க் உறுப்பு நாடுகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கட்டணமில்லா ஹெல்ப்லைன் அமைப்பது தொடர்பான செலவுகள், கொழும்பு பாதுகாப்புப் பள்ளியின் செலவு, வரவு செலவுத் திட்ட முன்மொழிவை (இல. 30) நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்கான மீதமுள்ள நிதியை மீட்டெடுக்கவும். கிராமப்புற பாடசாலைகளின் அபிவிருத்தி.	-	367,010,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
404	கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சு	"HIES (UNICEF) க்கு குழந்தை தொகுதி" என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கும், தொலைதூரக் கல்வி தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 08) செயல்படுத்துவதற்கும் வெளிநாட்டு மானியங்களைப் பயன்படுத்துதல்	-	1,168,000,000
335	தேசிய கல்வி ஆணைக்குழு	சம்பளம் மற்றும் ஊதியம், அலுவலக உபகரணங்களை வாங்குதல், ஆடியோவிசுவல் மாநாட்டு அமைப்பை நிறுவுதல், தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு புதிய இணையதளத்தை தொடங்குவதற்கான செலவு, BMICH வளாகத்தில் உள்ள அலுவலக இடத்திற்கான வாடகை	7,604,000	3,000,000
421	திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு	"KIPO/KIPA பொருத்தமான தொழில்நுட்பத் திட்டம் 2019" இன் நிலுவையில் உள்ள பில்களைத் தீர்த்தல், தொழிற்கல்வி தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 09) செயல்படுத்துதல்.	500,000,000	1,227,690"000
422	அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சு	தனிப்பட்ட ஊதியம், பராமரிப்பு செலவு, மூலதன சொத்துக்களை மறுசீரமைப்பு செய்தல், பிரிவேனா மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல்	164,500,000	46,000,000
130	அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	மாண்புமிகு ஆர்.சம்பந்தன் அவர்களுக்கு அத்தியாவசிய சேவை வசதிகளை வழங்குதல், ஆளணி மீள்திருத்தம் தொடர்பான செலவுகள்	18,000,000	-
253	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வூதிய கொடுப்பனவுகள்	4,272,000,000	-
420	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சு	பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டத்திற்கான செலவு, "கிராமப்புறங்களில் 1000 கி.மீ. சாலை நீளம் மேம்பாடு" திட்டத்தின் நிலுவையிலுள்ள பில்களைத் தீர்த்தல், "நகர்ப்புற திட்ட ஆயத்த வசதி" திட்டத்தின் நிலுவையில் உள்ள பில்களைத் தீர்த்தல், வரவுசெலவுத்திட்ட முன்மொழிவை (இல. 35) செயற்படுத்துதல். கழிவு முகாமைத்துவ பிரதேச சபை மற்றும் (இல. 36) உட்கட்டமைப்பு பிரதேச சபை தொடர்பானது	-	6,056,000,000
312	மேல் மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவுசெலவுத்திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்கள் மைய சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு	1,228,000,000	832,800,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
313	மத்திய மாகாண சபை	கோவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவுசெலவுத்திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு.	428,000,000	928,000,000
314	தென் மாகாண சபை	தங்காலை ஆதார வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைப் பிரிவின் அபிவிருத்திக்காக முழுகுஜர் கொரியா வழங்கிய மானியம், கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், பாடசாலைகள் மீள் திறப்பு, கெபிலியபுர நீர்ப்பாசனக் கால்வாய் அபிவிருத்தி, அவசர திருத்தம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான செலவுகள், ரிதியகம நன்னடத்தை நிலையத்தின் வசதிகளை விரிவுபடுத்துதல், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்துதல் (இல. 07) மக்களை மையப்படுத்திய சுகாதார சேவை, (இல. 13) கிராமிய விளையாட்டு அபிவிருத்தி, (இல. 31) கிராமிய வைத்தியசாலைகளின் அபிவிருத்தி	1,093,000,000	884,338,103
315	வட மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு, (இல. 21) தொட்டி மறுசீரமைப்பு.	446,000,000	1,328,400,000
316	வட மேல் மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு, (இல. 21)	400,000,000	897,400,000
317	வட மத்திய மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு, (இல. 21)	287,150,000	964,600,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
318	ஊவா மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு, (இல. 21)	440,000,000	699,800,000
319	சப்ரகமுவ மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு, (இல. 21)	574,000,000	1,132,200,000
321	கிழக்கு மாகாண சபை	கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பான செலவுகள், சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரவு செலவு திட்ட முன்மொழிவை செயற்படுத்துதல் (இல. 07) மக்களை மையமாகக் கொண்ட சுகாதார சேவை, (இல. 13) கிராமப்புற விளையாட்டு மேம்பாடு, (இல. 31) கிராமப்புற மருத்துவமனைகளின் மேம்பாடு, (இல. 21)	732,000,000	1,633,400,000
135	பெருந்தோட்ட அமைச்சு	புதிதாக நியமனம் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், அத்தியாவசிய வாகனங்கள் திருத்தம், வாடகை மற்றும் உள்ளூர் வரிகளின் நிலுவை பில்கள், தோட்டத் துறை அபிவிருத்தி தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தை (இல. 18) நடைமுறைப்படுத்துதல்	26,500,000	254,628,000
410	கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	புதிய கட்டிடத்தில் இராஜாங்க அமைச்சினைத் தாபித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவு, தோட்டத் துறை அபிவிருத்தி தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு (இல. 18) நடைமுறைப்படுத்தல், சொட்டு நீர் பாசனம் தொடர்பான வரவு செலவுத் திட்டம் (இல. 32) தொடர்பான செலவுகள்.	-	983,500,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
431	தென்னை, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	வாகன வாடகை, தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வாங்குதல், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சர்வதேச சான்றிதழ் கற்கைநெறிக்கான பில்களை செலுத்துவதற்கான மானியத்தைப் பயன்படுத்துதல், கட்டிடம் மற்றும் கட்டமைப்புகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான செலவுகள், வாகனங்கள், ஆலை மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல் சொட்டு நீர் பாசனம் தொடர்பாக வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் (இல. 19), தோட்டத் துறை மேம்பாடு தொடர்பாக (இல. 18).	3,650,000	1,016,971,000
432	கரும்பு, சோளம், முரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை, உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	சம்பளம், பிற தொடர் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகள், புதிதாக நிறுவப்பட்ட தேசிய வாசனை திரவியங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் சந்தைப்படுத்தல் சபைக்கான அங்கீகாரச் சான்றிதழ், புதிதாக நிறுவப்பட்ட அரச அமைச்சின் ஊழியர்களுக்கு அத்தியாவசிய வசதிகளை வழங்குதல், கந்தளே சர்க்கரை நிறுவன ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் பிற செலவுகள், இழப்பீடு தொடர்பான இழப்பீடு. ஹிங்குரானை சுகர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொடர்பான அம்பாறை தொழிலாளர் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, சிறு படையணியில் தன்னிறைவுக்கான சிறப்புத் திட்டத்தின் செலவு, விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டச் செலவு, சொட்டு நீர் பாசனம் தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை (இல. 19) நடைமுறைப்படுத்துதல் மற்றும் (இல. 18) தோட்டத் துறை அபிவிருத்தி.	30,000,000	1,810,334,000
149	கைத்தொழில் அமைச்சு	சிறு மற்றும் நுண் கைத்தொழில்கள் - தலைவர் மற்றும் தொழில்முனைவோர் ஊக்குவிப்புத் திட்டம்" திட்டத்தின் தொடர்ச்சி, அலுவலக வாகனங்களை புதுப்பித்தல், ஏறாவூரில் உள்ள கைத்தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை நிறைவு செய்தல்.	-	710,350,000
408	பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	பாரம்பரிய கிராமங்களை மேம்படுத்துவது தொடர்பாக வரவு செலவுத் திட்ட முன்மொழிவை (இல. 33) செயல்படுத்துதல்.	-	2,000,000,000
439	பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு	சம்பளம் மற்றும் வேதனாதிகள், இலங்கை கைவினைப் பொருட்கள் சபைகளுக்கான ஏனைய தொடர்ச்சியான செலவுகள்	44,305,000	38,600,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
303	நெசவுக் கைத்தொழில் திணைக்களம்	1980-1982 காலகட்டத்தில் விசைத்தறி தொழிற்சாலைகளில் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு இழப்பீடு மற்றும் விசைத்தறி நிறுவன ஊழியர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குதல்	172,285,000	-
151	கடற்றொழில் அமைச்சு	எம்வி எக்ஸ் பிரஸ் பேர்ல் சரக்குக் கப்பல் தீ விபத்து காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கு இழப்பீடு	353,150,000	-
290	கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம்	எம்வி எக்ஸ் பிரஸ் பேர்ல் சரக்குக் கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வாங்குதல், இயக்க குத்தகைத் தவணை, சேவைகளுக்கான பில்களை செலுத்துதல், தியவர திரியா கடன் திட்டத்திற்கான இலங்கை வங்கி மானியத்தின் வட்டித் தீர்வு, இழப்பீடு கடலில் மீன்பிடிக்கும்போது அவசர அவசரமாக இறந்த மீனவர், மீன்பிடி கப்பல் கண்காணிப்பு அமைப்புக்கான இன்மார்சாட் சேவையை புதுப்பிப்பதற்கான செலவு, வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு வெளியுறவு அமைச்சு செய்த செலவுகளை திருப்பிச் செலுத்துதல்	51,219,000	-
405	அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு	நிலுவையில் உள்ள மின்சாரம் மற்றும் நீர், கட்டிடம் மற்றும் கட்டமைப்பை புதுப்பித்தல், கடனிலிருந்து பெறப்பட்ட வட்டியை திருப்பிச் செலுத்துதல், இயக்க குத்தகை தவணைகள், எக்ஸ்பிரஸ் பேர்ல்ஸ் தீ விபத்து காரணமாக சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த ஆராய்ச்சி, வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துதல் (இல. 15) மறுசீரமைப்பு மீன்வளக் கூட்டுத்தாபனம் மற்றும் (இல. 17) மீன் பண்ணை அபிவிருத்தி தொடர்பாக.	60,451,898	241,850,000
160	சுற்றாடல் அமைச்சு	இரண்டு தற்காலிக திட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம், "இலங்கையில் நிலையான மற்றும் திறமையான நடமாடும் அமைப்பு" திட்டத்திற்கான திட்ட தயாரிப்பு மானியம், "திடக்கழிவு அகற்றும் வசதிகளை நிர்மாணித்தல்" திட்டத்தின் நிலுவையைத் தீர்த்தல், புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் (இல. 25) "சுரகிமு கங்கா" திட்டம்	93,275,280	228,650,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
424	சீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள்காடாக்கம், வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு			
283	வன பாதுகாப்புத் திணைக்களம்	வனப் பாதுகாப்பு தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவை (இல. 26) செயற்படுத்துதல்	-	934,100,000
284	வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்	மனித யானை மோதலைத் தணிப்பது தொடர்பாக வரவு செலவுத் திட்ட முன்மொழிவை (இல.34) நடைமுறைப்படுத்துதல்.	-	2,370,000,000
161	வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் அழிந்து வரும் உயிரினங்கள் மீதான சர்வதேச வர்த்தகத்திற்கான மாநாடு", வாடகை மற்றும் உள்ளூர் வரிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டத்திற்கான செலவு, மார்க்யூ ஒப்பந்ததாரருக்கான கட்டணம்	27,004,679	524,545,760
166	நீர் வழங்கல் அமைச்சு	அமைச்சரின் அலுவலகத்திற்கான சம்பளம் மற்றும் ஊதியம்	2,500,000	-
433	கிராமிய மற்றும் பிரதேச நீர்க் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	வாகன பராமரிப்பு, சம்பளம் மற்றும் ஊதியம்	3,600,000	970,000
332	தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம்	UNICEF நிதியுதவியுடன் சமூக நிர்வகிக்கப்பட்ட நீர் திட்டங்களுக்கான நீர் பாதுகாப்பு திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான செலவு, வாகனங்களுக்கான குத்தகை வாடகை, நியமிக்கப்பட்ட 122 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	60,100,000	2,400,000
169	அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர்			
280	கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்	புதிதாக நிறுவப்பட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சிற்கான செலவு	13,700,000	11,280,000
176	துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு	அமைச்சின் வாகன பராமரிப்பு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான செலவு - சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதானம்	26,160,000	1,500,000

தலைப்பு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
434	களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப்படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	ஊடகப் பிரிவுக்கான உபகரணங்களை கொள்வனவுசெய்தல்	-	3,000,000
186	தொழில்நுட்ப அமைச்சு	புதிதாக நிறுவப்பட்ட அமைச்சின் அலுவலக இடத்திற்கான வாடகை, இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவகத்தின் தொடர்ச்சியான செலவுகள்	82,875,440	-
189	பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு	சமூகப் பொலிஸ் சேவைகளுக்கான இராஜாங்க அமைச்சின் தொடர்ச்சியான மற்றும் மூலதனச் செலவுகள், வாகனக் குத்தகை வாடகை, STF அதிகாரிகளுக்கான கிருமி நாசினி திரவம் வாங்குதல், ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்கான செலவு, பொதுப் பாதுகாப்பு தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 03) செயற்படுத்துதல்	109,579,000	417,070,000
225	பொலிஸ் திணைக்களம்	வாகனங்களின் மதிப்பு மற்றும் ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாகனங்களின் வரி கூறுகளை செலுத்துதல், தனிநபர் ஊதியம், பொருட்கள், சேவைகள், உணவு முறைகள் மற்றும் சீருடைகள், போக்குவரத்து கொடுப்பனவு, பொலிஸ் நாய்கள் கொள்வனவு, தனிமைப்படுத்தப்பட்ட மையங்களிலுள்ள அதிகாரிகளுக்கான உணவுகள், படுக்கைகள், முகமூடிகள், அலுவலகம் மற்றும் சமையலறை உபகரணங்கள் கொள்வனவு, தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு வசதியாக கட்டிடம் புதுப்பித்தல், குற்றப் புலனாய்வுப் பிரிவினை மறுசீரமைத்தல் மற்றும் புதிதாக நிறுவப்பட்ட காவல் நிலையங்களுக்கு அவசரத் தேவைகளை வழங்குதல், பொது பாதுகாப்பு தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 03) செயல்படுத்துதல்.	1,249,000"000	5,021,490,174
194	இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு	டோக்கியோ 2020 பாராலிம்பிக் விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகள், சம்பளம் மற்றும் ஊதியங்கள் மற்றும் மேம்பாட்டு அதிகாரிகளுக்கான பிற கொடுப்பனவுகள் மற்றும் கிராமப்புற விளையாட்டு மேம்பாடு மற்றும் (இல. 11) விளையாட்டுப் பொருளாதாரம் தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை (இல. 13) செயற்படுத்துதல்	334,203,000	2,000,000,000
328	மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களம்	வடமாகாணத்தில் வேலை வாய்ப்பு மற்றும் சுயதொழில் வழிகாட்டல் மூலம் மாற்றுத்திறனாளிகளை பொருளாதாரத் துறையில் சேர்ப்பதை ஊக்குவிப்பதற்காக உதவி வழங்கும் திட்டத்திற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பிடம் இருந்து பெறப்பட்ட மானியத்தை கணக்கிடுதல்.	-	2,299,500

ஒதுக்கீடு இல.	அமைச்சு / திணைக்களம்/ செலவின அலகு	நோக்கம்	மீண்டெழும்	மூலதனம்
402	கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	உத்தியோகபூர்வ இல்லங்களைப் புனரமைத்தல், விளையாட்டு மருத்துவப் பிரிவுக்கான மருத்துவப் பொருட்களின் செலவு, கிராமப்புற விளையாட்டு மேம்பாடு தொடர்பாக வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 13) செயற்படுத்துதல்	10,000"000	1,111,400,000
198	நீர்ப்பாசன அமைச்சு	ஒருங்கிணைந்த நீர்வள மற்றும் நீர்வள முகாமைத்துவத் திட்டத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், ஆசிய அபிவிருத்தி வங்கியால் பெறப்பட்ட நேரடி பணம், குளம் புனரமைப்பு தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவை (இல. 21) செயல்படுத்துதல்	-	4,911,880,000
	மொத்தம்		**127,600,464,765**	**235,915,697,861**

மூலம் (தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

5.6.3 வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு, நிறைவேற்றல் மற்றும் கண்காணிப்பு தொடர்பான பணிப்புரைகள்

வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு, நிறைவேற்றல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் சுற்றுநிருபங்கள் 2021 இல் வெளியிடப்பட்டன.

அட்டவணை 5.5| அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்

சுற்றுநிருப இல.	திகதி	விடயம்
NB/01/2021	2021.07.28	வரவுசெலவுத்திட்ட அழைப்பு -2022 நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் 2022-2024
NB/02/2021	2021.12.06	காலாண்டு ஆணைப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் பொறுப்புகளை நிர்வகித்தல்
NB/03/2021	2021.12.21	2022 க்கான செலவினங்களுக்கான அங்கீகாரம் மற்றும் பொதுச் செலவினங்களை நிர்வகித்தல்

மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.7 அரசாங்க செலவினங்களின் வகுதி

மொத்த மீண்டெழும் செலவினத்தில் ஏறக்குறைய 70 சதவீதம் வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் வேதனாதிகளுக்கானதாகும். வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2020 இல் ரூபா 980.3 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 1,048.4 பில்லியனாக 6.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, இது மொத்த மீண்டெழும் செலவினத்தில் ஏறக்குறைய 38 சதவீதத்தினை உள்வாங்கியுள்ளது. சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம் ரூபா 845.7 பில்லியனாகும் இது மீண்டெழும் செலவினத்தில் 31 சதவீதமாகும். ஓய்வூதியம், சமுர்த்தி, மருத்துவ வழங்கல்கள், உரமானியம் உள்ளடங்களான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் செலவினம் ரூபா 684.5 பில்லியனாகக் காணப்பட்டது.

அட்டவணை 5.6 | வகுதி அடிப்படையில் அரசாங்க செலவினம்

ரூபா மில்லியன்

செலவின வகுதி	2019*	2020	2021 திருத்தப்பட்ட மதிப்பீடு	2021 (அ)
மொத்த செலவினம்	3,337,896	3,040,996	3,326,000	3,521,735
மீண்டெழும்	2,424,582	2,548,359	2,756,000	2,747,512
சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்	686,452	794,158	840,000	845,680
பொருட்கள் சேவைகள்	161,826	180,193	184,000	168,932
வட்டி	901,352	980,302	1,055,000	1,048,382
உதவுதொகை மற்றும் மாற்றல்கள்	551,524	717,133	677,000	684,518
நிலுவை	123,428	(123,428)	-	-
மூலதன மற்றும் தேறிய கடன் வழங்கல்	913,314	492,638	570,000	774,223
பொது முதலீடு	631,235	811,773	582,000	789,636
நிலுவை	299,178	(299,178)	-	-
ஏனைய	(17,099)	(19,957)	(12,000)	(15,413)
மொ.உ.உ. %				
செலவினம்	22.3	20.2	20.2	21.0
மண்டெழும் செலவினம்	16.2	17.0	16.7	16.3
வட்டிச் செலவினம்	6.0	6.5	6.4	6.2
மூலதன மற்றும தேறிய கடன் வழங்கல்	6.1	3.3	3.5	4.6
அதில் பொது முதலீடு	4.2	5.4	3.5	4.7

மூலம்: தேசிய அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

5.7.1. சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்

மாகாண சபைகள், இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸ் என்பன உள்ளடங்களான அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம் 2020 இல் காணப்பட்ட ரூபா 794.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் 845.7 பில்லியனாக காணப்பட்டதுடன் 6.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது அரசாங்க ஊழியர்களின் வருடாந்த சம்பள அதிகரிப்பினாலும் 2020 இன் பிற்பட்ட காலப்பகுதியில் பட்டதாரிப் பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு மற்றும் பன்நோக்கு செயலணியினை ஆட்சேர்ப்புச் செய்தமை என்பவற்றினால் ஏற்பட்டதாகும்.

அட்டவணை 5.7 | சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம்

ரூபா மில்லியன்

துறை	2016	2017	2018	2019	2020	2021 (அ)
மத்திய அரசாங்கம்	184,856	197,914	212,481	240,329	270,521	297,349
மாகாண சபைகள்ழு	143,740	149,715	162,086	179,971	239,034	256,142
பாதுகாப்பு	180,829	180,998	189,055	189,508	199,474	205,542
பொலிஸ் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு	61,336	59,891	62,423	76,644	85,129	86,646
மொத்தம்	570,761	588,518	626,045	686,452	794,158	845,680

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
(*அரசாங்க மாற்றல்கள் செலவினம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது)

ஓய்வூதியங்கள்

மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2020 இல் ரூபா 257.8 பில்லியனிலிருந்து 2021 இலிருந்து ரூபா 269.8 பில்லியனாக 4.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பானது 2020 இல் காணப்பட்ட 661,790 ஓய்வூதியம் பெறுநர்கள் 2021 இல் 672,196 ஆக 1.6 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாகும். மேலும் தற்பொழுது காணப்படுகின்ற ஓய்வூதியம் பெறுநர்கள் மற்றும் இறந்தவர்களின் ஓய்வூதியத்தினைவிட புதிய ஓய்வூதியம் பெறுநர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகமாகும்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக 2021 இல் காயமடைந்த மற்றும் மரணித்த இராணுவத்தினருக்கான அனைத்தும் அடங்கிய சம்பளக் கொடுப்பனவை நட்டஈடாக வழங்குவதற்கு அரசாங்கம் ரூபா 37.9 பில்லியனை செலவிட்டுள்ளது. இது 2020 இல் ரூபா 37.46 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீத அதிகரிப்பாகும். 2021 ஏப்ரல் வரை மரணித்தவர் 55 வயதினை நிறைவு செய்யும்வரை இந்நட்ட ஈட்டுக்காக மரணித்தவரில் தங்கிவாழ்பவர்கள் உரித்துடையவர்களாவர். 2021 ஏப்ரலில், மரணித்த உறுப்பினர்கள் 55 வயதை அடைந்த பின்னர் ஓய்வூதியத்தினை செலுத்துகின்ற அதேவேளை இந்த

நட்டஈட்டினை தங்கிவாழ்பவர்களுக்கு அவர்களது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

5.7.2. அரசிறை பன்முகப்படுத்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைவாக வருடாந்த வரவு செலவுத்திட்டத்திலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் ஆலோசனையின் பேரில் மாகாண சபைகளுக்கு அரசாங்கம் நிதியினை மாற்றுதல் வேண்டும்.

இதற்கமைவாக, மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு ரூபா 311.6 பில்லியனை நேரடியாக வழங்கியுள்ளது. இதில் ரூபா 284.6 பில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 27.0 பில்லியன் மூலதனச் செலவினங்களுக்குமானதாகும். இதற்கு மேலதிகமாக மூலதனச் செலவினங்களுக்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சினூடாக ரூபா 6.7 பில்லியன் வழங்கப்பட்டது. இதற்கமைவாக 2021 இல் மூலதனச் செலவினங்களுக்காக மாகாண சபைகளுக்கு ரூபா 33.7 பில்லியன் மாற்றப்பட்டது. மீண்டெழும் செலவினங்களுக்கான மாற்றல் 2020 இல் ரூபா 266 பில்லியனிலிருந்து 2021 இல் 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. மீண்டெழும் செலவினத்தில் இந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கு பிரதான காரணம் அரசாங்க ஊழியர்களினது வருடாந்த சம்பள அதிகரிப்பு மற்றும் 2021 இல் கொவிட்-19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவினம் என்பனவாகும்.

அட்டவணை 5.8 | 2021 இல் மாகாண சபைகளுக்கான மாற்றல்கள்

ரூபா மில்லியன்

மாகாண சபைகள்	மாற்றல்கள் மீண்டெழும்	மூலதன
மேற்கு	46,953	1,956
மத்திய	37,229	3,128
தெற்கு	36,096	3,021
வடக்கு	26,799	3,272
வடமேல்	33,445	2,619
வடமத்திய	20,544	3,186
ஊவா	20,246	3,038
சப்பிரகமுவ	30,127	2,913
கிழக்கு	28,163	3,826
மாகாண சபைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்	-	6,742
மொத்தம்	**284,602**	**33,701**

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
(அ) தற்காலிகமானது

5.8. அரசாங்க செலவினத்தின் துறைரீதியான பகுப்பாக்கம்

5.8.1. மனிதவள முகாமைத்துவம்


சுகாதாரத்துறை

சுகாதாரப் பராமரிப்பில் முதலீடு

2021 இல் கொவிட் - 19 இன் தாக்கம் சமூக மற்றும் பொருளாதார மட்டத்தில் அறியப்பட்டதுடன் சுகாதாரத்துறைக்கான அரசாங்கத்தின் பங்களிப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டது.

2021 இல் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளினூடாக மத்திய அரசாங்கத்தினால் உரப்பட்ட மூலதனச் செலவினம் 2020 இல் காணப்பட்ட ரூபா 46.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 140.1 சதவீதமாக அதிகரித்து ரூபா 112.8 பில்லியனாக காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம் கொவிட்-19 தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினமாகும். அத்துடன் மாகாண சபைகள் உள்ளடங்களான சுகாதாரத்துறையின் மொத்த மீண்டெழும் செலவினம் 2020 இல் ரூபா 266.1 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 272.6 பில்லியனாக 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த வகையில் 2021 இல் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் இரண்டினதும் மொத்தச் செலவினம் 23.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

வரைபு 5.1 | சுகாதார பராமரிப்பு மீதான மத்திய அரசாங்க செலவினம் - 2021



* சுவசெரிய கருத்திட்ட நன்மையடைந்த வயோதிபர் நிகழ்ச்சித்திட்டம் 2019 இல் உள்ளடக்கப்படவில்லை
மூலம்: தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

சுகாதாரத்துறை ஊழியர்களின் சமபளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம் 2020 உடன் ஒப்பிடுகையில் 11.1 சதவீத அதிகரிப்பொன்றினைக்காட்டி ரூபா 144.2 பில்லியனிலிருந்து ரூபா 160.2 பில்லியனாக அதிகரித்தது. ஒப்பீட்டு ரீதியாக மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் மேலதிக பணிக்கொடுப்பனவுகள் 2020 இல் ரூபா 29.8 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 32.6 பில்லியனாக அதிகரித்தது. இதற்கான பிரதான காரணம் கொவிட் -19 தொற்றுக் காலப்பகுதியில் மேலதிக பணிகள் அதிகரித்தமையாகும்.

2021 இன் சுகாதாரத்துறையின் பிரதான நோக்கம் யாதெனில் கொவிட்-19 தொற்றினால் ஏற்பட்ட சவால்களை கையாள்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குகின்றமையாகும். நாடளாவிய ரீதியிலான தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

தேவையான சனத்தொகைக்கு கொவிட் -19 தடுப்பு மருந்துகளை வழங்குவதனை உறுதி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 161.85 மில்லியன் ஐ.அ.டொலர்களை வழங்கியது. கொவிட் -19 தடுப்பு மருந்தினை சமமாக அனைவரும் பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் வழங்குவதற்கும் இலங்கையில் வினைத்திறன் மிக்க தடுப்பு மருந்தேற்றலினை உறுதிப்படுத்துவதற்குமாக உலக வங்கியானது 180.51 மில்லியன் ஐ.அ.டொலர்களை வழங்கியது. மேலும், கொவிட் -19 தொற்றினை கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் அதற்கெதிரான பல ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைவாக ..... ரூபா மருந்துப் பொருட்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம், தனிமைப்படுத்தல் வசதிகள் மற்றும் கொவிட் -19 நோயாளிகளுக்கான சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டது.

மருந்துப் பொருட்கள், சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வுகூட பொருட்கள் கொள்வனவுக்கான அரசாங்க நிதியளிப்பு ஒத்துழைப்பு (கொவிட் தொடர்பல்லாதவை) 2020 இல் ரூபா 41.2 பில்லியனிலிருந்து ரூபா 52.9 பில்லியனாக 22.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் கொவிட்-19 தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 69.08 பில்லியன் செலவினமானது மூலதனச் செலவினமாக பகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சுகாதாரத்துறைக்கான மூலதன முதலீடு 2020 இல் ரூபா 46.9 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 43.7 பில்லியனாக 6.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதில் தற்பொழுது செயற்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களின் செலவினம் மற்றும் செலுத்தப்படாத சிட்டைகள் மீதான என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. அதேவேளை திரிபோசா உற்பத்தியானது 1.06 மில்லியன் பயன்பெறுநர்களுக்கான திரிபோசா உற்பத்திக்காக ரூபா 1,231 மில்லியன் முதலீட்டுடன் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் 9.7 சதவீதமாக அதிகரித்தது.

அட்டவணை 5.9 | சுகாதாரப் பராமரிப்பு சேவைகளில் பிரதான மூலதன முதலீடு

ரூபா மில்லியன்

விபரம்	தொகை (ரூபா மில்.)
சுகாதார அமைச்சு (மீண்டெழும், மூலதனம் மற்றும் கருத்திட்டங்கள்)	123,343
மாகாண சபைகள் (மீண்டெழும் செலவினம்)	6,727
முழு மொத்தம்	130,070

கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை நிர்வகிப்பதில் சுகாதார அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவை, ஏனெனில் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டன மற்றும் தொற்று பரவுவதைத் தடுத்தல் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மருந்துகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல், விரிவான தொடர்பு தடமறிதல், தனிமைப்படுத்தப்பட்ட வசதிகளை நிறுவுதல், கொவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சை மையங்களை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் கூடுதல் ஒதுக்கீடுகளை வழங்குவதன் மூலம் மேலும் எளிதாக்கப்பட்டன. இதற்கமைவாக, சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகளால் இத்தகைய நடவடிக்கைகளுக்காக ரூபா 23,838 மில்லியன் செலவிடப்பட்டது.

தனிமைப்படுத்தல் மையங்களை நிறுவுதல், நிர்வகித்தல் மற்றும் செயற்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்களில் ஆயுதப் படைகள் சுகாதார அமைச்சிற்கு ஒத்துழைப்பு வழங்கின.

அட்டவணை 5.10 | கொவிட் 19 தொற்று தொடர்பில் உரப்பட்ட செலவினம்

ரூபா மில்லியன்

முதலீட்டுத் துறை	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021
வைத்தியசாலை அபிவிருத்தி கருத்திட்டங்கள்	3,194	7,775	8,117	11,431	15,429	10,373	10,649	14,654	8,196	31,058	18,657
வைத்தியசாலை புனரமைப்பு மற்றும் நிர்மாணம்	2,051	1,828	2,754	3,403	4,206	3,735	4,814	6,513	6,381	3,734	5,067
மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள்	2,306	1,969	3,880	3,208	5,068	4,093	4,732	4,438	5,481	3,949	4,590
கட்டில்கள் மற்றும் தளபாடங்கள்	119	114	127	200	224	325	243	352	346	235	229.69
மொத்தம்	**7,690**	**11,755**	**15,128**	**18,242**	**24,927**	**18,527**	**20,438**	**25,957**	**24,404**	**38,976**	**28,544**

மேலும், சுதேச மருத்துவ ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் சுதேச மருத்துவத்திற்கான சமுதாய சுகாதாரம் என்பவற்றினால் உரப்பட்ட செலவினம் மீண்டெழும் செலவினமான ரூபா 2,214 மில்லியன் மற்றும் மூலதன முதலீடான ரூபா 436 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 2,650 மில்லியனாகக் காணப்பட்டது.

பொதுவான கல்வி

2021 இல் பாடசாலைக் கல்விக்காக மத்திய அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட மொத்தம் 3 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு ரூபா 265.7 பில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 186.6 பில்லியன் மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாண சபைகளுக்கான மாற்றல்கள் 79.1 பில்லியன் கல்வி அமைச்சுக்கானதாகும். மொத்த செலவினத்தில் மீண்டெழும் செலவினமானது 2020 இல் ரூபா 236.6 பில்லியனிலிருந்து 5.6 சதவீதமாக அதிகரித்து 249.8 பில்லியனாகக் காணப்பட்டது. 2020 இல் ரூபா 21.4 பில்லியனாகக் காணப்பட்ட மூலதன செலவினம் 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து ரூபா 15.8 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு பிரதான காரணம் 2016 இலிருந்து செயற்படுத்தப்பட்ட "அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவு செய்தமையாகும். இந்த வகையில், நிலுவையிலுள்ள சிட்டைகளைத் தீர்ப்பதற்கு 2021 இல் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1.5 பில்லியன் செலவிடப்பட்டது.

2021 இல் கொவிட்-19 தொற்றுநோய் மிகவும் வேகமாகப் பரவியதனால் கொவிட்-19 சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக குறித்த வருடத்தின் போது பாடசாலைகள் மிகவும் குறுகிய காலமே நடாத்தப்பட்டமை எவ்வாறாயினும் தொலைக்காட்சி, வானொலி, ஈ-தக்சலா போன்ற இலத்திரனியல் கற்றல் முகாமைத்துவ முறைமைகளின் ஊடாக தொலைக் கல்வி மாதிரிகளை கல்வி அமைச்சு தொடர்ந்து முன்னெடுத்தது.


அட்டவணை 5.11 | 2020-2021 இல் பாடசாலைக் கல்வி மீதான செலவினம்

ரூபா மில்லியன்

	2020			2021		
	மீண்டெழும்	மூலதன	மொத்தம்	மீண்டெழும்	மூலதன	மொத்தம்
கல்வி அமைச்சு	64,029	19,180	83,209	67,853	11,280	79,133
மாகாண சபைகள்மூ(அ)	172,635	2,205	174,840	182,000	4,573	186,573
மொத்தம்	236,664	21,385	258,049	249,853	15,853	265,706

* தற்காலிக
* மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் மாற்றல் உள்ளடங்களாக
மூலம் : அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் நிதி ஆணைக்குழு

வரைபு 5.2 சுகாதார நலன்புரி மீதான மத்திய அரசாங்க செலவினம்



மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

அட்டவணை 5.12 | மத்திய அரசாங்கத்தினால் உரப்பட்ட பொதுக் கல்விக்கான செலவினம் 2019 - 2020

ரூபா மில்லியன்

	2019			2020		
	மீண்டெழும்	மூலதன	மொத்தம்	மீண்டெழும்	மூலதன	மொத்தம்
கல்வி அமைச்சு	39,780	2,669	42,449	43,368	4,674	48,042
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, ஆரம்ப பாடசாலைகள் மறறும் ஆரம்பக் கல்வி, பாடசாலை கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு	19,336	14,745	34,081	19,160	4,489	23,649
இராஜாங்க அமைச்சு கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு	545	1,605	2,150	602	1,891	2,493
தம்ம பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்கு கல்வி	4,368	161	4,529	4,723	226	4,949
மாகாண சபைகள் *	172,635	2,205	174,840	182,000	4,573	186,573
மொத்தம்	**236,664**	**21,385**	**258,049**	**249,853**	**15,853**	**265,706**

மூலம்: அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் நிதி ஆணைக்குழு

அட்வணை 5.13 | அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை கீழ் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

ரூபா மில்லியன்

கருத்திட்டம்	2020 (அ)
பாடசாலை அடிப்படை கற்றல் மேம்பாட்டு மானியம்	529
பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் கருத்திட்டம்	605
தொழில்நுட்ப கலவி அபிவிருத்தி கருத்திட்டம்	170
கிளிநொச்சியில் கல்விச் சூழல் மேம்பாட்டுக் கருத்திட்டம்	270
இரண்டாம் நிலை பாடசாலைகள் மற்றும் 1000 தேசிய பாடசாலைகளின் வசதிகளை தரமுயர்த்தல்	985
சிறுவர் நட்பு பாடசாலைகள் அபிவிருத்தி	413
கல்வியில் தர அபிவிருத்தி மறுசீரமைப்பு	590

மூலம்: அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
தற்காலிகமானது

கல்வியின் தரம் மற்றும் சமநிலையினை உறுதிப்படுத்துவதற்கு 2020 உடன் ஒப்பிடுகையில் 9.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2021 இல் ரூபா 11.8 பில்லியன் செலவினத்தின் மூலம் மாணவர் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. கொவிட்- 19 பரவலினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட சுகாதார நடவடிக்கைகளினால் வருகை பாதிக்கப்பட்ட போதிலும் அரசாங்கம் தொடர்ந்தும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. பாடசாலைப் புத்தகங்களை அச்சிடுவதில் ஒப்பந்த விலை குறைவடைந்தமை மற்றும் வழங்குநர்களிடமிருந்து சிட்டைகளை சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டமை காரணமாக மொத்த நலன்புரி செலவினத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. சுரக்சா மாணவர் காப்புறுதித்திட்டம் மீதான செலவினம் 2020 உடன் ஒப்பிடுகையில் 122 சதவீதத்தினால் அதிகரித்தது. காரணம், முன்னைய வருடங்களில் நிலுவை ஏற்பட்டமையும் காப்புறுதி தவணைக் கட்டணம் அதிகரித்தமையுமாகும்.

அட்டவணை 5.14 | பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம்

ரூபா மில்லியன்

நிகழ்ச்சித்திட்டம்	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021(அ)
பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம்	3,076	3,725	3,938	3,916	4,434	5,325	5,063	2,299	1,685
பாடப் புத்தகங்கள்	2,329	2,700	3,896	5,415	4,281	4,161	4,599	4,550	2,609
சீருடைகள்	1,739	3,574	2,261	2,157	2,479	1,073	3,789	2,877	2,492
கஷ்ட மற்றும் அதிக பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு பாதணிகள்		299	291	480	640	220	640	492	901
புலமைப்பரிசில் - வருடம் 5 *	268	556	623	613	602	605	607	872	791
"சுரக்ஷா" காப்புறுதித் திட்டம்					2,700	33	1,833	1,500	3,331

* 2014 இலிருந்து மாகாண மற்றும் தேசிய பாடசாலைகள் வகுப்பு 5 புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
மூலம் : கல்வி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் அரச கணக்குகள் திணைக்களம்
மூலம் : கல்வி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் அரச கணக்குகள் திணைக்களம்

அட்டவணை 5.15 | பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களினால் நன்மையடைந்த மாணவர்கள்

ரூபா மில்லியன

நிகழ்ச்சித்திட்டம்	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021(அ)
பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம்	1,048,892	890,404	937,178	973,245	1,105,605	1,089,705	1,067,465	1,079,097	1,082,136
பாடப் புத்தகங்கள்	4,194,363	4,076,813	4,277,668	4,345,491	4,355,101	3,628,951	3,642,528	4,180,000	4,500,000
சீருடைகள்	3,998,890	4,423,202	4,415,099	4,341,581	4,326,951	4,357,797	4,725,445	4,180,000	4,500,000
புலமைப்பரிசில் - வருடம் 5 *	97,308	114,458	122,149	140,297	144,739	130,000a	135,000	130,457	103,800
"சுரக்ஷா" காப்புறுதித் திட்டம்						40,978b	74,328	100,000	34,778
கர்ப்பினித் தாய்மார்களுக்கான போஷாக்குணவு			105,874	209,500	210,000	274,511	263,945	237,587	234,335
முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு					51,213	69,523	85,798	85,798	53,778

* 2014 இலிருந்து மாகாண சபைகள் மற்றும் தேசிய பாடசாலை வகுப்பு 5 புலமைப்பரிசில் பயன்பெறுநர் உள்ளடங்களாக
(அ) தற்காலிக
(ஆ) படிவம் - 2017 ஒக்டோபர் - 2018 ஒக்டோபர்
மூலம்: கல்வி அமைச்சு, மாகாண சபைகள், நிதி ஆணைக்குழு மற்றும் அரச கணக்குகள் திணைக்களம்

பல்கலைக்கழகக் கல்வி

பல்கலைக்கழக கல்வி துறையானது டிஜிற்றல் கற்றல் முகாமைத்துவ முறைமையினை மிக வேகமாக உள்ளீர்த்துக் கொண்டதுடன், சூம், ரீம் போன்ற நிகழ்நிலை முறைமைகளின் மூலம் ஒத்துழைப்பு பெறப்பட்ட நிகழ்நிலை பாடநெறிகள் கொவிட் தொற்று நோய்க்கு ஈடு கொடுக்கின்ற சாதனங்களாகக் காணப்பட்டன. பல்கலைக்கழகக் கல்வி மீதான அரசாங்க மொத்தத் செலவினம் 2021 இல் ரூபா 76.6 பில்லியனாகக் காணப்பட்டது. 2020 உடன் ஒப்பிடுகையில் இது 3.4 சதவீத அதிகரிப்பாகும். மீண்டெழும் செலவினமான ரூபா 54.8 பில்லியனில், ரூபா 46.1 பில்லியன், உயர்கல்வித் துறையிலுள்ள 25,689 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சம்பளம் மற்றும் வேதனாதிகளின் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்டது.

அட்டவணை 5.16 | உயர் கல்வி மீதான முதலீடு (2016 - 2021)

ரூபா மில்லியன்

வருடம்	2016	2017	2018	2019	2020	2021*
மீண்டெழும்	29,300	31,246	37,457	47,323	51,506	54,768
மூலதனம்	20,276	16,176	24,420	23,512	22,615	21,849
மொத்தம்	49,576	47,422	61,877	70,835	74,121	76,617

* தற்காலிக

மூலம் : அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

2020 இல் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய (2020.'.2021 அனுமதி) மாணவர்களுக்கான வருடாந்த பல்கலைக்கழக அனுமதி 2019.'.2020 அனுமதியுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய 0.2 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது.

அட்டவணை 5.17 | மாணவர் அனுமதி

கல்வி வருடம்	மாணவர் எண்.
2015/2016	29,083
2016/2017	30,668
2017/2018	31,451
2018/2019	31,902
2019/2020	41,669
2020/2021*	41,755

* தற்காலிக

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

கல்வித் துறையின் மூலதனச் செலவினம் 2020 இல் காணப்பட்ட ரூபா 22.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 21.8 பில்லியனாகக் காணப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் தொழில்நுட்ப பீடம் (ரூபா 1,961.3 மில்லியன்), தகவல் மற்றும் கற்றல் நிலையம் (ரூபா 502.5 மில்லியன்) மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம் (ரூபா 400 மில்லியன்) உள்ளடங்களான 15 கருத்திட்டங்களை தாபித்தல் 2021 இல் நிறைவடையும் கட்டத்தினை அடைந்துள்ளது.

மகாபொல மற்றும் மாணவர் உதவித்தொகை

மகாப்பொல மற்றும் உதவு தொகைக் கொடுப்பனவு தகைமை பெறுகின்ற குடும்ப வருமான எல்லையானது வருடமொன்றுக்கு ரூபா 5000 ஆக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

அட்டவணை 5.18 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி

ரூபா மில்லியன்

வருடம்	2015	2016	2017	2018	2019	2020	2021
மகாபொல	561	940	593	1,304	1,269	1,366	1,138
உதவு தொகை	481	650	441	521	695	759	862
மொத்தம்	**1,042**	**1,590**	**1,034**	**1,825**	**1,964**	**2,125**	**2,000**

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

அட்டவணை 5.19 | நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நன்மையடைந்த பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை

வருடம்	2015	2016	2017	2018	2019	2020	2021
மகாபொல	45,219	47,595	49,472	51,652	55,491	57,773	62,891
உதவு தொகை	20,929	20,265	20,093	22,450	22,923	23,494	29,491
மொத்தம்	**66,148**	**67,860**	**69,565**	**74,102**	**78,414**	**81,267**	**92,382**

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

இரண்டு புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்தல்

இரண்டு புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்தல்

இலங்கை சுதேச மருத்துவ கம்பஹா விக்கிரமாராச்சி பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் என்பன முறையே 2021 மார்ச் 01 மற்றும் 2021 ஆகஸ்ட் 01 ஆகிய திகதிகளிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக தாபிக்கப்பட்டன.


அரசல்லாத உயர் கல்வி

அரசல்லாத பல்கலைக்கழகங்களில் உயர்கல்விப் பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கு கல்விக் கடன் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 2021

இல் ரூபா 386 மில்லியன் முதலிடப்பட்டுள்ளது. இந்த வகையில் 15 அரசல்லாத உயர்கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படும் 95 பட்டப்படிப்பு பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு 3,590 மாணவர்கள் நன்மையடைந்துள்ளனர்.

திறன்கள் அபிவிருத்தி

தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தியினை வழங்குதல் குறிப்பாக இளைஞர்களுக்கு, உற்பத்தித் திறன் மிக்க ஊழியப் படையினை உருவாக்குவதற்கு அத்தியவசியமானதாகும். அந்த வகையில் அரசாங்கம் திறன் அபிவிருத்திக்காக 2021 இல் ரூபா 9,032 மில்லியனை செலவிட்டுள்ளது. இதில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 6,501 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,531 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.



மூலம்: வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

அட்டவணை 5.20 | திறன் அபிவிருத்தி மீது 2021 இல் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

ரூபா மில்லியன்

விபரம்	2021
திறன் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஆ.அ.வ/உ.வ)	641
கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தை தரமுயர்த்தல் (அவுஸ்ட்ரியா)	46
கொழும்பு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினைத் தாபித்தல் (இ/அ - ஈடிசீஎப்)	475
இலங்கையில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி (ஜேர்மனி)	6
சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டம்	13
A லீட் (யுஎஸ்எயிட்)	2
வாழ்க்கைத் தொழிற்கல்வி மேம்பாடு	461
7 தொழில்நுட்ப கல்லூரிகள் / தொழில்நுட்பவியற் கல்லூரிகளை நவீனமயப்படுத்தல்	359

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

தொழில்நுட்ப அபிவிருத்தி

2021 இல் தொழில்நுட்ப அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்காக ரூபா 1,502 மில்லியன் மொத்தமாக செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 1,023 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 479 மில்லியன் மூலதன முதலீடாகவும் செலவிடப்பட்டது.

அட்டவணை 5.21 பொதுப் போக்குவரத்துத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்-2021

ரூபா மில்லியன்

விபரம்	2021 செலவினம்
140 பயணிகள் பெட்டிகள் கொள்வனவு, இரத்மலானை வேலைத்தள மேம்பாடு	13,995
புகையிரதப் பாதை புனரமைப்பு மற்றும் மாகோ - ஓமந்தை பாதையில் சமிக்ஞைகளைப் பொருத்துதல்	1,719
02 ஏசி டீஎம்யுகள் கொள்வனவு மற்றும் லொகமோடிவ்ஸ் கொள்வனவு	1,413
200 பயணிகள் பெட்டிகள புனரமைப்பு	654
பதிய தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைக் கொண்டு நிரந்தர பாதைகளை புனரமைத்தல்	2,136
கொழும்பு புறநகர புகையிதைப் பாதைக் கருத்திட்டம்	2,224
பாடசாலை மற்றும் உயர் கல்வி பருவச் சீட்டு டிக்கெட்டுகளுக்கான மானியம், ஆயுதப்படைகள் - பேரூந்து அனுமதிப்பத்திரம்	5,442
வருமானமீட்டாத பாதைகளில் இ.போ.ச. பேரூந்துகளின் தொழிற்பாடு	5,300

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

துறைமுகங்கள்

2021 இல் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் மீதான மொத்த முதலீடு ரூபா 1.6 பில்லியனாகும். இதில் ரூபா 702 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 909 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் செலவிடப்பட்டது.

அட்டவணை 5.22 | துறைமுக மற்றும் கப்பற்றுறையினால் செயற்படுதத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

ரூபா மில்லியன்

விபரம்	2021 செலவினம்
இலங்கை துறைமுக அதிகாரசபை - சூரியவெவ சர்வதேச கிரிக்கட் விளையாட்டரங்கு கருத்திட்டம்	709
பணிமனை கட்டிட வளாகம் தொடர்பான துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைத் திட்டத்தின் கட்டுமானம்	108
காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு	142

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

வீதி அபிவிருத்தி

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 100,000 கி.மீ வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதிவேகப் பாதை வலையமைப்பு விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் மூலம், 2021 இல் ஏறக்குறைய 41 கி.மீற்றர் நெடுஞ்சாலைகள் நிறைவு செய்யப்பட்டன. அத்துடன், ஏறக்குறைய 650 கி.மீ தேசிய பாதைகள், 6,064 கி.மீ கிராமிய பாதைகள் மற்றும் 93 பாலங்கள் புனரமைப்பு நிறைவு செய்யப்பட்டதுடன் குறித்த வருடத்தில் ஏறக்குறைய 12,225 கி.மீ தேசிய பாதைகள் பராமரிப்பும் இடம்பெற்றது.

இங்குரு கடை சந்தி மற்றும் ஒருகொடவத்தையில் பேஸ் லைன் பாதை என்பவற்றினை கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதையுடன் இணைக்கின்ற களனி ஆற்றுக்கு மேலால் ஆறு ஒழுங்கைகளைக்

கொண்ட பாலம் 2021 நவம்பர் 24 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. மீரிகமையிலிருந்து குருநாகலுக்கான மத்திய அதிவேக பாதை கட்டம் 11 இன் முன்னேற்றம் 2021 இன் இறுதியில் ஏறக்குறைய 98 சதவீதத்தினை பதிவாக்கியது. கடவத்தையிலிருந்து மீரிகமை வகையான மத்திய அதிவேக பாதை கட்டம் 1 மற்றும் பொதுகரையிலிருந்து களகெதர வரையான (பொதுகர - றம்புக்கன சந்தி) கட்டம் 111 என்பவற்றின் பௌதீக முன்னேற்றம் முறையே 19 சதவீதம் மற்றும் 1 சதவீதத்தினை அடைந்தது. 2021 இல் துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் என்பவற்றின் பௌதீக முன்னேற்றம் முறையே 20 சதவீதம் மற்றும் 98 சதவீதத்தினை அடைந்து இருந்தன. 2021 இன் இறுதியில் ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் 1 மற்றும் கட்டம் 11 இன் பௌதீக முன்னேற்றம் முறையே 83 சதவீதம் மற்றும் 64 சதவீதத்தினை அடைந்து இருந்தன.

இதற்கு மேலதிகமாக பதுளை - செங்கலடி பாதையின் பிபிலையிலிருந்து செங்கலடி வரையிலான பிரிவின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு கடந்த வருடம் நிறைவு செய்யப்பட்டது. மேலும் ருவன்புர அதிவேகப் பாதையின் கட்டம் 1 (ககதொடுவையிலிருந்து இங்கிரிய வரை) நிர்மாணப் பணிகள், கெடம்பே, கொகுவல கொம்பனித் தெருவுக்கு அருகாமையில் உத்தரநந்த மாவத்தையில் புகையிரத பாதை, சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தையிலிருந்து பாலதக்ச மாவத்தை என்பவற்றில் புதிய மேம்பாலங்கள், 2021 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராமிய உட்கட்டமைப்பினை பிரத்தியேகமாக அபிவிருத்தி செய்வதற்கு பிரத்தியேக தொடர்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டமும் 2021 இல் ஆரம்பிக்கப்பட்டது.

2021 இல் பாதைத்துறை அபிவிருத்தி மீதான செலவினம் 2020 இல் காணப்பட்ட ரூபா 230 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 213 பில்லியனாகக் காணப்பட்டது.

அட்டவணை 5.23 | பிரதான பாதை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் - 2021

ரூபா மில்லியன்

கருத்திட்டப் பெயர்	2020 உண்மையான செலவினம்
அதிவேகப் பாதைகள்	
மத்திய அதிவேகப் பாதைகள்	3,554
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் விரிவாக்கம்	13,324
வெளிப்புற சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலை மூன்றாம் கட்டம் (கடவத்தை - கெரவலப்பிட்டிய)	1,066
துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை	4,554
புதிய களனி பாலத்திலிருந்து அதுருகிரிய வரை உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை	**767**
கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேக நெடுஞ்சாலை	319
உப மொத்தம்	23,584
நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி	
ஒருங்கிணைந்த சாலை முதலீட்டுத் திட்டம்	48,408
தெற்கு சாலை இணைப்பு திட்டம்	5,164
மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்	6,886
முன்னுரிமை சாலை திட்டம் (PRP 3) கட்டம் I	2,527
முன்னுரிமை சாலை திட்டம் (PRP 3) கட்டம் II	2,584
பேராதனை - பதுளை வீதி பதுளை முதல் செங்கலடி வரை புனரமைப்பு	4,287
பாணந்துறை வரை மரைன் டிரைவ் விரிவாக்கம்	1,421
கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி திட்டம்	3,235
பிரதான சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளை அணுகுவதற்கும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் மாற்று சாலை நெட்வொர்க்கை உருவாக்குதல்	48,261
உப மொத்தம்	122,773
பராமரிப்பு	
சாலைகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் சாலைகளை பராமரித்தல்	7,311
உப மொத்தம்	7,311
பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்	
தேசிய நெடுஞ்சாலைகளில் 25 பாலங்கள் புனரமைப்பு	1,568
இரண்டாவது புதிய களனி பாலம் திட்டம்	10,195
கொஹுவல மற்றும் கட்டம்பேயில் மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்	2,995
உத்திரானந்த மாவத்தையிலும், கொடைத்தீவு ரயில் நிலையத்திற்கு அருகாமையிலும் ரயில் பாதைக்கு மேல் மேம்பாலங்கள் கட்டுதல்	2,259
உப மொத்தம்	17,017
மொத்தம்	170,685

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

5.8.3 சமூக நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு

5.8.3 சமூக நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு

சமூக நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு மீதான அரசாங்க செலவினம் 2021 இல் ரூபா 609.8 பில்லியனாக காணப்பட்டது. இது 2020 இல் காணப்பட்ட ரூபா 664.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.2 சதவீத வீழ்ச்சியாகும். இது பிரதானமாக இரசாயண பசளையிலிருந்து சேதனப் பசளைக்கு மாற்றுகின்ற போது உரமானியம் குறைவடைந்ததனாலும் கொவிட் தொற்று நோய் காரணமாக முடக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள பாதிக்கப்பட்ட மக்களில் குடும்பமொன்றுக்கு வழங்குகின்ற ரூபா 5,000 காசு மானியம் குறைவடைந்தமை என்பதனால் ஏற்பட்டதாகும். தொற்றுநோய் பரவலினைக் கட்டுப்படுத்தியமை 2021 இல் மருத்துவ வழங்கல்கள் தொடர்பான செலவினத்தினை சேமிப்பதற்கு உதவியாக இருந்தது. ரூபா 20,000 வழங்குவதன் மூலம் கற்பிணித் தாய்மார்களின் போசாக்கு மட்டத்தினை அதிகரிப்பதற்கு போசனமல்ல நிகழ்ச்சித்திட்டத்திற்காக அரசாங்கம் ரூபா 5.2 பில்லியனை செலவிட்டுள்ளது. அத்துடன் ஏறக்குறைய 2.25 மில்லியன் பாடசாலை சிறார்களுக்காக வழங்கப்பட்ட சுகாதார காப்புறுதிக்கான செலவினம்

2021 இல் இரட்டிப்பாக அதிகரித்தது. 2021 இல் அறியப்படாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு உதவும் வகையில் ரூபா 2.3 பில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளதுடன், ரூபா 9.8 பில்லியன் 100 வயது மற்றும் 70 வயதுகளைத் தாண்டிய முதியோருக்கான நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது.

5.8.4. விவசாயத் துறை

அரசாங்கம் விவசாயத்துறைக்காக 2021 இல் ரூபா 72.2 பில்லியனை செலவிட்டுள்ளது. இது 2020 உடன் ஒப்பிடுகையில் 10 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

அட்டவணை 5.24 | விவசாயத்துறை மீதான செலவினம் - 2021

ரூபா மில்லியன்

விபரம்	"2021 (அ) செலவினம்"
	50,743
பெருந்தோட்டக் கைத்தொழில்	10,038
கால்நடை அபிவிருத்தி	4,058
கடற்றொழில் மற்றும் நீரியியல் வளங்கள்	4,514
காணி மற்றும் காணி அபிவிருத்தி	2,884
முழு மொத்தம்	72,237

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிக

உணவுப் பயிர்கள்

2021 இல் சேதனப் பசளை உதவு தொகை மீதான செலவினம் ரூபா 35 பில்லியன் உள்ளடங்களாக நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மரக்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளடங்களான உணவுப் பயிர்கள் மீதான செலவினத்திற்காக அரசாங்கம் ரூபா 50.7 பில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. விவசாய விரிவாக்கல் மேம்பாடு, விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் உற்பத்தி அதேபோன்று ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றினூடாக விவசாய உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக பல்வேறு கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் 2021 இல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. உற்பத்தித்திறன் மேமம்பாடு, வர்த்தக மயப்படுத்தல், பெறுமதி சேர்ப்பு மற்றும் தெரிவு செய்யப்பட்ட பயிர்களுக்கான சந்தை வாய்ப்பு என்பவற்றுக்காக விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் மற்றும் சிறு பற்றுநில விவசாய பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினைச் செயற்படுத்துவதற்கு ரூபா 5 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இயற்கை அனர்த்தங்களினால் பயிர் சேதமடைவதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற ஆபத்தினை குறைப்பதற்காக விவசாய காப்புறுதித் திட்டத்திற்கு ரூபா 1 பில்லியனை அரசாங்கம் பங்களிப்பு செய்துள்ளது.

பெருந்தோட்டம்

தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய ஏற்றுமதி பயிர்களை விரிவாக்கல் சேவைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் என்பவற்றுக்கான நிவாரண விலையில் பயிரிடுவதற்காக அரசாங்கம் 2021 இல் 10 பில்லியனை முதலீடு செய்துள்ளது. இதற்கு மேலதிகமாக பெருந்தோட்டப் பயிர்களின் பெறுமதி சேர்ப்பு ஊக்குவிப்பு மற்றும் மீள் நடுகை, புதிய நடுகை செயற்பாடுகளுக்கான நிதி உதவி ஏற்பாடுகள் என்பவற்றினை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

கறுவா, மிளகு, ஏலக்காய், கராம்பு, சாதிக்காய், கோப்பி, கொக்கோ, வெனிலா, வெற்றிலை, சிற்றினெல்லா, எலுமிச்சை, இஞ்சி, மஞ்சள் மற்றும் பாக்கு போன்ற நிலையான ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி மற்றும் தர மேம்பாட்டுக்கு வசதியளிப்பதற்கு ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினூடாக 2021 இல் ரூபா 361 மில்லியன் செலவிடப்பட்டது.

கடற்றொழில்

கடற்றொழில் மீதான அரசாங்க செலவினம் 2021 இல் ரூபா 4.5 பில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 2.5 பில்லியன் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரத் தளங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காகவும் சமுத்திர மீன்பிடித்துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் ரூபா 2.5 பில்லியன் செலவிடப்பட்டது. அத்துடன் உள்நாட்டு மீன்பிடித்துறை அபிவிருத்திக்காக குறிப்பாக களப்புகளை துப்பரவு செய்தல், மீன் வளர்ப்பு மற்றும் நன்நீர் நிலைகளில் மீன் குஞ்சுகளை சேமித்தல் போன்ற கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2021 இல் ஏறக்குறைய ரூபா 892 மில்லியன் பயன்படுத்தப்பட்டது.
கால்நடைத்துறை

பண்ணை வளர்ப்பு, செயற்கை கருக்கட்டலினூடாக விலங்கு உற்பத்தி, நோய்க் கட்டுப்பாடு, தடுப்பு மருந்துகள் உற்பத்தி கால்நடை வளங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக கால்நடைத்துறைக்காக 2021 இல் ரூபா 4 பில்லியன் செலவிடப்பட்டது.

5.8.5. நீர்ப்பாசனம்

2021 இல் நீர்ப்பாசனத் துறைக்கான மொத்த அரசாங்க செலவினம் ரூபா 52.5 பில்லியனாகக் காணப்பட்டது. சிறு குளங்கள், கால்வாய்கள் புனரமைப்பு மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற நடுத்தர மற்றும் பாரிய நீர்ப்பாசன திட்டங்களின் மேம்பாடு, புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை தாபித்தல் என்பவற்றுக்கு 2021 இல் முன்னுரிமை வழங்கப்பட்டது. மேலும் பாரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன திட்டங்களின் புனரமைப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதுடன் மேல் நீரேந்து பிரதேசங்களின் பாதுகாப்புக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. கீழ் நீர்நிலைகளின் நீர்மூலங்களை உறுதி செய்தல் மற்றும் நீர்த் தேக்கங்களில் தூ

ர்வாருதல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

5.8.6. வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள்


வீடமைப்பு அபிவிருத்தி

2021 இல் வீடமைப்புக்கான அரசாங்க செலவினம் ரூபா 15.6 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் ஏனைய மூலங்களிலிருந்து நிதி அளிப்பதனை மேம்படுத்துவதற்கு நடுத்தர வருமான வீடமைப்பு மற்றும் அதிக நடுத்தர வருமான வீடமைப்பு கருத்திட்டங்கள் போன்ற கருத்திட்டங்களுக்காக முற்கொடுப்பனவுகள் என்ற வகையில் இத்துறையானது பல்வேறு நிதியளிப்பு மாதிரிகளை உள்ளீர்த்துள்ளது. 2021 இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்காக ரூபா 3.7 பில்லியன் செலவிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக மேற்படி மாகாணங்களில் மீள் குடியேற்றச் செயன்முறைகளுக்காக ரூபா 722 மில்லியன் செலவிடப்பட்டது. தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது ரூபா 265 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்பட்டதுடன் பின்தங்கிய பிரதேச சமூக பொருளாதார கருத்திட்டம் ரூபா 263 மில்லியன் செலவினத்தில் 2021 இல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. "ஒபட்ட கெயக் - ரட்டட்ட ஹெட்டக்" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு குடும்பமும் இலங்கையில் வசதியான வீடொன்றுடன் வாழ்வதன் மூலம் உற்பத்தித்திறன் மிக்க பிரசைகளையும் மகிழ்ச்சிகரமான குடும்பங்களையும் உருவாக்குவதற்காக செயற்படுத்தப்படுகின்றது. 2021 இல் அங்கீகரிக்கப்பட்ட 12,231 வீடுகளில் 4,078 வீடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. "மிஹிந்து நிவஹன"வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் "ஒபட்ட கெயக் - ரட்டட்ட ஹெட்டக்" வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் உப நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதற்கமைவாக தேசிய வீடமைப்பு அதிகார சபையானது 758 தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களைக் கொண்டுள்ளதுடன் இதில் 201 வீடுகள் 2021 இல் நிறைவு செய்யப்பட்டுள்ளன. யுத்தத்தினால் மரணமடைந்த, காணாமல் போன மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குகின்ற "விரு சுமித்துரு" வீடமைப்பு கருத்திட்டத்தின் கீழ் 2021 இல் ரூபா 210 மில்லியன் செலவில் 673 வீடுகள் நிறைவு செய்யப்பட்டன.

குடிநீர் மற்றும் துப்பரவேற்பாடு

2021 இல் நீர்த்துறை மீதான மொத்த செலவினம் ரூபா 54.2 பில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 0.6 பில்லியன் பிரதானமாக ஆள்சார் வேதனாதிகள் உள்ளிட்ட மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. ரூபா 53.5 பில்லியன் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகவும் மூலதனச் செலவினங்களுக்காகவும் செலவிடப்பட்டது. 2020 இல் வழங்கப்பட்ட 125,888 இணைப்புகளுடன் ஒப்பிடுகையில் 2021 இல் 251,507 புதிய நீர் இணைப்புகள் வழங்கப்பட்டன.

அட்டவணை 5.25 | செயற்படுத்தப்பட்ட பிரதான நீர் வழங்கல், துப்பரவேற்பாட்டு கருத்திட்டங்கள் - 2021



அட்டவணை 5.25 | 2020 இல் செயற்படுத்தப்பட்ட பிரதான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

ரூபா மில்லியன்

கருத்திட்டம்	2021 செலவினம்
கண்டி வடக்கு மற்றும் வடக்கு பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ./ சீனா)	10,721
"அனைவருக்கும் நீர்" அகில இலங்கை நீர் வழங்கல் நிகழ்ச்சித்திட்டம்	7,624
பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் - 1,2,3 (இ.அ./ ஆ.அ.வ)	6,135
நீர் வழங்கல் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (இ.அ./ உ.வ.)	5,449
யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டம் (இ.அ / ஆ.அ.வ)	3,964
பாரிய மாத்தளை நீர்வழங்கல் கருத்திட்டம் (இ.அ/ பிரான்ஸ்)	3,250
கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம் (இ.அ./ ஜெய்க்கா)	3,184
அம்பத்தல நீர் வழங்கல் முறைமை மேம்பாட்டு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டம் (இ.அ. / பிரான்ஸ்)	2,375
தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ / கொரியா)	1,960
அநுராதபுர வடக்கு நீர்வழங்கல் கருத்திட்டம் கட்டம் 1 (இ.அ / ஜெய்க்கா)	1,614
ஆனமடுவ நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ.: ஸ்பெய்ன்/ எச்என்பி)	1,493
இரத்மலான மொரட்டுவ கழிவு நீரகற்றல் கருத்திட்டம் - கட்டம் 2 தொகுதி 1 (ஏ.எப்.டி)	1,426
"பிரஜா ஜல அபிமான" நீர் வழங்கல் திட்டம்	876
மாகாணங்களுக்கிடையிலான கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டம்	199
மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்	
(அ) தற்காலிக	

நகர அபிவிருத்தி மற்றும் கரையோரப் பாதுகாப்பு

கொவிட் தொற்றினால் நகர்வு மற்றும் ஏனைய காரணிகள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக நகர அபிவிருத்தி துறை மீதான செலவினம் 2020 இல் காணப்பட்ட ரூபா 41.7 பில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 29.2 பில்லியனாக 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2021 இல் மீண்டெழும் செலவினம் ரூபா 1.4 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை மூலதனச் செலவினம் ரூபா

27.8 பில்லியனாகக் காணப்பட்டது. சமுத்திர சுத்திகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழங்கல் பயன்பாட்டுக்காக அரசாங்கம் 1.4 பில்லியனை செலவிட்டுள்ளதுடன் கடலரிப்பு, சமுத்திரம் தொடர்பான சுற்றாடல் மாசினை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் கடற்கரை மண்நிரப்பல் கருத்திட்டம் மற்றும் கரையோர வலய கட்டுப்பாட்டு பொறிமுறை போன்ற செயற்றிட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுத்தது.

5.8.7 சுற்றாடல்

முறையான கழிவு முகாமைத்துவம் மற்றும் மனித - யானை பிணக்கு மற்றும் வனவளங்கள் அழிவடைதல் போன்ற வனவள மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு போன்ற சுற்றாடல் பாதுகாப்புக்காக அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

வனவளப் பாதுகாப்பு

அரசாங்கம் வனவளப் பாதுகாப்புக்காக ரூபா 1,650 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் வன வள விரிவாக்கம் (ரூபா 1,284 மில்லியன்), கைத் தொழில் பெருந்தோட்டங்களை தாபித்தல் மற்றும் முகாமை செய்தல் (ரூபா 320 மில்லியன்), நாற்றுப் பொருட்கள் உற்பத்தி (ரூபா 29 மில்லியன்) பைன் பெருந் தோட்டங்களை எமது பிரதேசத்திற்குரிய அகன்ற இலை இனமாக மாற்றுதல் (ரூபா 11 மில்லியன்), காட்டு தீ தடுப்பு (ரூபா 16 மில்லியன்) என்பன முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, "சுரகிமு கங்கா" ஆற்றுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஆறுகளைப் பாதுகாப்பதற்காக ரூபா 100 மில்லியன் செலவிடப்பட்டது.

வனசீவராசிகள் பாதுகாப்பு

வன சீவராசிகள் பாதுகாப்பின் கீழ், 2021 இல் ரூபா 278 மில்லியன் செலவிடப்பட்டு மனித, யானை பிணக்கினை குறைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. மேலும், வனசீவராசிகளின் வாழ்விடங்களை வசதிப்படுத்துவதற்காக ரூபா 133 மில்லியன் செலவிடப்பட்ட அதேவேளையில், மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 2.1 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக, சுற்றுலா பயணிகளுக்கு வசதியளிக்கும் வகையில் தேசிய பூங்காக்களில் பாதை வலையமைப்பினை

06

காசுப்பாச்சல் முகாமைத்துவம், பற்றாக்குறை நிதியளிப்பு மற்றும் கடன்கள்

6.1 மேன்நோக்கு

2021 இல், மொத்த பண உள்வரவும் வெளிச் செல்லலும் முறையே ரூபா 1,389.8 பில்லியன்களாகவும், ரூபா 3,431.1 பில்லியன்களாகவும் இருந்தன. பொருளாதார வகுப்பாக்கத்தில் காணப்பட்ட ஒட்டுமொத்தக் குறைவான ரூபா 2,041.3 பில்லியனும் உள்ளூர் வளங்களாலேயே நிதியளிக்கப்பட்டன. 2021 இல் மொத்த வெளிநாட்டுக் கடன்கள் ரூபா 6.8 பில்லியன்களாக அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45.7 சதவீதமாக இருந்தன. ஆயினும், மொத்த கடன் பளுவில் வெளிநாட்டுக் கடன்களின் வெளிக்காட்டுகை 40.0 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தது.

திறைசேரி காசுப்பாச்சல் முகாமைத்துவம்

திறைசேரியின் காசுப்பாச்சல் முகாமைத்துவமானது நிதி வருடத்தினுள் அரசாங்க அரசிறைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு, பல்வேறு செயற்படுத்தும் முகவர்களூடாக வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பேர்துமான நிதி கிடைக்கப்பெறுதலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. திறைசேரியின் காசுப்பாச்சல் முகாமைத்துவச் செயன்முறையானது, குறித்ததொரு நிதியாண்டிற்கு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீட்டை, நடைமுறைப்படுத்தத்தக்க நிதிப் புழக்கமாக மாற்றியமைக்கிறது. நிதிப் காசுப்பாச்சல், வருமானங்களிலிருந்தும் கடன்களிலிருந்தும் உள்வரும் நிதிகளையும், கடன் சேவைச் செலவுகள் உள்ளிட்ட, மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவு வடிவங்களில் வெளிச்செல்லும் நிதிகளையும் உள்ளடக்குகிறது.

6.2 அரசாங்கத் திறைசேரி காசுப்பாச்சல் செயற்பாடுகள் - 2021

கொவிட் 19 பெருந்தொற்று நிலைமையில் முகங்கொடுக்க வேண்டியிருந்த பொருளாதார வீழ்ச்சியின் பிரதிபலிப்பாக, வருமானம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் வடிவத்தில் திறைசேரிக்கு உள்வந்த மொத்த நிதி, மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,525.4 பில்லியன்களில் 91.0 சதவீதமான ரூபா 1,389.8 பில்லியன்களாக இருந்தது. அதற்கிடையில், 2021 இல் மீண்டுவரும் செலவு மற்றும் பொது முதலீடு ஆகிய வடிவங்களிலான வெளிச் சென்ற நிதி, மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,003.4 பில்லியன்களில் 86.0 சதவீதமான ரூபா 3,431.1 பில்லியன்களாக இருந்தது.

ரெயில்வே வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டம்	ஐஒடொ	13.3	2690.9	13.4	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	0.70%	பொறுப்புக் கட்டணம் 0.15%	9	29
ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் - கூறு 2	ஐஒடொ	63.3	12427.4	63.3	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	0.70%	பொறுப்புக் கட்டணம் 0.15%	8	29
சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக் கான கடன் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு	ஐஒடொ	20.5	4082.8	20.5	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$	0.60%	பொறுப்புக் கட்டணம் 0.15%	10	12
இரண்டாம் நிலைக் கல்வித் துறைகளின் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - பெறுபேறுகள் - அடிப்படையான கடன்கொடுத்தல்	ஐஒடொ	52.2	10521.5	52.3	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்க ளுக்கு US$	0.70%	பொறுப்புக் கட்டணம் 0.15% முதிர்ச்சித் தவணைப்பணம் ஐஅடொ 400,000	5	26
ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் - கூறு 3	ஐஒடொ	122.6	24895.3	122.6	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	0.50%	பொறுப்புக் கட்டணம் 0.15%	8	30
கொவிட் 19 தடுப்பு மருந்து மூலம் பதிலளித்தல் கருத்திட்டம் - அவசர பதிலளிப்பு நிகழ்ச்சித்திட்டம்	ஐஒடொ	18.0	3600.0	18.0	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	0.50%	பொறுப்புக் கட்டணம் 0.15%	3	10
கொவிட் 19 தடுப்பு மருந்து மூலம் பதிலளித்தல் கருத்திட்டம் - கருத்திட்ட முதலீட்டுக் கூறுகள்	ஐஒடொ	0.0	5.4	0.0	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$	0.50%	பொறுப்புக் கட்டணம் 0.15%	8	28
சுகாதார முறைமையை உயர்த்தும் கருத்திட்டம் - மேலதிக நிதியளித்தல்	ஐஒடொ	12.1	2427.9	12.1	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$	0.50%	பொறுப்புக் கட்டணம் 0.15%	8	28
ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுக் நிகழ்ச்சித்திட்டம் - கூறு 2 (OCR)	ஐஒடொ	0.5	111.3	0.6	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$	0.50%	பொறுப்புக் கட்டணம் 0.15%	4	25

உலக வங்கி (IDA/ IBRD)	கொழும்பு பெருநகர அபிவிருத்திக் கருத்திட்டம் [MCUDP]	ஐஒடொ	11.0	2187.1	11.0	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	0.70%	பொறுப்புக் கட்டணம் 0.15%	5	24
	ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு முறைமையைப் பலப்படுத்தும் கருத்திட்டம்	ஐஒடொ	41.8	8408.6	41.8	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$		பொறுப்புக் கட்டணம் 0.25%, முற்பதிவுக் கட்டணம் US$ 500,000	5	25
	கொவிட் 19 தடுப்பு மருந்து மூலம் பதிலளித்தல் மற்றும் சுகாதார முறைமையைத் தயார்ப்படுத்துதல் [IBRD நிதியளிப்பு]	ஐஒடொ	11.3	2262.4	11.3	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$		பொறுப்புக் கட்டணம் 0.25%, முற்பதிவுக் கட்டணம் US$ 87,500	5	25
	உயர் கல்வி விரிவாக்கத்தையும் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் விரிவுபடுத்துதல் (AHEAD) நிகழ்ச்சித் திட்டம்	ஐஒடொ	11.5	2266.5	11.6	வட்டியில்லை			பொறுப்புக் கட்டணம் 0.25%, முற்பதிவுக் கட்டணம் US$ 167,500	10	24
	கொவிட் 19 தடுப்பு மருந்து மூலம் பதிலளித்தல் மற்றும் சுகாதார முறைமையைத் தயார்ப்படுத்துதலுக்கு இரண்டாவது மேலதிக நிதியிடல்	ஐஒடொ	53.9	10877.7	54.0	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$	Variable	பொறுப்புக் கட்டணம் 0.250%, முற்பதிவுக் கட்டணம் USD 135,000	5	18
	காலநிலை விரிதிறன் பல்கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை	ஐஒடொ	0.2	46.6	0.2	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	Variable	பொறுப்புக் கட்டணம் 0.250%, முற்பதிவுக் கட்டணம் USD 230,000	5	30
	நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்படுத்தல் கருத்திட்டத்திற்கு மேலதிக நிதியிடல்	ஐஒடொ	0.1	20.0	0.1	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	Variable	பொறுப்புக் கட்டணம் 0.250%, முற்பதிவுக் கட்டணம் USD 100,000	5	17
	இணைப்பை உள்ளடக்கிய அபிவிருத்திக் கருத்திட்டம்	ஐஒடொ	1.2	251.8	1.3	மாறத்தக்கது	LIBOR - 6 மாதங்களுக்கு US$	Variable	பொறுப்புக் கட்டணம் 0.250%, முற்பதிவுக் கட்டணம் USD 1,250,000	10	27
	இலங்கையின் ஒருங்கிணைந்த நீர்ச் சேகரிப்பு மற்றும் நீர் மூலங்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் - இலகு கடன்	SDR	2.1	599.7	3.0	நிலையானது	2%	த.இ.	பொறுப்புக் கட்டணம் 0.25%,	4	29
	கொவிட் 19 அவசரக் கவனிப்பு மற்றும் சுகாதார முறைமைகளை உருவாக்குதல் கருத்திட்டத்திற்கு இரண்டாவது மேலதிக நிதியளிப்பு -IDA	SDR	18.7	5318.4	26.6	நிலையானது	2%	த.இ.	பொறுப்புக் கட்டணம் 0.5%,	5	29
உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கம்	காலநிலை விரிதிறன் மேம்படுத்தல் முகாமைத்துவம் - CRIP	SDR	4.8	1326.7	6.9	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%, பொறுப்புக் கட்டணம் 0.50%	5	24
	நகர அபிவிருத்தி மூலோபாயக் கருத்திட்டம்	SDR	3.1	848.1	4.4	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%, பொறுப்புக் கட்டணம் 0.50%	5	25
	நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்படுத்தல் கருத்திட்டம்	SDR	18.8	5344.3	27.0	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%, பொறுப்புக் கட்டணம் 0.50%	5	25
	பிள்ளைப் பருவத்திற்கு முன்பான பருவ அபிவிருத்திக் கருத்திட்டம்	SDR	2.5	724.2	3.7	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%, பொறுப்புக் கட்டணம் 0.50%	5	25

	நகர அபிவிருத்தி மூலோபாயக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியளிப்பு	SDR	8.5	2417.6	12.1	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%	5	25
	காலநிலை விரிதிறன் மேம்படுத்தல் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியளிப்பு	SDR	1.9	540.4	2.7	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.5%	5	25
	சூழல் முறைமைப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டம்	SDR	7.8	1369.3	6.9	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%	5	25
	சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக் கருத்திட்டம்	SDR	6.2	1737.4	8.9	நிலையானது	2.68%		முற்பதிவுக் கட்டணம் USD 134,250, பொறுப்புக் கட்டணம் 0.25%	5	20
	விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம்	SDR	9.9	2820.3	14.1	நிலையானது	1.25%	த.இ.	சேவைக் கட்டணம் 0.75%	5	24
	போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவக் கருத்திட்டம்	SDR	15.4	4369.8	22.1	நிலையானது	1.25%	த.இ.	பொறுப்புக் கட்டணம் 0.5%	4	15
	பொதுக் கல்வியை நவீனமயப் படுத்தலுக்கான கருத்திட்டம்	ஐஅடொ	23.1	4617.3	23.1	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$		பொறுப்புக் கட்டணம் 0.25%	5	20
	காலநிலையுடன் சேர்ந்த நீர்ப்பாசன விவசாயக் கருத்திட்டம்	ஐஅடொ	23.1	4588.5	23.1	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$		முற்பதிவுக் கட்டணம் ஐஅடொ 312,500, பொறுப்புக் கட்டணம் 0.25%	12	25
	உள்ளக அபிவிருத்தி ஆதரவுக் கருத்திட்டம்	ஐஅடொ	21.3	4267.2	21.4	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$		முற்பதிவுக் கட்டணம் ஐஅடொ 175,000, பொறுப்புக் கட்டணம் 0.25%	12	25
	கொவிட் 19 அவசரக் கவனிப்பு மற்றும் சுகாதார முறைமைகளை உருவாக்குதல்	ஐஅடொ	36.3	7262.4	36.3	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$		முற்பதிவுக் கட்டணம் ஐஅடொ 234,000, பொறுப்புக் கட்டணம் 0.25%	5	13
	கொவிட் 19 அவசரக் கவனிப்பு மற்றும் சுகாதார முறைமைகளை உருவாக்குதல் கருத்திட்டத்திற்கு மேலதிக நிதியளிப்பு	SDR	19.8	5561.8	28.4	நிலையானது	2.00%		பொறுப்புக் கட்டணம் 0.5%	5	30
	கொவிட் 19 அவசரக் கவனிப்பு மற்றும் சுகாதார முறைமைகளை உருவாக்குதல் கருத்திட்டத்திற்கு மேலதிக நிதியளிப்பு	ஐஅடொ	25.3	5032.6	25.3	மாறத்தக்கது	LIBOR – 6 மாதங்களுக்கு US$		முற்பதிவுக் கட்டணம் ஐஅடொ 104,750, பொறுப்புக் கட்டணம் 0.25%	5	30
	நிதித்துறையை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம்	SDR	0.7	212.4	1.1	நிலையானது	3.36%	த.இ.	முற்பதிவுக் கட்டணம் 0.25%, பொறுப்புக் கட்டணம் 0.25%	5	23
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்	இலங்கை தேயிலை மற்றும் இறப்பர் சிறுதொழில்முயற்சியாளருக்குப் புத்துயிரளிக்கும் கருத்திட்டம் (STARR)	SDR	1.5	431.6	2.2	நிலையானது	2.00%	த.இ.	-	5	25
	விவசாயத்துறை சிறு தொழில்முயற்சியாளர் பங்காண்மையை (SAP) நடைமுறைப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டக் கடன் - இல. 2000001843	ஐஅடொ	5.2	1062.8	5.3	நிலையானது	2.00%	த.இ.	-	5	25

சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியம்	வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் (OPEC நிதி)	ஐஅடொ	0.2	52.7	0.3	நிலுவையிலுள்ளது	3.10%	த.இ.	சேவைக் கட்டணம் 1%	5	20
	கொழும்பு தேசிய அதிவேக வீதிக் கருத்திட்டம்	ஐஅடொ	3.3	656.8	3.3	நிலுவையிலுள்ளது	4.60%	த.இ.	-	5	20
	மேற்கு மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்	ஐஅடொ	1.1	215.8	1.1	நிலுவையிலுள்ளது	2.60%	த.இ.	சேவைக் கட்டணம் 1%	5	20
	களு கங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் (மேலதிக கடன்)	ஐஅடொ	3.9	771.6	4.0	நிலுவையிலுள்ளது	2.50%	த.இ.	சேவைக் கட்டணம் 1%	5	20
	தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	ஐஅடொ	0.7	151.2	0.8	நிலுவையிலுள்ளது	2.50%	த.இ.	சேவைக் கட்டணம் 1%	5	20
	பதுளையிலிருந்து செங்கலடி வரையான A05 வீதிப் புனரமைப்பு கருத்திட்டம்	ஐஅடொ	6.5	1282.4	6.4	நிலுவையிலுள்ளது	2.50%	த.இ.	சேவைக் கட்டணம் 1%	5	20
சந்தையிலிருந்தான கடன்கள்											
சீன அபிவிருத்தி வங்கி	தவணைக்கடன் வசதிகள்	ஐஅடொ	500.0	99955.0	500.0	மாறாதது	LIBOR – 6 மாதங்க ளுக்கு US$	2.5	முற்பதிவுக் கட்டணம் ஐஅடொ 6,250,000	3	10
	தவணைக்கடன் வசதிகள் 2021 (RMB)	CNY	2000.0	64910.4	309.1	மாறாதது			முற்பதிவுக் கட்டணம் CNY 25,000,000	3	10
மொத்தம்				482,114.22	2,397.78						

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

இணைப்பு 6.3 | மானியங்களின் வழங்கல்கள் 2021

இருதரப்பு	விபரம்	நாணயம்	வழங்கல்கள் (மில்லியன்)		
			தொகை	ரூபா	அ.டொலரில்
இருதரப்பு					
பிரான்ஸ்	நகரங்களுக்கு சுகார மற்றும் துப்புரவு முன்மயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டம் - கட்டம் ஐ	யூரோ	0.10	23.16	0.12
பல்தரப்பு					
யுனிசெவ் UNICEF	நாட்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்டங்கள் (CPAP) 2018-2022	ஐஅடொ	2.96	594.99	2.96
UNDP	சுற்றுச்சூழல் பாதிப்படையத்தக்க பிரதேசங்களில் உயிர்ப் பன்முகத்தன்மைப் பாதுகாப்பை உயர்ததுதலும், சூழல் முறைமையின் ஆதாரங்களைப் பாதுகாத்தலும்	ஐஅடொ	0.08	15.14	0.08
	காலநிலைப் பாதிப்புகளுக்கு எதிராக வரண்ட பிரதேச சிறு தொழில்முயற்சி விவசாயிகளது நிலைமையைப் பலப்படுத்துதலும், நீர் முகாமைத்துவத்தில் கடுமையான நிலைமையும்	ஐஅடொ	1.16	230.58	1.16
உலக வங்கின் மீள்கட்டமைப்பிற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி	காலநிலைப் பாதிப்பைத் தணிப்பதற்கான நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் கருத்திட்டம்	ஐஅடொ	0.60	117.49	0.60
	விவசாயத் துறையை நவீனமயப்படுத்தலுக்கான கருத்திட்டத்திற்கு மேலதிக நிதியுதவி	யூரோ	2.59	597.85	2.99
	உள்ளக அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிப்பு (IBRD/IDA)	ஐஅடொ	4.82	965.82	4.82
ஆசிய அபிவிருத்தி வங்கி	மின் விநியோக புனரமைப்புகக்கு ஆதரவளிப்தற்கான மேம்பாட்டுக் கருத்திட்டம்	ஐஅடொ	0.14	26.88	0.14
	மின் விநியோக புனரமைப்புகக்கு ஆதரவளிப்தற்கான மேம்பாட்டுக் கருத்திட்டம்	ஐஅடொ	0.02	4.45	0.23
	திறன் துறைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் - மேலதிக நிதியளிப்பு	ஐஅடொ	0.04	8.47	0.04
	சுகாதார முறைமையை மேம்படுத்துவதறகான கருத்திட்டம்	ஐஅடொ	0.33	63.89	0.33
	பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதியளிப்பு முன்முயற்சி ("We-Fi")	ஐஅடொ	1.03	205.36	1.03
	கொவிட் 19 அவசரச் செயற்பாட்டுக் கருத்திட்டம்	ஐஅடொ	2.99	572.95	2.99
மொத்தம்				3,427.34	17.29

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

பாகம் III

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தி நிதிகள்

07

அபிவிருத்தி நிதி

7.1 மேன்நோக்கு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் பொருளாதாரத்தில் பாரிய பங்கை வகிப்பதோடு, பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பானது பன்முகத்தன்மை கொண்டதாகவும் உள்ளது: அவற்றுள், வேலைவாய்ப்பு மற்றும் வருமான உருவாக்கம் வறுமை ஒழிப்பு வெளியீடும் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் பிரதேச அபிவிருத்தி போன்ற இன்னோரன்னவைகள் பிரதானமானவைகளாக விளங்குகின்றன. ஒரு மில்லியனுக்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அனைத்து தனியார் வர்த்தகங்களிலும் அண்ணளவாக 75 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செலுத்துவதோடு, நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் கிட்டத்தட்ட 45 சதவீதத்துக்கும் பங்களிப்புச் செலுத்துகின்றது. எனவே, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தினால் பல்வேறு அபிவிருத்திப் பங்கேற்பாளர்களின் (Donor Agencies) ஆதரவினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் தேவையான கொள்கை உதவிகளையும் மற்றும் ஊக்குவிப்புக்களையும் வழங்குவதன் மூலம் அத்துறையின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளித்துள்ளது.

இயக்கு சக்தி இன்மையின் காரணமாக 2020 ஆம் ஆண்டில், திடீரென ஊடுருவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அதிக அளவில் பாதிக்கப்படக்கூடிய நிலைமைக்கு உள்ளாகியதோடு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் வியாபார நடவடிக்கைகளும் இயைபுக்குப் பொருந்தாத வகையில் மிகவும் மோசமான முறையில் தாக்கத்துக்கு உள்ளாகின. எனவே, நிதியின் ஸ்திரத் தன்மையினை உறுதிப்படுத்தும் அதே வேளை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் அவர்களது நிதி ரீதியான அழுத்தங்களை சமாளிப்பதற்கு உதவுவதற்கு அரசாங்கம், உடனடி நடவடிக்கைகளை எடுத்தது.

மேலும், தொற்று நோயால் தூண்டப்பட்ட நிதி அழுத்தங்களை சமாளிப்பதற்காக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு பல வரி விலக்குகளும் மற்றும் ஏனைய நிதி உதவிகளும் வழங்கப்பட்டன. 2019/2020 மதிப்பீட்டாண்டுடன் தொடர்புடைய எந்தவொரு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் ஒருவரினால் செலுத்த வேண்டிய ஏதாவது வருமான வரி நிலுவைகள் இருப்பின் / அத்தகைய நிலுவைத் தொகை விற்பனைத் திரும்பல் மீதான வரிக் கொடுப்பனவிற்கு உட்பட்டு பதிவழிக்கப்பட்டன. அதே போல, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான 2019/2020 மதிப்பீட்டாண்டிற்கான மேலதிக மதிப்பீடுகள் வழங்கப்படாமை மற்றும் மருத்துவ மற்றும் மருத்துவப் பொருட்களின் இறக்குமதிகளுடன் தொடர்புடைய வழங்கல்களின் இறக்குமதிக்கான வரி விலக்குகள் மற்றும் கடனட்டை முற்பணங்களின் வட்டி வீதங்களின் குறைப்பு என்பனவற்றின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் மன அழுத்தங்கள் தணிக்கப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் கொள்கை ரீதியான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசியகடன்உத்தரவாத நிறுவனத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டில் இல் நிறைவு செய்துள்ளதோடு, குத்தகைக் கைத்தொழிலை மறுசீரமைக்கவும், பச்சை எரிசக்தியை மேம்படுத்தவும், மற்றும் கடன் மீள்கொடுப்பனவு முறைகள் மற்றும் இடரை அடிப்படையாகக் கொண்டு கடன் தகவல் பணியகத்தின் அறிக்கைகளை திருத்தியமைத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உணவுத் துறை மீது ஏற்பட்டுள்ள உயர்வான பணவீக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான சந்தை விலையை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதிக பட்ச சில்லறை விலைகள் (MRPs), மற்றும் விசேட வியாபாரப் பொருட்களுக்கான வரியை (SCL) திருத்தம் செய்தல், மற்றும் ஏனைய மானிய முறைகளும் பயன்படுத்தப்பட்டன. மேலும், தோட்டத்தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு கோதுமை மாவிற்கான மானியங்களை வழங்கல், சேதன உரப் பயன்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு சேதன உரம், களை நாசினி, கிருமி நாசினி போன்றனவற்றின் தயாரிப்பாளர்களுக்கான விசேட கடன் திட்டம், அரசாங்க நெற்கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான அரசாங்க களஞ்சிய வசதிகள் சிரேஷ்ட்ட பிரஜைகளுக்கான விசேட கடன் திட்டம், விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் என்பன 2021 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

கட்டம் 7.1 : தொற்றுநோயின் போது நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட விஷேட உதவி

- **நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட படுகடன்களைக் காலந்தாழ்த்தித் தீர்ப்பதற்கான சட்ட இசைவினை (debt moratorium) வழங்கல்**

- **முறையே வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கான காலந்தாழ்த்தித் தீர்ப்பதற்கான சட்ட இசைவின் காலப்பிரிவை 2022 மார்ச் 31 ஆம் திகதி மற்றும் 2022 ஜூன் 30 ஆம் திகதி வரை நீடித்தல்.**

- **ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி என்பனவற்றின் உதவியுடன் அரச மற்றும் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்துவதன் ஊடாக புதிய தொழில் முதலீட்டுக் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தல்**

- **2020 மார்ச் மாதத்தில் சௌபாக்யா கொவிட் - 19 "மறுமலர்ச்சி வசதியளிப்பினை நான்கு (4) சதவீத சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தில் நடைமுறைப்படுத்தல்" அரசு இந்நோக்கத்திற்காக ரூபா 150 பில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது.**

- **2020 டிசம்பர் மாதத்தில் கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஐஅடொ 100 மில்லியன் நிதியுதவியுடன் 4 - 5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் தொழில் மூலதனக் கடன்களை வழங்குவதற்கு "அவசரகால எதிர்வினை வசதியளிப்பினை" (Emergency Response Facility) நடைமுறைப்படுத்தல்.**

- **கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு 5.5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியுடன் இணைந்து " கொவிட் 19 நெருக்கடி எதிர்வினை வசதியளிப்பினை" நடைமுறைப்படுத்தல்.**

7.2 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதி உதவி

7.2.1 உள்நாட்டு நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்கள்

"துருனு திரிய" கடன்திட்டம்

புதிதாக வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும், ஆனால் அவ்வியாபாரத்தில் முதலிடுவதற்கு நிதி வசதியில்லாத நவீன படைப்புக்களை உருவாக்கக் கூடிய திறமை வாய்ந்த இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு 2021 ஆம் ஆண்டில் "துருனு திரிய" கடன் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இக்கடன்திட்டத்தின் மூலம், இக்கடனானது தேசிய தொழில்சார் தகைமைகள் மட்டங்கள் மூன்று (03) தொடக்கம் ஏழு (07) வரை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்கள் அவர்களது புதிய வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு கடன் வசதியை வழங்குகின்றது. இக்கடன்திட்டத்தின் கீழ், 2021 ஆம் ஆண்டில், ரூபா 84 மில்லியன் பெறுமதியான கடன் தொகையானது 175 இளம் தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் பகிரப்பட்டுள்ளது.

"கிரி சக்தி" கடன் திட்டம்

பால் உற்பத்தியில் எமது நாடு தன்னிறைவை அடையும் பொருட்டு உள்ளூர் திரவப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 1000 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணை விவசாயிகளுக்கு வசதியளிப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் "கிரி சக்தி" கடன் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது. இக்கடன்திட்டமானது பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 400 மில்லியன் பெறுமதியான கடன் தொகையானது 739 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.1 : உள்ளூர் நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்கள் - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியின் படி முன்னேற்றம்

கடன் திட்டம்	பதிவு		கடன் பகிர்வு	
	கடன்களின் எண்ணிக்கை	தொகை	கடன்களின் எண்ணிக்கை	கடன்களின் தொகை ரூபா. மில்
துருனு திரிய	353	169.2	175	84.2
கிரி சக்தி	739	400.4	739	400.4
மொத்தம்	**1,092**	**569.6**	**914**	**484.6**


மூலம் : பிரதேச அபிவிருத்தி வங்கி

வர்த்தக மற்றும் விசேட வங்கிகளின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதி வசதிகளை அளித்தல்

2021 ஆம் ஆண்டில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளின் கடன் திட்டங்களின் ஊடாக கிட்டத்தட்ட ரூபா 739,644 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்தொன்பது (19) அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊடாக 2021 ஆம் ஆண்டில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் எண்ணிக்கை 193,595 ஆகும். வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் மொத்தப் பெறுமதியில், விவசாயத் துறை, கைத்தொழில் துறை மற்றும் சேவைகள் துறைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகையானது முறையே 13, 23 மற்றும் 27 சதவீதம் வழங்கப்பட்டுள்ள அதே வேளை, எஞ்சிய 37 சதவீத கடன் தொகையானது ஏனைய துறைகளிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கே வழங்கப்பட்டுள்ளன.

வரைபு 7.1 துறைவாரியான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்களின் பகிர்வுகள்



மூலம்: குறிப்பிட்ட வங்கிகள்

அட்டவணை 7.2 : சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வர்த்தக மற்றும் விஷேட வங்கிகளினால் பகிரப்பட்ட நிதி - 2021

வங்கி	விவசாயம்		சேவைகள்		கைத்தொழில்கள்		ஏனையவை		மொத்தம்	
	விவசாயம்	மொத்தக் கடன் தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	மொத்தக் கடன் தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	மொத்தக் கடன் தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	மொத்தக் கடன் தொகை (ரூபா மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	மொத்தக் கடன் தொகை (ரூபா மில்லியன்)
இலங்கை வங்கி	1,552	33,296.9	309	2,730.0	425	5,362.3	4,873	24,808.1	7,159	66,197.2
மக்கள் வங்கி	327	868.0	807	1,938.0	345	5,481.0	2,521	12,383.0	4,000	20,670.0
பிரதேச அபிவிருத்தி வங்கி	6,856	8,147.0	6,977	9,831.0	5,227	7,745.0	-	-	19,060	25,723.0
சனச அபிவிருத்தி வங்கி	2,474	1,596.9	3,139	1,383.3	3,522	3,389.0	99	91.8	9,234	6,461.1
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி	-	-	1	9.9	-	-	-	-	1	9.9
இலங்கை ஸ்டேன்டாட் வங்கி	1	3.0	-	-	-	-	1	10.0	2	13.0
சிறிய நடுத்தர முதலீட்டு வங்கி	19	52.0	17	60.0	27	58.0	-	-	63	170.0
தேசிய அபிவிருத்தி வங்கி	252	1,318.0	331	2,392.9	1,128	6,147.3	575	3,125.4	2,286	12,983.6
டீ.எப்.சீ.சீ. வங்கி	1,130	3,302.6	4,490	12,785.3	3,192	10,833.3	2,406	4,993.9	11,218	31,915.1
வர்த்தக வங்கி	3,470	19,890.5	4,254	29,040.5	7,531	49,068.4	41,060	137,101.2	56,315	235,100.6
சம்பத் வங்கி	2,495	10,811.6	17,785	74,218.0	13,004	53,477.2	3,775	19,411.5	37,059	157,918.4
செலான் வங்கி	360	2,694.4	327	1,912.6	858	5,403.0	3,143	16,263.0	4,688	26,273.1
ஹட்டன் நெஷனல் வங்கி	1,305	6,559.0	3,869	17,547.0	2,580	14,497.0	7,230	32,489.0	14,984	71,092.0
நேஷன் ட்ரஸ்ட் வங்கி	26	355.7	260	1,644.9	965	6,847.6	977	4,234.1	2,228	13,082.2
ஸ்டேன்டாட் சார்ட்டட் வங்கி	6	534.4	18,028	26,938.2	16	172.5	266	1,022.2	18,316	28,667.3
பேன் ஏசியா வங்கி	23	457.8	42	835.8	54	994.3	49	1,198.9	168	3,486.7
யூனியன் வங்கி	60	518.2	180	4,405.2	96	864.5	1,399	10,803.4	1,735	16,591.2
காகிள்ஸ் வங்கி	131	674.0	113	934.0	346	1,201.0	285	1,775.0	875	4,584.0
அமானா வங்கி	624	2,482.0	3,190	14,447.0	390	1,777.0	-	-	4,204	18,706.0
மொத்தம்	**21,111**	**93,562.0**	**64,119**	**203,053.5**	**39,706**	**173,318.5**	**68,659**	**269,710.4**	**193,595**	**739,644.4**

மூலம்: குறிப்பிட்ட வங்கிகள்

"என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" வட்டி மானிய கடன் திட்டம்

"என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித்திட்டமானது 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நிறுத்தப்பட்டதோடு, அதன் பின்னர் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய கடன்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அத்தினம் வரை வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி மானியக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான பொறுப்பு 2032 ஆம் ஆண்டு வரை திறைசேரியினால் செலுத்த வேண்டியுள்ளது. அதன் படி, 2021 ஆம் ஆண்டில். வட்டி மானியமாக வங்கிகளுக்குச் செலுத்தியுள்ள தொகை ரூபா 3,619 மில்லியனாகும்.

7.2.2 அபிவிருத்திப் பங்காளர்களின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசை (SMELoC)

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசை (SMELoC) திட்டத்தின் கீழ் நான்கு பிரதான கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, அவை பெண் தொழில்முயற்சியாளர்களின் நிதி முயற்சி நன்கொடையுடன் (Women Enterpreneurs Financial Initiative - We-Fi) இணைந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசை,

கொவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிரந்தர தொழில்மூலதன கடன்களை வழங்குவதற்கான அவசர கால எதிர்வினைக் கூறு (Emergeancy Response Component)" வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதிய நன்கொடையுடன் (Japan Fund for Poverty Reduction - JFPR) இணைந்த தேயிலை புது நடுகை மற்றும் மீள் நடுகை என்பவற்றிற்கான சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வரிசைத் திட்டமாகும் (Tea Smallholder Credit Line).

2021 ஆம் ஆண்டில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசையின் கீழ், ரூபா 1900 மில்லியன் தொகை 192 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் முதலீட்டுக் கடன்களாக வழங்கப்பட்டுள்ளதோடு, ரூபா 128 மில்லியன் தொகையானது, 112 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் முதலீட்டுக் கடன்களுடன் கலவைப்படுத்துவதன் மூலம் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான நிதி (We-Fi) நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கொவிட் 19 அவசர கால எதிர்வினை கடன் வரிசை வசதியளிப்பின் கீழ், கொவிட் 19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட 2107 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை மீளக் கட்டியெழுப்புவதற்காக 2021 ஆம் ஆண்டில், தொழில் மூலதனக் கடன்களாக சுமார் ரூபா 11,300 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் வரிசை மற்றும் அவசரகால எதிர்வினை கடன் வரிசை வசதியளிப்பின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 3,460 மில்லியன் விவசாய மற்றும் விவசாயம் சார்ந்த பதனிடல் துறைக்கும், சுமார் ரூபா 5,365 மில்லியன் மற்றும் ரூபா 765 மில்லியன் கைத்தொழில் மற்றும் கடற்றொழில் துறைகள் உள்ளடங்கலாக கால்நடைத் துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2021 ஆம் ஆண்டில், சுற்றுலாத் துறையை மீண்டும் வலுப்படுத்துவதற்காக ரூபா 630 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, ரூபா 2,561 மில்லியன் பெறுமதியான கடன்கள் ஏனைய சேவைகளை வழங்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.3 : 31.12.2021 ஆம் திகதியின் படி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசைக் கூறினதும் மற்றும் அவசர கால எதிர்வினைக் கூறினதும் முன்னேற்றம்

பங்கேற்பு நிதி நிறுவனத்தின் பெயர்	சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன் வரிசை				அவசர கால எதிர்வினை கூறு			
	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	கடன் பகிர்வு		% பகிரப்பட்டவை	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	கடன் பகிர்வு		% வழங்கப்பட்டவை
		கடன்களின் எண்ணிக்கை	தொகை			கடன்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை	
இலங்கை வங்கி	333.7	20	67.6	20.3	1,934.32	220	999.67	52
மக்கள் வங்கி	333.7	6	27.7	8.3	1,936.14	181	755.15	39
பிரதேச அபிவிருத்தி வங்கி	333.7	82	270.2	81.0	1,942.58	490	772.20	40
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	300.2	12	279.3	93.04	1,929.65	192	1598.60	83
வர்த்தக வங்கி	318.7	18	255.5	80.2	1,930.34	217	1359.70	70
ஹட்டன் நெஷனல் வங்கி	333.7	17	270.5	81.1	1,930.35	227	1535.17	80
செலான் வங்கி	333.7	10	112.3	33.7	1,930.34	233	1716.35	89
டீஎப்சீசீ வங்கி	333.7	13	283.6	85.0	1,942.77	115	926.40	48
சம்பத் வங்கி	333.7	3	59.0	17.7	1,941.08	115	863.35	44
தேசிய அபிவிருத்தி வங்கி	333.7	11	281.7	84.4	1,930.84	117	838.68	43
மொத்தம்	**3288.4**	**192**	**1,907.5**	**58.0**	**19,348.41**	**2107**	**11,365.24**	**59**

மூலம்: அபிவிருத்தி நிதித்திணைக்களம்

அட்டவணை : 7.4 31.012.2021 ஆம் திகதியின் படி பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான நிதி (We-Fi) நன்கொடையின் முன்னேற்றம்

ரூபா. மில்லியன்

பங்கேற்பு நிதி நிறுவனங்களின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	கடன்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை	% வழங்கப்பட்டவை
இலங்கை வங்கி	34.0	14	4.2	12
மக்கள் வங்கி	20.0	4	3.8	19
பிரதேச அபிவிருத்தி வங்கி	34.0	48	28.6	84
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	6.0	3	6.0	100
வர்த்தக வங்கி	30.0	14	25.6	86
ஹட்டன் நெஷனல் வங்கி	16.0	9	13.1	82
செலான் வங்கி	20.0	6	8.3	41
டீஎப்சீசீ வங்கி	20.0	7	17.3	87
சம்பத் வங்கி	14.0	1	6.0	43
தேசிய அபிவிருத்தி வங்கி	18.0	6	14.8	82
மொத்தம்	**211.7**	**112**	**127.6**	**60**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வரிசையின் கீழ், தேயிலை புது நடுகை, மீள் நடுகை, நீர்ப்பாசனம், நாற்றங்கால் அபிவிருத்தி மற்றும் இயந்திரமயமாக்கல் போன்றவற்றுக்காக சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு ரூபா 551 மில்லியன் பெறுமதியான 330 கடன்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, இக்கடன்கள் புது நடுகை மற்றும் மீள்நடுகைக்கான வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதியத்தினால் 265 சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.5 : 31.12.2021 ஆம் திகதியின் படி, சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் திட்டத்தின் முன்னேற்றம்

பங்கேற்பு நிதி நிறுவனங்களின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	கடன்களின் பகிர்வுகள்		%	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதியின் நன்கொடை		
		கடன்களின் எண்ணிக்கை	தொகை	பகிரப்பட்டவை		கடன்களின் எண்ணிக்கை	தொகை	% வழங்கப்பட்டவை
இலங்கை வங்கி	79.7	67	78.1	98.0	6.2	57	5.5	88.2
மக்கள் வங்கி	79.7	14	30.5	38.3	3.0	7	1.1	37.7
பிரதேச அபிவிருத்தி வங்கி	79.7	90	75.7	94.9	6.2	64	6.2	100.0
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	79.7	4	47.9	60.1	1.0	1	0.4	40.0
வர்த்தக வங்கி	79.7	57	65.2	81.8	6.2	48	5.0	80.3
ஹட்டன் நெஷனல் வங்கி	79.7	27	64.6	81.1	6.2	24	5.0	80.0
செலான் வங்கி	79.7	7	14.7	18.4	6.0	6	0.7	12.5
டீஎப்சீசீ வங்கி	79.7	40	70.9	89.0	5.0	37	4.0	80.7
சம்பத் வங்கி	79.7	12	65.3	81.9	4.0	10	3.4	86.1
தேசிய அபிவிருத்தி வங்கி	79.7	12	38.0	47.7	6.2	11	3.8	61.1
மொத்தம்	**796.9**	**330**	**550.8**	**69.1**	**50.0**	**265**	**35.1**	**70.3**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்க கடன் வரிசைக் கருத்திட்டம் (RSPGLoC)

சுற்றுச்சூழலுக்கு இசைவான வளங்களுடன் குறைந்த செலவில் எரிசக்தி மூலங்களை சமாளிக்கும் பொருட்டு புதை படிவ எரிபொருளிலிருந்து மீளப்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களுக்கு மாறும் நோக்கத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியுடன் கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்க கடன் வரிசை (RSPGLoC) கருத்திட்டமானது, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2021 ஆம் ஆண்டளவில் தேசிய மின் தொகுப்புக்கு 50 மெவோ இனை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பத்தில் 2018 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது, ஐ.அ.டொ. 50 மில்லியனை வழங்கியதோடு, இக்கருத்திட்டத்தின் தற்போதைய கட்டத்தின் செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நிதியை அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், ரூபா 9,415 மில்லியனை 5.449 பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் தேசிய மின் தொகுப்புக்கு 70 மெவோ இனை சேர்ப்பதன் மூலம் 140 சதவீத பௌதீக செயலாற்ற இலக்கில் முன்னேற்றமொன்றை இக்கருத்திட்டத்தின் ஊடாகக் காட்டியுள்ளது. எழுச்சி பெற்று வரும் எரிசக்தி நெருக்கடி மற்றும் சூரிய மின்தகடுகளின் ஊடான மின்சக்தி உருவாக்கத்திற்கு எழுந்துள்ள கேள்வி என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மேலதிக நிதி ஏற்பாடொன்று கோரப்பட்டுள்ளதோடு, 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இக்கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 7.6 : 31.12.2021 ஆம் திகதியின் படி, கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்க கடன் வரிசைக் கருத்திட்டத்தின் முன்னேற்றம்

பங்கேற்பு நிதி நிறுவனங்களின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை	கடன் பகிர்வு		% பகிரப்பட்டவை
		கடன்களின் எண்ணிக்கை	தொகை	
இலங்கை வங்கி	79.7	67	78.1	98.0
மக்கள் வங்கி	79.7	14	30.5	38.3
பிரதேச அபிவிருத்தி வங்கி	79.7	90	75.7	94.9
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	79.7	4	47.9	60.1
வர்த்தக வங்கி	79.7	57	65.2	81.8
ஹட்டன் நெஷனல் வங்கி	79.7	27	64.6	81.1
செலான் வங்கி	79.7	7	14.7	18.4
டீஎப்சீசீ வங்கி	79.7	40	70.9	89.0
சம்பத் வங்கி	79.7	12	65.3	81.9
தேசிய அபிவிருத்தி வங்கி	79.7	12	38.0	47.7
மொத்தம்	**796.9**	**330**	**550.8**	**69.1**

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

7.2.3. நிதியல்லாத ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் - நிறுவன மற்றும் சட்டவாக்க சட்டகத்தை மேம்படுத்தல்.

தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI)

நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்கான ஈட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனமையினால் பல்வேறு தடங்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதி அணுகலுக்கான பிரச்சினைகளுக்கு நிலைபேறான தீர்வொன்றை வழங்குவதற்காக தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தினை (NCGI) ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அரச வங்கிகள் மற்றும் வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களின் பங்குரிமையுடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் அரச வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக இந்நிறுவனம் ஸ்தாபிக்கப்படும். இந்நிறுவனத்தின் முதலீட்டாளர்களாக இருபது (20) பங்கேற்பு நிதி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதன் படி, பங்குதார்களின் உடன்படிக்கைகள் வரையப்பட்டுள்ள அதே வேளை, 2022 ஆம் ஆண்டில் தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் (NCGI) ஸ்தாபிப்பினை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஜேர்மனிய சர்வதேச ஒத்துழைப்பு - நிறுவனம் (GIZ) "சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (GIZ - SME Development Programme) ஜேர்மனிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (GIZ)" சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஜேர்மனிய சர்வதேச ஒத்தழைப்பு நிறுவனத்தின் (GIZ) நிதியுதவியுடன் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் இயலளவையும் மற்றும் போட்டித் தன்மையையும் விருத்தி செய்வதற்கு தொழில்நுட்ப உதவி, சந்தை உதவி, தொழில்முயற்சித் திறன்கள் மற்றும் புத்தாக்க அபிவிருத்தி உள்ளடங்கலாக இயலளவையும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதி மற்றும் நிதி சாராத ஆதரவுகளையும் வழங்குவதற்கே இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் 1 ஆம் மற்றும் 2 ஆம் கட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ள இந்நிகழ்ச்சித்திட்டத்தின் 3 ஆம் கட்டத்தில் ஜேர்மனிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (GIZ) நன்கொடையின் ஊடாக யூரோ 5.2 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ரூபா 408 மில்லியன் செலவிடப்பட்டதோடு. அத்தொகையில் ரூபா 1 மில்லியன் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

7.3. விவசாயத் துறையின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான ஆதரவு

7.3.1. நெல்லுக்கான உரம்

2021/22 பெரும்போக நெற்பயிர்ச்செய்கைக்கான உரத்தேவைப்பாடு சுற்றுச்சூழலுக்கு இசைவான உரத்தினால் சமாளிக்கக் கூடியதாக இருந்தது. சேதன உரப்பயன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக, கூட்டு உரம், திரவ உரம் மற்றும் உயிரின உரம் போன்ற வடிவங்களில் ரூபா 9,137 மில்லியன் பெறுமதியான உரத்தினை

வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் சுற்றுச் சூழலுக்கு இசைவான உரத் தயாரிப்பாளர்களுடன் உடன்படிக்கையொன்றினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முன்னெடுப்புக்களை எடுத்துள்ளது. இம்முன்னெடுப்புக்களுக்கு ஏற்ப, நாட்டின் உரத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு அவ்வுரத் தயாரிப்பாளர்களுக்கு உதவுவதற்கு ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட 17 புதிய சுற்றுச் சூழலுக்கு இசைவான உரத்தினை தயாரிக்கும் உர உற்பத்தியாளர்களுக்கு முற்பணக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு அபிவிருத்தி நிதித்திணைக்களத்துக்கு ரூபா 787 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், 2021/22 பெரும் போகத்தின் போது, நெற்பயிர்ச்செய்கைக்கான பொட்டாசியம் மற்றும் நைட்ரஜன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு 30,000 மெ.தொ. பொட்டாசியம் க்ளோரைட் மற்றும் 153,227 லீட்டர் நனோ நைட்ரஜன் இறக்குமதி செய்யப்பட்டன.

மேலும், விவசாயிகள் தாமே தமது பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரத்தினை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயருக்கு ரூபா 12,500 வீதம் அதிக பட்சம் 2 ஹெக்டேயர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக, ஏற்கனவே ரூபா 5,800 மில்லியன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. சேதன உரத்தின் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்துவதற்காக விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையின் போது பச்சை விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்தும் நெல் விவசாயிகளுக்கு அறுவடை வீழ்ச்சி தொடர்பாக இழப்பீட்டினை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. அத்தோடு, நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் ஒரு கிவோ கிராமிற்கான குறைந்த விலை ரூபா 90/= என அரசாங்கம் அறிவித்தது. இருப்பினும், சேதன உரக் கொள்கையானது 2022 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நெல் அல்லாத பயிர்களுக்கான உரம்

உர மானிய நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பதிலாக ஏனைய களப்பயிர்களுக்கு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட வெகுமதி அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டது. அதே வேளை, ஏனைய பயிர்களுக்குத் தேவையான உரத்தினை திறந்த சந்தையில் போட்டி ரீதியான சந்தை விலையொன்றிற்கு விவசாயினால் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும்.

உள்ளூர் சேதன உரத் தயாரிப்பாளர்களுக்கான கடன் திட்டம்

27.04.2021ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப, சேதன உர உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் சேதன உரத்தினை பயன்படுத்த விரும்பும் விவசாயிகளுக்கும் மானியங்களை வழங்குவதற்கான முன்மொழிவு உள்ளடங்கலாக அமைச்சரவை விஞ்ஞாபனத்திலுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி உதவிகளை ஏற்பாடு செய்யுமாறு திறைசேரியானது அறிவுறுத்தப்பட்டது. அதன் படி, சேதன உரம், கிருமி நாசினி மற்றும் களை நாசினி, என்பனவற்றிற்கான விஷேட கடன் திட்டமொன்று இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

கடன் திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் பின்வருமாறு:

அட்டவணை 7.7 : சேதன உரம், களை நாசனி மற்றும் கிருமி நாசினி என்பனவற்றின் தயாரிப்பாளர்களுக்கான விஷேட கடன்திட்டம்

வகையீடு	வருடாந்த உற்பத்திக் கொள்திறன	அதிகபட்ச கடன் தொகை (ரூபா. மில்லியன்)	கடன் வட்டி			பாதுகாப்பு
			கடன் பெறுகை	இலங்கை அரசாங்கம்	மொத்தம்	
சிறிய - அரை - முடிவுற்ற	1000 மெட்ரிக் தொன்களுக்குக் குறைந்த, அல்லது 1,000,000 லீட்டர் அரைவாசி முடிவுற்ற உரம்	5	2%	6%	8%	மீள்கொள் உத்தரவாதம்
சிறிய - முடிவுற்ற	1000 மெட்ரிக் தொன்களுக்குக் குறைந்த அல்லது 1,000,000 லீட்டர் அரைவாசி முடிவுற்ற உரம்	20	2%	6%	8%	மீள்கொள் உத்தரவாதம்
நடுத்தர	1000 மெட்ரிக் தொன்களிலிருந்து 10,000 மெட்ரிக் தொன்கள் அல்லது 1 மில்லியனிலிருந்து 10 மில்லியன் வரை	20 - 150	3%	5%	8%	மீள்கொள் உத்தரவாதம் / ஏனைய தொடர்புடைய பிணைகள், தேவைப்பட்டால்
பெரிய	10,000 மெட்ரிக் தொன்னை விட அல்லது 10 மில்லியன் லீட்டர்	150 - 1,000	4%	4%	8%	மீள்கொள் உத்தரவாதம் ஏனைய பொருத்தமான ஈடுகள்

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்

அதன் படி, ரூபா 137.5 மில்லியன் பெறுமதியான 22 கடன்கள் தகுதி வாய்ந்த உள்ளூர் சேதன உரம், கிருமி நாசினிகள் மற்றும் கள நாசினிகளின் தயாரிப்பாளர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வங்கிகளாலும் வழங்கப்பட்டன.

7.3.2 ஊக்குவிக்கும் பெருந்தோட்டத் துறை

சிறிய தோட்ட உரிமையாளர்களுக்கான உதவி

சிறிய தோட்ட உரிமையாளர்களின் இயலளவை விருத்தி செய்வதற்கான மூலம் பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் புது நடுகை மீள்நடுகை, நிலத் தயாரிப்பு, நாற்றுப் பாதுகாப்பு தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை சிறிய தோட்ட உரிமையாளர்களின் ஏனைய தேவைகளை உள்ளடக்கிய மானியங்களை வழங்குகின்றது. அதன் படி, 2021 ஆம் ஆண்டில், 220,503 தேயிலை, இறப்பர், மற்றும் தென்னை பெருந்தோட்ட சிறிய தோட்ட உரிமையாளர்களுக்கிடையில் ரூபா 2,337 மில்லியன் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, ரூபா 1,026 மில்லியன் 15,845 தேயிலை பெருந்தோட்ட வளர்ப்பாளர்களுக்கும், வழங்கப்பட்டுள்ளது. அதே வேளை, முறையே, 64 இறப்பர் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும், மற்றும் 63 இறப்பர் சிறிய தோட்ட உரிமையாளர்களுக்கும் ரூபா 289 மில்லியனும் மற்றும் ரூபா 452 மில்லியனும் விநியோகிக்கப்பட்டுள்ளது. இம்மானிய நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து 198,026 தென்னை வளர்ப்போர் நன்மையடைந்துள்ளதோடு, செலுத்தப்பட்ட மொத்த மானியத் தொகை ரூபா 859 மில்லியனாகும்.

அட்டவணை 7.8 : பெருந்தோட்டத் துறை சிறு உடமையாளர்களின் செயலாற்றுகை, 2018-2021

	தேயிலை			இறப்பர்			தென்னை		
ஆண்டு	பரப்பு (ஹெக்டேயர்)	மொத்த உற்பத்தி (கிகி மில்லியன்)	உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா. மில்லியன்)	பரப்பு (ஹெக்டேயர்)	மொத்த உற்பத்தி (கிகி மில்லியன்)	உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா. மில்லியன்)	பரப்பு (ஹெக்டேயர்)	மொத்த உற்பத்தி (மில்லியன் காய்கள்)	உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்)
2018	122,448	228	194,113	137,100	83	22,179	443,538	2,623	118,517
2019	122,900	226	180,959	137,608	75	22,537	443,538	3,086	101,499
2020	157,910	212	169,865	137,834	78	25,815	453,742	2,792	170,228
2021	157,910	223	196,198	138,621	77	33,920	456,137	3,383	209,008

மூலங்கள் : பெருந்தோட்ட அமைச்சு மற்றும் பெருந்தோட்ட இராஜாங்க அமைச்சு

7.3.3 கால்நடை வளர்ப்போருக்கான ஆதரவு

பாற்பண்ணைத் துறை

2021 ஆம் ஆண்டில், நாட்டிலுள்ள கால்நடைகள் மற்றும் எருமைகளின் மொத்தத் தொகை முறையே 1.1 மில்லியன் மற்றும் 0.3 மில்லியனாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் மொத்தப் பால் உற்பத்தி 513 மில்லியன் லீட்டர்களாகும். இருப்பினும், 2021 இல், வருடாந்த உள்ளூர் பால் உற்பத்தியானது, பாலுக்கான மொத்ததக் கேள்வியை விட மிகவும் குறைவாகக் காணப்பட்டதோடு, பற்றாக்குறையான பாலானது, இறக்குமதி செய்வதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டதோடு, பெரும்பாலானவை பால் மா வடிவிலேயே பூர்த்தி செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், ரூபா 59,157 மில்லியனை செலவிடுவதன் மூலம் மொத்தம் 83,024 மெட்ரிக் தொன் தொகை ஆடை நீக்காத பால், மற்றும் கொழுப்பு அகற்றிய பால் மா வடிவிலேயே இறக்குமதி செய்யப்பட்டதோடு, இத்தொகையானது இறக்குமதி செய்யபப்பட்ட மொத்த இறக்குமதி விலைப்பட்டியலில் 1.4 சதவீதமாக காணப்பட்டது.

"கிரி சக்தி" கடன் திட்டமானது, விவசாயிகள் தமது வர்த்தகங்களை விரிவாக்குவதில் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கும் விவசாயிகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் பாற்பண்ணைத் துறையில் அக்கறையுள்ள தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கவுமே அறிமுகப்படுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், ரூபா 400.4 மில்லியன் பெறுமதியான கடன்கள் 839 பாற்பண்ணை விவசாயிகளுக்கிடையில் பகிரப்பட்டுள்ளன.

"கிரி சக்தி" கடன் திட்டமானது, விவசாயிகள் தமது வர்த்தகங்களை விரிவாக்குவதில் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கும் விவசாயிகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் பாற்பண்ணைத் துறையில் அக்கறையுள்ள தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கவுமே அறிமுகப்படுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், ரூபா 400.4 மில்லியன் பெறுமதியான கடன்கள் 839 பாற்பண்ணை விவசாயிகளுக்கிடையில் பகிரப்பட்டுள்ளன.

கோழிப்பண்ணைத் துறை

கோழிப்பண்ணைத் துறையில் எமது நாடானது தன்னிறைவடைந்தாலும் கூட, கோழிப்பண்ணைக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரதான தடையாக கோழிகளுக்கான உணவின் பிரதான ஒரு ஆக்கக் கூறாக விளங்கும் சோளத்தின் உள்நாட்டு உற்பத்தி பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. 2020/21 பெரும்போகத்தின் போது, 97,122 ஹெக்டேயர் பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளதோடு, அது 2021 சிறு போகத்தில் சுமார் 11,402 ஹெக்டேயர்களாகும். 2020/21 பெரும் போகத்தினதும் மற்றும் 2020/21 சிறு போகத்தினதும் விளைச்சலானது முறையே 435,159 மெட்ரிக் தொன் மற்றும் 45,185 மெட்ரிக் தொன்களாகும்.

அட்டவணை 7.9 | சோளப் பயிர்ச்செய்கை 2015 - 2021

ஆண்டு	பெரும்போகம்		சிறு போகம்		தென்னை
	பரப்பு (ஹெக்டேயர்)	உற்பத்தி (மெ.தொ)	பரப்பு (ஹெக்டேயர்)	உற்பத்தி (மெ.தொ)	
2015	60,954	230,871	9,017	30,244	261,115
2016	57,094	207,075	10,536	36,885	243,960
2017	44,515	163,733	8,029	32,011	195,744
2018	63,926	242,935	6,969	27,106	270,041
2019	88,154	250,672	6,114	22,959	273,631
2020	66,486	267,767	11,763	45,754	313,521
2021	97,122	435,159	11,402	45,185	480,344

மூலம்: விவசாயத் திணைக்களம்

இருப்பினும், சோளத்திற்கான வருடாந்த தேவைப்பாடானது சுமார் 600,000 மெட்ரிக் தொன்களாக இருந்ததனால், கோழிப்பண்ணைக் கைத்தொழில் மற்றும் ஏனைய கைத்தொழில்களின் தேவைப்பாடுகளிலிருந்து எழும் அதிகரித்த கேள்வியை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு வருடமும் சோள இறக்குமதி வசதியளித்தது. 2020 இன் சோள இறக்குமதி உள்ளடங்கலாக பல்வேறு பயிர்களுக்குமான இறக்குமதியின் மீது அரசாங்கம் தடைகளை விதித்திருந்தாலும் கூட, கோழிப்பண்ணைக்கான உணவிற்கான வருடாந்த சோளத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு 2021 இறுதிப்பகுதி வரை சோளத்திற்குப் பதிலாக கோதுமை தானியத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. கோழிப்பண்ணைக்கான உணவுத் தயாரிப்பு நோக்கங்களுக்கான மிகை நிரப்பியொன்றாக 2021 இல் கோதுமைத் தானியம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்வரும் பருவ காலத்தில சோள அறுவடையில் ஏற்படக் கூடிய வீழ்ச்சியினைக் கருத்திற் கொண்டு, 2021 அக்டோபரில் 40,000 மெட்ரிக் தொன் சோளம் அங்கீகரிக்கப்பட்டதோடு, அதில் சுமார் 27,000 மெட்ரிக் தொன் 2021 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டது. அதே வேளை, இந்நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் ஊடாகவும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் உள்ளூர் சோளப் பயிர்ச்செய்கை அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்பட்டது. இதன் விளைவாக, சோள உற்பத்தியானது, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் 50 சதவீதத்தை விட அதிகமாக இருந்தது.

ஏனைய விவசாய ஆதரவுத்திட்டம்

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான அரச களஞ்சிய வசதிகள்

மொத்தம் 48.000 மெட்ரிக் தொன் களஞ்சிய கொள்திறனைக் கொண்ட அனுராதபுரம், மொனராகலை, மன்னார், கிளிநொச்சி, பொலன்னறுவை, மற்றும் இரத்தினபுரி போன்ற பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள தானியங்களின் தரத்திற்கான உலர வைத்தல் சுத்தப்படுத்தல் மற்றும் பரிசோதித்தல் ஆகிய சேவைகளுடனான நவீன களஞ்சிய வசதிகளைக் கொண்ட 6 விவசாயிகளின் தானிய பாதுகாப்பு நிலையங்களுள்ளன. (FGPCs). அறுவடைக் காலங்களில் நெல், சோளம், சோயா அவரை, எள்ளு, பயறு, மிளகு, மற்றும் நிலக்கடலை போன்ற உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு தரமான களஞ்சிய வசதிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் தெரிவு செய்யபட்ட விவசாய மாவட்டங்களில் விவசாயிகளுக்கு உதவுவதற்கு புத்தாக்க பொறிமுறையொன்றுடனான நவீன தொழில்நுட்ப வசதிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தானிய பாதுகாப்பு நிலையங்கள் (FGPCs) விவசாயிகள் இலத்திரனியல் மற்றும் பணமாக மாற்றத்தக்க குதப்பற்றுச் சீட்டு நிதிப் பொறிமுறையின் ஊடாக நிதியை பெற்றுக் கொள்வதற்கு அணுகுவதற்கான ஈடாக தமது உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு வசதியளிக்கின்றது. உபுல்தெனிய மற்றும் புத்தளை தானிய பாதுகாப்பு நிலையங்களின் (FGPCs) பிரதேச அபிவிருத்தி வங்கிக்கும் மற்றும் அரசாங்கத்துக்கும் இடையிலான உடன்படிக்கைக் காலப்பகுதி காலாவதியானதோடு, மற்றுமொரு 03 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, இரத்தினபுரி மற்றும் எம்பிலிபிட்டிய நிலையம், கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, வெற்றிலை, மற்றும் கிராம்பு தொடர்புடைய கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு உள்ளடங்கலாக சிறு பயிர்களின் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வேண்டுகோளுடன் வாசனைத் திரவியங்கள் மற்றும் தொடர்புடைய உற்பத்தி சந்தைப்படுத்தல் சபைக்கு அதிக பட்சம் பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கையளிப்பதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டது.

அட்டவணை 7.10: தானிய பாதுகாப்பு நிலையங்களின் முன்னேற்றம், 2015 - 2021

ரூபா. மில்லியன்

நிலையத்தின் பெயர்	காலப்பகுதி	களஞ்சியப்படுத்தப்பட்ட அளவு	பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை	ஈட்டப்பட்ட வருமானம் (நன்மைகள்)		செலவு	
				விவசாயிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட மேலதிக வருமானம்	அரச வருமானம் (ரூபா. மில்லியன்)	மொத்தம் (ரூபா. மில்லியன்)	மொத்தச் செலவு (ரூபா. மில்லியன்)
கலென்பிந்துனு வெவ	2015-2021	2,997.3	935	55.81	6.29	62.1	44.04
புத்தல	2016-2021	1,532.9	888	24.03	7.32	31.35	51.05
நானாட்டான்	2017-2021	3,601.3	282	43.62	11.17	54.79	36.11
கராச்சி	2018-2021	2,908.9	617	46.22	17.75	63.97	36.64
மெதிரிகிரிய	2018-2021	767.4	157	24.86	10.11	34.97	31.95
எம்பிலிபிட்டிய (அ)	2018-2021	48.9	28	0.4	0.4	0.8	34.21

மூலம்: அபிவிருத்தி நிதித் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி வங்கி

குறிப்பு: (அ) இது 2021 அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வாசனைத் திரவியங்கள் மற்றும் தொடர்புடைய உற்பத்தி சந்தைப்படுத்தல் சபையிடம் கொடுக்கப்பட்டது.

கட்டாய பயிர்க்காப்புறுதி

நெல், மற்றும் சோளம் , சோயா அவரை, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு, மற்றும் மிளகாய் ஆகிய ஏனைய வர்த்தகப் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கான விரிவான காப்புறுதி உள்ளடக்கம் ஒன்றை வழங்குவதற்கு கட்டாய பயிர் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்படடது. இத்திட்டமானது, வறட்சி, வெள்ளம், வன விலங்குகளினால் ஏற்படும் இழப்புகளை உள்ளடக்குவதோடு, ஒரு ஏக்கருக்கு ரூபா 40.000 வீதம் நெல்லுக்கு 5 ஏக்கர்கள் மற்றும் ஏனைய வர்த்தக பயிர்களுக்கு 2.5 ஏக்கர்கள் வரையிலும் அதிக பட்ச நிலப்பரப்பொன்றிற்கு காப்புறுதி உள்ளடக்கமொன்று உரித்தாகின்றது. 2020/21 பெரும்போகத்தின் போது, 81,030 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் பயிரிடப்பட்ட அழிவுற்ற பயிர்களுக்கான இழப்பீடாக 50,169 விவசாயிகளுக்கு ரூபா 1,252 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2020/21 சிறு போகத்தின் போது, 8,351 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் பயிரிடப்பட்ட அழிவுற்ற பயிர்களுக்கான இழப்பீடாக 8,678 விவசாயிகளுக்கு ரூபா 147 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

7.4 சமூகத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட பிரிவுகளுக்கான சமூக பாதுகாப்பு

7.4.1 சிரேஷ்ட பிரஜைகளுக்கான விஷேட வட்டித்திட்டம்

இத்திட்டமானது, சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிலையான மற்றும் பாதுகாப்பான ஓய்வு வாழ்க்கையொன்றை வழங்குவதற்காக அவர்களின் நிலையான வைப்புக்களுக்கு 15 சதவீத வட்டி வீதமொன்றை வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டதோடு, 15 சதவீத வட்டி வீதத்துக்கும் மற்றும் சாதாரண நிலையான வைப்புக்களின் வட்டி வீதத்துக்கும் இடையிலான இடைவெளி திறைசேரியினால் ஏற்கப்படுகின்றது. 15 சதவீத வட்டி வீதத்துக்கும் மற்றும் சாதாரண நிலையான வைப்புக்களின் வட்டி வீதத்துக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்ததன் காரணமாக, இத்திட்டத்தின் மூலம் திறைசேரிக்கு குறிப்பிடத்தக்க அளவிலான செலவுச் சுமையொன்றை ஏற்பட்டுள்ளது. எனவே, திறைசேரி பிணை முறிகளை வழங்குவதன் மூலம் அரசினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி மானிய நிலுவைக் கொடுப்பனவின் ஒரு பகுதியை நீண்ட காலப் பொறுப்பாக மாற்றுவதற்கு அரசு தீர்மானம் எடுத்தது. அதன் படி, 2020 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு வரை செலுத்த வேண்டியிருந்த நிலுவை வட்டி மானியம், 2021 ஆம் ஆண்டில் முறையே ரூபா 31,322 மில்லியன் திறைசேரி பிணை முறியை வழங்குவதன் மூலமும் மற்றம் ரூபா 10 மில்லியன் நிதியைச் செலுத்துவதன் மூலமும் தீர்ப்பனவு செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டிலிருந்து 4 ஆம் காலாண்டு வரையிலான காலப்பகுதியில் வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 50,964.76 மில்லியனாகும்.


அட்டவணை 7.11 : சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கான வட்டி மானியக் கொடுப்பனவு 2015 - 2021

ஆண்டு	தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த வட்டி மானியம்
2015	3,714.45
2016	14,518.95
2017	13,462.15
2018	13,579.42
2019	18,082.74
2020	31,151.76
2021 1 ஆம் காலாண்டு	12,985.82

7.4.2 விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

நாட்டின் விவசாய அபிவிருத்திக்காக தமது வாலிபப்பருவத்தை அர்ப்பணித்த வயது முதிர்ந்த விவசாயிகளின் முதிர் வயது வாழ்க்கையை பாதுகாப்பாக களிப்பதற்காக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையானது, விவசாய காப்புறுதித் திட்டமொன்றை ஸ்தாபித்துள்ளது. அண்ணளவாக, 959,254 விவசாயிகள் விவசாயிகளின் ஓய்தியத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளதோடு, சராசரியாக சுமார் 165,127 விவசாயிகள் மாதாந்தம் நன்மை அடைகிறார்கள். 2021 ஆம் ஆண்டில். இத்திட்டத்தின் கீழ் மாதாந்த ஓய்வூதிய தவணையைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையுடைய விவசாயிகளுக்கிடையில் ரூபா. 3,756 மில்லியன் விநியோகிக்கப்பட்டது. தகைமையுடைய அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நேரத்தில் ஓய்வூதியங்களைச் செலுத்துவதற்கு விவசாயிகளின் பங்களிப்பு மாத்திரம் போதியதாக இல்லாமையினால் திறைசேரியானது அதற்கு அவசியமான எஞ்சிய நிதித்தொகையை வருடாந்தம் விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபைக்கு வழங்குகின்றது. அதன் படி, திறைசேரியினால், விவசாயிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக ரூபா 4,000 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

வரைபு 7.2: விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டத்தின் முன்னேற்றம் - 2021




மூலம்: விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை

7.4.3 மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டமானது, மீனவர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதோடு, திறைசேரிக்கு எந்த வித மேலதிக செலவுமின்றி தன் ஆற்றலால் இயங்கக் கூடிய ஒரு திட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 69,049 மீனவர்கள் பதிவு செய்துள்ளதோடு, 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர்களது மாதாந்த ஓய்வூதியமாக சுமார் 5,200 மீனவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூபா 78 மில்லியன் விநியோகிக்கப்பட்டுள்ளது.

வரைபு 7.3 : மீனவர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் முன்னேற்றம் - 2021



மூலம்: விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை (AAIB)

மேலும், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் தயாரிக்கப்பட்ட "விவசாயம், பெருந்தோட்டத்துறை மற்றும் கடற்றொழில்" ஆகிய மூன்று துறைகளையும் உள்ளடக்கிய பொதுவான ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பான அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு மூன்று திட்டங்களும் நிதி ரீதியான தன்னிறைவு அடையும் வரை மூன்று (03) துறைகளுக்குமான சுயாதீன ஓய்வூதியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 2021 மே மாதம் 17 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் படி, விவசாய மற்றம் கமநல காப்புறுதிச் சபை 2014 ஆம் ஆண்டின் 1853/49 இலக்க வர்த்தமானியின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட விவசாயிகளின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளதோடு, இப்புதிய திட்டத்தின் கீழ் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ள ஆரம்பித்துள்ளது.

7.5 உணவுப் பாதுகாப்பு

7.5.1 அரச நெற்கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்


கொவிட் 19 தொற்று நோயின் போது நாடுகளின் உணவுப் பாதுகாப்பு மட்டங்கள் குறிப்பிடத்தக்க மட்டமொன்றில் குறைவடைந்திருந்ததோடு, குறிப்பாக, குறிப்பிட்ட நாடுகளினால் விதிக்கப்பட்ட வரையறைகளின் காரணமாக விஷேடமாக, மொத்த பெறுமதிச் சங்கிலி பூராவும் விவசாய உணவு முறைமைகள் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரு நாட்டின் உணவுப் பாதுகாப்பு மட்டத்தை முகாமை செய்வதன் முக்கியத்துவமானது, உள்நாட்டில் இவ்வாறான தொற்று நோய் நிலைமைகளின் தாக்கங்களைக் குறைப்பதற்கான குறிப்பிடத்தக்க ஒரு பலமாக இனங்காணப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிலும் மற்றும் எதிர்காலத்திலும், நாட்டில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கையில், உள்ளூர்

உணவு உற்பத்தியை அதிகரிப்பதோடு மக்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய உணவு விலையொன்றையும் உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான ஒரு உபாயமாக இனங்காணப்பட்டுள்ளது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் மக்களுக்கு அரிசிக் கிடைப்பனவும் மற்றும் ஏற்கக் கூடிய விலை ஆகிய காரணிகள் மிகவும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இந்நிலைமையை உறுதிப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் நெற்பயிர்ச்செய்கைக்கான அரசாங்கத்தின் முதலீட்டில், தேவையான உள்ளீடுகளை விநியோகித்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், மற்றும் விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சியளித்தல் உள்ளீட்டுத் தேவைகள் மீதே அதிக கவனம் செலுத்தப்பட்டன. அதன் படி, உரம், மற்றும் விதைகளை வழங்குதல், மற்றும் நீர்ப்பாசன வசதிகள் மற்றும் பரவல் சேவைகளை வழங்குதல் என்பனவற்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், நெல்லிற்கான உத்தரவாத விலையை பேணுவதும் நெற்பயிர்ச்செய்கையில் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான ஒரு உந்துகோளாகவும் உள்ளது.

இந்நிலைமைகளின் கீழ், 2021 ஆம் ஆண்டில், அறிக்கையிடப்பட்ட மொத்த நெல்லுற்பத்தியின் அளவு 5.15 மெட்ரிக் தொன் மில்லியனாகும். இது 2020 ஆம் ஆண்டின் உற்பத்தியை விட ஓரளவு அதிகரித்துள்ளது.

வரைபு 7.4 : மொத்த நெல்லுற்பத்தி 2010 - 2021



மூலம்: விவசாயத் திணைக்களம்

2021 ஆம் ஆண்டில், நெல் சந்தைப்படுத்தும் சபை, மற்றும் மாவட்டச் செயலாளர்களின் / அரசாங்க அதிபர்களின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளின் உரிமையாளர்களுடன் இணைந்து விவசாயிகளுக்கும் மற்றும் நுகர்வோருக்கும் நியாயமான விலையொன்றை உறுதிப்படுத்துவதன் மூலம் நெல்லைக் கொள்வனவு செய்வதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இச்செயன்முறையில், 2020/21 பெரும் போகத்திலும் மற்றும் 2020/21 சிறு போகத்திலும் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு/ அரசாங்க அதிபர்களுக்கு ரூபா 823 மில்லியன் நேரடியாக வழங்கப்பட்டதோடு, நெல் சந்தைப்படுத்தம் சபையினால் அரச வங்கிகளிடமிருந்து ரூபா 4,000 மில்லியன் பெறுமதியான கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகள் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

அட்டவணை 7.12: அரசாங்க நெற்கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல் - 2015 - 2021

அரசாங்க நெற்கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் சுருக்கம்				
பருவம்	நாடு (மெ.தொ)	சம்பா (மெ.தொ)	மொத்தம் (மெ.தொ)	பெறுமதி (ரூபா. மில்லியன்)
2014/15 பெரும் போகம்	126,203	34,366	160,569	7510
2015 சிறு போகம்	162,526	12,487	175,013	7,950
மொத்தம்	288,729	46,853	335,582	15,460
2015/16 பெரும் போகம்	91,785	40,196	131,981	5,139
2016 சிறு போகம்	11,054	14,384	25,438	1,056
மொத்தம்	102,839	54,580	157,419	6,195
2016/17 பெரும் போகம்	0	0	0	0
2017 சிறு போகம்	0	0	0	0
மொத்தம்	0	0	0	0
2017/18 பெரும் போகம்	4,605	0	4,605	175
2018 சிறு போகம்	2,077	5	2,082	79
மொத்தம்	6,682	5	6,687	254
2018/19 பெரும் போகம்	31,522	16,749	48,271	1,886
2019 சிறு போகம்	0	0	0	0
மொத்தம்	31,522	16,749	48,271	1,886
2019/20 பெரும் போகம்	34,374	17,856	52,230	2,598
2020 சிறு போகம்	9,603	34	9,637	487
மொத்தம்	43,977	17,890	61,867	3,085
2020/21 பெரும் போகம்	51,616	541	52,157	2,475
2021 சிறு போகம்	13,423	147	13,570	785
மொத்தம்	65,039	688	65,727	3,260

மூலம்: நெல் சந்தைப்படுத்தும் சபை

7.5.2 தனியார் துறையினரால் நெல் கொள்வனவு செய்யப்படலும் மற்றும் அரச ஈடுபாடும்

அரச வங்கித்துறையின் ஊடாக தேவையான நிதியை வழங்குவதன் மூலம் தனியார் துறையின் நெல் கொள்வனவுச் செயன்முறைக்கு ஆதரவளித்ததோடு, அது குறிப்பட்ட காலம் முழுதும் தனியார் துறையினரால் நெற்கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிதி மூலமாகும். அதன் பிரதிபலனாக, 2021 ஆம் ஆண்டில் நெற் கொள்வனவிற்காக அரச மற்றும் தனியார் துறை வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கையையும் மற்றும் மொத்தப் பெறுமதியையும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 33 சதவீதத்தினாலும் 60 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.13 : தனியார் துறைக்கு நெற்கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கடன்களின் முன்னேற்றம் - (2020-2021)

வங்கியின் பெயர்	மொத்தம் (2020)		மொத்தம் (2021)		சுருக்கம்	
	கடன்களின் எண்ணிக்கை	மொத்தக் கடன் தொகை (ரூபா. மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை	மொத்தக் கடன் தொகை (ரூபா. மில்லியன்)	கடன்களின் எண்ணிக்கை சதவீதமாக (%)	மொத்தக் கடன்களின் தொகை சதவீதமாக (%)
மக்கள் வங்கி	43	732	72	4,218	67	476
இலங்கை வங்கி	201	16,865	471	19,025	134	13
பிரதேச அபிவிருத்தி வங்கி	13	29	67	211	415	623
உப மொத்தம் - அரச வங்கிகள்	257	17,626	610	23,454	137	33
வர்த்தக வங்கி	689	4,517	851	6,398	24	42
சம்பத் வங்கி	258	3,948	279	5,788	8	47
டீஎப்சீசீ வங்கி	81	510	87	618	7	21
செலான் வங்கி	43	510	94	8,671	119	1,600
யூனியன் வங்கி	31	147	-	-	-100	-100
அமானா வங்கி	622	2,334	818	3,092	32	32
தேசிய அபிவிருத்தி வங்கி	15	95	22	131	47	38
நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	117	621	78	1,483	-33	139
ஹட்டன் நெஷனல் வங்கி	151	1,250	176	838	17	-33
இலங்கை சேமிப்பு வங்கி	1	25	-	-	-100	-100
உப மொத்தம் தனியார் வங்கிகள்	2,008	13,957	2,405	27,018	20	94
பீபல்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பீஎல்சீ	-	-	2	3	பொ.அ	பொ.அ
உப மொத்தம் நிதி நிறுவனங்கள்	-	-	2	3	பொ.அ	பொ.அ
மொத்தம்	2,265	31,583	3,017	50,476	33	60

மூலம்: குறிப்பிட்ட வங்கிகள்

நெல் விநியோக நிகழ்ச்சித்திட்டம்

2021 ஆம் ஆண்டில் சந்தையில் நிலவிய அரிசியின் உயர்வான சில்லறை விலைகளுக்கான எதிர்வினையாக மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்கள் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட அரச நெல் விநியோக நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அதிகபட்ச சில்லறை விலையொன்றின் கீழ் கட்டுப்படியான விலையொன்றுக்கு சந்தைக்கு அரிசியை வழங்குவதற்கு அரசு முயற்சி செய்தது. இப்பொறிமுறையின் கீழ் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் விற்பனை வலையமைப்பு மற்றும் தனியார் பல்பொருள் அங்காடிகளின் ஊடாக அரிசிக்கு நிலவிய அதிகபட்ச சில்லறை விலையை விடக் குறைந்த விலையொன்றுக்கு சந்தைக்கு வழங்கப்பட்டது. உள்ளூர் நெல் ஆலைகளின் உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தினை மதிப்பீடு செய்வதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலைகளின் உரிமையாளர்களுக்கு இக்கைத்தொழிலின் இருப்பிற்கான நிவாரண நடவடிக்கையொன்றாக நெல்லிருப்புக்களைப் பதனிடும் கட்டத்தில் அந்நெல் ஆலைகளின் உரிமையாளர்களைத் தொடர்பு கொள்வதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்தது. அதன் படி, 2021 ஆம் ஆண்டில், அண்ணளவாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களின் ஊடாக மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்களினால் 7,266 மெட்ரிக் தொன்னும் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் 27,555 மெட்ரிக் தொன் அரிசித் தொகை தெரிவு செய்யப்பட்ட வர்த்தக வலையமைப்புக்களுக்கு வழங்கப்பட்டது.

ஏனைய உள்ளூர் பயிர்களின் அபிவிருத்தி

2021 ஆம் ஆண்டில், பயறு, சோயா அவரை, மஞ்சள், கௌபீ, வெங்காயம், இஞ்சி, நிலக்கடலை, உருளைக் கிழங்கு, மற்றும் உலர்ந்த மிளகாய் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்பட்ட 15 உள்ளூர் பயிர்கள் மற்றும்

தொடர்புடைய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் உற்பத்தியில் தன்னிறைவடைவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது.

2021 ஆம் ஆண்டில், உளுந்து, பயறு, புளி, மிளகு, கறுவா, கிராம்பு இஞ்சி, மற்றும் மஞ்சள் போன்ற உள்ளூரில் பயிரிடக் கூடிய பல்வேறு பயிர்களுக்கு இதற்கு முன்னர் விதித்திருந்த இறக்குமதிக் கட்டுப்பாடு 2021 ஆம் ஆண்டில், அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, உள்ளூர் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை ஒப்பீட்டு ரீதியில் உயர்வான விலையொன்றுக்குக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உள்ளூர் விவசாயிகளுக்கு உயர்வான விலையொன்றினை வழங்குவதன் மூலம் உள்ளூர் விவசாயிகளை பாதுகாப்பதற்கான ஊக்குவிப்பொன்றாக அறுவடை காலத்தில் பெரிய வெங்காயம், மற்றும் உருளைக் கிழங்கிற்கான விஷேட பண்டங்களுக்கான வரி முறையே ஒரு கிலோ கிராமுக்கு 25 சதவீதத்திலிருந்து ரூபா 40 வரையிலும் மற்றும் ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 15 இலிருந்து ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 50 வரை அதிகரிப்பதற்கு அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூர் விவசாயிகள் இடைநிலைப் பருவத்தில் பயறு பயிர்ச்செய்கைக்கு விவசாயிகளை ஊக்குவித்ததோடு, ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 455/= வீதம் உள்ளூர் பயறைக் கொள்வனவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் படி, அம்பாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, புத்தளம், மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மாவட்டச் செய்லாளர்கள் / அரசாங்க அதிபர்களின் ஊடாக 413 மெட்ரிக் தொன் உள்ளூர் பயறைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை ரூபா 409 மில்லியனாகும்.

அட்டவணை 7.14 : மாவட்டச் செயலாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட பயறின் முன்னேற்றம்

மாவட்டம்	மொத்த ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்)	கொள்வனவு செய்யப்பட்ட தொகை (மெ.தொ)
அம்பாந்தோட்டை	110.0	250.3
அம்பாறை	10.0	20.6
அனுராதபுரம்	100.0	2.2
பொலன்னறுவை	30.0	64.5
மொனராகலை	100.0	9.3
இரத்தினபுரி	54.6	60.5
புத்தளம்	4.6	5.3
மொத்தம்	509.2	412.7

மூலம்: குறிப்பிட்ட மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்கள்

7.6 வாழ்க்கைச் செலவு

கொவிட் 19 தொற்று நோயின் காரணமாக உலகளாவிய ரீதியில் பொருட்களினதும், மற்றும் சேவைகளினதும் விலைகள் அதிகரித்துள்ளதோடு, அது உள்ளூர் பொருட்களினதும் விலை அதிகரிப்பதன் மீதும் தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளது. அதிகரிக்கப்பட்ட சந்தை நிலைக்குலைவுகளின் காரணமாக, நுகர்வோரும் மற்றும் உற்பத்தியாளர்களும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டனர். எனவே, நுகர்வோரையும் மற்றும் உற்பத்தியாளர்களையும் பாதுகாப்பதானது 2021 ஆம் குறைந்த உத்தரவாத விலையை தொடர்ந்து பேணுதல், அதிக பட்ச சில்லறை விலை மற்றும் விஷேட வியாபாரப் பொருட்களுக்கான வரி முகாமைத்துவம் அரச நிறுவனங்களின் ஊடாக நுகர்வோருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை மானியப்படுத்தப்பட்ட விலைக்கு வழங்குவதை உறுதிப்படுத்தல், மற்றும் தெரிவு செய்யப்பட்ட குழுக்களுக்கு மானியங்களை வழங்குதல், 2021 ஆம் ஆண்டில், முகங்கொடுத்த பிரச்சனைகளுக்கு அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் காணப்பட்டன.

அட்டவணை 7.15 | **வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள்** 2021/2022

பொருட்கள்	விஷேட வியாபாரப் பொருட்களுக்கான வரியின் விபரம் (SCL)/ அதிக பட்ச சில்லறை விலை (MRP)	அமுலுக்கு வரும் திகதி
	ஒரு கிலோ கிராமுக்கான விவிபொவ ரூபா 0.25 இலிருந்து ரூபா 40/= வாக அதிகரித்துள்ளது.	08.09.2021
பெரிய வெங்காயம்	மீண்டும் ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 40/= இலிருந்து ரூபா 10/= வாகக் குறைக்கப்பட்டது.	01.01.2022
	விவிபொவ ஒரு கிலோ கிராமுக்கு 25 சதமாக மற்றுமொரு 6 மாதங்களுக்குத் தொடரப்பட்டது.	13.10.2021
உலர்ந்த மிளகாய்	ஒரு கிலோ கிராமுக்கான அபசிவி (ஆசீ) ரூபா 385/- நீக்கப்பட்டது.	08.02.2021
	விவிபொவ ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 25/= இலிருந்து ரூபா 10/= வாகக் குறைக்கப்பட்டது.	03.03.2022
	அபசிவி (MRP) நீக்கப்பட்டது.	02.09.2021
அரிசி	அதிக பட்ச உற்பத்தியாளர் /ஆலை உரிமையாளர் விலை நீக்கப்பட்டது.	29.09.2021
	அபசிவி (MRP) விதிக்கப்பட்டது.	02.09.2021
	ஒரு கி.கி ரூபா 125/=	
சம்பா	ஒரு கி.கி ரூபா 103/=	
நாடு	ஒரு கி.கி ரூபா 98/=	
பச்சை அரிசி	ஒரு கி.கி ரூபா 95/=	
	மீண்டும் அபசிவி (MRP) நீக்கப்பட்டது.	29.09.2021
அரிசி	ஒரு கிலோ கிராமுக்கான விவிபொவ ரூபா 65/=விதிக்கப்பட்டது.	11.10.2021
	மீண்டும் ரூபா 65/= இலிருந்து 25 சதமாகக் குறைக்கப்பட்டது.	02.11.2021
கௌபீ	ஒரு வருடத்திற்கான ஒரு கிலோ கிராமுக்கான விவிபொவ ரூபா 70/= தொடரப்பட்டது.	02.03.2022
பயறு	ஒரு வருடத்திற்கான ஒரு கிலோ கிராமுக்கான விவிபொவ ரூபா 40/= தொடரப்பட்டது.	26.04.2021
சீனி	அபவி ஆனது பின்வருமாறு விதிக்கப்பட்டது, வெள்ளைச் சீனி - பொதியிடப்பட்ட (125/=) இ பொதியிடப்படாத (12/=) ஒரு கி.கி கபில நிற சீனி - பொதியிடப்பட்ட (128/=) இ பொதியிடப்படாத (125/=) ஒரு கி.கி	02.09.2021
	மீண்டும் அபசிவி (MRP) நீக்கப்பட்டது.	03.11.2021
	விவிபொவ ஒரு கிலோ கிராமுக்கு 25 சதமாக மற்றுமொரு 6 மாதங்களுக்குத் தொடரப்பட்டது.	11.01.2022
உருளைக் கிழங்கு	ஒரு கி.கி இற்கான அபசிவி ரூபா 115/= நீக்கப்பட்டது.	08.02.2021
	ஒரு கி.கி இற்கான விவிபொவ ரூபா 55/= இலிருந்து ரூபா 15/= ஆகக் குறைக்கப்பட்டதோடு, ஒரு கி.கி. இற்கான விவிபொவ ரூபா 15/= இலிருந்து ரூபா 50/= ஆக அதிகரிக்கப்பட்டது.	12.02.2021 27.04.2021
	மீண்டும் ஒரு கி.கி இற்கு ரூபா 20/= ஆக குறைக்கப்பட்டது.	01.01.2022
கோதுமை மா	ஒரு கி.கி இற்கான ரூபா 85/= அதிக பட்ச விலை நீக்கப்பட்டது.	08.10.2021
உளுந்து	விவிபொவ ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 200/= ஆக மற்றுமொரு	03.03.2022
-உடைக்காத உளுந்து மா	வருடத்திற்கு தொடரப்பட்டது.	

மூலம்: நுகர்வோர் விவகார அதிகார சபை மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்

மானிய விலையில் பயறை விற்பனை செய்தல்

உள்ளூர் சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் விலை துரிதமாக அதிகரித்தனால் அதற்கான பதிலீடாக நுகர்வோருக்குக் கட்டுப்படியான விலையொன்றுக்கு உள்ளூர் பயறை சந்தையில் கிடைக்க வழி செய்வதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்களினால் உள்ளூர் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 363.4 மெட்ரிக் தொன் பயறை லங்கா சதொச நிறுவனத்தின் ஊடாக ஒரு கிலோ கிராம் ரூபா 225/= விற்கு கட்டுப்படியான விலையொன்றுக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கு அரசு வசதிகளை வழங்கியது. இதற்காக, லங்கா சதொச நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய மானியமாக ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 255/= செலவொன்றை அரசாங்கம் ஏற்றுள்ளது.

அரிசியை இறக்குமதி செய்தல்

அதிகரித்த அரிசி விலைக்கான பதிலொன்றாக அரசி இறக்குமதியை ஊக்குவிப்பதன் ஊடாக சந்தையில் அரிசியின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக 2021 நவம்பர் மாதம் 02 ஆம் திகதி அரிசி இறக்குமதியின் மீதான விஷேட வியாபாரப் பொருட்களுக்கான வரி ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 65/= விலிருந்து 25 சதம் வரை முதலில் குறைக்கப்பட்டது. அதன் படி, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து 2022 மார்ச் மாதம் வரை அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களினால் 355,011 மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. மேலும், இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் 2022.05.05 ஆம் திகதிக்கு 68,124 மெட்ரிக் தொன் அரிசி இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதோடு, சந்தையில் ஏனைய அரிசி வகைகளுக்கு ஒப்பீட்டு ரீதியில் குறிப்பிடத்தக்க அளவிலான குறைந்த விலையொன்றிற்கு அதாவது நாட்டரிசி ஒரு கிலோ கிராம் ரூபா 105/= இற்கும் மற்றும் GR 11 வகையைச் சேர்ந்த பொன்னி அரிசி ஒரு கிலோ ரூபா 128/= வீதத்திலான விலையொன்றுக்கு லங்கா சதொச விற்பனை நிலையங்கள் மற்றும் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் Q-shops ஊடாக நுகர்வோருக்கு அவ்வரிசி விற்பனை செய்யப்பட்டது.

சலுகை அடிப்படையிலான விலைகளில் காய்கறிகளை விற்பனை செய்தல்

தொற்று நோயின் தாக்கத்தின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நகரங்களிலுள்ள நுகர்வோருக்கு அவர்களின் நாளாந்த உணவுப் பொதிக்கு அத்தியாவசியமான காய்கறிகளை கொள்வனவு செய்யும் போது ஏற்பட்ட அசௌகரியங்களை மதிப்பிடுவதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட காய்கறி வகைகளை சலுகை அடிப்படையிலான விலைக்கு விற்பனை செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை கொழும்பு, கம்பஹா, மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள் மற்றும் சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் என்பனவற்றின் ஆதரவுடன் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, மேலதிக உற்பத்தி பதிவிடப்பட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட காய்கறிகளை கொள்வனவு செய்வதற்காக அந்தந்த மாவட்டங்களுக்கு ரூபா 3/= வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கான கோதுமை மாவிற்கான மானியத்தினை வழங்குதல்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்தமையினால் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள பாதகமான தாக்கங்களை குறைப்பதற்காக குறுகிய கால உபாயங்களாக தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு வருட காலப்பகுதிக்கு கோதுமை மா ஒரு கிலோ கிராம் ரூபா 80/= வீதமான மானிய விலையொன்றுக்கு கோதுமை மா ஒரு கிலோ கிராம் ரூபா 15/= வீதம் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு இம்மானியம் உரித்தாவதோடு, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஜனவரி மாதத்தில் 959,619 கிலோ கிராம் கோதுமை மா 63,974 தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்காக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட செலவு ரூபா 28.9 மில்லியனாகும்.

வீட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்

கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் போது, கிராமிய மட்டத்தில் மக்களுக்கிடையில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் போது முகங்கொடுக்க நேர்ந்த இக்கட்டான பிரச்சினைகளை மதிப்பீடு செய்து அம்மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக அரசாங்கத்தினால் 2022 வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ரூபா 31,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 24 மாத காலப்பகுதிக்கு போஷாக்குப் பொதி ஒன்றை வழங்குவதற்காக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் பொருளாதார ரீதியாக வறிய குடும்பங்களின் வாழ்க்கைச் செலவு அழுத்தத்திற்கான நிவாரணமாக நிவாரணப் பொதியொன்றை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 15,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு சிறிய பல்பொருள் அங்காடிகள் வலையமைப்பொன்றை (Home Shop) ஸ்தாபிப்பதற்கு எஞ்சிய ரூபா 15,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 7.16 : சிறிய பல்பொருள் அங்காடிகளின் வலையமைப்பு (Home Shop) நிகழ்ச்சித்திட்ட நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்

நடவடிக்கை	பௌதிக முன்னேற்றம் %
பெண் தொழில்முயற்சியாளர்களைத் தெரிவு செய்தல்	60
தெரிவு செய்யப்பட்ட சிறிய பல் பொருள் அங்காடிகளுக்கான பிரதான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பான கொள்முதல்	10

மூலம்: கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு

மேலே குறிப்பிடப்பட்ட சிறிய பல்பொருள் அங்காடி வலையமைப்பை ஸ்தாபித்ததன் பின்னர் பொருளாதார ரீதியாக வறிய குடும்பங்களுக்கு நிவாரணப் பொதியொன்றை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று வர்த்தக அமைச்சினால் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமான உழைப்போருக்கு வீடமைப்பு வசதிகளை வழங்குதல்

ஊழியர் படையில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானங்களை உழைப்போருக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகர குடியிருப்புக்களின் அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் தொகுதியிலிருந்து ஒரு அலகை கொள்வனவு செய்வதற்காக 2021 வரவு செலவுத்திட்டத்தின் கீழ் "சொந்துரு கெதெல்ல" வீடமைப்புக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சலுகை அடிப்படையிலான வட்டி வீதமொன்றின் கீழ் கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் திறைசேரியினால் செயற்பாட்டு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.17 : வீடமைப்புக் கடன் திட்ட நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்

நிறுவனத்தின் பெயர்	நிர்மாணிக்கப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை
நகர அபிவிருத்தி அதிகார சபை	2,795	112
வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை	494	11
நகர குடியிருப்புக்கள் அபிவிருத்தி அதிகார சபை	764	356
மொத்தம்	4"053	479

மூலம்:

குறிப்பு: "சொந்துரு கெதெல்ல" வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் வங்கிகளினால் இன்னும் கடன் வழங்கப்படவில்லை. ஏனெனில் , அவை கொள்வனவு செய்வதுடன் தயாரிப்புக் கட்டத்தில் உள்ளன.

08

அரசுடமை நிறுவனங்களின் செயலாற்றுகை

8.1 மேன்நோக்கு

அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களானவை வேலைவாய்ப்பு உருவாக்கம், வறுமை ஒழிப்பு ஆகியவற்றுடன் நிதி மற்றும் காப்பீடு, மின்சாரம் மற்றும் எரிசக்தி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள், சாலைகள் மற்றும் நீர் போன்ற குறிப்பிட்ட துறைகளின் வளர்ச்சி உட்பட சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள பெரும்பாலான அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் தொடரான நிதி நெருக்கடி, குறைந்த உற்பத்தித்திறன், செலவு மட்டத்தை விடக் குறைவாக தயாரிப்புகள் அல்லது சேவைகளை வழங்குதல், துணை-உகந்த செயல்திறன் மற்றும் கடுமையான போட்டி ஆகியவை காரணமாக உற்பத்தித் திறனற்ற துறைகளுக்கு அரிதான வளங்கள் குறைக்கப்படுகின்றன. இது 2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.9 சதவீதத்திற்கும் அதிகமான படுகடனை திரட்சியடையச் செய்துள்ளது. எனவே, பல ஆண்டுகளாக அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், பொருளாதாரக் கொந்தளிப்பு காணப்படும் இந்த கடினமான தருணத்தில் அவற்றின் மறுசீரமைப்புக்கள் அத்தியவசியமாகியுள்ளன. அத்தகைய மறுசீரமைப்புக்களில், பொதுத் திறைசேரியின் அரசிறைச்சுமையைக் குறைப்பதற்காக வர்த்தக சுதந்திரத்தை அளிப்பதற்குத் தாபன நோக்கு அறிக்கை, அந்தந்த நிறுவனம், நிரல் அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றினால் கையெழுத்திடப்பட்ட முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை, அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டிணைப்பு மற்றும் அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

பல மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், முக்கிய அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் குறிப்பாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவை அரச வங்கித் துறையில் அழுத்தத்தைச் செலுத்தி கணிசமான திரட்டிய நட்டங்களை உருவாக்கியுள்ளன. எனவே, வங்கி நிதிகளின் கணிசமான பகுதியானது அரசுடைமைத் தொழில்முயற்சித் துறைக்கு அவர்களின் இழப்புகளுக்கு நிதியளிப்பதற்காக செலுத்தப்பட்டுள்ளது - இது பொருளாதார வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் உற்பத்தித்திறனுடைய தனியார் துறைக் கடனையும் பாதிக்கச்செய்யும்.

வரலாற்று ரீதியாக உயர்வான சர்வதேச எண்ணெய் விலைகளினாலும், பெரிய அளவிலான அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களுக்கு எண்ணெய் ஒரு முக்கிய உள்ளீடாக இருப்பதாலும் அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் இப்போது அதிக அழுத்தத்தில் உள்ளன. இது அரசிறைத் தளத்தில் மேலும் அழுத்தத்தினைச் செலுத்தி வரவுசெலவு திட்டப் பரிமாற்றங்களை விரிவுபடுத்துவதற்கும் திறைசேரி உத்தரவாதங்களை அவற்றிற்கு வழங்குவதற்கும் வழிவகுத்தது. அந்த வகையில், தங்கள் வர்த்தக நம்பகத்தன்மையை மேம்படுத்தும் வகையில் செயல்படாத அரசுடைமைத் தொழில்முயற்சிகளின் மூலோபாய மறுசீரமைப்பு, இந்த நெருக்கடியான நேரத்தில் பிரதானமானதாக உள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் அந்நியச் செலாவணி அழுத்தங்கள், விநியோகச் சங்கிலி சீர்குலைவுகள் மற்றும் மின்சாரம், எரிபொருள், நீர், எல்பி எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவுகளை பிரதிபலிக்கும் வகையில் சந்தை விலைகளை சரி செய்யாததால் ஏற்படும் நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் முன்னொருபோதுமில்லாத சவால்களை எதிர்கொண்டன.

இந்தப் பின்னணியில், முக்கிய 52 அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மொத்தத் தேறிய நட்டம் 2021 இல் ரூபா 86 பில்லியனாக காணப்பட்டது. இது 2020 ஆம் ஆண்டின் ரூபா 33.7 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும் போது 356 சதவீத வீழ்ச்சியாகும். 2021 இல், 32 அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 200 பில்லியன் பதிவுசெய்யப்பட்டதுடன் இதில் 70 சதவீத இலாபம் வங்கித் துறையிலிருந்து அடையப்பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 20 அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்கள் ரூபா 286 பில்லியன் தேறிய நட்டத்தைப் பதிவு செய்தன. இதில் விமானப் போக்குவரத்து மற்றும் எரிசக்தித் துறைகள் முறையே 60 சதவீதம் மற்றும் 36 சதவீத நட்டங்களுக்கு வகைகூறின. எவ்வாறாயினும், வங்கி மற்றும் நிதித்துறையானது 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் சிறப்பாகச் செயல்பட்டு ரூபா 43 பில்லியன் மேலதிக இலாபங்களுடன், இலாபத்தில் 44 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன.

அரசுடைமைத் தொழில்முயற்சிகள் மீதான வரிகள் மற்றும் பங்கிலாபங்களின் மொத்த சேகரிப்பு 2020 இல் ரூபா 17.6 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 30.6 பில்லியனாக இருந்தது. இருந்தபோதிலும், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு, அவை தங்கள் செயல்பாடுகளைத் தொடர மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக வரவுசெலவு திட்ட பரிமாற்றல்கள் வழியாக முறையே ரூபா 274 பில்லியன் மற்றும் ரூபா 93 பில்லியன்களை 2021 இல் அரசாங்கம் வழங்கியது.

பொது முதலீடுகளுக்கான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், புத்தாக்கம் மற்றும் பணத்திற்கான பெறுமதியை உறுதி செய்யும் அதே வேளையில், ஒவ்வொரு அரசுடைமைத் தொழில்முயற்சிகளினதும் செயலாற்றுகை சார்ந்த கலாச்சாரத்தை புகுத்தி, 2021 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரி, அரசுடைமைத் தொழில்முயற்சிகளுக்கான தாபன ஆளுகை மற்றும் செயல்பாட்டு கையேடு பற்றிய வழிகாட்டுதல்கள் ஆகிய இரண்டு முக்கியமான வழிகாட்டுதல்களை வெளியிட்டது.

அட்டவணை 8.1 | அரசுடைமைத் தொழிற்முயற்சிகளின் நிதி வெளிப்பாடு

(ரூபா.மில்லியன்)

துறை	அரசுடமை தொழில் முயற்சிகளின் எண்.	மொத்த வருமானம் 2021*	PBT/ (LBT) 2020**	PBT/ (LBT) ** 2021
எரிசக்தி	2	819,357	-58,115	-103,658
நீர்	1	28,935	643	-2,996
துறைமுகங்கள்	1	45,454	20,328	25,601
பயணிகள் போக்குவரத்து	1	22,766	-2,105	-3,143
விமானப் போக்குவரத்து	2	145,812	-48,963	-171,506
நிர்மாணத் துறை	3	13,538	-1,062	-727
வங்கித்தொழில் மற்றும் நிதி	7	704,709	97,156	140,054
காப்புறுதி	4	87,033	18,360	19,751
லொத்தர்	2	33,022	4,429	3,957
பண்ணை விலங்குகள்	2	16,121	230	488
பெருந்தோட்டத்துறை	6	5,018	54	267
புதுப்பிக்க முடியாத மூலவளங்கள்	3	3,507	233	1,326
சுகாதாரம்	4	92,564	3,890	4,116
ஊடகங்கள்	3	3,204	-489	-559
சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்	**11**	**71,769**	**-921**	**987**
மொத்தம்	**52**	**2,092,809**	**33,668**	**-86,042**

மூலம்: அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
*தற்காலிகமானது
**வரிக்கு முந்தைய இலாபம்/வரிக்கு முந்தைய நட்டம்) தற்காலிகமானது

அட்டவணை 8.2 | அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு/ பங்கிலாப வருமானம்

ரூபா. மில்லியன்

	2017	2018	2019	2020	2021
அறவீடு	**50,447**	**37,230**	**22,634**	**14,769**	**25,919**
தேசிய சேமிப்பு வங்கி	3,865	500	2,000	1,000	3,500
இலங்கை வங்கி	12,000	4,500	–	1,250	1,500
மக்கள் வங்கி	5,000	3,200	2,200	2,500	1,977
தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு	22,800	21,850	8,950	5,000	8,500
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	-	-	–	–	–
அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	25	-	–	–	–
பிரதேச அபிவிருத்தி வங்கி	-	-	169	-	-
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்	100	100	50	-	100
அரசு மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்	45	50	–	–	100
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	2,100	2,750	3,268	782	1,824
புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்	1,500	1,700	2,300	-	2,000
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை	100	25	25	-	15
இலங்கை மாநாட்டுப் பணியகம்	-	-		-	-
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்	-	-	–	–	–
இலங்கை மின்சார சபை	-	-	–	–	–
முதலீட்டுச் சபை	220	250	250	156	–
தேசிய லொத்தர் சபை	-	-	–	-	900
பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	-	-	53	–	–
இலங்கை காப்புறுதிச் சபை	-	-	–	–	–
இலங்கை கட்டளைகள் நிறுவனம்	-	-	–	-	-
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்	-	15	15	-	25
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை		-	–	–	–
மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம்	25	25	25	–	25
இலங்கை சுற்றுலாத் துறை ஊக்குவிப்புப் பணியகம்	1,000	1,000	500	-	-
சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை	800	800	800	-	50

	2017	2018	2019	2020	2021
அரச மருந்துப்பொருட் கூட்டுத்தபானம்	222	-	–	–	–
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்	160	165	200	-	110
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	185	200	650	-	-
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	300	100	50	-	-
இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அணைக்குழு	-	-	200	-	-
இலங்கை நில மீட்பு மற்றும் மேம்பாட்டு ஆணைக்குழு	-	-	29	–	–
இலங்கை துறைமுக அதிகார சபை	-	-	900	–	–
தேசிய மருந்தக மற்றும் ஒழுங்குமுறை அதிகார சபை	-	-	-	81	147
வீதி அபிவிருத்தி அதிகார சபை	-	-	-	4,000	4,000
நில சீர்திருத்த ஆணைக்குழு	-	-	-	-	1,100
தொடர்மாடி குடியிருப்புக்கள் முகாமைத்துவ அதிகாரசபை	-	-	-	-	25
தேசிய வணிய மேலாண்மை நிறுவனம்	-	-	-	-	16
இலங்கை ஆயர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்	-	-	-	-	5
பங்கிலாபங்கள்	**3,550**	**4,598**	**5,025**	**2,854**	**4,672**
தேசிய சேமிப்பு வங்கி	60	60	60	60	60
இலங்கை வங்கி	346	346	346	346	346
மக்கள் வங்கி	316	316	316	316	316
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி	41	41	–	-	-
தேசிய அபிவிருத்தி வங்கி	2	1	0.8	1	1
இலங்கை சேமிப்பு வங்கி	-	86	–	-	-
வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	503	1,856	1,720	695	899
வ/ப விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி	850	300	500	-	-
வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி	-	35	130	-	700
வ/ப இலங்கை பொஸ்பேட் கம்பனி	8	5	7	-	20
வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	10	12	–	-	-
லங்கா லேலாண்ட் லிமிடட்	35	45	13	2	3
ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிடட்	-	40	37	-	-
மாந்தை ஸோல்ட் லிமிடட்	-	-	–	2	14.8
சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடட்	90	21	15	304	29
கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட	12	20	10	-	-
வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி	8	11	–	10	3
கஹட்டகஹ கிர/பைட் லங்கா லிமிடட்	-	-	–	-	-
அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	-	-	–	-	-
ஸ்ரீ லங்கா ரெலிகொம் பீஎல்சீ	795	795	947	947	1331
டி லா ரூ லங்கா லிமிடட்	79	106	133	-	345
வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி	218	305	501	-	327
வரையறுக்கப்பட்ட இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழில்கள்	55	78	82	82	82
திறன் விருத்தி நிதியம்	-	-	–	-	-
சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்	12	19	23	77	95
வ/ப லங்கா சீனிக் கம்பனி	-	-	–	-	-
வரையறுக்கப்பட்ட லங்கா லொஜிஸ்டிக்	-	1	–	-	-
சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்	-	-	–	-	-
பெருந்தோட்டக் கம்பனிகள்மூ	103	95	172	12	98
ஏனையவை	7	4	12	-	2.2
மொத்தம்	**53,997**	**41,828**	**27,659**	**17,623**	**30,591**

மூலம் : அரசுடைமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

அட்டவணை 8.3 | அரசுடமைத் தொழில்முயற்சிகளின் ஆதனத்தொகுதி

(ரூபா.மில்லியன்)

துறை	அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை	31.12.2020 உள்ளவாறான மொத்தச் சொத்துக்கள் *	31.12.2021 உள்ளவாறான மொத்தச் சொத்துக்கள்மூ	வளர்ச்சி (%)
எரிசக்தி	2	1,282,483	1,425,213	11.13
நீர்	1	699,281	785,467	12.32
துறைமுகங்கள்	1	473,583	492,621	4.02
பயணிகள் போக்குவரத்து	1	16,877	15,875	-5.94
விமானப் போக்குவரத்து	2	257,597	300,721	16.74
நிர்மாணத் துறை	3	40,297	42,033	4.31
வங்கித்தொழில் மற்றும் நிதி	7	7,291,773	8,811,411	20.84
காப்புறுதி	4	274,927	313,550	14.05
லொத்தர்	2	11,950	11,790	-1.34
பண்ணை விலங்குகள்	2	27,008	27,126	0.44
பெருந்தோட்டத்துறை	6	14,712	15,968	8.54
புதுப்பிக்க முடியாத மூலவளங்கள்	3	6,720	6,810	1.34
சுகாதாரம்	4	54,872	72,729	32.54
ஊடகங்கள்	3	7,046	6,543	-7.14
சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்	11	96,313	109,259	13.44
மொத்தம்	**52**	**10,555,439**	**12,437,116**	**17.83**

மூலம்: அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்
*தற்காலிகமானது

8.2 சக்தி

8.2.1 இலங்கை மின்சார சபை

நாடு முழுவதும் நடமாடல் தடை நீக்கம் மற்றும் 2021 இல் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சியால் தூண்டப்பட்டு 2021 இல் மொத்த மின் உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 17,378 கிகா வொட் மின் தேவையை மீட்டெடுத்தது. இதனால், மின்சார விற்பனை மூலம் கிடைத்த வருவாய் 4.3 சதவீதம் அதிகரித்து 2020ல் ரூபா 238,911 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 249,089 மில்லியனினைப் பதிவு செய்தது. எவ்வாறாயினும் சாதகமான உற்பத்தி கலவை காரணமாக நேரடி உற்பத்தி செலவு 14 சதவீதம் குறைந்து ரூபா 157,354 மில்லியனாகவிருந்தது.

உற்பத்தி கலவையைப் பொறுத்தவரை, நீரேந்துப் பகுதிகளில் பெறப்பட்ட அதிக மழை காரணமாக 2020 இல் பதிவான 24 சதவீதத்துடன் ஒப்பிடும்போது நீர் மின் உற்பத்தி 33 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2020 இல் பதிவு செய்யப்பட்ட 26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், சுயேச்சையான மின் உற்பத்தியாளர்கள் மற்றும் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களோடு அதிக விலை எரிபொருள் அடிப்படையிலான உற்பத்தியை 15 சதவீதமாகக் குறைத்துள்ளது. அதே நேரத்தில், நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தியும் 2020 இல் 39 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 35 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதற்கிடையில், மினி-ஹைட்ரோ உற்பத்தி உட்பட மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் மூலம் மின் உற்பத்தி 2021 இல் ஒரு சிறிய அதிகரிப்பை பதிவு செய்தது. ஒட்டுமொத்தமாக, 2021 இல் மொத்த மின் உற்பத்தியில் இலங்கை மின்சார சபை 78 சதவீத பங்களிப்பை வழங்கிய அதே சமயம் சுயாதீன மின் உற்பத்தித் துறை மீதமுள்ளதை வழங்கியுள்ளன.

அட்டவணை 8.4| இலங்கை மின்சார சபையின் பொருத்தப்பட்ட உற்பத்தி ஆற்றல் மற்றும் மின்னுற்பத்தி - 2019 - 2021


	2019			2020*			2021*		
	பொருத்தப்பட் கொள்ளளவு மெகாவோற்	மின் உற்பத்தி "மொத்த உற்பத்தியின் சதவீதமாக"	மின் உற்பத்தி ஜிகாவொற் மணித்தியாலம்	பொருத்தப்பட்ட கொள்ளளவு மெகாவோற்	மின் உற்பத்தி "மொத்த உற்பத்தியின் சதவீதமாக"	மின் உற்பத்தி "ஜிகாவொற் மணித்தியாலம்"	பொருத்தப்பட் கொள்ளளவு மெகாவோற்	மின் உற்பத்தி "மொத்த உற்பத்தியின் சதவீதமாக"	மின் உற்பத்தி "ஜிகாவொற் மணித்தியாலம்"
நீர்	1,399	23	3,801	1,399	24	3,929	1,383	33	5,658
"அனல் மின் - இ.மி.ச. எண்ணெய்"	654	13	2,202	654	9	1,515	654	7	1,279
அனல் மின் - ஐ.பீ.பீ. எண்ணெய்	628	17	2,875	614	16	2,717	433	8	1,400
அனல் மின் - நிலக்கரி	900	36	5,917	900	39	6,365	900	35	6,111
"பாரம்பரியமல்லாத புதுப்பிக்கத்தக்க சக்தி மூலவளங்கள் மற்றும் காற்று"	0	0	0	31	0	8	104	2	326
மொத்தம்	635	11	1,761	672	10	1,589	711	13	2,214
சூரிய சக்தி (Rooftop Solar)	0	0	0	275	2	269	416	2	389
மொத்தம்	**4,216**	**100**	**16,556**	**4,545**	**100**	**16,392**	**4,601**	**100**	**17,378**

மூலம் : இலங்கை மின்சார சபை

* தற்காலிகமானது


விலையுயர்ந்த எரிபொருள் எண்ணெய் அடிப்படையிலான உற்பத்தியின் மீதான தங்கியிருப்பு குறைக்கப்பட்டதன் விளைவாக, சாதகமான உற்பத்திக் கலவையின் காரணமாக 2021 இல் இலங்கை மின்சார சபையின் நிதி செயலாற்றுகை ஒப்பீட்டளவில் ஆரோக்கியமாக இருந்தது. அதன்படி, விற்பனைப் புள்ளியில் மின்சாரத்தின் சராசரி விலை 2020 இல் கிலோ வொட் ஒன்றுக்கு ரூபா 21.67 இலிருந்து ரூபா 18.63 ஆகக் குறைந்தது. கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதி தரவுகளின்படி, இலங்கை மின்சார சபை 2021 இல் ரூபா 21,450 மில்லியன் நட்டத்தைப் பதிவு செய்தது. 2020 இல் ரூபா 60,486 மில்லியனுடன் ஒப்பிடும்போது திரட்டிய நட்டங்கள் 2021 இன் இறுதியில் ரூபா 189,474 மில்லியனுக்கு அதிகரித்தது. செலவு-பிரதிபலிப்பு கட்டணக் கட்டமைப்பு பின்பற்றப்படாமையால் நட்டங்கள் பொதுவாக வங்கிக் கடன்கள் மூலம் நிதியளிக்கப்படுகின்றன. இருப்பினும், இலங்கை மின்சார சபை அதன் செயல்பாட்டு மூலதனத் தேவைக்காக தாபன முறியை வழங்குவது உட்பட மாற்று நிதி ஏற்பாடுகளை அணுகியதால் 2021ல் வங்கிகளில் கடன் வாங்குவது ரூபா 32,701 மில்லியனாகக் குறைந்தது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபை திட்டக் கடன்கள் உட்பட வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய மொத்தக் கடன்கள் 2021 இன் இறுதியில் ரூபா 363,196 மில்லியனாகவும் 2020 உடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட இதேயளவாகவும் காணப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 2020 இன் இறுதியில் ரூபா 128,883 மில்லியனில் இருந்து 2021 இறுதியில் ரூபா 140,825 மில்லியனாக அதிகரித்தது.

வரைபு 8.1 | மின்னுற்பத்திக் கலவை - 2020



மூலம் : இலங்கை மின்சார சபை

வரைபு 8.2 | மின்னுற்பத்திக் கலவை-2021



அட்டவணை 8.5: இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு புள்ளிவிபரமும் நிதி உற்பத்தி விளைவும்

(ரூபா. மில்லியன்)

	உண்மையான				தற்காலிகமான
	2017 (மீள்குறிப்பிடப்பட்ட)	2018 (மீள்குறிப்பிடப்பட்ட)	2019 (மீள்குறிப்பிடப்பட்ட)	2020 (மீள்குறிப்பிடப்பட்ட)	2021
தொழிற்பாட்டுக்க கூற்று					
வருமானம்	**226,450**	**238,946**	**254,944**	**240,388**	**261,409**
மின்சார விற்பனை	218,450	229,571	242,950	238,911	249,089
வேறு வருமானங்கள்	9,337	10,917	12,058	10,155	12,824
செலவினம்	**274,030**	**270,883**	**352,367**	**309,552**	**283,364**
நேரடி உற்பத்திச் செலவு	**184,601**	**164,873**	**218,469**	183,213	157,374
"ஜீ (பாரம்பரியமல்லாத புதுப்பிக்கத்தக்க சக்தி மூலவளங்கள் மூலம்)"	**89,254**	**84,497**	**118,665**	**110,213**	**85,690**
"இலங்கை மின்சார சபை - எரிபொருட் செலவு (எண்ணெய் மற்றும் நிலக்கரி)"	95,347	80,376	99,803	73,000	71,684
உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகச் செலவு	45,841	56,902	73,121	67,701	64,368
நிறுவனச் செலவுகள்	**5,112**	**5,683**	**6,969**	**7,009**	**8,047**
கடன்கள் மற்றும் தாமதமடைந்த கொடுப்பனவுகளுக்கான வட்டி	**8,415**	**13,036**	**22,526**	**19,522**	**20,431**
பெறுமானத்தேய்வு	30,061	30,388	31,283	32,107	33,144
தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்)	**-46,242**	**-30,395**	**-97,359**	**-60,486**	**-21,450**
திரவத் தன்மை நிலைமை					
வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்	4,706	68,388	93,796	49,681	32,701
வங்கிகளுக்கான கொடுப்பனவுகள்	11,806	19,695	62,130	20,568	26,938
நிலுவையாகவுள்ள வங்கிகளுக்கான படுகடன்கள்	224,534	288,606	333,245	363,219	363,196
சீபீசீ மற்றும் ஐபீபீ இடமிருந்து கொள்வனவுகள்	**149,212**	**124,104**	**173,423**	**137,762**	**107,503**
சீபீச மற்றும் ஐபீபீ PP இற்கான கொடுப்பனவுகள்	108,355	128,760	115,181	147,122	96,867
சீபீச மற்றும் ஐபீபீ இற்கான நிலுவையாகவுள்ள கடன்கள்	78,839	79,365	141,904	128,883	140,825

மூலங்கள்: இலங்கை மின்சார சபை


உற்பத்தி கலவையை முறையை மிகவும் நிலைபேறானதாக மாற்றுவதற்குச் சரியான நேரத்தில் தலையீடு செய்வதில் தாமதம் ஏற்பட்டமையால் தற்போதுள்ள மின்சாரம் தடை நிலைமை தோன்றியது. மேலும், அந்நியச் செலாவணி பற்றாக்குறையின் காரணமாக உருவான விநியோகச் சங்கிலித் தடைகள், தேசிய கட்டத்திற்கான தற்போதைய வெப்பக் கொள்திறனை உகந்த அளவில் பயன்படுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சூழலில், நாட்டில் வாழ்வாதாரம் மற்றும் முதலீட்டுச் சூழலைப் பேணுவதற்கு இன்றியமையாததாக இருக்கும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதிசெய்ய அதிக உறுதியானதும் பொறுப்புவாய்ந்ததுமான மின் உற்பத்தித் திட்டம் அவசியம்.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி இலக்குகளை நோக்கி நாடு நகரும் போது, இலங்கை மின்சார சபையானது இத்துறையில் குறிப்பாக தனியார் துறையிலிருந்து அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்காகப் பொருத்தமான கொள்கை சூழலை உருவாக்குவது, புத்தாக்க நிதி மாதிரிகளை உருவாக்குவது மற்றும் புதிய நடைமுறைகளை ஆரம்பிப்பது அவசியமாகும். எனவே, அரசாங்கக் கொள்கைக்கு இணங்க, இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபையுடன் இணைந்து இலங்கை மின்சார சபையானது, அடையாளம் காணப்பட்ட இடங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காகத் தனியார் துறையிலிருந்து ஆர்வ வெளிப்படுத்துகையைக் கோரியுள்ளது.

8.2.2 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாட்டின் மொத்த பெற்றோலிய உற்பத்தித் தேவையில் சுமார் 86 சதவீதத்தை இறக்குமதி செய்து விநியோகிப்பதன் மூலம் எரிசக்தித் துறையில் முக்கிய பங்கு வகிக்கிறது.


வரைபு 8.3 | பிரென்ட் மசகெண்ணெய் விலை 2017 - 2021 (ஐ.அ.டொ)



மூலம் : டிரேடிங் எகொனொமிக்ஸ்

தொற்றுநோய் காரணமாக 2020, மார்ச் முதல் ஜூலை வரையிலான வரலாற்று ரீதியான சந்தை சரிவைத் தவிர, கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்வதேச ப்ரெண்ட் கச்சா எண்ணெய் விலையானது பீப்பாய் ஒன்றுக்கு (bbl) ஐ.அ.டொ. 40 முதல் பீப்பாய் ஒன்றுக்கு (bbl) ஐ.அ.டொ. 84 வரை தளம்பலுற்றதாகவே இருந்தது. இருப்பினும், தற்போது, ரஷ்யா-உக்ரைன் மோதலால் எழும் புவி-அரசியல் நிச்சயமற்ற தன்மை காரணமாக சர்வதேச எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு (bbl) ஐ.அ.டொ. 115ஆக உயர்ந்துள்ளது.

வரைபு 8.4 | சராசரி மசகு எண்ணெய் விலைகள் - 2021



மூலம் : இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டு பெற்றோலிய விலைகளின் படிப்படியான அதிகரிப்பு 2021 இல் பெற்றோல் லீற்றருக்கு 29 சதவிகிதம், டீசல் லீற்றருக்கு 16 சதவிகிதம் மற்றும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 24 சதவிகிதம் என்றவாறு மட்டுப்படுத்தப்பட்டது. அதன்படி, விற்பனைச் செலவு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 29 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 588,822 மில்லியனாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருவாய் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 12 சதவீதமாக மிதமாக அதிகரித்து 2021 இல் ரூபா 570,268 மில்லியனாகவும் காணப்பட்டது. இது கணிசமான நட்டங்களைப் பதிவு செய்யும் அதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மேம்படுத்தப்பட்ட வங்கி வெளிப்பாடு இரண்டு அரச வங்கிகளுக்கான அழுத்தத்தைச் செலுத்துவதாக இருந்தது.

மறைமுகமான பணப்புழக்க அபாயத்தைத் தணிக்க, செலவு-பிரதிபலிப்பு எரிபொருள் விலையிடல் பொறிமுறையைப் பின்பற்றல் வேண்டும். இதன் கீழ் சில்லறை விலைகள் அவ்வப்போது உலக சந்தை விலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படுவதுடன் குறைந்த பட்ச செலவு-மீட்பு மட்டத்தில் நிதி நம்பகத்தன்மையை மீண்டும் பெறுவதற்கான முக்கிய தெரிவாக உள்ளது. இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகைக் கணக்குகளில் அதிக படுகடன் மற்றும் வளர்ந்து வரும் நாணயப் பொருத்தமின்மை ஆகியவற்றை நிவர்த்தி செய்யவும் உதவும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் சுத்திகரிப்பு நிலையத்தை 2021 இல் 1,238,000 மெ.தொ. கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதன் மூலம் தொழிற்படுத்தியது. மேலும் 2021 இல் 2020 இனை விட 57 சதவீத விலை அதிகரிப்பாகிய ஐ.அ.டொ. 2,410 மில்லியன் செலவில் முக்கியமாக டீசல் மற்றும் பெற்றோல் உட்பட 3,057,000 மெ.தொ. சுத்திகரிக்கப்பட்ட தயாரிப்புகளை இறக்குமதி செய்தது.

அட்டவணை 8.6 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

	உண்மையானது				தற்காலிகமான
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**458,202**	**605,952**	**660,646**	**530,877**	**598,836**
ஒக்டேன் 92	103,026	172,088	195,216	178,196	208,402
ஒக்டேன் 95	17,068	28,669	26,580	21,085	22,744
டீசல்	179,906	220,922	238,967	188,937	212,769
சுப்பர் டீசல்	8,205	11,589	10,877	8,949	10,497
எச்.எப் 800 சிசி	39,888	30,456	13,438	-	-
எச்எப்1500 சி.சி	5,130	8,774	16,912	18,525	16,803
எச்.எப்3500 சிசி.சுபர் எண்ணெய்	–	–	33,652	49,444	17,050
எல்.எஸ்.எச்.எப்	20,055	19,295	10,799	1,852	12,387
நப்தா	14,947	14,270	16,803	11,260	15,216
மண்ணெண்ணெய்	9,054	15,351	17,598	15,162	17,574
ஜெட் ஏ 1	42,828	64,090	58,857	19,401	30,721
ஏனைய உற்பத்திகள்	6,357	6,746	6,892	6,061	15,184
வேறு வருமானங்கள்	11,738	13,702	14,055	12,007	19,490
மொத்தச் செலவினம்	**454,873**	**712,095**	**672,482**	**528,507**	**681,044**
விற்பனைச் செலவுகள்	418,962	579,617	626,599	454,880	588,823
விற்பனை மற்றும் விநியோகம்	15,498	14,914	17,981	15,782	17,306
நிர்வாகம்	4,036	5,296	4,886	3,683	4,290
நிதிச் செலவு	10,531	12,065	14,699	20,911	25,643

	உண்மையானது				தற்காலிகமான
	2017	**2018**	**2019**	**2020**	**2021**
பெறுமானத்தேய்வு	924	726	984	2,670	2,684
ஏனைய செலவுகள் (உ.தீ.தே.க.வ)	–	16,760	15,732	8,740	9,079
நாணய மாற்றுவீத வேறுபாடு	4,922	82,717	-8,398	21,841	33,220
வரிக்கு முன்னரான இலபம்/ (நட்டம்)	**3,329**	**-106,143**	**-11,836**	**2,371**	**-82,208**
வங்கி நிலுவைப் படுகடன்கள்	338,241	562,457	566,225	529,187	693,040


மூலம் : இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

உலக எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு காரணமாக 2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா 41,714 மில்லியன் தொழிற்பாட்டு நட்டத்தைப் பதிவு செய்தது. 2020 இல் தொழிற்பாட்டு இலாபம் ரூபா 33,935 மில்லியனாகும். மேலும், அந்நிய செலாவணி நட்டம் ரூபா 33,220 மில்லியனுடன் தொழிற்பாட்டு நட்டம் ரூபா 82,208 மில்லியனுக்கு, தேறிய நட்டமாக விரிவடைந்தது டன் வங்கி அமைப்பில் தேவையற்ற அழுத்தத்தை உருவாக்கும் வகையில் நிதிச் செலவு ரூபா 25,643 மில்லியனாகவும் விரிவடைந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணப்புழக்க நிலையை மேலும் மோசமாக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை மின்சார சபை, ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 157,861 மில்லியனினைக் கொண்டிருந்தது. இரண்டு அரச வங்கிகளிடமிருந்தும் கடன் வசதிகளைப் பெறுவதற்குப் பிணையமாக ஐ.அ.டொ. 3,300 மில்லியன்களுக்கு திறைசேரி உத்தரவாதத்தை வழங்குவதன் மூலம் அரசாங்கம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.


தொற்றுநோயிலிருந்து மெதுவான மீட்சியின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் 5,029 மில்லியன் லீற்றர் உடன் ஒப்பிடும்போது 2021 இல் பெற்றோலியப் பொருட்களின் தேவை 2 சதவீதத்தினால் 5,129 மில்லியன் லீற்றர்களுக்கு அதிகரித்திருந்தது.

வரைபு 8.5 : உற்பத்திப் பொருட்களின் வகுதி



மூலம் : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

வரைபு 8.6 | துறை ரீதியாக இலாபமீட்டும் தன்மை



	போக்குவரத்து	மின்னுற்பத்தி	விமான சேவை	கைத்தொழில்	உள்நாட்டு	விவசாய	வெளிநாட்டு
இலாபம்/(நட்டம்) 2020	-3533	9008	-109	2640	-2113	171	-4511
இலாபம்/(நட்டம்) 2021	-58490	-16685	1994	54	-8772	67	-1497

மூலம் : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

பெற்றோலிய விற்பனையில் துறை வாரியான இலாப/ நட்ட பகுப்பாய்வின்படி, போக்குவரத்துத் துறையில் உருவாக்கப்பட்ட நட்டம், 2020 ஆம் ஆண்டில் ரூபா 3,533 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 58,490 மில்லியன் கணிசமாக அதிகரித்திருந்தது. அதே நேரத்தில் மின் உற்பத்தி துறையின் நட்டம் ரூபா 16,685 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. மேலும், உள்நாட்டு துறை நட்டம் ரூபா 8,772 மில்லியனாக இருந்த அதேவேளை அனைத்து செயல்பாட்டு மற்றும் நிதி அதிர்ச்சிகளையும் உள்வாங்கிக் கொண்டு, 2021 இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை மோசமான நிதி நிலையை மேலும் சுட்டிக்காட்டியது. அதுமட்டுமன்றி ஆண்டு நட்டம் ரூபா 82,208 மில்லியனாகவும் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வரலாற்றுத் திரட்டிய நட்டம் ரூபா 419,009 மில்லியனாகவும் இருந்தது.

இத்தகைய சூழலில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயல்பாட்டுச் சுழற்சியை சீராக இயக்க, மிகவும் புத்தாக்கமுள்ள நிதியளிப்பு உத்தியைப் பயன்படுத்தி, தேவையான நிதியை செலுத்துவதன் மூலம் அதன் ஐந்தொகைக் கணக்கு மீள்கட்டமைக்கப்பட வேண்டும். அந்நிய செலாவணி பரிவர்த்தனைகளில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதாலும், செயல்பாட்டு மூலதனக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டிருப்பதாலும், அந்நிய செலாவணி சந்தை மற்றும் பணச் சந்தையைக் கையாள்வதற்கு ஒரு திறமையான திறைசேரி முகாமைப் பொறிமுறையைக் கொண்டிருப்பது முக்கியம். மேலும்,

சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் அதன் செயல்திறனை அதிகரிக்கவும், புதிய நிதி மாதிரிகளுடன் சேமிப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு பல்முனை உத்தியைக் கடைப்பிடித்தலும் வேண்டும்.

ஆரம்ப கட்டமாக, 2021 ஆம் ஆண்டில், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் பிஎல்சி (எல்ஐஓசி) கட்டுப்பாட்டில் உள்ள திருகோணமலை சீனக்குடாவில் புதிதாக நிறுவப்பட்ட கூட்டு முயற்சியுடன் 24 எண்ணெய் தாங்கிகளை விடுவிப்பதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சேமிப்பு வசதிகளை விரிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதுமட்டுமின்றி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 51 சதவீத பங்குகள் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் பிஎல்சியின் 49 சதவீத பங்கு உரிமையுடன் இணைக்கப்பட்ட, புதிதாக நிறுவப்பட்ட கூட்டு நிறுவனத்துடன் 61 எண்ணெய் தொட்டிகளுக்கான குத்தகை ஒப்பந்தத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது.

8.3 அரச வங்கிகள்

2021, பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சவாலான ஆண்டாக இருந்த போதிலும், இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்திய முன்னுரிமைத் துறை கடன் வழங்கல் இலக்குகளை அறிமுகப்படுத்துதல், உரிமம் பெற்ற வங்கிகளின் தெரிவு கொடுப்பனவுகள் மீதான நடவடிக்கைகள், அந்நியச் செலாவணி தொடர்பான ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான டீயளநட III இன் கீழ் மூலதனத் தேவைகளைத் திருத்துதல் போன்ற பல்வேறு ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளின் காரணமாக, வங்கித் துறை நெகிழ்ச்சியுடன் இருந்தது. இந்தச் சூழலில், அரசுக்குச் சொந்தமான வங்கித் துறையின் மொத்த இலாபம் 2020 இல் ரூபா 63 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 இல் ரூபா 105 பில்லியனுக்கு, 67 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்திருந்தது. இதற்கு, தேறியவட்டி வருமானத்தின் அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது. 2021 ஆம் ஆண்டில் நாட்டின் வங்கித் துறை ஈட்டிய இலாபத்தில் 40 சதவீதத்தை அதாவது ரூபா 258.7 பில்லியனினை அரச வங்கிகள் பங்களித்துள்ளன. வங்கித் துறையின் மொத்த சொத்துத் தளத்தில் (உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளை உள்ளடக்கியது) கிட்டத்தட்ட 50 சதவீதத்தைக் கொண்ட அரச வங்கிகள் 2021 இல் நாட்டின் வங்கித் துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

2021 ஆம் ஆண்டில் அரசுக்கு சொந்தமான வங்கியின் மொத்த கிளை வலையமைப்பு 1,925 ஆகக் காணப்பட்ட அதேவேளை கிட்டத்தட்ட அனைத்து வங்கிகளும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்ய டிஜிட்டல் தளங்களை உருவாக்கியுள்ளன. இதற்கிடையில், 2021-2023 வரையிலான காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத சலுகைகளை மீளத்திருத்துவது தொடர்பாக அரச வங்கிகள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையில் கூட்டு உடன்படிக்கைகள் இவ் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன. இந்த உடன்படிக்கைக் கைச்சாத்திடலுடன், அனைத்து நிரந்தர ஊழியர்களின் சம்பளம் மற்றும் சம்பளம் அல்லாத பயன்கள் வெவ்வேறு விகிதங்களில் அந்தந்த நிறுவனங்களின் மொத்த பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டன.

அட்டவணை 8.7 | 2021 ஆம் ஆண்டில் தனியார் துறை வங்கிகளில் பிரதான அரச வங்கிகள் மற்றும் அவற்றின் துணை வங்கிகளால் ஈட்டப்பட்ட தலைக்குரிய வருமான முதலீடு பற்றிய ஒப்பீடு

(ரூபா. மில்லியன்)

வங்கி	இலங்கை வங்கி	மக்கள் வங்கி	தேசிய சேமிப்பு வங்கி	ஹற்றன் நெசனல் வங்கி	வர்த்தக வங்கி	சம்பத் வங்கி
தேறிய வருமானம் (ரூபா.மில்லியன்)	290,362	207,250	134,939	115,047	160,886	104,570
மொத்த சொத்துக்கள் (ரூபா.மில்லியன்)	3,803,284	2,647,641	1,579,159	1,538,336	1,949,213	1,199,913
ஆளணிசார் செலவுகள் (ரூபா. முில்லியன்)	24,982	22,772	12,867	10,758	16,321	9,543
தெழிலாளர் எண்ணிக்கை	8,377	7,568	4,616	5,042	5,072	4,013
தலைக்குரிய செலவினம் (ரூபா. மில்லியன்)	2.99	3.00	2.78	2.13	3.21	2.37

மூலம் : இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன் ந்னல் வங்கி, கொமர்ல் வங்கி, சம்பத் வங்கி

(அ) தற்காலிகமானது

8.3.1 இலங்கை வங்கி


இலங்கை வங்கி ரூபா 2,867 பில்லியன் வைப்புத்தளத்துடன் மிகப்பெரிய சொத்துக்களைக் கொண்ட வங்கியாகத் தொடர்ந்து திகழ்ந்தது. மொத்த சொத்துக்கள் மற்றும் வைப்புக்கள் ஆகிய இரண்டும் முறையே 27.4 சதவீதமாகவும் 15.8 சதவீதமாகவும் அதிகரித்தது. இது தொழில்துறை சராசரிகளாகிய முறையே 15.4 சதவீதம் மற்றும் 13.7 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது.

மேலும், இலங்கை வங்கியின் இலாபம் 2020 இல் ரூபா 23.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 இல் 83.3 சதவீதத்தினால் ரூபா 43.1 பில்லியன் வரை அதிகரித்தது. தேறிய வட்டி வருவாயில் 48.7 சதவீத கணிசமான அதிகரிப்பு இலாபத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. நாட்டின் முன்னணி வணிக வங்கியாகத்

திகழும் இலங்கை வங்கியானது 2021 ஆம் ஆண்டில் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தாபனங்களுக்கு உதவியாகக, அதன் தாபன மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதன் மொத்தக் கடன் தொகுதியில் ரூபா 425.3 பில்லியன் சேர்த்து குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதை மேம்படுத்தியுள்ளது. அதன்படி, இலங்கை வங்கியின் மொத்த கடன் மற்றும் முற்பணத் தொகுதி 2020 இல் ரூபா 1,988.4 பில்லியனில் இருந்து 21.3 சதவீதம் அதிகரித்து 2021 இறுதியில் ரூபா 2,413.7 பில்லியனாக உள்ளது, இது தொழில்துறை சராசரி வளர்ச்சியான 15.3 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது. மேலும், 2021 இல் இலங்கை வங்கியானது தொழில்துறை சராசரியான 13.7 சதவீதத்திற்கு எதிராக 15.8 சதவீத விரிவாக்கத்துடன் ரூபா 2,866.8 பில்லியன் பெறுமதியான வைப்புத் தளத்தை எட்டியது.

வங்கித் துறையில் கடன் அறவீடுகளில் அழுத்தம் இருந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியானது கடன்தடை நீடிப்பு காரணமாக தொழில்துறை சராசரியான 4.5 சதவீதத்திலும் அதன் செயல்படாத கடன் விகிதத்தை 4.5 சதவீதமாகவும் பராமரித்தது. இலங்கை வங்கி வலையமைப்பில் நாடு முழுவதும் 646 கிளைகள் (வரையறுக்கப்பட்ட சேவை கிளைகள் உட்பட) மற்றும் 1,400 தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரங்கள் பண மறுசுழற்சி இயந்திரங்கள் மற்றும் பண வைப்பு இயந்திரங்கள் ஆகியவை உள்ளன. இதற்கிடையில், வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய டிஜிட்டல் மற்றும் மெய்நிகர் சேவைத் தளங்களை விரிவுபடுத்துவதில் இலங்கை வங்கி அதிக கவனம் செலுத்துகிறது.

வரைபு 8.7 | இலங்கை வங்கியின் கடன் வகுதி 2021



மூலம் : இலங்கை வங்கி

அட்டவணை 8.8 | இலங்கை வங்கியின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

	உண்மையான			தற்காலிக	
	2017	**2018**	**2019**	**2020**	**2021**
மொத்த வருமானம்	**189,211**	**221,021**	**239,116**	**247,164**	**290,362**
முதலீட்டு வருமானம்	171,344	195,394	220,477	226,311	260,513
முதலீட்டு செலவீனம்	112,988	129,836	145,331	151,535	149,261
தேறிய முதலீட்டு வருமானம்	58,356	65,558	75,146	74,776	111,252
வேறு வருமானம்	17,868	25,627	18,640	20,853	29,848
தேறிய தொழிற்பாட்டுச் செலவுகள்	45,881	57,769	64,100	72,077	97,911
ஆளணிசார் செலவுகள்	16,996	17,351	18,365	18,190	24,982
வேறு செலவுகள்	28,885	40,418	45,736	53,887	72,929
வரிக்கு முன்னரான இலாபம்	30,343	33,416	29,685	23,552	43,190
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
முதலீடுகள்	582,451	626,078	650,433	785,832	1,125,018
வைப்புக்கள்	1,546,832	1,770,975	2,005,212	2,474,775	2,866,894
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	1,163,161	1,429,107	1,549,805	1,988,409	2,413,762
செயற்பாடற்ற முற்பணங்கள்	34,261	53,754	77,133	98,564	112,900
ஆர.ஒ.ஏ (%)	1.7	1.6	1.3	0.9	1.27
ஆர்ஒ.இ (%)	20.9	17.3	16.8	11.9	21.03
செயற்பாடில்லா கடன் விகிதம் (%)	2.9	3.6	4.8	4.8	4.5


மூலங்கள் : இலங்கை வங்கி, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.3.2 மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துத் தளம், தொழில்துறை வளர்ச்சி விகிதமாகிய 15.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 18.7 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 2,648 பில்லியனினைக் கொண்டிருந்தது.. மேலும், வங்கியின் வைப்புத் தளம் 12.9 சதவீதம் அதிகரித்து ரூபா 2,072 பில்லியனாகவும், கடனளிப்பு தொகுதி 12.2 சதவீததினால் அதிகரித்து, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 1,836 பில்லியனாகவும் வளர்ச்சியடைந்தது. 2021 ஆம் ஆண்டில் வைப்புத் தளம் மற்றும் கடன் வகுதி இரண்டிற்கும் தொழில்துறை வளர்ச்சி சராசரி முறையே 13.7 மற்றும் 15.3 சதவீதமாக இருந்தது.

வட்டி வருமானத்தில் 9.8 சதவீத அதிகரிப்பு மற்றும் வட்டி செலவில் 3.3 சதவீத சரிவு காரணமாக இலங்கை வங்கியின் தேறிய வட்டி வருமானம் 35.3 சதவீதத்தால் அதிகரித்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 82 பில்லியனாக இருந்தது. கடன் வகுதியின் அதிகரிப்பு மற்றும் வருடத்தில் நிலவிய குறைந்த வட்டி விகிதங்களின் தாக்கம் தேறிய வட்டி வருமானத்தில் இந்த அதிகரிப்புக்கு பெரிதும் பங்களித்தது. 2020 இல் ரூபா 21 பில்லியனுடன் ஒப்பிடும் போது வங்கி அதன் இலாபத்தை, தேறிய வட்டி வருமானத்தில் கணிசமான அதிகரிப்பைப் பயன்படுத்தி, 2021 இல் ரூபா 30 பில்லியனாக அதிகரிக்கச் செய்தது.

வரைபு 8.8 : மக்கள் வங்கியின் கடன் வகுதி - 2021



மூலம் : மக்கள் வங்கி

2021 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை வங்கியின் அடுக்கு -1 மூலதனத்திற்கான மூலதனப் போதுமான அளவு விகிதம் 12.6 சதவீதமாகவும், குறைந்தபட்சத் தேவையான 9 சதவீதத்திற்கும் அதிகமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிளை வலையமைப்பு நாடு முழுவதும் 742 கிளைகள் (சேவை மையங்கள் உட்பட) மற்றும் 797 தானியங்கி இயந்திரங்களைக் கொண்டுள்ளது.

அட்டவணை 8.9 | மக்கள் வங்கியின் நிதி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**160,835**	**181,284**	**199,729**	**190,982**	**207,250**
வட்டி வருமானம்	149,184	166,441	186,714	179,717	197,330
வட்டி செலவீனம்	98,719	111,035	125,508	118,784	114,869
தேறிய வட்டி வருமானம்	**50,466**	**55,406**	**61,207**	**60,934**	**82,461**
வேறு வருமானம்	11,390	14,479	12,588	10,781	9,322
மொத்த செலவுகள்	**35,941**	**45,479**	**54,129**	**50,487**	**57,225**
ஆளணிசார் செலவுகள்	15,227	19,905	19,494	19,722	22,772
வேறு செலவுகள்	20,714	25,574	34,635	30,765	34,453
வரிக்கு முன்னரான இலாபம்	**25,913**	**24,406**	**19,666**	**21,227**	**30,387**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
வைப்புக்கள்	1,244,003	1,422,961	1,491,386	1,835,099	2,071,533
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	1,074,248	1,334,420	1,386,481	1,723,466	1,835,697
செயற்பாடற்ற முற்பணங்கள்	19,573	31,472	43,569	53,745	685.8
ஆர.ஒ.ஏ (%)	1.9	1.5	1.1	1	1.2
ஆர்ஒ.இ (%)	26.6	20.3	13.9	14.4	19.9
செயற்பாடில்லா கடன் விகிதம் (%)	1.9	2.5	3.3	3.2	3.2

மூலங்கள் : இலங்கை வங்கி, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்


8.3.3 தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியானது, நாடு முழுவதும் 261 கிளைகள் மற்றும் 4,064 தபால் அலுவலகங்கள்/ துணை அஞ்சல் அலுவலகங்களின் வலுவான கிளை வலையமைப்புடன் செயல்படுகிறது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில், தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துத் தளம் முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 15.7 சதவீத அதிகரிப்புடன் ரூபா 1,579 பில்லியனை எட்டியுள்ளது. மேலும், வைப்புத் தளம் மற்றும் கடன் வகுதி 2020 ஐ விட முறையே ரூபா 1,428 பில்லியன் மற்றும் ரூபா 539 பில்லியனுக்கு, முறையே 15.4 சதவீதம் மற்றும் 4.3 சதவீதத்தினாலான வீழ்ச்சிகளை 2021 இல் பதிவு செய்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் தேறிய வட்டி வருவாயில் ரூபா 34.8 பில்லியனில் இருந்து 56.8 சதவிகித அதிகரிப்பு காரணமாக 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தேசிய சேமிப்பு வங்கியானது வரிக்கு முந்தைய இலாபமாக 82.6 சதவீத அதிகரிப்புடன் 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முந்தைய இலாபமாக 28.5 பில்லியனினை பதிவுசெய்தது. வேறு விதமாகக் கூறுவதாயின் தேறிய வட்டி வருமானம் 2020 இல் 2.79 சதவிகிதத்திலிருந்து 2.97 சதவிகிதமாக அதிகரித்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முந்தைய வருமானம் ரூபா 19.8 பில்லியனினால் அதிகரித்துள்ளது.

வங்கியின் கடன் வகுதியில் தனிநபர்/அடகு வைத்தல் மற்றும் பிற வகை 47.8 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளன அதே சமயம் கட்டுமானம்/வீடமைப்பு மற்றும் விவசாயம் ஆகிய துறைகள் முறையே 30.09 சதவீத மற்றும் 5.87 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளன.

வரைப 8.9 | தேசிய சேமிப்பு வங்கியின் கடன் வகுதி 2021



மூலம் : தெசிய சேமிப்பு வங்கி

அட்டவணை 8.10 | தேசிய சேமிப்பு வங்கியின் நிதி உற்பத்தி விளைவு

ரூபா. மில்லியன்

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**107,996**	**111,902**	**121,929**	**127,547**	**134,939**
வட்டி வருமானம்	103,579	110,507	118,730	122,512	131,438
வட்டிச் செலவுகள்	78,445	85,622	89,898	87,622	76,809
தேறிய வட்டி வருமானம்	**25,134**	**24,885**	**28,832**	**34,890**	**54,630**
வேறு வருமானங்கள்	4,308	1,254	3,067	4,881	3,293
மொத்த செலவுகள்	**15,307**	**18,197**	**21,438**	**24,126**	**29,368**
ஆளணிசார் செலவுகள்	6,887	9,263	10,158	9,967	12,867
ஏனைய செலவினங்கள்	8,420	8,934	11,280	14,159	16,501
வரிக்கு முன்னரான இலாபம்	**14,135**	**7,941**	**10,462**	**15,645**	**28,555**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கிளைகளின் எண்ணிக்கை	253	255	256	259	261
தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை/உப தபால் அலுவலகங்கள்	4,062	4,062	4,063	4,063	4,064
முதலீடுகள்	593,333	565,841	647,760	798,811	980,672
வைப்புக்கள்	737,213	839,574	1,016,574	1,237,124	1,428,467
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	375,704	422,895	454,395	516,795	538,942
செயற்பாடற்ற முற்பணங்கள்	4,996	6,136	7,224	14,532	16,282
ஆர.ஒ.ஏ (%)	1.47	0.78	0.95	1.24	1.93
ஆர்ஒ.இ (%)	27.24	10.95	14.34	20.67	33.92
செயற்பாடில்லாக் கடன் விகிதம் (%)	1.34	1.44	1.57	2.79	2.97

மூலம்: தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.3.4 வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி

வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் வசதிகளை வழங்குவதில் முதன்மையாக ஈடுபட்டுள்ள வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான ஒரே வங்கியாகும்.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் சொத்துத் தளம் 2020 இல் ரூபா 61 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 3 சதவீதம் அதிகரித்து ரூபா 63 பில்லியனாகவும் வைப்புத் தளம் 4 சதவீதம் அதிகரித்து 2021 இன் இறுதியில் ரூபா 49,813 மில்லியனாகவும் காணப்பட்டது..

2021 ஆம் ஆண்டில் வங்கியின் கடன் மற்றும் முற்பணங்கள் சற்று அதிகரித்தன. 2021 இல் வங்கியின் NPL விகிதம் 32.44 சதவீதமாகவும் தொழில்துறை சராசரியான 6.5 சதவீதத்தை விட அதிகமாகவும் இருந்தது.

2021 ஆம் ஆண்டில், முக்கியமாக தனிநபர் செலவுகள் 13 சதவிகிதம் அதிகரித்தமையால் வரிக்கு முந்தைய இலாபம் 2020 ஆம் ஆண்டை விட 8 சதவிகிதம் வீழ்ச்சியடைந்தது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 39 கிளைகளில் 614 பணியாளர்களைக் கொண்டுள்ளது. வங்கியின் ஒரு பங்கின் தேறிய சொத்து பெறுமதி 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 100 இனை அடைந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பங்கின் விலை ரூபா 30.5 ஆகவும் நிலவியது.

அட்டவணை 8.11 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் நிதி உற்பத்தி விளைவு

ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**6,978**	**7,120**	**8,090**	**7,856**	**6,976**
முதலீட்டு வருமானம்	6,614	6,679	7,683	7,456	6,584
முதலீட்டு செலவீனம்	4,742	4,441	4,783	4,475	3,554
தேறிய முதலீட்டு வருமானம்	**1,872**	**2,238**	**2,900**	**2,981**	**3,030**
வேறு வருமானம்	365	441	407	400	392
தேறிய தொழிற்பாட்டுச் செலவுகள்	**1,447**	**1,762**	**2,062**	**2,000**	**2,155**
ஆளணிசார் செலவுகள்	941	1,114	1,164	1,174	1,326
வேறு செலவுகள்	506	648	898	826	829
வரிக்கு முன்னரான இலாபம்	**789**	**919**	**1,244**	**1,381**	**1,267**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
முதலீடுகள்	12,859	9,396	12,440	17,406	18,709
வைப்புக்கள்	36,655	37,016	42,504	47,947	49,813
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	34,967	37,949	41,216	41,192	41,814
செயற்பாடற்ற முற்பணங்கள்	5,708	8,899	11,623	13,134	13,190
ஆர்.ஒ.ஏ (%)	0.87	1.14	0.9	2.36	1.95
ஆர்ஒ.இ (%)	10.29	12.56	9.63	12.99	9.78
செயற்பாடில்லாக் கடன் விகிதம் (%)	16.5	21.31	25.26	33.03	32.44

மூலம்: தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.3.5 அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

உரிமம் பெற்ற விசேட வங்கியான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது நாடு பூராகவும் அமையப் பெற்றுள்ள 25 கிளைகள் மூலம் தொடர்ந்தும் வீடமைப்பு நிதிச் சந்தையில் ஈடுபட்டு வருகின்றது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் மொத்தக் கடன் பட்டியலில் கிட்டத்தட்ட 94 சதவீதமானவை விடமைப்புக் கடன்களுக்கு வகைகூறியது.

வங்கியின் கடன் பட்டியலானது 2020 இல் பதிவாக்கிய ரூபா 36,857 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 38,302 மில்லியன் வரை 3.9 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. வங்கியின் அடையாளப்படுத்தப்படாத ஐயக் கடன் விகிதமானது 2020 ஆம் ஆண்டில் பதிவாக்கிய 22.94 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 19.84 சதவீதமாக அதிகரித்ததுடன் அது தொழிற்துறை சராசரியினை விடவும் அதிகரித்துக் காணப்பட்டது. வங்கியின் வைப்புத் தளமும் 2020 இற்கு எதிராக 0.8 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவாக்கி 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 45,738 மில்லியனுக்கு அதிகரித்துக் காணப்பட்டது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம் 2021 இல் ரூபா 845 மில்லியன் ஆகவும் 2020 உடன் ஒப்பிடும்போது 7 சதவீத அதிகரிப்பாகவும் காணப்பட்டது.

அட்டவணை 8.12 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் நிதி உற்பத்தி விளைவு

ரூபா. மில்லியன்

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**4,916**	**5,659**	**6,125**	**6,260**	**5419**
வட்டி வருமானம்	4,745	5,525	5,982	6,077	5245
வட்டி செலவீனம்	3,102	3,578	3,951	3,960	2951
தேறிய முதலீட்டு வருமானம்	**1,643**	**1,947**	**2,031**	**2,117**	**2294**
வேறு வருமானம்	171	134	143	183	174
தேறிய தொழிற்பாட்டுச் செலவுகள்	**1,248**	**1,349**	**1,358**	**1,510**	**1623**
ஆளணிசார் செலவுகள்	725	824	882	873	1073
வேறு செலவுகள்	523	525	476	637	550
வரிக்கு முன்னரான இலாபம்	**566**	**732**	**816**	**790**	**845**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
முதலீடுகள்	8,129	7,172	9,729	14,248	13,792
வைப்புக்கள்	33,620	34,272	38,872	45,388	45,738
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	32,987	34,225	35,893	36,857	38,302
செயற்பாடற்ற முற்பணங்கள்	8,591	8,602	7,544	8,412	7,595
ஆர.ஒ.ஏ (%)	0.98	0.99	1.1	1.15	1.14
ஆர்ஒ.இ (%)	3.62	4.9	4.7	6.09	6.39
செயற்பாடில்லா கடன் விகிதம் (%)	22.93	21.76	21.21	22.94	19.84

மூலங்கள்: அரச ஈட்டு, முதலீட்டு வங்கி மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.3.6 பிரதேச அபிவிருத்தி வங்கி

கிராமப்புற சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு அணுகக்கூடியதும் மலிவானதுமான கடன் வசதிகளை வழங்குவதன் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்குடன் 6 பிரதேச அபிவிருத்தி வங்கிகளை ஒன்றிணைத்து 2010, மே மாதம் பிரதேச அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டது. இவ் வங்கி, 6 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் பொருட்டு 272 கிளை வலையமைப்புடன் செயல்படுகிறது.

2021 ஆம் ஆண்டின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 22 பில்லியனாக மேம்படுத்தப்பட்டதுடன், இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 13 சதவீத வளர்ச்சியாகும். வங்கியின் வைப்புத் தளம் 2020 ஐ விட 2021 இல் கிட்டத்தட்ட ரூபா 15 பில்லியனால் வளர்ந்தது. மேலும், வங்கியின் டூ விகிதம் 2020 ஆம் ஆண்டில் 10 சதவீதத்திலிருந்து 2021 இல் 8.7 சதவீதமாகக் குறைந்துள்ளது.

வட்டிச் செலவினத்தின் குறைப்பு காரணமாக, வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 இல் 29 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 8.13 | பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**22,016**	**26,070**	**27,508**	**24,354**	**24,273**
வட்டி வருமானம்	20,908	24,865	26,357	23,182	23,327
வட்டி செலவீனம்	11,233	12,959	13,904	12,294	10,046
தேறிய வட்டி முதலீட்டு வருமானம்	**9,675**	**11,906**	**12,453**	**10,888**	**13,281**
வேறு வருமானம்	926	946	872	900	444
மெத்த செலவுகள்	**7,294**	**9,246**	**10,366**	**9,727**	**11,074**
ஆளணிசார் செலவுகள்	4,980	5,878	5,932	5,983	7,229
வேறு செலவுகள்	2,314	3,368	4,434	3,744	3,845
வரிக்கு முன்னரான இலாபம்	**3,307**	**3,607**	**2,960**	**2,061**	**2,651**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
முதலீடுகள்	37,325	38,709	55,465	55,400	61,345
வைப்புக்கள்	136,582	141,560	149,600	172,883	187,762
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	130,325	137,770	144,694	167,099	189,402
செயற்பாடற்ற முற்பணங்கள்	4,191	7,263	13,711	16,658	16,321
ஆர.ஒ.ஏ (%)	2.2	2.08	1.6	0.21	0.27
ஆர்ஒ.இ (%)	16.45	10.7	3.4	2.72	4.17
செயற்பாடில்லா கடன் விகிதம் (%)	3.27	5.4	9.63	10.11	8.71

மூலங்கள்: பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.3.7 ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை

தனது அங்கத்தவர்களுக்கு பல்வகையான பிரதிபலன்களை வழங்குவதன் மூலம் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை தாபிக்கப்பட்டது. சபையின் அங்கத்தவர்கள் அனைவரும் அரச ஓய்வூதியத் திட்டத்திற்கு தகுதிபெறாத ஆனால் தனியார் துறையில் அல்லது பொதுத் துறையில் பணியாற்றும் ஊழியர்களாவர். ஊழியர் சேமலாப நிதியத்தினைப் போன்றல்லாது இது ஊழியர் அல்லது உறுப்பினர் சார்பாக அவரது மொத்த வருமானத்திலிருந்து 3 சதவீதப் பங்களிப்பினை தொழில்வழங்குநர் பங்களிப்புச்செய்கிறார். இது அங்கத்தவருக்கு பங்களிப்புச் செய்யாத பயனாகும். 2021 இன் இறுதியில், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 1.59 மில்லியனாக இருந்தது. மேலும், ஊழியர்களின் சார்பாக முதலாளிகளிடமிருந்து பெறப்பட்ட மொத்த பங்களிப்பு 2020 இல் ரூபா 26.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது 10.8 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இல் ரூபா 29.6 பில்லியனாகக் காணப்பட்டது.

அங்கத்தவர்களின் சுகாதாரப் பராமரிப்புக்கான உதவி வழங்கல், வீடமைப்புத் தேவைக்கான உதவி வழங்கல், அங்கத்தவர்களின் பிள்ளைகளின் படிப்புக்கான நிதி உதவி என்பன உள்ளிட்ட 08 வகையான நலன்புரிப் பயன் திட்டங்களை ஊழியர் நம்பிக்கை நிதிய சபை தமது அங்கத்தவர்களுக்கு வழங்கி வருகின்றது. தாபிக்கப்பட்ட ஏதும் ஓய்வூதியத் திட்டத்தினைப் பெற்றிராத ஊழியரின் ஓய்வு காலத்தினைச் சிறப்புறச்செய்தல் என்ற இந்நிதியத்தின் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு, சுயதொழிலாளர்களினதும் புலம்பெயர் பணியாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்காக விசேட கவனஞ்செலுத்தப்படுகிறது.

2021 ஆம் ஆண்டில் பயன் கோரிக்கை என்ற வகையில் ரூபா 440.9 மில்லியன் செலுத்தப்பட்டதோடு ரூபா 129 மில்லியன் ஐந்தாந்தர புலமைப் பரிசிலில் சித்தியெய்திய மாணவர்களுக்காக செலுத்தப்பட்டது. இது தவிர, தொழில் முடிவுறுத்தப்பட்டதன்.ஃ. ஓய்வுபெற்றதன் பின்னர் கணக்கிலுள்ள மீதித் தொகையானது பங்கிலாபங்களுடனும் வட்டியுடனும் சேர்த்து அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதற்கிணங்க, 2021 ஆம் ஆண்டில் 196,382 மீளளிப்புக் கோரிக்கைகள் செயற்படுத்தப்பட்டு மீளளிப்புக் கோரிக்கைக்காக மொத்தமாக ரூபா 19.7 பில்லியன் செலுத்தப்பட்டது.

ஊழியர் நம்பிக்கை நிதிய சபையினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான முதலீடுகள் பாதுகாப்பான வருமானத்தினை உறுதிப்படுத்துகின்ற அரசாங்கப் பிணையங்கள் மீது முதலீடுசெய்யப்பட்டுள்ளன. முதலீட்டுப் பங்கானது 2020 ஆம் ஆண்டில் பதிவாக்கிய ரூபா 371.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 10.4 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவாக்கி ரூபா 410.5 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. மேலும், சபையானது 2021 ஆம் ஆண்டில் வட்டி வருமானங்களைப் பிரதானமாக உள்ளடக்கி ரூபா 35.4 பில்லியனினை மொத்த வருமானமாக உழைத்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் இந்நிதியம் தேறிய இலாபமாக ரூபா 33.1 பில்லியனினை உழைத்துள்ளதுடன் அனைத்து அங்கத்தவர்களுக்கும் மொத்த பங்கிலாபத்துடன் 7.25 வட்டி விகிதத்தைப் பிரகடனம் செய்து ரூபா 21.1 பில்லியனினை வழங்கியது.

அட்டவணை 8.14 | ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**29,000**	**22,885**	**32,076**	**34,729**	**35,490**
முதலீட்டு வருமானம் (தேறிய)	28,148	22,456	31,647	33,697	35,202
வேறு வருமானங்கள்	852	429	429	1032	288
மொத்தச் செலவினம்	**1,920**	**2,315**	**2,315**	**2,229**	**2,330**
தொழிற்பாட்டுச் செலவுகள்	1,251	1,792	1,792	1,776	1,836
அங்கத்தவர் செலவுகள்	**669**	**523**	**523**	**453**	**494**
வரிக்கு முன்னரான இலாபம்	27,080	20,570	29,764	32,345	33,159
இலாபப் பகிர்வு	14,851	15,383	25,411	28,007	28,569
அங்கத்தவர் நிதியத்திற்கான வட்டி 3%	**8,435**	**9,193**	**9,423**	**10,423**	**11,553**
பங்கிலாபங்கள்	16,869	15,322	15,706	17,371	9,627
வட்டி, பங்கிலாபங்களின் மொத்த வீதம் (%)	9	8	8	8	7.25

மூலங்கள்: ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.4 நீர்

8.4.1 தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிறுவனத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி அனைவருக்கும் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான குறிப்பிடத்தக்க பொறுப்பின் கீழ், சபையானது 2021 ஆம் ஆண்டில் நாட்டில் குழாய் நீர் மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோக வலையமைப்பை முறையே 54.30 சதவீதமாகவும் 94.40 சதவீதமாகவும் உயர்த்தியது. இல் (குழாய் நீர் வழங்கலுக்கு மேலதிகமாக பாதுகாக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகள்: 36.85 சதவீதம், குழாய்க் கிணறுகள்: 3.2 சதவீதம், மழைநீர் சேகரிப்பு மற்றும் பிற: 0.5 சதவீதம் உட்பட).

2021 ஆம் ஆண்டில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது இரண்டு உள்ளூர் வங்கிகள் நிதியுதவி மற்றும் ஒரு வெளிநாட்டு வங்கி நிதியுதவிகளுடனான திட்டத்தை முடித்ததன் மூலம் 190,000 புதிய இணைப்புக்களை அமைப்பில் சேர்த்தது. இதன் விளைவாக, 2020 இல் 2.6 மில்லியனாக இருந்த மொத்த இணைப்புகள் 2021 இல் 2.8 மில்லியனாக அதிகரித்தன. 2021 ஆம் ஆண்டில், ரூபா 19,163 மில்லியன் செலவில் 815 மில்லியன் கன மீட்டர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டது மட்டுமன்றி 2020 ஆம் ஆண்டில் அலகு ஒன்றிற்கு ரூபா 48.87 உற்பத்திச் செலவுக்கு மாறாக 2021 இல் அலகு ஒன்றிற்கு ரூபா 60.63 உற்பத்திச் செலவில் 605 மில்லியன் கன மீட்டர் விநியோகம் செய்யப்பட்டது. எனவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி நிலையை மேம்படுத்த செலவு-பிரதிபலிப்பு விலை நிர்ணய முறையை கடைப்பிடிப்பது அத்தியாவசிய தேவையாகும் என்பதுடன், இது தமது கடனைச் சுமையின்றி அரசாங்கத்திற்குச் செலுத்த சபைக்கு உதவுகிறது.

2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 509 மில்லியன் இலாபத்தின் மத்தியில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, தனிநபர் ஊதியங்கள் 18 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,136 மில்லியன் குறிப்பிடத்தக்க நட்டத்தைச் சந்திக்க நேரிட்டது. மேலும், புதிய கருத்திட்டங்களை முடித்ததன் விளைவாக, 2020 ஆம் ஆண்டில் ரூபா 699,427 மில்லியன் மொத்த சொத்துகளின் அடிப்படை, 2021 இல் 13 சதவீதம் அதிகரித்து ரூபா 707,328 மில்லியனினைக் கொண்டிருந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, "அனைவருக்கும் தண்ணீர்" தேசிய திட்டம் 2021 - 2024 இன் கீழ், 1,080 கருத்திட்டங்களைத் தொடங்கியுள்ளதுடன் ரூபா 46 பில்லியன் பெறுமதியான 303 ஒப்பந்தங்களை வழங்கியது. எவ்வாறாயினும், 2021 இல் எதிர்பார்க்கப்படும் 17 சதவீத முன்னேற்றத்தில் பௌதீக முன்னேற்றம் சுமார் 2 சதவீதமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்த சபையானது விவேகமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

வருமானமல்லாத அல்லாத நீர் 2020 ஆம் ஆண்டில் 24.63 சதவீதத்திலிருந்து 2021 இல் 25.82 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி நிலையை வலுப்படுத்த, உரிமைப்பங்கு பங்களிப்பு ஊடாக ரூபா 11,820 மில்லியன் வரவு-செலவுத் திட்ட உதவி வழங்கப்பட்டது. மேலும், தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப நாட்டில் நீர் விநியோகத்தை விரிவுபடுத்துவதற்கு வசதியாக 2022 வரவு-செலவுத் திட்டத்திலும் சுமார் ரூபா 49,653 மில்லியன் ஒதுக்கப்பட்டது. எனவே, தற்போது நடைபெற்று வரும் கருத்திட்டங்களை உரிய நேரத்தில் முடிக்கவும், தற்போதுள்ள குடிநீர் திட்டங்களின் திறன் மற்றும் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அட்டவணை 8.15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
வருமானம்	**23,860**	**24,806**	**26,079**	**27,761**	**28,935**
நீர்	**21,692**	**22,744**	**23,995**	**25,608**	**25,735**
நீருடன் தொடர்புடைய வருமானம்	2,167	2,062	2,084	2,154	3,200
விற்பனைச் செலவுகள்	**-14,196**	**-15,821**	**-16,614**	**-16,754**	**-19,163**
மொத்த இலாபம்	9,663	8,985	9,465	11,007	9,772
வேறு வருமானங்கள்	**1,724**	**1,061**	**1,259**	**1,428**	**1,796**
நிர்வாகச் செலவுகள்	-9,935	-10,957	-12,059	-12,015	-13,658
ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்	-714	-906	-765	-839	-998
தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்)	**738**	**-1,817**	**-2,100**	**-385**	**-3,087**
நிதி வருமானம்	1,157	1,574	1,454	1,571	843
ஏனைய செலவுகள் வரிகள்	-66	-325	-531	-677	-752
தேறிய இலாபம் /(நட்டம்)	1,817	-517	-1,177	529	-3,136

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்	**2.0**	**2.0**	**2.2**	**2.6**	**2.8**
இணைப்புக்கள் (எண்ணிக்கை மில்லியனில்)					
நீர் உற்பத்தி (மில்லியன் கன மீற்றர்கள்)	679	732	746	782	815
நீர் விற்பனைகள் (மில்லியன் கன மீற்றர்கள்)	508	527	590	597	605
வருமானம் தராத நீர (சதவீதம்)	25.2	24.96	24.88	24.63	25.82
நீர் வழங்கல் செயற்திட்டங்கள் (எண்ணிக்கை)	343	343	348	331	
பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தழுவல் அளவு (சதவீதத்தில்)	89	90	92	93	94.4

மூலங்கள்: தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.5 துறைமுகங்கள்

8.5.1 இலங்கைத் துறைமுக அதிகார சபை

இலங்கைத் துறைமுக அதிகார சபையானது 2021 ஆம் ஆண்டில் சுமார் 7.2 மில்லியன் கொள்கலன் சரக்குகளைக் கையாண்டது. இரண்டு சர்வதேச துறைமுக நடவடிக்கைகளிலும் பெரும்பாலானவை தனியார் வணிகங்களால் கையாளப்படுகின்றன. இலங்கைத் துறைமுக அதிகார சபை முனையம், கொழும்பு துறைமுக நடவடிக்கைகளில் சுமார் 32 சதவீதத்தை அதாவது 2.2 மில்லியன் கொள்கலன் செயல்திறன் ரிஈயு களைக் கையாளுகிறது. 2021 ஆம் ஆண்டில், கிழக்குக் கொள்கலன் முனையம், முதலில் தனியார் முதலீட்டாளர்களால் முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டாலும் பின்னர் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு திரும்பப்பெறப்பட்டு அதே முதலீட்டாளருக்கு மேற்குக் கொள்கலன் முனையம் கருத்திட்டம் வழங்கப்பட்டது.

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் வருமானத் திரட்டல் 2020 ஆம் ஆண்டில் ரூபா 38.9 பில்லியனில் இருந்து 17 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 45.5 பில்லியனாக இருந்தது. இருப்பினும், 2020 இல் ரூபா 19 பில்லியனாக இருந்த இலாபம் 10 சதவீதம் அதிகரித்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 21 பில்லியனினை அடையப்பெற்றது.


அட்டவணை 8.16 | இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதி வெளியீடு

(ரூபா. மில்லியன்)

விபரம்					தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம்	**36,914**	**38,546**	**40,770**	**38,931**	**45,454**
கடற்போக்குவரத்து	**8,502**	**10,583**	**11,567**	**10,957**	**10,793**
ஸ்டீவ்டோரிங்	17,487	18,257	18,582	17,847	20,441
துறைக் களம் கையாளல்	**5,419**	**5,607**	**5,910**	**5,317**	**6,260**
துறைமுக வசதிகள்	4,235	3,226	3,696	3,443	6,176
ஏனையவை	**1,270**	**873**	**1,015**	**1,365**	**1,785**
வேறு வருமானங்கள்	7,044	11,577	11,150	11,314	12,310
மொத்தச் செலவினம்	**-28,530**	**-30,241**	**-37,040**	**-29,715**	**-32,899**
தொழிற்பாட்டுச் செலவுகள்	-15,043	-15,276	-16,517	-16,300	-16,812
திருத்த வேலைகள், பராமரிப்புச் செலவினங்கள்	-4,977	-5,837	-5,868	-5,646	-7,048
நிர்வாகச் செலவுகள்	-8,030	-8,868	-15,025	-7,770	-9,039
தேறிய நிதிச் செலவு	481	-131	287	849	2,005
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம் மற்றும் அந்நியச் செலாவணி நட்டம்)	15,428	20,013	17,514	21,379	26,871
அந்நியச் செலாவணி இலாபம்/(நட்டம்)	-2,206	-11,317	1,359	-1,051	-1,270
வருமான வரி	-	-	-3,486	-2,603	-2,676
மாறுபட்ட வரி	-102	-4,449	-423	1,015	-2,230
ஒருங்கிணைந்த நிதிக்கான பங்களிப்பு	-	-	600	-	-
ஆண்டுக்கான இலாபம்/ இழப்பு	13,324	4,247	11,646	18,738	20,695
வங்கியில் நிலுவையில் உள்ள கடன்கள்	12,916	12,884	10,990	9,322	7,355
அரசாங்க/வெளிநாட் படுகடன் நிலுவைகள்	60,123	66,335	59,985	55,907	52,896
கடன் மீதான வட்டி	2,082	2,257	2,372	1,532	800
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
TEU கையாளல் (எண்ணிக்கை மில்லியளில்)	6.21	7.05	7.23	6.85	7.25
கப்பல்களின் வருகை (எண்ணிக்கை)	5,781	5,457	5,458	4,762	4,603
கொழும்பு (எண்ணிக்கை)	5,109	5,079	5,001	4,335	4,411
காலி (எண்ணிக்கை)	150	143	283	248	54
திருகோணமலை (எண்ணிக்கை)	271	235	174	179	138
மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்	251	-	-	-	-

மூலங்கள்: துறைமுக அதிகாரசபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

வரைபு 8.10 | 2016 - 2021 வரையான வருமானம்



மூலங்கள்: துறைமுக அதிகாரசபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.6 காப்புறுதி

இலங்கையில் காப்புறுதித் தொழில்துறையானது 27 கம்பனிகளைக் கொண்டுள்ளதோடு அவற்றில் 6 கம்பனிகள் முழுமையான அல்லது பகுதியளவிலான வெளிநாட்டுடமைக் கம்பனிகளாகும். காப்புறுதி தொழிற் துறையானது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் ஒழுங்குறுத்தப்படுகின்றது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், பீப்பல்ஸ் இன்சுவரன்ஸ் பிஎல்சி மற்றும் எம்பிஎஸ்எல் இன்சுவரன்ஸ் கம்பனி லிமிட்டெட் போன்ற 4 கம்பனிகளும் அரசுடமைக் கம்பனிகளாகும். விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சபை என்பனவும் காப்புறுதிச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன. ஆயினும், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைய, மேற்குறித்த அத்தகைய நிறுவனங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பரப்பெல்லையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 8.17 | இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதி வெளியீடு

(ரூபா. மில்லியன்)

கையாளல் நிலையத்தின் பெயர்	உள்நாட்டு	ரீ - ஸ்டோவிங்	மொத்த ரியூக்களின் எண்
சீ.ஐ.சீ.எ.	**612,649**	**117,272**	**3,212,331**
இ.து.அ.ச.	321,121	30,949	2,198,334
எஸ்.ஏ.ஜீ.எ.	**265,285**	**52,035**	**1,838,693**
மொத்த ரியூக்கள்			7,249,358

மூலங்கள்: துறைமுக அதிகாரசபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

ஒட்டுமொத்த எழுதப்பட்ட காப்புறுதிப் பூட்கையில் காப்பீட்டுத் துறை 2020 ஆம் ஆண்டில் ரூபா 208.2 பில்லியனில் இருந்து 12 சதவீதம் வளர்ச்சியடைந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 233.7 பில்லியனாக இருந்தது. காப்புறுதித் துறையின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 2020 இல் ரூபா 789.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 11 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 879.8 பில்லியனினைக் கொண்டிருந்தது.

குறிப்பு: 2021 ஆம் ஆண்டிற்கான காப்புறுதி நிறுவனங்கள் வழங்கிய காலாண்டு வருமான தகவல்களிலிருந்து 2021 ஆம் ஆண்டிற்கான தகவல்கள் பெறப்பட்டுள்ளன (தற்காலிக புள்ளிவிவரங்கள்), அதே நேரத்தில் 2020 ஆம் ஆண்டிற்கான தகவல்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட ஐ.ஆர்.சி.எஸ்.எல் புள்ளிவிவர ஆய்வு - 2020 தரவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

8.6.1 இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

நாட்டின் மிகப் பெரிய அரசுக்குச் சொந்தமான காப்புறுதி நிறுவனம் என்ற வகையில், வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ரூபா 268 பில்லியன் சொத்துத் தளத்தினையும் காப்பீட்டுத் துறையில் ரூபா 152 பில்லியனினைக் கொண்ட மிகப்பெரிய ஆயுட் காப்புறுதி நிதியத்தையும் மற்றும் ரூபா 6 பில்லியன் குறிக்கப்பட்ட முதலீட்டையும் கொண்டுள்ளது.

அட்டவணை 8.18 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	தற்காலிக				
	2017	2018	2019	2020	2021
வருமானம்	**39,400**	**44,380**	**48,608**	**52,614**	**64,395**
மொத்த எழுதப்பட்ட காப்புறுதி	**31,438**	**31,738**	**33,794**	**39,421**	**43,231**
உழைக்கப்பட்ட தேறிய காப்புறுதி	25,938	28,005	29,772	34,206	38,398
பயன்கள், இழப்புக்கள் மற்றும் செலவுகள்	**-26,025**	**-28,407**	**-31,270**	**-34,888**	**-42,255**
முதலீட்டு வருமானம்	12,128	13,059	17,671	16,511	23,392
தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள்	**-7,484**	**-8,822**	**-9,134**	**-9,755**	**-10,082**
தொழிற்பாடுகள் மூலமான இலாபம்	5,890	7,150	8,205	7,972	11,725
வருடத்திற்கான தேறிய இலாபம்	4,569	5,245	7,028	5,788	10,041
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கோரிக்கை விகிதம் - பொது (%)	67	67	61	51	60
மூலதனத்தின் போதியதன்மை விகிதம் - ஆயுள் (%)	434	440	434	459	490
மூலதனத்தின் போதியதன்மை விகிதம் - பொது (%)	188	208	208	223	240
ஆயுட் காப்புறுதி நிதியம்	98,580	107,108	118,000	134,013	152,585

மூலம்: இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 52,614 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் 22 சதவீத அதிகரிப்பாகிய ரூபா 64,062 மில்லியன் வருவாயைப் பதிவு செய்தது. மொத்த எழுதப்பட்ட பூட்கை 2020 இல் ரூபா 39,421 மில்லியனிலிருந்து 10 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இல் 43,231 மில்லியன் தொகையை அடையப்பெற்றது. ஆயுள் காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட பூட்கை 2020 ஆம் ஆண்டில் ரூபா 19,258 மில்லியனிலிருந்து 14 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 21,976 மில்லியனாகக் காணப்பட்டது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆயுள் அல்லாத காப்புறுதிக்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 21,255 மில்லியன் பெறுமதியான மொத்த எழுதப்பட்ட பூட்கையைக் கொண்டிருந்த அதேவேளை, 2020 இல் ரூபா 20,163 மில்லியனுடன் ஒப்பிடும்போது இது 5 சதவீத அதிகரிப்பாகும். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது பயனர் நட்பு தொழில்நுட்ப அணுகுமுறையுடன் சேவை வழங்கலின் டிஜிட்டல் மயமாக்கலில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

8.6.2 தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் 2006 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு, இந்நிதியமானது அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம், விவசாயக் கடன் பாதுகாப்பு காப்புறுதித் திட்டம், பயிர்க் காப்புறுதித் திட்டம் மற்றும் மோட்டார் வாகன மற்றும் மோட்டார் வாகனமல்லாத பொதுவான காப்புறுதித் திட்டம் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட காப்புறுதித் திட்டங்களை வழங்குவதன் மூலம் காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபட்டுவருகின்றது. மேலும், 2007 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் காப்புறுதிசெய்யப்பட்ட எந்தவொரு நபராலும் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பொறுப்புக்கும் மீள்காப்புறுதியாளர் என்ற வகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் செயற்படுவதுடன் பணிப் பகிஷ்கரிப்பு, கலகங்கள், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாதி நிதியத்தினையும் (SRCC & T) பேணி வருகிறது.

அட்டவணை 8.19 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
மொத்த வருமானம் (ரூபா மில்லியன்)	**12,764**	**15,003**	**17,717**	**18,862**	**18,969**
மொத்த எழுதப்பட்ட காப்புறுதி	9,071	9,684	12,693	9,818	10,631
அக்ரஹாரவுக்காகக் கிடைத்த பங்களிப்பு	2,727	4,017	4,839	5,469	6,283
சேகரிக்கப்பட்ட பயிர்க் காப்புறுதித் தீர்வை	1,878	2,138	1,780	1,627	2,194
உழைக்கப்பட்ட தேறிய காப்புறுதி வருமானம்	11,614	13,653	16,448	17,475	17,379
ஏனைய வருமானம்	1,150	1,350	1,269	1,387	1,590
கைவிடப்பட்ட மீள்காப்புறுதி	-1,175	-2,486	-1,191	-1,102	-590
காப்புறுதிக் கோரிக்கைகள் , பயன்கள்	-9,901	-9,691	-12,079	-7,955	-10,761
எழுத்துறுதி மற்றும் கையேற்றல் செலவுகள்	-1,441	-1,609	-2,056	-1,615	-1,864
மொத்தச் செலவினம்	**344**	**415**	**574**	**427**	**408**
ஊழியர்களுடன் தொடர்புடைய செலவுகள்	201	219	240	226	225
நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்	143	196	334	201	183
வருமானத்திற்கு மேலதிகமான செலவினங்கள்	**1,077**	**3,289**	**3,008**	**8,866**	**5,936**
கிடைக்கப்பெற்ற அக்ரஹார கோரிக்கைகள் (எண்ணிக்கை)	165,379	185,870	230,029	218,422	226,639
செலுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைகள் (எண்ணிக்கை)	149,039	166,675	214,381	209,108	212,646
சேகரிக்கப்பட்ட அக்ரஹார பூட்கைகள்	2,727	4,017	4,839	5,469	6,283
செலுத்தப்பட்ட அக்ரஹார கோரிக்கைகள்	2,757	4,033	5,257	4,173	6,380

மூலம்: இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருவாய் 2020 ஆம் ஆண்டில் ரூபா 18,862 மில்லியனில் இருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 18,969 ஆக சற்று அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் மொத்த எழுதப்பட்ட பூட்கை ரூபா 10,631 மில்லியனாகும். இது 2020 இல் ரூபா 9,818 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத அதிகரிப்பாக உள்ளது. 2020 ஆம் ஆண்டில் ரூபா 8,866 மில்லியன்களாகக் காணப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலாபம், முக்கியமாக தொற்றுநோயால் வழிநடாத்தப்பட்ட காப்பீட்டு உரிமைகோரல்கள் மற்றும் நன்மைகளின் அதிகரித்த செலவு காரணமாக 2021 இல் 33 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 5,936 மில்லியனினைப் பதிவுசெய்தது.

8.7 பயணிகள் போக்குவரத்து


8.7.1 இலங்கைப் போக்குவரத்துச் சபை

ஏறத்தாழ 38 சதவிகிதமான பயணிகள் பொது போக்குவரத்தைப் பயன்படுத்துவதோடு எஞ்சியவர்கள் தமது சொந்த வாகனங்களையும் ஏனைய வழிகளையும் பயன்படுத்துகின்றனர். இலங்கை போக்குவரத்துச் சபை கிட்டத்தட்ட 7,000 பஸ் வண்டிகளையும் முழு நாட்டையும் உள்ளடக்கி 107 டிப்போக்களையும் கொண்டுள்ளது. சிக்கனத்தன்மையற்ற பாதைகளில் குறிப்பாக, கிராமியப் பிரதேசங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் கெமிசெரிய, இராக்கால பயணிகள் சேவையினை வழங்கும் நிசிசெரிய மற்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்காக சிசு செரிய மூலம் குறைந்த செலவில் போக்குவரத்து சேவையினையும் வழங்குகின்றது.

நாட்டில் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக 2020 ஆம் ஆண்டில் 308 மில்லியன் கிலோமீட்டராக இருந்த இலங்கை போக்குவரத்து சபையினால் இயக்கப்படும் கிலோமீற்றர்கள் 2021 இல் 215 மில்லியன் கிலோமீற்றராக 30 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் விளைவாக, 2020 ஆம் ஆண்டில் ரூபா 31,128 மில்லியனாக இருந்த இலங்கைப் போக்குவரத்து சபையினால் ஈட்டப்பட்ட வருமானம் 2021 இல் 27 வீதத்தால் ரூபா 22,766 மில்லியனுக்கு கணிசமான அளவு சரிந்தது.
சிக்கனமற்ற மார்க்கங்களை இயக்கவும் பருவச் சீட்டுக்களுக்காகவும் பொதுத் திறைசேரி வழங்கிய மானியம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 10,700 மில்லியனில் இருந்து 2021 இல் ரூபா 10,600 மில்லியாக சற்றுக் குறைவடைந்தது.

2,200 பேருந்துகளின் நிதிக் குத்தகை ஏற்பாடு முடிவடைந்ததன் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் நிதிச் செலவு ஓரளவுக்கு குறைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்து சபையின் நட்டம் 49 வீதத்தால் அதிகரித்து ரூபா 3,143 மில்லியனினைக் கொண்டிருந்தது.

வரைப 8.1 : இலங்கை போக்குவரத்துச் சபையின் செயலாற்றுகை



அட்டவணை 8.20 | இலங்கை போக்குவரத்துச் சபையின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
வருமானம்	**46,243**	**43,647**	**42,938**	**31,128**	**22,766**
தொழிற்பாட்டு வருமானம்	33,928	30,914	29,282	17,996	12,101
ஏனைய வருமானம்	12,315	12,733	13,656	13,132	10,665
செலவினம்	**43,404**	**41,351**	**40,237**	**31,787**	**25,067**
சம்பளம்	18,380	19,436	20,143	18,274	15,198
எரிபொருள்	13,067	14,634	13,879	9,535	6,850
ஏனைய நடைமுறைச் செலவுகள்	4,261	4,428	4,794	3,085	2,336
நிறுவனத் தொழிற்கூலி	7,042	2,245	1,037	629	573
நிதிச் செலவு	654	608	384	264	110
அரசாங்கத்தின் நிதி உதவிக்கு முன்னரான காசு இலாபம்/ (நட்டம்)	2,839	2,296	2701	-659	-2,301
அரசாங்க நிதி உதவி	964	1,225	1,474	1,127	807
காசு இலாபம்	3803	3,521	4,175	468	-1,494
பெறுமானத்தேய்வு	2,120	2,170	2,265	2,507	1,649
உற்பத்தி நட்டம்	67	56	20	66	
கணக்கீட்டு இலாபம் (நட்டம்)	**1616**	**1295**	**1890**	**-2,105**	**-3,143**
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கி.மீ இற்கான எரிபொருள் செலவினம்	28.18	31.91	31.7	30.93	31.9
பஸ் வண்டிக்கான ஊழியர்களின் எண்	6	6	6	7	8
இயங்கிய பஸ் வண்டிகளின் நாளொன்றுக்கான சராசரி	5,266	5,227	5,079	3,961	3208
பழுதடைந்துள்ள பஸ் வண்டிகள்	3,085	3,274	2,808	2,610	1052
இயங்கிய மில்லியன் கிமீ	448	446	431	308	215
பஸ் தொகுதியின் சராசரி வயதுப் பகுப்பாய்வு					
5 வருடங்களுக்குக் குறைந்தவை	2,828	2,559	2,423	1,001	740
5,10 வருடங்கள்	888	968	1,134	2420	2273
10 , 15 வருடங்கள்	1,598	1786	2109	2,155	1,830
15 வருடங்களுகு மேற்பட்டவை	1,988	1,629	1,608	1,382	951
மொத்தம்	**7,302**	**6,942**	**7,274**	**6,958**	**5,794**

மூலங்கள்: இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.8 விமானப் போக்குவரத்து

8.8.1 வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவை (இலங்கை) நிறுவனம் (எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் (சிறீ லங்கா) லிமிட்டட்)

மக்கள், நாடுகள் மற்றும் கலாச்சாரங்களை இணைப்பதற்கும், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை உருவாக்குவதன் மூலம் உலகளாவிய சந்தைகளுக்கு அணுகலை வழங்குவதற்கும், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இடையேயான உறவுகளை உருவாக்குவதற்கும் விமான நிலைய செயல்பாடு முக்கிய தொழில்களில் ஒன்றாகும். 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு கொவிட்-19 நோயின் உலகளாவிய பரவல் காரணமாக விமானப் போக்குவரத்துத் துறையின் இருப்புக்கு கடினமாக ஒரு காலகட்டமாக இருந்தது. உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான விமானச்

செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன அல்லது தரையிறக்கப்பட்டுள்ளதுடன், கடந்த சில ஆண்டுகளாக மிகக் குறைவான விமான இயக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் கருத்துப்படி, 2021 ஆம் ஆண்டில் தேறிய தொழில்துறை நட்டங்கள் ஏறக்கறைய ஐ.அ.டொ. 51.8 பில்லியனினைப் பதிவு செய்ததுடன், 2021 இல் கேள்வி (அளக்கப்பட்ட) 2021 இல் மொத்த பயணிகளின் எண்ணிக்கை சுமார் 2.3 பில்லியனாக இருந்தது மட்டுமன்றி கொவிட்-க்கு முந்தைய அளவை விட சரக்கு தேவை 8 சதவீதம் அதிகமாக இருந்தது. நெருக்கடியின் போது, நிதி உதவி பல விமான நிறுவனங்களுக்கு உயிர்நாடியாக இருந்தது.

இலங்கையைப் பொறுத்தளவில், 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு ஒரு சிறிய முன்னேற்றம் கண்டது. விமானங்களின் இயக்கங்களின் எண்ணிக்கை 38,145 இலிருந்து 47,391 ஆக அதிகரித்த அதே நேரத்தில் சரக்குக் கையாளல் 151,141 மெட்ரிக் தொன்னிலிருந்து 201,680 மெட்ரிக் தொன் வரை அதிகரித்துள்ளது. இருப்பினும், மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 2.4 மில்லியனில் இருந்து 1.5 மில்லியனாக குறைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் (சிறீ லங்கா) லிமிட்டட் நிறுவனத்தின் செயல்பாட்டு வருவாய் 5 சதவீதம் சரிந்து ரூபா 7.4 பில்லியனினைக் கொண்டிருந்தது. இந்த நிறுவனத்தின் வருவாய் மார்க்கங்கள் வான்வழி போக்குவரத்து செயல்பாடுகள் மற்றும் வான்வழி அல்லாத நடவடிக்கைகளை (வணிகச் செயல்பாடுகள்) முக்கியமாகக் கொண்டுள்ளதுடன் அவற்றின் வருமானம் முறையே ரூபா 2.3 பில்லியனாகவும் ரூபா 5.1 பில்லியனாகவும் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2021 இல் எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் நிறுவனத்தின் மற்ற செயல்பாட்டு வருமானம், 2020 இல் ரூபா 3.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் ஒரு சிறிய சரிவைக் காட்டியது. நிருவாகச் செலவு மற்றும் தேறிய நிதிச் செலவைக் குறைப்பதுடன், இந்த நிறுவனத்தின் அடிமட்டத் தாக்கம் 2021 இல் ஒரு முன்னேற்றத்தைக் காட்டுகிறது. முந்தைய ஆண்டில் ரூபா 3,733 மில்லியன் மொத்த நட்டம் மீளாய்வுக்குரிய ஆண்டில் ரூபா 755 மில்லியனுக்கு குறைவடைந்துள்ளது.

2021 டிசம்பர் 31, நிலவரப்படி எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விஸஸ் (சிறீ லங்கா) லிமிட்டட் நிறுவனத்தின் மொத்தக் கடன்கள் ரூபா 64.5 பில்லியாகும். இது முந்தைய ஆண்டை விட 38 சதவீதம் அதிகரிப்பாகும். இந்த நிறுவனம் வெளிநாட்டுக் கடன்களுக்கான மூலதன மீள்கொடுப்பனவுகளாக மொத்தமாக ரூபா 4.2 பில்லியனினைச் செலுத்தியதுடன், ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 19.8 பில்லியன் பெறுகையை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் கட்டம் 2 இன் படிமுறை II க்காகப் பயன்படுத்தப்பட்டது. நாட்டின் நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பியவுடன் தேவையை பூர்த்தி செய்ய இது உதவும்.

அட்டவணை 8.21 | வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவைக் கம்பனி நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019	2020	2021
வருமானம்	**20,758**	28,739	29,857	11,676	11,199
வான்பயண சார்ந்தவை	4,619	5,234	5,431	2,291	2,299
வான்பயணம் சாராதவை	15,876	19,725	20,221	5,486	5,087
வேறு வருமானங்கள்	263	3,780	4205	3899	3,813
செலவினம்	11,118	18,279	14,635	15,409	11,954
தனிப்பட்ட செலவினங்கள்	6,415	7,458	8,117	7,415	7,305
நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்	1,575	1,666	2,053	2,088	1,141
பெறுமானத்தேய்வு	2,231	2,694	2,856	2,853	2,648
திருத்த, பராமரிப்புச் செலவினங்கள்	307	398	463	266	354
தேறிய நிதிச் செலவினங்கள்	590	6,063	1,146	2,787	506
வரிக்கு முன்னரான தேறிய இலாபம்	9,640	10,460	15,222	-3,733	-755
மொத்த சொத்துக்கள்	87,020	100,834	108,274	103,216	125,953
மொத்த பொறுப்புக்கள்	63,757	72,356	69,044	66,233	84,433
மொத்த சமநிலை	23,264	28,479	39,231	36,983	46,075
மொத்தக் கடன்கள்	42,780	49,208	47,560	46,773	64,458
வருடத்தினுள் பெற்ற கடன்கள்	6,333	1,391	2,150	684	19,833
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
பயணிகளின் பயணங்கள் (எண்.) (மில்)	62,850	67,308	96,812	38,145	47,391
இடைமாற்றல் பயணிகள் (எண்)(மில்)	10	11	10	2.4	1.5
பயணிகள் செயன்முறை நேரம் - வருகை (நிமி)	1.5	1.5	1.7	1.5	1.7
பயணிகள் செயன்முறை நேரம் - புறப்படுதல் (நிமி)	274,044	279,560	261,367	151,141	201,680

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமான நிலைய, விமானப் போக்குவரத்துக் கம்பனி மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.8.2 ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் 2021.'.22 நிதியாண்டில் ரூபா 171 பில்லியன் நட்டத்தைப் பதிவுசெய்த அதேவேளை இது, அதன் திரட்டப்பட்ட நட்டத்தை ரூபா 542 பில்லியன் என்ற தொகைக்கு இட்டுச் சென்றது. வரலாற்று ரீதயாக இந்த நட்டங்கள் வங்கிக் கடன்கள் மற்றும் வழங்குநர்களுக்கு தாமதமாக செலுத்துதல் மூலம் நிதியளிக்கப்பட்டன. அதன் விளைவாக, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் வட்டி-தாங்கும் பொறுப்புடைமை, 2022 மார்ச் 31 நிலவரப்படி ரூபா 372 பில்லியனுக்கு அதிகரித்தது. இந்நிறுவனமானது வர்த்தகக் கடனாளிகளுக்கு ரூபா 183 பில்லியனைச் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள அதே சமயம் இதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 89 பில்லியனாகும். மொத்தப் பொறுப்புடைமை ரூபா 618 பில்லியனைக் கொண்டிருந்தது. இந்தப் பின்னணியில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் நிதிச் செலவுகள் முந்தைய ஆண்டில் ரூபா 36 பில்லியனிலிருந்து ரூபா 122 பில்லியனுக்கு அதிகரித்துள்ளமை வங்கித் துறை மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவை மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2021.'.22 இல் ஏற்பட்ட பாரிய இழப்பினால் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் மூலதனத் தேய்வு மோசமடைந்தமை அரசாங்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட அரசிறை இடைவெளி மற்றும் அரச வங்கித் துறையின் நிதிச் சூழல் ஆகியவற்றின் பின்னணியில் நிறுவனத்தின் அக்கறைகள் குறித்து மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், நாட்டில் பல சவால்கள் நிலவிய போதிலும், கொவிட் தொற்றுநோய் மற்றும் விளம்பர நடவடிக்கைகளில் கணிசமான கவனம் செலுத்தப்பட்டமையால், பயணிகளின் பயணக் கிலோமீட்டர்கள் அதிகரித்ததன் காரணமாக, ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனமானது பயணிகள் மற்றும் சரக்கு நடவடிக்கைகளில் இருந்து அதன் செயல்பாட்டு வருமானத்தை 2020.'.21 இல் ரூபா 50,694 மில்லியனிலிருந்து 163 சதவீதம் உயர்த்தி 2021.'.22 இல் ரூபா 133,276 மில்லியன் தொகையைப் பதிவு செய்தது. 20.'.21 இல் 748.13 ஆர்பீகே மில்லியனிலிருந்து 2021.'.22 இல் 4,968.59 ஆர்பீகே மில்லியனாக மீட்புப் பாதையை எட்டியது.

இந்த நெருக்கடியான பொருளாதார நிலையில் நிறுவனத்தின் நட்டங்களுக்கு நிதியளிப்பதை மேலும் தொடர முடியாமையால் குறுகிய கால கடன் வசதிகளை வழங்குவதைத் தொடர இரண்டு அரச வங்கிகளுக்கு உதவியாக ஐ.அ.டொ. 205.4 மில்லியன் மற்றும் ரூபா 27.6 பில்லியன் வரையான ஏற்கனவே காலாவதியான அனைத்து ஆறுதல் கடிதங்களையும் மீண்டும் வழங்குவதற்கு பொதுத் திறைசேரியின் ஊடாக அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பொருளாதார பயனற்ற செயல்பாடுகள் மற்றும் நட்டங்கள் வரையறுக்கப்பட்ட அரசிறை இடைவெளியிலோ அல்லது அரச வங்கித் துறையிலோ உற்பத்தித் திறன் கொண்ட தனியார் துறை கடன் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்க முடியாது.

எவ்வாறாயினும், நிலவும் பொருளாதார நிலைமைகளின் கீழ், அரசாங்கம் இனி ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நட்டங்களுக்கு நிதியளிக்கும் நிலையில் இல்லை, எனவே பொருத்தமான வணிகப் பங்காளியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் முறையான வணிக மறுசீரமைப்பு ஊடாக அவர்களின் பொறுப்புகளைத் தீர்க்க நிறுவனத்திற்கு உடனடி மாற்றம் தேவைப்படுகிறது.

அட்டவணை 8.22| ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017/18	2018/19	2019/20	2020/2021	2021/2022
மொத்த வருமானம்	**167,490**	**184,653**	**183,513**	**71,848**	**134,627**
பயணி	131,494	147,900	147,673	16,328	78,340
சரக்கு	14,621	15,828	15,745	27,328	43,975
மேலதிகப் பயணப் பொதி	1,033	1,074	1,166	197	1,157
வேறு வருமானங்கள்	14,285	15,538	15,566	6,841	9,803
நிதி வருமானம்	181	90	317	525	639
ஏனைய வருமானமும் ஈட்டுகைகளும்	5,876	4,223	3,046	20,629	699
மொத்தச் செலவினம்	**184,703**	**228,676**	**230,712**	**117,078**	**305,364**
வானூர்தி எரிபொருட் செலவு	47,038	60,673	55,328	10,569	42,757
ஊழியர் செலவு	19,454	20,368	21,205	16,206	16,568
விமான நிலைய, பயண வழி ,பயணிகள் செலவுகள்	28,659	29,780	29,217	7,440	19,578
வானூர்திப் பராமரிப்பு முழுயைமான சீராக்கற் செலவு	22,829	26,333	22,820	13,695	25,619
குத்தகை வானூர்தி வாடகை	25,726	-	1,394	2,265	-883
விற்பனை, சந்தைப்படுத்தல் , விளம்பரச் செலவுகள்	15,634	15,775	14,541	2,034	7,069

சிப்பந்திகளுக்கான செலவுகள்	6,036	6,582	6,557	1,680	3,262
ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள	6,711	14,302	14,127	4,325	7,002
தீர்க்கப்பட்ட/தீர்க்கப்படாத செலாவணி(ஈட்டம்) / இழப்பு	2,017	3,414	6,119	6,895	47,718
பெறுமானத்தேய்வு மற்றும் கடனழிவு	1,779	1,349	19,014	16,296	14,184
தேறிய நிதிச் செலவு	8,820	19,331	40,390	35,673	122,490
தொழிற்பாட்டு செயற்பாடுகள் மீதான இலங்கை வெளிநாட்டு ஒதுக்குகளின் பிரயோகச் செலவு	-	30,769	-	-	-
வானூர்திக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்தமைக்கான நட்டஈடு	-	-	-	-	-
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**-17,213**	**-44,023**	**-47,199**	**-45,230**	**-170,751**
திரட்டிய இழப்புக்கள்	-181,821	-223,488	-316,477	-326,341	-542,484
கடுமையான மூலதன இழப்பு	ஆம்	ஆம்	ஆம்	ஆம்	ஆம்
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
கொண்டு செல்லப்பட்ட பயணிகள் (RPK மில்)	15,280.78	15,689.19	14,547.97	748.13	4,968.59
வானூர்தித் தொகுதி (எண்ணிக்கை)	26	27	25	24	24
கொண்டு கொள்ளளவு (ASK மில்)	18,487.54	18,925.40	18,041.41	3,816.40	10,144.12
மொத்த வருமானத்தில் எரிபொருட் செலவு %	28%	33%	30%	15%	32%
பயணிகள் ஏற்றல் காரணி	82.65	82.9	80.64	19.6	48.98

மூலங்கள்: ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.9 நிருமாணத் துறை

அரச பொறியியல் கூட்டுத்தாபனம், மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் ஆகியவை நிருமாணக் கைத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ள முக்கிய மூன்று அரசுக்கு சொந்தமான நிறுவனங்களாகும். பொருளாதாரத்தில் சாதகமற்ற சூழ்நிலைகள் இருந்தபோதிலும், மேற்கண்ட அரசுடைமைத் தொழில்முயற்சி நிறுவனங்களின் மொத்த விற்பனைப் புரள்வு 2020 ஆம் ஆண்டில் ரூபா 10,521 மில்லியனிலிருந்து 31 சதவீதம் அதிகரித்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 13,751 மில்லியனினைப் பதிவு செய்தது.

ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு அரசு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை அதிகரிப்பதால், அரசுக்கு சொந்தமான கட்டுமான நிறுவனங்கள் உட்பட கட்டுமானத் துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் பணப்புழக்க நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளன. அரச பொறியியல் கூட்டுத்தாபனம், மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு கட்டுமானப் பணிகளுக்காக அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய மொத்தத் தொகை கிட்டத்தட்ட ரூபா 17,242 மில்லியன் ஆகும். இது 2020 ஆம் ஆண்டை விட 5 சதவீத அதிகரிப்பாகும். அதே போன்று தனியார் துறை கட்டுமான நிறுவனங்களும் தனியாருக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை வழங்காமையால் பாதிக்கப்பட்டுள்ளன.

8.9.1 அரச பொறியியல் கூட்டத்தாபனம்

2020 ஆம் ஆண்டில் ரூபா 2,182.6 மில்லியனாகக் காணப்பட்ட அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வருவாய் 2021 இல் ரூபா 2,961.2 மில்லியனாக 36 சதவீதத்தினாலும் செலவினம் 23 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 2021 இல் ரூபா 1,020 மில்லியன் நட்டத்தைப் பதிவுசெய்ததுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 4 சதவீதம் சரிவாகும். இந்த நிறுவனத்தின் வரவுகள் 2020 இல் ரூபா 5,384.9 மில்லியனிலிருந்து 10 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 5,928 மில்லியனினைக் கொண்டிருந்தது.

சரியான நேரத்தில் வரவுகளைப் பெறாமை மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் நாணய மதிப்பிறக்கம் ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட உள்ளீடுகளுக்கான குறிப்பிடத்தக்க மேம்படுத்தப்பட்ட விலை ஆகியவற்றின் காரணமாக அரச பொறியியல் கூட்டுத்தாபனம் கடுமையான பணப்புழக்க நெருக்கடியை எதிர்கொள்கிறது.

அட்டவணை 8.23 | அரச பொறியியல் கூட்டுத்தபானத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**3,822**	**3,439**	**3,913**	**2,183**	**2,961**
நிர்மாணத் துறை	3,624	3,279	3,424	1,763	2,932
மதியுரைச் சேவை	199	161	490	419	29
செலவினம்	5,139	5,197	4,890	3,248	3,981
தொழிற்பாட்டு செலவினம்	2,807	2,797	2,678	1,229	1,832
ஊழியர் செலவு	2,110	2,120	1,,846.1	1,594	1,924
நிதிச் செலவு	221	281	366	426	226
இலாபம்/ (நட்டம்)	**-1,317**	**-1,758**	**-976**	**-1,066**	**-1,020**
வங்கி நிலுவைப் படுகடன்	664	2,121	2,030	2,130	2,130
கிடைக்க வேண்டியவை	5,523	5,268	5,183	5,385	5,928

மூலம்: அரச பொறியியல் கூட்டுத்தபானம் மற்றும்ம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் மூதேசிய உபகரண மற்றும் இயந்திர நிறுவனததின் கணக்குகள் இன்றி

2021 ஆம் ஆண்டில் அரச பொறியியல் கூட்டுத்தாபனமானது ரூபா 5,937.3 மில்லியன் பெறுமதியான கருத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அத்துடன் சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் கட்டடம், வத்தளை மாவட்ட நீதிமன்ற வளாகம், இசுருபாய கட்டடத்தொகுதியின் ை ஆம் கட்டம், இரத்மலானையில் உள்ள பல்கலைக்கழகக் கல்லூரி, பேராதனை சிறுவர் வைத்தியசாலை உள்ளடங்கலாக சில அரசாங்க நிருமாண வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

8.9.2 மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம்

மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் வருவாய் 2021 ஆம் ஆண்டில் 3 சதவீதம் குறைந்து ரூபா 6,361 மில்லியனாக இருந்த அதே நேரத்தில் இலாபமும் 2020 ஆம் ஆண்டில் ரூபா 261 மில்லியனிலிருந்து 4 சதவீதம் சரிந்து 2021 இல் ரூபா 250 மில்லியனினைக் கொண்டிருந்தது. மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் மொத்த வரவுகள், மீண்டும் அதன் அடிமட்டத்தில் அழுத்தத்தை உருவாக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 10,757 மில்லியன் வரை குறைவடைந்தது. இந்த ஆண்டில், மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகமானது ஒரு வணிக பல்வகைப்படுத்தல் மூலோபாயமாகவும், 2021 ஆம் ஆண்டில் விவசாய முயற்சியில் முதலீடு செய்வதற்கான அரசாங்கக் கொள்கையை கடைப்பிடிக்கவும் வேளாண் பொறியியலில் முதலீடு செய்துள்ளது. பணியகமானது 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,544 மில்லியன் பெறுமதியான புதிய அரச துறை கருத்திட்டங்கள் உட்பட 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 33,400 மில்லியன் பெறுமதியான கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.

அட்டவணை 8.24 | மத்திய பொறியியல் மதியுரைச் சேவைப் பணியகத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**13,693**	**10,128**	**8,032**	**6,557**	**6,361**
நிருமாணத் துறை	10,769	7,033	5,128	4,124	3,947
ஆலோசனைச் சேவை	2,427	2,634	2,420	2,008	2,117
வேறு வருமானங்கள்	180	157	170	162	121
நிதி வருமானம்	317	304	314	263	176
மேத்த செலவினம்	12,936	9,602	7,691	6,296	6,111
தொழிற்பாட்டுச் செலவினங்கள்	11,556	7,987	6,005	4,548	4,441
ஊழியர் செலவு	**1,370**	**1,602**	**1,682**	**1,743**	**1,665**
நிதிச் செலவு	10	13	4	5	5
ஏனைய	-	-	-	-	
இலாபம்/ (நட்டம்)	757	526	340	261	250
வங்கி நிலுவைப் படுகடன்	-	-	-	-	-
கிடைக்க வேண்டியவை	14,401	11,485	11,741	10,743	10,757

மூலம்: மத்திய பொறியியல் மதியுரைச் சேவைப் பணியகம், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.9.3 அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம்

2020 ஆம் ஆண்டின் ரூபா 1,782 மில்லியனுடன் ஒப்பிடுகையில் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருவாய் 149 சதவீதம் கணிசமாக அதிகரித்து ரூபா 4,430 மில்லியனினை அடையப்பெற்றது. 2020 ஆம் ஆண்டின் ரூபா 257 மில்லியன் தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 43 மில்லியன் தேறிய இலாபம் பதிவாகியுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வரவுகள் ரூபா 557 மில்லியனாகக் காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் செயல்பாடுகளை விரிவுபடுத்தும் போது, அரச அபிவிருத்தி மற்றும் நிருமாணக் கூட்டுத்தாபனம் 2021 இன் இறுதியில் ரூபா 7,442.35 மில்லியன் பெறுமதியான கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. அதுமட்டுமன்றி ரூபா 5,892.28 மில்லியன் பெறுமதியான புதிய கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், 2021 இல் ரூபா 513.06 மில்லியன் பெறுமதியான அரசாங் கருத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

அட்டவணை 8.25 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**2,531**	**3,082**	**4,318**	**1,782**	**4,430**
நிர்மாணத் துறை	2,348	2,878	4,192	1,449	4,216
ஏனையவை	182	204	126	333	214
மொத்தச் செலவினம்	2,519	3,064	5,162	2,039	4,386
தொழிற்பாட்டுச் செலவினங்கள்	2,175	2,696	4,584	1,338	3,812
ஊழியர் செலவு	139	148	177	161	109
நிதிச் செலவு	119	145	224	209	259
ஏனையவை	**86**	**75**	**177**	**331**	**206**
இலாபம்/. (நட்டம்)	12	19	-844	-257	43
வங்கி நிலுவை படுகடன்கள்	929	1,497	1,680	1,854	1,989
மிகைப்பற்று உள்ளடங்கலாக	21	1,146	1,298	1,429	1,845
மிகைப்பற்று நீங்கலாக	353	437	560	333	557
கிடைக்க வேண்டியவை	353	437	560	333	557

மூலங்கள்: அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.10 லொத்தர்கள்

தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பன இலங்கையில் லொத்தர் சீட்டிலுப்பில் பிரதான நிறுவனங்களாக செயற்பட்டுவருவதுடன் அவை மத்திய அரசாங்கத்திற்கு முழுமையாகச் சொந்தமான நிறுவனங்களாகவும் விளங்குகின்றன. இரண்டு சபைகளும் வாரம் முழுவதும் பல்வேறு செயலற்ற மற்றும் உடனடி (கீறல்) லொத்தர்களை சீட்டிழுப்புச் செய்கின்றன. 2021 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபை 16 வகையான லொத்தர்களை (14 செயலற்ற மற்றும் 2 உடனடி) வெளியிட்டதோடு, அபிவிருத்தி லொத்தர் சபையினால் 9 வகையான லொத்தர்கள் (8 செயலற்ற மற்றும் 1 உடனடி) வெளியிடப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் 16 பில்லியன் ரூபாவுக்கும் மேலான பரிசுத் தொகைகள் இவ்விரு லொத்தர் சபைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அதிக வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் போன்ற அணுகப்படாத வாடிக்கையாளர்களைப் பெறுவதற்கான உத்திகளை அபிவிருத்தி செய்யும் அதே வேளையில் புதிய உயர் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுடன் வேகத்தை தக்கவைக்க மெய்நிகர் தளங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

8.10.1 தேசிய லொத்தர் சபை

தேசிய லொத்தர் சபையின் லொத்தர் விற்பனை வருமானமானது 2020 ஆம் ஆண்டில் ரூபா 18,041 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 17,292 மில்லியனாக 4.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அறிவிக்கப்பட்ட பரிசுகள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 8,668 மில்லியனிலிருந்து 3.6 சதவீதம் குறைந்து 2021 இல் ரூபா 8,352 மில்லியன் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த பங்களிப்பாகிய ரூபா 2,148 மில்லியன் தேசிய லொத்தர் சபை மூலம் 2021 இல் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது, இதில் விவசாயத் துறை - ரூபா 444 மில்லியன் (கொவிசெத), வீடமைப்பு அபிவிருத்தி - ரூபா 34 மில்லியன் (செவன), சுகாதாரம், மருத்துவ சேவைகள் மற்றும் தொழிலாளர் சேவைகள் - ரூபா 56 மில்லியன் (ஜாதிக சம்பத) மற்றும் ரணவிரு சேவா, விளையாட்டு சேவைகள் - ரூபா 45 மில்லியன் (சுப்பிரி வாசனா). மேலும், தேசிய லொத்தர் சபையானது நீரோகா மற்றும் சம்பத லக்ன வரம வின் விற்பனையைப் பயன்படுத்தி தேசிய சிறுநீரக நிதியத்திற்கு ரூபா 14 மில்லியன் பங்களிப்புக்களை வழங்கியுள்ளது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் 111 வர்த்தகர்கள், 3,004 முகவர்கள் மற்றும் சுமார் 17,784 விற்பனையாளர்களைக் கொண்டு நாடு முழுவதும் உள்ளடக்கிய முகவர் வலையமைப்பொன்றை தேசிய லொத்தர் சபை கொண்டிருந்தது. மேலும், அனைத்து பங்குதாரர்களுக்கும் செல்வத்தை உருவாக்கும் முக்கிய மூலோபாயத்திற்கு ஏற்ப அனைத்து பிரிவுகளுக்கும் தொடர்ந்து விரிவடைவடையச் செய்வதன் மூலம் லொத்தர் துறையில் வலுவான தயாரிப்புத் தொகுதியை தேசிய லொத்தர் சபை உருவாக்கியுள்ளது.

அட்டவணை 8.26 | தேசிய லொத்தர் சபையின் நிதி விளைவுகள்

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**16,015**	**19675**	**21,439**	**18,034**	**17,299**
லொத்தர் விற்பனை வருமானம்	16,747	20,438	22,079	18,041	17,292
நேர் வரிகளைக் கழிக்க - உற்பத்தி வரி	131	-	-	-	-
கழி: நேரல்லா வரிகள்	742	890	911	430	409
பெறுமதிசேர் வரி	236	287	282	-	-
வேறு வருமானங்கள்	377	414	553	423	416
செலவினம்	15,414	18,924	20,397	16,333	16,079
முகவர்,விற்பனையாளர் தரகுக் கட்டணம்	**3,103**	**3,573**	**4,005**	**3,383**	**3,242**
பிரகடனப்படுத்தப்பட்ட பரிசுகள்	7,995	9,834	10,608	8,668	8,352
டிக்கற் அச்சிடல் செலவுகள்	453	507	531	443	425
விநியோகம், விற்பனைகள், சந்தைப்படுத்தல்	1,246	1,534	1508	893	1,074
நிருவாகச் செலவுகள்	693	752	809	773	812
நிதிச் செலவு	40	43	25	10	12
திரட்டு நிதியம் மற்றும் தேசிய சிறுநீரக நிதியத்திற்கான பங்களிப்பு	2,016	2,427	2,638	2,205	2,162
வரிக்கு முன்னரான தேறிய இலாபம்	624	1038	1323	1,435	1,003
வருமான வரி	484	த.இ.	717	352	43
வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்	139	-38	606	1,083	960
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
முகவர் வலையமைப்பு	3,000	3,100	4,279	3,607	3,257
திரட்டு நிதிய பங்களிப்பு வருமான % இல்	12.12	12.34	12.3	12	12.06

மூலங்கள்: தேசிய லொத்தர் சபை, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.10.2 அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி லொத்தர் சபையின் வருவாய் திரட்டல் 2020 ஆம் ஆண்டில் ரூபா 15,033 மில்லியனில் இருந்து 2.2 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 15,364 மில்லியனினைக் கொண்டிருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது விலை கொடுப்பனவுகள் ரூபா 7,703 மில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 7,866 மில்லியன் வரை 2 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இச் சபை 2021 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 939 மில்லியனினைக் கொண்டு 64 சூப்பர் ஜாக்பாட் வெற்றியாளர்களை உருவாக்கியது. அபிவிருத்தி லொத்தர் சபை, மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் ஊடாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகிறது. இதேபோல், நிதி நெருக்கடியில் உள்ள நோயாளிகளுக்கு உதவுவதன் மூலம் அபிவிருத்தி லொத்தர் சபையால் உருவாக்கப்பட்ட நிதியால் சுகாதாரத் துறைக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டிற்கான இந்த பங்களிப்பு 2020 இல் ரூபா 2,775 மில்லியனிலிருந்து 17 சதவீதத்தினால் சரிவடைந்து ரூபா 2,305 மில்லியனினைக் கொண்டிருந்தது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில், நாடளாவிய ரீதியில் 89 விநியோகஸ்தர்கள், 2,591 முகவர்கள் மற்றும் சுமார் 19,056 விற்பனை உதவியாளர்களைக் கொண்ட முகவர் வலையமைப்பொன்றுடன் அபிவிருத்தி லொத்தர் சபை இயங்கியது. அபிவிருத்தி லொத்தர் சபையானது உள்ளூர் மக்களுக்கு டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்தி லொத்தர்களை வாங்க உதவும் வகையில “டீஎல்பீ சுவீப் எப்” எனும் செயலியை அறிமுகப்படுத்தியது.

அட்டவணை 8.27 | தேசிய லொத்தர் சபையின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**14,068**	**19,675**	**17,361**	**15,033**	**15,364**
லொத்தர் விற்பனை வருமானம்	14,628	16,583	17,805	15,400	15,730
கழி: நேரில் வரிகள்	647	722	734	367	366
பெறுமதிசேர் வரி	229	259	251	-	-
உற்பத்தி வரி	111	-	-	-	-
வேறு வருமானங்கள்	130	202	194	158	110
பதிவளிக்கப்பட்ட பரிசுகள்	297	367	347	331	342
செலவினம்	**11,569**	**13,225**	**14,237**	**12,339**	**12,667**
முகவர்,விற்பனையாளர் தரகுக் கட்டணம்	2,529	2,899	3,209	2884	2,947
பிரகடனப்படுத்தப்பட்ட பரிசுகள்	7,263	8,296	8,903	7,703	7,866
சீட்டிழுப்புச் செலவினம்	466	575	584	510	542
டிக்கற் அச்சிடற் செலவினம்	387	402	460	451	434
விநியோகம்,,விற்பனை, சந்தைப்படுத்தல்	494	589	539	284	341
நிருவாகச் செலவுகள்	419	464	542	507	537
வரிக்கு முன்னரான தேறிய இலாபம்	2,331	2,735	2,897	2,994	2,954
வருமான வரி	1819	553	235	11	83
வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்	**511**	**2,182**	**2,662**	**2,983**	**2,870**
சனாதிபதி நிதிய பங்களிப்பு	**507**	**2,058**	**2,428**	**2,297**	**2,305**
விற்பனையாளர்கள்	2,854	2,900	3,000	2,810	2,946
சனாதிபதி நிதிய பங்களிப்பு, வருமான % இல்	3.43	12.73	14	17.9	15

மூலம்: அபிவிருத்தி லொத்தர் சபை, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.11 கால்நடைவள மற்றும் பாற்பண்ணை உற்பத்திகள்

இலங்கை கால்நடைவள துறையானது தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபை மற்றும் மில்கோ (பிரைவேற்) லிமிட்டட் ஆகிய இரண்டு அரசுடமை முயற்சிகளைப் பிரதானமாகக் கொண்டுள்ளதுடன், அவை கால்நடைவள உற்பத்திகள் மற்றும் பாற்பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சமகால தரவுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் ஆண்டு பால் உற்பத்தி 4.5 சதவீதம் அதிகரித்த போதிலும், மொத்த பால் தேவையில் சுமார் 4.5 சதவீதம் மட்டுமே உள்நாட்டு உற்பத்தியால் பூர்த்தி செய்யப்படுகிறது. ஆளொருவருக்குப் பரிந்துரைக்கப்பட்ட தினசரி பால் நுகர்வு அளவை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைக்கு தன்னிறைவு நிலையை அடைய வருடத்திற்கு 1631.55 மில்லியன் லீற்றர் பால் தேவைப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட இனங்களுடன் உள்ளக பண்ணை வளர்ப்பினை அறிமுகப்படுத்துதல், தீவன விநியோகத்தின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கால்நடை தீவனங்களைப் பாதுகாத்தல் ஆகியவை உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

8.11.1 மில்கோ (பிரைவேற்) லிமிட்டட்

உள்ளூர் பால் பண்ணையாளர்களை வலுப்படுத்தும் அதே வேளையில் தூய பால் உற்பத்தியில் வளர்ச்சியை அடையும் நோக்கில் மில்கோ நிறுவனம் நிறுவப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 13.25 சதவீதத்தை மில்கோ சேகரித்துள்ளது.

மில்கோவின் தேறிய இலாபம் 2020 இல் ரூபா 230 மில்லியனிலிருந்து 43 சதவீதம் அதிகரித்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 330 மில்லியனினைப் பதிவுசெய்தது. இது கடந்த 6 ஆண்டுகளில் மில்கோவினால் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த இலாபமாக அமைந்த அதேவேளை, இதன் விளைவாக தலா பங்கிற்கான வருவாய் 2020 ஆம் ஆண்டில் ரூபா 7.19 இலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 10.31 வரை அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டில் வங்கியின் கடனில் ரூபா 191 மில்லியன் வரையான கணிசமான வீழ்ச்சியுடன் இணைந்து, அரசாங்கத்தின் படுகடன் உரிமைப்பங்கு மாற்றத்தால் ஏற்பட்ட நிதிச் செலவில் 75.8 சதவிகித வீழ்ச்சியும் மில்கோவின் நிதி நிலையைப் பலப்படுத்தியுள்ளது.

அம்பேவெல தொழிற்சாலை மாத்திரம் வருடத்திற்கு சுமார் 12,960 மெ.தொ உற்பத்தி செய்யும் திறன் கொண்டிருந்தாலும், 2021 ஆம் ஆண்டில் மில்கோ நிறுவனம் 3.6 மெ.தொ பால் மாவையே உற்பத்தி செய்துள்ளது. இது உள்நாட்டுத் தேவையை விட மிகக் குறைவானதாகும். எவ்வாறாயினும், இலாபம் ஈட்டும் போக்குகளின் நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் அதே வேளையில் சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக புதிய பசும் பால் விநியோகச் சங்கிலிகளை அடையாளம் கண்டு பால் மா உற்பத்தியை அதிகரிக்கும் திறனை நிறுவனம் விருத்தி செய்தல் வேண்டும்.

அட்டவணை 8.28 | வரையறுக்கப்பட்ட மில்கோ (தனி) கம்பனியின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**10,593**	**12,025**	**10,393**	**11,190**	**12,473**
பால் உற்பத்திகளின் விற்பனை	10,161	11,612	10,313	11,104	12,393
வேறு வருமானங்கள்	432	412	80	86	80
செலவினம்	11,199	12,708	11,256	10,960	12,143
நேரடிச் செலவுகள்	9,817	11,385	9,918	9,790	10,944
விற்பனை மற்றும் விநியோகம்	351	475	399	349	412
நிர்வாகம்	676	641	688	684	742
நிதிச் செலவு	**99**	**189**	**196**	**120**	**29**
ஏனைய செலவினங்கள்	256	18	55	17	17
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	-606	-683	(863)	230	330
நிலுவை வங்கிப் படுகடன்கள்	1418	1657	1,678	753	191
முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள்					
பால் சேகரிப்பு (மில்.லீற்)	96	91	67	67	68
பங்கு ரூபாவுக்கான சம்பாத்தியங்கள்	-18.98	-15.08	(27.30)	7.19	10.31

மூலம்: வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.11.2 தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபை

கால்நடைவள மற்றும் பாற்பண்ணைப் பொருட்களின் முன்னணி வழங்குநர்களில் ஒருவராக விளங்கும் தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை நாட்டில் தன்னிறைவை உருவாக்குவதற்கான தேசிய முயற்சிக்கு உரிய அங்கீகாரமாக புதிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை உட்புகுத்தி தரமான இனப்பெருக்க பொருட்கள், கால்நடைகள் மற்றும் விவசாயப் பொருட்களை உருவாக்குவதன் மூலம் கால்நடை மற்றும் பாற்பண்ணைத் தொழிலை மேம்படுத்துவதில் உறுதியுடன் ஈடுபட்டுள்ளது. மொத்த வருடாந்த பால் உற்பத்தி 10.36 மில்லியன் லீற்றராகவும் தேசிய உற்பத்தியில் தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபையின் ஒட்டுமொத்த பங்களிப்பு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 2.3 சதவீதமாகவும் உள்ளது.

தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை தற்போது 32 கால்நடைவள மற்றும் தெங்குப் பயிர் ஒருங்கிணைந்த பண்ணைகளை 41 தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை பால் விற்பனை நிலையங்கள் மற்றும் பண்ணை சார்ந்த 16 விற்பனை மையங்களின் வலையமைப்புடன் நிருவகித்து வருகிறது.

மொத்தமுள்ள 12,204 ஹெக்ரெயார் நிலப்பரப்பில், தென்னை முக்கோணத்தில் அமைந்துள்ள 10 பண்ணைகள் உட்பட சுமார் 3,908 ஹெக்ரெயார் நிலப்பரப்பில் 2021 இல் 17 மில்லியன் காய்கள் உற்பத்தி செய்யப்பட்டு, உற்பத்தியின் ஒரு பகுதி உள்ளூர் நுகர்வோரின் பாவனைக்காக தேங்காய் எண்ணெய்யாக மாற்றப்பட்டது. மேலும், இச் சபையானது 2021 இல் அதன் அனைத்து பண்ணைகளிலும் 2,400 மெட்ரிக் தொன் சேதன உரங்களை உற்பத்தி செய்தது. மேலும், இலங்கை கோழிப்பண்ணை அபிருத்தி (பிரைவேட்) லிமிட்டெட் ஒரு துணை நிறுவனமாகிய அதேசமயம் மகாவலி கால்நடைவள முற்சியாண்மை தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபையின் கூட்டுப்பங்காளியாவும் வந்துள்ளது.

விலங்குத் தீவன விலை அதிகரிப்புடன் பாற்பண்ணைத் துறையின் உற்பத்திச் செலவு கடுமையாக அதிகரித்துள்ள போதிலும் முந்தைய ஆண்டை விட 2021 இல் ஈட்டிய 12.87 சதவீத வருவாய் அதிகரிப்பு காரணமாக, தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை, ரூபா 158 மில்லியன் குறிப்பிடத்தக்க இலாபத்தை அடைய

அட்டவணை 8.29 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	**2,844**	**2,742**	**2,807**	**3,232**	**3,648**
செலவினம்	3,714	3,331	3,170	3,328	3,558
நேரடிச் செலவு	2620	2,254	2,099	2,230	2,454
நிர்வாகச் செலவு	892	843	983	1030	1043
விநியோகச் செலவு	15	2	15	26	27
ஏனைய செலவு	9	52	18	16	18
நிதிச் செலவு	178	181	55	26	16

வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	**-870**	**-589**	**-362**	**0.3**	**158**
நிலுவை வங்கிக் படுகடன்கள்	249	202	257	215	195
முக்கிய செயலாற்றுகை குறிகாட்டி					
தூய கால்நடை பால் (லீற்.'000)	14,368	15,834	12,432	12,000	9,774
எருதுப்பால் லீற்.'000)	635	715	649	580	587
ஆட்டுப்பால் லீற் '000)	12.8	13.5	14.8	15	13
தயிர் உற்பத்தி (லீற். '000)	482	515	533	420	431
யோகட். (80 அடகோப்பைகள் (எண்ணிக்கை) '000)	370	415	350	410	644

மூலம்:தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபை மற்றும் பொதுதொழில்முயற்சிகள் திணைக்களம்

8.12 சந்தைப்படுத்தலும் விநியோகமும்


8.12.1 லங்கா சதொச லிமிட்டட்

லங்கா சதொச லிமிட்டட் நிறுவனமானது இலங்கையின் மிகப்பெரிய சில்லறை விற்பனை வலையமைப்பைக் கொண்ட ஒரு அரசுடைமை நிறுவனமாகும். இது நாடளாவிய ரீதியில் 437 விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளதுடன் அவற்றில் 4500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள். 2021 ஆம் ஆண்டில் லங்கா சதொச லிமிட்டட் நிறுவனத்தின் தேறிய நட்டங்கள் 36 சதவீதம் வீழ்ச்சியடைந்து ரூபா 880 மில்லியனினைக் கொண்டிருந்தது. நிறுவனத்தின் மொத்த இலாப விகிதம் 10.5 சதவீதமாக இருந்தாலும், மொத்த விற்பனை 2020 ஆம் ஆண்டில் ரூபா 35,579 மில்லியனாக இருந்து 2021 இல் ரூபா 40,473 மில்லியன் வரை 14 சதவீதம் அதிகரித்துள்ளது. தொற்றுநோய் பரவலின் போது டுளூடு லங்கா சதொச நிறுவனத்தின் விற்பனையில் ஏற்பட்ட வளர்ச்சி இதற்கு முக்கிய காரணமாகும். 2021 இறுதிக்குள் லங்கா சதொச நிறுவனம் ரூபா 8 பில்லியனுக்கும் அதிகமான ஒரு பெரிய தொகையை செலுத்தவேண்டி ஏற்பட்டது. அது கடந்த காலத்தில் கொண்டிருந்த மோசமான கடன் தீர்வுத் திட்டங்களே இதற்குக் காரணமாகும். மேலும் சரக்குகளின் இருப்புகளை இடையூறு இல்லாமல் பெறுவதற்கும், வழங்குநர்களிடமிருந்து கவர்ச்சிகரமான தள்ளுபடிகளைப் பெறுவதற்கும் இந்தத் தொகைகளைத் தீர்ப்பது அவசியம். வர்த்தகக் கொடுப்பனவைக் குறைக்க உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மிகை எதுவும் இல்லாததால், பல ஆண்டுகளாக வழங்குநர் கடன் மூலம் நிதியளிக்கப்பட்ட நட்டம் இதற்கு முக்கிய காரணமாகும்.

சொத்துக்களை விட அதன் பொறுப்புகள் அதிகரித்த அடிப்படையில் பொதுத் திறைசேரி லங்கா சதொச நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மையை பராமரிக்க அதற்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குகின்றது. 2021 ஆம் ஆண்டில் லங்கா சதொச நிறுவனத்தின் மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, பொதுத் திறைசேரி லங்கா சதொச நிறுவனத்தின் சார்பாக ரூபா 11.47 பில்லியன் படுகடன் சேவைக் கடமைகளை நிறைவேற்றியது. மேலும், பொதுத் திறைசேரியானது ரூபா 3 பில்லியனைக் கொண்ட ஆறுதல் கடிதம் மற்றும் மொத்தம் ரூபா 3.24 பில்லியன் பெறுமதியான மற்றுமிரண்டு திறைசேரி உத்தரவாதங்களையும் லங்கா சதொச நிறுவனத்தின் சார்பாக மக்கள் வங்கிக்கு வழங்கியுள்ளது. எனவே, லங்கா சதொச நிறுவனத்திற்கு அதன் நிதி நிலை, சந்தை நிலை மற்றும் தொழில்துறைசெயற்பாட்டாளர் மூலோபாயத்திற்கு ஏற்ப செயல்திறனை மேம்படுத்த ஒரு சிறந்த செயல்நுணுக்கத் திட்டம் தேவைப்படுகிறது.

லங்கா சதொச நிறுவனம் அதன் விற்பனையை அதிகரிக்கவும் நட்டங்களைக் குறைக்கவும் முடிந்தாலும், பொதுத் திறைசேரியின் தொடர்ச்சியான நிதியுதவி ஒத்துழைப்பு இருந்தபோதிலும், அதன் செயல்பாடுகளின் முறிவுப் புள்ளியை அவர்களால் அடைய முடியவில்லை. இடைத்தரகர்களைக் குறைத்து, அத்தியாவசியப் பொருட்களை நேரடியாக இறக்குமதி செய்யும் அதேவேளை அளவுப் பொருளாதாரங்களில் இருந்து இலாபத்தைப் பெற முயற்சித்து வணிகம் செய்வதில் மேலும் கவனம் செலுத்தல் வேண்டும்.

அட்டவணை 8.12 : விற்பனையும் இலாபம் / (நட்டம்) உம்



மூலம்: லங்கா சதொச (தனியார்) நிறுவனம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

அட்டவணை 8.30 : லங்கா சதோச நிறுவனத்தின் நிதி உற்பத்தி விளைவு

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம்	30,377	30,070	26,242	36,799	41,458
விற்பனைகள்	29,663	29,166	25,492	35,579	40,473
நேரில் வருமானம்	713	904	750	1,220	985
செயற்பாட்டுச் செலவுகள்	31,810	31,387	27,885	37,682	41,936
விற்பனைச் செலவுகள்	27,102	25,518	22,263	31,806	36,217
ஏனைய செலவினங்கள்	4,708	5,869	5,622	5,876	5,719
தொழிற்பாட்டு இலாபம்/ நட்டம்	-1,433	-1,317	-1,643	-883	-478
நிதிச் செலவுகள் (தேறிய)	1,344	933	1,339	503	403
வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)	-2,777	-2,250	-2,982	-1,386	-880
விற்பனை நிலையங்களின் எண்.	320	403	423	416	437

மூலம்: லங்கா சதொச (தனியார்) நிறுவனம் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

8.13 பெருந்தோட்டத்துறை

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவை முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களாகத் தாபிக்கப்பட்டதுடன், அவற்றுக்குச் சொந்தமாக இருந்த அதிகளவான பெருந்தோட்டங்களது உரிமைகள், 23 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கு, அவற்றின் தங்கப் பங்குகளை அரசிற்கு ஒதுக்கிய விதத்தில், குத்தகைக்கு வழங்கப்பட்டன. பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளில் குருணாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டட், சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிட்டட்இ எல்கடுவை பிளான்டேஷன்ஸ் லிமிட்டட் மற்றும் களுபோவிட்டியான ரீ பக்ட்டரி லிமிட்டட் என்பன தேசிய பொருளாதாரத்திற்கான பெருந்தோட்டத்துறையின் முக்கிய பங்களிப்பை வலுப்படுத்தும் பொருட்டு, முழுமையான அரசுடைமை கம்பனிகளாகத் தாபிக்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிட்டட் மற்றும் குருணாகல் பிளான்டேஷன்ஸ் லிமிட்டட் ஆகியவை வரிக்கு முந்தைய இலாபமாக முறையே ரூபா 511 மில்லியனினையும் ரூபா 468 மில்லியனினையும் பதிவுசெய்ததுடன் 2020 இல் அவை முறையே ரூபா 283 மில்லியனாகவும் ரூபா 214 மில்லியனாகவும் காணப்பட்டன.

எல்கடுவை பிளான்டேஷன்ஸ் நிறுவனமானது 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டைத் தவிர்த்து தொடர்ச்சியான நட்டங்களைப் பதிவு செய்துள்ள போதிலும் 2021 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க இலாபகரமான தொழில்முயற்சியாக மாறி, வரிக்குப் பிந்தைய இலாபமாக ரூபா 318 மில்லியனினைப் பதிவு செய்தது.

முந்தைய ஆண்டில் ரூபா 937 மில்லியனுடன் ஒப்பிடுகையில் களுபோவிட்டியான ரீ பக்ட்டரி நிறுவனம், 2021 இல் ரூபா 1,175 மில்லியன் மொத்தப்புரள்வினைப் பதிவு செய்திருந்தாலும்கூட முக்கியமாக உற்பத்திச் செலவு 37 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக ரூபா 15 மில்லியன் நட்டத்தைச் சந்தி களுபோவிட்டியான ரீ பக்ட்டரி லிமிட்டட த்தது.

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் களுபோவிட்டியான ரீ பக்ட்டரி லிமிட்டட் ஆகியவை 2021 இல் நட்டத்தைப் பதிவு செய்துள்ளன, மேலும் பெருந்தோட்டத் துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்த நட்டங்கள், அவற்றின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் அவற்றின் இலாபத்தன்மை மற்றும் நீண்ட கால நம்பகத்தன்மையை மேம்படுத்தும் முயற்சியில் மூலோபாய இயக்கங்களுடன் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

2021 ஆம் ஆண்டில், தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொள்கைப் பணிப்புரையாக சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், அனைத்து பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளும் தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. மேலும், பெருந்தோட்டக் கைத்தொழில் முன்னோக்கிச் செல்லும் பாதையில் வணிக, சமூக மற்றும் சுற்றாடல் பேண்தகுநிலையை உறுதி செய்வதற்காக அரசுக்கு சொந்தமான பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கணிசமான மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், சுற்றுச்சூழல் சுற்றுலா, பயிர் பல்வகைப்படுத்தல், பெறுமதி சேர்கைக்கான முதலீடு, ஏற்றுமதி வருவாய் போன்றவற்றை உள்ளடக்கிய தனியார் துறையின் ஈடுபாட்டை மையமாகக் கொண்ட உத்திகளைப் பெறுவது, அரசாங்க நிலங்களிலிருந்து அதிகபட்ச வருமானத்தைப் பெறுவதற்காக ஆராயப்படும்.

அட்டவணை: 8.31 | அரசுடமை பெருந்தோட்டத் தொழில்முயற்சிகளின் நிதி நிலைமை

(ரூபா. மில்லியன்)

		உண்மையான			தற்காலிக	
		2017	2018	2019	2020	2021
குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	தொழிற்பாட்டுச் செயலாற்றுகை					
	தேங்காய் உற்பத்தி (மில்) தேங்காய்கள்)	11	13	16	11	15
	இறப்பர் உற்பத்தி (கி.கி)	119,486	113	107	107	91
	ஹெக்டயரொன்றுக்கான விளைச்சல் - தேங்காய் (காய்கள்)	3,426	4,018	5,212	4,084	5,142
	-இறப்பர் (கிகி)	689	652	677	653	575
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	553	613	499	685	932
	தேங்காய் விற்பனைகள் (ரூபா மில்)	459	532	403	583	798
	இறப்பர் விற்பனைகள் (ரூபா மில்)	35	27	29	30	37
	விற்பனைகளுக்கான மொத்தச் செலவு (ரூ.மில்)	316	356	386	409	412
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்.'. (நட்டம்)(ரூபா. மில்)	248	211	120	214	468
	பங்கிலாபங்கள் (ரூபா)	38	50	15	50	-
சிலோ பிளான்டே'ன்ஸ் லிமிட்	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேங்காய் உற்பத்தி (மில்) தேங்காய்கள்)	12	8	15	12	15
	ஹெக்டயரொன்றுக்கான விளைச்சல்(காய்)	4,148	2,823	5,025	3,854	4,454
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	557	350	446	673	1,050
	தேங்காய் விற்பனைகள் (ரூபா மில்)	516	291	348	592	802
	விற்பனைச் செலவு (ரூபா. மில்)	362	350	356	398	521
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்) (ரூபா. மில்)	126	-35	64	283	511
	பங்கிலாபங்கள் (ரூபா)	10	-	10	50	-
இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	பச்சை இலைகள் (மெ.தொ.)	2,711	3,144	2,530	2,391	2,108
	தேங்காய் உற்பத்தி (மில்) தேங்காய்கள்)	1	1	1	1	1
	இறப்பர் உற்பத்தி (கி.கி)	77,348	98,978	87,582	104,231	124,590
	ஹெக்.கான விளைச்சல். - பச்சை இலை (கி.கி)	500	590	664	654	523
	- தேங்காய் (காய்கள்)	2,837	3,099	4,445	2,952	3,770
	- இறப்பர் (கி.கி)	356	456	274	386	424
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	327	333	260	305	324
	தேயிலை விற்பனைகள் (ரூபா.மில்)	247	273	201	222	210
	தேங்காய் விற்பனைகள் (ரூபா மில்)	24	26	23	40	53
	இறப்பர் விற்பனை (ரூபா.மில்)	34	32	28	31	55
	விற்ப.க்கான மொத்தச் செலவு (ரூ.மில்)	355	399	380	334	367
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா. மில்)	37	-34	-61	-30	318
	திறைசேரி மானியங்கள் - வருமானம்	173	95	-	–	–
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	ஹெக்டயரொன்றுக்கான விளைச்சல்	152	150	190	160	140
	சராசரி விலை ரூபா.'.கிகி	350	400	390	280	360
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	101	119	107	95	133
	தேறிய மரமுந்திரிகை விற்பனை	90	100	84	68	90
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்.'. (நட்டம்)(ரூபா. மில்)	16	18	43	15	16
	திறைசேரி மானியங்கள் - வருமானம்	58	50	60	60	65
	- மூலதனம்	80	55	70	85	64

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	தொழிற்பாட்டுச் செயலாற்றுகை					
	தேயிலை உற்பத்தி (மெ.தொ)	1,428	1,435	1,371	1,486	1,636
	இறப்பர் உற்பத்தி (மெ.தொ)	379	389	363	444	404
	ஹெக்.றுக்கான விளைச்சல் -தேயிலை (கி.கி.)	487	507	487	535	583
	-இறப்பர் (கி.கி.	752	682	601	826	793
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	1,181	896	969	1,134	883
	உற்பத்திச் செலவு (ரூபா.மில்.)	1,562	1,374	1,726	1,485	1,365
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்.'. (நட்டம்)(ரூபா.மில்)	(381)	-478	-758	-351	-481
	திறைசேரி மானியங்கள் - வருமானம்	679	425	468	0	30
	- மூலதனம்	-	-	-	-	
வ/ப கலுகேபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேயிலை உற்பத்தி (மெ.தொ)	1,532	1,576	1,405	1,742	1,803
	இறப்பர் உற்பத்தி (மெ.தொ)	42	33	28	29	19
	ஹெக்.க்கான விளைச்சல் - தேயிலை (கி.கி.)	532	546	478	601	634
	- இறப்பர் (கி.கி.)	649	510	432	474	272
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்)	663	598	536	767	845
	உற்பத்திச் செலவு (ரூபா.மில்.)	740	721	787	865	1,028
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்.'. (நட்டம்)(ரூபா. மில்)	(95)	-148	-330	-150	-232
	திறைசேரி மானியங்கள் - வருமானம்	58	50	60	60	65
	- மூலதனம்	80	55	70	85	64
வ/ப கலுகேபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	தேயிலை உற்பத்தி (மெ.தொ)	1,703	1,474	1,460	1,454	1,715
	விற்பனைத் தொகை (மெ.தொ)	1,632	1,377	1,431	1,347	1,628
	நிதிச் செயலாற்றுகை					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	935	1,004	971	937	1,175
	உற்பத்திச் செலவு (ரூபா மில்)	881	983	985	846	1,159
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்)(ரூபா. மில்)	31	-7	-53	43	-15
வ/ப கலுகேபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	**தொழிற்பாட்டுச் செயலாற்றுகை**					
	சீனி உற்பத்தி (மெ.தொ)	42,822	42,770	41,175	39,696	48,177
	ஸ்பிரிட் உற்பத்தி (000 லீற்றர்கள்)	7,045	9,787	5,210	8,848	13,037
	Financial Performance					
	மொத்த வருமானம் (ரூபா. மில்லியன்)	7,616	6,243	7,546	8,978	12,313
	சீனி விற்பனை (ரூபா.மில்.)	4,637	3,149	5,458	3,882	5,994
	ஸ்பிரிட் விற்பனை (ரூபா.மில்.)	2,978	3,094	2,065	4,739	6,272
	வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்)(ரூபா.மில்)	402	144	(1,312)	1,171	1,577

8.14. சுகாதாரம்

8.14.1 அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம்

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனமானது 780 வகையான மருந்துகளை பொதுவான வடிவத்தில் இறக்குமதி செய்து மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதுடன், நாடளாவிய ரீதியில் 50 ஒசுசல நிலையங்கள், 94 அதிகாரம்பெற்ற ஒசுசல நிலையங்கள், 05 அங்கீகரிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் 51 விநியோகத்தர்கள் ஊடாக இந்த மருந்துகளை விநியோகிக்கின்றது. மேலும், கொவிட் தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கும் நிருவகிப்பதற்குமான அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 80,257 மில்லியனாகவும் 2020 இல் ரூபா 63,122 மில்லியனுடன் ஒப்பிடும்போது இது 27 சதவீத அதிகரிப்பாகவுமிருந்தது. 2021 இல் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருவாயில் 88 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதன் முக்கிய வாடிக்கையாளர் மருத்துவ வழங்கல் பிரிவு ஆகும். தவிரவும், 2020 இல் ரூபா 697

மில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 580 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த நிதிச் செலவுடன், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் அடிமட்ட வரிசையானது, கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா 2,546 மில்லியன் வரிக்கு முந்தைய இலாபத்துடன் ஒப்பிடும்போது 24 சதவீத அதிகரிப்புடன் ரூபா 3,157 மில்லியனினை அடையப்பெற்றது.

இதற்கிடையில், மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறத்தக்கவைகள் 2020 ஆம் ஆண்டில் ரூபா 34,425 மில்லியனிலிருந்து 2021 இன் இறுதியில் ரூபா 52,850 மில்லியன் வரை கணிசமாக அதிகரித்துள்ளமையால் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் பணப்புழக்க நிலையைப் பராமரிப்பதில் சவாலை எதிர்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், மருத்துவமனை வலையமைப்பிற்கு மருந்துப் பொருட்களை சீராக வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்குத் தேவையான பணப்புழக்க நிலையை பராமரிப்பதற்காக வங்கி நிதியை ஏற்பாடு செய்வதற்கு தேவையான உத்தரவாதத்தை பொதுத் திறைசேரி வழங்கியது. மேலும், இலவச சுகாதாரக் கொள்கையின் கீழ் அதிகரித்து வரும் மருந்துப் பொருட்களுக்கான தேவையை சமாளிக்கும் வகையில் வரவுசெலவு திட்ட ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளின் செயல்திறன், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திற்கும் மருத்துவ வழங்கல் பிரிவின் கொள்முதல் ஏற்பாட்டில் முறைமை மேம்பாட்டிற்கும் இடையேயான ஒருங்கிணைப்பின் வெற்றியில் பெரும்பாலும் தங்கியுள்ளது. இது, மருந்துக் கொள்முதல் மீதான பெரிய மற்றும் அதிகரித்து வரும் செலவினங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு வெளிப்படையான அடிப்படையில் மருத்துவத்தின் ஆண்டுத் தேவையை எளிதாக்குவதற்கு மேலாண்மை தகவல் அமைப்பை மேம்படுத்தல் வேண்டும். மருந்துகளின் வீணடிப்புக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதும் முக்கியமானது. ஒசுசல விற்பனை நிலையங்களை இலாபகரமாக்குவதன் மூலமும் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலமும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான உத்திகளை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் உருவாக்குதல் வேண்டும். மேலும், பணத்திற்கான மதிப்பையும் வெளிப்படைத்தன்மையையும் உறுதி செய்வதற்காக கூட்டுத்தாபனம் தனது கொள்முதல் நடைமுறைகளை மின்-கொள்முதல் உள்ளிட்ட நவீன அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேம்படுத்துவதும் அவசியமாகும்.

அட்டவணை: 8.32 | அரச மருந்தாக்கல் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள்

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம் 9ரூபா.மில்)	32,564	38,895	51,885	63,122	80,257
அரச மருத்துவ வழங்கல் பிரிவு (ரூபா.பில்லியன்)	25,970	31,437	42,960	54,324	70,811
அ.ம.கூ. (ரூபா மில்லியன்)	6,593	7,458	8,925	8,798	9,446
செலவினம் (ரூபா.மில்)	31,025	37,222	49,479	60,173	76,616
தொழிற்பாட்டு ரீதியான (ரூபா மில்லியன்)	28,996	34,998	46,888	57,457	73,491
நிருவாக (ரூபா மில்லியன்)	1,288	1,532	1,620	1,754	1,967
ஏனைய (ரூபா.மில்)	741	692	971	962	1,158
ஏனைய வருமானம் (ரூபா.மில்)	53	74	91	287	88.5
தேறிய நிதி வருமானம் (ரூபா.மில்)	-31	-62	-321	-690	-573
வரிக்கு முன்னரான இலாபம் (ரூபா.மில்)	1,560	1,685	2,176	2,546	3,157
கொள்முதல் எண்ணிக்கை	5,983	7,901	7,773	7,269	5,336
ஒசுசல விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை	37	40	45	45	50
விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை	48	48	49	53	51
அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்களின் எண்ணிக்கை	4	4	4	4	5
அதிகாரமளிக்கப்பட்ட ஒசுசலகளின் எண்ணிக்கை	102	102	103	104	94

மூலம் : அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபனம் மற்றும் அரச தொழில்முயற்சிகள் கூட்டுத்தாபனம்

8.14.2 அரச மருந்தாக்கற்பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

அரச மருந்தாக்கற்பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனமானது பிரிட்டிஷ் பார்மகோபோயா (பீ) மற்றும் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் பார்மகோபோயா (ருஸ்பீ) ஆகியவற்றின் சர்வதேச தராதரங்களைப் பயன்படுத்தி 90 மருந்துப் பொருட்களுக்கான சூத்திரங்களை உருவாக்கியுள்ளது.

அரச மருந்தாக்கற்பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திலிருந்து வரும் தனது வருவாயை 2021 ஆம் ஆண்டில் ரூபா 6,963 மில்லியனாக சற்றே அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் இவ் வருவாய் ரூபா 6,639 மில்லியன் ஆகும். அரச மருந்தாக்கற்பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருவாய் 2020 ஆம் ஆண்டில் ரூபா 7,648 மில்லியனினைக் கொண்டிருந்த

அதேவேளை, 2021 ஆம் ஆண்டில் இது 12 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 8,539 மில்லியனினை அடையப்பெற்றது. அதன் விளைவாக அதன் இலாபம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,161 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2021 இல் ரூபா 1,238 மில்லியன் வரை அதிகரித்தது.

எவ்வாறாயினும், அரசாங்க கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் முன்னுரிமைக்கு இணங்க, சர்வதேச தராதரங்களை உறுதி செய்யும் அதே வேளையில், அதிக கேள்வி மற்றும் அதிக விலை கொண்ட மருந்துகளை உற்பத்தி செய்ய புதிய மருந்தாக்கல் வலயத்தை நிறுவ அரச மருந்தாக்கற்பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

அட்டவணை: 8.33 | அரச மருந்தாக்கல் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள்

(ரூபா. மில்லியன்)

விபரம்	உண்மையான				தற்காலிக
	2017	2018	2019*	2020*	2021
வருமானம் (ரூபா.மில்)	3,175	4,622	5,647	7,648	8,539
மருத்துவ வழங்கல் பிரிவு (ரூபா.மில்)	2,484	3,929	4,693	6,639	6,963
அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் (ரூபா.மில்)	11	24	6	6.6	94
ஏனைய (ரூபா.மில்)	680	669	948	1,002	1,482
தொழிற்பாட்டு செலவினம் (ரூபா.மில்)	2,952	4,319	5,090	6,588	7,471
விற்பனைச் செலவு (ரூபா.மில்)	2,667	3,991	4,743	6,281	7,099
நிர்வாகம் (ரூபா.மில்)	205	242	238	247	244
விற்பனையும் விநியோகமும் (ரூபா.மில்)	68	76	99	49	109
ஏனைய தொழிற்பாட்டு (ரூபா.மில்)	12	10	10	11	19.7
ஏனைய வருமானம் (ரூபா.மில்)	21	6	7	7	14
தேறிய நிதி வருமானம் (ரூபா.மில்)	78	51	28	94	157
வரிக்கு முந்திய இலாபம் (ரூபா.மில்)	322	360	592	1,161	1,238
முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள்					
உற்பத்திகளின் எண்ணிக்கை (விள்ளைகல், மாதிதிரை எண்ணிக்கை)	1,523	1,897	2,400	3,015	3,043

மூலம் : அரச மருந்தாக்கள் கூட்டுத்தாபனம் மற்றும் அரச தொழில்முயற்சிகள் கூட்டுத்தாபனம்

அட்டவணை 8.34 : ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசணைகள்
காப்புறுதி			
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் (SLECIC)	ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதிக் கடன் காப்புறுதி மற்றும் கடன் உத்தரவாத சேவைகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதித் துறைக்கு ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குதல	மொத்த தொழிற்பாட்டு வருமானம் 2020 இல் ரூபா 219 மில்லியனிலிருந்து 2021 இல் 24.2 சதவீதம் அதிகரித்து ரூபா 272 மில்லியனினைக் கொண்டிருந்ததுடன் தொழிற்பாட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகிய இரண்டினதும் கணிசமான அதிகரிப்பு காரணமாக இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முந்திய இலாபம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 265.2 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 309.9 மில்லியனாக 16.8 சதவீத்தினால் அதிகரித்தது.	உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பெருளாதாரம் மந்தநிலையை அடைந்தமை மற்றும் அந்நியச் செலாவணி விதம் நிலையற்றுக் காணப்பட்டமை
விவசாய, கமத்தொழில் காப்புறுதிச் சபை (AAIB)	விவசாயக் காப்புறுதித் திட்டம், விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மீனவர் என்பவற்றை நடை முறைப்படுத்துகின	கமத்தொழில் காப்புறுதி திட்டத்தில் தொழிற்பாட்டு இலாபம் அதிகரித்ததன் விளைவாக விவசாய, கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தேறிய மிகை 2020 இல் ரூபா 1,257.0 மில்லியனிலிருந்து 100.5 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,779.6 மில்லியனினைக் கொண்டிருந்தது.	காப்புறுதித் தவணைகள் மற்றும் காப்புறுதிக் கொடுப்பனவிற்கான நிதி உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் என்பனவற்றிக்கு இடையில் பொருத்தப்பாடின்மை
புதுப்பிக்கமுடியாத மூலவளங்கள்			
இலங்கை கனிம மணல் கம்பனி (LMSL)	பாரமான கனிய மணல்களை அகழ்ந்து, தயார்படுத்தி சந்தைப்படுத்துதல். கனிய மணல்களைச் சுத்திகரித்து தயார்படுத்தும் போது கிடைக்கக் கூடிய உற்பத்திகளைத் தயாரித்து விற்பனை செய்தல்.	இலங்கை கனிம மணல் கம்பனியின் வருவாய் 2020 இல் ரூபா 697 மில்லியனில் இருந்து 2021 இல் ரூபா 2,720 மில்லியனாக கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், இலாபமும் 2020 இல் ரூபா 69 மில்லியனிலிருந்து 2021 இல் ரூபா 1,205 மில்லியனாக அதிகரித்தது.	நூட்டினுள் பெறுமதி சேர்க்கைக்கான சாத்தியப்பாடுகளை இலங்கை கனிம மணல் கம்பனி ஆராய்வது அவசியமாகும்
இலங்கை பொஸ்பேட் கம்பனி (LPL)	தேயிலை, இறப்பர், தென்னை போன்ற நீண்ட கால விவசாயப் பயிர்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படும் பொஸ்பேட் பாறைகளை அகழ்வு செய்து, தயார்படுத்தி விற்பனை செய்தல்.	இலங்கை பொஸ்பேட் கம்பனியின் வருவாய் 2020/21 இல் ரூபா 750 மில்லியனிலிருந்து 2020/21 இல் ரூபா 661 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, இலங்கை பொஸ்பேட் கம்பனியின் இலாபம் 2020/2021 இல் ரூபா 150 மில்லியனிலிருந்து 2021/2022 இல் 22 சதவீதத்தினால் குறைந்து 117 மில்லியனினைக் கொண்டிருந்தது.	லங்கா பொசுபேற்று நிறுவன் புதிய உற்பத்திகளைத் துவங்குவதற்கான சாத்தியப்பாடுகள் மற்றம் தரமான பசளைகளை உள்நாட்டில் உற்பத்திசெய்வதற்கான வசதிகள் தொடர்பில் ஆய்வுசெய்வது அவசியமாகும்.

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசணைகள்
கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடெட் (KGLL)	கைத்தொழில் மூலப் பொருள் என்ற வகையில் கிரபைற் பாறைகளை அகழ்தல், பதப்படுத்தல் மற்றும் விற்பனைசெய்தல்	2021.′.2022 ஆம் ஆண்டில் கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிட்டெடின் வருவாய் முந்தைய ஆண்டை விட 38 சதவீதத்தினால் ரூபா 88 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, நிறுவனத்தின் இலாபம் 2020.′.21 இல் ரூபா 14 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 4 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.	கஹடகஹ கிரபைட் லங்கா லிமிடெட் ஆனது முடிவுப் பொருட்களுக்கான பெறுமதிசேர்கை தொடர்பிலான சாத்தியப்பாடுகளை கண்டறிதல் வேண்டும்
சுகாதாரம்			
இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட் கூட்டுத்தபானம் (SLADC)	இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தபானமானது தரமான ஆயுர்வேத மருந்துகளை தயாரித்து விநியோகிப்பதைத் தனது அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இக்கூட்டுத்தாபனம் 51 வகை யான மருந்துப் பொருட்களைத் தயாரித்து அரசாங்க வைத்திய சாலைகளுக்கும், ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் தனியார் துறையினருக்கும் விநியோகம் செய்கின்றது.	இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் வருவாய் புதிய சந்தைப்படுத்தக்கூடிய தயாரிப்பு வகைகளை அறிமுகப்படுத்தியதன் காரணமாக, 2020 இல் ரூபா 676 மில்லியனுடன் ஒப்பிடும்போது 18 சதவீதத்தினால் அதிகரித்து 2021 இல் ரூபா 800 மில்லியனாகக் காணப்பட்டது. இருப்பினும், கடந்த ஆண்டில் ரூபா 9 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் நிருவாகத்தில் 12 சதவீதம் அதிகரிப்பும் விற்பனை மற்றும் விநியோக செலவு 18 சதவீத அதிகரிப்பும் 2021 இல் 21 ரூபா மில்லியன் நட்டத்திற்கு வழிவகுத்தது.	கொவிட் நோய்த் தொற்று காரணமாக ஆயர்வேத மருந்துப் பொருட்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. ஆயினும், மூலப் பொருட்கள் என்ற வகையில் மருந்து மூலிகைப் பற்றாக்குறையானது இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தபனத்திற்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது. மூலப் பொருட்களின் சுமுகமான பாய்ச்சலினை உறுதிசெய்வதற்காக மருந்து மூலிகை உற்பதியினை விரிவுபடுத்த வேண்டுமென்பதுடன் நவீன பதப்படுத்தல் செயற்பாட்டின் மூலம் அதன் உற்பத்தியினை அதிகரிக்கவும் நடவடிக்கை ஏடுக்கவேண்டும்.
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை (SJGH)	ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கட்டணம் அறவிடும் ஒரே அரசாங்க வைத்தியசாலையாகவும் மூன்றாம்நிலை உசாவுகை நிலையமாகவும் உள்ளது. அது குணப்படுத்தல் சுகாதாரச் சேவைகளையும் பட்டதாரி மாணவர்களுக்கும் பட்டப்பின் மருத்துவ மாணவர்களுக்கும் கல்விப் பயிற்சிகளை வழங்குகின்றது.	மருத்துவமனை பராமரிப்பு வருமானம் 2020 இல் ரூபா 2,353 மில்லியனுடன் ஒப்பிடும் போது கிட்டத்தட்ட 26 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 2,968 மில்லியனினை அடையப்பெற்றது. இருப்பினும், 2021 இல் ரூபா 1,969 மில்லியன் வரவுசெலவு திட்ட உதவி இருந்தபோதிலும் ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை 2021 ஆம் ஆண்டில் ரூபா 258 மில்லியன் நட்டத்தைப் பதிவுசெய்தது.	நவீக தொழில் தொழில் நுட்பத்துடனும் ஆய்வு கூடவசதிகளுடன் ஜயவர்தனபுர வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவினை அபிவிருத்தி செயவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்ரீ.ஜ..பொ. வைத்தியசாலை நோயாளர்களுக்கு தனியார்த் துறை வைத்தியசாலைகளுடன் போட்டியிடும் அளவிற்கு சர்வதேச தரத்திலான சிறந்த பராமரிப்புச் சேவைகளை வழங்குவதன் மூலம் சர்வதேச தரத்தில் அதன் தரச் சின்னத்தினை மேம்படுத்துவது அவசியமாகும்.
ஊடகம்			
சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னல் (ITN)	இலங்கையின் முன்னோடித் தொலைக்காட்சி நிலையாமான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு, செய்திகள், தொலைக்காட்சி நாடகங்கள், ஆவணத் திரைப்படங்கள், கல்வி நிகழ்ச்சிகள், சிறுவர் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், ரியலட்டி ரீவீ, சமய நிகழ்ச்சிகள் போன்றவை உள்ளிட்ட பலதரப்பட்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்து சுயாதீன தொலைக்காட்சி, ஜரீஎன், வசந்தம் ரீவி, ஜரீஎன் எ/ப் எம், வசந்தம் எ/ப் எம் என்பவற்றின் ஊடாக தயாரித்து ஒலிபரப்பரப்புகின்றது	மொத்த வருமானம் 22 சதவீதத்தினால் அதிகரித்து 2020 உடன் ஒப்பிடும்போது 2021 இல் ரூபா 1,408 மில்லியனாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் விற்பனைச் செலவு 23 வீதத்தாலும் இதர செலவுகள் 26 வீதத்தாலும் முறையே ரூபா 503 மில்லியன் மற்றும் ரூபா 1,247 மில்லியன்களாக அதிகரித்தது. இதனால் 2021 இல் தேறிய நட்டம் 37 சதவீதம் அதிகரித்து ரூபா 344 மில்லியன்களாக இருந்தது.	சு.தொ.நி. ஆதன் நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினை மேம்படுத்தவும் அதன் நேயர் வட்டத்தினை அதிகம் கவரும் வகையிலும் தரமான நிகழ்ச்சிகளை மேபடுத்துவதற்கான மூலோபாயங்களை மேம்படுத்த வேண்டும்.
இலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (SLRC)	ரூபவாஹினி, நேத்ரா ரீவி அலைவரிசை, ஐ அலைவரிசை ஆகிய மூன்று அலைவரிசைகளின் ஊடாக தகவல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சி தயாரித்து ஒலிபரப்பரப்புதல	2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் வருவாய் 9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,165 மில்லியனாகவும் மொத்த செலவினம் 5 சதவீதத்தினால் குறைந்து ரூபா 1,882 மில்லியனாகவும் காணப்பட்டது. இதன் விளைவாக, 2021 இல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அதனது தேறிய நட்டத்தை 5 சதவீதத்தினால் குறைத்து ரூபா 224 மில்லியனினைக் கொண்டிருந்தது. 2020 இல் ரூபா 310 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு வரவு செலவு திட்ட உதவியாக பொதுத் திறைசேரியால் 2021 இல் ரூபா 164 மில்லியன் வழங்கப்பட்டது. மேலும் 2021 இல் உரிமைப்பங்குகளாக ரூபா 198 மில்லியன் வழங்கப்பட்டது.	இ.ரூ.கூ. ஆதன் நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் அதன் வாசகர் வட்டத்தினை அதிகம் கவரும் வகையிலும் தரமான நிகழ்ச்சிகளை மேபடுத்துவதற்கான மூலோபாயங்களை மேம்படுத்த வேண்டும். இ.ரூ.இ.கூ. தனது வணிகத் திட்டத்தில் அடையாளங் கண்ட மூலோபாய உத்திகளை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசணைகள்
இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC)	இலங்கையிலுள்ள மிகப் பழைய வானொலி நிலையம் என்ற வகையில், 06 தேசிய அலைவரிசைகளின் ஊடாகவும் (சிங்கள தேசிய சேவை, தமிழ் தேசிய சேவை, வர்த்தக சேவை, சிட்டி எ.ஃ.ப்எம், தென்றல் சேவை, ஆங்கில சேவை) 06 பிராந்திய அலைவரிசைகளின் ஊடாகவும் (ரஜரட்ட எ.ஃ.ப்எம், ருஹுணு எ.ஃ.ப்எம், கந்துரட்ட எ.ஃ.ப்எம், பியேரி எ.ஃ.ப்எம், யாழ் எ.ஃ.ப்எம், வயம்ப சேவை மற்றும் 1 சமுதாய வானொலி அலைவரிசை (தம்பானை) ஒலிபரப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது	2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் வருவாய் 16 சதவீதம் அதிகரித்து ரூபா 631 மில்லியனாகவும் நிருவாக செலவுகள் 11 சதவீதமாகக் குறைந்தும் காணப்பட்டது. தன் விளைவாக, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தேறிய இலாபமாக ரூபா 9 மில்லியனினை 2021 இல் பதிவுசெய்தது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு 2020 ஆம் ஆண்டின் ரூபா 440 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் வரவுசெலவுதிட்ட உதவியாக ரூபா 345 மில்லியன் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டது. மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 42.85 மில்லியனும் உரிமைப்பங்குகளாக ரூபா 90 மில்லியனும் 2021 இல் வழங்கப்பட்டன.	இ.ஒ.கூ. ஆதன் நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் அதன் வாசகர் வட்டத்தினை அதிகம் கவரும் வகையிலும் தரமான நிகழ்ச்சிகளை மேபடுத்துவதற்கான மூலோபாயங்களை மேம்படுத்த வேண்டும். இ.ஒ.கூ. தனது வணிகத் திட்டத்தில் அடையாளங் கண்ட மூலோபாய உத்திகளை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம்			
இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை (SLHB)	இலங்கை கலைஞர்களின் பாரம்பரிய திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் மூலம் கைப்பணிப் பொருட்களின் வலைப்பின்னலை விரிவுபடுத்தி பாரம்பரிய கைப்பணியினை மேம்படுத்துவதற்காக அன்பளிப்புக்கள் மற்றும் சின்னங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் சந்தைப்படுத்தல். தற்போது, பரிசுகள் மற்றும் நினைவுப்பொருட்களை விற்பனை செய்யும் கடைகளைக் கொண் 11 கிளைகள் தீவு முழுவதும் அமைந்துள்ளன.	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை கடந்த சில வருடங்களாக வருடாந்தம் அதன் விற்பனையில் தொடர்ந்து நட்டத்தை சந்தித்து வருவதோடு 2021 இல் அது ரூபா 124 மில்லியனாக இருந்தது. இது 2020 ஆம் ஆண்டின் ரூபா 195 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 37 சதவீதம் குறைவாகும். கொவிட்-19 பரவலின் தொடர்ச்சி மற்றும் தொடர்புடைய காரணிகள் பல ஆண்டுகளாக மேற்கூறிய வணிகச் சுருக்கத்திற்குக் காரணமாய் அமைந்தன. எவ்வாறாயினும், 2020 உடன் ஒப்பிடுகையில், இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை அதன் தேறிய நட்டத்தை 2021 இல் 67 சதவீதத்திலிருந்து குறைக்க முடிந்தது, 2021 இல் தேறிய நட்டம் ரூபா 35 மில்லியனாகவும் 2020 இல் ரூபா 106 மில்லியனாகவும் இருந்தது.	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை மூலோபாய அணுகுமுறைகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களை பன்முகப்படுத்த முயற்சிக்க வேண்டும். அவர்கள் முன்பை விட நிகழ்நிலை சந்தைப்படுத்தல் மற்றும் கடல் கடந்த சந்தைப்படுத்தல் மூலம் முன்னேறல் வேண்டும்..
அரச மரக் கூட்டுத்தாபனம் (STC)	மரக் குற்றிகளைக் அறுத்து கொள்வனவு செய்து அவற்றைப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக மாற்றுதல். மரக் கட்டைகள், கிழிக்கப்பட்ட பலகைகள் மற்றும் முடிவுப் பொருட்களின் விற்பனை. மீள்காடாக்கம்.	2020 இன் ரூபா 3,982 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் வருமானம் ரூபா 5,696 ஆக 43 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேலும், தேறிய இலாபம் 2020 இன் ரூபா 464 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 1,236 மில்லியனாக 166 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அரச மரக் கூட்டுத்தாபனம் 2021 இல் ரூபா 100 அறவீட்டினைச் செலுத்தியுள்ளது.	தொழில்நுட்ப உட்பாய்ச்சல் ஊடாக போட்டித்தன்மைமிக்க நலன்களை அடைந்துகொள்வதனை இலக்காகக் கொள்வது நிறுவனத்தின் நிலைபேற்றுத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகும் மாற்றமுறுகின்ற சந்தை வடிவமைப்பிற்கு அமைய பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக தொழிலாளர்களை தொடர்ச்சியாகப் பயிற்றுவிப்பது அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான விடயமாகும். (உதா. தளபாடங்கள்)
அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகம் (STC)	முன்னணி அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அரச விநியோகக் குழுவாக, அலுவலக எழுதுபொருள் மற்றும் உபகரணங்கள், கட்டுமானம் மற்றும் வன்பொருள், அலுவலக தளபாடங்கள் மற்றும் உள்துறை வடிவமைப்புகள், வீட்டு மற்றும் பொழுதுபோக்கு பொருட்கள், விளையாட்டு பொருட்கள், த.தொ.நு தயாரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை எஸ்.டி.சி வழங்குகிறது. ரூபா சேவைகள், மின் மற்றும் மின்னணுவியல், எ/ப்.எம்.சி.ஜி, தானியங்கி தயாரிப்புகள் (பேட்டரி மற்றும் டயர்), விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், இரசாயன பொருட்கள் போன்றவைகளை வழங்கல்	2021 ஆம் ஆண்டு அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கு நிதி ரீதியாக சிறந்த ஆண்டாகும், மேலும் அது 2020 இல் ஏற்பட்ட ரூபா 120 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021 இல் இது 157மூ அதிகரிப்பாகிய ரூபா 67 மில்லியன் தேறிய இலாபத்தைப் பதிவு செய்தது. 2020 உடன் ஒப்பிடும்போது 2021 இல் விநியோகம் மற்றும் நிர்வாகச் செலவுகளை நிருவகிப்பதை மேம்படுத்தியுள்ளனர். 2021 இல்இந் நிறுவனத்தின் வெற்றிக்குப் பின்னால் கொவிட் தொற்றுநோய்களின் போது சந்தைப் போட்டியாளர்களுக்கு எதிரான திறனை மேம்படுத்துவதற்கான அரசாங்க ஆதரவு மற்றும் சிறந்த நிருவாக உத்திகள் உள்ளன.	அ.வ.கூ தனது வணிக மேம்பாட்டு உத்திகளைத் தொடர வேண்டும என்பதுடன் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அதன் தயாரிப்பு வகைகளை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் (SPC)	அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் பாடசாலைப் பாடப் புத்தகம், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் லொத்தர்களை அச்சடிக்கும் பணியில் ஈடுபடுகிறது.	2020 இல் வருவாய் ரூபா 1,821 மில்லியனில் இருந்து 10 சதவீதம் குறைந்து 2021ல் ரூபா 1,633 மில்லியனாக இருந்தது. மேலும், தேறிய நட்டம் 2020 இல் 44 மில்லியனுடன் ஒப்பிடும்போது 539 சதவீதம் அதிகரித்து 2021 இல் ரூபா 281 மில்லியனினைப் பதிவுசெய்தது. முக்கியமாக 2021 இல் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு, ஒரு நிலத்தை அகற்றுவதில் இருந்து உழைப்பு மற்றும் நட்டம் அதிகரித்தமை இதற்குக் காரணமாகும். இழப்புஇருந்து அதிகரித்தது.	அரச அச்சக கூட்டுத்தாபனம் இலாபமீட்டுகின்ற அமைப்பொன்றாக மாற்றுவதற்காக அதன் வணிகச் செயல்முறையை மீள்வகுப்பது அவசியமாகும்.

விபரம்	பிரதான செயற்பாடுகள்	செயலாற்றுகை	கரிசணைகள்
ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா லிமிடட் (HDL)	இக்கம்பனி விருந்தோம்பல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.	அமைச்சரவையின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அரசாங்கத்தின் விருந்தோம்பல் வியாபாரத் துறையானது ஹோட்டல் டெவலபர்ஸ் பிஎல்சி உள்ளடங்கலாக 2020 இல் மீள்கட்டமைப்புச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2021 இல் தொடரப்பட்டது. செலண்திவா முதலீட்டு நிறுவனம் என்ற உரிமைக் கம்பனியானது இந்த விருந்தோம்பல் துறையின் மீள்கட்டமைப்பு செயற்பாட்டினை முன்னெடுப்பதற்காக தாபிக்கப்பட்டது. கடந்த ஆண்டு ரூபா 877 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில், முக்கியமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் விற்பனை குறைந்ததன் காரணமாக இக் கம்பெனி 2021 இல் ரூபா 947 மில்லியன் நட்டத்தைப் பதிவுசெய்தது.	அரசாங்க இலக்குகளை அடைந்துகொள்வதற்காக மீள்கட்டமைத்தல் செயற்பாடானது துரிதப்படுத்தப்படுதல் வேண்டும்.
கடற்றொழில்			
இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் (CFHC)	நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள துறைமுகங்கள் ஊடாக கடற்றொழிலாளர் சமூகங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் மீன்பிடி துறைமுகத்துடன் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குதல்.	இக் கூட்டுத்தாபனம் 2020 இல் கணக்குக் கூறிய ரூபா 236 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021 இல் ரூபா 140 மில்லியனினை நட்டமொன்றாகப் பதிவாக்கிக் காணப்பட்டது. வருமானத்தில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் நிருவாகச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்குக் காரணமாக அமைந்தது.	மீன்வள துறைமுகங்களில் கிடைக்கும் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தற்போதுள்ள பங்களிப்பு தேவைப்படுகிறது. மேலும், மீன்பிடித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நடவடிக்கைகளை வளர்ப்பதற்கான சமீபத்திய தகவல் தொடர்பு முறையை பின்பற்றுவது எதிர்காலத்தில் இந் நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிப்பதில் முக்கிய காரணிகளாகும்..
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் (CFC)	சந்தையில் மீனின் விலையை உறுதியாக வைத்திருக்கும் நோக்கில் மீனவர்களிடமிருந்து மீன்களைக் கொள்வனவு செய்து சந்தைக்கு விற்பனை செய்கின்றது.	கடந்த வருடத்திற்கான ரூபா 48 மில்லியனுடன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் இக் கூட்டுத்தாபனம், மீளாய்விற்கான ஆண்டில் விற்பனைகள் குறைந்தமையால் 2021 இல் ரூபா 63 மில்லியனினை நட்டமொன்றாகப் பதிவுசெய்துள்ளது.	சாத்தியமான தேவையைக் கருத்தில் கொண்டு விற்பனை நிலையங்களை மறுசீரமைத்தல் மற்றும் இடமாற்றம் செய்தல், விலை நிர்ணயக் குழுவால் விலை நிர்ணயம் செய்தல் மற்றும் கடற்கரையில் மீன் வாங்குவதை ஊக்குவித்தல், மையப்படுத்தப்பட்ட முகாமை தகவல் அமைப்பை நிறுவுதல் மற்றும் மையப்படுத்தப்பட்ட வங்கி முறையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை எதிர்காலத்தில் நிறுவனத்தின் வருவாயை அதிகரிப்பதில் முக்கியமான காரணிகளாகும்.
கொழும்பு கொமர்சல் பெர்டிலைசர்ஸ் லிமிட்டெட் (CCFL)	கொழும்பு கொமர்சல் பெர்டிலைசர்ஸ் லிமிட்டட் கம்பனியானது நெல், தேயிலை, தெங்கு, இரப்பர் மற்றும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்து, கலப்புச் செய்து, விநியோகிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.	கொழும்பு கொமர்சல் பெர்டிலைசர்ஸ் கம்பெனி, அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றாக இருப்பதால், இரசாயன உரங்களுக்குப் பதிலாக சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கான அரசாங்க முன்முயற்சியுடன் சேதன உரம் தொடர்பான வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஏனைய பயிர்களுக்காக உரத் தேவையில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வி காரணமாக 2019.'.2020 ஆண்டின் ரூபா 1,331 மில்லியனிலிருந்து 2020/2021 இல் வருமானம் 15.9 சவீதத்தினால் ரூபா 1,542 மில்லியனிற்கு அதிகரித்துள்ளது. அதேபோல், இலாபம் 2019/2020 ஆம் ஆண்டில் ரூபா 163 மில்லியனிலிருந்து 60 சதவீதத்தினால் அதிகரித்து 2020/2021 இல் ரூபா 260 மில்லியனினைப் பதிவுசெய்தது.	சிலோன் பெர்டிலைசர் கம்பனி லிமிட்டெட் மற்றும் கொழும்பு கொமர்'ல் பெர்டிலைசர் கம்பெனி லிமிட்டெட் ஆகிய இரண்டையும் ஒன்றிணைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் காலநிலை மாற்றங்களுக்கான நிலையான தீர்வுகளைக் கொண்ட சமூக-பொருளாதார ஒழுங்கு ஒன்றிற்கு நகரும் அரசாங்கக் கொள்கையை கருத்தில் கொண்டு உரம் (சேதன.'. அசேதன) விடயத்தைக் கையாளும் ஒரு நிறுவனத்தை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.
சிலோன் பேர்டிலைசர் கம்பனி (CFC)	நாட்டில், உரங்களை இறக்குமதி செய்தல், கலவைசெய்தல் மற்றும் விநியோகித்தல் என்பனவற்றில் ஈடுபட்டுள்ள இரண்டு அரசுடமைத் தொழில்முயற்சியகளில் சிலோன் பேர்டிலைசர் கம்பனி பெரிய நிறுவனமாகக் கருதப்படுகிறது.	வருவாயானது முக்கியமாக, மற்ற பயிர்களில் உர விற்பனை காரணமாக 2019/20 இல் ரூபா 2,101 மில்லியனாக இருந்து 2020/21 இல் ரூ. 7 சதவீதத்தினால் ரூபா 2,258 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. அதேபோல், தேறிய இலாபம் 2019/20 இல் ரூபா 98 மில்லியனிலிருந்து 2020/21 இல் ரூபா 124 மில்லியனுக்கு 27 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.	

பின்னிணைப்பு II அரசுக்குச் சொந்தமான 52 வியாபாரத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை

	தொழில்முயற்சி நிறுவனம்	2019	2020*	2021 *	வியாபாரப் புரள்வு 2021*	வரவு செலவுத் திட்ட உதவி 2021 மீளெழும்	மீளெழும்
1	இலங்கை வங்கி	29,685	23,552	43,190	290,362	-	-
2	மக்கள் வங்கி	19,666	21,227	30,387	207,250	-	-
3	தேசிய சேமிப்பு வங்கி	10,462	15,645	28,555	134,939	-	-
4	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	816	790	845	5,419	-	-
5	எச்.டீ.எப்.சீ. வங்கி	1,244	1,381	1,267	6,976	-	-
6	பிரதேச அபிவிருத்தி வங்கி (சுனுடீ)	2,960	2,061	2,651	24,273	-	-
7	ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை	29,764	32,500	33,159	35,490	-	-
8	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	8,205	7,972	11,725	64,062	-	-
9	தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	3,008	8,866	5,936	18,969	-	-
10	இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	253	265	310	272	-	-
11	விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை	627	1,257	1,780	3,730	4,000	.
12	இலங்கை மின்சார சபை	-97,359	-60,486	-21,450	249,089		
13	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்	-11,836	2,371	-82,208	570,268	-	-
14	இலங்கை துறைமுக அதிகாரசபை	18,873	20,328	25,601	45,454	–	–
15	தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை	-1,111	643	-2,996	28,935		45,119
16	வ/ப விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி	15,222	-3,733	-755	11,199	–	–
17	ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்	-47,198	-45,230	-170,751	134,613	-	18,000
18	இலங்கை போக்குவரத்துச் சபை	1,890	-2,105	-3,143	22,766	11,471	1,311
19	அரசு பொறியியல் கூட்டுத்தபானம்	-976	-1,066	-1,020	2,961	228	-
20	மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம்	341	261	250	6,361		-
21	அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம்	-844	-257	43	4,216	53	-
22	மில்கோ (பிரைவெட்) லிமிடட்	-863	230	330	12,473	–	–
23	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	-362	0	158	3,648	–	–
24	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம்	-330	-150	-232	845	–	–
25	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	-758	-351	-481	883	–	–
26	வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	120	214	468	932	–	–
27	சிலோ பிளான்டேஷன்ஸ் லிமிடட்	64	283	511	1,050	–	–
28	வ/ப கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	-53	43	-15	1,175	–	–
29	இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம்	43	15	16	133	65	64
30	வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி	1,982	69	1,205	2,720	-	–
31	வ/ப இலங்கை பொஸ்பேட் கம்பனி	21	150	117	661	–	–
32	கஹட்டகஹ கிர/பைட் லங்கா லிமிடட்	21	14	4	126	–	–
33	அபிவிருத்தி லொத்தர் சபை	2,897	2,994	2,954	15,730	–	–
34	தேசிய லொத்தர் சபை	1,323	1,435	1,003	17,292	–	–
35	அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம்	592	1,161	1,238	8,539	-	-
36	இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம்	3	9	-21	800	-	24
37	அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம்	2,176	2,546	3,157	80,275	-	-
38	ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை	-94	174	-258	2,968	1,965	316
39	வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	-571	-251	-344	1,408	-	-
40	இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம்	-501	-236	-224	1,165	164	198
41	இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம்	-101	-2	9	631	345	133
42	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை	99	-106	-35	124	–	–
43	அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	317	464	1,236	5,696	–	–
44	அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	-27	-120	63	2,677	–	–
45	வ/ப லங்கா சதொச நிறுவனம்	-2,982	-1,386	-880	40,473	–	–
46	அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்	-169	-44	-208	1,633	–	–

பின்னிணைப்பு II அரசுக்குச் சொந்தமான 52 வியாபாரத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை

47	இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம்	-100	-48	-63	3,121	–	–
48	இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம்	-71	-236	-140	476	490	195
49	வ/ப லங்கா உரக் கம்பனி	189	98	124	2,258	–	–
50	வ/ப கொழும்பு கொமர்'ல் /பெர்டிலைசர் கம்பனி	306	163	260	1,830	–	–
51	ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ	-312	-877	-947	1,168	–	–
52	வ/ப லங்கா சீனிக் கம்பனி	-1,312	1,171	1,577	12,313	–	-
	மொத்தம்	**-14,761**	**33,668**	**-86,042**	**2,092,809**	**18,781**	**65,360**

மூலங்கள்: அரசுடமை வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

* தற்காலிகமானது

** மூலதன முதலீடு

(அ) மார்ச் 31 இல் முடிவடையும் நிதியாண்டு

பிண்ணிணைப்பு II |ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் - அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள்

		2016	2017	2018	2019	2020
1	இலங்கை வங்கி	√	√	√	√	√
2	மக்கள் வங்கி	√	√	√	√	√
3	தேசிய சேமிப்பு வங்கி	√	√	√	√	√
4	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	√	√	√	√	√
5	வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்	√	√	√	√	√
6	பிராந்திய அபிவிருத்தி வங்கி (RDB)	√	√	√	√	√
7	ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை	√	√	√	√	√
8	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
9	தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	X	√	X	X	X
10	இலங்கை மின்சார சபை	√	√	√	√	√
11	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
12	இலங்கை துறைமுக அதிகாரசபை	√	√	√	√	√
13	தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை	√	√	√	√	√
14	வ/ப விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி	√	√	√	√	X
15	ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட்	√	√	√	√	√
16	இலங்கை போக்குவரத்துச் சபை	√	√	X	X	X
17	இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தபானம்	√	√	X	X	X
18	மத்திய பொறியியல் ஆலோசனைச்சேவைப் பணியகம்	√	√	√	√	X
19	அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
20	மில்கோ (பிரைவெட்) லிமிடட்	√	X	X	X	X
21	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	√	X	X	X	X
22	இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம்	X	X	X	X	X
23	இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
24	அரசு மருந்தாக்கற் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
25	இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம்	√	√	√	√	X
26	அரசு மருந்துப்பொருட் கூட்டுத்தபானம்	√	√	X	X	X
27	ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை	√	√	√	√	X
28	வ/ப சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	√	√	√	√	√
29	இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
30	இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
31	வ/ப லங்கா உரக் கம்பனி	√	√	√	√	√
32	வ/ப கொழும்பு கொமர்ஷல் /பெர்டிலைசர் கம்பனி	√	√	√	√	√
33	அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	√	√	√	√	√
34	அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	√	√	√	√	X
35	ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ	√	√	√	√	X
36	வ/ப லங்கா சீனிக் கம்பனி	X	X	X	X	X
37	வ/ப லங்கா சதொச நிறுவனம்	√	X	X	X	X
38	அபிவிருத்தி லொத்தர் சபை	√	√	√	√	X
39	தேசிய லொத்தர் சபை	√	√	√	√	X
40	வ/ப இலங்கை கனிம மணல் கம்பனி	√	√	√	√	X
41	வ/ப இலங்கை பொஸ்பேட் கம்பனி	√	√	√	√	√
42	அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
43	இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	√	√	X	X	X
44	விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை	√	√	X	X	X
45	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம்	√	X	X	X	X
46	வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	√	√	√	√	X
47	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	X	X	X	X	X
48	சிலோ பிளான்டே'ன்ஸ் லிமிடட்	√	√	√	√	X
49	வ/ப கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி	√	√	√	√	X
50	இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம்	√	√	√	X	X
51	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை	X	X	X	X	X
52	கஹட்டகஹ கிர/பைட் லங்கா லிமிடட்	√	X	X	X	X

மூலங்கள்: அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

09

அரச நிதி முகாமைத்துவம்

9.1 மேன்நோக்கு

இலங்கையில் தற்போது காணப்படும் தொற்றுநோயால் தூண்டப்பட்ட பொருளாதார நெருக்கடிகளுடன் பொதுகொள்முதல் நடைமுறைகளின் மீதான சீர்திருத்தத்தின் முக்கியத்துவம் முன்னெப்போதையும் விட அதிகமாக அழுத்தம் பெறுகிறது. எனவே நல்ல நிர்வாகம், பொறுப்புக் கூறல், மற்றும் பணத்திற்கான மதிப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக கொள்முதல் செயன்முறையின் மீதான சீர்திருத்தங்கள், பொது செலவினங்களில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முன்னுரிமை அமைப்பாக மாறியுள்ளது.

கொள்முதல் செயன்முறையின் செயல்திறனை மேம்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பல வருடங்களாக பொது கொளமுதல் செயல்முறைகள் குறைந்தே வருகின்றது. கொள்முதலில் திட்டமிடல் போதாமை, தேர்வு நடைமுறையில் ஆகக்குறைந்த போட்டித்தன்மை, மோசமான ஒப்பந்த முகாமைத்துவம், கொள்வனவில் அதிகாரிகளின் அறிவு மற்றும் திறன் இல்லாமை, கொள்வனவில் முக்கிய கொள்கைகளை உறுதி செய்யாமை போன்றன அரசாங்கத்தின் பற்றாக்குறையான வளங்களை வீணாக்குவதற்கு காரணமாக உள்ளதுடன், இது அரசிறைத் தளத்தில் அழுத்தத்தையும் செலுத்துகிறது.

கொள்முதல் செயல்முறையில் தொழில்நுட்பத்தை உட்செலுத்துதலானது சேவை வழங்கல் மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கான திறவுகோலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே, e-அரச கொள்முதல் செயல்முறை (e-GP) அமைப்பு மற்றும் பொது-தனியார் பங்களிப்பு (PPP) ஆகியவை ஏற்கனவே வளர்ச்சியடைந்துள்ளது. மேலும் இதுபோன்ற முயற்சிகளில் முன்னேற்றம் தேவைப்படுகின்றன. மேலும், கொவிட்-19 அவசரகால கொள்முதல் செயல்முறைக்கான வழிகாட்டியானது, (CEPP) தொற்றுநோய் தொடர்பான கொள்முதல் செயல்முறைக்கு விரைவாக பதிலளிகும் வகையில், தடுப்பூசிகள் மற்றும் பிற மருத்துவத் தேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 2021 இல், மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

2021 இல், பொதுமக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக பல அமைச்சுக்களுக்கு, கொள்முதல் நடைமுறைக் கையேடு -2006 க்கு மேலதிகமாக, கொள்முதல் செய்யப்பட்டு நிறுவனங்களின் அதிகார வரம்புகள் திருத்தப்பட்டன. சுற்றுலா ஊக்குவிப்பு திட்டங்கள் தொடர்பான கொள்முதல் செயல்முறைகளை விரைவுபடுத்தும் வகையில் அதிகார வரம்புகளும் திருத்தப்பட்டன. அரச நிறுவனங்கள் தங்கள் கொள்முதல் நடைமுறைகளை சுமுகமாக மேற்கொள்ள வசதியாக, கொள்முதல் வழிகாட்டுதல்கள் - 2006 இனை முழுமையாகவும் முறையாகவும் ஒழுங்கமைக்க சுற்றறிக்கைகள் மற்றும் பிற்சேர்க்கைகள் வெளியிடப்பட்டன.

பொது நிதி சுற்றறிக்கை எண். 1/2021
சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்குவதற்கானது.

கட்டுமாணப் பணிகளுக்கான நேரடி ஒப்பந்தத்தை வழங்குவதன் மூலம் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
வெளியீட்டுத் திகதி: 29.09.2021

துணை-39 Supersedes
துணை - 9 (பிரிவு 5.3.5)
சமமான பதவி தகுதிக்கான CIDA
இன் கட்டளை விதிகள்

கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) வெளியிட்ட தரவரிசையின்படி சமமான பதவிக்கான தகுதிக்கான கடடளை விதிகள் மாற்றப்பட்டுள்ளது.
வெளியிடப்பட்ட திகதி: 10.06.2021

9.2 சட்டப்பூர்வ, அறக்கட்டளை நிதிகள் மற்றும் துறைசார் நிதிகளின் முகாமைத்துவம்

துறைசார் நிதிகளின் வருடத்திற்கான வரவு செலவுக் கணக்குகள் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் நிதிகளின் வருடாந்த செயல்திறன் அறிக்கைகள் பொது நிதிச் சுற்றறிக்கை இல. 01/2020 இன் வழிகாட்டுதல் 04 மற்றும் 05 இன் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இதில் நிதி அறிக்கைகள் மற்றும் சட்டரீதியான நிதிகள் மற்றும் அறக்கட்டளை நிதிகளின் ஆண்டு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. அதன்பிரகாரம், 2021 இல் நிதிக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.மேலும், கணக்காய்வாளர் நாயகத்தால் நிதி தொடர்பான தணிக்கை வினவல்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாகவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இல. 425 மற்றும் 426 இன் கீழ் சட்டரீதியான மற்றும் சட்டப்பூர்வமற்ற நிதிகளை மதிப்பிடுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, 13 நிதிகளை மூடுவதற்கு அமைச்சரவையால் அனுமதி

வழங்கப்பட்டுள்ளது, அதில் 10 நிதிகள் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறுத்தப்பட்டுள்ளன, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தீர்ப்பனவுகளைத் தொடர்ந்து மிகுதியாகவுள்ள நிதி ஒருங்கிணைந்த நிதியில் வரவில் வைக்கப்படும்.

9.3 பொது நிதி மீதான பாராளுமன்ற கட்டுப்பாடு

பொது நிறுவனங்களின் செயல்திறனைக் கண்காணிப்பதற்காக, பொதுக் கணக்குகளுக்கான பாராளுமன்றக் குழு (COPA) அரசியலமைப்பின் 74 வது பிரிவு மற்றும் பாராளுமன்ற கட்டளைச் சட்டம் இல. 119 ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. 2021 இல், கணக்காய்வாளர் நாயகத்தினால், சம்பந்தப்பட்ட பொது நிறுவனங்களுக்கு வழங்கிய தணிக்கை வினவல்கள் மற்றும் தணிக்கை அறிக்கைகளின் அடிப்படையில், பொது நிதி நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை சீர்செய்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் தலைமை கணக்கு அதிகாரிகள் மற்றும் கணக்கு அதிகாரிகளுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது.

9.4 நிதி ஒழுங்குமுறை மற்றும் பொது நிதி சுற்றறிக்கைகள்

பொது நிதி ஒழுங்குமுறைகளை திறம்பட செயல்படுத்தவும், பிரச்சனைகளை மற்றும் விடயங்களை தெளிவுபடுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் குறிப்பாக, அரசு நிறுவனங்களுக்கு பணம் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் அரச நிறுவனங்களால் செலுத்தும் பணம், தகவல் தொடர்பு வசதிகள், சிறப்பு பணிகளுக்கான அவசரக் கட்டணம், பாவனைக்குட்படுத்தப்படாத வாகனங்களை அப்புறப்படுத்துதல், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளாக உயர்த்துதல் மற்றும் அரச நிறுவனங்களின் முன்னைய பொது நிதி சுற்றறிக்கைகள் (அனைத்து அமைச்சரவை அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள், சட்டப்பூர்வ சபைகள், அரச வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்) போன்றவற்றுக்கு வழங்கப்பட்டது, மேலும் 2021 ஆம் ஆண்டில் பொது நிதிச் சுற்றறிக்கைகள் தொடர்பாக அறுபத்தொரு விளக்கங்களும், நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பாக பன்னிரண்டு தெளிவுபடுத்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

10

மனிதவள முகாமைத்துவம்

10.1 பொதுத்துறையில் மனிதவள முகாமைத்துவம்

440	இரத்தினக் கல், தங்க ஆபரணங்கள் மற்றும் கனிய வளங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	520,964	-	33,500	-	554,464	-
	முழு மொத்தம்	**191,571,047,870**	**13,732,563,241**	**97,517,319,506**	**31,454,309,150**	**289,088,367,376**	**45,186,872,391**

அட்டவணை V

மாகா சபைகளுடைய வருமான செலவின அறிக்கையின் கூற்று - 2021

(ரூபா.)

பகுப்புகள்	மாகாணம்									மொத்தம்
	மேல்	மத்திய	தெற்கு	வடக்கு	வட மேல்	வட மத்தி	ஊவா	சப்ரகமுவ	கிழக்கு	
மொத்த வருமானம்	**33,286,591,304**	**4,905,167,735**	**6,291,011,493**	**2,825,473,103**	**6,779,535,131**	**2,425,716,926**	**2,126,106,935**	**3,044,453,607**	**2,303,240,745**	**63,987,296,980**
நடைமுறைச் செலவு	66,423,878,284	41,676,223,119	40,344,283,169	27,523,499,679	37,173,434,116	22,160,191,907	26,867,100,151	31,249,798,542	30,424,030,284	**323,842,439,250**
மூலதனச் செலவு	4,177,764,782	3,526,591,589	3,974,668,580	3,866,143,464	3,109,383,606	3,811,000,294	3,094,739,654	2,532,016,402	3,507,622,842	**31,599,931,213**
மொத்த செலவு	**70,601,643,065**	**45,202,814,708**	**44,318,951,749**	**31,389,643,143**	**40,282,817,722**	**25,971,192,201**	**29,961,839,805**	**33,781,814,944**	**33,931,653,126**	**355,442,370,463**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடர்ச்சி...

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.

රීපීඑ/ඒ/ඩඑස්ඒ/2/21/ඉඒ/

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

2022 மே 30

செயலாளர்,
நிதி அமைச்சு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) மற்றும் 15(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் செயலாளருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து. இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசினால் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட அரச படுகடன் மீதி ரூபா 16,826.83 பில்லியனான போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு

(i) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளிநாட்டு கடன் அறிக்கையிடுவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் CS-DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்ட 8 கணக்கு உடன்படிக்கைகளுக்குரியதாக ரூபா 311.191 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி அரச நிதிக்கூற்றுக்களில் முழுமையாக அகற்றப்பட்டிருந்தது.

(ii) அரசினால் 2021 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பொறுப்புக்களின் கீழான கடன் உடன்படிக்கைக்குரிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 589 மில்லியனான கடன் அரச நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட 08 கடன் உடன்படிக்கைகளில் உள்ள கடன் மீதிகளில் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன்களில் ரூபா 161.332 மில்லியன் மீதி மீள செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. அந்தக் கடன் மீதி 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்

பிரகாரம் அந்த நிவாரண உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொதுத்திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. எனினும் அந்தக் கடன் மீதி 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலும் அந்த கடன் மீதி அகற்றப்பட்டிருந்தது. இந்த கடன் மீதிக்கான கடன் சேவைப்படுத்தல் திறைசேரி மூலம் மேற்கொள்ளப்படும்.

(iv) CS - DRMS 2000+ Report 854-1 இன் அறிக்கையில் இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய கடன் நாணய அலகு (Loan Currency) யூரோ (EUR) ஆக கருத்தில் கொள்ளப்பட்டிருந்த போதிலும். அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது சி.எ.உ (XDR) மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் (USD) ஆக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரே கடன் மீதிக்காக வேறுபட்ட கடன் நாணயங்களுக்குரிய அந்நிய செலாவணி மாற்றுவீதம் பயன்படுத்தப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட அரச கடன் மீதி ரூபா 340 மில்லியனால் அதிகரிப்பதற்கு மற்றும் ரூபா 285 மில்லியனால் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

(v) CS - DRMS 2000+ Report 854-1 அறிக்கையின் பிரகாரம் கடன் இலக்கம் 2021026 இல் ஆண்டினுள் தீர்வையாகியுள்ள கடன் பெறுமதி ரூபா 64,910.4 மில்லியனாக காணப்பட்ட போதிலும் அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 64,983.8 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா 73.4 மில்லியனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரச நிதிக்கூற்றுக்களில் மற்றும் 854-1 அறிக்கையின் பிரகாரம் பல்வேறு நன்கொடையாளிகளினால் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்டிருந்த கடன் மீதி அந்த நிறுவனங்களினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் மீதியுடன் ஒப்பீடு செய்யப்பட்ட போது ஐ.அ.டொலர் 1,800,227 அல்லது ரூபா 360.82

மில்லியயுடன் கூடிய 02 கடன் மீதிகள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளிநாட்டுக் கடன் மூலங்களான CS - DRMS 2000+ Report 854-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் இலக்கம் 2001042 இன் கீழ் ரூபா 240 மில்லியனான கடன் மீதியொன்று நிலவியது. அந்தக் கடன் மீதி அரச நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வேறுபாடு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டு கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 1,481,264 ஆன மறை கடன் மீதி அரச நிதிக்கூற்றுக்களில் அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த கடன் மீதிகள் மறைப் பெறுமதியை எடுப்பதற்கும் அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கும் உரிய தெளிவுபடுத்தல் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 29(i) இற்குரிய தகவல்கள் CS - DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்டிராததுடன் ரூபா 20,247 மில்லியனான அதன் பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(x) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிநாட்டுக் கடன் மீதி ஐ.அ.டொலர் 34,130,219,447 ஆக காணப்பட்டது. அத்திகதியில் நிலவிய செலாவணி மாற்றவீதமான ரூபா 200.4348 உடன் சீராக்கம் செய்த போது கடன் மீதியில் ரூபாவிலான பெறுமதி ரூபா 6,841 மில்லியனாக காணப்பட்டது. 2022 மே 30 ஆந் திகதியில் உள்ளபடியான அந்நிய செலவாணி மாற்று வீதம் ரூபா 360.76 ஆனமையால் அந்த வெளிநாட்டுக் கடன் மீதியின் பெறுமதி ரூபா 12,313 மில்லியனாக காணப்பட்டது. அந்நிய செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடன் மீதிக்கு ஏற்படும் அதிகரிப்பு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 516.606 மில்லியனாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 530.507 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் கடன் தவணைகளை செலுத்துதல் ஆண்டினுள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடனின் அளவினை விட ரூபா 13.901 மில்லியனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன் அளவினை விஞ்சி வெளிநாட்டுக் கடன் செலுத்தப்பட்டமையால் ரூபா 13.901 மில்லியனான அந்நிய செலாவணி பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் மீள செலுத்துதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(i) திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் TO/S&A/03/08/05 ஆம் இலக்க மற்றும் 2022 பெப்ரவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி முறையே ரூபா 16.883.6 மில்லியன் மற்றும் ரூபா 21 மில்லியன் ஆகும். இவ்வாறான போதிலும் இந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி மற்றும் உண்மையான கணிப்பீடுகளின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையே வேறுபாடொன்றும் அவதானிக்கப்பட்டது.

(ii) மேற்படி கடிதத்தின் இணைப்பு 03 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதியானது ரூபா 5.671 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய வருடத்தினுள் தீர்வையாகிய போதிலும் அந்த வருடத்தினுள் சில வெளிநாட்டுக் கடன் வைத்தல்கள் இடம்பெற்றிராமை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2022 ஏப்ரல் 21 ஆந் திகதிய SA/MAA/02/02/03/V0(iii) ஆம் இலக்கமுடைய அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய வெளிநாட்டுக் கடன் தொடர்பில் குறிப்பு இலக்கம் 29(ii), (iii) மற்றும் (iv) பிரகாரம் கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 514.154 மில்லியனாக காணப்பட்டது. எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 530.508 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய ரூபா 16.354 மில்லியனான வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. இந்த வேறுபாட்டிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2022 சனவரி 19 ஆந் திகதி அச்சிடப்பட்ட வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் CS - DRMS 2000+ Report 854-1 அறிக்கைக்கமைய 19 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகளுக்கு உரியதாக தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 15,207,702,960 ஆக காணப்பட்டது. அந்தப் பெறுமதி 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 மே 19 ஆந் திகதி அச்சிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட 814-1 அறிக்கையின் பிரகாரம் அந்த 19 கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2021 ஆம் ஆண்டில் தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களாக ரூபா 39,174,043,448 காணப்பட்டது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் 2021 ஆம் ஆண்டிற்குரிய தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 23,966,340,488 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) 2022 மே 19 ஆந் திகதி அச்சிடப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய 814-1 அறிக்கையின் கடன் இலக்கம் 2016028 இற்குரிய ஐ.அ.டொலர் 729,484.66 அல்லது ரூபா 146,217,030 மறை தீர்வையாதலாக கடன் உடன்படிக்கைக்குரிய செயற்திட்டத்திற்கு வழங்கிய ஆரம்ப முற்பணத்திலிருந்து செயற்திட்டம் நிறைவடைந்த போது எஞ்சிய தொகையினை மீள செலுத்துதல் உள்ளடக்கியிருந்த போதிலும் அந்த மீள் செலுத்தல்கள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச கடன் உடன்படிக்கைகளுக்காக அரச கணக்குகள் திணைக்களத்தினால் பின்பற்றப்படும் கணக்கீட்டு நடைமுறை / அடிப்படைகள் அவ்வவ்போது மாற்றமடைதல் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தன்மை பாதுகாக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் ஆகக்குறைந்த விலையினை கணக்கு வைக்காத காரணத்தினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 318.246 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த ஆகக்குறைந்த விலைகளை கணக்கு வைப்பதற்காக ரூபா 318 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் அவ்வாறானதொரு பெருந்தொகையான நிதியேற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் பாதீட்டு பற்றாக்குறை அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றமையால் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட பிணைமுறிகளுக்குரிய ஆகக்குறைந்த விலை அந்த பிணை முறிகள் முதிர்வடையும் ஆண்டில் சீராக்கல் செய்வதற்கும் அது வரையிலும் நிதிக்கூற்றுக்களில் பதிவொன்றாக அந்த பிணை முறிகளில் முகப்பெறுமதியினை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அவ்வாறு நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ளாது அந்த பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதி 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் மத்திய வங்கியின் முற்பணங்கள், உள்நாட்டுக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய காரணங்களும் முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது அந்த மத்திய வங்கி முற்பண மீதி ரூபா 150.1 மில்லியனானது உள்நாட்டுக் கடன் வகைப்படுத்தலிலிருந்து அகற்றப்பட்டு தனியானதொரு உருப்படியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் வெளிநாட்டுக் கடன் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2021 ஆம் ஆண்டின் பொதுத்திறைசேரிக்கு அறிவிக்காது 2 நிறுவனங்களினால் 7 செயற்திட்டங்களுக்காக ரூபா 24.77 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நன்கொடைகள் நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த நன்கொடைகள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் கொவிட் 19 தொற்றுநோய் பரவல் ஆரம்பித்ததுடன் பல்வேறு வெளிநாட்டு அரசுகள், உள்நாட்டு வெளிநாட்டு நிறுவன / அமைப்புக்கள் / நபர்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களினால் சுகாதார அமைச்சிற்கும் அதன் கீழுள்ள மருத்துவமனைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறுமதி மதிப்பிடு செய்யப்பட்ட நிதி மற்றும் நிதியல்லாத உதவிகள் பெறுமதிகளாக ரூபா 1,949 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் அந்த நன்கொடைகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருக்கவில்லை. அவ்வாறே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த 162,465 பொருள் உருப்படிகளின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசுக்குச் சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு ரூபா 760,777.41 மில்லியனாக காணப்பட்டதுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அரசினால் வழங்கப்பட்ட உப கடன் வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியினால் செலுத்தப்படாதிருந்ததுடன் திறைசேரியினால் அந்தக் கடன் தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பதிவழிக்கப்பட்டிருந்த வருமானம் அந்த கம்பனியின் மூலதனத்திலிருந்து அரசின் பங்களிப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கொடுக்கல் வாங்கல் வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் நிதியேற்பாட்டினை பெற்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்குரித்துடைய பொது முயற்சிகள் மற்றும் 13 கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பானது ரூபா 439,638,766,649 ஆக காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி 411,873,962,444 ஆக காணப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களினுள் அரச மூலதன பங்களிப்பு ரூபா 27,764,804,205 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசாங்கத்திற்கு சொந்தமான 05 வரையறுக்கப்பட்ட கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களில் அரசின் மொத்த மூலதன பங்களிப்பின் பெறுமதி குறிப்பிடப்பட்டிராததுடன் பங்கொன்றின் சந்தைப் பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அரச நிதிக்கூற்றுக்களில் அந்த நிறுவனங்களின் பங்குடமை பெறுமதி பங்குகளில் பெயரளவுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்டு ரூபா 47,951,228 என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தலைப்பு 290 - கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வாடகை மற்றும் பணி முற்பண மீதி ரூபா 8,518,925 ஆக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் அந்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் கணக்கின் மீதியொன்று காணப்படவில்லை.

(எ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட முற்பண கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகையாக ரூபா 15,727,677,353 காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(i) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி முற்பணக் கணக்கின் கீழ் ரூபா 1,372,999,369 ஆன வரவு மீதியும் ரூபா 19,916,617 கூட்டுத்தொகையான செலவு மீதியும் நிலவியது. அந்த மீதிகள் தொடர்பில் தொடர்ச்சியாக கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட ஐய வினாக்களில் நி.பி. 518 பிரகாரம் செயற்பட்டு அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. 7000-0-0-475-0-002, 7000-0-0-117-0-002 மற்றும் 7000-0-0-851-0-002 ஆம் இலக்க கணக்குகளில் நிலவிய முற்பணக் கணக்குகளின் மீதிகள் 2022 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டு மூடப்பட்டிருந்தது. எஞ்சிய முற்பணக் கணக்குகளின் மீதிகள் 2022 மே 19 ஆந் திகதி வரையிலும் முடிவறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தலைப்பு 111 - சுகாதார அமைச்சின் கீழ் ரூபா 1,221,650,996 தொகையான களஞ்சிய மற்றும் ஏனைய முற்பணங்கள் கணக்கில் ஆரம்ப மீதியொன்று நிலவிய போதிலும் அதற்குரிய காரணங்களை வினவிய போது எதுவித அடிப்படையொன்றினை கொண்டிராது பெயரளவில் இந்த மீதிகள் பேணிச் செல்லப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்குரிய கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே 20 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியல்லாத சொத்துக்களின் கீழ் ரூபா 1,850,007,342,256 காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(i) 2017 மார்ச் 20 ஆந் திகதிய MF/NB/01/CM/2017/85 ஆம் இலக்க "பாதுகாப்பு அமைச்சினால் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மற்றும் வட்டியை கணக்குகளில் உள்ளடக்குதல்" எனும் தலைப்பில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் ஆளடையாளங்கள் பொதுச் செயலாளர் அலுவலகத்தின் கட்டிடத்தில் பெறுமதி அரச சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்காக அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமப/17/0632/719/062 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 13 ஆந் திகதி வரையிலும் அந்த சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அரச முதலீடுகளாக ரூபா 8,199 பில்லியன் அளவானது காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களில் தீர்மானங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2021 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களாக அவற்றுள் ரூபா 1,850 பில்லியன் மாத்திரம் சொத்துக்களாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அந்த செலவினங்களினுள் ரூபா 173 பில்லியன் உப கடனும், அரச முயற்சிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பாக ரூபா 761 மில்லியனுமாக ரூபா 934 பில்லியன் கூட்டுத்தொகையான நிதிச் சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களாக ரூபா 2,784 பில்லியன் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 8,199 பில்லியனால் ரூபா 5,415 பில்லியன் அல்லது 66 சதவீதம் பெறுமதியான சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு தவறியிருந்தது. 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள்

கணக்கு வைக்கப்பட்டிராததுடன் அது 2015 ஆம் ஆண்டு முதல் கணக்கு வைத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கம்பனியின் 2021 மார்ச் 31 ஆந் திகதியளவில் நிலவிய ரூபா 371.734 மில்லியனான திரண்ட நட்டத்திற்காக அந்த கம்பனியை மீள்கட்டமைக்கும் வரையிலும் நடைமுறையில் உள்ள வகையில் திறைசேரியின் செயலாளரின் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதிய PED/S/SLA/1/11(ii) ஆம் இலக்க சான்றுப்படுத்தும் கடிதத்தின் மூலம் திறைசேரியின் பிணையொன்றினை வழங்கியுள்ளமை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த பிணையானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் 02 கணக்குகளுக்குரியதாக ரூபா 1.007 மில்லியன் மீதிகள் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. அவ்வாறே அரச முற்பண செயற்பாடுகளுக்குரிய கணக்குகளில் பல வருடங்களாக தீர்ப்பனவு செய்யப்படாது ரூபா 8,792,222 கூட்டுத்தொகையான தேறிய மீதிகள் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த மீதிகளில் ரூபா 233,298 கூட்டுத்தொகையான மறைமீதிகளும் காணப்பட்டன.

(ஓ) அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதி செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று தொடர்பிலான கூற்றுக்களிடையே நேரடியான தொடர்பொன்று காணப்படவில்லை. அதாவது நிதிச் செயலாற்றல் கூற்றினுள் முழுமையாக மீளாய்வாண்டின் பாதீட்டிற்குரிய உள்ளபடியான நிலைமைகள் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ஒரு வருடத்திற்குரிய பற்றாக்குறைகள் அல்லது மிகைகள் கணக்கிடப்பட்டு அந்த பற்றாக்குறை அல்லது மிகை நிதிநிலைமைக் கூற்றுக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று தொடர்பற்றுக் காணப்பட்டது.

(ஔ) நிதி நிலைமைக் கூற்றில் நியதிச் சட்ட மற்றும் ஏனைய நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 14,979,010,260,682 கூட்டுத்தொகையான வரவு பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மூலதன மாற்றங்கள் கூற்றில் ரூபா 938,712,129,108 வரவு பெறுமதியொன்று மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது மூலதனம் தொடர்பில் நேரடியாகவும் பொறுமையாகவும் தாக்கம் செலுத்தும் தேறிய சொத்துக்களின் சீராக்கல்களை கணக்கின் வரவு மீதியான

ரூபா 14,040,298,131,574 பெறுமதியானது மூலதனத்தினாலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாதது என வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றினை பயன்படுத்துவோருக்கும் மற்றும் அது தொடர்பில் அக்கறை காண்பிக்கும் தரப்பினருக்கும் எதிர்வரும் வருடத்தில் அரசினால் செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய வெளிவாரி பொறுப்புக்களின் அளவு தொடர்பில் விரிவான விளக்கமொன்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(கா) நிதிநிலைமை கூற்றின் பிரகாரம் மொத்த வெளிவாரி பொறுப்புக்களின் பெறுமதியானது ரூபா 17,817,028,444,958 ஆன போதிலும் அதற்கு ஒப்பாக மொத்த சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 2,838,018,184,276 மாத்திரமாக காணப்பட்டமையால் மொத்த சொத்துக்களை விட மொத்த வெளிவாரி பொறுப்புக்கள் ரூபா 14,979,010,260,682 இனால் விஞ்சியிருந்தது.

(கி) அரச நிதிக்கூற்றுக்களின் முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் (Significant Accounting Policies) வெளிநாட்டு பயன்பாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான கொள்கையில் அந்த கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் அந்நிய செலாவணி மாற்ற வேறுபாடுகள் (Exchange Differences) / அந்நிய செலாவணி பரிமாற்றல் இலாபம் அல்லது நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கணிப்பிடப்பட்ட ரூபா 363,648 ஆன அந்நிய செலாவணி பரிமாற்றல் நட்டமானது நிதி நிலைக்கூற்றில் தேறிய சொத்துக்களில் சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.

(கீ) அரச நிதிக்கூற்றுக்களில் காணிகள், புத்துருவாகும் வேலை நீங்கலாக ரூபா 700,951 மில்லியன் கூட்டுப்பெறுமதியுடைய நிதியல்லாத சொத்துக்களுக்காக அந்த சொத்துக்களில் பெறுமானத்தேய்விடக்கூடிய பெறுமதியானது அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் கிரமமான முறையில் ஒதுக்கப்பட்டு முன்னோக்கிய கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த சொத்துக்கள் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் கணிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு

இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவு நட்டம் காணப்படின் அதனை கழித்த பின்னர் கிடைக்கும் கொண்டு செல்லும் பெறுமதி (Carrying Amount) தொடர்பில் அரச நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு திட்டவட்டமான விளக்கமொன்றினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழிக்கப்பட்டிருந்தது.

(கு) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மற்றும் 2020 இன் 7 ஆம் இலக்க வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டு திருத்தப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், தலைப்பு 422 – தஹாம் பாடசாலைகள், பிரிவெனக்கள் மற்றும் பிக்குமாரின் கல்விக்கான இராஜாங்க அமைச்சின் 422-2-3-3-1001 ஆம் இலக்க செலவினத் தலைப்பிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,280,318,000 ஆன தேறிய நிதியேற்பாடு ரூபா 74,355,089 இனால் விஞ்சி ரூபா 3,354,673,089 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய அந்த செலவினத் தலைப்பில் ரூபா 74,355,089 ஆன மிகைச் செலவினமொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(கூ) 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பட்டோலையின் கீழான முற்பண பணிகளுக்கான பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள எல்லைகள் திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் பின்பற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அதிகாரச்சட்டத்தின் 8(1)(ஆ) பிரிவின் பிரகாரம் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அந்த எல்லைகளை திருத்த வேண்டியதாக காணப்பட்ட போதிலும் 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் அந்த எல்லைகள் திருத்தப்பட்டமைக்கான சான்றுப்படுத்தும் சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண பணிகள் 03 இற்குரிய உச்ச செலவின எல்லை ரூபா 2,430,537 கூட்டுத்தொகையினை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) விடய இலக்கம் 23202 - சிறைச்சாலை கைத்தொழில் மற்றும் விவசாய அலுவல்கள் தொடர்பான முற்பணக் கணக்கின் உச்ச செலவின எல்லை ரூபா 63,737,833 இனால் விஞ்சி ரூபா 173,734,833 செலவிடப்பட்டிருந்தது.

(iii) விடய இலக்கம் 31003 - அரச கைத்தொழிற்சாலைகள் செய் வேலை கைத்தொழிற்சாலைகளின் செய் வேலை முற்பணக் கணக்கின் உச்ச செலவின எல்லை ரூபா 70,313,213 இனால் விஞ்சி ரூபா 440,313,213 செலவிடப்பட்டிருந்தது.

(iv) கல்வி மற்றும் வெளியீட்டுத் திணைக்களத்தின் விடய இலக்கம் 21302 - புத்தகங்களை அச்சிடல், விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் எனும் பெயருடைய களஞ்சிய முற்பணங்களுக்குரிய ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 4,650,000,000 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 2,718,670,627 ஆக காணப்பட்டது. அதற்கமைய, ரூபா 1,931,329,323 இனால் அந்த எல்லையை அண்மிக்க முடியாதிருந்தது. இந்த எல்லையினை திருத்தியமைப்பதற்காக 2022 மார்ச் 02 ஆந் திகதி அமைச்சரவைக்கு கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(கெ) திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு எரிபொருள் பிழை உறுதிப்பாட்டு நிதியத்திலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிட வேண்டிய ரூபா 26,673,196,758 தொகை 2021 ஆம் ஆண்டில் அரச நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பொன்றாக (மறைப் பெறுமதி) காண்பிக்கப்பட்டு பல்வேறு கணக்குகளின் கீழ் எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் கணக்காக பெயரிடப்பட்டு தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கே) 2005 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு மாதிரிகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் 254 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் 10 வருடங்களினுள் தற்போது பயன்படுத்தப்படும் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படை முறைமையிலிருந்து அட்டுறு அடிப்படையில் கணக்கு வைத்தலின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட வீதித் திட்டம்

(Road Map) உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளுக்குரிய காலச்சட்டகம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் திருத்தப்பட்ட போதிலும் அதற்கான முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சரவை குறிப்புக்கமைய ஒவ்வொரு வருடமும் நிறைவடைந்து ஒரு மாதம் கடந்த பின்னர் குறித்த செயன்முறையின் செயல்முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் 2022 மே 20 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. செயன்முறையை மாற்றும் நடவடிக்கை தொடர்பில் திட்டவட்டமான கொள்கை தீர்மானமொன்றை மேற்கொள்ளல் பின்னர் உரிய திருத்தப்பட்ட வீதித் திட்டத்திற்கான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதற்காகவன்றி, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக.

(ஆ) இந்த அறிக்கையின் 1.2(அ)(i),(iii), 1.2(ஆ)(i),(ii), 1.2(இ)(i), 1.2(ஈ), 1.2(கெ) மற்றும் 1.2(கே) பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளை சீராக்குவதற்கு அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரை

2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் COVID 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் மற்றும் எரிபொருள் விலையினை ஸ்திரப்படுத்தும் நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்கத்தின் சகல பெறுகைகளும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த இரண்டு நிதியத்திற்கும் முறையே ரூபா 367,645,984 மற்றும் ரூபா 728,619,709 தொகையான பணம் கிடைத்திருந்ததுடன் அந்த பெறுவனவுகள் நிதிய கணக்கு இரண்டிற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது COVID 19 சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் ரூபா 93,575,980 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் நிதியக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத நிதியக் கணக்கு இரண்டிலும் கணக்கீடு செய்யப்பட்ட இந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் திரண்ட நிதியத்திற்கு புறம்பாக திறைசேரியின் பிரதான பேரேட்டுக் கணக்கின் கீழ் திறைசேரியால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டம்

(i) 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரகாரம் ஏதாவது வருடமொன்றின் இறுதியில் காணப்படக்கூடிய ஆகக்கூடிய பொறுப்புக்களின் பெறுமதி அந்த ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தை விஞ்சமுடியாதிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த எல்லை 109.87 சதவீதமாக காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்ற.

பொறுப்புக்கள்	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்களின் பெறுமதி*
	ரூபா பில்லியன்
வங்கி மேலதிகப்பற்று	832
மத்திய வங்கி முற்பணம்	150
அரசாங்க கடன்	16.826
நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள்	
- ஐந்தொகைக்கு வெளியில் கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்	311
- கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்	17
மொத்த பொறுப்புக்கள்	18.137
மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி	16.508
மொத்த பொறுப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக	**109.87**

* பொதுத்திறைசேரியின் பிணையின் அடிப்படையில் பொது முயற்சிகளினால் பெறப்படக்கூடிய கடன்களுக்காக வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பிணை மற்றும் சலுகை கடிதங்களின் பெறுமதியான ரூபா 1.58 பில்லியன் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாட்டுக் கூற்றின் பிரகாரம் ரூபா 334 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்கூறப்பட்ட பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ¨2006 ஆம் ஆண்டின் இறுதியில் வரவு செலவுத் திட்ட இடைவெளி, அந்த ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாத வகையில் மற்றும் அந்த மட்டத்தின் அதன் பின்னர் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுகின்றமையை கண்காணித்துக் கொள்ளுதல் அரசாங்கத்தின் கடன் தூரநோக்கு மட்டம் வரை குறைத்தல்¨ அரசாங்கத்தினால் பின்பற்றப்பட வேண்டிய பொறுப்புக்களுடன் நிதி முகாமைத்துவத்திற்கு தாக்கமளித்த விடயமாக 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பிரிவில் காண்பிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட இடைவெளி, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை விஞ்சாத வகையில் மதிப்பீடு செய்வதற்கும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வரவு செலவுத் திட்ட இடைவெளி, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை விஞ்சாத வகையில் பேணிச் செல்வதற்கும் நிதியமைச்சு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அந்த சதவீதம் முறையே மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட இடைவெளிக்குரிய 18.48 சதவீதம் மற்றும் உள்ளபடியான இடைவெளிக்குரிய 12.59 சதவீதமுமாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி	வரவு செலவுத் திட்ட இடைவெளி		மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட இடைவெளி, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக	உள்ளபடியான வரவு செலவுத் திட்ட இடைவெளி, மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
	மதிப்பீடு செய்யப்பட்ட	உள்ளபடியான		
ரூபா. பில்லியன்	ரூபா. பில்லியன்	ரூபா. பில்லியன்	சதவீதம்	சதவீதம்
16,508	3,052	2,080	18.48	12.59

(இ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முறையான பிரகாரம் பெறப்பட்ட பொருட்கள், சேவைகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக மேலும் செலுத்த வேண்டிய பெறுமதி பொறுப்பாக அர்த்தப்படுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் 2(இ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத கடப்பாடுகள் எதிர்வரும் வருடத்தின் போது அந்த பொறுப்புக்களுக்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தால் மாத்திரமே

எதிர்வரும் ஆண்டிற்கு கொண்டு செல்ல முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் பொறுப்புக்கள் அந்த ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்தமையால் பொறுப்புக்கள் எதிர்வரும் வருடத்திற்கு கொண்டு செல்ல முடியாதிருந்தமை சுற்றறிக்கையின் ஆலோசனையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக ரூபா 334 பில்லியன் கூட்டுமொத்தம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை

2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 6003 தொகுதியில் வைப்புக் கணக்கினை பூச்சியமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் அந்த செயற்பாடுகள் வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும், இலக்கம் 6003 இன் கீழ் வருகின்ற வைப்புக் கணக்கில் ரூபா 10 மில்லியன் தொகையான மீதியொன்று 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் திணைக்களங்களில் 110 கட்டுநிதிக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,277 மில்லியன் வரவு மீதி தீர்க்கப்படாது காணப்பட்டதுடன், அதில் 10 கட்டு நிதிக் கணக்குகளின் கூட்டுமொத்தம் 481.8 மில்லியன் மீதி பலவருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

3.1 வருமானங்களை மதிப்பீடு செய்தல்

2021 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 16.809 பில்லியன் ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 15.027 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1.782 பில்லியனால் அதாவது 11.86 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் பின்பற்றப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானம் ரூபா 1.984 பில்லியன் ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது 1.547 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டினை விட அரசாங்கத்தின் வருமானம் ரூபா 437 பில்லியனால் அதாவது 28.26 சதவீதத்தால் அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத் திட்ட நிலுவை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆரம்ப வருமான மதிப்பீடு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் ரூபா 1.506 பில்லியன் வரை ரூபா 478 பில்லியனால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.73 சதவீதமாக இருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும். அது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் வருமானம் மிகை மதிப்பீடு செய்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானம் ரூபா 1.467 பில்லியனாக இருந்ததுடன் அது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை விட ரூபா 39 பில்லியனால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீடுடன் ஒப்பிடும் போது அந்த குறைவு ரூபா 517 பில்லியனாக இருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலவீச்சில் ஒவ்வொரு வருடத்தின் போதும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தின் குறைவு 9.51 சதவீதம் முதல் 26.08 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. அந்த காலப்பகுதியின் அதிகரிப்பின் சதவீதம் மீளாய்வாண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

நிதிப்பிரமாணம் 85(2)(ஆ) இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதி கொள்கை தினைக்களத்திற்கு அறிக்கையிடல் மாத்திரம் குறிப்பிடப்பட்டமையால் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையால் வருமானம் சாத்தியமானதாக மதிப்பீடு செய்யும் பொறுப்பில் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.2 வருமான பற்றாக்குறை

மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 1,290 பில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 1,304 பில்லியனாக இருந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலவீச்சில் ஆகக்கூடிய வருமானத்தின் பற்றாக்குறை 2020 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்த காலவீச்சில் ஒவ்வொரு வருடத்திலும் சேகரிக்கப்பட்ட வருமானம் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினங்களை ஈடுசெய்வதற்கு தவறியிருந்தது. வருமானத்தின் பற்றாக்குறையின் ஆகக்குறைந்த பெறுமதி 2007 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது ரூபா 43 பில்லியனாக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 7.56 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அந்த காலவீச்சில் ஒட்டுமொத்த வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 4,780 பில்லியனாக இருந்தது. அந்த பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த காலவீச்சில் உள்நாட்டுக் கடன் ரூபா 16,265 பில்லியனும், வெளிநாட்டுக் கடன் ரூபா 6,704 பில்லியனும் மற்றும் வெளிநாட்டு மானியம் ரூபா 213 பில்லியனுமாக கூட்டுமொத்தமாக ரூபா 23,183 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டின் போதும் அவ்வாறு பெறப்பட்டிருந்த கடன்கள் மற்றும் மானியங்களில் 6.86 சதவீதம் முதல் 45.59 சதவீதம் வரையிலான வீச்சில் சதவீதத்தினால் வருமானத்தின் பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. பெறப்பட்ட கடன்கள் மற்றும் மானியங்களிலிருந்து முதலீடுகள் மேற்கொள்ளப்படாமல் மீண்டெழும் செலவினங்களை தீர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது 20.23 சதவீதமும், 2020 ஆம் ஆண்டின் போது 45.59 சதவீதமும் மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது 42.41 சதவீதமும் ஆக பயன்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது ரூபா 1,048 பில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 38.02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. முன்னைய ஆண்டின் போது வட்டி செலுத்ததல்கள் ரூபா 975 பில்லியன் தொகை

அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தின் 36.36 சதவீதமாக இருந்தது. வட்டி செலுத்துதல்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 73 பில்லியனால் அதிகரித்திருந்தது. 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 151 பில்லியன் தொகையான வட்டி கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டு வரையில் அது ரூபா 1.048 பில்லியன் வரை 594 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காக கடன் பெற்று அதற்காக ஏற்படுகின்ற வட்டி செலுத்ததல்கள் வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 1.467 பில்லியன் அரசாங்கத்தின் வருமானத்தில் ரூபா 1.048 பில்லியன் தொகை அதாவது 71.74 சதவீதம் வட்டி செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. இந்த நிலைமை உரிய காலப்பகுதியின் போது வருடாந்தம் அதிகரித்து சென்றிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் அது விரைவாக அதிகரித்திருந்தது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ரூபா 620 பில்லியன் வருமானம், சேகரிக்கப்படாமல் நிலுவையாக காணப்பட்டது. அந்த வருமானத்தை 2021 ஆம் ஆண்டின் போது சேகரிப்பதற்கு முடியுமாக இருக்குமாயின் அந்த ஆண்டின் வருமான பற்றாக்குறை ரூபா 670 பில்லியன் அதாவது 51.94 சதவீதத்தால் குறைக்கக்கூடியதாக இருக்கும். அந்த நிலுவை வருமானம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 698 பில்லியன் மற்றும் ரூபா 579 பில்லியனாக இருந்தது. அந்த ஆண்டுகளிலும் அந்த நிலுவை வருமானத்தை சேகரிக்க கூடிய நிலைமை காணப்பட்டிருக்குமாயின் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 165 பில்லியன் வருமானத்தில் மிகையொன்றை ஏற்படுத்த முடியுமாக இருக்கும். 2020 ஆம் ஆண்டின் போது வருமானத்தின் பற்றாக்குறை 606 பில்லியன் வரை 46.47 சதவீதத்தால் குறைப்பதற்கு முடியுமாக இருந்தது.

சரியான முறையில் வருமான மதிப்பீடு தயாரிக்காமை அல்லது தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் வருமானங்கள் சேகரிக்கப்படாமை, சிக்கனமான பங்களிப்பாக செலவின முகாமைத்துவம் செய்யப்படாமையினால் அரசாங்கம் கடன் பெற வேண்டியேற்பட்டது. அந்த கடனை பெற்றுக்கொள்ளல் வருடாந்தம் அதிகரித்துச் சென்றமையால் கடன் வட்டிக் கிரயம் வருடாந்தம் அதிகரித்தமையின் காரணமாக மீண்டெழும் செலவினங்களும் அதிகரித்திருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை எதிர்பார்த்த பிரகாரம் சேகரித்துக் கொள்வதற்கு முடியாமையும், மீண்டெழும் செலவினங்கள் அதிகரித்தமையும் வருடாந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு வருமானம் போதியளவில் இல்லாதிருந்தமையினாலும் வருமான பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது.

3.3 வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை

அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ரூபா 2,080 பில்லியனாக இருந்தது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.37 சதவீதம் ஆகும். 2020 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ரூபா 2,116 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.08 சதவீதம் ஆகும். 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த காலவீச்சு முழுவதும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை காணப்பட்டதுடன் அது 2006 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட ரூபா 300 பில்லியன் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டு வரையில் ரூபா 2,080 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அந்த காலவீச்சில் ஆகக்கூடிய வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 2020 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எடுக்கும் போது 5.55 சதவீதம் முதல் 14.08 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. உள்ளபடியான வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை உள்ளபடியான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் காணப்பட வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அந்த காலப்பகுதியில் எந்தவொரு ஆண்டின் போதும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது முறையே 5.55 சதவீதம், 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீத அளவை பேணிச்செல்வதற்கு முடியுமாக இருந்தது.

3.4 கடன் மீதி அதிகரித்தமை

வருடாந்த வரவு செலவுத் திட்ட அதிகரித்தமைக்கு இடையே கடன் பெற்றுக் கொள்தலின் அளவு அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதியாக ரூபா 16,827 பில்லியனாக அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதி உள்நாட்டு கடனாக ரூபா 9,986 மில்லியனும், வெளிநாட்டுக் கடனாக ரூபா 6,841 பில்லியனுமாக காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் கடன் மீதி ரூபா 14,692 பில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் கடன் மீதி ரூபா 2,135 பில்லியனால் அதாவது 14.53 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2006 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியன் கடன் மீதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 82.72 சதவீதமாக இருந்தது. அது 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் கடன் மீதி ரூபா 16,827 பில்லியனாக இருந்ததுடன் அது

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100.11 சதவீதம் ஆகும். 2003 இன் 3 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) 3(ஊ) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 85 சதவீதத்தை விட குறைவாக இருக்க வேண்டிய போதிலும் ஏனைய பொறுப்புக்கள் தவிர அரசாங்கத்தின் கடன் பொறுப்புக்கள் மாத்திரம் அந்த எல்லையை விஞ்சி 100.11 சதவீதமாக இருந்தது. இந்த நிலைமை 2020 ஆம் ஆண்டின் போதும் காணப்பட்டது.

3.5 அரச கடன்

(அ) அரச கடன் பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட கடனின் அளவை விஞ்சி கடன் பெறல்

மீளாய்வாண்டின் போது கடன் பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட திறைசேரி பிணைமுறிப் பெறுமதி ரூபா 1,235,000 மில்லியனாக இருந்த போதிலும், ரூபா 1,742,938 மில்லியன் தொகையான திறைசேரி பிணைமுறிகள் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 507,938 மில்லியனால் அதாவது 41 சதவீதத்தால் திட்டமிடப்பட்ட அளவை விஞ்சி பிணைமுறி மூலம் கடன் பெறப்பட்டிருந்தது.

